மனிதர்களைத் தேடி...

(பேராய சுவிசேஷ
ஜெபக்குழுவின் வரலாறு)



ஜி. ஐசக் அருள்தாஸ்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (*E-Books*) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (*Download*) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (*E-Book*) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (*Email*) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

மனிதர்களைத் தேடி . . .

(பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் வரலாறு
1962 - 2002)

(கன்னியாகுமரிப் பேராயம்)

ஜெபி போ அனுப்பு

ஜி. ஐசக் அருள்தாஸ்
விரிவுரையாளர், தமிழ் ஆய்வுத்துறை,
ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி,
நாகர்கோவில் - 629 003.

பேராய சுவிசேஷ ஜெபக்குழு,
நாகர்கோவில் - 629 001.

நூல் விவரம்

பெயர்	: ***மனிதர்களைத் தேடி . . .***
பொருள்	: அருட்பணி வரலாறு
ஆசிரியர்	: ஜி. ஐசக் அருள்தாஸ், பச்சாற்றுவிளை, பூவன்கோடு, வோர்க்கிளம்பி -629 166, தொலைபேசி : 04652-288181.
வெளியீடு	: பேராய சுவிசேஷ ஜெபக்குழு
மொழி	: தமிழ்
முதல் பதிப்பு	: 2005 ஜூலை 16
நூலின் அளவு	: டெம்மி 1/8
எழுத்து அமைப்பு	: 11 புள்ளிகள்
பக்கங்கள்	: xxii + 304
விலை	: ரூபாய் 75
வடிவமைப்பு	: நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ், 67/1 கோர்ட் ரோடு, நாகர்கோவில் - 629 001. தொலைபேசி : 04652 - 233853
Published by	: Diocesan Missionary Prayer Band Kanyakumari Diocese, C.S.I. Bishop's Bunglow Campus, Nagercoil - 629 001.

MANITHARKALAI THEDI . . .

(History of Diocesan Missionary Prayer Band)

G. Isaac Arul Dhas

புத்தகம்
கிடைக்குமிடம் :

DMPB (Head Office)
C.S.I. Bishop's Bunglow Campus,
Nagercoil - 629 001. Phone : 04652-279339

DMPB (Madras Branch)
Plot No. 9, Bharani Jothi Nagar, DMPB Street,
Korattur, Chennai - 600 076. Phone : 55167787

DMPB (Madurai Branch)
175/9, Atthi kulam Main Road,
Old Nehru School Campus, K. Puthoor,
Madurai - 625 007. Phone : 9443484865

"Lift up your eyes, and look on the fields; for they are white already to harvest" - St. John 4:35

DIOCESAN MISSIONARY PRAYER BAND

KANYAKUMARI DIOCESE (C.S.I)

WORK AMONG HILL TRIBES

Rt. Rev. G. Devakadatcham, M.A., B.D., M.Th.,
Bishop & President
Mr. D. Yesu Gnanadhas, M.A., M.Ed.
Vice - President
Rev. P. Wilson, M.A., B.D.
General Secretary
Mr. J.Bhagia Raj, M.Com
Treasurer

C.S.I. Bishop's Bungalow Campus,
Nagercoil - 629 001, South India.
Phone : 04652 - 279339
Website : www.dmpd.org
Email : secretary@dmpm.org

வாழ்த்துரை

இறைமகன் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியின் அழுத்தம் அருட்பணி. இறைவன் உலகிற்கு அனுப்பிய முழுமையான அருட்பணியாளர் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. நற்செய்தியைப் பிரசங்கித்தலும், பிரகடனப் படுத்துதலும், நற்செய்தியின் ஆற்றலால் வாழ்வு பூரணமடைய வழி நடத்துதலும் அருட்பணியின் உட்கூறுகள். 1806 இல் மைலாடியில் விதைக்கப்பட்ட நற்செய்தி முளைத்து வளர்ந்து பலன் கொடுத்ததின் விளைவாய் நமக்கு நாமே நற்செய்தி அறிவிக்கும் திட்டமாய் 1900 ஆம் ஆண்டில் சுதேசி மிஷனறி சங்கம் அமைக்கப்பட்டது. நாம் பிறருக்கும் நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்ற பாரம் நம்மவர்களில் எழுந்த போது 1962 ஜூலை 31 இல் காரியாவிளை ஆயர் இல்லத்தில் சுவிசேஷ ஜெபக்குழு உதயமாயிற்று. இவ்வுதயத்திற்குக் காரணமாய் இருந்த அருள்திரு. டி. எலியாஸ், அருள்திரு. எம். இராஜையன், திரு. எஸ். இரத்தினராஜ், திரு. ஜெ. அர்னால்டு ஞானராஜ், திரு. எ. ஜஸ்டின், திருமதி. ஞானதீபம், திருமதி. அன்னபாய் எலியாஸ் ஆகியோரின் பாரத்தையும் தரிசனத்தையும் தூரக்காட்சியையும் மறக்க இயலாது. 1978 ஆம் ஆண்டில் இவ்வருட்பணி இயக்கம் அத்தியட்சாதீன சுவிசேஷ ஜெபக்குழு என பெயர் மாற்றம் பெற்று வளர்ந்து வருகிறது.

கன்னியாகுமரிப் பேராயத்தின் வாழ்வுடனும் இரத்தத்துடனும் இணைந்து விட்ட அத்தியட்சாதீன சுவிசேஷ ஜெபக்குழு அருள்நாதரின்

வருகை வரையிலும் ஆவியானவரின் ஆற்றல் மற்றும் வழிகாட்டுதலின் படி மக்களை, மனிதர்களாக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டேயிருக்கும். இப்பேரியக்கத்தின் காலச்சுவடுகளை வரலாறாக அமைப்பது பொருத்தமானதும் தேவையானதும் கூட. இத்தலைமுறையில், நாம் அறிவு பெறவும் வரும் தலைமுறையினர் உணர்வு பெறவும் இவ்வெளியீடு ஊடகமாய் அமையும் என நம்புகிறேன். இந்நூல் வெளியிடப்பட கடினமாய் உழைத்த நூல் குழுவினருக்கும் இதற்கு இறுதி வடிவம் கொடுத்த அறிவர் ஜி. ஐசக் அருள்தாஸ் அவர்களுக்கும் அத்தியட்சாதீன சுவிசேஷ ஜெபக்குழுவின் முந்நாள் இந்நாள் பொறுப்பாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், காரிய நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கும் பாராட்டுக்களைத் தெரிவிக்கிறேன்.

இந்நூல் பேராயத்தின் ஒவ்வொரு இல்லங்களிலும் அருள்நாதரின் மீட்பின் செயல்களை நினைவூட்டுவதாக இடம்பெற விரும்புகிறேன்.

அன்பரின் பணியில்,

பேரருள்திரு ஜி. தேவகடாட்சம்
பேராயர்
C.S.I. குமரிப் பேராயம்

நாகர்கோவில்,
30-06-2005.

"Lift up your eyes, and look on the fields; for they are white already to harvest" - St. John 4:35

DIOCESAN MISSIONARY PRAYER BAND

KANYAKUMARI DIOCESE (C.S.I)

WORK AMONG HILL TRIBES

Rt. Rev. G. Devakadatcham, M.A., B.D., M.Th.,
Bishop & President
Mr. D. Yesu Gnanadhas, M.A., M.Ed.
Vice - President
Rev. P. Wilson, M.A., B.D.
General Secretary
Mr. J.Bhagia Raj, M.Com
Treasurer

C.S.I. Bishop's Bungalow Campus,
Nagercoil - 629 001, South India.
Phone : 04652 - 279339
Website : www.dmpd.org
Email : secretary@dmpm.org

வாழ்த்துரை

"இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" என்றார் (லூக் 19:10)

இயேசு கிறிஸ்து உலகில் அவதரித்ததின் நோக்கத்தை மேற்குறிப்பிட்டிருக்கும் வசனம் தெளிவாக எடுத்தியம்புகிறது. இயேசு இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் இதை செயல்வடிவமாக செய்து காட்டினார். தனக்குப்பின்னும் இப்பணி தொடர வேண்டும். அதனால் சீடர்களைப் பார்த்து,

"... நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு 16:15) என்றார்.

சீடர்களும் இச்சிறப்புப்பணியைச் செவ்வனே செய்து நிறைவேற்றினர். உயிரையும் துச்சமாக மதித்து உயர்வான அருட்பணியை உலகமெங்கும் எடுத்துச் சென்றனர். அறியாமைக் கடலில் அமிழ்ந்து கிடந்த அநேகரை ஆண்டவரின் பிள்ளைகளாக மாற்றினர்.

இன்று இப்பணியை இயேசுவை ஏற்று வாழும் நாம் அனைவரும் இணைந்து செயல்படுத்த வேண்டும் என்பது இறைவனின் விருப்பம். இவ்விருப்பத்தை நிறைவேற்ற தொடங்கப்பட்டிருக்கும் அருட்பணி இயக்கங்கள் அநேகம். பேராய சுவிசேஷ ஜெபக்குழுவும் இவைகளில் ஒன்று. 1962 ஆம் ஆண்டிலிருந்து பல கடினங்களைக் கடந்து கல்வராயன், சேர்வராயன் மலைப் பகுதிகளில் "இயேசு என்றால் என்ன விலை" என்று கேட்டுக் கொண்டிருந்த மனிதர்களைப் பாசத்தோடு

அணுகி, பாடுகளைச் சகித்து, இயேசு எங்கள் இரட்சகர் என்று ஏற்று செயல்படும் அளவுக்கு பணிபுரிந்து, பல ஆலயங்களைக் கட்டி, மிஷனறி இல்லங்களை உருவாக்கி, உன்னதராம் இயேசுவின் உண்மைத் தொண்டர்களாக ஒரு கூட்டம் மக்களை உருவாக்கிய பெருமை நமது ஜெபக் குழுவிற்கு உண்டு. இதற்கு அரும்பாடுபட்ட அருட்பணியாளர்களும், அவர்களைத் தாங்கி ஜெபத்தாலும், பணத்தாலும் உதவி செய்யும் திருச்சபைகளும், குடும்பங்களும் பெருமைப்படுத்தப்பட வேண்டியவர்கள்.

இப்பணிகளின் தோற்றம், வளர்ச்சி, தொடர்ச்சி ஆகியவற்றைப் புத்தகமாக அமைத்து, வருங்கால சந்ததிகள் இதைப்படித்து, அருட்பணிகளில் அதிக ஆர்வம் பெற வேண்டும் என்னும் ஆசையோடு ஆக்கியது தான் *மனிதர்களைத் தேடி . . .* என்னும் இப்புத்தகம். இப்புத்தகத்தை ஒரு அருட்பணி சரித்திர ஏடாக எடுத்து, அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்பது எங்கள் ஆவல். இப்புத்தகத்திற்கு கருப்பொருள் வழங்கிய அருள்திரு. எம். ராஜையன் அவர்களை வாழ்த்துகின்றேன். இப்புத்தகம் வெளிவர தகுந்த ஆலோசனை அளித்து, ஊக்கம் ஊட்டிய பேராயர் பேரருள்திரு. ஜி. தேவகடாட்சம் அவர்களுக்கும் நன்றி கூறுகின்றேன். அழகிய புத்தக வடிவாக உருவாக்க பணிக்களங்களில் நேரடியாகச் சென்றும், அருட்பணியாளர்களைப் பேட்டி கண்டும், ஜெபக்குழுவின் முன்னாள், இன்னாள் தலைவர்களைக் கலந்தும், தீர்மானப் புத்தகங்கள், அருட்பணி மலர், மலையில் ஓர் மனித விளக்கு போன்ற பல புத்தகங்களின் செய்திகளைப் படித்து தப்பிதங்கள் வராதபடி கவனமாக, கடினமாக உழைத்த ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர் அறிவர். ஜி. ஐசக் அருள்தாஸ் அவர்களுக்கும் எமது பாராட்டுக்கள். இப்பணியில் இணைந்து செயல்பட்ட வரலாற்று நூல் குழு அங்கத்தினர்களுக்கும் பாராட்டுக்கள். குறிப்பாக கடினங்களைப் பாராது அனைத்து கலந்துரையாடல்களிலும் கருத்துக்களைப் பகிர்ந்து உதவிய துணைத்தலைவர் திரு. டி. ஏசு ஞானதாஸ் அவர்களையும் பாராட்டுகின்றேன். இறைவன் இம்மட்டும் நிறைவான நடத்துதலைத் தந்து குறைவற்ற இப்பணியைச் செய்ய தூய ஆவியின் துணையை ஈந்து, இச்சிறப்புப் பணியை நிறைவு செய்ய உதவி செய்தார், அவரைப் பணிந்து, இப்பணிக்காக உழைத்த உதவி செய்த அனைவருக்கும் நன்றியையும், வாழ்த்துதலையும் தெரிவிக்கின்றேன்.

அன்பரின் பணியில்,

(அருள்திரு. P. வில்சன்)
பொதுச் செயலர்

நாகர்கோவில்,
21-06-2005

"Lift up your eyes, and look on the fields; for they are white already to harvest" - St. John 4:35

DIOCESAN MISSIONARY PRAYER BAND

KANYAKUMARI DIOCESE (C.S.I)

WORK AMONG HILL TRIBES

Rt. Rev. G. Devakadatcham, M.A., B.D., M.Th.,
Bishop & President
Mr. D. Yesu Gnanadhas, M.A., M.Ed.
Vice - President
Rev. P. Wilson, M.A., B.D.
General Secretary
Mr. J.Bhagia Raj, M.Com
Treasurer

C.S.I. Bishop's Bungalow Campus,
Nagercoil - 629 001, South India.
Phone : 04652 - 279339
Website : www.dmpd.org
Email : secretary@dmpm.org

வாழ்த்துச் செய்தி

இறைமைந்தன் இயேசு கிறிஸ்துவின் இனிய நல் நாமத்தில் எமது அன்பான நல் வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கின்றேன்.

கல்வராயன், சேர்வராயன், ஜவ்வாது, கொல்லிமலை, போதமலை போன்ற மலைகளில் வாழும், சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மிகவும் பின் தங்கிய ஏழை மலைவாழ் மக்களின் வாழ்க்கை தரத்தின் மேம்பாட்டிற்காக கழிந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக அத்தியட்சாதீன சுவிசேஷ ஜெபக்குழு துணிச்சலுடனும், தியாக சிந்தையுடனும் செய்து நிறைவேற்றி வரும் சுவிசேஷப்பணி, மருத்துவப்பணி, கல்விப்பணி, விடுதிப்பணி மற்றும் சமுதாயப்பணி போன்றவை மிகவும் மகத்தானவை என்பதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை. அர்ப்பணிப்புடனும், மிகுந்த ஈடுபாடுகளுடனும் தங்களை இம்மாபெரும் இயக்கத்தில் ஈடுபடுத்திக் கொண்டு நல் மனதுடனும், உண்மையுடனும், செயலாற்றி வரும் செயல் வீரர்களாம் மிசனெறிகளை மனதாரப் பாராட்டுகின்றேன்.

நம்மில் பலரும், இன்னும் நமக்குப் பின்வரும் பிற்கால சந்ததிகளும் நல்ல முறையில் அத்தியட்சாதீன சுவிசேஷ ஜெபக்குழுவின் பணிகள் குறித்து நன்கு அறிந்து, தொடர்ந்து ஆக்கமும் ஊக்கமும் நல் ஆதரவும் கொடுத்து இப்பணி மேலும் வலுப்பெற்றுச் சிறப்படைய இதன் வரலாற்றினை எந்தவிதமான எதிர்பார்ப்புமின்றி ஒரு சில வருடங்களாக

[illegible]

அன்பின் பணியில்,

தே. பாக்கியராஜ்,

[illegible]

நாசரேத்,

27-05-2005

SCOTT CHRISTIAN COLLEGE
NAGERCOIL - 629 003

DR. E. JAMES REYNOLD DANIEL, Ph.D.
Principal

KANYAKUMARI DISTRICT
TAMILNADU, SOUTH INDIA

E-mail : Scottngl@Sancharnet.in
: ngc_scottngl@sancharnet.in
Fax : 04652 - 229800
Website : www.scottchristian.org

Office : 04652 - 231807
Principal : 04652 - 235240
Residence : 04652 -279208
04652 - 279598

வாழ்த்துரை

இயேசு அவர்களை அணுகி, 'விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டு இருக்கிறது. எனவே நீங்கள் போய் எல்லா மக்கள் இனத்தாரையும் சீடர் ஆக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைபிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்' என்று கூறினார். (மத் 28:18-20)

நற்செய்தியை அறிவிப்பதே அடிப்படையான கிறிஸ்தவப் பணி. இலண்டன் இறைப்பணி இயக்கத் திருப்பணியாளர்கள், அனைத்தையும் இறைமைந்தன் இயேசுவுக்காய்த் தியாகம் செய்து சமூக, பண்பாட்டு, பொருளாதார, ஏன்? சமய இருளில் கூட மூழ்கி திக்குத் தெரியாத காட்டில் திசையறியாது தவித்துக் கொண்டிருந்த நமக்குப் பாதையும் காட்டி, பண்பாட்டையும் கொடுத்து, கல்வியையும் வழங்கி, சமூகப் பொருளாதார விடுதலைக்கு வித்திட்டார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அவர்கள் ஊன்றிய விதை இன்று சாதி, சமய, இன, மொழி வேறுபாடுகளைக் கடந்து மனுக்குலத்திற்கு நிழல் வழங்கும், பயன்தரும் மரமாகக் காய்த்துக் குலுங்கி கனிந்து நறுமணத்தை வீசிக் கொண்டிருக்கிறது. வான்புகழ் வள்ளுவனின் வாய்மொழியில், 'ஊருணி நீர் நிறைந்த உலகமாய்', 'பழுத்த உள்ளூர் பயன்மரமாய்', மனிதத்துவத்தை இழந்து நின்ற மனிதனுக்கு மனிதத்துவத்தை வழங்கியது தான் இலண்டன் இறைப்பணி இயக்கத்தாரின் இயம்பவொண்ணா

திருப்பணி. வரலாற்றுச் சுவடுகளில் அழிக்கவொண்ணா முத்திரையைப் பதித்த அற்புதத் திருப்பணி.

இறைவன் நமக்குத் தந்த விடுதலை, இறைவனின் ஈகை, இறைவனின் திருக்கொடை, இறைவனின் இலவச அன்பளிப்பு. இலவசமாக நாம் பெற்றுக் கொண்டதை இலவசமாகத் திருப்பணியாளர்கள் மூலம், ஒரு காலத்தில் நாம் இருந்ததைப் போல இன்றும் இருளிலே தள்ளப்பட்டு, இயலாமையில் தத்தளித்து, அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீருக்குச் சொந்தக்காரர்களாய், வாழ்வின் விடியலுக்காய் ஏங்கிக் கொண்டிருக்கும் ஆதிவாசிகளுக்கும், மலைவாழ் மக்களுக்கும், ஒளியின் செய்தியை, இறைமகன் இயேசு வழங்கும் விடுதலை வேள்வியை, வாழ்வின் தத்துவமாக மாற்றுகின்ற அசாதாரணமான பணியை இன்று நிகழ்த்திக் காட்டியிருப்பது குமரிப் பேராய மலைநாட்டு அருட்பணி இயக்கம்.

நேற்றைய நிகழ்வுகளை உட்கொண்டு, இன்று நடப்பவைகளுக்குப் பொருள் கண்டு, நாளைய இலக்குகளுக்கு வழி காட்டுவது வரலாறு. வரலாறை மறந்தவன் தன் தனித்தன்மையை மறந்தவன். வரலாற்றை இழந்தவன் தன் வாழ்க்கையை இழந்தவன். நாளைய இலக்கை நோக்கி நல்முறையில் திட்டமிட்டு நற்செய்தியை எடுத்துச் செல்வதற்கு, நேற்றுத் தொடங்கி, இன்று பரிணமித்துக் கொண்டிருக்கும் வரலாற்றுத் தடங்கள் மிகச் சிறந்த வழிகாட்டிகள். குமரிப் பேராய மலைநாட்டு அருட்பணியின் நாற்பது (1962-2002) ஆண்டு கால வரலாற்றினை ஆண்டுவாரியாகத் தொகுத்துத் தந்துள்ளார், அறிவர் ஜி. ஐசக் அருள்தாஸ். மனிதர்களைத் தொடர்ந்து சென்று ஆண்டவனுக்குள்ளாகத் தேடுதலின் ஆன்மப் பொருளை அழகாக விளக்குகின்றது. அவரது நூல் *மனிதர்களைத் தேடி...*

இந்நூல் வெறும் வரலாற்றுக் குறிப்பன்று. காலவாரியாகத் தொகுக்கப்பட்ட நிகழ்வுகள் பல கொண்ட ஆவணமும் அன்று. எந்தெந்த இறைப்பணியாளர்கள், என்னென்னத் திருப்பணிகளை, எவ்வெச் சூழல்களில், எத்துணைத் துன்பம் துயரங்களுக்கிடையே முன்னெடுத்துச் சென்றனர் என்பதனை மட்டும் படம் பிடித்துக் காட்டும் ஓர் ஏடும் அன்று. மாறாக, இவைகளின் ஊடாக ஒரு பெரிய ஆன்மீக விடுதலைப் பயணத்தை நமது பேராய மலைநாட்டு அருட்பணி இயக்கம், இயக்க இறைப்பணியாளர்கள், இறைமகன் இயேசுவில் கொண்ட அசைக்க முடியாத பற்றுறுதியின் காரணமாக நிகழ்த்தியுள்ளனர், என்பதை, எத்தனைக் கோணங்களிலிருந்து பார்க்க முடியுமோ அத்தனைக் கோணங்களிலிருந்தும் அலசி ஆராய்ந்து எழுதப்பட்ட ஓர் ஆன்மீக

விடுதலை நூல் *மனிதர்களைத் தேடி . . .* இதுதான் இந்நூலின் பலம், இந்நூல் தரும் ஆற்றல். தங்களைத் தாங்களே கிறிஸ்துவிற்குள் இழந்து, தாங்க முடியாத பெருஞ்சுமை சுமந்து, "மகனே உன் நெஞ்செனக்குத் தாராயோ", என்று மனிதர்களைத் தேடி வந்த மனுக்குல விடுதலை நாயகனின் அடிச்சுவட்டில் இந்த விடுதலைப் பணியைத் தொடர்ந்து தாங்குவதற்கு இன்னமும் எண்ணிலடங்கா இறைப் பணியாளர்களை உருவாக்குவதே இந்நூலின் நோக்கம். இந்நூல் எழுதப்பட்டிருக்கின்ற முறை, அமைக்கப்பட்டிருக்கிற அழகு, செய்திகளைத் தொகுத்து வழங்குவதிலுள்ள கட்டிறுக்கம், இவற்றின் வழியாக இழையோடுகின்ற ஒருமுகமாக்கப்பட்ட திருவிவிலியச் செய்தி, வருங்காலத்தில் மனிதர்களைத் தேடிச் செல்லும் நற்பணியைச் செய்யவிரும்புகின்ற இறைப்பணியாளர்களை உருவாக்க வழிகோலுமென நான் உறுதியாக நம்புகிறேன்.

இத்தகையதொரு சீரிய முயற்சியில் இயேசுநாதர் மீது கொண்ட காதல் வெறியால் தன்னை இணைத்துக் கொண்ட எங்கள் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் அறிவர் ஜி. ஐசக் அருள்தாஸ் மனிதர்களைத் தேடும் முயற்சியில், மற்றவர்களை ஊக்குவிப்பதில் மகத்தான வெற்றி பெற்றுள்ளார் என்றே கூறுவேன். சீரான நடை, தேர்ந்தெடுத்து தொடுக்கப்பட்ட சொற்கள், தெளிவான சிந்தனை, ஒரே அமர்வில் இந்நூலை வாசித்து முடிக்க தூண்டுகிறது. ஏற்கெனவே, *தென் எல்லைக் காவலன் நேசமணி* என்ற ஓர் சிறந்த நூல் மூலம் தன்னை ஒரு நல்ல எழுத்தாளனாக அடையாளம் காட்டிய அறிவர் ஜி. ஐசக் அருள்தாஸ், *மனிதர்களைத் தேடி . . .* என்ற சிறந்த நூல் மூலம் தான் ஒரு சிறந்த எழுத்தாளர் என்பதனை மீண்டுமொருமுறை நிலைநாட்டியுள்ளார். ஒரு தமிழ்ப் பேராசிரியராக மட்டுமல்ல, ஒரு நல்ல வரலாற்று ஆசிரியனாகவும் தன்னை வெளிக்காட்டியுள்ளார். இதுபோன்ற நல்ல முயற்சிகளில் அவரது பணி தொடர, சிறக்க, வெற்றி பெற இதயங்கனிந்த இனிய வாழ்த்துக்கள்!

செல்லுவோம்! மன்றாடுவோம்! அனுப்புவோம்! மனிதர்களைத் தேடுவோம்!

நம் விடுதலை வீரர் இயேசுநாதர் காட்டிய வழியில்.

இ. ஜேம்ஸ் ஆர். டானியல்
முதல்வர், ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி

நாகர்கோவில்,
ஜூன் 24, 2005.

"Lift up your eyes, and look on the fields; for they are white already to harvest" - St. John 4:35

DIOCESAN MISSIONARY PRAYER BAND

KANYAKUMARI DIOCESE (C.S.I)

WORK AMONG HILL TRIBES

Rt. Rev. G. Devakadatcham, M.A., B.D., M.Th.,
Bishop & President
Mr. D. Yesu Gnanadhas, M.A., M.Ed.
Vice - President
Rev. P. Wilson, M.A., B.D.
General Secretary
Mr. J.Bhagia Raj, M.Com
Treasurer

C.S.I. Bishop's Bungalow Campus,
Nagercoil - 629 001, South India.
Phone : 04652 - 279339
Website : www.dmpd.org
Email : secretary@dmpm.org

வாழ்த்துரை

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் வரலாற்றினை *மனிதர்களைத் தேடி . . .* என்னும் தலைப்பில், அதன் ஸ்தாபகரில் ஒருவரான அருள்திரு. M. ராஜையன் அவர்களின் உதவியுடன் எழுதி வெளியிடும் ஆசிரியர் அறிவர் ஜி. ஐசக் அருள்தாஸ் அவர்களைப் பாராட்டுகிறேன். குமரிப் பேராய மக்களை அருட்பணி புரிய பரிசுத்த ஆவியானவர் தூண்டி எழுப்பியதன் விளைவே பேராய சுவிசேஷ ஜெபக்குழுவாகும்.

மலைநாட்டு அருட்பணிக்குத் தூண்டுதல் கொடுத்த அருள்திரு. அறிவர். தியோடர் வில்லியம்ஸ், சவாலாக இருந்த திருமதி. ஈவ்லின் ப்ராண்ட் அம்மையார், வழிகாட்டியாயிருந்து உற்சாகமளித்த முன்னாள் தலைமைப் பேராயர் பேரருள்திரு. I.R.H. ஞானதாசன் ஆகியவர்களை இத்தருணத்தில் நினைவு கூருகிறேன்.

31-07-1962 இல் தரிசனத்தோடு ஆரம்பித்த இவ்வமைப்பையும், அதன் முயற்சிகள் மற்றும் பணிகளையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருகிறார். இதன் வளர்ச்சிக்குப் பின்னணியாயிருந்து உதவிய CASA, CMS, EFICOR, INDIENHILFE, World Vision of India போன்ற அமைப்புகளை மறந்துவிட முடியாது. மலை ஊழிய தரிசனத்தைப் பெற்ற திருச்சபைகள், குடும்பங்கள், தனி நபர்கள் ஏராளம். இவர்களின் உதவியால் மலைகளில் ஆலயங்கள், பாடசாலைகள், மாணவர்

இல்லங்கள், மருத்துவ மையங்கள், தையல் பயிற்சி மையங்கள் பல எழுப்ப கர்த்தர் கிருபை செய்தார்.

வருங்காலத்தில் மலை ஊழியத்தை மலை மக்களே பொறுப்பேற்று நடத்தும் நோக்குடன், அவர்களுக்குக் கல்வி, தலைமைத்துவப் பயிற்சி, இறையியல் பயிற்சிக் கொடுத்து பிறர் உதவியின்றி அவர்களைச் செயல்பட வைக்க சுவிசேஷ ஜெபக்குழு ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன். 1960 ஆம் ஆண்டு நான் பெற்றுக் கொண்ட மலை ஊழிய தரிசனத்தை இறுதி வரை செயல்பட வைக்க என்னை குடும்பமாக இப்பணிக்கு ஒப்படைத்திருக்கின்றேன்.

மனிதர்களைத் தேடி . . . என்ற இப்புத்தகத்தைப் படிப்போர் அனைவரும் ஊழிய தரிசனம் பெற்று, அருட்பணியில் முழு ஈடுபாடு கொள்ள கர்த்தர் கிருபை புரிய ஜெபிக்கிறேன்.

ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரிப் பேராசிரியர் ஜி. ஐசக் அருள்தாஸின் எழுத்துப்பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

அன்பரின் பணியில்,

கொல்லிமலை,
02-06-2005

Yoke Fellow **Rev. Dr. D. Elias**
Missionary At Large
S.B.M. Compound,
Kolli Hills, Semmedu & P.O.
Nammakkal - 637 411
Phone : 04286-247220

He must increase, but I must decrease

அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும் (John 3:30)

Rev. **M. Rajian**
Rtd. District Minister
C.S.I. Kanyakumari Diocese

C.S.I. Church View,
Kodiyoor,
Mulagumoodu P.O.,
K.K. District - 629 167
(Phone : 04652 - 249150)

கூட்டுநர் உரை

நீங்களோ, உங்களை அந்நகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும் படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும் ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் (I பேதுரு 2:9) என பேதுரு அப்போஸ்தலன் கூறியது போல் இரக்கம் பெற்ற மக்களாக நாம் இருக்கிறோம். ஆனால் இதுவரைக்கும் கிறிஸ்துவை அறியாமல் வாழ்வில் நம்பிக்கையற்று வாழ்கிற நமது உடன்பிறப்புக்களை இறையரசின் புத்திரர்களாக, இராஜாக்களாக, ஆசாரியக் கூட்டங்களாக மாற்ற வேண்டும் என்பதே சுவிசேஷ ஜெபக் குழுவின் பிரதான நோக்கமாகும். இவைகளைக் குறித்து இப்புத்தகம் தெள்ளத் தெளிவாக விளக்கியுள்ளது. 31-07-1962 அன்று தொடங்கப்பட்ட சுவிசேஷ ஜெபக்குழுவானது வெகுவிரைவில் மிஷனறி களை அனுப்புவதற்கு தயாராகிறது. முதன்முதலில் திரு. D. எலியாஸ் அவர்கள் NMS மூலம் ஜவ்வாது மலையிலுள்ள பணிக்களம் சென்று கடுமையாக உழைத்தார். அதன் பின்னர் 1977 ஜூன் முதல் பேராய சுவிசேஷ ஜெபக் குழு கல்வராயன் மலையில் தனிப்பணிக் களத்தைத் தெரிந்தெடுத்தது. அப்பணிக்களத்தில் முதல் மிஷனெறியாக அருள்திரு. D. எலியாஸ் அவர்களே சென்றார்கள். அன்னாரின் தரிசனம், கீழ்ப்படிதல் ஆகியவை இன்று மிகப்பெரிய வெற்றியைப் பணித்தளங்களில் உருவாக்கிற்று. இன்று சுமார் 80 ஏக்கர் நிலம் பணிக்களங்களின் பயன்பாட்டிற்காக வாங்கப் பட்டுள்ளது. ஆலயங்கள், மருத்துவமனைகள் மற்றும் தையல் பயிற்சி நிலையங்கள் ஆகியவை மலைப்பகுதிகளில் அமைக்கப் பட்டுள்ளன. இவைகளுக்காக மிஷனெறிகள், சபை மக்கள், போதகர்கள், தன்னார்வத் தொண்டர்கள் ஆகியோர்கள் கொண்ட முயற்சிப் பாராட்டுக்குரியது.

மேற்கூறிய ஊழியங்களின் வரலாற்றை எழுத வேண்டும் என 11-03-1997 அன்று கூடிய சுவிசேஷ ஜெபக்குழுவின் செயற்குழு,

வரலாற்று நூல் ஒன்று வெளியிட கூட்டுநராக என்னை நியமித்தது. அப்பணியில் என்னோடு கடுமையாக உழைத்த இந்நாள் உதவித் தலைவர் திரு. D. ஏசு ஞானதாஸ் அவர்கள் என்றும் பாராட்டத்தக்கவர். இந்நூலில் எனது அனுபவ செய்திகளும் மிஷனெறிகளின் பாடுகளும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இந்நூலிற்குப் பொருந்தும் பெயரைத் தெரிந்தெடுத்து தெளிவான மொழி நடையில் எழுதுவதற்கு ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரிப் பேராசிரியர் முனைவர் ஜி. ஐசக் அருள்தாஸ் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியை நான் பெரிதும் மதிக்கிறேன். மட்டுமல்ல எழுதும்போது ஏற்பட்ட ஐயங்கள் ஒன்வொன்றையும் தொலைபேசி மூலமாகக் கேட்டும் நேரடியாகச் சந்தித்தும் தீர்த்துக் கொண்டார்கள். கூடவே மிஷனெறிக் களங்களைப் பார்வையிட்டும், மிஷனெறிகளுடன் பேட்டிக் கண்டும் வந்தார்கள். இப்புத்தகம் வெளிவர அன்னார் சில ஆண்டுகளாகவே கடுமையாக உழைத்தார்கள். அன்னாருக்கு என் ஆசிகள்.

இந்நூல் வெளிவர மிகவும் ஒத்தாசையுடன் செயல்பட்ட பேராயர் பேருள்திரு. G. தேவகடாட்சம், பேராய ஜெபக்குழுவின் பொதுச்செயலர் அருள்திரு. P. வில்சன், நல்ல அலோசனைகள் வழங்கிய காலஞ்சென்ற பேராசிரியர் P. ஜாண் சாமுவேல், அச்சிட்டு வெளியிட ஆர்வமுடன் தங்களால் இயன்ற உதவிகள் செய்த டாக்டர். D. டானியல் பாலஸ், திருவாளர் V. மோசஸ் ஆகியவர்களுக்கும், என்னுடன் பணியாற்றிய அன்பர்களுக்கும் அலுவலக நண்பர்களுக்கும் நன்றியைப் படைக்கிறேன்.

மனிதர்களைத் தேடி . . . என்ற நூலோடு மேலும் பல படைப்புகளை உருவாக்க பேராசிரியர் ஜி. ஐசக் அருள்தாஸ் அவர்களைக் கேட்கிறேன். கர்த்தர் இவ்வூழியத்தை ஆசீர்வதிப்பாராக. தேவனுக்கு துதி, கனம், புகழ், மகிமை அனைத்தையும் செலுத்துகிறேன்.

பரலோக மகிமையைத் துறந்து இழந்து போன மானிடத்தைத் தேடி வந்த இறைவனின் அன்பை, மனு மக்களுக்கு அறிவிக்க, மனிதர்களைத் தேடிச் செல்லும் நல்ல போர் வீரர்களாக செயலாற்ற, இந்நூல் மூலம் கடவுள் ஒவ்வொருவருக்கும் தூண்டுதலைத் தருவாராக.

அவர் நாமம் மேன்மைப் பெற்றோங்குவதாக!

அன்பரின் அறுவடைப் பணியில்,

M. Rajaian

கோடியூர்,
12-06-2005

அருள்திரு. **M. இராஜையன்,**
(வரலாற்று நூல்குழு கூட்டுநர்)

"Lift up your eyes, and look on the fields; for they are white already to harvest" - St. John 4:35

DIOCESAN MISSIONARY PRAYER BAND

KANYAKUMARI DIOCESE (C.S.I)

WORK AMONG HILL TRIBES

Rt. Rev. G. Devakadatcham, M.A., B.D., M.Th.,
Bishop & President
Mr. D. Yesu Gnanadhas, M.A., M.Ed.
Vice - President
Rev. P. Wilson, M.A., B.D.
General Secretary
Mr. J.Bhagia Raj, M.Com
Treasurer

C.S.I. Bishop's Bungalow Campus,
Nagercoil - 629 001, South India.
Phone : 04652 - 279339
Website : www.dmpd.org
Email : secretary@dmpm.org

அணிந்துரை

உயிர்த்தெழுந்த தேவனை விசுவாசிப்பவர்கள், அனுபவிப்பவர்கள் இவ்வுலகில் வாழும்போதே உன்னதங்களில் வாழுபவர்களாகத் திகழுகின்றனர். சிலுவை நாதரைக் குறித்த மிஷனெறிப் பணியானது பேதுரு, தோமா, பவுல் போன்ற அப்போஸ்தலர்களால் ஆரம்பிக்கப்பட்டு உலகெங்கும் படர்ந்து பெருகுகிறது. இந்த நற்செய்தியைத் தொடர்ந்து பரப்பிய மேனாட்டு மிஷனெறிகள் பெரும்பாலும் பட்டம் பெற்றவர்கள், மருத்துவர்கள், பேராசிரியர்கள் என்ற வரிசையில் தங்கள் ஊழியங்களை இம்மண்ணுலகில் நிறைவேற்றினர். நமது பகுதியின் வரலாற்றை சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் திருப்பிப் பார்த்தால் அறியாமை, அடிமைத்தனம், மூடநம்பிக்கை ஆகியவற்றில் நமது முன்னோர் புதைந்து கிடந்தனர். அவர்களுக்கு அறிவொளியூட்டி, அன்பைக் கொடுத்து, அமைதியின் ஆண்டவரை இம்மண்ணில் அடையாளங்காட்டியவர்கள் மேனாட்டு மிஷனெறிகள். 1806 இல் அருள்திரு. W.T. ரிங்கல் தௌபே என்ற ஜெர்மானிய அருட்தொண்டரால் மயிலாடியில் தொடங்கப்பட்ட இறைப்பணி இன்று இரு பேராயங்களாக மலர்ந்துள்ளது. அதிலொன்று கன்னியாகுமரிப் பேராயம். இப்பேராய மக்கள் ஜவ்வாது, கல்வராயன், சேர்வராயன் ஆகிய மலைப்பகுதிகளில் 1962 முதல் 2002 வரை ஆற்றிய திருப்பணியின் மேம்பாடுகளை வரிசைக் கிரமமாக மனிதர்களைத் தேடி .... என்ற இந்நூல் கூறுகிறது.

மனிதர்களைத் தேடி என்ற இந்நூலானது பதினாறு அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் சில இணைப்புகளும் காணப்படுகின்றன. முதல் பகுதி மலைவாழ் மக்களின் நிலைகளையும், அவர்கள் மத்தியில் ஊழியம் செய்ய அழைப்புப் பெற்றவர்களின் பின்னணியத்தையும் தெள்ளத் தெளிவுற விளக்குகிறது. இரண்டாம் பகுதியில் குமரிப் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவினர் 1977 ஜூன் முதல் ஆரம்பித்தப் பணித்தளம் தொடங்கி 2002 வரையுள்ள பணித்தளச் செய்திகளும், பணித்தள ஊழியங்களும், ஊழியங்களைத் தாங்கிய திருச்சபை மக்களின் ஆர்வ நிலைகளும், முன்னேற்றப் பணிகளின் விவரங்களும், தொண்டு நிறுவனங்களின் சேவைகளும் முழு விவரமாக விளக்கப்பட்டுள்ளன.

வரலாற்றுக் கோர்வையாக வெளிவரும் இந்நூல் நமது முன்னோர்களின் தொடக்க நிலையினைக் கூறும் அதே வேளையில் இன்றைய தலைமுறையினர் எவ்வெவ்வகைகளில் செயலாற்ற வேண்டும் என்பதையும் யதார்த்த நிலையில் விளக்குகிறது. இந்நூல் குமரிப் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் ஈடு இணையற்ற பணிகளை, பரந்து விரிந்து கிடக்கும் மலைப்பகுதிகளை, கிராமங்கள் தோறும் தேவனைத் தொழுது கொள்ள அமைக்கப்பட்ட தேவாலயங்களை, அறியாமையை அகற்றி அறிவொளி வீசும் கல்விக் கூடங்களை, நோய்களிலிருந்து விடுதலை தரும் மருத்துவமனைகளை, உணவூட்டி உறைவிடமாகவும் திகழும் மாணவ விடுதிகளை, மூடநம்பிக்கையினின்று விடுபட்டு அழகாக ஆடை அணியும் ஆதிவாசி மக்களை, மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவும் சமூக நலப்பணிகளைத் தெளிவாக விவரித்து விளக்குகின்றது. இத்தகைய அரிய காட்சிகளை, படிப்போர் தங்களின் அகக்கண்களில் காண்பர் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழிய வளர்ச்சியில், தன்னை மிஷனறிப் பணிக்கு முழுமையாக அர்ப்பணித்த அருள்திரு. D. எலியாஸ் அவர்களின் பங்கேற்பும் பணியும் போற்றுதற்குரியன. வளர்ந்துவரும் ஜெபக்குழுவின் வரலாற்று நூலை எழுதுதற்கு அமைக்கப்பட்டக் குழுவின் கன்வீனராக நியமிக்கப்பட்ட அருள்திரு. M. இராஜையன் அவர்கள் ஜெபக்குழுவின் ஆரம்பகால தலைவர்களில் ஒருவர். இவ்வியக்க வரலாற்றை நன்கு அறிந்தவர். அன்னார் தம்மிடமிருந்த குறிப்புகள், ஜெபக்குழுவின் அறிக்கைகள், அலுவலகப் பதிவேடுகள், நேரடியான பணிக்கள அனுபவங்கள் மூலம் ஜெபக்குழுவின் நாற்பது ஆண்டுகால செயல்பாடுகளைக் குறித்தச் செய்திகளைத் தயாரித்து

இந்நூலுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தார். அன்னாரின் கடினமான உழைப்பை உள்ளன்போடு பாராட்டி வாழ்த்துகிறேன்.

இந்நூலின் ஆசிரியர் அறிவர். ஜி. ஐசக் அருள்தாஸ் அவர்கள் இச்செய்திகளை விளக்கியுள்ள விதம், கையாண்ட மொழிநடை, எடுத்தாளப்பட்டுள்ள சொற்கள் ஆகியவை படிப்பவரை தன்பால் ஈர்க்கும் சக்தி கொண்டவைகளாக விளங்குகின்றன. நூலாசிரியர் ஏற்கனவே நூற்கள் எழுதி அனுபவமுள்ளவர். நூலின் ஒவ்வொரு பகுதியையும் சிறுசிறு தலைப்புகளில் அடக்கி மிகச் சிறப்பாக வடிவமைத்துள்ளார். குறிப்பாக இந்நூலுக்கு சிந்தனையைக் கிளறும், கருத்து நிறைந்த *மனிதர்களைத் தேடி . . .* என்ற பெயர் சூட்டிய பெருமையும் அன்னாரையேச் சாரும். அன்னாரது அயராத உழைப்பு, முயற்சி, ஆர்வம் ஆகியன சமுதாயத்திற்குப் பயன்படும் நல்ல பல நூல்களைத் தருவதற்கு பயன்படட்டும் என நெஞ்சார பாராட்டுகிறேன்.

இந்நூலை சிறப்பாக அமைப்பதற்குரிய நல் ஆலோசனைகளை அளித்து ஊக்கமளித்த அன்பு பேராயர் பேரருள்திரு. G. தேவகடாட்சம் அவர்களுக்கும், சுவிசேஷ ஜெபக்குழுவின் பொதுச் செயலாளர் அருள்திரு. P. வில்சன் அவர்களுக்கும் என் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

மனிதர்களைத் தேடி . . . என்ற இந்நூல் வாயிலாக பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் 40 ஆண்டுகால வளர்ச்சியை மக்கள் அறிந்து கொள்வதோடு, மனிதர்களைத் தேடும் மா சிறந்த நற்செய்திப் பணியில் தங்களை இணைத்துக் கொள்வார்கள் எனவும் நம்புகின்றேன்.

இறையாசி என்றும் நம்மோடிருப்பதாக!

கோட்டையடி,
20-05-2005

கிறிஸ்துவுக்குள் அன்புடன்,

D. ஏசு ஞானதாஸ்
உதவி தலைவர்

நெகிழ்ந்த நெஞ்சத்துடன் . . .

நமது வரலாற்றை நாம் இழக்காமலிருந்தால் என்றேனும் ஒருநாள் முழுமையாக விடுதலை அடைவோம். நமது வரலாற்றை இழந்து விட்டு, விடுதலைப் பெற்றாலும் அது ஒரு நாள் இல்லாமல் போகும் என்ற கூற்று என் சிந்தனையைக் கவர்ந்தது. குமரி மாவட்டம் இன்று இந்தியாவிலேயே அதிகம் கல்வி கற்ற மாவட்டங்களுள் ஒன்றாகத் திகழுவதற்கு, மேலை நாட்டு மற்றும் இந்நாட்டுக் கிறிஸ்தவத் திருத்தொண்டர்கள் செய்த தன்னலமற்றச் சேவையே காரணமாகும். இவ்வரலாறு இன்று காழ்ப்புணர்ச்சிக் கொண்ட சிலரால் நிகழ்காலத்திலேயே மாற்றி எழுதப்படுவதை நாம் காண்கின்றோம். நமது வரலாற்றை நாம் பதிவு செய்ய தயங்கும் ஒவ்வொரு நொடிப் பொழுதிலும் மாற்றார் நிகழ் காலத்திலேயே நம் வரலாற்றை மாற்றி எழுதி விடுவர். எனவே உண்மையைப் பதிவு செய்தல் காலத்தின் கட்டாயம். நம் கண் முன்னே நடக்கும் செயல்களை நாமே எழுதுவது எதிர்கால சமூகத்திற்கு நாம் கொடுக்கும் நற்கொடையாக அமையும்.

நாம் வாழும் குமரி மாவட்டம் பல்வேறுவிதமான கலாச்சார சிறப்புகளைக் கொண்டது. குமரி மாவட்டம் என்ற தனி மாவட்டம் உருவாகக் காரணமான வரலாற்று நாயகன் மார்ஷல் நேசமணியைக் குறித்து *தென் எல்லைக் காவலன் நேசமணி* என்ற நூலை உருவாக்கும் போது பல புதுமையானக் கருத்துக்களைப் பேட்டிகள் மற்றும் நூற்கள் வாயிலாக தெரிந்து கொண்டேன். அவைகளைக் குறித்து மேலும் அறியும் நோக்கில் பல புதிய நூற்களைப் பயின்று வந்தேன். அச்சூழலில் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிலிருந்து ஒரு வேண்டுகோள். அதாவது தென்னிந்தியத் திருச்சபை, 'கன்னியாகுமரிப் பேராயத்தினர் மலைநாட்டு மக்களிடையே ஆற்றி வருகிற நற்பணிகளைத் தொகுத்து ஒரு வரலாற்று நூல் எழுத வேண்டும். இது குறித்து அருள்திரு. எம். இராஜையன் அவர்கள் ஏற்கெனவே செய்திகள் பலவற்றை எழுதி வைத்துள்ளார். அவற்றை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்' என்றனர். இதனை அருள்திரு. எம். இராஜையன் அவர்கள் என்னை தொலைபேசியில் அழைத்து உறுதிப்படுத்தினார். உடனே இதற்குரிய முயற்சிகளில் ஈடுபட்டேன். முதற்கண், களப்பணியிடங்களை நேரில் பார்வையிட பொதுச்செயலாளர் தலைமையில் சென்ற குழுவினருடன் நானும் மலைகளுக்குச் சென்று பணிக்களங்களைப் பார்வையிட்டு மலை வாழ் மக்கள், மிஷனெறிகள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், சுதேச

மிஷனெறிகள் ஆகியோர்களிடம் பேட்டி மற்றும் உற்று நோக்கல் மூலமாக செய்திகளைச் சேகரித்தேன். நேரில் சென்றமையால் அவர்கள் தம் பண்பாடு மற்றும் கலாச்சாரப் பழக்க வழக்கங்களை என்னால் உணர முடிந்தது. அதன் பின்னர் எழுத்துப்பணி தொடங்கியது. எழுதிக் கொண்டிருக்கும் போது ஏற்பட்ட ஐயங்களுக்கு அருள்திரு. எம். இராஜையன், இவ்வியக்கத்தின் துணைத் தலைர் திரு. டி. ஏசு ஞானதாஸ், பொதுச் செயலர் அருள்திரு. பி. வில்சன், தலைமை எழுத்தர் திரு. எ. ஸ்டான்லி ஜோன்ஸ் ஆகியோர் தகுந்த ஆவணங்களின் அடிப்படையில் பதில் தந்தார்கள். எனவே இது தனி முயற்சியால் உருவான நூல் என்பதை விட பலருடைய உதவியால் தொகுக்கப்பட்ட நூல் என்பதே பொருத்தமாக அமையும்.

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் வரலாறு எழுதப்பட வேண்டும் என ஆர்வங்கொண்டு அதற்குரிய அனுமதியை அளித்து, ஒடுக்கப்பட்ட மக்கள் மீது கரிசனையுடன் செயல்படுபவர் பேராயர் பேரருள்திரு ஜி. தேவகடாட்சம் அவர்கள் இந்நூலுக்கு வாழ்த்துரையும் ஆசியுரையும் வழங்கியுள்ளார்கள். மிஷனெறிப் பணி குறித்த ஆர்வமுடன் பணித்தளங்கள் பல சென்று மலை மக்கள் மீது கரிசனையுடன் பணியாற்றி வரும் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் பொதுச்செயலர் அருள்திரு. பி. வில்சன் அவர்கள் இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கியுள்ளார்கள். தன்னார்வத் தொண்டாக எவ்வித ஊதியமுமின்றி செயலாற்றி வரும் இவ்வியக்கத்தின் பொருளாளர் திரு. ஜே. பாக்கியராஜ் அவர்கள், நல்லதொரு வாழ்த்துரை வழங்கியுள்ளார்கள். பல்கலைகளில் புலமையும் தேர்ந்த அறிவும் தெளிவான சிந்தனையும் கொண்டவர் எம் கல்லூரி முதல்வர் அறிவர் இ. ஜேம்ஸ் ஆர். டானியல் அவர்கள் இந்நூலுக்கு சிறந்ததொரு வாழ்த்துரை வழங்கி அழகு சேர்த்துள்ளார்கள். மலையிலொரு மனித விளக்காகத் திகழும் யோகபெல்லோ அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கி பெருமை சேர்த்துள்ளார்கள். மூல ஆதாரங்கள் பலவற்றைத் தந்து பல தடவைகளில் என்னோடு அமர்ந்து ஐயங்களை அகற்றியவர் அருள்திரு. எம். இராஜையன் அவர்கள், சிறப்பான கூட்டுநர் உரையினை எழுதி இந்நூலுக்கு மெருகூட்டியுள்ளார்கள். கூடவே நூல் வெளியிட சிறப்பான நிதியை நன்கொடையாக வழங்கியுள்ளார். வருங்கால சந்ததியார் வாழ்வுபெற தன்னை மிஷனெறி ஊழியத்தோடு இணைத்துச் செயல்படும் இவ்வியக்கத்தின் துணைத்தலைவர் திரு. டி. ஏசு ஞானதாஸ் அவர்கள் இந்நூலுக்குச் சிறப்பான அணிந்துரை வழங்கியுள்ளார்கள். மேற்கூறிய அனைவருக்கும் இதயபூர்வமான நன்றி!

வரலாற்று நூற்குழுவின் அங்கத்தினர்கள், நூலின் கருத்துக்களைச் சரிபார்க்க உதவிய பேரா. எ.வி. டைட்டஸ், மேற்பார்வை நூற்களைத் தந்துதவிய டாக்டர் எம். ஆல்பென்ஸ் நதானியேல், நூலுக்கான படிகள் எழுதும் போதும் அச்சுப்பிரதிகள் சரி பார்த்தலின் போதும் உதவிய எமது கல்லூரி தமிழ்ப் பேராசிரியை சோபியா ஜெயமணி, பயோனியர் குமாரசுவாமிக் கல்லூரி பேராசிரியை ஜாஸ்மின் ஆசீர், மரியகிரி கல்லூரி விரிவுரையாளர் பி. ஆட்லின் ஜெனிபர், எனது துணைவி திருமதி பிரீடா ஐசக் ஆகியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அதோடு நூல் அச்சிட்டு வெளியிட அன்பளிப்பு அளித்த டாக்டர் டி. டானியல் பாலஸ், திரு. வி. மோசஸ் ஆகியவர்களும் நினைக்கத் தக்கவர்கள். களப்பணியின் போது என்னுடன் வந்து உதவிய முன்னேற்றப் பணியாளர் திரு. ஜி. சாம் கில்பர்ட் ராஜன், அடிக்கடி ஆவணங்களைச் சரி பார்த்துத் தந்துதவிய அலுவலகப் பணியாளர்கள் மற்றும் களப்பணி வரைபடத்தை உரிய முறையில் தயாரித்து தந்த அலுவலக கணிணியாளர் திரு. பி. பால் தேவதாசன் ஆகியோர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

இந்நூலில் விட்டுப்போன தகவல்களோ, கருத்து முரண்பாடுகளோ இருந்தால் படிப்போர் சரியான ஆவணங்களுடன் அவற்றை தந்தால் மறு பதிப்பில் அவை நிவிர்த்திச் செய்யப்படும்.

சிறந்த முறையில் குறித்த நாளில் நூலினை அச்சிட்டு வழங்கிய நாகர்கோவில் நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ் உரிமையாளர்களான திரு. டி. ஜோசப், திரு. ஜே. ராபர்ட், திரு. ஜே. ஜெரால்டு ஆகியோர்களாவர்.

மேற்கூறிய அனைவருக்கும் உளங்கனிந்த நன்றியையும் அன்பையும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

நன்றியுடன்,

நாகர்கோவில்
08-07-2005

ஜி. ஐசக் அருள்தாஸ்

உள்ளடக்கம்

பகுதி - ஒன்று (1962-1977 மே)

1. அருட்பணியின் ஆரம்பம் 1
2. அழைப்பிற்கு அடிபணிந்தவர்கள் 13
3. மலைகளும் மக்களும் 32
4. சுவிசேஷ ஜெபக்குழுவின் வளர்ச்சி 45
5. சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு உதவிய அமைப்புகள் 54
6. அருட்பணியாளரும் அருட்பணியும் 62

பகுதி - இரண்டு (1977 ஜூன் - 2002)

7. ஆரம்பகாலப் பணித்தளமும் ஆதரித்த மக்களும் 71
8. பணிக்களங்களும் ஊழியங்களும் 115
9. சமூகசேவை அமைப்புகளின் பங்கு 167
10. சமூகப்பணிகள் 177
11. முன்னேற்றப் பணிகள் 200
12. ஆண்டிறுதிக் கூடுகைகள் 229
13. நிர்வாக அமைப்பு 245
14. பேராயர்களின் ஈடுபாடு 259
15. விருதுகளும் பணிகளும் 267
16. வேதனைகளும் சாதனைகளும் 277

✧ சிந்தனைக்கு 290

பகுதி - மூன்று

✧ பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் டயரி 293

✧ அருட்பணிக்களங்கள் 296

வரைபடம் I - கல்வராயன் மலை

வரைபடம் II - சேர்வராயன் மலை 297

✧ ஊழியர் விவரப் பட்டியல் 298

✧ துணை நூற்பட்டியல் 303

பகுதி - ஒன்று

(1962 முதல் 1977 மே வரை)

1

அருட்பணியின் ஆரம்பம்

"யாரை நான் அனுப்புவேன், யார் நம் காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான் : இதோ, அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்பும் என்றேன்" (ஏசாயா 9 : 8)

இப்பேர்ப்பட்ட குரலுக்குக் கீழ்ப்படிந்து நாடெங்கும் சுற்றித் திரிந்து, பரதேசிகளாய் வாழ்ந்து கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பறைசாற்றியோர் பலர். அத்தகைய பரதேசிகள் விதைத்த விதைகள் இன்று கனிகொடுக்க ஆரம்பித்து விட்டன.

1. தொடக்க கால அருட்பணிகள்

குமரிப் பேராயமானது விளவங்கோடு, கல்குளம், அகஸ்தீஸ்வரம், தோவாளை ஆகிய வட்டங்களிலுள்ள திருச்சபைகளையும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள லெவஞ்சிபுரம், கன்னங்குளம் ஆகிய திருச்சபைகளையும் உள்ளடக்கியதாகும். குன்றுகள், பள்ளத்தாக்குகள், ஆறுகள், குளங்கள், செழிப்பான வயல்கள் என அமைந்து பார்ப்போர் மனதைக் கொள்ளை கொள்ளும் அளவில் அமைந்த நிலப்பரப்புகளையுடையது.

சமூகத்தில் சாதி, சமய ஏற்றத்தாழ்வுகளை அதிகமாகக் கொண்டது. குறிப்பிட்ட சில மேல் வகுப்பினர்களால் முன்னோர்கள் அடிமைகள் போல் வாழ்ந்துள்ளனர். மேலாடை அணியவும், கால் முட்டுக்குக் கீழ் ஆடையணியவும் ஒடுக்கப்பட்ட சமூகத்தினர்களுக்கு அன்று உரிமை இல்லாதிருந்தது.

இந்நிலையில் மாராயம் என்று பெயரிட்டழைக்கப்பட்ட மயிலாடி மகாராஜன் வேதமாணிக்கத்தைக் கடவுள், தென்திருவிதாங்கூரில்

எழுப்பினார். அவர் சைவ சமயக் கடவுளாகிய சிவபெருமானைத் தரிசிக்கும் வாஞ்சையுடன் 1799-ஆம் ஆண்டு சிதம்பரம் நோக்கிப் பயணம் மேற்கொண்டார். அவர் எதிர்பார்த்துச் சென்ற வழிபாட்டுக் கோவில் அவருக்குப் பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்தது. அவ்வளாகத்தில், அவர் ஒழுக்கக் கேடான சில நிகழ்வுகளைக் கண்டு வேதனையுற்றார். சிவனைத் தரிசிக்கச் சென்ற மாராயம் திரும்பிவரும் வழியில் ஜீவனுள்ள மெய்க்கடவுளாகிய இயேசு கிறிஸ்துவைச் சந்தித்தார்.

ஜெ.சி. கோலாப்

பின்னர் மாராயமும் அவருடன் சிதம்பரத்திற்குச் சென்ற சிவகுருநாதனும் தஞ்சாவூர் சென்றடைந்தனர். அங்கு அவர்கள் **அருள்திரு. ஜெ.சி. கோலாப் ஐயர்** மூலம் நற்செய்தியைக் கேட்டறிந்தனர். இயேசுநாதரை முழுமையாக விசுவாசித்து அவரைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். மாராயம் என்பவருக்கு மகாராஜன் வேதமாணிக்கம் என்றும், சிவகுருநாதனுக்கு மாசில்லாமணி என்றும் பெயரிட்டு, இருவருக்கும் கோலாப் ஐயர் திருமுழுக்கு வழங்கினார்.

சிதம்பரம் சென்று நடராஜ பெருமானை தரிசித்துவிட்டு, புனித விபூதியுடன் வருவார்கள் என மயிலாடி மக்கள் மாராயத்தையும் சிவகுருநாதனையும் எதிர்நோக்கி இருந்தனர். ஆனால் அவர்களோ கிறிஸ்துவின் போதனைகள் அடங்கிய புதிய ஏற்பாட்டை மயிலாடிக்குக் கொண்டு வந்தார்கள். எதிர்பார்த்திருந்த உறவினர்களுக்குக் கிறிஸ்தவப் போதனைகளைத் தெளிவாக விளக்கினார்கள். இவற்றைக் கேட்ட சிலர் கிறிஸ்துவைத் தொழுது சேவிக்க முன் வந்தார்கள்.

அ. வேதமாணிக்கம் - உறுதிபடல்

வேதமாணிக்கம் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்ததும், மயிலாடிப் பகுதியில் பல துன்பங்கள் பிறரால் அவருக்கு உருவாயின. இதனால் கவலையுற்ற வேதமாணிக்கம், கிறிஸ்துவின் அன்பை விட்டுப் பிரியவும் மனமற்று, மறைந்து வாழ்வதற்காக கோலப் ஐயர் அவர்களைத் தேடி தஞ்சாவூர் சென்றார். கோலப் ஐயர், வேதமாணிக்கத்துக்குக் கிறிஸ்தவத்தின் அடிப்படைப் போதனைகள் பலவற்றை எடுத்துரைத்தார். அதோடு "கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது" (பிலிப்பியர் 1 : 29). "அவரோடே கூடப்

பாடுகளைச் சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம். நாம் அவரை மறுதலித்தால், அவரும் நம்மை மறுதலிப்பார்" (II தீமோத் 2 : 12) போன்ற வசனங்களின் உண்மையை வேதமாணிக்கம் தனது அனுபவமாக ஏற்றுக் கொள்ளச் செய்தார். நீங்கள் வாழும் சொந்த மண்ணில் அம்மக்களுக்குச் சாட்சியாக வாழ்வதற்காகவே கடவுள் உங்களைத் திருவிதாங்கூரில் அவருக்கு உகந்த கனியாகத் தெரிந்தெடுத்தார் என்று ஆலோசனைகள் கூறி, மீண்டும் மயிலாடிக்கே அனுப்பி வைத்தார்.

வேதமாணிக்கம் தஞ்சாவூரிலிருந்து வரும்போது அவருக்குத் துணையாக வேதம் கற்ற ஏகவடியான் என்ற உபதேசியாரையும் கோலப் ஐயர் அனுப்பி வைத்தார். மேலும் இங்கிலாந்து மிஷனெறி சங்கத்துடன் (L.M.S.) தொடர்பு கொண்டு, தரங்கம்பாடியில் தமிழ்மொழி கற்றுக் கொண்டிருந்த அருள்திரு. றிங்கல் தௌபே அவர்களை திருவிதாங்கூருக்கு மிஷனெறியாக அனுப்பி வைக்கவும் ஆர்வம் கொண்டார். இத்தகைய முயற்சிகளிலெல்லாம் தளராது ஈடுபட்ட கனம் கோலப் ஐயரின் தொண்டு குமரிமாவட்ட வரலாற்றுச் சுவடுகளில் பொறிக்கப்படுவது, உண்மையின் வெளிப்பாடாக அமையும்.

ஆ. றிங்கல் தௌபேயின் வருகை

வாழ்வின் வசந்தகாலத்தைச் சுவைக்காதவர், தரித்திரம், பிணி, தனிவாசம் போன்ற துன்ப, துக்கங்களைத் தன் வாழ்வில் ஏற்றுக் கொண்டவர், தன் சரீர ஆடையை எவ்வாறு களைந்தார் என்பதை மானிடர் எவரும் அறியார், அமரரும் ஆண்டவருமே அறிவார். இதுபோன்ற துயரச் செய்தியினைக் கதையிலும் கேட்டிருக்க வாய்ப்பில்லை. ஜெர்மன் தேசத்தில் புருஷியா மாகாணத்திலுள்ள சிலிசியா நாட்டில் ஷீடல் உயிட்ஸ் என்ற கிராமத்தின் குருவான கோற்றிலேப் றிங்கல் தௌபேயின் மூத்த மகனாக 1770 ஆகஸ்டு 8 ஆம் நாள் வில்லியம் தொபியாஸ் றிங்கல் தௌபே பிறந்தார். இவரது சகோதரி அன்னா, சகோதரன் எர்னால்ட் ஆவர். கிறிஸ்துவின் அன்பால் உந்தப்பட்ட இவர் 1806-ஆம் ஆண்டு ஏப்ரல் 25-ஆம் நாள் தென் திருவிதாங்கூரிலுள்ள ஆரல்வாய்மொழியில் காலடி எடுத்து வைத்தார். "நான் பேய்கள் நிறைந்த திருவிதாங்கூருக்குச் செல்கிறேன், அங்கு எனக்கு என்ன நேரிடும் என்பதை யான் அறியேன். ஒருவேளை சுவிசேஷத்தைப் போதிப்பதற்காக நான் கொல்லப்படலாம். எனக்குப் பயமில்லை. ஆனால் என்னுடைய இரட்சகரைப் பற்றி அந்த நாட்டில்

பேசுவதற்கு எனக்கு ஒரு நாவுக்கு மேல் இல்லையே என்பதற்காகவும் வருந்துகிறேன்" என தனது நாட்குறிப்பில் எழுதியுள்ளார். ஆரல்வாய்மொழியைக் கடந்து வந்த இவர் சரீர களைப்புக் காரணமாக ஆங்குள்ள ஓர் அம்பலத்தில் இளைப்பாறினார். அதைப் பார்த்த உயரின மக்கள் ஆங்குள்ள மாஜிஸ்திரேட்டிடம் போய் "ஆரல்வாய்மொழியில் இளைப்பாறுகிற மேல்நாட்டு மனிதரைக் கண்டால் எங்கள் சாமி கோபமடைந்து உணவருந்தாது" எனக் கூறியதுடன் அங்குள்ள மக்களையும் ஒன்று கூட்டினர். நிலையைக் கேள்விப்பட்ட மாஜிஸ்திரேட் றிங்கல் தௌபே ஐயரை உடனடியாக அவ்விடம் விட்டுப் போய்விட உத்தரவிட்டார். உடனே றிங்கல் தௌபே மனம் நொந்து, கால்நடையாக அங்கிருந்து நடந்து மயிலாடி வந்து சேர்ந்தார். அங்கு வேதமாணிக் கத்தையும், கிறிஸ்தவ விசுவாசிகளையும் கண்டு அகமகிழ்ந்தார்.

தென் திருவிதாங்கூர் மக்களின் நிலைகளைக் கண்ணுற்ற றிங்கல் தௌபே சமயப் பணியுடன், சமூகப் பணியிலும் ஈடுபட்டார். ஆங்கிலக் கல்வியை இடைவிடாமல் பரப்பினார். அக்காலத்தில் திருவிதாங்கூர் தளவாய் வேலுத்தம்பி ஒடுக்கப்பட்ட இன மக்களைக் கொன்று குவித்ததோடு, கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தி வந்தான். இதனால் றிங்கல் தௌபே 1807 ஜூலை 10-ஆம் நாள் மறைந்திருத்தல் வேண்டி பாளையங்கோட்டைக்குச் சென்றார். பின்னர் இங்கு சமாதானம் உருவானது. மீண்டும் 1809 மார்ச் மாதம் திருவிதாங்கூர் வந்தார். உடனே 1809 மே மாதம் மயிலாடியில் 40x12 அடி அளவுள்ள சீர்திருத்த ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டி, 1809 செப்டெம்பர் 10-ஆம் நாள் அர்ப்பணம் செய்தார். அதன் அருகில் பள்ளிக்கூடத்தையும் நிறுவினார். இப்பாட சாலையில் ஆங்கிலம், தமிழ், மலையாளம், கணக்கு ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன. தஞ்சாவூரிலிருந்து ஆறு ஆசிரியர்களை வரவழைத்து கல்வி புகட்டினார். மிகக் குறுகிய காலத்தில் 188 மாணவர்கள் இக்கல்விக் கூடத்தில் பயின்றுள்ளனர். மயிலாடி, பிச்சைக் குடியிருப்பு, தாமரைக்குளம், புத்தளம், ஆத்திக்காடு, கோவில்விளை, ஈத்தாமொழி ஆகிய ஊர்களில் ஆலயங்களை எழுப்பி, அவற்றின் அருகில் பள்ளிக்கூடங்களையும் நிறுவினார். இத்தகு பெருமை நிறைந்த பணிகள் செய்த றிங்கல் தௌபே அவர்கள், மகாராசன் வேதமாணிக்கம் அவர்களைப் போதகராக அருட்பொழிவு செய்து 1816 பெப்ருவரி 4-ஆம் நாள் இம் மண்ணைவிட்டு சொந்த தேசம் புறப்பட்டார். ஆனால் சொந்த நாடு போய்ச் சேரவில்லை. அவரின் முடிவு குறித்து இதுவரையிலும் தெளிவான செய்திகள் கிடைக்கவில்லை. எப்படியும் இம்மண்ணின் மக்களை விண்ணுலகில் சந்திப்பார்.

இ. பேராயர் மிடில்டனின் (Middleton) வருகை

இந்தியாவிற்குரிய முதல் பேராயராகப் பேராயர் மிடில்டன் அவர்கள் கல்கத்தாவில் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் மயிலாடி மிஷனைச் சந்திப்பதற்காக 27-07-1816-ல் மயிலாடி வந்தார். அவரை மகாராஜன் வேதமாணிக்கம் வரவேற்றார். தென்திருவிதாங்கூர்ப் பகுதி கிறிஸ்தவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல விடப்பட்டிருந்ததை நேரில் கண்ட பேராயர் நல்லதொரு அறிக்கையினை கர்னல் மன்றோவிற்கும், எல்.எம்.எஸ்.-ன் தலைமை இடத்திற்கும் அனுப்பினார். இதன்மூலம் தொடர்ந்து கிறிஸ்தவர்கள் ஓரளவு தேற்றப்பட்டார்கள்.

ஈ. சார்ள்ஸ் மீட் ஐயரின் வருகையும் சமூக மாற்றங்களும்

மேலைநாட்டு இறைத் தொண்டர்களில், குமரிமாவட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக அதிக காலம் உழைத்து, கல்வி, மருத்துவம், தொழில் போன்ற துறைகளில் தன் முத்திரையைப் பதித்தவர் சார்ள்ஸ் மீட் ஐயராவார். 01-10-1792-ல் இங்கிலாந்தில் பிறந்த இவர், 1817-ஆம் ஆண்டின் இறுதியில் மயிலாடியில் தன் பணியைத் தொடங்கினார். வெகுவிரைவில் மயிலாடியில் இருந்த மிஷனின் தலைமையைச் சாலை வசதியுடைய நாகர்கோவிலுக்கு மாற்றினார். ஆர்வம், அர்ப்பணிப்பு, திடம், ஊக்கம், செயலாற்றல் ஆகியவைகளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார். மூடநம்பிக்கை, வறுமை, தீண்டாமை, அறியாமை போன்றவற்றிற்கு எதிராக உழைத்தார். நாகர்கோவில் நீதிபதியாகப் பணிபுரிந்த இவர் மக்கள் பணிக்காக அதைத் துறந்தார். அருள்திரு. ஹேரிஸ்ட் ஐயரின் மகளான ஜோகன்னா செலஸ்டினாவை மணந்தார். நாகர்கோவில் பள்ளிக்கூடத்தின் அருகில் சிறுவர்களுக்கான விடுதியையும் அமைத்தார். இவருடைய மனைவி நாகர்கோவிலில் மகளிர்க் கல்வியை முதன் முதலாகத் தொடங்கினார். ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காகப் போராடிய இவர், பெண்களுக்கான மேலாடை கலகங்களையும் முன்னின்று நடத்தி வெற்றி கண்டார். திருவிதாங்கூர் அரசு விதித்திருந்த கடுமையான வரிகளை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றார். எல்லா வகையிலும் தென்திருவிதாங்கூர் பகுதி மக்கள் முன்னேற விடிவெள்ளியாகத் திகழ்ந்தார்.

உ. மிஷனெறிகளின் தொடர் வருகை

மீட் ஐயர் அவர்கள் எல்.எம்.எஸ். சங்கத்தினருக்கு எழுதியதின் அடிப்படையில் பல மிஷனெறிகளை அச்சங்கம் தென்திருவிதாங்கூருக்கு அனுப்பி வைத்தது. அருள்திருவாளர்கள் றிச்சர்ட் கீல், வில்லியம் மில்லர், ஜேம்ஸ், சார்லஸ் தாம்சன், வில்லியம் ஆடிஸ், ஜி.ஹெச். மார்ஸ்டன்,

சார்லஸ் மில்லர், ஜெ.ஓ. ஒயிட்ஹெவுஸ், ஜெற்றி. பாட்டிசன், ஜாண் ஆப்ஸ், டென்னிஸ், ஜாண்ஹாக்ஸ், எபநேசர் லூயிஸ், ஜேம்ஸ் கானவே, பெய்லிஸ் ஆகியவர்கள் மிகவும் முக்கியமானவர்கள். இத்தகைய மிஷனெறிகளின் பெயரால் நாகர்கோவில் பகுதியிலுள்ள தெருக்கள் இன்றும் அழைக்கப்படுகின்றன.

ஊ. தென்திருவிதாங்கூர் அருட்பணி ஆலோசனைக்குழு

மேலைநாட்டிலிருந்து பணியாற்ற வந்த மிஷனெறிகள் ஒவ்வொருவரும் சிறப்பான திறமை பெற்றவர்கள். அருள்திரு. ஜேம்ஸ் ரசல் என்பவர் ஊழியத்துடன் கிறிஸ்தவ தலைவர்களுக்குத் தரமான பயிற்சியும் அளித்தார். அதன் பயனாக கிராமங்கள்தோறும் பள்ளிகளும், ஆலயங்களும் தோன்றின. அருள்திரு. ஜேம்ஸ் எமிலின் அவர்கள் தன்னுடன் உழைக்கும் ஊழியர்களை வருடத்தில் ஒரு மாதமாவது கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் மத்தியில் ஊழியம் செய்யும்படி அனுப்பி வைத்தார். இதனால் 50 சபைகள் புதிதாக உருவாயின. மட்டுமல்ல ஜாதிப் பிரிவினையை ஒழிக்க ஐக்கிய விருந்து நடத்தினார். அதில் ஒவ்வொரு ஜாதியிலுமிருந்து கணவன்-மனைவி என்று இரு நபர்களை அழைத்திருந்தார். அரிசன மக்கள், நாடாரில் இரு பிரிவினர், சூத்திரர், புலயர், வண்ணார், ஈழவர், செட்டியார், வேதார் ஆகிய வகுப்பினர்களிலிருந்து 29 நபர்கள் அதில் பங்குபெற்றனர். இதைத்தவிர "ஐக்கிய நற்செய்திக் குழு" ஒன்றையும் ஆரம்பித்தார். அவ்வமைப்பை மாதிரியாக ஏற்று "தென்திருவிதாங்கூர் அருட்பணி ஆலோசனைக்குழு" என்ற அமைப்பு நாகர்கோவிலில் ஏற்படுத்தப்பட்டது.

எ. கல்வித்துறையில் பணி

அருள்திருவாளர்கள் மீட், மால்ட் ஆகியோரால் 1819-ஆம் ஆண்டு முதல் செமினறிக்கல்வி நாகர்கோவிலில் சிறப்பாக நடைபெற்றது. அதில் தமிழ், மலையாளம், ஆங்கிலம், வடமொழி, கிரேக்கம் போன்ற மொழிகள் கற்பிக்கப்பட்டன.

உயர் கல்வி கொடுக்கும் நோக்குடன் கல்லூரிக் கல்வியை அருள்திரு. ஜேம்ஸ் டதி அவர்கள் தொடங்கினார்கள். அதில் இயற்கை, தத்துவம், சமயம், குறிக்கணக்கியல், உலக வரலாறு, சமய வரலாறு, கட்டுரை வரைதல், ஆங்கிலக்கவிதை போன்ற பாடங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன. இக்கல்லூரி 1893 பெப்ருவரி 13-ஆம் நாள் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டது. தற்போது ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரியாகத் திகழ்கிறது.

கல்லூரிக் கல்வியைத் திறம்பட நடத்தியவர்களில் பேரா.டென்னிசன், திரு. ஜாண் பார்க்கர், அருள்திரு. ஈஸ்டாப், திரு. மார்ஸ்டன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் மூலம் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட மக்களுக்கும், பெண்களுக்கும் கல்வி கொடுக்கப்பட்டது. இன்று இந்தியாவிலேயே அதிகமாகக் கல்வி கற்ற மாவட்டங்களுள் குமரி மாவட்டமும் ஒன்றாகத் திகழுகிறது என்றால், அதற்கு இம்மிஷெனெறிகளின் கல்விச் சேவையே காரணமாகும்.

௭. மருத்துவச் சேவை

விழி இழந்தவனுக்கு ஒளியை ஊட்டியும், தீண்டாமைக்குச் சாவுமணி அடிக்க உதவியவர்கள் மேலைநாட்டுத் திருத்தொண்டர்களே ஆவர். நோய்கள் வருவதற்குப் பேய், பிசாசுகளின் தீய சக்திகளே காரணம் என்ற மக்களுக்கு, மருத்துவ முறைகளை அறிமுகப்படுத்தி, அதன்மூலம் சமூக மாற்றங்களை மேற்கொண்டனர். மிஷனெறிகளான நிங்கல் தௌபே, சார்ள்ஸ் மீட் ஆகியோர் பல்வேறு தடுப்பு ஊசிகள் மூலம் மருத்துவப் பணிகளைச் செய்தனர். எனினும் முறைப்படியாக 1838-ஆம் ஆண்டு ஆர்ச்சி பால்ட் றாம்சே என்பவரால் திருவிதாங்கூரின் மருத்துவ மிஷன் நெய்யூரில் தொடங்கப்பட்டது. வெகுவிரைவில் 1500-க்கு மேற்பட்ட மக்கள் மருத்துவ உதவி பெற்று, சுகமடைந்துள்ளனர். அவரைத் தொடர்ந்து 1853 முதல் டாக்டர். சி.சி. லீச் அவர்களும் 1861 முதல் டாக்டர். ஜாண் லோவ் அவர்களும் பொறுப்பேற்று, திறம்படப் பணியாற்றினார்கள். தேவை அதிகரிக்கவே ஆற்றூர், சாந்தபுரம், அகஸ்தீஸ்வரம் ஆகிய பகுதிகளில் மூன்று கிளை மருத்துவமனைகள் தொடங்கப்பட்டன.

21-01-1873 முதல் டாக்டர். ற்றி.எஸ். தாம்சன் அவர்கள் மருத்துவப் பயிற்சியையும் திறம்பட நடத்தினார்கள். இப்பயிற்சி பெற்றவர்கள் மருத்துவ சுவிசேஷகர்கள் என அழைக்கப்பட்டனர். இவர்கள் கிராமங்கள் தோறும் சென்று பணிபுரிந்தனர். 11-02-1886 முதல் டாக்டர். எட்வின் சர்குட்ப்றே என்பவர் இங்கு இணைந்தார்கள். தொழுநோயாளிகளுக்கென ஒரு தனிப் பிரிவை இவர் ஏற்படுத்தினார். இதனைப் புகழ்ந்து, உண்மையான தர்மம் என்பது ஏழை, சாதியற்ற தொழுநோயாளிகளுக்கு நிவாரணம் அளிக்க ஏற்படுத்தப்பட்ட சேவையே என திருவிதாங்கூர் திவான் சங்கர சுப்பையா அவர்கள் பேசினார்.

டாக்டர்களான பெல்ஸ், பென்டால், ஜேம்ஸ் தேவதாசன், பஃஹ் ஆகியவர்களும் நெய்யூரில் சிறப்பாகப் பணியாற்றினார்கள். 1923 முதல் டாக்டர். சாமர்வெல் அவர்கள் இம்மருத்துவமனையில் இணைந்தார்கள். அது முதல் நெய்யூர் மருத்துவ சேவையின் புகழ் உலகம் முழுவதும்

பரவியது. 1930-ல் புற்றுநோயைக் குணப்படுத்தும் கதிரியக்க சிகிச்சை முறையை இந்தியாவிலேயே முதன் முதலாக நெய்யூரில் தொடங்கினார். அவரைத் தொடர்ந்து டாக்டர். ஜெங்கின்ஸ், டாக்டர். கட்டிங்ஸ் ஆகியவர்கள் ஆற்றிய பணிகள் வரலாற்றுச் சுவடின் ஒரு பக்கமாகத் திகழ்கின்றன.

ஜாதி, கலாச்சாரக் கட்டுகளுக்கு அடிமைப்பட்டிருந்த திருவிதாங்கூர் மக்களின், வெறுப்புணர்வுகளை ஒரே இடத்தில் களைய மருத்துவப்பணி முக்கிய காரணமாகத் திகழ்ந்தது. இம்மருத்துவப் பணிக்கு அரசும், செல்வந்தர்களும் தாராள நிதிகளைக் கொடுத்து உதவியுள்ளமையும் காலம் என்னும் ஏட்டில் இடம் பெறுகிறது. இன்று தென் திருவிதாங்கூர் மருத்துவ மிஷனானது, கன்னியாகுமரி மருத்துவ மிஷன், தென் கேரளா மருத்துவ மிஷன் என்ற பெயர்களில் செயல்பட்டு வருகிறது. தென் கேரளா மருத்துவ மிஷன் மருத்துவக் கல்லூரியாக வளர்ந்துள்ளமை, மேல்நாட்டு மிஷனெறிகளுக்குச் சூட்டப்பட்ட மகிமைக் கிரீடமாகும்.

2. குமரி மாவட்ட நற்செய்திக் குழுக்கள்

அ. செனானா மிஷன் (Senana Mission)

நாகர்கோவில் மிஷன் மருத்துவமனையில் இரண்டு ஆசாரி இனப் பெண்கள் ஆறுதலற்றவர்களாய்க் காணப்பட்டார்கள். அவர்களது அன்புத் தகப்பனாரும், ஒரே சகோதரனும் மருத்துவமனையில் இறந்து போனார்கள். அச்சூழலில் இயேசுநாதரை நேசித்த நாகர்கோவிலைச் சேர்ந்த ஒரு தாயார் அந்த இரு பெண்களையும் மருத்துவமனையில் சந்தித்தார்கள். அப்பெண்களுக்கு இயேசு கிறிஸ்துவின் அன்பைக் கூறி ஆறுதலடையச் செய்தார்கள். அப்பெண்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு தாங்கள் கடைப்பிடித்து வந்த சடங்காச்சாரங்களை விட்டுவிட்டார்கள். பின்னர் நாகர்கோவில் கஸ்பா ஆலயத்தில் சேர்ந்து கடவுளைத் துதித்து வந்தார்கள். அந்த இரு பெண்களது சாட்சியினால் அப்பகுதியில் சிலர் இயேசுவைப் பின்பற்றத் தீர்மானித்து அவரைத் தங்கள் மீட்பராக ஏற்றுக் கொண்டார்கள். இந்த நிகழ்ச்சியே செனானா மிஷன் தோன்றுவதற்குத் தூண்டுகோலாய் அமைந்தது. இம்மிஷன் 1860-ல் தொடங்கப்பட்டதாகும். இதன் சிறப்பை உணர்ந்து பல பகுதிகளில் மிஷனெறிகளின் மனைவிமார் இப்பணியைச் செய்துள்ளனர்.

செனானா மிஷனின் முக்கிய நோக்கம் பெண்கள் மத்தியில் நல் ஊழியம் செய்வதே ஆகும். கிறிஸ்தவரல்லாத உயர்சாதிப் பெண்கள் மத்தியில் வேதாகமத் தாய்மார் மூலம் இவ்வூழியம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஆண்கள் நுழைய எதிர்ப்புள்ள பகுதிகளிலும் இப்பெண்கள்

செல்கிறார்கள். ஒரு கிராமத்திலுள்ள பெண்களைச் சிலர் பொதுவான இடத்தில் கூட்டிச் சேர்த்தும் கிறிஸ்துவைக் கூறுகின்றனர். இதனுடைய வளர்ச்சிக் காலத்தில் திருமதி. ஜாய் ஞானதாசன், நேன்சி பிறைட் டேவிட், தீபம் ஆசிரியை, குமாரி எமிலியம்மாள் ஆகியோர் இதன் தூண்களாய்த் திகழ்ந்துள்ளனர். தங்களது ஜெபத்தாலும், கொடையாலும் சுவிசேஷ ஊழியங்களை ஆதரித்துள்ளார்கள். பிற்பட்ட சமூகத்துப் பெண்களின் கல்விக்கும் தொண்டு செய்துள்ளார்கள். குறிப்பாக நாகர்கோவில், வடசேரி, கோட்டார், இரணியல், தலக்குளம் மற்றும் நெய்யூர் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட பெண்களுக்கு இவர்கள் செய்த பணி தூண்டுகோலாக அமைந்தது. இம்மிஷன் மூலம் நாகர்கோவில் பகுதியில் 5 பள்ளிகளும், நெய்யூர் பகுதியில் 3 பள்ளிகளும் சிறப்பாகச் செயல்பட்டுள்ளன. சுமார் 2300 பெண்கள் கல்வி கற்றுள்ளதாகவும் தெரிகிறது.

ஆ. மால்ட் மிஷனெறி சங்கம் (Malt Missionary Society)

பக்தன் மால்ட் ஐயர் மிகச் சிறந்த ஊழியர். அவர் வெகுகாலம் ஊழியம் செய்த இடத்தில் அவர் நினைவாக ஒரு சுவிசேஷப் பணி தொடங்கி நடத்த வேண்டும் என்ற ஆசை அவரது சொந்த நகரமான கவன்ற்றி நகரத்தாருக்குள் எழுந்தது. இதனால் 1872-ஆம் ஆண்டு "மால்ட் மிஷனெறி சங்கம்" என்ற அமைப்பு ஒன்று நாகர்கோவிலில் தொடங்கப்பட்டது. நாகர்கோவிலைச் சுற்றிலும் வாழ்ந்து வந்த புற மதத்தவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைக் கூறுவதும், தேவைப்படுகிற இடங்களில் பள்ளிகள் மற்றும் ஆலயங்கள் நிறுவுவதும் இச்சங்கத்தின் நோக்கமாக இருந்தது. இத்தொலைநோக்குத் திட்டத்துடன் வடசேரியில், 1901-ல் உபதேசியார் நியமிக்கப்பட்டு வாசிப்புச் சாலை ஒன்று கட்டப்பட்டது. அதில் விவிலிய கருத்துரைகள் அடங்கிய புத்தகங்கள் கிறிஸ்தவ நெறிகளைப் போதிக்கும் நோக்கில் வைக்கப்பட்டன. அங்கு கூடிவந்த மக்களுக்கு வேத வசனங்களை வாசித்துக் காட்டி விளக்கமும் அளிக்கப்பட்டு வந்தது. பின்னர் அதில் ஆராதனையும் நடத்தப்பட்டது. 28-06-1907-ல் இம் மிஷனின் வளர்ச்சிக்காக அருள்திரு. பார்க்கர் ஒரு குழுவை அமைத்தார். அதில் 12 பேர் இருந்தனர். இக்குழுவின் முயற்சியால் இம் மிஷன் முன்னேற்றம் கண்டது. 1910 முதல் வடசேரி சந்தை கூடும் நாட்களில் இவர்கள் துண்டுப் பிரதிகளை விநியோகித்தும், தெரு முனைகளில் பிரசங்கித்தும் வந்தார்கள்.

மால்ட்புரம், வடலிவிளை, வடசேரி, பள்ளிவிளை, ராமன்புதூர், பெரியவிளை, கிறிஸ்துமங்களம் ஆகிய இடங்களில் இச்சங்கம் பள்ளிகள்

மற்றும் ஆலயங்கள் கட்டி நல் ஊழியங்களை நிறைவேற்றியது. பின்னர் இச்சபைகளைக் குமரிப் பேராயத்திற்கு ஒப்படைத்தது.

இ. சுதேச மிஷனெறி சங்கம் (Home Missionary Society)

1869-ஆம் ஆண்டு தென் திருவிதாங்கூரில் சுதேச கிறிஸ்தவர்கள் அடங்கிய சபையாலோசனைச் சங்கம் ஒன்று நிறுவப்பட்டது. அதன் நோக்கம் புற மதத்தவருக்கு நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்பதே ஆகும். அதற்கு ஒரு தனி அமைப்பு இருந்தால் நல்லது என நெய்யூரில் பணியாற்றிய அருள்திரு. ஹாக்கர் ஐயர் எழுத்து மூலம் தூண்டி வந்தார். இதனால் 1900 மார்ச் 15-ஆம் நாள் **"தென் திருவிதாங்கூர் சுதேச சுவிசேஷ பிரபல்லிய சங்கம்"** ஒன்று நிறுவப்பட்டது. இதன் பிரதான நோக்கம் மேல்நாட்டார் உதவியின்றி இப்பிராந்திய மக்களால் இப்பகுதி மக்கள் சந்திக்கப்பட வேண்டும் என்பதே ஆகும். இதன் முதல் தலைவர் நாகர்கோவில் பகுதியைச் சேர்ந்த திரு. ஜெ. ஜோஷ்வா என்பவராவார். 18-12-1912-ல் இதன் பெயர் **சுதேச மிஷனெறி சங்கம்** என மாற்றப்பட்டது. 1935 முதல் ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாதம் மூன்றாம் ஞாயிறு ஹெச். எம்.எஸ். ஞாயிறாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

1970-ல் இச்சங்கம் தென் கேரளப்பேராய சுதேசி மிஷனெறி சங்கம், குமரிப்பேராய சுதேச மிஷனெறி சங்கம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. குமரிப் பேராயத்தில் ஒரு விசாரணைப் போதகரின் தலைமையில் போதகர்கள், சுவிசேஷகர்கள், உபதேசிமார்கள் மற்றும் வேதாகமத் தாய்மார்கள் என்று பலர் இவ்வூழியத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். மிகவும் பிற்பட்ட, நலிவடைந்த, வாழ்வில் நம்பிக்கை இழந்த மக்கள் மத்தியில் இச்சங்கம் ஊழியம் செய்து வருகிறது. நன்கு வளர்ச்சி பெற்ற சபைகளை அப்பகுதியிலுள்ள தென்னிந்திய திருச்சபைக்குக் கொடுத்து வருகின்றனர்.

ஈ. நாகர்கோவில் சுவிசேஷக்குழு (Nagercoil Evangelistic Team)

நாகர்கோவில் பகுதியில் ஊழிய வாஞ்சையுள்ள டி.ஒய். வில்லியம், ஜி. என். நெகேமியா, ஜெ.எம். டானியல், பால் ஜோயல், ஜெ.எம். ஜாண், எஸ்.எ. அகிமாஸ், யோசேப்பு ஆகிய திருமக்கள் (lay members) கூடி 1908-ல் **நாகர்கோவில் சுவிசேஷக்குழு** என்ற அமைப்பு ஒன்றைத் தொடங்கினர். அக்குழுவினர் கிறிஸ்துவை அறியாத சில கிராம மக்களைச் சந்தித்து நற்செய்தியினைப் பிரசங்கித்து வந்தார்கள். சூரங்குடி, வடலிவிளை, தவசித் தோப்பு, வீரமார்த்தாண்டன் புதூர், குருக்கள் மடம், விசுவாசபுரம், பெருமாள்புரம், வழுக்கம்பாறை, நிங்கல் தௌபேபுரம்,

சண்முகபுரம் போன்ற இடங்களில் இக்குழுவினர் செய்த ஊழியத்தின் பயனாய் ஆலயங்கள் நிறுவப்பட்டுள்ளன.

மேற்கூறியவர்களின் தீவிரமான ஈடுபாடும், அர்ப்பணிப்பும் சுவிசேஷப் பணியினை மக்கள் மத்தியில் வேரூன்ற செய்தன.

உ. நாகர்கோவில் நற்செய்திக் குழு (Nagercoil Gospal Team)

திரு. எம்.டி.ஜேசுதாஸ் அவர்களால் நடத்தப்பட்ட ஜெபக்குழுவானது 1929-ல் நாகர்கோவில் நற்செய்திக் குழுவாகப் பரிணமித்தது. 1931-ல் பர்மா காஸ்பல் ற்றீம் (Burma Gospel Team) என்றொரு குழுவினரது பணியால் நாகர்கோவில் கஸ்பா ஆலயத்திலுள்ள சில வாலிபர்கள் ஆவிக்குரிய மறுமலர்ச்சி பெற்றனர். பின்னர் அவர்கள் இந்நற்செய்திக் குழுவில் இணைந்தனர். ஜாஸ்வா, ஜேசுதாஸ் ஆகியோர் அவ்வாலிபர்களுக்கு ஊழியப் பயிற்சிக் கொடுத்து பல ஊர்களுக்குச் சென்று நற்செய்தி கூற அனுப்பினர். ஊர்கள்தோறும் படக்காட்சி, துண்டுப் பிரதிகள், தெருப் பிரசங்கங்கள் மூலம் கிறிஸ்துவின் பணியை அவ்வாலிபர்கள் பொறுப்போடு செய்து வந்தனர். அறுகுவிளைப் பகுதியில் நேரிட்ட கடுமையான எதிர்ப்பிலும் இவர்கள் பணியின் வேகத்தைக் குறைக்கவில்லை.

ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி முதல்வர் ஜி. ஹெச். மார்ஸ்டன் அவர்கள் அறுகுவிளையில் சனானா மிஷன் கட்டியிருந்த கட்டிடத்தை ஆராதனை நடத்த இக்குழுவினருக்குக் கொடுத்தார்கள். கனம் ஸ்டீரவ்வல் ஐயர் அங்கு உழைத்த ஊழியருக்கான ஊதியத்தைக் கொடுத்தார்கள். இக்குழுவினர் அங்கு சிறுசிறு வீடுகள் கட்டிக் குறைந்த வாடகையில் ஏழைகளுக்குக் கொடுத்தனர். இதனால் ஊழியம் தடையின்றி நடைபெற்றது. 1943-இல் 8 பேர் திருமுழுக்குப் பெற்றுள்ளனர்.

ஊ. தெலுங்கு மிஷன் (Telungu Mission)

பிழைப்பிற்காகப் பல்வேறு இடங்களிலிருந்து வருகை தந்த மக்களின் சங்கமமாக நாகர்கோவில் திகழ்ந்தது. இங்கு பலதரப்பட்ட மக்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களில் செம்மாங்குடி, சரலூர் போன்ற பகுதிகளில் தெலுங்கு மொழி பேசும் மக்கள் குடியேறினர். அவர்களுக்காக நம் முன்னோர் "தெலுங்கு மிஷன்" என்ற பெயரில் ஒரு சங்கம் தொடங்கி ஊழியம் செய்து வந்தனர். அம்மிஷனைச் சேர்ந்தவர்கள் ஊழியம் செய்து வந்த, தென் திருவிதாங்கூர் இந்துக்கல்லூரிக்கு அருகிலுள்ள இடத்தை நாகர்கோவில் கஸ்பா சபையினர் வாங்கி, தொடர்ந்து ஊழியத்தை விருத்தியடையச் செய்தனர்.

மேற்குறிப்பிட்ட பல நிலைகளில் தென் திருவிதாங்கூரில் நற்செய்தி பரப்புதலும் அருள் தொண்டு புரிதலும் வளர்ச்சிப் பெற்றுவந்தன. பேராயர் எ. ஹெச். லெக் (Legg) அவர்கள் தென் திருவிதாங்கூர் பேராயத்தின் பேராயராய்ப் பொறுப்பேற்றிருந்தார்கள். கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து, சபைகள் பெருகிக் கொண்டே வந்தன. எனவே தென் திருவிதாங்கூர் பேராயத்தை, தென் கேரளப் பேராயம், கன்னியாகுமரிப் பேராயம் என இரண்டாகப் பிரித்தனர். 02-06-1956 முதல் கன்னியாகுமரிப் பேராயம் தனியாகச் செயல்படத் தொடங்கியது. எனினும், 18-12-1959 வரையிலும் பிரதமப் பேராயராயிருந்த எ.ஹெச். லெக் அவர்களே குமரிப் பேராயத்தையும் கவனித்து வந்தார்கள். 19-12-1959 முதல் குமரிப் பேராயத்திற்கு நம் மண்ணைச் சேர்ந்த பேராயர் ஐ.ஆர். ஹெச். ஞானதாசன் எம்.ஏ., பி.டி., அவர்கள் பொறுப்பேற்றார்கள். இவர்தான் நம் மண்ணின் முதல் இந்தியப் பேராயர் ஆவார். பேராயர் ஐ.ஆர். ஹெச். அவர்களின் சீரியத் தலைமையில் கன்னியாகுமரிப் பேராயம் மிக விரைவாக வளர்ந்து வந்தது. அச்சூழலில் கிறிஸ்துவின் நற்செய்தியை நம் நாட்டிலுள்ள பிற மக்களுக்கும் அறிவிக்கும் நோக்கில் சுவிசேஷ அமைப்பு ஒன்று தேவையாயிருந்தது.

ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கொடுக்கப்படும் அடிப்படை அழைப்பு மனிதர்களைப் பிடிப்பதுவே. திருச்சபைகள் ஆத்தும மீட்பின் பணியைப் போதிக்கிற பயிற்சி மையங்களாக மாற வேண்டும். அப்போதுதான் திட்டமிட்ட பணியைக் குறிப்பிட்ட காலத்தில் செய்துமுடிக்க முடியும்.

இலவசமாய் நீர் பெற்றுக் கொண்டீரே
இலவசமாய் நீர் கொடுத்திடும்
ஆதி பரனிட்ட கட்டளையாமே
நீதியாம் அதைக் கைக் கொண்டிடும்.

2

அழைப்பிற்கு அடிபணிந்தவர்கள்

இயேசு அவர்களை நோக்கி நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் (மாற்கு 16:15)

பரிசுத்த ஆவியானவர் தரும் பெலத்தோடு உலகமெங்கும் போங்கள். அனைவருக்கும் என்னைப் பிரசங்கியுங்கள் மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் எல்லாச் சாதிகளுக்கும் எடுத்துக்கூறி சீஷர்களைச் சம்பாதியுங்கள். நான் கற்றுத்தந்த எல்லாவற்றையும் அவர்களுக்குப் பகிர்ந்து கொடுங்கள் என்ற இறைக்கட்டளைக்குக் கீழ்ப்படிந்த உள்ளங்களின் வெளிப்பாடுகள்தாம் சுவிசேஷ அறிவிப்புக் குழுக்களாகும். இருள் கவ்வி நிற்கும் இந்தியா, இயேசுவின் மூலமாக விடுதலையினைக் காணும்போது ஒளிபரவும் என்ற நம்பிக்கையில் உயிர்த்தெழுந்த ஆண்டவரின் வல்லமையோடுப் புறப்பட்டு தேவன் தந்த இந்நாட்டில் சாத்தானின் கோட்டைகளைத் தகர்த்தெறிந்தோர் பலர். தொட்டிலிலிருந்து கல்லறைக்கு நேராகவும் இளமையிலிருந்து முதுமைக்கு நேராகவும் ஓடுகின்ற மனித வாழ்க்கையின் ஓட்டத்தில் அவன் சாதிக்கின்ற சாதனைகள் பல சரித்திரத்தில் இடம் பெறுகின்றன. கிறிஸ்துவிற்காக சாதனைகள் படைத்த ஆத்தும அறுவடைப் பணியாளர்களது அனுபவங்கள் இங்கே எழுத்து வடிவில் உதிர்கின்றன.

1. சுவிசேஷ ஜெபக்குழுவின் தோற்றப்பின்னணி

சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள். அவர்களைத் தடை செய்யாதிருங்கள். தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது. (மாற்கு 10:14)

1956 நவம்பர் ஒன்றாம் நாள் குமரி மாவட்டம் மார்ஷல் நேசமணியின் தலைமையில் நடைபெற்ற தீவிரப் போராட்டத்தால் உருவானது. அதே ஆண்டு மே மாதம் குமரிமாவட்ட வரலாற்றின் ஒரு திருப்புமுனை. நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ மேல்நிலைப்பள்ளியில் வேனிற்கால விடுமுறை வகுப்புகள் (V.B.S.) சீரும் சிறப்புமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. அதனைப் பங்காரப்பட்டு வேதாகமக்கல்லூரிக்

குழுவினர் நடத்தினர். அதில் குமரி மாவட்டம் ஆலங்கோடு என்ற ஊரில் பிறந்த திரு. டி. எலியாஸ் என்பவர் ஆசிரியராகப் பணியாற்றினார். ஒவ்வொரு நாள் முடிவிலும் V.B.S. ஐ நடத்திய இயக்குநர்கள் இறைவனது அழைப்பை அறை கூவலாக்கினர். அறைகூவல் ஒவ்வொரு உள்ளங்களையும் உணர்ச்சிவசமாக்கியது. வேதவசனங்கள் கிரியை செய்தன. அப்பணியில் ஆசிரியராகச் செயல்பட்ட எலியாஸின் உள்ளம் பரவசமடைந்தது. முடிவில் இறைப்பணிக்குத் தன்னை ஒப்படைத்து, சாஷ்டாங்கமாய் பணிந்து, அர்ப்பணித்து விட்டார். இருட்டரசன் தன் ஆட்சியில் வீழ்ச்சியடைந்தான். அவன் உலகிற்குப் பேரிடி. ஏனெனில் கல்வராயன் மலை, ஜவ்வாது மலை, சேர்வராயன் மலை, கொல்லிமலை ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் இறைவன் பாதம் இணையவுள்ளார்கள் என்பதை அறிந்து அவன் உள்ளம் திகைத்தது. முடிவு என்ன? எலியாஸ் தன் முயற்சியில் வெற்றி பெற்றார். அதே ஆண்டு ஜூன் மாதம் கர்நாடக மாநிலம் பங்காரப்பட்டிலுள்ள தென்னிந்திய இறையியல் கல்லூரியில் இறையியல் படிப்பிற்காகச் சென்று சேர்ந்தார். அவரைத் தொடர்ந்து பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் தூணாக விளங்கும் கோடியூரைச் சேர்ந்த திரு. எம். இராஜையன், பெத்தேல்புரத்தைச் சேர்ந்த திரு. எ. மாசில்லாமணி, நாகர்கோவிலைச் சேர்ந்த திரு. எஸ். பிரின்ஸ் ஆகியோர் அக்கல்லூரியில் இறையியல் கல்விக்காகச் சேர்ந்தனர்.

அ. பங்காரப்பட்டு இறையியல் கல்லூரி

இக்கல்லூரியில் பயிற்சி பெறுபவர்கள் அனைவருக்கும் ஊழியம் பற்றித் தெளிவான அறிவும், அதற்கான பாரமும் தரிசனமும், திட்டவட்டமான அழைப்பும், உறுதியான அர்ப்பணமும் பெற்றுக் கொள்ளும் முறையில் செயல்திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு திங்கட்கிழமையிலும் காலை 10.30 மணி முதல் 12.00 மணிவரை மிஷனறி தரிசன ஜெபக்கூட்டம் கரிசனையோடு நடத்தப்பட்டு வந்தது. இக்கூட்டத்தில் பேராசிரியர்கள், இந்திய தேசத்தில் நடைபெற்றுவந்த சுவிசேஷ ஊழியங்கள் அவைகளின் தேவைகள், நற்செய்தி அறிவிக்கப்பட்டிராத பகுதிகள், அங்கெல்லாம் வாழ்ந்து வந்த மக்கள், அவர்களது மொழி, கலாச்சாரம், அவர்களுக்கு நற்செய்திப் பணி அறிவித்தலின் தேவை ஆகியவற்றைச் சான்றுகளுடன் எடுத்துரைத்து உற்சாகமூட்டி வந்தனர். இதுபோல ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மன்றாட்டு ஜெபம் நடைபெற்று வந்தது. அதில் இந்திய தேசத்திற்கு வெளியேயுள்ள நாடுகளில் நடைபெற்று வந்த நற்செய்திப் பணிகள், நற்செய்தி அறிவிக்கப்படாமல் விடப்பட்டிருக்கும் நாடுகள், அங்கெல்லாம் நற்செய்திப் பணியாற்ற வேண்டிய தேவை ஆகியன

குறித்து வரைபடங்களுடன் தெளிவாக எடுத்துரைத்தனர். பின்னர் பேராசிரியர்களும், பயிற்சி பெறுபவர்களும் சிறு, சிறு குழுக்களாகப் பிரிந்து மனுக்குலத்தின் தேவைகளுக்காகவும், மக்கள் சந்திக்கப்படவும், ஊழியங்களின் வெற்றிக்காகவும் ஜெபித்தனர். இக்கல்லூரியில் பயிற்சி பெற்று வந்தோர் தங்களது இறையியல் கல்வியை முடிப்பதற்குள், தங்களைக் கடவுள் எங்கு ஊழியத்திற்கு வழிநடத்துகிறார் என்பதைத் தெளிவாய் உணர்ந்து ஒப்படைத்தனர்.

அருள்திரு. அறிவர், தியோடர் வில்லியம்ஸ், திரு. பி. சாமுவேல் ஆகிய பேராசிரியர்கள் இந்தியாவின் தென் பகுதிகளிலும், குறிப்பாக தமிழ்நாட்டில் பரந்து அமைந்துள்ள கிழக்குத் தொடர்ச்சி மலைகள், மேற்குத் தொடர்ச்சி மலைகள் ஆகியவற்றிலும் வாழ்ந்து வந்த மக்களைப் பற்றித் தெளிவாக இவ்வகுப்புகளில் எடுத்துரைத்தார்கள். இங்கு வாழ்கின்ற மக்கள் நாகரிகமற்றவர்களாய் சமூகத்தில் கொத்தடிமைகளாய் வாழ்ந்து வருகின்றனர். கல்வி கற்கும் வாய்ப்பு, மருத்துவ வசதி, சாலை வசதி, சமூக முன்னேற்றத் திட்டங்கள் ஆகியவை இவர்களுக்கு இதுவரையிலும் கிடைக்கவில்லை. பேராசிரியர்கள் மூலம் கேள்விப்பட்ட இச்செய்தி குமரிமாவட்ட இறையியல் பயிற்சியாளர்களுக்கு வியப்பை ஊட்டியது. அவல நிலையில் வாழ்ந்து வந்த இம்மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களைக் குறித்த முழு விவரங்களையும் பெற்று வர விரும்பினர். இதற்குரிய வாய்ப்புகளை இக்கல்லூரி நிர்வாகம் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தது.

ஆ. திரு. எம். இராஜையன் குழுவினரின் மலைப்பயணம்

1960-ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் நாட்களில் கல்லூரியில் விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது. அப்போது குமரிமாவட்டத்தைச் சேர்ந்த திரு. எம். இராஜையன் அவர்கள் தன்னோடு இறையியல் படிக்கும் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த திரு. அன்பையா, கேரள மாநிலத்தைச் சேர்ந்த திருவாளர்கள் தங்கச்சன், தாமஸ், சாலேம் குட்டி, பாப்பச்சன் ஆகிய ஐந்து நபர்களுடன் ✤குப்பம் என்ற காட்டுப் பகுதிக்கு அழைத்துச் சென்றார். ஆந்திரா - தமிழ்நாடு எல்லைப் பகுதியான குப்பத்தில் திப்புசுல்தானின் படையெடுப்பின்போது பயந்து காடுகளில் ஓடி ஒளிந்து மக்கள் வாழ்ந்து வந்தார்கள். இவர்களுள் லம்பாடி, இருளர், மலை இருளர் ஆகிய பட்டியல் சாதியினரும், அரிசன மக்களும் அடங்குவர். இவர்கள் வாழும் கிராமங்களுக்குச் செல்ல சாலை வசதி இல்லை, கல்வி கற்கப் பள்ளிகள் இல்லை. நாகரிகம் பெற்ற மக்களுடன் சற்றேனும் தொடர்பில்லாமல்

✤ குப்பத்தில் தற்போது திராவிட மொழி பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டுள்ளது.

வாழ்ந்து கொண்டிருந்தனர். இத்தகைய மக்களைச் சந்திக்கச் சென்ற மேற்கூறிய குழுவினர் ஒரு மாட்டு வண்டி மூலம் சுமார் 20 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து, அப்பகுதியின் முதல் கிராமமாகிய தாத் குப்பத்தை அடைந்தனர். இக்குழுவினர்களைக் கண்டதும் அங்கு வாழ்ந்து வந்த மக்கள் பயந்து ஓடி காட்டினுள் தங்களை மறைத்துக் கொண்டனர். ஆனால் இக்குழுவினர் அவர்களிடம் அன்பாகப் பழகி இனிமையான மொழிகளைக் கூறி, ஓரிடத்தில் கூடிவரச் செய்தனர். அதன்பின் அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவைக் குறித்துப் பலவாறாக எடுத்துரைத்தனர். பின்னர் ஊர்த் தலைவரின் அனுமதி பெற்று ஒரு சிறு புல் குடிசை வீட்டில் ஏழு நாட்கள் தங்கி, அப்பகுதியைச் சுற்றிலுமுள்ள மக்களைச் சந்தித்து நற்செய்தி அறிவித்தனர். அச்சூழல்களில் அவர்கள் மனதைத் தொட்ட மறக்க முடியாத உணர்வுபூர்வமான சில நிகழ்வுகள் ஒவ்வொருவர் உள்ளங்களிலும் கடும் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டன.

எனக்கும் உணவு தா

காலை முதல் மாலை வரை மலையின் கிராமங்களுக்குச் சென்று நற்செய்தியினை அறிவித்த இக்குழுவினர், இரவில் தங்கும் இடத்தில் உணவை ஆயத்தம் செய்தனர். அப்பொழுது அவ்வூர்ப் பெண்கள், தங்கள் கைகளில் பாத்திரங்களோடு வந்து "எனக்கும் கொஞ்சம் உணவு தா" என்று கேட்டனர். இக்காட்சி கல்லுள்ளத்தையும் கரைப்பதாக அமைந்தது. வறுமை, ஏழ்மை, பட்டினி, பொருளாதாரக் குறைவுகள் எந்த அளவுக்கு அம்மக்களை வாட்டி வதைத்துள்ளன என்பது தெரிய வந்தது.

எங்களுக்கு மோட்சம் வேண்டும்

ஒருநாள் மேற்குழுவினர் லம்பாடி மக்கள் வாழும் கிராமத்திற்குச் சென்றனர். அவ்வூர்த் தலைவரிடம், நாங்கள் இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கூறும்படி வந்துள்ளோம் என்று கூறினர். உடனே அத் தலைவரின் மனைவி ஊர்மக்கள் அனைவரையும் கூட்டிவிட்டார்கள். சிறிது நேரத்தில் சுமார் நானூற்றுக்கதிகமான மக்கள் அங்குக் குழுமி வரிசையாய் அமர்ந்திருந்தனர். அம்மக்கள் தெலுங்கு மொழியையே பேசினர். உடனே நற்செய்திக் குழுவினரில் ஒருவர் தெலுங்கு மொழியில் அவர்களுக்கு நற்செய்தி கூறினார். செய்திக்கிடையில் மகனே, உன் நெஞ்செனக்குத் தாராயோ? மோட்ச வாழ்வைத் தருவேன். இது பாராயோ? என்ற பாடலைப் பாடினார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த அவ்வூர்த் தலைவரின் மனைவி எழுந்து, வேகமாகச் சென்று, கூட்டத்திலிருந்த தன் கணவரது கையைப் பிடித்து இழுத்து, இருவருமாகத் தங்கள் வீட்டிற்குள் நுழைந்தனர். அங்கு சுகவீனமாகப் படுத்திருந்த தலைவரது தாயாரை

இருவருமாகத் தூக்கிக் கொண்டு வந்து, கூட்டத்தினர் நடுவில் நிறுத்தி 'உனக்கு மோட்சம் வேண்டுமா?' கேள்! கேள்!! என்று உரத்த குரலில் கூறினார்கள். உடனே, கூட்டத்திலிருந்த அனைவரும் எழும்பி, தங்கள் இரு கரங்களையும் உயர்த்தி எனக்கு மோட்சம்', 'எனக்கு மோட்சம்' என்று எழுப்பியக் குரல் பரலோகத்தையும் அதிர வைப்பது போன்ற உணர்வை அக்குழுவினருக்கு உண்டாக்கியது. அக்காட்சியைக் கண்ட குழுவினர் அழுதார்கள். செய்தியைக் கொடுத்தவர் மேலும் பேச நாவெழாமல் அழுதார். அப்பொழுது ஊர்த் தலைவரது மனைவி இராஜையனிடம் "நீ பேசு, எங்களுக்குத் தமிழ் புரியும்" என்று கூறினாள். அவரும் பேச முடியாமல் உணர்ச்சிவசப்பட்டவராய் அழுது கொண்டிருந்தார். இயேசு கிறிஸ்துவை அறியவும், மோட்ச வாழ்வுக்குள் பிரவேசிக்கவும் அம்மக்கள் ஆர்வமும் ஆசையும் கொண்டவர்கள் என்பதை இந்நிகழ்ச்சி உண்மையாக்கிற்று. இறை இரட்சிப்புக்காக ஏங்குகிறவர்களை, கிறிஸ்தவன் ஒருவன் எப்படி பார்த்துக் கொண்டிருக்க முடியும்.

நீ என்ன வர்ணம்✣

லம்பாடிகள் வாழும் வேறொரு கிராமத்திற்கும் சுவிசேஷக் குழுவினர் சென்றனர். இவர்கள் பிரிஞ்சாரிகள் அல்லது சகாலிகளின் மொழியைப் பேசுபவர்கள். லம்பாடிகள் பிற மக்களிடம் அதிகப் பாசம் கொண்டவர்கள். அவ்வூர்த் தலைவர், அக்குழு அங்கத்தினர் ஏழு பேர்க்கும் பகல் உணவு கொடுப்பதற்கு ஏழு வீடுகளில் ஒழுங்கு செய்திருந்தார். கூட்டம் நிறைவுற்றதும் முன் ஒழுங்கு செய்திருந்தபடி வீட்டிற்கு ஒருவராக அக்குழுவினரை அழைத்துச் சென்றனர். திரு. இராஜையன் என்பவர் சென்ற வீட்டில், அவ்வீட்டின் தலைவி அவரை உள்ளே அனுமதிக்க வில்லை. மாறாக தனது இரு கரங்களாலும் வாசலை மறித்து நின்றார்கள். வீட்டின் தலைவர் கூறிய பின்னரும் உள்ளே அனுமதிக்கவில்லை. சிறிதுநேரம் கழிந்தது. அப்பெண்மணி இராஜையனிடம், நீ என்ன வர்ணம் என்று கேட்டாள். உடனே அவர், "இராஜாவை உனக்குத் தெரியுமா? எல்லா இராஜாக்களுக்கும் மேலான பெரிய இராஜா ஒருவர் இருக்கிறார். அவர் இயேசு இராஜா, அவருடைய பிள்ளைதான் நான்" என்று கூறினார். உடனே அப்பெண்மணி, "ஆ! நீ இராஜாவின் பிள்ளையா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டு அவரைத் தனது வீட்டிற்குள் வரவேற்றாள். அவ்வீட்டில் அமர்வதற்கு இருக்கைகள் ஒன்றுமில்லை. உடனே அப்பெண்மணி மர உரலைக் கவிழ்த்துப் போட்டு அதில் அவரை அமர

✣ வர்ணம் என்றால் ஜாதி என்பது பொருள்

வைத்து உணவளித்தாள். சோளம் மாவினால் சுடப்பட்ட ஒரு பெரிய அடையை சாம்பாரோடு கையில் கொடுத்தாள். அந்த சாம்பார், பூசணிக்காய், பூசணி இலை, பச்சை மிளகு, உப்பு ஆகியவற்றால் செய்யப்பட்டிருந்தது. இத்தகைய மக்கள் மிகவும் கொடிய இனவெறி கொண்டவர்கள். ஆனால் இயேசுவை நம்புபவர்கள், இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டு, வாழ்வில் நற்காரியங்களை நிறைவேற்றி வாழ விருப்புடையவர்களாய் உள்ளனர்.

மலை இருளர்கள்

காட்டின் உட்பகுதியில் மலை இருளர் என்ற இனத்தவர் வசித்து வருகின்றனர். இம்மக்கள் மரத்தடியிலும், மரத்தின் கிளைகளிலும், புல் குடில்கள் கட்டி அவைகளில் குடியிருக்கின்றனர். குறிப்பிட்ட இப்பகுதியில் வெறும் 12 குடும்பங்கள் மட்டுமே வாழ்கின்றனர். நற்செய்திக் குழுவினர் இவ்இருளர்களைத் தேடிச் சென்றனர். இதனைத் தூரத்தில் கண்ட அம்மக்கள் அனைவரும் ஓடி ஒளித்து விட்டார்கள். எவ்வளவோ முயன்றும் அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இவ்விதம் விலங்குகளைப் போல வாழ்ந்து வந்த அம்மக்களை எண்ணி நற்செய்திக் குழுவினர் மனதுருக்கத்துடன் ஜெபித்துத் திரும்பினார்கள்.

இ. திரு. எ. மாசில்லாமணி குழுவினரின் மலைப்பயணம்

மேற்குறிப்பிட்ட அதே நாட்களில் திரு. எ. மாசில்லாமணி, திரு. எஸ். பிரின்ஸ் மற்றும் மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த திரு. கெய்க்வார்ட் என்ற மூவர் குழு ஒன்று சித்தேரி, கல்ராயன் ஆகிய மலைகளைப் பார்வையிடச் சென்றது. அக்குழுவினர் அங்குள்ள மக்களுக்கு நற்செய்தியைக் கூறி அறிவித்தனர். வியாதிப்பட்டவர்களுக்காகவும், அசுத்த ஆவி பிடித்து அவதிப்பட்டவர்களுக்காகவும் ஜெபித்தனர். இதனால் அநேக மக்கள் விடுதலை வாழ்வைப் பெற்று மகிழ்ந்தனர். பின்னர் அக்குழுவினர் அம்மலைப் பகுதியில் ஊழியம் செய்துவந்த திருமதி ஈவ்லின் பிராண்ட் அம்மையாருடன் சில நாட்கள் தங்கியிருந்தனர். மலை மக்களாலும் ஈவ்லின் பிராண்ட் அவர்களின் பணியினாலும் ஈர்க்கப்பட்ட இம்மூவரும், மிஷனெறிப் பணியைக் குறித்த சவால்களுடன், உள்ளத்தில் உணர்வு பொங்க இறையியல் கல்லூரிக்குத் திரும்பினார்கள்.

இவ்விரு குழுவினர்களும் தாங்கள் பெற்ற அனுபவங்களையும், சவால்களையும், பணியின் பழுவையும், காலத்தின் அருமையையும் பங்காரப்பட்டு இறையியல் கல்லூரியில் பகிர்ந்து கொண்டனர். கிறிஸ்துவை அறியாமல், நம்பிக்கை அற்று அவல நிலையில் வாழ்ந்து வந்த மக்களைக் குறித்த பாரம் அவர்களை அழுத்தியது.

இம்மக்களுக்காக ஜெபிக்க, பணியாற்ற பரிசுத்த ஆவியானவரின் துணையை நாடினர். அதற்காகக் கூடி ஜெபிக்கும் ஜெபக்குழு ஒன்றினை ஆர்வமுடன் தொடங்கினர்.

௯. இறையியல் கல்லூரியில் ஜெபக்குழு

ஆண்டவருடைய அளவற்ற கிருபையால் திருவாளர்கள் டி. எலியாஸ், எம். இராஜையன், எ. மாசில்லாமணி, எஸ். பிரின்ஸ், எங்கோட் (மகாராஸ்டிரா) சாலேம் குட்டி (கேரளா) ஹென்றி டேவிட் (கோவை), ஆகிய ஏழு நபர்களும் சேர்ந்து பங்காரபட் இறையியல் கல்லூரியில் 1961-ஜனுவரி 4-ஆம் நாள் குறிப்பாக மிஷனெறி ஊழியங்களுக்காய் ஜெபிக்கத் தொடங்கினர். இந்த நாள்தான் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு விதை ஊன்றிய நாள் என்று கூறினாலும் அது பொருத்தமாகும். இவ் ஜெபக்குழு கல்லூரி வளாகத்திலுள்ள ஒரு காற்றாடி மரத்தின் அடியில் ஒவ்வொரு நாளும் பகல் 12.00 முதல் 12.30 மணி வரையிலும் நடைபெற்றது. 1961 ஜூலை முதல் மருதங்கோட்டைச் சேர்ந்த திரு. சி. இரத்தினதாஸ், பரசுவைக்கலைச் சேர்ந்த ஜெ.எம். ஜெயசிங், நாகர்கோவிலைச் சேர்ந்த ஜெ. அர்னால்ட் ஞானராஜ் ஆகியோர்களும் இவ் ஜெபக்குழுவில் இணைந்தார்கள். சில நாட்களில் மேலும் சில பயிற்சியாளர்கள் இணைந்து ஜெபித்தனர். அதில் குறிக்கோளாக சில ஜெபக் குறிப்புக்கள் அமைந்தன.

* குமரி மாவட்ட திருச்சபைகள், கிறிஸ்துவை அறியாத மக்களைப் பற்றிய தரிசனங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
* நற்செய்தியைப் பரப்பவும், அதற்காக ஜெபிக்கவும், தாங்கவும் ஆவல் பெற்ற திருச்சபை மக்கள் முன்வர வேண்டும்.
* ஆண்டவரே, உமக்குச் சித்தமான பொழுது எங்களையும், இவ்வூழியத்தில் எடுத்துப் பயன்படுத்தும்.

1961 - மார்ச் 15-ஆம் நாள் இறையியல் கல்வியை முடித்த திரு. டி. எலியாஸின் உள்ளத்தில், மிஷனெறி ஊழியத்தைக் குறித்த வேகம் அதிகரித்தது. அன்றைய நாள் இறையியல் கல்லூரி முதல்வர் டாக்டர் சி.எஸ். டூயி அவர்கள் தலைமையில் குமரிப் பேராயர் ஐ.ஆர்.ஹெச். ஞானதாசன் அவர்கள், "பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்ற கருப்பொருளில் உளங்கவர்ந்த உரையொன்றை அளித்தார். அவ்வுரை அனைவர் உள்ளங்களையும் கிறிஸ்துவின்பால் ஈர்த்தது.

உ. திரு. டி. எலியாசின் மலைப் பயணம்

இறையியல் கல்லூரியை விட்டு வெளியேறிய எலியாஸின் பயணம் மலைவாழ் மக்களை நோக்கியே முன்னேறியது. 1961 மார்ச் மாதம் 17-ஆம் நாள் பெருமாப்பாளையம் என்னும் கிராமத்தில் இறைப்பணி செய்து கொண்டிருந்த இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த திருமதி. ஈவ்லின் பிராண்ட் அவர்களைச் சந்தித்தார். அங்கு, அன்னாரின் கணவன் ஜெசிமன் பிராண்ட் அவர்களின் கல்லறையினைக் கண்டு கண்கலங்கி ஜெபித்தார். ஈவ்லின் பிராண்ட் அவர்களுக்கு வயது 82. எனினும் இறைப்பணியில் அவர் கொண்டிருந்த ஆர்வம் எலியாசைச் சிந்திக்க வைத்தது. ஒருநாள் ஈவ்லின் பிராண்ட் அவர்கள் எலியாசின் கையைப் பிடித்து "தம்பி எலியாஸ் உன்னைப் போன்ற இளைஞர்கள் இம்மக்களுக்கு ஊழியம் செய்யாவிட்டால், யார் செய்வார்கள்? என்றைக்கும் வெளிநாட்டு மிஷனெறிகள் வந்து ஊழியம் செய்வார்கள் என்று நினைக்கிறாயா? இது உனது பொறுப்பு" என்று உருக்கமான ஒரு வேண்டுகோளை விடுத்தார். இவ்வேண்டுகோளை நிராகரிக்க எலியாசால் முடியவில்லை. சில நாட்கள் அவர் பச்சைமலை, கல்வராயன் ஆகிய மலைகளில் வாழ்ந்து, ஆதிவாசி மக்களைச் சந்தித்து அவர்களுடைய அன்பால் கவரப் பெற்றவராய் தன் ஊர் திரும்பினார். எனினும் ஈவ்லின் பிராண்ட் அம்மையாரின் பணியும், வாழ்வும், தியாகமும், எளிமையும், பேச்சும், அழைப்பும் அவருடைய உள்ளத்தில் தீபமாக எரிந்துகொண்டே இருந்தது. மகிழ்ச்சி என்பது தேவ சித்தத்திற்குத் தன்னை உட்படுத்தும்போது மட்டுமே கிடைக்கக்கூடியது என்பதை எலியாஸ் நன்கு உணர்ந்தார்.

ஊ. ஜெசிமென் பிராண்ட் - ஈவ்லின் பிராண்ட்குடும்பம்

இயேசு கிறிஸ்துவின் செய்தியை உலகெங்கும் பரப்ப வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்பட்ட நாடுகளில் இங்கிலாந்து ஒன்றாகும். இந்நாட்டில் சில்போர்ட் என்ற இடத்தில் ஒரு செழிப்பான விவசாயக் குடும்பத்தில் திரு. ஜெசிமென் பிராண்ட் பிறந்தார். தனது இளமைப் பருவத்திலேயே மிஷனெறி அறைகூவலைப் பெற்ற அவர் லிவிங்ஸ்டன் மருத்துவக் கல்லூரியில் படித்தார். பின்னர் ஸ்டிரிக்ட் பாப்டிஸ்ட் (Strict Baptist) மிஷன் மூலம் இந்தியாவிற்கு மிஷனெறியாக 1907-ல் வந்தார். அவருக்கு சேலம் மாவட்டத்திலுள்ள சேந்தமங்கலம் என்னும் பகுதி ஒதுக்கப்பட்டது. அங்கு நற்செய்திப் பணியையும், மருத்துவப் பணியையும் திறம்பட மக்கள் விரும்பும் அளவில் வேகமாகச் செய்து வந்தார். அப்போது ஒருநாள் வயது

முதிர்ந்த விகாரத் தோற்றமுடைய ஒருவர் அவரைச் சந்தித்தார். வந்தவர் "ஐயா! நான் முந்திய நாளே புறப்பட்டு, ஆங்காங்கே இருந்து இப்போதுதான் வந்து சேர்ந்தேன், எனக்கு மருந்து கொடு" என்று கேட்டார். உடனே டாக்டர் ஜெசிமென் அவரிடம் பேச ஆரம்பித்தார். அப்போது அம்முதியவர் தான் கொல்லி மலையிலிருந்து வந்திருப்பதாகவும், அங்கு வாழ்ந்து வரும் மக்கள் வறுமையினாலும், வியாதியினாலும் பீடிக்கப்பட்டு நெருக்கத்திலிருக்கிறார்கள் என்று கூறியதுடன் "நீ அங்கு வந்து உதவி செய்" என்று அழைப்பும் கொடுத்தார். இதைக் கேட்ட ஜெசிமென் பிராண்ட் அவர்களின் உள்ளம் மகிழ்ச்சியால் பூரித்தது. ஆண்டவரை ஸ்தோத்தரித்துப் பாடிப் புகழ்ந்தார்.

முதியவர் அழைப்பின் பேரில் டாக்டர் ஜெசிமென் பிராண்ட், கொல்லி மலைக்குச் சென்றார். டாக்டரைப் பார்த்த கொல்லிமலை ஆதிவாசி மக்கள் தங்கள் வழக்கப்படி பயந்து ஓடி மறைந்தனர். இதனைக் கண்ட டாக்டர் அங்கேயே முழங்கால் ஊன்றி, "கொல்லிமலையை இரட்சியும் ஆண்டவரே" என்று ஜெபித்தார். பின்னர் அம்மக்களுக்கு மருத்துவப் பணியும், நற்செய்திப் பணியும் செய்து வந்தார். அவருடைய பணி நாளுக்கு நாள் விருத்தியடைந்தது. உள்ளமும் மகிழ்ச்சியால் பொங்கியது.

ஈவ்லின் - இந்தியா வருகை

இந்தியாவில் இயேசுவை அறியாத மக்கள் ஏராளம் உள்ளனர். மலைக் குகைகளில் ஒளிந்து வாழ்வோரும் ஏராளம், இதுவரை சுவிசேஷ ஒளி சென்றிராத இருண்ட பகுதிகளும் ஏராளம் என்று டாக்டர் ஜெசிமென் பிராண்ட் தன்னை இந்தியாவிற்கு அனுப்பின ஸ்டிரிக்ட் பாப்டிஸ்ட் மிஷனுக்கு அறிக்கை அனுப்பினார். இவ்வறிக்கையைப் படித்த இங்கிலாந்து மக்களில் பலர், உள்ளத்தில் சுவிசேஷ பாரம் அடைந்தனர். உடனே ஈவ்லின் என்ற ஒரு வாலிபப் பெண் இந்தியாவில் அருட்பணியாற்றத் தன்னை ஒப்படைத்தார். இவள் இங்கிலாந்திலுள்ள ஒரு பிரபு குடும்பத்தில் பிறந்தவள். அம்மேன்மைகளைத் துறந்து, இறைவனின் பாடுகளுக்குத் தன்னை அர்ப்பணித்து இந்தியா வந்து நீலகிரி மலையிலுள்ள குன்னூரில் தங்கினார். இங்குள்ள மக்களோடு பேசிப் பழகி இனிதான தமிழ் மொழியைச் செம்மையுறக் கற்றார். அப்போது, இங்குப் பணிசெய்து கொண்டிருந்த டாக்டர் ஜெசிமென் பிராண்ட் அவர்கள், ஈவ்லின் அவர்களைத் [1913 ஆகஸ்டு மாதம்] திருமணம் செய்தார். திருமணமான அதே நாள் இருவரும் கொல்லிமலைக்கு இறைவன் பணிக்காகச்

சென்றனர். அம்மலைவாழ் மக்களை "கறுப்பு நீர் காய்ச்சல்" (Block Water Fever) என்னும் ஒரு கொடிய நோய் தாக்கிக் கொண்டிருந்தது. இதனால் பல மக்கள் உயிரிழந்தனர். இத்தம்பதிகள் இத்தகைய மக்களுக்கு மருத்துவம் செய்து உடலைக் காத்ததுடன், இறைவார்த்தைகளைக் கூறி, இயேசுவை அறிவித்தும் வந்தனர். ஏழையின் கண்ணீர் இனிப்பான பன்னீர் என்பதை ருசித்தனர். ஏழைகளின் சிரிப்பிலேயே ஒவ்வொரு நாளும் இறைவனைக் கண்டனர்.

ஜெசிமென் பிராண்ட் காலமானார்

ஒருநாள் டாக்டர் ஜெசிமென் பிராண்ட் அவர்கள் தன் மனைவியை அழைத்துக் கொண்டு அம்மலையின் உயரமான ஒரு இடத்திற்குச் சென்றார். சுற்றிலும் அழகாகக் காட்சியளித்த எல்லா மலைகளையும், அம்மலைகளின் சிகரங்களையும் பார்த்து ரசித்தார். ஆத்தும பாரத்துடன் பாடி ஜெபித்து இறைவனைத் துதித்துக் கொண்டிருந்தார். அப்போது தன் மனைவியிடம் "இந்த மலைகள் அனைத்தும் கிறிஸ்துவிற்குச் சொந்தமாகும் வரைக்கும் நற்செய்தி கூற வேண்டும்" என்றார். இவ்விதம் இவர்களுடைய ஊழியம் வெற்றியாய் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, அம்மக்களைத் தாக்கிய கறுப்பு நீர் காய்ச்சல் என்ற நோய் டாக்டர் ஜெசிமென் பிராண்ட் அவர்களையும் தாக்கியது. இறைப்பணி செய்து, இல்லற வாழ்வில் இன்பமாக வாழ்ந்து கொண்டிருந்த தம்பதியினரின் வாழ்வில் அக்காய்ச்சல் எமனாகவே வந்தது. நோய்க்குரிய மருத்துவமுறைகள் பல செய்யப்பட்டன. ஆனாலும் உலகில் அதன் பலனைக் காண முடியவில்லை. இறைவன் தன் உலகிற்கு ஜெசிமென் பிராண்ட் அவர்களை அழைத்தார். 1929 ஜூன் 15-ஆம் நாள் அதே மலையில் அவருடைய பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. தேவதூதர்களால் கனப்படுத்தப்பட்ட ஜெசிமென் பிராண்ட் அவர்களின் ஆவி விண்வீட்டில் அடைக்கலமாகியது. சிறகொடிந்த பறவையைப் போலத் துணையை இழந்த ஈவ்லின் பிராண்ட் அவர்கள் துடித்தார்கள். காலம் என்னும் ஏட்டில் தன் வாழ்நாளைப் பதித்த ஜெசிமென் பிராண்ட் அவர்கள் விட்ட பணியை ஈவ்லின் பிராண்ட் அவர்கள் தொடர்ந்தார்கள். அதே மலையில் அவர்களும் தங்கினார்கள், மனதில் ஏற்பட்ட கவலையை இறைவன் துடைத்தார்.

ஈவ்லின் பிராண்ட் - மறுமைக்குள் புகுந்தார்

காலம் என்னும் சக்கரம் சுழன்றுகொண்டே இருந்தது. திருப்பணியின் வேகமும் விறுவிறுப்பானது. ஈவ்லின் பிராண்ட் அம்மையார், ஒரு மட்டக் குதிரையில் (Pony) ஏறி அம்மலை முழுவதும் சுற்றி சுவிசேஷத்தை

அறிவித்தார்கள். ஒருநாள் எதிர்பாராத விதமாய் அக்குதிரையிலிருந்து கீழே விழுந்தார்கள். அதனால் அவர்களின் கால்கள் முறிந்தன. ஆனால் மனோதிடம் குறையவில்லை. எனினும் சிலரது உதவியுடன் தன் ஊழியத்தை நிறைவேற்றி வந்தார்கள். தனது 95-ஆவது வயதுவரை மலையிலேயே தங்கி, தன்னுடைய பாதங்களையெல்லாம் ஆங்கு பதித்தார்கள். அதற்குப் பாறைகளும், குன்றுகளுமே சாட்சி. இவைகள் வரலாற்றுச் சுவடின் ஒரு பக்கம்.

பின்னர் வேலூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று 18-12-1974 அன்று மருத்துவமனையில் வைத்தே நித்தியத்துக்குள் புகுந்தார்கள். அவர்களது விருப்பப்படி, அவர்களின் பூதவுடலை மலையில் கொண்டுபோய், சாதாரண மலை மக்களைப்போல ஓலைப்பாயில் சுற்றிக், கணவனுடைய கல்லறையின் அருகே நல்லடக்கம் செய்தனர். பூவுலகில் இவர்கள் சாதாரணமானவர்கள்தாம். ஆனால் விண்வீட்டிலோ முத்துக்கள் பதிக்கப்பட்ட நீதியின் கிரீடத்தை அணிந்த வீரர்கள். மலை ஊழியத்தின் உந்துதலுக்கும், உத்வேகத்திற்கும் இவர்களுடைய பணி ஆணிவேராகத் திகழ்கிறது. மலை மக்களின் சரித்திர ஏட்டில் மங்காத புகழ்ப்படைத்து பெருமை பெறும் சரித்திர நாயகர்கள் ஆகிவிட்டனர்.

இவர்களுடைய அன்பு மகன் டாக்டர். பால் பிராண்ட் ஆவார். 1914-ல் பிறந்த இவர், தனது 9-ஆவது வயதுவரை கல்விபெறும் வசதியின்றி மலையிலேயே வாழ்ந்தார். 1923 முதல் கல்விபெற்று உயர்ந்தார். பின்னர் தொழுநோய் தாக்கப்பட்டவர்களுக்குரிய பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை முறையைக் கண்டுபிடித்து உலகப் பிரசித்தி பெற்ற மருத்துவராகத் திகழ்ந்தார். Ten fingers for God, Gift of pain, fearfully and wonderfully Made - போன்ற புத்தகங்களையும் எழுதியுள்ளார். பிராண்ட் அம்மையாரின் மகள் கோணியம்மா அவர்கள் தன் கணவரோடு குடும்பமாய் ஆப்பிரிக்காவில் பல ஆண்டுகள் ஊழியம் செய்து வந்தார்கள். தந்தையைப் பிரிந்து கல்விபெறச் சென்ற இவர்கள் பின்னர் ஒருமுறை கூட தந்தையைப் பார்த்ததே இல்லை.

வரலாற்றின் அஸ்தமன காலத்தில் வாழுகின்ற நமக்கு பிராண்ட் தம்பதிகளின் குடும்பம் ஒரு சவாலாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

எ. மீண்டும் குழுப் பயணங்கள்

1961-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 முதல் 22 ஆகிய நாட்களில் திரு. எம். இராஜையன், பெத்தேல்புரத்தைச் சேர்ந்த பி. இராஜையன், எஸ். இரத்தினராஜ் ஆகிய மூவரும் குழுவாக வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலைவாழ் மக்களைச் சந்திக்கச் சென்றனர். அதே நாட்களில்

எ. மாசில்லாமணி, எஸ். பிரின்ஸ், கோலார் தங்கவயலைச் சேர்ந்த ஜெயசீலன் ஆகியோர் அடங்கிய மற்றொரு குழுவினர் கல்வராயன், பச்சைமலை, சித்தேரிமலை ஆகிய மலைகளில் வாழும் மக்களைச் சந்திக்கச் சென்றனர். இதுமுதல் மிஷனெறிப் பணி பற்றிய பாரம் அனைவரது உள்ளங்களிலும் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. மேற்கூறிய உண்மை அனுபவங்களுடன், மிஷனெறி ஊழிய தரிசனம் பெற்ற இறையியல் பயிற்சியாளர்கள் பங்காரப்பட்டு இறையியல் கல்லூரியை விட்டுக் குமரிப் பேராயத்திற்கு திரும்பினார்கள். வரும்போது இந்திய நாடு இயேசுவை அறிவதுவரை, நமது நோக்கம், உண்மை, உத்தமம் என்பன முழுமையாய் நிறைவேற வேண்டும் என்னும் தணியா வேட்கை நிறைந்தவர்களாய்த் திகழ்ந்தனர்.

2. சுவிசேஷ ஜெபக்குழு தோற்றம்

வாழ்க்கை மலர் என்றால் அதில் பிறக்கும் மணம்தான் அன்பு. வாழ்க்கை யாழ் என்றால் அதில் பிறக்கும் இசை தான் அன்பு. வாழ்க்கை கனி என்றால் அதில் பிறக்கும் சுவைதான் அன்பு. இவ்வன்புக்குட் பட்டவர்கள் உலகில் வெறுமனே செயலற்று இருக்க முடியாது.

மலைவாழ் மக்களிடையே ஆற்றும் திருப்பணியின் தெளிவுகளை அனுபவத்தின் மூலமாகப் பெற்றுக் கொண்ட திரு. டி. எலியாஸ் அவர்கள் 1961-ல் குமரிப் பேராயத்திலுள்ள காரியாவிளை திருச்சபையிலும், திரு. எம். இராஜையன் அவர்கள் 1962-ல் பாலவிளை திருச்சபையிலும் பணி நியமனம் பெற்றார்கள். 1962 ஜூலை 16-ஆம் நாள் டி. எலியாஸ் அவர்கள் பெத்தேல்புரம் எஸ். ஞானராஜ் அவர்களைத் திங்கள் நகர் பேருந்து நிலையத்தின் அருகே வைத்துத் தற்செயலாகச் சந்தித்தார்கள். அப்போது மலைகளில் வாழும் மக்களைக் குறித்தும், தான் கண்ட அவலக் காட்சிகளைக் குறித்தும் அவரிடம் எடுத்துரைத்தார். பின்னர் இருவரும் ஆலோசித்து, சுவிசேஷம் அறியாத மலைவாழ் மக்களுக்காகச் சேர்ந்து ஜெபிக்க வேண்டும் என்று முடிவெடுத்தனர்.

அதே நாளில் எம். இராஜையன் அவர்கள் பெத்தேல்புரம் எஸ். இரத்தினராஜ் அவர்களை மார்த்தாண்டத்தில் வைத்து சந்தித்தார்கள். அவர்கள் இருவரும் கலந்துபேசி, மலைவாழ் மக்களின் மீட்பிற்காக ஜெபிக்கலாம் எனத் தீர்மானித்தனர். மேற்கூறிய இரு சந்திப்பு நிகழ்ச்சிகளும் ஒருவருக்கொருவர் முன் திட்டமின்றி பரிசுத்த ஆவியானவரின் ஒழுங்கின்படியே நடந்தன.

1962 ஜூலை 18-ஆம் நாள் எம். இராஜையன் அவர்கள் டி. எலியாஸ் அவர்களை காரியாவிளை ஆயர் இல்லத்தில் போய் சந்தித்தார்.

அவர்கள் இருவரும் முந்திய நாட்களில் தாங்கள் சந்தித்த இரு நபர்களின் சந்திப்புகளைக் குறித்தும், நடந்த உரையாடல்கள் குறித்தும், எடுத்த முடிவுகள் குறித்தும் மாறி மாறிப் பேசிக் கொண்டார்கள். கூடி ஜெபிக்கும்படி இரு சாரார் உள்ளங்களிலும் தோன்றிய எண்ணம் இறைவனால் அருளப்பட்டதே என்று இருவரும் ஏற்றுக்கொண்டனர். அதன்படி 1962 ஜூலை 31-ஆம் நாள் காலை 10.00 மணிக்கு காரியாவிளை சபையின் ஆயர் இல்லத்தில் கூடி ஜெபிப்போம் என இருவரும் முடிவுசெய்து, மற்றவர்களுக்கும் அறிவிக்க விரும்பினர். இவ் ஜெபக்கூட்டத்தினைக் குறித்து எஸ். இரத்தினராஜ், (பெத்தேல்புரம்), ஜெ. அர்னால்டு ஞானராஜ், எ. ஜஸ்டின் (நாகர்கோவில்), திருமதி ஞானதீபம் (காரியாவிளை) ஆகியோருக்குத் தெரிவித்தனர்.

ஜெபக்குழு ஆரம்பம்

நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் (மத் 28 : 19-20) என்கிற வேதவசனங்கள் மேற்கூறிய சுவிசேஷ வாஞ்சையுள்ளவர்களின் உள்ளங்களில் உந்துதலைக் கொடுத்தன. முன் ஒழுங்கின்படி 1962 ஜூலை 31-ஆம் நாள் காலை 10.00 மணிக்கு காரியாவிளை ஆயர் இல்லத்தில் வைத்து ஜெபக் கூட்டம் டி எலியாஸ் தலைமையில் தொடங்கப்பட்டது. மேற்கூறிய நால்வருடன் திரு. எம். இராஜையன், திருமதி. அன்னபாய் எலியாஸ் ஆகியோர்களுமாக மொத்தம் ஏழு பேர் கலந்துகொண்டனர். "அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை பண்ணலாம்" (சகரியா 4 : 10). "சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்" (எசாயா 60 : 22) ஆகிய வசனங்கள் அன்றைய தியானங்களாயின. அறுவடையின் எஜமானராகிய ஆண்டவர் அவர்களது விசுவாசத்தை ஊன்றக் கட்டி அவர்களுடைய தரிசனத்தை விரிவுபடுத்தினார். அன்றையக் கூட்டத்தில் இவ் ஜெபக்குழுவிற்கு "சுவிசேஷ ஜெபக்குழு" (Missionary Prayer Band) என்ற பெயர் சூட்டப்பட்டது. இதற்குரிய பொறுப்பாளர்களும் அன்றே தேர்ந்தெடுக்கப்பட்டனர். சுவிசேஷ ஜெபக்குழுவிற்குரிய தலைவராக ஜெ. அர்னால்ட் ஞானராஜ் அவர்களும், செயலாளராக எம். இராஜையன் அவர்களும், பொருளாளராக டி எலியாஸ் அவர்களும், கணக்கராக எஸ். இரத்தினராஜ் அவர்களுமாக பொறுப்புகளைப் பகிர்ந்து கொண்டனர். அன்று முதல் ஜெபக்குழுவின் பணி விறுவிறுப்பானது. மலைகள், குன்றுகள், சேரிகளில் ஒடுக்கப்பட்டுக் கிடப்போர் நெஞ்சங்களில்

கிறிஸ்துவாகிய ஒளியை ஏற்றுவோம் என்ற சவால் ஒவ்வொருவர் உள்ளங்களிலும் உறைந்தது.

1806 முதல் 1816 வரை தென் திருவிதாங்கூரில் அருட் பணியாற்றிய றிங்கல் தௌபே அவர்கள், தமது ஊழியகாலத்தின் இறுதியில், "நான் துரிதமாகத் தளர்ந்து அழிந்து போகிறேன். எனது வேலையை ஒருவாறு செய்தேன். என் ஊழியம் முடிந்தது. அது எந்நாளும் நிலைநிற்கும். அதன் பலனைப் பரலோகத்திலும், திருவிதாங்கூர் சபை சரித்திரத்திலும் காண்பீர்கள்" என்று கூறிச் சென்றார்கள். (மலைமலர் 24 - ஆவது ஆண்டு அறிக்கை) அவ்வேலையை நம்மவர்களே தொடர்ந்து நிறைவேற்ற மிஷனெறிப் பணி தொடங்கிய நல்லநாள் இதுவாகும். இதன் மாபெரும் வளர்ச்சி ஆலமரம் போலாகும் என்ற இலக்குடன் அன்றே ஜெபம் செய்தனர்.

சுவிசேஷ ஜெபக்குழுவின் நோக்கங்கள்

திட்டமிட்டு தேவ சித்தத்தை அறிந்து கொண்டவர்கள் இலக்கு அமைத்துப் பணிபுரிவர். அதன் அடிப்படையில் கீழ்வருகிற நோக்கங்கள் ஜெபக்குழுவில் உருவாயின.

அ. ஜெபி (Pray)

இயேசுநாதர் தம்முடைய சீடர்களைப் பார்த்து "அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம், ஆதலால் அறுப்புக்கு, எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள்" என்றார் (மத் 9 : 37-38). தேவை நிவிர்த்தி செய்யப்பட ஜெப ஊழியம் மிகவும் அவசியமாகிறது. "ஒருவரும் இல்லை என்று கண்டு விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லையென்று ஆச்சரியப் பட்டார். ஆதலால் அவருடைய புயமே அவருக்கு இரட்சிப்பாகி. அவருடைய நீதியே அவரைத் தாங்குகிறது. (ஏசாயா 59 : 16). மிஷனெறிப் பணியில் விண்ணப்ப ஊழியம் அவசியம் தேவை என்றும், திருச்சபையில் கடவுள், பிள்ளைகள் அனைவரும் விண்ணப்ப ஊழியத்தில் ஈடுபட வேண்டும் என்றும் இறைவன் எதிர்பார்க்கின்றார் என்பதனை இவ்வசனங்கள் தெரிவிக்கின்றன. இவ்வூழியத்தின் அடிப்படை நோக்கம் ஜெபமே ஆகும். இதனால்தான் பெயர் ஜெபக்குழு என அமைந்தது. இன்றைய திருச்சபைகள் தன்னை மறந்து நிலையிழந்து, கண்ணயர்ந்து தூங்கிவிடாமல் ஜெபம் செய்தல் வேண்டும்.

ஆ. போ (Go)

இரட்சிப்பின் மகிழ்ச்சியைச் சொந்தமாக்கிக் கொண்டுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவரும், மற்றவர்களது மீட்பிற்காக முயற்சிக்கவும், உழைக்கவும் கடமைப்பட்டவர்கள் ஆவர். "கிரேக்கருக்கும் மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடர்களுக்கும் நான் கடனாளியாய் இருக்கிறேன்" என்று ஊழிய அழைப்பின் உத்திரவாதத்தையும் நோக்கத்தையும் புரிந்துகொண்டார் புனித பவுல். திட்டமான அழைப்பு, தீர்க்கமான பணித்திட்டம், தெளிவான பரம தரிசனம், இதனை ஒருபோதும் அவர் நெகிழ விட்டதில்லை. அவ்வண்ணமே குமரி மாவட்ட கிறிஸ்தவ மக்களும் நற்செய்திப் பணியாற்றிட தங்களை ஒப்படைத்து நற்செய்தியைக் கூறி அறிவிக்கப் புறப்பட்டுச் செல்ல வேண்டும் என்பது ஜெபக்குழுவின் தலையாய நோக்கமாகும். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது தன்மேல் விழுந்த கடமையாய் இருக்கிறதென்று புனித பவுல் ஏற்றுக்கொண்டு "சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ" என்கிறார். (I கொரி 9:16). இயேசுவாகிய சுவிசேஷத்தைப் பிறருக்குச் சொல்வதுதான் மூலமந்திரம் என்ற அடிப்படையில்தான் சுவிசேஷம் என்ற சொல் பெயருக்கு முன்னதாக அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மனிதனையும் ஒளிக்குள்ளாக நடத்தியது சுவிசேஷமே ஆகும்.

இ. அனுப்பு (Send)

நற்செய்திப் பணியாற்றுவதற்குரிய அழைப்பு அனைத்து விசுவாசிகளுக்கும் பொதுவானதாகும். ஆனால் மலைகளிலும், காடுகளிலும், எல்லைப் பகுதிகளிலும் கடல்தாண்டி வேற்று நாடுகளுக்குச் சென்று ஊழியம் செய்யும் அழைப்பு அனைவருக்கும் கிடைப்பதில்லை. ஆனால் எல்லா இடங்களிலேயும் ஏதேனும் ஒருவிதத்தில் கிறிஸ்துவை அறிவிக்கும் பொறுப்பு அனைவருக்கும் உண்டு. எனவே ஒருவர் நேரில் சென்று சுவிசேஷத்தை அறிவிக்க முடியவில்லையெனில், தனக்குப் பதிலாக வேறொருவரை அனுப்பும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும். கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான் .... அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படி

கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? . . . . (ரோமர் 10 : 13-15). எனவே உலகின் கடைசி காலத்தில் வாழ்ந்துவரும் அனைத்து மக்களுக்கும் நற்செய்தியைக் கூறி அறிவிக்க அழைப்புப் பெற்ற நற்செய்தியாளர்களைத் திருச்சபை பொறுப்பேற்று அனுப்ப வேண்டும். அப்பணியின் பொறுப்பினை ஏற்க தனி நபராக, குடும்பமாக, குழுக்களாக, பலர் முன்வர வேண்டும். சுவிசேஷத்திற்கென்று ஊழியர்களைத் தாங்குவது அவசரமும் அவசியமுமானதாகும். ஆகவே அருட்பணியாளர்களை அனுப்புகின்ற பொறுப்பினை நிறைவேற்றுவதற்குக் குமரிப் பேராயத் திருச்சபைகளைத் தூண்டி எழுப்புவது சுவிசேஷ ஜெபக்குழுவின் பிரதான நோக்கமாகும். இச்சுவிசேஷ ஊழியத்தைத் தாங்குகின்றவர்களும், ஊழியர்களை அனுப்புகின்றவர்களும் நமது பேராயத்தைச் சார்ந்தவர்களே ஆவர். எனவே அத்தியட்சாதீனம் (Diocesan) என்ற சொல்லும் பெயரின் முற்பகுதியில் இடம் பெற்றுள்ளது. இத்தகைய தூய பணியில் நீங்களும் இணைந்து கொள்ளுவது பெறுதற்கரிய வாய்ப்பே ஆகும்.

4. சுவிசேஷ ஜெபக்குழுவின் தேவை

மேல்நாட்டு மிஷனெறிகளின் தன்னலமற்றத் தொண்டால் இன்று குமரிமாவட்ட சி.எஸ்.ஐ. சபைகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றுள்ளன. கல்வி அறிவில், மருத்துவத்துறையில், சமூகப்பணியில் இப்பேராயம் கண்ட வளர்ச்சி மிக வேகமாகும். திருச்சபைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே இருக்கின்றன. தொழில்கூடங்கள், தொழில் பயிலும் படிப்புகள் போன்றன உருவாகி பொருளாதார மறுமலர்ச்சி வேகமாக முன்னேறியுள்ளது. இதனால் மக்களின் சமூக அந்தஸ்தும் உயர்ந்துள்ளது என்பது மறுத்தற்கு இயலாது. ஆனால் இம்மக்கள் ஆற்றும் மிஷனெறிப் பணி குறிப்பிடத்தக்க அளவில் வளர்ந்து வரவில்லை.

முற்காலங்களில், திருச்சபை மக்கள் தங்கள் எல்லையைச் சுற்றிலுமுள்ள பகுதிகளில் சபையாகத் திறந்தவெளிக் கூட்டங்கள் நடத்தி, நற்செய்தியைக் கூறி அறிவிக்கும் வழக்கம் நடைமுறையில் இருந்தது. திருச்சபை மக்கள் பிறரது இல்லங்களைச் சந்தித்தும், தேவைக்கேற்றாற் போல் பலவித உதவிகள் செய்தும் வந்தார்கள். அதன் வாயிலாக கடவுளின் அன்பையும் மீட்பின் வல்லமையையும் எடுத்தியம்பி பிரசித்தப்படுத்தினர். பேராய எல்லைக்குள் செனனா மற்றும் சுதேஷ மிஷனெறி சங்கம் ஆகியவைகள் மூலம் பல இடங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு வந்தது. ஆனால் பேராய எல்லைக்கு வெளியே, பேராயத்தின் சார்பில் நற்செய்திப் பணி எதுவும் நடைபெறவில்லை.

தூரநோக்குத் தரிசனம் குமரி மாவட்ட சபைகளுக்கு இல்லாததே இதற்குக் காரணமாகும். இக்குறையை ஜெபக்குழு நிறைவேற்றும் காலம் கனிந்தது.

எல்லா வசதிகளையும் படைத்த குமரி மாவட்ட சபைகளில் ஆவிக்குரிய எழுப்புதலை ஏற்படுத்தி, மிஷனெறி ஊழியத்தைக் குறித்த தரிசனமும், பாரமும் மக்கள் உள்ளங்களில் ஏற்பட, அவர்களைத் தூண்டி எழுப்புவது மிகவும் தேவையாக இருந்தது. இப்பணிகளைத் திருச்சபை செயல்படுத்தும் தகுதியினைப் பெற்றுக் கொள்வதற்கு ஊக்கமான ஜெபவாழ்வு இன்றியமையாததாகும். இத்தகைய மக்களின் ஈடுபாட்டிற்குரிய வடிகாலாக சுவிசேஷ ஜெபக்குழு என்ற அமைப்பை இறைவன் கொடுத்திருக்கின்றார். மிஷனெறிகள் மூலமாகப் பயனடைந்த நாம் மற்றவர்களுக்குப் பணியாற்ற அழைக்கப்படுகிறோம். நம்முன் இருக்கும் நாட்டில் புதிய புதிய சவால்கள் நிறைந்திருக்கின்றன. அவைகளைத் துரிதமாக நிறைவேற்றி, புனிதப் பணிக்கு உயிர்கொடுப்பதே நமது பிரதான கடமையாகும்.

5. சுவிசேஷ ஜெபக்குழுவிற்குப் பேராய அங்கீகாரம்

1962 அக்டோபர் மாதம் டி. எலியாஸ் மற்றும் எம். இராஜையன் ஆகியோர் பேராயர் ஐ.ஆர்.ஹெச். ஞானதாசன் அவர்களைச் சந்தித்துத் தொடங்கப்பட்டிருக்கும் சுவிசேஷ ஜெபக்குழுவைக் குறித்துத் தெளிவாக எடுத்துரைத்தார்கள். எல்லாச் சபைகளிலும் மிஷனெறி தரிசனக் கூட்டங்கள் நடத்துவதும், ஜெபக்கூட்டங்கள் ஆரம்பித்து நடத்துவதும், அவைகள் மூலம் மிஷனெறி தரிசனத்தையும் ஆத்தும பாரத்தையும் சபைகளுக்கு ஊட்டுவதே சுவிசேஷ ஜெபக்குழுவின் நோக்கம் என்றும் விளக்கினர். இத்தகைய ஜெபக்குழுவை ஒரு அமைப்புக்குட்படுத்தி செயல்படுத்த வேண்டுமெனவும், பேராயர் அவர்களே, ஜெபக்குழுவிற்குத் தலைவராகச் செயல்பட வேண்டுமெனவும் அவர்கள் கேட்டுக் கொண்டனர். அதற்கிசைய ஜெபக்குழுவின் தலைவர் பொறுப்பைப் பேராயர் ஏற்றுக் கொண்டார். இந்த ஆரம்பத்தைப் பேராயர் பாராட்டி இம்முயற்சி அமைதியாக நடைபெறட்டும் என்று கூறி உற்சாகமூட்டினார்கள்.

ஐரேனிபுரம் ஆலயத்தில் 20-07-1963 அன்று நடைபெற்ற ஜெபக்குழுவின் முதல் ஆண்டுவிழா கூட்டத்தைப் பேராயர் ஐ.ஆர்.ஹெச். ஞானதாசன் அவர்கள் தலைமைதாங்கி நடத்தினார்கள். அக்கூட்டத்தில் இரு முக்கிய ஆலோசனைகளைப் பேராயர் கூறினார்.

* **சுவிசேஷ ஜெபக்குழு என்ற அமைப்பு பேராயத்தோடு இணைந்து செயல்படும் ஓர் அமைப்பாகும்.**

* குமரிப் பேராய எல்லைக்கு வெளியே, பேராயத்தின் சார்பில் மிஷனெறி பணி இல்லாதிருப்பதால், சுவிசேஷ ஜெபக்குழு பேராய எல்லைக்கு வெளியே மிஷனெறி பணிபுரியும் ஓர் அமைப்பாகச் செயல்படும்.

பேராயரது ஆலோசனைகளை ஜெபக்குழுவினர் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டனர். பின்னர் பேராயத்தின் அங்கீகாரம் பெறுதல் வேண்டி அதன் செயலர் எம். இராஜையன் அவர்கள் முறைப்படி பேராயருக்கு விண்ணப்பம் கொடுத்தார். அவ்விண்ணப்பம் பேராய தலைமையில் நடைபெற்ற பேராய சபைப் பரிபாலனக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது. அதனை முறைப்படி ஜெபக்குழுவின் செயலருக்கு அனுப்பி வைத்தனர்.

Church of South India - Kanyakumari Diocese.

Rt. Rev. I.R.H. GNANADHASON, M.A., B.D

NAGERCOIL
16 August 1963.

M. Rajaian,
Church worker C.S.I.
Palavilai, Kuzhithurai P.O.

Dear Rajaian,

I am glad to inform you that the church Board has given its blessing and general approval to the work of your prayer group and hopes in the days of to come. We will be able to support a worker set aside for work among Hill Tribes.

Of Course the actual selection, ete would be done by the committee on missions of the church Board.

Yours Sincerly
S/d. Bishop.

6. அங்கத்துவம்

ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, அவரை நேசிப்பவர்களும் கிறிஸ்தவ நெறிமுறைகளைப் பின்பற்றி வாழ்க்கையில் அவற்றைச் செயல்படுத்துபவர்களும் இதில் அங்கத்தினர்களாய் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

ஜெபக்குழுவால் நடத்தப்படும் ஊழியங்களுக்கு ஒழுங்காய் காணிக்கை கொடுப்போர், நிர்ணயிக்கிற மாதாந்தர அங்கத்துவக் கட்டணம் கொடுப்போர், ஆயுட்கால உறுப்பினர் ஆகியோர் பொதுக்குழுவின் அங்கத்தினர்களாவார். அவர்களுக்கு ஜெபக்குழுவின் பொறுப்புதாரர்களைத் தெரிந்தெடுக்கும் உரிமையுண்டு.

ஒவ்வொரு ஆண்டும் சுவிசேஷ ஜெபக்குழுவினது வருடாந்தரக் கூடுகை நடைபெறும். அவ்வேளையில் கூடும் பொதுக்குழுவில் அவ்வாண்டைய அறிக்கை மற்றும் வரவு செலவு கணக்குகளை ஒப்புவிப்பர். அதனை அங்கத்தினர்கள் பரிசீலித்து ஏற்றுக்கொள்வர். அத்துடன் ஜெபக்குழுவின் ஊழிய வளர்ச்சிக்கான ஆலோசனைகளை யும் வழிவகைகளையும் பொதுக்குழு அங்கத்தினர்கள் எடுத்துக் கூறுவர். மூவாண்டிற்கு ஒருமுறை நிர்வாகக்குழு அங்கத்தினர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள்.

இவ்வாறாக அங்கத்துவ முறை எளிமையானதாக இருப்பதால், மிஷனெறிப் பணியில் ஆர்வம் கொண்டுள்ள விசுவாசிகள் அனைவரும் இவ் ஜெபக்குழுவில் உறுப்பினர்களாகி, ஜெபக்குழுவின் ஊழியங்களைக் கட்டி எழுப்பி வருகிறார்கள். ஜெபமே ஊழியத்தின் ஆணிவேராகத் திகழ்கிறது. இன்றையத் திருச்சபைகளில் மிஷனெறிப் பணியில் ஆர்வமுள்ள அமைப்பாளர்கள் அதிகமுள்ளனர். ஆனால் பாரப்பட்டு ஜெபிக்கின்றவர்கள் மிகக் குறைவு. பலரை தேவன் எழும்பும்படி வேண்டிக் கொள்வோம்.

குமரி மாவட்டத்தில் செயல்பட்டு வந்த செனானா மிஷன், மால்ட் மிஷனெறி சங்கம், சுதேச மிஷனெறி சங்கம், நாகர்கோவில் சுவிசேஷக்குழு, நாகர்கோவில் நற்செய்திக்குழு, தெலுங்கு மிஷன் ஆகிய சங்கங்கள் மூலம் குமரி மாவட்ட மக்கள் பல்வேறு திருப்பணிகளைச் செய்து பழகியவர்கள். இத்தகைய மக்களின் பேராதரவு பின்னாட்களில் சுவிசேஷ ஜெபக்குழுவிற்குக் கிடைத்தது.

**"ஜெபம் செய்திடுவோம் கண்ணீர் சிந்திடுவோம்
தேசத்தின் சேமத்திற்காய் ஜெபிப்போம் செயல்படுவோம்
ஜெபிப்போம் ஜெயம் பெறுவோம்"**

**அதிகாலையில் இராச்சாமத்தில் பகலில் இரவில்
இடைவிடாமல் எப்பொழுதுமே - ஜெபம் செய்திடுவோம்**

3

மலைகளும் மக்களும்

"அதற்கு இயேசு, ஸ்திரீயே, நான் சொல்கிறதை நம்பு, நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுது கொள்ளும் காலம் வருகிறது" (யோவான் 4 : 21)

கிறிஸ்துவின் அன்பை உணர உணர மனித உள்ளம் இயேசுவின் மாறாத அன்பால் நிறைகிறது. வற்றாத அந்த அன்பால் உடைகிறது; நிறைந்து வழிகிறது. தூரத்தில் அழியும் மனிதனுக்கு இந்த அன்பு இன்னும் ஒருமுறை கூட கிடைக்கவில்லையே என ஏங்கும் உள்ளங்களும் பல உள்ளன. இந்த அன்பைக் கூற வாஞ்சிக்கும் மக்கள் பலர். எத்தகைய இடர்பாடுகளையும் தாண்டி சுவிசேஷம் அறிவிக்கப் புறப்பட்டுச் செல்கிறார்கள். அத்தகையோர் பணியாற்றும் மலைகளும் அங்கு மக்களும் வாழ்வின் சவால்களைச் சந்திக்கும் மையங்களாகும்.

1. மலைகள்

இயற்கை அழகின் உண்மைத் தடயங்கள் கடவுள் படைத்த மலைகளிலும், அடர்ந்த காடுகளிலும்தான் காணக் கிடக்கின்றன. "மலையைப் பாடாதவன் மடையன்" என்று ஆங்கிலக் கவிஞர் கூறியுள்ளார். "காடுகள் பசுமை வனப்பினால் கவர்ச்சியூட்டுபவை. மர்ம இருள், கருமை நிறைந்தவை, ஆய்ந்து மதிப்பிட முடியாத ஆழ்தடம் செறிந்தவை" என்று அமெரிக்கக் கவிஞர் ராபர்ட் பிராஸ்ட் கூறியுள்ளார். மலைகளும் காடுகளும் இயற்கை எழிலின் இருப்பிடங்களாகவும் ஆதாரங்களாகவும் விளங்குகின்றன.

இந்தியாவின் தெற்குப் பகுதியில் அமைந்திருக்கும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் மேற்குத் தொடர்ச்சி மலைகளும் தென்னக மக்களின் வாழ்வாதாரங்களாகும். "இம்மலைகள் சேர, சோழ, பாண்டியர்களின் காலத்தில், அவர்களின் வரலாற்றுச் சிறப்புடையனவாகவும், பின்னர் பல்லவர், விஜயநகர மன்னர்கள், நாயக்கர்கள், முகமதியர்கள், ஆங்கிலேயர்கள் என்று பலருடைய ஆட்சிக்கு உட்பட்டுமிருந்தவைகள் ஆகும்" என்று பிலோ விஜயநாத் குறிக்கின்றார்.

தமிழ்நாட்டில் திருச்சி, கோவை, சேலம், தர்மபுரி, தென் ஆற்காடு, வட ஆற்காடு, நீலகிரி போன்ற மாவட்டங்களில் மலைகள் பரந்து கிடக்கின்றன. அவை பச்சை மலை, போதைமலை, சித்தேரி மலை, கொல்லி மலை, பைத்தூர் மலை, பெரிய மலை, சேர்வராயன் மலைகள் (ஏற்காடு) சின்ன கல்வராயன் மலை, பெரிய கல்வராயன் மலை, ஊசிபர்கூர் மலைகள், ஜவ்வாது மலை, நீலகிரி மலைகள் போன்றனவும் வேறு சில சிறுமலைகளுமாகும். இம்மலைகள் சுமார் 3000 அடி முதல் 6000 அடி உயரமுடையவனாக விளங்குகின்றன. வேனிற் காலத்தில் அதிகச் சூடும், குளிர்காலத்தில் அதிகக் குளிரும் பனிப்பொழிவும் இம்மலைகளில் இருக்கும்.

கொல்லி மலை, சேர்வராயன் மலை மற்றும் நீலகிரி மலைகளின் கூடுதலான நிலப்பரப்புகளில் காடுகள் அழிக்கப்பட்டன. அவைகளில் தேயிலை, காப்பி, ஆரஞ்சு, கொய்யா, அன்னாசி, மா, பலா, எலுமிச்சை, பேரிக்காய் ஆகியவை பயிரிடப்பட்டு வருகின்றன. எஞ்சிய நிலப்பரப்புகள் காடுகளாகவே உள்ளன. இதர மலைகள் குற்றுச் செடிகளும், மரங்களும் அடர்ந்த காடுகளாகவே உள்ளன. சில இடங்களில் கடுக்காய், புளி, மூங்கில் ஆகிய பலன்தரும் மரங்களும், காட்டு மரங்களும் வளர்கின்றன. ஜவ்வாது மலையில் சந்தனம், ஈட்டி ஆகிய மரங்கள் ஏராளம் உள்ளன. இம்மரங்களால் ஆங்கிலேயர்கள் கவர்ந்து இழுக்கப்பட்டு, தங்களின் காலனி ஆட்சிக்காலத்தில் ஜவ்வாது மலையைத் தங்களின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தார்கள்.

சுவிசேஷ ஜெபக்குழு மிஷனெறிகளை மலைக்கு அனுப்பத் தொடங்கிய காலத்தில் ஜவ்வாது, கொல்லி, சேர்வராயன் மற்றும் நீலகிரி ஆகிய மலைகளில் மட்டும் சில இடங்களில் சாலை வசதிகள் இருந்தன. ஏனைய மலைகளுக்கு மாடுகள் செல்லும் ஒற்றையடிப் பாதைகள் மட்டுமே இருந்தன. குறிப்பிட்ட சில இடங்களில் லாறிகள் செல்லக்கூடிய கரடு முரடான கடினப் பாதைகளும் இருந்தன.

மலைகளில் கொடிய விஷப் பூச்சிகள், கரடி, புலி, செந்நாய், காட்டு மாடு போன்ற கொடிய மிருகங்கள் போன்றவை வாழ்கின்றன. ஒரு சில மலைகளில் யானைகள் உள்ளன. புள்ளிமான், கலைமான், காட்டு ஆடுகள் போன்ற வன விலங்குகளும் இவற்றில் காணப்படுகின்றன. சிறு சிறு ஆறுகள், ஓடைகள் போன்றனவும் உண்டு. மழைக் காலங்களில் அவை கட்டுக்கடங்காமல் பெருக்கெடுத்து ஓடும்.

சேரர்கள் தங்களின் ஆட்சியைக் கொல்லி மலைமுதல் தர்மபுரி வரை விரிவுபடுத்தியிருந்தார்கள். இதற்கான சான்றுகள் தென் ஆற்காடு,

கள்ளக்குறிச்சி, கல்வராயன் மலைப் பகுதிகளில் காணப்படுகின்றன. கல்வராயன் மலையில் வாழும் பழங்குடி மக்கள் தங்கள் கிராமங்களுக்கு நிலம், தாவரம், விலங்கு, அளவு சாதி, இனம் ஆகிய பெயர்களை வைத்து அழைக்கின்றனர்.

சான்றாக :

நிலவூர் - நிலம்; பெருமா - யானை;

சிறுகளூர் - அளவு; கரியாலூர் - நிறம் இவை போன்ற பெயர்களே அங்குள்ள கிராமங்களுக்கு இடப்பட்டுள்ளன. ஆங்கிலேயர்கள் சேர்வராயன் மலையைச் **சேலம் காஷ்மீர்** என்று அழைத்தனர்.

2. மலை மக்கள்

தமிழினம், தமிழ்மொழி, தமிழ்நாடு ஆகியவற்றின் வரலாறு மிகவும் தொன்மையானது. தமிழக மலைப்பகுதிகளில் இருளர், வேட்டுவர், தோடர், கோத்தர், குறும்பர், பணியர், கசவர், காட்டு நாயக்கர், காடர், காணிக்காரர், லம்பாடி, மலையாளி, கவுண்டர், முதுவர், பூசாரிகள், தொதுவர் போன்ற பல ஆதிவாசிகள் வாழ்ந்து வருகின்றனர்.

மலைகளின் உயரமான இடங்களில் வாழும் இம்மக்கள் தங்களை உயர் ஜாதியினர் என்றும் கீழ்நாட்டில் வசிப்பவர்களை குறைந்த சாதியினர் என்றும் கருதுகின்றனர். தங்கள் ஜாதி கெட்டுவிடும் என, கீழ் நாட்டவரிடம் தொடர்பு வைத்துக் கொள்வதில்லை. இவர்களுடைய பூர்வீகம் குறித்துப் பல்வேறு கருத்துக்கள் உள்ளன.

காஞ்சிபுரத்தில் வாழ்ந்து வந்த வேளாளர் குல மக்கள் தங்கள் மாடுகளை மேய்க்க ஜவ்வாது மலைக்குச் சென்றனர். அப்போது அம்மலையில் குறும்பர்கள் வாழ்ந்து வந்தனர். மாடு மேய்த்தல் தொடர்பாக மேற்கூறிய இரு வகுப்பாருக்கும் இடையே ஏற்பட்ட சண்டையில் குறும்பர்கள் தோல்வியடைந்தனர். தோல்வியடைந்த குறும்பர்கள் அவ்விடம் விட்டு, கள்ளக்குறிச்சி, சேர்வராயன் மலைகளுக்குச் சென்று குடி ஏறியதாக ஒரு செய்தி உள்ளது.

காஞ்சிபுரத்திலிருந்து மேல் பகுதிக்குச் சென்று குடியேறிய வேளாளர் இனத்துப் பெண்கள் மிகவும் அழகுடையவர்களாயிருந்தார்கள். மலையில் வாழ்ந்து வந்த வேட்டுவர் இன வாலிபர்களில் ஏழுபேர் புதிதாகக் குடியேறிய ஏழு வேளாளர்ப் பெண்களை தங்களுக்குத் திருமணம் முடித்துத் தர கேட்டார்கள். வேட்டுவர் புலால் உண்கிறவர்கள் ஆகையால் அவ்வேண்டுகோளை வேளாளர்கள் மறுத்தனர். உடனே, அப்பெண்களை அவ்வாலிபர்கள் கடத்திச் சென்று விட்டனர். அதனை அறிந்த

அப்பெண்களின் தகப்பன்மார் தங்கள் மகள்களைத் தேடிச் சென்றனர். போகும்போது தங்கள் வீட்டாரிடம் நாங்கள் அழைத்துக் கொண்டு போகும் நாய்களுடன் மீண்டும் திரும்ப வருவோம். அல்லாமல், நாய்கள் மட்டும் திரும்பி வந்தால், நாங்கள் இறந்து விட்டதாகக் கருதிக் கொள்ளுங்கள் என்று கூறிச் சென்றனர். அக்காலம் மழை பெய்து கொண்டிருந்தது. அவர்கள் போகும் வழியில் மிகப் பெரிய பாலாறு குறுக்கிட்டது. ஆற்றில் தண்ணீர் மிகுதியாக ஓடியதால் பெண்களைத் தேடிச் சென்ற ஆண்கள் மட்டும் நீந்தி அக்கரைக்குச் சென்றனர். நாய்கள் நீந்த முடியாமல் தங்கள் இல்லங்களுக்குத் திரும்பி வந்தன. தகப்பன்மார் கூறிச் சென்ற உறுதிமொழிக்கேற்ப, பெண்களைத் தேடிச் சென்றவர்கள் இறந்து விட்டதாகக் கூறி குடும்பத்தார் அவர்களுக்கான ஈமச் சடங்குகளை முடித்து விட்டார்கள். சில நாட்களுக்குப் பின் அவ் ஆண்கள் திரும்பி வந்தனர். ஆனால் அம்மக்கள் அவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் அவர்கள் மலையிலுள்ள வேட்டுவர்களுடன் சேர்ந்து வாழ்வதாகக் கூறுகின்றனர்.

சமவெளிகளில் வாழ்ந்து வந்த மக்கள், முகமதியர்களின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற போருக்கும், கொடுங்கோல் ஆட்சிக்கும், ஆங்கிலேயர்களின் வரிச்சுமைக்கும் பயந்துபோய், உயிர் தப்ப மலைகளின்மேல் மறைந்து வாழ்கிறார்கள் என்பதும் ஒரு கருத்தாக உள்ளது.

கல்ராயன் மலையிலுள்ள ஜாகீர்தார்கள் காஞ்சிபுரத்தினின்று சென்று மலையில் குடியேறி, முதற்கண் அங்குள்ள வேட்டுவர்களோடு சண்டையிட்டு வென்று அவர்களை அடக்கினார்கள். பின்னர் அவர்களோடு உறவு கொண்டார்கள். இவ்விதம் மலையில் அதிகாரத்தை நிலைநாட்டிக் கொண்டார்கள் எனவும் கூறப்படுகிறது.

காஞ்சிபுரத்திலிருந்து மூன்று சகோதரர்கள் தங்கள் மனைவிகளுடன் புறப்பட்டார்கள். அதில் ஒருவர் ஆம்பூர் பகுதியிலும், மற்றொருவர் ஜவ்வாது மலையிலும், மூன்றாமவர் சேர்வராயன் மலையிலும் குடியமர்ந்தார்கள். பின்னர் பெருகி நிரம்பினார்கள் என்றும் பேசப்படுகிறது.

இவ்விதம் மலை மக்களைக் குறித்துப் பல்வேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன.

அ. மலையர்களும் அடிமைகளும்

சேரர் ஆட்சிக்காலத்தில் சேர நாட்டின் மேற்கு எல்லைக் கடலாக இருந்தது. இதனால் அவர்கள் கிழக்கு நோக்கி நகர்ந்து சேலம், ஏற்காடு, வட ஆற்காடு, தென் ஆற்காடு போன்ற பகுதிகளில் குடியேறினார்கள். இவர்கள் மலையர் என்று அழைக்கப்பட்டனர். ஆட்சியிலும்

அவர்களுக்குப் பங்கு இருந்தது. பிற்காலத்தில் ஏற்பட்ட விஜய நகர ஆட்சியின்போது எவ்வித அதிகாரமுமின்றி சாதாரண நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஆரிய கவுண்டா, ஜடய கவுண்டா, குறும்ப கவுண்டா என்ற மூன்று நாடுகளாக மூன்று ஜாகீர்தார்களின் ஆட்சியின் கீழ் கல்ராயன் மலைகள் இருந்தன. சாதாரண மக்களை ஜாகீர்தார்கள் கொத்தடிமைகளாகப் பயன்படுத்தி வந்தனர். 1976 ஆகஸ்ட் 11-ஆம் நாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் அவசர சட்டத்தின் கீழ் அந்நாடுகள் மத்திய அரசின் ஆட்சிக்குட்பட்டன. அதன் பின்னர், அவை வெள்ளி மலை, மோட்டாம்பட்டி, கிளாக்காடு என மூன்று வட்டங்களாகப் பிரிக்கப்பட்டு மூன்று வட்டாட்சியாளர்களின் அதிகாரத்துக்குக் கீழ்க்கொண்டு வரப்பட்டன. அதன்பின் அரசு, ஆதிவாசிகளின் கிராமங்களுக்கு சாலைகளை அமைத்தது. அம்மக்கள் கல்வி கற்றுக்கொள்ள வசதியாக உண்டு உறையும் பள்ளிகள் ஆங்காங்கே நிறுவப்பட்டன. அப்பள்ளிகளை நடத்த ஓர் ஆசிரியரும் நியமிக்கப்பட்டார். ஆங்கு உருவான பஞ்சாயத்து அமைப்புகள் மூலம் அரசின் மேம்பாட்டுத் திட்டங்கள் பல செயல்படுத்தப்பட்டன.

3. மலைமக்களின் வாழ்க்கை

மலைப்பகுதிகளில் வாழும் மக்கள் பலருக்கு வெளியுலகத் தொடர்புகள் கிடையாது. மிகவும் எளிமையான இவ் ஆதிவாசிகள் மொழி மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களுக்குத் தெரிந்த முறையில் பாடல்கள் பாடி, நடனம் ஆடி, கும்மியடித்து மகிழ்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அவர்களது இன ஒழுங்கின்படி கூட்டமாய் சேர்ந்து தலைவர்களின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டு வாழ்கின்றனர். மேற்கூறிய மலைகளில் சுமார் இருபதிற்கும் மேற்பட்ட பழங்குடி இனத்தவர்கள் வாழ்கின்றனர். இவர்களிடையே மரபு ரீதியாக பழக்க வழக்கங்கள் பல இருந்தாலும் காலங்கள் தோறும் உருவாகும் மாற்றங்களையும் ஏற்றுக் கொள்கின்றனர்.

நீலகிரி, சேர்வராயன், கொல்லி ஆகிய மலைப் பகுதிகளிலுள்ள தோட்டங்களில் உழைப்பவர்கள் அனைவரும் வெளியிடத்தவர்களாவர். அவர்கள் கலாச்சாரம் மற்றும் அறிவியல் முறையான வாழ்க்கைகளில் முன்னேற்றமடைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். அப்பகுதிகளில் பள்ளிகள் அமைத்து, பிள்ளைகளுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கின்றனர். அதற்கும் அப்பாலுள்ள காட்டுப் பகுதிகளில் ஆதிவாசிகள் வாழ்கின்றனர். சற்று முந்திய காலம் வரை ஆதிவாசிகள் தோட்டங்களில் வேலை செய்வதுமில்லை, குழந்தைகளைப் படிக்க வைப்பதுமில்லை.

அ. ஜாகீர்தார்கள்

சின்ன கல்வராயன், பெரிய கல்வராயன் போன்ற மலைகள் ஜாகீர்தார்களால் ஆளப்பட்டு வந்தன. ஜாகீர்தார் என்ற பதவி குடும்பப் பரம்பரையாக வந்துள்ளது. ஜாகீர்தார்கள் கல்வியறிவு அற்றவர்கள். ஊர் மக்களைச் சந்திக்க வரும் ஜாகீர்தார்களைப் பல்லக்கில் தூக்கிவருவது அவர்களின் வழக்கமாகும். அவர் வரும் வழியை மக்கள் சுத்தம் செய்து வழியின் இரு ஓரங்களிலும் நின்று மிகப்பெரும் மரியாதையை அளிப்பர். எனினும் ஜாகீர்தார், அவ்வூரின் மூப்பர் மற்றும் நாட்டாரின் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும் என்ற மரபுமுள்ளது.

மலையின் மேல் பகுதிக்குச் சாலைகள் அமைந்து விட்டால், கலாச்சார மாறுதல் ஏற்பட்டு விடும் எனப் பயந்து, சாலை வசதிகள் செய்வதை ஜாகீர்தார்கள் விரும்பவில்லை. பள்ளிகள் நிறுவினால், பிள்ளைகள் கற்று முன்னேற்றமடைந்து விடுவார்கள். அவ்வாறு மாற்றங்கள் பல நிகழும்போது, தங்களை மதிக்க மாட்டார்கள் என்ற அச்சத்தில் அவர்கள் எவ்வித முன்னேற்றத் திட்டங்களையும் அனுமதிப்பதில்லை.

ஆ. தமிழக முதலமைச்சரின் வருகை

கல்விக்கண் திறந்த காமராசர் அவர்கள் தமிழக முதல்வராக இருந்தபோது, ஒருமுறை அம்மலையின் சில பகுதிகளுக்கு வருகை புரிந்தார். அம்மலைவாழ் மக்களின் அவல நிலையைக் கண்டறிந்த காமராசர் அப்பகுதிகளில் சாலைகள் அமைக்கவும், பள்ளிகள் நிறுவவும் அரசு ஆணை பிறப்பித்தார். அரசு, சாலைகள் அமைக்கும் பணியைத் தொடங்கியபோது, எங்கள் அனுமதியின்றி இப்பகுதிகளில் சாலை அமைத்தல் கூடாது என ஜாகீர்தார் ஒருவர் நீதிமன்றத் தடையுத்தரவு பெற்று விட்டார். அதனால் அரசின் திட்டங்கள் அம்மலையில் தடைப்பட்டன. பின்னர் மத்திய அரசு அம்மலையை ஏற்று எடுப்பது வரை அந்நிலை நீடித்தது.

இ. சாராயம் காய்ச்சுதல்

சாராயம் காய்ச்சுவது அம்மக்களின் குடிசைத் தொழில் போன்றது. ஒற்றையடிப் பாதை வழியாக அம்மலைக்கு ஏறிச் செல்லும்போது, பாதையின் இரு ஓரங்களிலும் வரிசையாகச் சாராயம் காய்ச்சுவதைக் காணமுடியும். அதனைத் தகரம் மற்றும் பிளாஸ்டிக் டப்பாக்களில் சுமந்து சென்று விற்பனை செய்வர். ஒரு தாய், குழந்தையைப் பெற்றவுடன், அக்குழந்தைக்கு முதற்கண் சாராயம் குடிக்கக் கொடுப்பாள். காடுகளில் அம்மக்கள் ஏராளம் கஞ்சா பயிரிட்டும் வந்தனர். சாராயம் மற்றும் கஞ்சாவிற்கு அடிமையாகி வாழ்ந்த இம்மக்களை இரவு நேரங்களில்

ஆண் யார்? பெண் யார்? என்று வேறுபடுத்திக் காண முடியாமல் விலங்கினைப் போல் வாழ்ந்து வந்தனர்.

ஏ. திருமண உறவு முறை

மலைகளில் வாழும் பெண்கள் சேலை கட்டுவதும், ஜாக்கெட் அணிவதும் தங்கள் ஜாதிக்குக் குற்றம் எனக் கருதுகின்றனர். ஆண்கள் வேஷ்டியை இடையில் கட்டிக் கொள்ளாமல், தலையில் கட்டிக் கொள்வர் அல்லது மூடிக் கொள்வர். தங்கள் நிர்வாணத்தை மறைக்க ஒரு சிறு துண்டை மட்டும் கட்டியிருப்பர். வயதில் கூடிய பெண்களைச் சிறு பையன்களுக்கும், குறைந்த வயதுடைய பெண்களைப் பெரிய ஆண்களுக்கும் விவாகம் செய்து வைப்பது வழக்கமாகும். இப்பெண்களுக்கு எவ்வழியில் குழந்தை பிறப்பினும் அந்தப் பிள்ளைகள் அவளை விவாகம் செய்த அவளுடைய கணவனின் ஆதரவில் வந்துவிடும். முற்காலங்களில் விவாகம் செய்வதற்கு ஜாகீர்தார்களது அனுமதியைப் பெற வேண்டும் என்ற நிலை இருந்தது. அதோடு திருமணம் ஆன பெண்ணை ஜாகீர்தார் வீட்டிற்கு அனுப்பிவிடும் வழக்கமும் இருந்தது. குறிப்பிட்ட நாட்களுக்குப் பின் ஜாகீர்தார் அவளை, அவள் கணவன் வீட்டிற்கு அனுப்பி விடுவார்.

ஒரு நபர் பல பெண்களைத் திருமணம்செய்து கொள்வது நல்லது என்றும் கருதினார்கள். ஆண்கள் மற்றும் பெண்களில் விதவைகள் என்றிருக்க முடியாது. நீண்ட நாட்கள் உயிர்வாழ்வதற்குப் பல மனைவிகள் இருப்பது நல்லது என்பதனைக் கொள்கையாக நம்பி வாழ்ந்தனர். பெண்கள் பூப்பெய் தும் காலத்திலும், குழந்தைப் பேறு காலத்திலும், வீட்டிற்குள் தீட்டுப்படுதலா காது என்பதால் வீட்டிற்கு வெளியே, மரக்கிளைகள் பரப்பிய சிறுகுடில் அமைத்து அதில் தங்க வைக்கப்படுகிறார்கள். தர்மபுரி மலைவாசிகள், 80 வயதான விதவைத் தாயையும் திருமணம் செய்து கொடுக்கிறார்கள். அல்லது அவர்களைப் பட்டாக்காரர்கள் (நில முதலாளிகள்) வீட்டிற்கு அனுப்பி விடுகிறார்கள். அப்பட்டாக்காரர்கள் இவ்விதவைகளை மனைவியாகவோ, வேலைக்காரியாகவோ பயன்படுத்துவது வழக்கம்.

உ. விடுதலை பெற்ற மக்கள்

ஜாகீர்தார்கள், மலைவாழ் மக்களைக் கொத்தடிமைகளாகவே வேலை வாங்கி வந்தனர். 1976 ஆகஸ்ட் 11-ல் இம்மக்கள் கொத்தடிமைத் தனத்தினின்று விடுதலை அடைந்தனர். தமிழக அமைச்சர் எம். ஆனந்தன் அவர்கள் அம்மலைவாழ் மக்களைப்பற்றி, "காலமெல்லாம் பாடுபட்டும் அடிமைகளாக வாழ்ந்து வந்த கல்ராயன் மலைமக்கள், 1976-ஆம் ஆண்டு முதல் ஜாகீர்தார்களின் அடிமைத் தளையிலிருந்து விடுபட்டதை அறிந்து படிப்போர் மனம் ஆறுதல் பெறுகின்றது. விடுதலையடைந்த அம்மக்கள்

தலைநிமிர்ந்து வாழவும், உழைப்பின் பயனை முழுமையாகப் பெறவும் நமது அரசு முயற்சி செய்து வருகிறது" எனக் கூறினார். தமிழகத்தின் முன்னாள் கல்வி அமைச்சர் அரங்க நாயகம் அவர்கள் "இம்மலைவாசிகள் அங்கு குடியேறியதும், ஜாகீர்தார்களிடம் அடிமைப்பட்டு அல்லல்பட்டதும், எந்தவொரு சுகமும் காணாமல் வாயில்லாப் பூச்சிகளாய்ப் பிழைத்திருந்து, பின்னர் 1976-ல் அடிமைத்தளை அறுக்கப்பட்டதும், அதுமுதல் நமதரசு பல்துறை வளர்ச்சிக்கான உதவிகளைச் செய்து அவர்களது மனதையும் வாழ்வையும் உயர்த்தும் பணியைச் செய்து வருகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார். எகிப்தில் இஸ்ரவேலர் அனுபவித்தக் கொடூர நிகழ்வுகளைப்போல் இம்மக்களும் துன்பமடைந்துள்ளனர்.

நிலம்பூர் பகுதியில் ஆதிவாசிகளான சோலை நாயக்கர்கள், பச்சை இலைகளைக் கட்டிக்கொண்டு, பச்சை மாமிசத்தைப் புசித்து வாழ்கிறார்கள். இதனால் அவர்களுள் மக்களின் பிறப்பு விகிதம் குறைந்து வருகிறது என 1976 ஆகஸ்டு முதல்வார தினமலர் எழுதியது. அப்போதைய ஆட்சியாளர் அவர்கள், "கல்ராயன் மலையில் தமிழக அதிகாரிகள் சென்றிராத இடங்கள் இருக்கின்றன. சாலை வசதிகளும், கல்விக்கூடங்களும் அங்கு இல்லை" (தினமலர் 10-08-1976) என்று பேசியது மேலுள்ளவைகளை உறுதிப்படுத்துகிறது. அங்குள்ள முன்னேற்றமடைந்த ஜவ்வாது மலையிலும் அதன் உள் பகுதியிலும் வசித்த மக்களை ஆரம்பக் காலங்களில் அரசியல் கட்சிகள் எதுவும் கண்டுகொண்டதில்லை. தொங்குமலை மக்கள் அதுவரை ஓட்டுப் போட்டதுமில்லை. ஓட்டுக் கேட்க எந்த அரசியல் கட்சியும் அவர்களைத் தேடிச் சென்றதுமில்லை (1970 - ஜெபக்குழு அறிக்கை) எனத் தெரிய வருகிறது.

தற்காலத்தில் சுவிசேஷ ஜெபக்குழுவின் பல்வேறு பணிகள் மூலமாகவும், அரசின் நலத்திட்டங்கள் மூலமாகவும், ஆதிவாசிகளின் வாழ்க்கைத்தரம் மேம்பட்டு வருகிறது. மலைமக்கள் கல்விகற்றுக் கொள்ள ஆர்வம் கொள்கின்றனர். கலாச்சாரத்திலும், பொருளாதாரத்திலும் புரட்சிகரமான நிலைகள் உருவாகியுள்ளன. இறை அறிவிலும், நல்லது கெட்டதைப் பாகுபடுத்துவதிலும் மக்கள் முன்னேறியுள்ளனர். தங்கள் வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணம் இயேசுவை அறிந்ததே எனக் கூறிப் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர்.

இயேசுவுக்கு அடிமையானவர்கள் இயேசு அளித்த விடுதலையைப் பாவத்திலும், இருளிலும், மரணத்திலும், பிசாசின் எல்லாவித அடிமைத்தனத்திலும் வாழுகின்ற மக்களை மீட்பதற்கே பயன்படுத்துவர். இதனால் பெறும் புதுவாழ்வில் தாங்களும் ஐக்கியம் கொள்வர்.

4. மலைவாழ்மக்களின் இறை நம்பிக்கை

காஞ்சிபுரத்தை இந்துக்கள் புண்ணிய பூமி என்று கருதுகின்றனர். மலைவாழ் மக்களும் காஞ்சிபுரத்திலிருந்து வந்து மலையில் வாழ்பவர்கள் எனத் தங்களுக்கு ஒரு பாரம்பரிய வரலாற்றைக் கொண்டுள்ளனர். தாங்கள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறுகின்றனர். பசுவை புனிதமாகக் கருதிப் தெய்வமாக வழிபடுகின்றனர். அதனால் தங்கள் வீட்டிலும், ஊரிலும் தோல் செருப்பினை அணிய மாட்டார்கள். வெளி இடங்களில் உள்ளவர்கள் மாட்டிறைச்சியை உண்பவர்கள் எனக்கருதி, அவர்களைத் தாழ்ந்த ஜாதியர் என்பர். காஞ்சிபுரத்து மக்கள் வணங்கும் தெய்வங்களை எல்லாம் இம்மலைவாழ் மக்களும் வணங்குகின்றனர். தெய்வங்களின் பெயர்களைத் தங்கள் பிள்ளைகளுக்கு சூட்டுகின்றனர். மரங்களில் தெய்வம் இருக்கிறது என்ற நம்பிக்கையினால், அடர்த்தியாய் மரங்கள் வளர்ந்த இடங்களில் தெய்வங்களுக்குக் கோயில் எழுப்பியுள்ளார்கள். வீடு கட்டுவதற்குப் பயன்படும் மரங்களைத் தெய்வ நம்பிக்கைக் கருதி செதுக்குவதில்லை.

அ. ஆவிகள் குறித்த நம்பிக்கை

ஆவிகள் குறித்த நம்பிக்கையும் பயமும் அவர்களிடம் மிகுதியாகவே உள்ளது. நல்ல ஆவிகளும், தீய ஆவிகளும் உண்டு என்று நம்புகின்றனர். நல்ல ஆவிகளை வணங்குவதால், தீய ஆவிகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்படலாம் என்பது அவர்களது எண்ணம். குறி கேட்கும்போது கொடுக்கின்ற காணிக்கையை ஆவிகள் ஏற்றுக்கொண்டு, வீட்டையும், காட்டையும் காக்கின்றன எனக் கருதுகின்றனர். இறந்தோர் மீண்டும் சிலகாலம் உரியவர்களுடன் தங்குகிறார்கள். ஆகவே அவர்களை மகிழ்விக்க வேண்டும். அவ்விதம் மகிழ்விப்பதால் தங்களுக்கு நன்மையுண்டாகும் எனக் கருதி, புண்ணிய தருமங்களைச் செய்கிறார்கள். தீய ஆவியின் தாக்குதலுக்குத் தப்பவும் நோயிலிருந்து விடுபடவும் தங்கள் உடலில் பச்சைக் குத்திக் கொள்கிறார்கள்.

ஆ. விழாக்கள் குறித்த நம்பிக்கை

விழா நிகழ்த்தும் காலங்களில் உயிர்ப் பலிகள் செலுத்துகின்றனர். நிலத்தை முதல் முறையாக உழுவதற்குச் செல்லும் போதும் காடு வெட்டச் செல்லும் போதும், பூ, கற்பூரம், முட்டை, பொரி, கோழி, பன்றி போன்றவற்றை வைத்துப் பலி செலுத்துகின்றனர். பூமியையும், மலையையும், கரியராமன் என்ற தெய்வம் அவர்களுக்குக் கொடுத்துள்ளதாக நம்புகின்றனர். தண்ணீர் எடுக்கக் கிணறு வெட்டுவது கடவுளது உடம்பை வெட்டுவது போலாகும் என்று எண்ணுகின்றனர்.

மலையைத் தாயாகவும், இயற்கைக் கற்களைத் தெய்வங்களாகவும் வணங்கி வருகின்றனர்.

விழா நாட்களில் விளக்கேற்றுவதால், தங்கள் கடவுள் விளக்கு வடிவத்தில் வந்து உதவி செய்வதாக நம்புகின்றனர். எல்லாக் காரியங்களுக்கும் சகுனம் பார்க்கின்றனர். நல்ல காரியம் செய்யத் தொடங்கும்போது, பூனை, பாம்பு போன்றவை குறுக்கே செல்லக்கூடாது. விதவைகள், தாரமிழந்த ஆண்கள் மற்றும் அவர்கள் விரும்பாத குறிப்பிட்ட சில சாதியினர் எதிர்வரக் கூடாது என்பவைகளும் நம்பிக்கையாகவுள்ளன.

இ. தெய்வங்கள் குறித்த நம்பிக்கை

குழந்தைப் பேறு இல்லாதவர்கள் புண்ணியமடைய மாட்டார்கள். புத்தென்னும் நகரத்திலிருந்து புத்திரன் அவர்களைக் காப்பாற்றுகிறான். மலைகளை முழுவதும் ஆட்சி செய்கிற கரியராமன் என்ற தெய்வத்திடமிருந்து நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காக, அம்மக்கள் மாடுகளைக் கரியராமனுக்கு நேர்ச்சையாகக் கோயில்களில் கட்டுகிறார்கள். விஷ்ணுவை, கரியராமனை விட சற்றுக் குறைந்த தெய்வமாகக் கொள்கின்றனர். விஷ்ணுவிற்குப் பூசை செய்ய ஐந்து நம்பியர்களை எப்போதும் நியமித்திருப்பார்கள். மாரியம்மன் வணக்கம், தேவதை வணக்கம் போன்றன எல்லா ஊர்களிலும் உண்டு. சில ஊர்களில் மாரியம்மனுக்குக் கோயில்கள் எழுப்பியிருக்கிறார்கள்.

வியாதி வராமலிருக்கவும், மழை வேண்டியும் ஆடு, கோழிகளை மாரியம்மனுக்குப் பலியிடுவார்கள். அந்நிகழ்வைப் பெண்கள் பார்க்கக் கூடாது. வியாதி அல்லது வேறு துன்பங்கள் வரும்போது அம்மக்கள் குறி சொல்பவர்களையும் காணிக்காரர்களையும் நாடிச் செல்கின்றார்கள். திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் உண்ணா நோன்பும் இருக்கிறார்கள். திருப்பதி, திருவண்ணாமலை ஆகிய கோவில்களுக்குச் சென்று சாமி கும்பிடுகிறார்கள். ஆங்கு கூறும் உபதேசத்தை நம்பிக்கையாக ஏற்றுக் கொள்கிற இவ் ஏழைகள் தங்களுக்குள்ளவை களை விற்றுச் செலவழித்து முற்றிலும் தரித்திரர் ஆகி விட்டனர். தங்கள் தெய்வங்களுக்குத் தங்கள் விருப்பத்தின் படியே பெயரிட்டு அழைக்கின்றனர். ஏராளமான தெய்வங்களை வணங்குகின்றார்கள்.

சாமி கும்பிடும் விழாக்களைக் கிராமத்தின் அனைத்து மக்களும் சேர்ந்து நடத்துகிறார்கள். அவ்விழா தொடங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னரே, ஊர்த்தலைவர் ஊரைச் சுற்றி வேலி அடைத்து விடுவார். அந்நாட்களில் கீழ் நாட்டவர்கள், பிற மக்கள் எவரும் ஊரில் தங்குவதற்கு

அனுமதி கிடையாது. அதனை மீறி தங்குவதற்கு அனுமதித்தால் வேடியப்பன் என்ற மலைச்சாமி கோபப்பட்டு அவர்களை அழித்துவிடும் என்கின்றனர்.

உகாதிப் பண்டிகை ஒன்று நடத்தி, அந்நாளில் பன்றிகளைப் பலியிடுகின்றனர். காளைப் பண்டிகை நாளன்று காளையுடன் மல்யுத்தம் செய்கின்றார்கள். அதற்கு அடுத்த நாள் பெண்கள் பல்வகை வேடம் தரித்து, இரவு முழுவதும் பாடல் பாடி நடனமாடுகின்றனர். இதனால் தங்கள் சாமி கோபம் நீங்கிப் பிரியப்படுவதாக நம்புகிறார்கள்.

ஊருக்கு வெளியே ஏதேனும் சூழல்களில் ஒருவர் இறந்து விட்டால், இறந்தவரின் உடலை ஊருக்குள்ளே கொண்டுவர மாட்டார்கள். அவ்வுடலை ஊருக்கு வெளியே வைத்து இறப்புக்காலச் சடங்குகளை முடித்து, வெளியேயுள்ள சுடுகாட்டில் அடக்கம் செய்வர். ஆனால் ஊருக்குள்ளே ஒருவர் இறந்து போனால் அவரின் இறுதிச் சடங்குகளை ஊருக்குள் வைத்து முடித்த பின்னர் வெளியே அடக்கம் செய்வர். ஒரு ஊரில் அடுத்தடுத்து இருவர் இறந்து போனால் மந்திரவாதியைக் கூட்டிக்கொண்டு வந்து மந்திரம் ஓதி ஊரைக் கட்டுகின்றனர். அதோடு கேட்டை நட்சத்திரம் ஊரைச் சுற்றுவதாகக் கருதி சாமிக்குப் பன்றி, கோழி, ஆடு முதலியனவற்றைப் பலியிட்டு ஊரைச் சுற்றிலும் மந்திரவாதியை வைத்து மந்திரம் ஓதுகின்றனர். இதற்குப் பின் தீய ஆவி ஊரில் நடமாடாமல் ஓடிவிடும் என்பது இம்மக்களின் நம்பிக்கையாகும்.

ஈ. மோட்சம் குறித்த நம்பிக்கை

மலை மக்களுக்கு மோட்சம், நரகம் பற்றிய நம்பிக்கைகள் உண்டு. நன்மை செய்து நல்லவர்களாக வாழ்பவர்கள், மரணத்திற்குப் பின் வைகுண்டம் (மோட்சம்) போவார்கள் என்றும், தீயவர்கள் எமகுண்டம் (நரகம்) போவார்கள் என்றும் நம்புகின்றனர். இவர்களது சமய வழிபாடுகளையும் நம்பிக்கைகளையும் பயன்படுத்தி, நற்செய்தி வாயிலாய் அம்மக்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்குரிய வாய்ப்புகள் பல வகைகளில் உள்ளன. இவ்வாய்ப்புகளைச் சுவிசேஷ ஜெபக்குழு அவர்களுக்கு நற்செய்தி மூலமாக அறிவித்து வருகிறது.

உ. பொதுவான நம்பிக்கைகள்

சில கிராமங்களிலுள்ள மக்கள் தமிழ் மாதத்தின் நடு நாட்களில் (15 அல்லது 16 ஆகிய நாட்கள்) பயணம் மேற்கொள்ள மாட்டார்கள். அதுபோல அமாவாசைக்கு அடுத்த நாளும் பயணம் செய்ய மாட்டார்கள். இந்நாட்களில் பயணம் மேற்கொண்டால் வெற்றியாக அமையாது என்பது நம்பிக்கை.

கிராமத்தில் நோயின் காரணமாக வயிறு வீங்கி யாராவது இறந்து பின்னர் வெகுநாட்கள் மழை பெய்யாவிடில் இறந்தவர்களின் பிணத்தைத் தோண்டி எடுத்து எரித்து விடுவார்கள். அப்படிச் செய்தால் மழை பெய்யும் என்பது நம்பிக்கை.

அதிக நாட்கள் காய்ச்சலில் இருந்து ஒருவர் இறந்து போனால், அப்பிணத்தைப் புதைக்கிற இடத்தில் தொப்புளுக்கு நேராக ஒரு மூங்கில் குழாயை நட்டு அடக்கம் செய்வர். அம்மரணத்திற்குப் பின்னர் அந்த ஊரில் மழை பெய்யவில்லையெனில் மூங்கில் குழாய் வழியாகத் தண்ணீர் ஊற்றுவார்கள். இதனால் மழை பெய்யும் என்பது நம்பிக்கை.

வீட்டிலுள்ள பெண்களில் யாருக்காவது மாதவிலக்கு ஏற்பட்ட நாட்களாக இருந்தால், வீடுகளுக்குள் தொங்கவிடப்பட்டிருக்கும் சாமிப் படங்களைச் சுவர்ப் புறமாகத் திருப்பி விட்டிருப்பர்.

பச்சை மலைப் பகுதிகளில் தங்கள் முன்னோர்களுக்கு வேட்டுவர் இனத்தவர்கள் உணவு கொடுத்து வந்துள்ளனர். அதனை நினைவுகூரும் விதமாக இப்பகுதிகளில் வாழும் பெண்கள் தங்கள் கணவர்களுக்கு உணவு கொடுக்கு முன் சிறிது உணவைத் தனியாக எடுத்து வைக்கும் பழக்கமுள்ளது.

ஊரில் குழந்தை பிறந்தாலும், யாரேனும் இறந்து போனாலும் இம்மக்கள் துப்பாக்கியால் வானை நோக்கிச் சுடுகிறார்கள். இவ்விதம் இச்செய்தியைத் தேவர்களுக்கு அறிவிப்பதாய் நம்புகின்றனர். அதோடு இச்செயல் ஊருக்குக் கொடுக்கப்படும் அறிவிப்பாகவும் கொள்ளப்படுகிறது.

ஊ. தீட்டுக் குறித்த நம்பிக்கைகள்

மேற்கூறியவைகள் தவிர தீட்டுக் குறித்த நம்பிக்கைகளும் மலை மக்களிடம் காணப்படுகின்றன.

1. வீடுகளில் காலணிகள் பயன்படுத்துவதால் வீடு தீட்டாகி விடுகிறது.
2. தன் கிராமத்திலிருந்து சிலகாலம் கீழ்நாடு சென்று திரும்பி வருபவர்கள், தீட்டாகி விடுகிறார்கள்.
3. சிறைவாசம் சென்று திரும்பி வருவோர் தீட்டாகி விடுகிறார்கள்.
4. ஓர் ஆண் அல்லது பெண் கீழ்நாட்டவருடன் உடலுறவில் ஈடுபட்டால் தீட்டாகி விடுகிறார்.
5. ஒரு நபர் கிறிஸ்தவராக மாறி விட்டால் தீட்டாகி விடுகிறார்.
6. ஓர் ஆணும், ஒரு பெண்ணும் திருமணம் செய்து கொள்ளத் தங்கள் பெற்றோர் தடையாக இருந்து, அப்பெண்ணை அவ்வாலிபன் கடத்திச் சென்று விட்டால் இருவரும் தீட்டாகி விடுகிறார்கள்.

எ. தீட்டு நீக்குதல் குறித்த நம்பிக்கை

மேற்கூறிய முறைகளில் தீட்டுப்பட்டவர்களின் தீட்டைப் புனித நீர் தெளிப்பு மூலமே மாற்ற முடியும் என்பது நம்பிக்கை. மலைகளில் காணப்படும் தங்கள் சமயத் தலைவர்களை, மலை மக்கள் சமயக்காரர் என அழைக்கின்றனர். தீட்டு நீக்கும் புனித நீரை இச்சமயக்காரர்தான் தெளிக்க வேண்டும். புனித நீர் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டது. சமயக்காரர் கடவுளைப் போன்றவர். இவர் உரைப்பவை கடவுள் கூறுபவையே என்பது நம்பிக்கை.

ஊர்த் தலைவர் தீட்டுப்பட்ட மக்களைத் தனக்கு மேல் தலைவனான நாட்டான் முன் நிறுத்துவார். நாட்டான் அவர்களை எச்சரித்தும் ஆலோசனை கூறியும் புனித நீர் தெளிப்பதற்கு உடன்படச் செய்வான். பின்னர் சமயக்காரர் ஒரு குச்சியினால் அவர்கள் முதுகில் மூன்று முறை அடித்து ஒரு கலசத்தில் தீட்டு நீக்கும் புனித நீரை எடுத்து விளக்குமாற்றினால் தெளிப்பது வழக்கம். இப்படிச் செய்வதனால் அவர்கள் தீட்டு நீங்கி, சுத்திகரிப்பினைப் பெற்றுக் கொண்டதாக நம்புகிறார்கள்.

தன் கையிலுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி வாயுள்ள மக்களை ஊமையாகவும், கண்ணுள்ள மக்களைக் குருடர்களாகவும் செயல்படுத்தும் ஆதிக்கவாசிகளுக்கும் ஏனைய மக்களுக்கும் இயேசுவை அறிவித்து விடுதலையின் சத்தியத்தைக் கூறுவது கிறிஸ்துவை அறிந்த மக்களின் தார்மீகப் பொறுப்பாகும். இதனால் அடிமையானோர் அதிகாரிகளாவார். கிறிஸ்துவாகிய ஒளி உலகெங்கும் பிரகாசிக்கும். தேவனின் இராஜ்ஜியத்தை அனைவரும் அலங்கரிப்பார்கள்.

"எல்லா சாதியார் எல்லா கோத்திரம்
எல்லா மொழியும் பேசும் மக்களாம்
சிலுவையின் கீழ் இயேசு இரத்தத்தால்
சீர் போராட்டம் செய்து முடித்தோர்
அழகாய் நிற்கும் யாரிவர்கள்
திரளாய் நிற்கும் யாரிவர்கள்
சேனைத் தலைவராம் இயேசுவின் பொற்றளத்தில்
அழகாய் நிற்கும் யாரிவர்கள்."

4

சுவிசேஷ ஜெபக்குழுவின் வளர்ச்சி
(1964 - 1977)

"அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படா விட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்?" (ரோமர் 10 : 14-15)

குமரிப் பேராயத்தில் உருவான சுவிசேஷ அலை இதுவரைக்கும் பணித்தளங்களைப் போய் எட்டவில்லை. சுவிசேஷ ஜெபக்குழுவினர் ஜெபித்து, காத்திருந்து பெலன் பெற்றவர்கள். முட்டையை விட்டு விட்டுக் கோழிக்குஞ்சு பறப்பதுபோல், மிஷனெறி வாஞ்சை கொண்ட மக்கள் எத்தகைய கடினப் பணிக்கும் தயாரானார்கள். இருமுறை பணித்தளப் பயணங்கள் மேற்கொண்ட குழுவினர் மூன்றாம் முறையும் பயணம் செல்லப் புறப்பட்டனர். காலமெல்லாம் காத்திருக்கும் நம் தாய்நாட்டின் மலைப் பகுதிகளில் வாழும் மக்கள் கிறிஸ்துவாகிய ஒளியைப் பெறப் போகிறார்கள் என்ற அர்த்தமுள்ள பயணம் இதுவாகும்.

1. மலையை நோக்கிப் பயணம்

1963-ஆம் ஆண்டு பெப்ருவரி 7-ஆம் நாள் குமரிப் பேராயத்திலிருந்து திரு. டி. எலியாஸ், திரு. எம். இராஜையன், திரு. ஜெ.ஜெ. அர்னால்டு, திரு. எஸ். ரெத்தினராஜ், திரு. போவான், திரு. கமாலியேல், திரு. எஸ். பிரின்ஸ் ஆகிய ஏழு நபர்களும், திருச்சியிலிருந்து திரு. தனராஜ், திருமதி. தனராஜ், திரு. ஜோசப் உபதேசியார் ஆகிய மூன்று நபர்களும் இணைந்து மலைவாழ் மக்களைச் சந்திக்கச் சென்றனர். முதல்நாள் அவர்கள் பச்சைமலைக்குச் சென்று திருமதி. எவ்லின் பிராண்ட் அம்மையாரைச் சந்தித்து விட்டு, இரு குழுக்களாகப் பிரிந்தனர். ஒரு குழுவினர் திரு. டி. எலியாஸ் அவர்களின் தலைமையில் பச்சைமலை, பெரிய கல்ராயன் மலை, போத மலைப் பகுதியில் வாழ்ந்த ஆதிவாசி மக்களைச் சந்தித்து ஒருவாரம் அங்கே தங்கி ஊழியம் செய்தனர். அப்போது எவ்லின் பிராண்ட் அம்மையாரும் அவர்களுடன் இருந்தார். மலையில் விழுந்ததால் ஊனமுற்ற கால்களைப் பெற்றிருந்த பிராண்ட் அம்மையார் தினமும் காலை ஐந்து மணிக்குப்

பனி, குளிர் என்று பாராமல் இரண்டு ஊன்றுகோல்களின் உதவியுடன் கிராமங்களுக்குச் சென்று விடுவார்கள். இக்குழுவினர்களிடம் அவ் அம்மையார், "பார், மேய்ப்பன் இல்லாத இந்த ஆடுகளுக்கு இயேசு கிறிஸ்துவைச் சொல்லுங்கள்" என்று கூறினார்கள். மேல்நாட்டைச் சேர்ந்த அவ் அம்மையாரின் தியாகம், வாழ்வு, ஆத்துமபாரம், மக்கள் மேல் கொண்ட கரிசனை ஆகியன இக்குழுவினர்களை ஆழமாகச் சிந்திக்க வைத்தன. இவர்களின் ஊழியத்தின் மூலம் மக்கள் பிசாசின் கட்டுகளிலிருந்தும் கொடிய வியாதிகளிலிருந்தும் விடுதலை வாழ்வினைப் பெற்றனர்.

மற்றொரு குழுவினர் திரு. எம். இராஜையன் தலைமையில் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலைக்கும், கோவை மாவட்டத்திலிருக்கும் ஊசி மற்றும் பர்கூர் மலைகளுக்கும் சென்றனர். அப்போது ஒருநாள் இரவுப் பொழுதில் ஜவ்வாது மலையிலுள்ள பெரிய கிராமம் ஒன்றுக்குச் சென்று பாடல்களைப் பாடினர். உடனே 300-க்கு அதிகமான மக்கள் வந்து கூடினர். அப்போது திரு. எம். இராஜையன் அம்மக்களிடம், "இயேசு உங்களை நேசிக்கிறார். அவர் சகல அதிகாரமுடையவர். அவர் அற்புதம் செய்வார். உங்கள் வாழ்வை மறுரூபப்படுத்துவார். அவரைச் சோதித்துப் பாருங்கள்" என்று செய்தி கூறி அறைகூவல் விடுத்தார்.

அ. பாவாடை ஆசாரியின் மனமாற்றம்

திரு. எம். இராஜையன் அவர்கள் கொடுத்த செய்தியைக் கேட்ட பாவாடை ஆசாரி என்பவர் (கீழ் நாட்டிலிருந்து வந்து மலைமேல் வாழ்பவர்) இரண்டு கால்களும் பெலன் இழந்த தன் மகளைச் செய்தி கூறிய இராஜையன் முன் நிறுத்தி, "இவளுக்குச் சுகம் தா, உன்னையும் நீ சொல்லும் இயேசுவையும் நம்புவேன் என்றும், இதற்கு முன் ஒரு பேர்பெற்ற பிரசங்கியார் நடத்திய கூட்டத்தில் மூன்று தடவைகளில் இப்பிள்ளையை அழைத்துச் சென்றேன். அவரால் குணப்படுத்த முடியவில்லை. நீ மட்டும் தான் அவரைச் சோதித்துப் பார் என்று சொல்கிறாய், நான் அவரைச் சோதிக்கத் துணிந்து விட்டேன்" என்றும் கூறினார். அந்நபர் சாராயம் குடித்துவிட்டு வந்திருந்தார். கையில் அனேகம் பீடிகள் இருந்தன. அவரிடமிருந்த பீடிகளை எடுத்துவிட்டு, மதுபானம் குடிக்காமலிருக்கவும், வேத வசனங்களின்படி நடக்கவும் ஆலோசனை கூறி அனுப்பினர். கூட்டம் இரவு 12.30 மணிக்கு நிறைவுற்றது.

மறுநாள் விடியற்காலை ஐந்து மணிக்கு ஊழியர்கள் தங்கள் வழக்கப்படி எழுந்து காலை ஜெபத்திற்காகப் பாடல்களைப் பாடினர். அப்போது பாவாடை ஆசாரி, கால் பெலனிழந்த தன் மகளை அழைத்து

வந்து கதவைத் தட்டினார். இக்குழுவினரைப் பார்த்து, கடவுள் என் பிள்ளைக்குச் சுகம் தராவிட்டாலும், நான் அவர் பிள்ளையாக மாறி விட்டேன். என்னிடம் காணப்பட்ட கெட்டப் பழக்கங்கள் அனைத்தையும் இரவிலேயே விட்டு விட்டேன். இயேசு ஜீவனுள்ளவர், இயேசு வெற்றி தந்தார் என்று கூறி மகிழ்ந்தார். பாவாடை ஆசாரியிடம் ரூபாய் கடன் வாங்கிய ஒருவர் 14 வருடங்களாகியும் கடனைத் திரும்பக் கொடுக்காமல் இருந்தார். திடீரென அன்று இவர் கேட்காமலேயே, வாங்கிய கடனை அந்நபர் திருப்பிக் கொடுத்து விட்டார். அந்த ரூபாயை சாராயம் குடிப்பதற்காக மகிழ்ச்சியுடன் செல்லும் வழியில் இயேசு அவரைக் குறுக்கிட்டு, 'நீ இயேசுவின் பிள்ளை என்றால், குடிக்கலாகாதே" என்றாராம். உடனே அச் சத்தத்திற்கு அவர் கீழ்ப்படிந்து திரும்பி வந்து தன் அனுபவத்தை இக்குழுவினரிடம் பகிர்ந்து கொண்டுள்ளார்.

எட்டு மாதங்கள் கழிந்த பின்னர், திருப்பத்தூர் ஆசிரமத்திலிருந்து டாக்டர். பேற்றன் தலைமையில் ஒரு குழுவினர் நற்செய்தியை அறிவிக்கவும், மருத்துவ உதவி செய்யவும் அம்மலைக்குச் சென்றிருந்தனர். அதன் பின்னர் டாக்டர். பேற்றன், இராஜையனுக்கு எழுதியிருந்த கடிதத்தில், ஜவ்வாது மலைக்கு நாங்கள் சென்றிருந்தபோது, பாவாடை ஆசாரி எங்கள் கூட்டத்தில் சாட்சி கூறினார். அவர் உங்கள் ஊழியத்தின் பயனாய் இரட்சிக்கப்பட்டிருக்கிறார். இன்று வெற்றியாக வாழ்ந்தும் வருகிறார் என்று குறிப்பிட்டிருந்தார்.

ஜவ்வாது மலைப் பகுதிகளைச் சுற்றி முடித்த பின் அக்குழுவினர் கோவை மாவட்டத்திலுள்ள ஊசிமலை மற்றும் பர்கூர் மலைப் பகுதிகளைச் சந்திக்கச் சென்றனர். அப்பகுதிகளில் யானைகளின் நடமாட்டம் அதிகமாகவே இருப்பது வழக்கம். சுவிசேஷ குழுவினருக்குத் தேவையான உணவு மற்றும் கம்பளி போன்றவைகளை மலைமேல் செல்லும் லாறியில் ஏற்றிக் கொண்டு செல்ல குழு அங்கத்தினர்களில் ஒருவர் பொறுப்பாக்கப்பட்டார். அன்றைய நாள் வழியினை யானைகள் மறித்து நின்றதால் லாறி மலைமேல் செல்லவில்லை. இதனால் ஊழியக் குழுவினரின் உணவு மற்றும் உடைகள் மலைக்கு வந்து சேரவில்லை. பசியடைந்த சுவிசேஷக் குழுவினர் ஓடைகளிலிருந்து தண்ணீரைப் பருகிக் கொண்டு மலைமேல் ஏறிச் சென்றனர்.

ஆ. அனல்காற்று வீசியது

மலையின் முதல் கிராமத்தைச் சென்றடைந்ததும், ஆங்கு இருந்த ஒரு பள்ளியின் ஆசிரியர் இக் குழுவினரை ஏற்றுக்கொண்டு தங்குவதற்கு இடமளித்தார். இரவு நேரத்தில் ஒரு கிராமத்தில் சுவிசேஷ ஊழியம் நடைபெற்றது. அப்பகுதியில் யானைகள் வந்து பிளிறியதால், கூட்டத்தினர்

கலைந்து சென்று விட்டார்கள். சுவிசேஷக் குழுவினரைக் கடவுள் அற்புதமாய்க் காத்துக் கொண்டார். பின்னர் அப்பள்ளி ஆசிரியர் அரிசி வாங்கி சமைத்து இக்குழுவினருக்கு இரவு உணவளித்து உபசரித்தார். இரவு நேரத்தில் கடுமையான குளிர் அனைவரையும் வாட்டியது. உடனே அவ்வாசிரியர் வீட்டில் வைக்கோல் புல் பரப்பி, அதன்மேல் துணிகளை விரித்து, தூங்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தார். குளிரின் கொடுமையைக் குறைக்க இரண்டு பெட்ரோமாக்ஸ் விளக்குகளை எரிய வைத்திருந்தார். இரவு 12.00 மணிக்கு கடவுள் அனல்காற்றை வீசச் செய்தார். காலை 6.00 மணிக்கு அக்கிராம மக்கள் அவ்வாசிரியரிடம் வந்து, "என்ன சார்! நேற்று ராத்திரி ஒருநாளும் இல்லாத அனல் இருந்தது" என்று கேட்டனர். பதிலுரையாக ஆசிரியர், "கடவுள் பிள்ளைகள் உங்களைச் சந்திக்க வந்தார்கள், லாறி வராமையால் அவர்களது உணவு மற்றும் துணிகள் வந்துசேரவில்லை, அவர்கள் போர்த்திக் கொள்ள கம்பளி இல்லாததால் கடவுள் அவர்களுக்காக அனல்காற்றை அனுப்பினார்" என்று சாட்சி கூறினார்.

இ. வியாபாரியின் சுவிசேஷ வாஞ்சை

சுவிசேஷக் குழுவினருடன் திருச்சியிலுள்ள திரு. தனராஜ் மற்றும் அவரது துணைவியாரும் சென்றிருந்தனர். ஊழியத்தை முடித்துத் திரும்பும் வேளையில் முன்னர் செய்திருந்த ஒழுங்கின்படி இரு குழுவினர்களும் திருச்சியில் ஒன்றாய்ச் சந்தித்து அங்குள்ள சகல புனிதர்கள் ஆலயத்திற்குச் சென்றனர். அங்கு ஒரு காட்சியைக் கண்டனர். அவ் ஆலயத்தின் பலிபீடத்தின் முன்னால் கால் முதல் தலைவரை மூடி அசைவின்றி ஓர் அம்மா கவிழ்ந்து படுத்திருந்தார். அவர்கள் காய்கறி வியாபாரம் செய்து வயிறு பிழைப்பவர்கள். மாலை 4.30 முதல் 5.30 வரை வியாபாரம் அதிகமாக நடைபெறும். அவ்வேளையில் இவ்வம்மா ஆலயத்தில் வந்து திருச்சபைப் பணிகள், சுவிசேஷ ஊழியம், மிஷனெறிப் பணிகள் மக்களது ஆன்மீக மீட்பு இவைகளுக்காகப் பாரத்துடன் ஜெபித்து வந்தார்கள். மலையிலிருந்து இறங்கி வந்த அக்குழுவினர், இக்காட்சியைப் பார்த்து, தாங்களும் ஊக்கமாக ஜெபித்து, 'இந்த அம்மாவின் ஜெப வாஞ்சை எங்களையும் பற்றிப் பிடிக்கட்டும்' என வேண்டினர்.

அதன் பின்னர் அனைவரும் நாகர்கோவில் வந்து சேர்ந்தனர்.

2. மலை தரிசனக் கூடுகைகள்

சுவிசேஷ ஜெபக்குழுவின் ஆரம்பகால உறுப்பினர்கள் ஒவ்வொரு மாதமும் சபைகள், நிறுவனங்கள், விசுவாசிகளின் இல்லங்கள் எனத் திட்டமிட்டுச் சந்தித்து, மலை மக்களின் அவல நிலையினை

எடுத்துரைத்து வந்தனர். இதனைக் கேட்ட மக்களில் பலரும் சுவிசேஷ ஊழியத்தின் தரிசனத்தையும், பாரத்தையும் தங்களுடையதாகவே கொண்டனர். எல்லா இடங்களிலும் கரிசனையாக முழங்காலூன்றி ஜெபிக்கும் குழுக்கள் உருவாயின. முடிவில் ஈகையால் ஊழியத்தைத் தாங்க முன்வந்த ஜெபக் குழுக்களும், தனியார்களும் நாளுக்கு நாள் பெருகினர்.

தனியார் இல்லங்கள் கூட மிஷனெறி ஜெபக்குழுவிற்குரிய அறைகூவல் மையங்களாயின. தென்கொரியா, இந்தோனேஷியா போன்ற நாடுகளில் எழுப்புதல் தீ பற்றிப் பரவ எவ்விதம் மக்கள் ஊக்கமாக ஜெபித்தார்களோ, அவ்விதம் குமரிப் பேராய மக்களும் குறிக்கோளுடன் எழுப்புதலுக்காகவும், ஊழியத்திற்காகவும் ஜெபித்தார்கள். ஜெபித்தவர்கள் திட்டமிட்டார்கள். திட்டம் வளர்ச்சிக்கான இலக்காக அமைந்தது.

3. மலைப்புற பணி ஆதரவுகள்

மலைவாழ் மக்களைக் குறித்த கூடுகைகள் மூலம் தரிசன செய்திகள் வேகமாகக் கொடுக்கப்பட்டன. இதனால் ஏவப்பட்ட நல்லுள்ளங்களில் பலர் காணிக்கைகளை ஊழியத்திற்காகக் கொடுத்தனர். இவ்விதம் சேகரித்த நிதிகளை 30-08-1962-ஆம் நாள் முதல் பெத்தேல்புரம் தபால் அலுவலகத்தில் சேமிப்புக் கணக்கில் வைத்தனர். ஜெபக்குழுவின் வளர்ச்சியிலும் ஊழியத்திலும் ஆர்வம் கொண்டிருந்த கொடையாளர் களுக்கு 02-10-1962 முதல் நிதி வசூல்செய்யும் உண்டியல்கள் கொடுக்கப் பட்டன. அவ்வுண்டியலில், உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள் தோறும், தன் தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன் (I கொரி 16:2) என்ற வசனம் அச்சிட்டு ஒட்டப் பட்டிருந்தது. மேலும் குறிப்பிட்ட காலந்தோறும் உதவி செய்பவர்களுக்கு வாக்குறுதி அட்டைகளும் (Pledge Card) கொடுக்கப்பட்டு வந்தன.

நிதிவசூல் செய்யும் திட்டத்தில் 13-07-1963 முதல் அதிகாரபூர்வமான ரெசீதுகள் கொடுக்கப்பட்டன. பேராயர் ஐ.ஆர்.ஹெச் ஞானதாசன் அவர்களின் ஆலோசனைக்கேற்ப தபால் அலுவலகச் சேமிப்பு நிதியை, **சுவிசேஷ ஜெபக்குழு மலைநாட்டு ஊழியம்** என்ற பெயருக்கு மாற்றினர். 14-01-1964 முதல் பேராய அலுவலகத்தில் இந்நிதி சேமிப்பு நிதியாக வைக்கப்பட்டது. இதன்பிறகு நாகர்கோவில் திரு. மேசியதாஸ் அவர்கள் ரூ. 4000-த்தை ஜாண் பிரடரிக் மோஸஸ் நினைவு வைப்பு நிதியாக 27-05-1966-ல் பேராய அலுவலகத்தில் வைத்தார்கள்.

மலைநாட்டு சுவிசேஷ ஜெபக்குழு

சுவிசேஷ ஜெபக்குழுவின் பணிகள் மலைவாழ் மக்களையே அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டதால் அனைவரும் இதனை

மலைநாட்டு ஊழியம் என அழைத்தனர். 13-01-1967 முதல் மலைநாட்டு சுவிசேஷ ஜெபக்குழு என்ற பெயரில் இயக்கத்தவர்களாலும் அழைக்கப்படலாயிற்று.

அ. சீயோன்புரம் திருச்சபை

கிறிஸ்துவின் அன்பை ருசித்த சபைகள், அடுத்த பரிணாம வளர்ச்சிக்குச் சென்றன. குமரி மாவட்டத்திற்கு வருகை தந்த முதல் மேலைநாட்டு சீர்திருத்த மிஷனெறி றிங்கல் தௌபே அவர்கள் எழுப்பிய திருச்சபைகளில் ஒன்று சீயோன்புரம் சபையாகும். இச்சபை பேராய சுவிசேஷ ஜெபக்குழு சார்பில் முதன் முதலாக ஒரு மருத்துவ தாதி மிஷனெறியை ஆதரிக்க 01-06-1970 முதல் முன் வந்தது. இதற்குப் போதகர் எம். இராஜையன் அவர்களின் தூண்டுதல் மிக முக்கிய காரணமாகும். இதனைக் கேள்விப்பட்ட பல சபைகள் மற்றும் ஜெபக் குழுக்கள் சுவிசேஷ வாஞ்சை பெற்றன.

ஆ. மிஷனெறிகளைத் தாங்கிய குழுக்களும் சபைகளும்

1970-ஆம் ஆண்டிலேயே நெய்யூரைச் சேர்ந்த திருமதி. இராஜம்மாள் அவர்கள் ஓர் ஊழியருக்கான ஊதியத்தில் ஒரு பகுதியினைக் கொடுத்தார்கள்.

நாகர்கோவில் சபையின் மிஷனெறிக்குழு ஓர் ஊழியருக்காகும் ஆதரவு நிதியினைக் கொடுத்தது. 1972-ல் சி.எம்.எஸ். நிறுவனம் ஓர் ஊழியரது ஆதரவு நிதியைக் கொடுத்தது. மார்த்தாண்டம் திருச்சபை ஒரு தாதியர் மிஷனெறிக்குரிய உதவியைச் செய்தது. நாகர்கோவில் கஸ்பா சபை மேலும் ஓர் ஊழியரையும் வீரப்பனூர் பணிக் களப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டது. குமரிப் பேராயத்தில் ஒரு பணிக்களத்தின் பொறுப்பை முதலாவது ஏற்றெடுத்த பெருமை நாகர்கோவில் கஸ்பா ஆலயத்தையே சார்ந்தது. மத்திகோடு திருச்சபை ஓர் ஊழியரின் ஊதியத்தில் ஒரு பகுதியையும் குமாரபுரம்தோப்பூர் திருச்சபை ஓர் ஊழியரின் ஊதியத்தில் பெரும் பகுதியையும் கொடுத்து ஆதரித்தன.

1973 முதல் மூலச்சல் திருச்சபையும் 1974 முதல் கருங்கல், கோட்டையடி , நெய்யூர் ஆகிய திருச்சபைகளும் ஓர் ஊழியருக்கான முழு நிதியினைக் கொடுத்தன. அருள்திரு. எ. மாசில்லாமணியும் அவரது சகோதரர்கள் பாலையன், ஜெஸ்டின் ஆகியோர் இணைந்து ஒரு மிஷனெறியைத் தாங்கினார்கள். சீயோன்புரம் போதகாதீன சபைகள் இணைந்து ஒரு மிஷனெறியைத் தாங்கின. கல்லுக்கூட்டம் சபை, புத்தளம் சபை, குளத்துவிளை சபை, தேவிகோடு சபை ஆகியவை ஓர் ஊழியருக்கான ஊதியத்தில் ஒரு பகுதியைக் கொடுக்க முன்வந்தன.

1975 முதல் கோட்டாரத்தில் வசித்த சீயோன்புரத்தைச் சேர்ந்த திரு. டி.கே. தாஸ், மருதங்கோட்டைச் சேர்ந்த திரு. சி. சத்தியதாஸ் ஆகியோர் ஒவ்வொரு மிஷனெறிக்கான முழு நிதியினையும் கொடுத்தார்கள். அதே காலத்தில் குளச்சல் சபை, களியங்காடு சபை ஆகியவையும் ஒவ்வொரு மிஷனெறியைத் தாங்கின. இவை தவிர பல்வேறு சிறப்புக் காணிக்கைகளாலும், ஜெபக்குழுக்களின் சிறுசிறு நிதி உதவிகளாலும் மிஷனெறி ஊழியம் வளர்ச்சிப் பாதையில் சென்றது. மக்களில் பலர் மிஷனெறி தரிசனம் பெற்றனர்.

4. பிற மிஷனெறி இயக்கங்களுடன் தொடர்பு

அ. ஹில் காஸ்பல் மிஷன் (Hill Gospel Mission)

மருத்துவர் ஜெசிமென் பிராண்ட் தம்பதியினர் நியூ டிரைப் மிஷன் (New Tribe Mission) என்ற சங்கத்தின் ஆதரவுடன் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் நற்செய்திப் பணியாற்றி வந்தனர். அவர்கள் நடத்திவந்த ஊழியத்தைத் தொடர்ந்து கட்டியெழுப்ப, ஆத்தும பாரமும் தரிசனமும் பெற்ற ஊழியர்கள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இதனால் அவர்கள் தாங்களே வளர்த்து ஆதரித்து வந்த ஒருசில விசுவாசிகளைக் கொண்டு அவ்வூழியத்தைத் தொடரத் தீர்மானித்தார்கள். அப்போது நியூ டிறைப் மிஷன் என்ற பெயர் 'ஹில் காஸ்பல் மிஷன்' (Hill Gospel Mission) என மாற்றப்பட்டது.

நாகர்கோவில் பகுதியைச் சேர்ந்த கிறிஸ்துதாஸ் என்பவர், அவ்வம்மையாருக்கு உறுதுணையாக நின்று அவ்வூழியத்தைத் தொடர்ந்து நடத்தும் நோக்குடன் 1964-ஆம் ஆண்டு அம்மிஷனில் சேர்ந்தார்கள். பின்னர் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவை அணுகி மலை மக்களுக்கு ஊழியம் செய்ய அழைப்புப் பெற்ற ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களை அம்மிஷனுக்கு அனுப்பிக் கொடுக்க வேண்டினார்கள். அவ்வூழியத்திற்குச் செல்லச் சம்மதித்த சில ஊழியர்களைச் சுவிசேஷ ஜெபக்குழுவும் ஹில் காஸ்பல் மிஷனுக்கு அனுப்பிக் கொடுத்தது. அவர்களது முழுப் பொறுப்பையும் அம்மிஷனே ஏற்றுக் கொண்டது.

ஹில் காஸ்பல் மிஷன் மூலம் நடைபெறும் ஊழியத்திற்குச் செல்லத் தீர்மானித்து முன்வந்த திரு. எஸ். ரெத்தினராஜ் (பெத்தேல்புரம்) ஆரோன் (காட்டாத்துறை) தேவதாசன் (பாகோடு) ஆர்ச்பால் (ஐரேனிபுரம்) ஆகிய நான்கு குடும்பங்களை 19-07-1964 அன்று பேராயர் ஐ.ஆர். ஹெச். ஞானதாசன் அவர்கள் நாகர்கோவில் ஆலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்தார்கள். அவர்களைப் பணிக்களங்களில் அமர்த்திட திரு. எம். இராஜையன் அவர்கள் அழைத்துச் சென்றார். மீண்டும் அம்மிஷனுக்கு 1965 பெப்ருவரியில் மூன்று ஆசிரியர்கள் அனுப்பப்பட்டார்கள்.

கிறிஸ்துவின் பணியை நிறைவேற்றும் ஆர்வத்துடன் மலைப் பகுதிக்குச் சென்ற இவ்வாசிரியர்களின் தொண்டு பாராட்டுதலுக்குரியது. கண்மூடித்தனமாக ஏதோ செய்தேன் என்பதை விட, வேதத்திற்குக் கீழ்ப்படிந்து பணியாற்றினேன் என்பதே உத்தமமாகும்.

ஆ. கிறிஸ்தவ அருட்பணி இயக்கம் (Christian Mission Service)

சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைவர் பேராயர் ஐ.ஆர்.ஹெச் ஞானதாசன் அவர்கள் கரிசனைமிக்க ஜெபக்குழுவின் ஊழியங்களை சி.எம்.எஸ். சங்கத்திற்கு அறிமுகப்படுத்தினார்கள். அச்சமயம் ஜெபக்குழு ஊழியங்களோடு அதிக ஈடுபாடுள்ளவரும் ஆரம்பகால ஜெபக்குழு அங்கங்களில் ஒருவரான திரு. எஸ். இரத்தினராஜ் அவர்கள் சி.எம்.எஸ்சின் தடிக்காரன்கோணம் குழந்தைகள் காப்பகத்தில் பணிபுரிந்து வந்தார்கள். இரத்தினராஜ் அவர்கள் ஜெபக்குழு ஊழியத்தின் மேம்பாட்டையும், தியாகத்தையும் தன்னுடன் பணியாற்றும் அதிகாரிகளுக்கும், மேலாளர்களுக்கும், கல்வி கற்கும் சிறுவர்களுக்கும் எடுத்துரைத்தார்கள். இதனால் மனம் ஈர்க்கப்பட்ட காப்பகங்களின் மேலாளர்களும் சி.எம்.எஸ்-சின் தலைமைப் பொறுப்பாளர் உயர்திரு. கவுஸ்கி அவர்களும் இணைந்து ஓர் ஊழியருக்கான ஊதியத்தைச் சுவிசேஷ ஜெபக்குழுவிற்குக் கொடுக்க முன்வந்தார்கள். நற்செய்தி கூறும் ஆவல் மேலும் அதிகரித்த தால் நான்கு ஊழியர்கள் தொடர்ந்து வந்த நாட்களில் தாங்கப்பட்டார்கள்.

இ. கோவைப் பேராய ஆதிவாசிகள் ஊழியம்

நீலகிரி மலைப் பகுதியில் வாழ்ந்து வந்த ஆதிவாசிகள் மத்தியில் கோவைப் பேராயம் தன் பணியைச் செய்து வந்தது. அப்பொறுப்பை அருள்திரு. ஜெ. நதானியேல் அவர்கள் ஏற்று நடத்தி வந்தார்கள். திடீரென நதானியேல் அவர்கள் சுகவீனமடைந்தார்கள். அப்போது அவருக்குத் துணையாகச் செயல்பட குமரிப் பேராய ஜெபக்குழுவிலிருந்து ஒருவரை அனுப்ப, கோவைப் பேராயம் கேட்டுக் கொண்டது. பேராயர் ஐ.ஆர். ஹெச் ஞானதாசன் அவர்கள் 03-09-1966-ல் நடைபெற்ற சுவிசேஷ ஜெபக் குழுவின் தீர்மானப்படி, திரு. எம். இராஜையன் என்பவரை 15-01-1967-ஆம் நாள் குழித்துறை ஆலயத்தில் வைத்து அர்ப்பணித்து அனுப்பினார்.

நீலகிரி மலைகளில் வாழ்ந்து வந்த பணியர், இருளர், குறும்பர், மலைச் செட்டிகள், சோலை நாயக்கர், படுகர் ஆகிய மக்கள் நடுவில் ஊழியம் நன்முறையில் நடைபெற்று வந்தது. அந்நாட்களில் களப் பணியைப் பார்வையிட குமரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. எஸ். இரத்தினராஜ், திரு. வி. இம்மானுவேல் ஆகியோர் சென்றனர். ஊழியத்தின் தேவையை உணர்ந்த இவர்கள், அதில் இணைய ஆர்வம் தெரிவித்தனர். ஆனால் சுவிசேஷ ஜெபக்குழு எஸ். ஆபிரகாம் என்பவரை விவசாயப்

பணிக்கு அனுப்பும்படி ஒழுங்கு செய்தது. இந்நிலையில் கோவைப் பேராயம், நாங்கள் தன்னிறைவு பெற்று விட்டோம், பிறர் வருகை எங்களுக்குத் தேவையில்லை என்று கூறியது. உடனே பேராயர் ஆ.ஆர். ஹெச் ஞானதாசன் அவர்கள் இருவருடம் பணியாற்றிய எம். இராஜையன் அவர்களைத் திரும்ப அழைத்தார்கள்.

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவோடு கோவைப் பேராயத்தின் தொடர்பு குறுகிய காலமே ஆகும். எனினும் அத்தொடர்பு மலைகளில் தன் காட்சியை விரிவுபடுத்தியது. இதனை அறிந்த கோவைப் பேராயம், தனது மிஷன் போர்ட் அமைப்பு மூலம், மிஷனெறிப் பணியை விரிவுபடுத்தத் தொடங்கியது. இறைவார்த்தையை விதைக்க விதைக்க அறுத்துக் கொண்டேயிருப்போம். நாம் எந்த அளவு விதைக்கிறோமோ, அந்த அளவுதான் அறுவடையைக் காண முடியும்.

எ. *இந்திய அருட்பணி இயக்கம்* (Indian Evangelical Mission)

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் இறைப்பணி ஆற்றும் ஓர் இயக்கம் இதுவாகும். பேராய சுவிசேஷ ஜெபக்குழுவானது தன் பணியைத் தமிழ் நாட்டின் மலைப் பகுதியிலேயே விரிவுபடுத்தியது. இக்காலக்கட்டத்தில் வட இந்தியப் பகுதிகளுக்கு மிஷனெறிப் பணியாற்றச் செல்ல ஆர்வம் கொண்டவர்களும் சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு மனு செய்தார்கள். ஜெபக்குழு அவர்களை ஊழியத்திற்குத் தேர்வு செய்து. இந்திய அருட்பணி இயக்கத்தின் மூலம் வட இந்தியப் பணித்தளங்களுக்கு அனுப்பியது. இந்திய அருட்பணி இயக்கம் அவர்களை, கர்நாடகம், ஒரிசா, இமாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களிலுள்ள பணிக்களங்களில் அமர்த்தியது. அவர்களுக்குரிய ஊதியத்தைச் சுவிசேஷ ஜெபக்குழு ஐ.இ.எம். மூலமாகவே கொடுத்தது. அருட்பணி இயக்க மேலாளர்களே அவர்கள் பணியையும் மேற்பார்வையிட்டு வந்தனர். அவ்வியக்கத்தின் தலைவர்கள் சுவிசேஷ ஜெபக்குழுவின் அழைப்பிற்கேற்ப தியானக் கூட்டங்கள் நடத்தவும். நிதி திரட்டவும் ஒத்துழைப்புக் கொடுத்து வந்தார்கள்.

நான் பயணப்படும் பாதை எதுவென எனக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் என்னை வழிநடத்துபவர் யாரென எனக்கு நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். இத்தகைய அர்ப்பண நிலைக்கு உருவாகின்றவர்களாலேதான் உலகில் எதையாவது சாதிக்க முடியும்.

சத்ய வேதமான விதை காலை மாலை
விதைப்போம் எப்போதும் ஓய்வில்லாமலே
அறுப்பின் நற்காலம் எதிர்நோக்குவோமே
சேருவோம் எல்லோரும் அரிக்கட்டோடே

5

சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு உதவிய அமைப்புகள்

"நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும் பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (I பேதுரு 2:10)

இஸ்ரவேலின் சிறந்த இராஜாவாகத் திகழ்ந்த தாவீதின் ஆரம்பகாலப் பணி ஆடு மேய்த்தலாகும். அந்நாட்களில் அவன் சிங்கத்தைக் கொன்றதும், கரடியைக் கொன்றதும், கோலியாத் என்ற மாமிச மலையைக் கொன்றதும், காட்டில் அவன் நடத்திய ஒத்திகைகள் என்றே கூற வேண்டும். பிற்காலத்தில் சவுலைக் காட்டிலும் சிறந்த போர்வீரன் என்ற பெயரைத் தாவீது பெற்றான். அதுபோல, சுவிசேஷ ஜெபக்குழுவின் மலைப்புறத் திருப்பணியில் முனைப்புடன் செயல்படச் செல்லும் சேனை வீரர்களுக்கு இறையியல் பயிற்சி தேவைப்பட்டது. அதனைப் பல்வேறு அமைப்புகள் கொடுத்தன.

1. இறையியல் கல்லூரிகள்

அ. தென் இந்திய இறையியல் கல்லூரி

மலை மக்களிடம் நற்செய்திப் பணியாற்றத் தெரிந்தெடுக்கப்பட்ட மிஷனெறிகளுக்கு நல்ல தரமான ஊழியப் பயிற்சியைக் கொடுக்க சுவிசேஷ ஜெபக்குழு தீர்மானித்தது. அதன்படி திரு. என். விக்டர், திரு. எ. செல்வராஜ் ஆகியோரைத் தெரிவுசெய்து கல்லூரிச் செலவிலேயே இறையியல் கல்வி அளித்திட, தென்னிந்திய இறையியல் கல்லூரியை ஜெபக்குழு கேட்டுக் கொண்டது. இவ்வேண்டுகோளை அக்கல்லூரியின் முதல்வர் அறிவர் சி.எஸ். டூயி மற்றும் ஆசிரியர்க் குழுவினர் ஏற்றுக் கொண்டனர். அதன்படி மிஷனெறிகளுக்கு இலவசப் பயிற்சி கொடுக்கும் பொறுப்பினை 1969 முதல் ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து அனுப்பப்பட்ட வேறு சில ஊழியர்களுக்கும் இலவசமாய்ப் பயிற்சி கொடுத்தனர். அதோடு

ஊக்கமான ஜெபத்தாலும் மலைமக்கள் ஊழியத்தைத் தாங்கினர். சிலவேளைகளில் அக்கல்லூரி நிதி உதவியும் செய்துள்ளது. சுவிசேஷ ஜெபக்குழு என்ற அமைப்புத் தொடங்கப்படுவதற்கு ஆதிகாரணமானதும் இக்கல்லூரியே ஆகும். இக்கல்லூரி கர்நாடக மாநிலம் கோலார் மாவட்டத்தில் பங்காரப்பேட்டை என்னுமிடத்தில் செயல்பட்டு வருகிறது.

ஆ. *பெத்தேல் வேதாகம நிலையம்* (Bethel Bible Institute)

தமிழ்நாட்டிலுள்ள சேலம் மாவட்டம் தீவட்டிப்பட்டி சமீபம் டேனிஷ் பேட்டையில் இயங்கிவரும் பெத்தேல் என்னும் சமூகசேவை நிறுவனத்தின் ஒரு பகுதியாகப் பெத்தேல் வேதாகம நிலையம் இயங்கி வருகிறது. கிராமங்களில் வாழ்ந்துவரும் மக்களுக்கேற்ற முறையில் நற்செய்தி அறிவிக்கும் பயிற்சி இங்கு அளிக்கப்படுகிறது. சுவிசேஷ ஜெபக்குழுவின் மிஷனெறிகளுக்கு இப்பயிற்சி மிக அவசியம் என்பதை உணர்ந்த ஜெபக்குழுவினர், இந்நிலையத்தைத் தொடர்பு கொண்டனர். அதன் தலைவர்களான திரு. பி. சாமுவேல், அருள்திரு. மோகன் மற்றுமுள்ள பொறுப்பாளர்கள் சுவிசேஷ ஜெபக்குழுவின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, ஜெபக்குழு அனுப்பிய ஜாண்சன், பாலையன் ஆகிய மிஷனெறிகளுக்குக் கட்டணமின்றி சிறந்தமுறையில் பயிற்சி அளித்தார்கள். இது சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழிய வளர்ச்சிக்குப் பேருதவியாக அமைந்தது.

இ. *திருமறையூர் இறையியல் கல்லூரி*

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாசரேத் என்னும் ஊரின் அருகிலுள்ள திருமறையூரில் இக்கல்லூரி இயங்கி வந்தது. குமரிப் பேராயத்திலிருந்து திரு. எம். இராஜையன் மற்றும் ஜெ.எம். ஜெயசிங் ஆகியோர் 1968-ல் ஒரு சிறப்புப் பயிற்சிக்காக இக்கல்லூரிக்கு அனுப்பப்பட்டிருந்தனர். இவ்விருவரும் இடையிடையே தம்மோடு கூட பயிற்சி பெறுகின்றவர்களுக்கு மலைவாழ் மக்களைக் குறித்தும், சுவிசேஷ ஊழியத்தின் தேவை குறித்தும் எடுத்துக் கூறினார்கள். திரு. எம். இராஜையன் அவர்கள் ஜவ்வாது மலையில் நடைபெற்று வந்த திருப்பணிக்கு உதவுமாறு கல்லூரி முதல்வர் அருள்திரு. சி. செல்வமணி அவர்களுக்கு எழுத்து மூலம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். அதனை முதல்வர், கல்லூரிப் பேராசிரியர்கள் கூட்டத்தில் வைத்தார், வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்படி என்.எம்.எஸ். சங்கம் மூலம் ஜவ்வாது மலையில் ஊழியம் செய்யும் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியர்களைத் தாங்க இக்கல்லூரி முன்வந்தது. சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியர்கள்

அப்பொழுது ஜவ்வாது மலையில் என்.எம்.எஸ். சங்கத்தின் கீழ்ப் பணியாற்றி வந்தனர். கல்லூரியின் இத்தீர்மானம் 14-01-1969 முதல் நடைமுறைக்கு வந்தது.

திருவாளர்கள் இராஜையன், ஜெயசிங் மற்றும் மூலச்சலைச் சேர்ந்த கிறிஸ்டோபர் லேவி ஆகியோர்களின் முயற்சியால் அக்கல்லூரியில் ஒரு ஜெபக்குழு தோற்றம் பெற்றது. 31-01-1969-ஆம் நாள் பகல் 12.00 மணிக்கு அதன் முதல் கூட்டம் நடைபெற்றது. திரு. கிறிஸ்டோபர் லேவி அவ் ஜெபக்குழுவிற்குத் தலைவராகச் செயல்பட்டார். அன்றையத் தினம் ஏழு பயிற்சியாளர்கள் மட்டுமே அதில் பங்கெடுத்தனர். பின்னர் இது மலைப்புறத் திருப்பணி ஜெபக்குழு என்று அழைக்கப்பட்டது. வாரத்திற்கு ஒருநாள் ஒழுங்காக இந்த ஜெபக்கூடுகை நடைபெற்றது.

திருமறையூரில் இயங்கிவந்த இக்கல்லூரி, 1969 ஜூன் மாதம் முதல் மதுரையில் அரசடிக்கு மாற்றப்பட்டது. எனினும் இந்த ஜெபக்குழு நின்றுவிடக் கூடாது என்னும் நோக்கில் முதல்வர் அருள்திரு. சி. செல்வமணி அவர்கள் ஜெபக்குழுவினைத் தொடர்ந்து நடத்த வேண்டுவன செய்தார். பின்னாட்களில் அருள்திரு. சி. செல்வமணி அவர்கள் குமரிப் பேராயராகப் பதவி ஏற்று, பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்குத் தலைவராய்ப் பொறுப்பு வகித்தார்கள்.

ஈ. தமிழ்நாடு இறையியல் கல்லூரி

சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியம், மலைப்புறத் திருப்பணி ஜெபக்குழு ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து மதுரை, அரசரடி தமிழ்நாடு இறையியல் கல்லூரி முதல்வருக்குத் தெரிவிக்கப்பட்டது. அப்பொழுது முதல்வராக இருந்த அருள்திரு. அறிவர். சாமுவேல் அமிர்தம் அவர்கள் அப்பொறுப்பை ஏற்றுச் செயல்படுத்தினார்கள். அக்காலத்தில் திருமறையூர் மலைப்புறத் திருப்பணி ஜெபக்குழுவில் அங்கம் வகித்த ஐந்து பயிற்சியாளர்களும் அதில் இணைந்து கொண்டார்கள். மதுரை, அரசரடிக் கல்லூரியின் பேராசிரியர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் வாரத்தில் ஒருநாள் உபவாசமிருந்து மலைப்புற ஊழியங்களுக்காக ஜெபித்ததுடன், அதில் கிடைத்த காணிக்கைகளையும், மலைப்புறத் திருப்பணிக் குழுவிற்குக் கொடுத்தார்கள். மலை மிஷனெறிகளின் தேவைக்கேற்ப மிதிவண்டியும் கொடுத்து உதவினார்கள். இம்முயற்சிகளுக்குக் கல்லூரி முதல்வர் ஆக்கமும் ஊக்கமும் அளித்தமை பாராட்டுதற்குரியது.

நாளடைவில் ஏராளமான மிஷனெறிகள் சுவிசேஷ ஜெபக்குழு சார்பில் மலைநாட்டு ஊழியத்திற்குச் சென்றார்கள். அவர்களுக்கு ஊழியப்

பயிற்சி கொடுப்பது இன்றியமையாததாகி விட்டது. இச்சூழலில் மிஷனெறிகளுக்கு இலவசமாகப் பயிற்சி கொடுக்க அரசரடி இறையியல் கல்லூரியைச் சுவிசேஷ ஜெபக்குழு கேட்டுக் கொண்டது. கல்லூரி முதல்வர் அருள்திரு. அறிவர் சாமுவேல் அமிர்தம் அவர்களும், சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைவர், பேராயர் ஐ.ஆர். ஹெச். ஞானதாசன் அவர்களும் இணைந்து, கல்லூரியின் பேராசிரியர்கள் மற்றும் பயிற்சியாளர்களது ஒத்துழைப்பைப் பெற்று **அருட்பணி நிறுவனம்** (Missions Institute) என்ற ஓர் அமைப்பை அக்கல்லூரியில் ஆரம்பித்தார்கள். அதற்குச் செலவாகும் நிதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகளையும் கண்டுபிடித்தார்கள்.

சுவிசேஷ ஜெபக்குழுவால் இக்கல்லூரி மூலம் மிஷனெறிப் பயிற்சி பெற்றுக் கொள்வதற்காக திருவாளர்கள் கெ.ஆர். வில்லியம், அருமைநாயகம், எஸ். ஜஸ்டின், எ.சி. நாயகம், டி. ஸ்டான்லி, ஜி. டேவிட் ராமன் ஆகியோர் முதன்முதலாக அனுப்பப்பட்டார்கள். சுவிசேஷ ஜெபக்குழுவின் நிதி உதவியை எதிர்பார்க்காமல் இக்கல்லூரி சிறப்பான பயிற்சியைக் கொடுத்தது. இதனைப் பேராயர் ஐ.ஆர்.ஹெச் ஞானதாசன், "அரசரடி இறையியல் கல்லூரியில் மிஷனெறிகளுக்காக சிறப்புப் பயிற்சி கொடுக்கும் புதிய வசதிகள் நிரந்தரமாக உருவாக்கப்பட வேண்டும். அதைக்குறித்து ஜனுவரித் திங்களில் விரிவான ஆய்வு சென்னையில் நடைபெறும். மேலைநாட்டுத் திருத்தொண்டர்களும் இதில் கலந்துகொள்வர். பின்னர் நமது பேராயத்திலும் ஒரு மகாநாடு நடக்கும் என்று எதிர்பார்க்கிறோம்" என்று எழுதியிருந்தார்கள். பேராயரின் தொலைநோக்குத் திட்டம் பாராட்டுதலுக்குரியது.

தமிழ்நாடு இறையியல் கல்லூரியில் இதர பேராயங்களிலிருந்து வந்து பயிற்சிப்பெற்று வந்தவர்களில் சிலர் ஜவ்வாது மலையிலுள்ள பணித்தளங்களைச் சந்திக்கச் சென்றார்கள். அதற்கான செலவைச் சுவிசேஷ ஜெபக்குழு சந்திக்க வேண்டுமென்று வேண்டுதல் கொடுத்தார்கள். 12-03-1970-ல் கூடிய சுவிசேஷ ஜெபக்குழு அவ்வேண்டுகோளைப் பரிசீலித்து, அவர்களையும் இவ்வூழியத்தில் ஈடுபாடு கொள்ளச் செய்யும் நோக்குடன் செலவின் ஒரு பகுதியைக் கொடுத்து உற்சாகமூட்டியது.

சுவிசேஷ ஜெபக்குழுவின் நிதி நெருக்கடியையும் மிஷனெறி பாரத்தையும் உணர்ந்துகொண்ட இறையியல் கல்லூரிகள் கொடுத்த ஆதரவும் ஒத்துழைப்பும் ஜெபக்குழுவின் ஊழிய வளர்ச்சிக்குப் பெரிதும் துணையாயிற்று.

2. இறையியல் கல்லூரி பயிற்சியாளர்கள்

திரு. எம்.இராஜையன் அவர்களின் தூண்டுதலின் பேரில் வருங்கால நன்மைகளைக் கருத்தில் கொண்டு, குமரிப் பேராயத்திலிருந்து இறையியல் கல்லூரிகளில் பயின்று கொண்டிருப்போர் அனைவருக்கும் 12-06-1970-ஆம் நாள் அழகியமண்டபம் ஆலயத்தில் வைத்து சிறப்புக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இக்கூட்டத்தைப் பேராயர் ஐ.ஆர்.ஹெச் ஞானதாசன் அவர்கள் தலைமை ஏற்று நடத்தினார்கள். இதில் 18 பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர். இக்கூடுகையில், சுவிசேஷ ஜெபக்குழுவின் பணி, தேவை, செயல்பாடு, தனிமனிதனின் பங்கு, திருச்சபையின் பங்கு, ஊழியர்களின் பங்கு, கிறிஸ்தவனின் பங்கு என்ற பல்வேறு தலைப்புகளில் விரிவான செய்திகள் கொடுக்கப்பட்டு, கலந்துரையாடல்கள் நடைபெற்றன. கூட்டத்தில் கலந்துகொண்டோர், அதனை உடன் பயிற்சியாளர்களுடன் பகிர்ந்து கொண்டனர். பின்னர் இவர்கள் கல்வி முடித்துத் திருச்சபைகளில் சிறப்பாகப் பணியாற்றியதோடு சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியத்திற்கு நல்ல ஒத்துழைப்பையும் கொடுத்தார்கள். "உன் ஆகாரத்தைத் தண்ணீர் மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதன் பலனைக் காண்பாய்" (பிரசங்கி 11 : 1) என்ற வசனத்திற்கேற்ப இவர்கள் மூலமாக உருவான எழுப்புதல் பிற்காலம் சபைகளில் மிஷனெறி தரிசனத்தைக் கொடுத்தது.

3. ஜெபக்குழுக்கள்

சுவிசேஷ ஜெபக்குழுவானது ஆலமரம் போல் வளர்ந்து படர்ந்து ஒளிருவதற்கு அடிப்படை ஆதாரமாக அமைந்தது, எண்ணிறந்த விசுவாசிகளின் தனிப்பட்ட மற்றும் குழு சார்ந்த ஜெபமாகும். இவ்வூழியத்திற்கு அடித்தளம் போடப்பட்ட காரியாவிளை சபையில் வலுவான ஒரு ஜெபக்குழு நிரந்தரமாக ஜெபித்து வந்தது. பெத்தேல்புரம், செறுவாரக்கோணம், பரசுவைக்கல், கடமலைக்குன்று, கருங்கல், மத்திகோடு ஆகிய சபைகளில் தொடங்கப்பட்ட V.B.S. ஜெபக்குழுக்கள், சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியத்திற்காக, பாரத்தோடும், உபவாசத்தோடும் ஜெபித்தன. மலைநாட்டு ஊழியத்தின் செய்திகளை அறிந்த சபையினர், தாங்களும் ஏதேனும் ஒரு விதத்தில் அவ்வூழியத்தில் இணைய விருப்பங் கொண்டு ஜெபக்குழுக்களை உருவாக்கி, மாதந்தோறும், வாரந்தோறும் ஜெபித்தனர். பாலவிளை, வன்னியூர், களியக்காவிளை, ஐரேனிபுரம், விளாத்திவிளை, கல்லுக்கூட்டம், கோட்டையடி, ஜேம்ஸ்டவுண், சகாயநகர், சீயோன்புரம், புத்தளம், குளத்துவிளை, மைலாடி ஆகிய சபைகளில் சுவிசேஷ ஜெபக்குழுவிற்காகச் சிறப்பு ஜெபக்கூடுகைகள் தொடங்கி நடத்தப்பட்டன.

நாகர்கோவில் சேகர அளவில் அருள்திரு. ஆர். எட்வர்ட் சாம் அவர்களும் கொட்டாரம் சேகர அளவில் அருள்திரு. ஒய். றாபின்சன் அவர்களும், மூலச்சல் சேகர அளவில் அருள்திரு. எஸ். செல்வநாயகம் அவர்களும், ஜெபக்குழுக்களை உருவாக்கியதோடு மிஷனெறி கன்வென்ஷன்களும் நடத்திப் பொருளுதவி செய்தனர். இவைகள் தவிர, கொடுப்பைக்குழி "சுடர் சுவிசேஷ ஜெபக்குழுவினர்" சாந்தபுரம் "சமாதானத்திற்கான நற்செய்திக் குழுவினரும்" சுவிசேஷ ஜெபக்குழுவின் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள். இவ்வளர்ச்சி கஞ்சிக்குழி, கல்லங்குழி, பூவன்கோடு, கொற்றிகோடு, தேவிகோடு, மார்த்தாண்டம், குழித்துறை, சகாயநகர், தாமரைகுளம், மைலோடு, குளச்சல், ஆற்றூர், அருமனை, ஆரல்வாய்மொழி, வைரா குடியிருப்பு, ஆலங்கோட்டை ஆகிய சபைகளிலும் வளர்ந்து பெருகியது. இதனைத் தொடர்ந்து பேராய சபைகள்தோறும் ஜெபக்குழுக்கள் வளர ஆரம்பித்தன.

குமரிப் பேராய சபைகளில் செயல்பட்டு வந்த பெண்கள் சங்கத்தின் பொறுப்பாளர்களும் இவ்வூழியத்திற்காக ஜெபிக்கத் தொடங்கினார்கள். செனானா மிஷனைச் சார்ந்தவர்களும், சுதேஷ மிஷனெறி சங்கத்தினர்களும் இதில் அதிக ஈடுபாடு வைத்தனர். நாளடைவில் தனித்தனி ஜெபக்குழுக்கள் பல தோன்றின. உபவாச ஜெபக்கூடுகைகள் மற்றும் சங்கிலித் தொடர் ஜெபக் கூடுகைகளும் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டன.

சி.எம்.எஸ். நிறுவனத்திலும் மலைநாட்டு சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியத்திற்கு ஆதரவு கூடியது. அதில் திரு. எஸ். இரத்தினராஜ் அவர்கள் முக்கிய பொறுப்பினை ஏற்றார்கள். சீயோன்புரம் சபையைச் சேர்ந்த திரு. எ. ஜேக்கப் சகாயம் அவர்களின் முயற்சியால் திருவனந்தபுரத்தில் செயல்பட்டு வந்த ஜெ.பி. பெல்லோஷிப் (J.P. Fellowship) என்ற அமைப்பும் இவ்வூழியத்திற்கு ஜெபித்தும், கொடுத்தும் வந்தது. குலசேகரம் பகுதியில் தொடங்கப்பட்ட குலசேகரம் கிறிஸ்தவ ஐக்கியம் என்ற அமைப்பும் இதற்கு ஊக்கமளித்தது. இதில் டாக்டர். ஜோயல் அவர்கள் பொறுப்பாகப் பணியாற்றினார்கள். மதுரையில் ஓ.சி.பி.எம். மேல்நிலைப் பள்ளியிலும் ஒரு ஜெபக்குழு தொடங்கப்பட்டு ஜெபித்து வந்தது. நாகர்கோவில் ஆலன் நினைவு மண்டபத்தில், சுவிசேஷ ஜெபக்குழுவின் மத்திய ஜெபக்கூடுகை மாதந்தோறும் நடைபெற்றது.

பங்காரப்பேட்டை தென் இந்திய இறையியல் கல்லூரியில் படித்த குமரி மாவட்ட மாணவர்கள், **உள்ளான ஐக்கியம்** என்ற அமைப்பை ஏற்படுத்தி 1963 முதல் ஜெபித்து வந்தனர். இவைகளைத் தவிர சேலம்

டேனீஷ் பேட்டை, திருப்பத்தூர் கிறிஸ்துகுல ஆசிரமம் ஆகிய நிறுவனங்களிலும் ஜெபக்குழுக்கள் செயல்பட்டன. பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் திரு. ஈபன்ராய் பொறுப்பில் மலைநாட்டு ஜெபக்குழு ஒன்றும் செயலாற்றியது. மேற்கூறிய அளவில் எண்ணிறந்த தேவ பிள்ளைகளின் தளராத ஊக்கமான ஜெபத்தால் ஜெபக்குழுவின் ஊழியங்கள் வளர்ந்தோங்கின.

கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள் (சங் 126 : 5).

4. விடுமுறை வேதாகமப் பள்ளி

விடுமுறை வேதாகமப் பள்ளி நடைபெற்று வந்த எல்லாச் சபைகளிலும், அதன் இயக்குநர்கள் மூலம் மலைநாட்டு ஊழியத்தின் செய்திகள் சிறு பிள்ளைகளுக்கும் கொடுக்கப்பட்டன. விடுமுறை வேதாகமப் பள்ளி நடைபெறும் நாட்களில் ஒருநாள் இவ்வூழியத்திற்காக ஒதுக்கப்பட்டது. அன்றையத் தினம் மலைநாட்டு ஊழியத்தின் தேவை, ஆங்குள்ள மக்கள் நிலைமை, அவர்களுக்கு ஊழியம் செய்ய வேண்டிய அவசியம் முதலியன சிறுவர்களுக்கும், வாலிபர்களுக்கும் புரியும் வண்ணம் தெளிவாகக் கூறப்பட்டன. முன் அறிவிப்பின் பேரில் அன்றைய நாள் காணிக்கைகள் இவ்வூழியத்திற்காகப் பயன்படுத்தப் பட்டன. இதனால் குழந்தைகளுக்குச் சிறு பருவத்திலிருந்தே மிஷனெறி ஊழிய ஈடுபாடுகள் அதிகரித்தன. மாணவர்கள் தங்கள் காசுகளை உண்டியல் மூலம் சேமித்து வைத்து இவ்வூழியத்தைத் தாங்கினார்கள்.

விடுமுறை வேதாகமப் பள்ளி நடைபெற்ற சபைகளில் சுவிசேஷ ஜெபக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. அதன்மூலம் ஊழியர்கள் எழும்பினார்கள், ஊழியர்களைத் தாங்கும் ஜெபக்குழுக்களும் உருவாயிற்று. சபைகளும் ஆவிக்குரிய வாழ்வில் முன்னேற்றம் கண்டன. விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியத்தில் பணியாற்றிய தலைவர்களுக்காக, பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியத்தை ஊக்குவிக்கும் நோக்கில் சிறப்புக் கூடுகை ஒன்று 13-04-1965-ல் கஞ்சிக்குழி தேவாலயத்தில் திரு. எம். இராஜையன் அவர்கள் முயற்சியால் நடைபெற்றது. அருள்திரு. ஆர். எட்வர்ட் சேம் அவர்கள் அக்கூட்டத்தைச் சிறப்பாக நடத்தினார்கள். ஐம்பதிற்கும் அதிகமானோர் அதில் பங்கு பெற்றார்கள். பலர் தங்களின் முன் தீர்மானங்களை உறுதிப்படுத்தி, ஊழியத்திற்காக ஆர்வங்கொண்டு செயலாற்றினர்.

5. பேராயப் பெண்கள் சங்கம்

பேராயப் பெண்கள் சங்கத்தினர் ஜெபத்தினாலும் கொடையினாலும் மலைநாட்டு ஊழியத்தை ஆர்வமுடன் தாங்கி வந்தனர். ஒவ்வொரு சபையிலும் பெண்களின் ஈடுபாட்டை ஊழியத்தில் அதிகரிக்கும் நோக்கில் காணிக்கை உண்டியல் ஒன்று கொடுக்கப்பட்டிருந்தது. வருடத்திற்கொருமுறை முட்டத்தில் நடைபெறும் பெண்கள் சங்க தியானக் கூட்டத்தில் அவ்வுண்டியல்கள் வழி பெற்றுக்கொண்ட காணிக்கைகள் படைக்கப்பட்டன. அக்காணிக்கை மலைநாட்டு சுவிசேஷ ஊழியத்தின் தேவைகளுக்கு அனுப்பப்பட்டது. இவ்விதம் பெண்கள் சங்கங்களின் செயல்பாட்டால் நாளடைவில் ஊழியக்களங்களில் ஊழியர் இல்லங்கள் கட்டப்பட்டன. ஊழியர்கள் தாங்கப்பட்டனர். இதன் பேராயத் தலைவியாக திருமதி. ஜாய் ஞானதாசன் அவர்களும், செயலராக திருமதி. நேன்ஸி பிறைட் டேவிட் அவர்களும் திறமையாகச் செயல்பட்டனர்.

மிஷனெறிப் பணி என்பது அனைத்து மக்களுக்கும் உரியது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் அது தனக்குரியது எனச் சிந்தித்தல் வேண்டும். நமது நாட்டில் இருளில் வாழும் மக்கள் வெளிச்சம் காணவும், கெட்டுவரும் சமூகம் காப்பாற்றப்படவும், கசப்போடு, நம்பிக்கையற்று வாழும் உலகத்துக்குச் சுவை கொடுக்கவும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். அழைப்புக்கு உண்மையானவர்களாகத் திகழ வேண்டும் என்பதே அழைத்தவரின் எதிர்பார்ப்பாகும்.

அறிவில் குறைந்தவன் நான் அன்றோ
அதைத் தெரிந்தும் அழைத்தது ஏன் என்றேன்
அறிந்தவர் செருக்கினை அகற்றிடவே - பின்னே
வா என முன் சென்றார்
அழைப்பின் குரல் கேட்டேன் - என்
ஆண்டவர் என உணர்ந்தேன்.

6

அருட்பணியாளரும் அருட்பணியும்

"இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மவுனமாயிருந்து பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும்" (II இரா 7 : 9)

தேவாதி தேவன் அனைத்துலகிற்கும் ஆண்டவர். அவர்தாம் இயேசுகிறிஸ்து. அவர் ஏதோ மனித கற்பனையில் வடித்த காவிய புருஷனல்ல. சரித்திரத்தில் வலிய தன்னை வெளிப்படுத்தி, மனிதனின் பாவ கர்மத்தைத் தொலைக்க வந்த நம்பிக்கை நட்சத்திரம். இவரைக் குறித்த செய்தியை ஒரு நாளைக்கு ஒரு மனிதரிடமாவது கூற வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு ஒவ்வொரு மனிதனும் செயலாற்ற வேண்டும் என்பதே இறை நெறியாளர்களின் நோக்கமாகும். இத்தகைய மேலான எண்ணங்களுக்குச் சுவிசேஷ ஜெபக்குழு வடிவம் கொடுத்தது.

1. மலைப்புறத் திருப்பணிகள்

சுவிசேஷ ஜெபக்குழுவானது தனது தரிசனத்தைக் குமரிப் பேராயத்திற்குள்ளான சபைகளில் வேகமாக அறிவித்து வந்தது. ஜெபக்குழுவின் செயல்பாடு மற்றும் திட்டங்களில் மன நிறைவடைந்த பேராயர் ஐ.ஆர்.ஹெச் ஞானதாசன் அவர்கள், இதனை சி.எஸ்.ஐ. சினாடு மற்றும் மிஷனெறிச் சங்கங்களுக்கு முறைப்படி தெரிவித்தார். இந்நிலையில் 1964 பெப்ருவரி மாதம் தேசீய அருட்பணிச் சங்கத்திலிருந்து (National Missionary Society of India) பேராயர் ஐ.ஆர்.ஹெச் ஞானதாசன் அவர்களுக்குக் கடிதம் ஒன்று வந்தது. அதில், வட ஆற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலைப் பகுதியில் நடத்தி வரும் அருட்பணியின் பொறுப்பை எடுத்து நடத்த, வலிமை வாய்ந்த ஒருவரை சுவிசேஷ ஜெபக்குழுவிலிருந்து அனுப்பிக் கொடுக்கப் பேராயரை என்.எம்.எஸ். கேட்டிருந்தது. இம்மடலைக் கண்ட பேராயரின் மனதில் மகிழ்ச்சியின் அலைகள் கடந்து சென்றன.

பேராயர் அவர்கள் திரு. டி. எலியாஸ், திரு. எம். இராஜையன் ஆகிய இருவரையும் அழைத்து, என்.எம்.எஸ். இலிருந்து அழைப்பு

வந்திருக்கிறது. போவது யார்? என்று கேட்டார்கள். இருவரும் அவ்வூழியத்திற்குச் செல்ல தங்கள் இசைவைத் தெரிவித்தனர். சில தினங்களுக்குப் பின், பேராயர் அவ்விருவரையும் மீண்டும் அழைத்தார். திரு. டி. எலியாஸ், மிஷனெறி பணிக்காக மலைக்குச் செல்லவும், திரு. எம். இராஜையன் பேராயத்தில் சபைப் பொறுப்பை வகித்துக் கொண்டு, சுவிசேஷ ஜெபக்குழுவைப் பெலப்படுத்தி விரிவுபடுத்தும் பணியை மேற்கொள்ளவும் கேட்டுக் கொண்டார்கள். இதனைத் தெய்வ நடத்துதலாகவே அவ்விருவரும் ஏற்றுக் கொண்டனர்.

அதன்படி காரியாவிளை சபையில் பணியாற்றி வந்த திரு. டி. எலியாஸ் அவர்களை ஜவ்வாது மலைக்கு மிஷனெறியாக அனுப்புவதற்குச் சபைப்பரிபாலனக் குழுவின் ஒப்புதலைப் பேராயர் பெற்றார். சுவிசேஷ ஜெபக்குழுவானது என்.எம்.எஸ். சங்கத்துடன் இணைந்து திரு. டி. எலியாஸ் அவர்களை மிஷனெறியாக 01-06-1964 முதல் ஜவ்வாது மலைக்கு அனுப்பத் தீர்மானித்தது.

2. அருட்பணியாளர்கள் - அர்ப்பணங்கள்

குமரிப் பேராய வரலாற்றிலும் சுவிசேஷ ஜெபக்குழுவின் வரலாற்றிலும் 1964 மே 28-ஆம் நாள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நாளாகும். அன்று ஜவ்வாது மலைக்கு மிஷனெறியாக திரு. டி. எலியாஸ் அவர்களை நாகர்கோவில் கஸ்பா தேவாலயத்தில் வைத்து அருள்திரு. ஆர். எட்வர்ட் சேம் அவர்கள் அர்ப்பணம் செய்தார்கள். இதுவே பேராயத்தில் நடைபெற்ற முதல் மிஷனெறி அர்ப்பண ஆராதனை என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதே நாளில் அச்சபையில் நடைபெற்ற ஜெபக்கூடுகையில் பங்கெடுத்திருந்த ஜெபக்குழு அங்கத்தினர்களின் முயற்சியால் பெத்தேல்புரத்தைச் சேர்ந்த திரு. டி. இராஜையன் அவர்களும் மிஷனெறியாக அறிமுகப்படுத்தப் பட்டார்கள். அன்னார் எலியாஸின் உதவிக்காக அனுப்பப்பட்டார். அவருக்குரிய ஊதியத்தை அச்சபையின் ஜெபக்குழுவின் அங்கத்தினர்களே சேகரித்துத் தனியாக அனுப்பினார்கள். இவருடைய துணைவி திருமதி. றோஸ்லெட் அவர்களும் பின்னாளில் இணை மிஷனெறியாகப் பணிபுரிந்து வருகிறார்கள்.

மேலும் ஹில் காஸ்பல் மிஷன் சார்பாகப் பெரிய கல்வராயன் மலையில் பணியாற்றிட பெத்தேல்புரம் திரு. இரத்தினராஜ் குடும்பம்

காட்டாத்துறை	-	ஆரோன் குடும்பம்
பாகோடு	-	தேவதாசன்
ஐரேனிபுரம்	-	ஆர்ச் பால் தேவசிகாமணி குடும்பம்

ஆகியோர் நாகர்கோவில் கல்பா தேவாலயத்தில் வைத்து 19-07-1964-ஆம் நாள் பேராயர் ஐ.ஆர்.ஹெச் ஞானதாசனால் அர்ப்பணிக்கப்பட்டு அனுப்பப்பட்டார்கள்.

கருங்கலைச் சேர்ந்த திரு. என். விக்டர், மூங்கில்விளையைச் சேர்ந்த திரு. துரைமணி ஆகியோர்களும் ஊழியத்திற்குத் தெரிந்தெடுக்கப்பட்டு 1969-ஆம் ஆண்டு ஜவ்வாது மலையிலுள்ள என்.எம்.எஸ். பணித் தளத்திற்கு அனுப்பப்பட்டார்கள். தாதியர் பணிக்காக 29-12-1970-ஆம் நாள் செல்வி எஸ்தர் ரோணிக்கம் சீயோன்புரம் திருச்சபையில் வைத்து அருள்திரு. எம். இராஜையனால் அர்ப்பணிக்கப்பட்டு, ஜவ்வாது மலைப்பணியில் போய் இணைந்தார்கள். செல்வி. எஸ்தர் ரோணிக்கத்தின் பொறுப்பைச் சீயோன்புரம் திருச்சபை ஏற்றது.

கவிசேஷ ஜெபக்குழுவின் பணிக்காகச் செல்வி. மதுரபாய் (மருதங்கோடு), ஐ. அருமைநாயகம் (புன்னையடி), எ. செல்வராஜ் (பேரின்பபுரம்), ஜெ. பாலையன் (பாரக்கன் விளை) ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இவர்களது மிஷனெறி அர்ப்பண ஆராதனை 19-04-1970-ஆம் நாள் கீழ கிருஷ்ணன்புதூர் திருச்சபையில் நடைபெற்ற ஜெபக்குழுவின் 6-ஆவது ஆண்டுவிழா சிறப்புக் கூட்டத்தில் பேராயர் ஐ.ஆர்.ஹெச் ஞானதாசன் அவர்களால் நடத்தப்பட்டது. செல்வி. மதுரபாய் அவர்களை மருத்துவ மிஷனெறியாக ஆதரிக்க மார்த்தாண்டம் சபை ஒப்புக்கொண்டது. அதற்குரிய ஏற்பு நிகழ்ச்சி 19-07-1971-ஆம் நாள் பேராயர் ஐ.ஆர்.ஹெச் ஞானதாசன் அவர்களால் மார்த்தாண்டம் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது.

திரு. எஸ். செல்வின் சாமுவேல் (சீயோன்புரம்), திரு. கெ.ஆர். வில்லியம் (காப்புக்காடு) ஆகியோர் 04-08-1972-ஆம் நாள் கவிசேஷ ஜெபக்குழு ஊழியத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஜவ்வாது மலைக்கு அனுப்பப் பட்டார்கள். பெத்தேல்புரத்தைச் சேர்ந்த திரு. ஜி. சசிகுமார் ஒரிஸாவில் வாழும் போண்டோ இன மக்களுக்கு ஊழியம் செய்ய அனுப்பப் பட்டார். 18-05-1973 அன்று மூலச்சல் சபையில் வைத்து பேராயர் சி. செல்வமணி அவர்களால் மாலைக்கோட்டினைச் சேர்ந்த இ. தங்கராஜ் அவர்கள் அர்ப்பணிக்கப்பட்டு ஜவ்வாது மலைக்கு அனுப்பப்பட்டார்.

கிராத்தூர் எஸ். ஜஸ்டின் அவர்கள் 24-12-1974 அன்றும் மலைநாட்டைச் சேர்ந்த சுதேசி ஜி. டேவிட் ராமன் 27-05-1975 அன்றும், அகஸ்தீஸ்வரம் எ.சி. நாயகம், செம்பொன்விளை டி. ஸ்டான்லி ஆகியோர் 1972-லும் மிஷனெறிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஜவ்வாது மலைக்கு அனுப்பப்பட்டார்கள்.

ஹில் காஸ்பல் மிஷன் பணித்தளங்களில் பணியாற்றிட முன்வந்த, ஹாக்கர்புரம் திரு. எஸ். தங்கப்பன், பனவிளை திரு. றாபின் ஜான் ஆகியோர் ஜெபக்குழு வழியாக 1966-ல் அனுப்பப்பட்டார்கள். ஜவ்வாது மலையில் நற்செய்திப் பணிக்கு அனுப்பப்பட்ட அனைவரது ஊதியத்தையும் சுவிசேஷ ஜெபக்குழு என்.எம்.எஸ். சங்கம் மூலம் கொடுத்து வந்தது. அவர்களது வைப்புநிதி, பயணச் செலவுகள் மற்றும் மருத்துவ உதவி போன்ற அனைத்துச் செலவுகளையும் சுவிசேஷ ஜெபக்குழுவே பொறுப்புடன் அளித்தது.

இறையியல் கல்வி முடித்து வந்த டி. ஸ்டான்லி அவர்களைச் சுவிசேஷ ஜெபக்குழு ஹிமாச்சல பிரதேசத்தில் ஊழியம் செய்ய இந்திய அருட்பணி இயக்கம் மூலம் அனுப்பியது. அவரது ஊதியத்தைச் சுவிசேஷ ஜெபக்குழு ஐ.இ.எம். மூலமாகவே கொடுத்தது. திரு. எஸ். செல்வின் சாமுவேல் அவர்கள் இறையியல் கல்வியை முடித்த பின்பு என்.எஸ்.எம். சங்கத்துடன் இணைந்து விட்டார். திரு. எஸ். ஜஸ்டின் அவர்கள் இறையியல் கல்வியை முடித்த பின்பு பேராயர் சி. செல்வமணி அவர்களின் அழைப்பிற்கேற்ப 20-12-1974 முதல் போர்ட் ஆப் மிஷனில் (Board of Mission) இணைந்தார். திரு. ஆர். பென்னட் (கஞ்சிக்குழி), திரு. இரத்தினமணி, திரு. தங்கராஜ் (சகாயநகர்) ஆகியோர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பணியினை ஜவ்வாது மலையில் சிலகாலம் செய்துவிட்டு மீண்டும் தொடர இயலாமல் ஊழியத்தை விட்டே சென்று விட்டனர்.

ஆரம்ப காலத்திலேயே அருட்பணியாளர்களாகவும், மருத்துவத் தாதியர்களாகவும் பெருமளவில் வாலிபர்கள் கீழ்ப்படிந்து இயேசுவின் பணியாற்ற முன்வந்துள்ளமை சுவிசேஷ ஜெபக்குழுவின் செயல்பாட்டிற்கு உந்து சக்தியாக விளங்கியது. பேதைமையும் பிரிவுமுள்ள இச்சமுதாயத்திற்குக் கிறிஸ்தவ அன்பு என்பது அருமருந்து. அவ்வன்பினை ருசித்தோர் மட்டுமே உணர்வர். நாம் தேடி ஓடி நாடிப் போகாமல் நம்மையே தேடிவந்தது. நமது அறிவையும் சிந்தையையும் கடந்தது.

3. ஜெபக்குழு ஊழியர்களை அனுப்புதல்

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் சார்பில் என்.எம்.எஸ். மூலம் அனுப்பப்பட்ட ஊழியர்கள் ஜவ்வாது மலையில் முக்கிய இடமான ஜம்னா மருத்தூர் என்ற கிராமத்தில் தனது பணியைத் தொடங்கினார்கள். என்.எம்.எஸ். சங்கத்தாரால் ஏற்கனவே அனுப்பப்பட்டவர்களும் அம்மலைமேல் ஒருசில இடங்களில் தங்கள் ஊழியங்களை நிறைவேற்றினார்கள். ஜவ்வாது மலையில் நடைபெற்று வந்த அனைத்து ஊழியங்களுக்கும் விசாரணைப் போதகராக திரு. டி. எலியாஸ் அவர்கள்

செயலாற்றி வந்தார். அங்குக் கட்டப்பட்ட ஆலயத்தை 1967-ல் அருள்திரு. எம். இராஜையன் அவர்கள் கர்த்தருக்கென்று அர்ப்பணித்தார்கள். தொடர்ந்து மருத்துவமனைகட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

சுவிசேஷ ஜெபக்குழுவால் அனுப்பப்பட்ட ஊழியர்கள் ஜவ்வாது மலையில் முதற்கண் ஒன்பது இடங்களை மையமாகக் கொண்டு ஊழியம் செய்து வந்தார்கள். பின்னர் பல புதிய பணிக்களங்களைத் தொடங்கினார்கள். அந்த ஒன்பது மையங்களைச் சுற்றிலும் சுமார் 250-க்கும் மேலான கிராமத்தார்களுக்கு நற்செய்தியை அறிவித்து வந்தார்கள் (1973 டிசம்பர் ஊழிய அறிக்கை) அதோடு வாலிபர்கள் மற்றும் குழந்தைகளுக்கு இரவு பள்ளிகள் நடத்தி எழுதிப் படிக்கக் கற்றுக் கொடுத்தார்கள். இவைகளின் பயனால் விசுவாசிகள் ஆங்காங்கே புதிதாக எழும்பினார்கள். ஆராதனைகளும் நடத்தப்பட்டு வந்தன.

ஜவ்வாது மலையின் புதூர் கிராமத்திலுள்ள வன இலாகாப் பள்ளியில் சவுந்தரராஜன் என்ற தலைமை ஆசிரியரும் இராபர்ட்ஸன் என்ற ஆசிரியரும் பணியாற்றி வந்தார்கள். இவர்கள் உலகக் கல்வியோடு இயேசு கிறிஸ்துவையும் போதித்தார்கள். ஜம்னா மருத்தூரில் இயங்கிவந்த வன இலாகாப் பள்ளியில் 24-09-1965 முதல் திருமதி. அன்னபாய் எலியாஸ் அவர்கள் பணியாற்றினார்கள். அவர்களும் தன் பணியினூடே இயேசுவையும் அறிவித்தார்கள். மேற்கூறிய பணிகளின் வாயிலாகப் பலர் இயேசுவை ஏற்றுக் கொண்டதுடன், சிலர் ஊழியம் செய்ய அழைப்பும் பெற்றார்கள். அவர்களில் சிலர் என்.எம்.எஸ். சங்கத்திலும், ஆசீர்வாத இளைஞர் இயக்கத்திலும் (Blessing Youth Mission) இணைந்து பணியாற்ற முன்வந்தார்கள். பின்னாட்களில் ஒருசிலர் சுவிசேஷ ஜெபக்குழுவிலும் பணியாற்றினார்கள்.

சுவிசேஷ ஜெபக்குழுவால் மருத்துவப் பணியாற்றிக் கொண்டிருந்த எஸ்தர் ரோணிக்கம், மதுரபாய் ஆகியவர்களின் நற் சேவையாலும் பலர் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர். மலைமக்களது இல்லங்களைச் சந்திக்கும் மிஷனெறிகள் அங்குள்ள பிள்ளைகளைக் கல்வி கற்க அனுப்பும்படி பெற்றோருக்கு அறிவுறுத்தினார்கள். இதனால் கல்வி பயிலுவோரின் எண்ணிக்கை அதிகரித்தது.

1970-ஆம் ஆண்டு பேராயர் ஐ.ஆர்.ஹெச் ஞானதாசன் அவர்கள் ஜவ்வாது மலையில் நடைபெற்று வந்த ஊழியங்களை நேரில் பார்வையிட அங்கு வந்தார்கள். அப்போது கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட பலருக்குத் திருமுழுக்குக் கொடுத்தார்கள். அந்நாட்களில் 19 ஊழியர்களை

ஜெபக்குழு என்.எம்.எஸ். சங்கம் வழி ஜவ்வாது மலைக்கு அனுப்பி ஆதரித்து வந்தது. சுவிசேஷப் பணியானது மிஷனெறிகள், ஆசிரியர்கள், மருத்துவத் தாதிகள் போன்றோர்களின் பணிகளாலும், சாட்சியான வாழ்க்கையாலும், சேவையாலும் மென்மேலும் விரிவடைந்து நாள்தோறும் வளர்ந்து வந்தது.

4. பணிக்கள ஆய்வு

குமரிப் பேராயம் மிஷனெறி ஊழியத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தது. இதனால் விசுவாசிகள் பலர் மிஷனெறி ஊழியத்தைத் தாங்கவும், ஊழியத்திற்காகச் செல்லவும் முன் வந்தனர். ஆனால் இப்பேராயத்திலிருந்து அதிகமான அருட்பணியாளர்கள் ஜவ்வாது மலைக்குச் செல்வதை என்.எம்.எஸ். சங்கம் விரும்பவில்லை. அதே வேளையில் குமரிப் பேராயத்தில் வளர்ந்து வரும் மிஷனெறி உணர்வைத் தடைசெய்ய ஜெபக்குழுவும் விரும்பவில்லை. ஆகவே குமரிப் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்குத் தனி அருட்பணிக் களங்களைத் தேர்ந்தெடுக்க 31-03-1973 அன்று கூடிய ஜெபக்குழுவின் செயற்குழு தீர்மானம் எடுத்தது. அதன்பேரில் பணிக்களங்களை நேரில் சென்று பார்வையிட பணிக்கள ஆய்வுக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழுவில் அருள்திரு. டி. எலியாஸ், அருள்திரு. எம். இராஜையன், திரு. எஸ். இரத்தினராஜ் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இவர்கள் காந்தமலை, ஜாகீர் கல்ராயன் மலை, கீரிப்பாறை முதலிய பகுதிகளுக்குச் சென்று பணிக்களங்களைப் பார்வையிட்டு அறிக்கையினை ஜெபக்குழுவில் சமர்ப்பித்தனர்.

அ. கரந்தமலை

இம்மலையானது மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ளது. இம்மலையைப் பார்வையிட திருமங்கலம் அருகேயுள்ள கல்லுப்பட்டி சி.எம்.எஸ். விடுதிக் காப்பாளர் திரு. எம்.ஒ. ஜாண், திரு. எஸ். இரத்தினராஜ், அருள்திரு. டி. எலியாஸ், அருள்திரு. எம். இராஜையன் ஆகியோர் 14-05-1973 - ஆம் நாள் சென்றனர். அம்மலையிலுள்ள மூன்று பெரிய கிராமங்களில் அம்பலக்கார் என்ற வகுப்பினர் வாழ்ந்தனர். இயேசுவை இக்குழுவினர் கூறியபோது அம்மக்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். பின்னர் இக்குழுவினரிடம் அம்மக்கள், "நீங்கள் இங்கிருந்து போக வேண்டாம், இங்கேயே தங்கி இந்த இயேசுவைக் கற்றுத் தாருங்கள். ஆலயமும் பள்ளியும் கட்டுங்கள், நாங்களும் உங்களைப்போல மாற ஆசையாயுள்ளோம்" என்று கெஞ்சிக் கேட்டார்கள். இக்குரல் இக்குழுவினர்களின் நெஞ்சத்தை மேலும் உணர்ச்சிவசப்படுத்தியது.

கரந்த மலையானது மதுரைப் பேராய எல்லைக்குள் அமைந்திருந்தது. எனவே சுவிசேஷ ஜெபக்குழுவினர் முறைப்படி மதுரைப் பேராயரின் அனுமதிக்காகக் கடிதம் எழுதினர். ஆனால் மதுரைப் பேராயம் தாங்களே அம்மலையில் ஊழியம் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக 22-06-1973 அன்று பதில் அனுப்பியது. இதனால் அங்கு ஊழியம் தொடங்கும் முயற்சி கைவிடப்பட்டது.

ஆ. ஜாகீர் கல்ராயன் மலை

பணிக்கள ஆய்வுக்குழு தன் முயற்சியில் அடுத்த மலைக்குச் சென்றது. 10-09-1974 அன்று தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள (தற்போது விழுப்புரம்) ஜாகீர் கல்ராயன் மலையைச் சந்திப்பதற்காக அருள்திரு. டி எலியாஸ், அருள்திரு. எம். இராஜையன் ஆகியோர் சென்றனர். கொத்தடிமைகளாக வாழ்ந்து வந்த ஆதிவாசிகள் பலரை அங்கு சந்தித்தார்கள். அம்மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்தனர். இக்குழுவினரைக் கண்டதும் அம்மக்கள் பயந்து ஓடி மறைந்தனர். அம்மக்களை முன்னேற்றுவது தான் நமது கடமையும், இன்றைய தேவையும் என்பதை இக்குழுவினர் உணர்ந்து, அம்மலையை ஜெபக்குழுவின் ஊழியக்களமாகத் தேர்ந்தெடுக்கப் பரிந்துரை செய்தார்கள். அவ்வறிக்கையினை 10-03-1975-ஆம் நாள் ஜெபக்குழுவிற்குக் கொடுத்தார்கள். அதில்,

1. ஜாகீர் கல்ராயன் மலையானது ஆரிய கவுண்ட நாடு, குறும்ப கவுண்ட நாடு, ஜடய கவுண்ட நாடு என முப்பிரிவுகளைக் கொண்டது. ஜவ்வாது மலையில் வாழும் இனத்து மக்கள்தான் இம்மலையிலும் வசிக்கிறார்கள். இம்மலையில் மட்டும் சுமார் 30,000-த்திற்கும் மேலானவர்கள் காணப்படுகின்றார்கள்.
2. ஜாகீர் மலையிலும் ஜாகீர் மலையைச் சுற்றிலும் சுவிசேஷப் பணி இதுவரையிலும் நடைபெறவில்லை.
3. இம்மக்கள் மிகவும் ஏழ்மையானவர்கள். அங்கு நற்செய்திப் பணியாற்றத் திறந்த வாசல் உள்ளது.
4. ஜாகீர் மலையில் பணியாற்ற, ஜவ்வாது மலையில் அருட்பணியாற்றிவரும் அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் மிகவும் பொருத்தமானவர்கள்.

சுவிசேஷ ஜெபக்குழு எலியாஸ் அவர்களைத் திரும்ப அழைத்து அவர்களது மேற்பார்வையில் ஊழியத்தைத் தொடங்கி நடத்த வேண்டும் என்றும் எழுதப்பட்டிருந்தது. இவ்வறிக்கையைச் சுவிசேஷ ஜெபக்குழுவின் செயற்குழுவும் ஏற்றுக்கொண்டது.

ஈ. கீரிப்பாறை

குமரி மாவட்டத்தில் கீரிப்பாறை, பேச்சிப்பாறை ஆகிய பகுதிகளில் அமைந்திருக்கும் மலைப் பகுதிகளில் காணிக்காரர்கள் என்ற ஆதிவாசிகள் வசித்து வருகிறார்கள். அவ்விடங்களில் வாழும் மக்களைச் சந்திக்க மயிலாடியைச் சேர்ந்த திரு. பாலஸ் என்பவரின் உதவியுடன் அருள்திருவாளர்கள். டி. எலியாஸ், எம். இராஜையனும், திருவாளர்கள். எஸ். இரத்தினராஜ், பி. இராஜையன், எ.சி. நாயகம், அருமைநாயகம், இராபர்ட்ஸன் ஆகியோர் 26-05-1975 அன்று மேற்கூறிய மலைப்பகுதிகளுக்குச் சென்றார்கள். அப்போது அம்மக்கள் இக்குழுவினரிடம் தங்கள் நிலைகளைத் தெளிவாக எடுத்துக் கூறினார்கள்.

1. அம்மக்களோடு தங்கியிருந்து இயேசுவின் அன்பைப் பற்றிக் கூறவும். அவர்கள் பிள்ளைகளுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கவும் இக்குழுவினரை அம்மக்கள் கேட்டுக் கொண்டார்கள்.
2. வன இலாகா அதிகாரிகளால் அவர்களுக்கு ஏற்படும் தொந்தரவுகளிலிருந்து விடுதலை பெற உதவி செய்தால், கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வோம் என்றும் கூறினர்.

நாகர்கோவில் சுவிசேஷ நண்பர் ஐக்கியத்தினரும், ஈத்தவிளை சேகர சபை திருச்சபையினரும் பல வேளைகளில் அப்பகுதிகளுக்குச் சென்று ஊழியத்தை நிறைவேற்றி வந்தனர். பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியம் குமரி மாவட்டத்திற்கு வெளியே நடத்தப்பட வேண்டும் என்ற குறிக்கோளும் இவ்வியக்கத்திற்கு இருந்தமையால் குமரிக் காணிக்காரர்கள் மத்தியில் ஊழியம் தொடங்க சுவிசேஷ ஜெபக்குழு முற்படவில்லை.

5. அருள்திரு டி. எலியாஸ் என்.எம்.எஸ்.-இலிருந்து விலகல்

இக்காலக் கட்டத்தில் என்.எம்.எஸ். சங்கம் ஜெபக்குழுவின் பொறுப்புதாரர்களில் ஒருவரான ஜெயசிங் அவர்களை என்.எம்.எஸ்.-ன் தென் பிராந்திய பயணச் செயலராகவும், அருள்திரு. டி. எலியாஸ் அவர்களைப் பணிக்களப் பணியிலிருந்து விடுவித்து வட தமிழ்நாடு பயணச் செயலாளராகவும் 1976 ஜனுவரி முதல் நியமித்தது. பணிக்களப் பணியிலிருந்து விடுவித்தது. அருள்திரு. டி. எலியாஸ் அவர்களின் தரிசனத்திற்கும், அழைப்பிற்கும் முரண்பட்டதாகவே இருந்தது. ஆகவே அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் தனது விருப்பத்தைக் குமரிப் பேராயருக்கும், சுவிசேஷ ஜெபக்குழுவிற்கும் தெரிவித்து. 1977-ஆம் ஆண்டு எம்.என்.எஸ்.-லிருந்து விலக மூன்று மாதத்திற்கு முன் முறைப்படி

அறிவிப்புக் கொடுத்தார்கள். அதன்பேரில் 1977 ஏப்ரல் முதலாம் நாள் தனது 13 ஆண்டுகால என்.எம்.எஸ். பணியை முடித்து, குமரிப் பேராயத்திற்குத் திரும்பினார்கள்.

மக்கள் கூட்டங்களின் தொகுப்பே இந்தியா என்று சொன்னால் அது மிகையாகாது. வெவ்வேறு மொழிகள், உடையலங்காரங்கள், உணவுப் பழக்க வழக்கங்கள், கலாச்சாரங்கள் என 4,600 வகைப்பட்ட மக்கள் கூட்டங்கள் இந்தியாவில் உண்டு. இத்தகையோர் அனைவருக்கும் விடுதலைச் செய்தியினைக் கூறி, அவர்களையும் இயேசுவண்டை கொண்டு சேர்ப்பதே சுவிசேஷ ஜெபக்குழுவின் பிரதான பணியாகும். இப்பணியின் மூலம் சமூகத்தில் ஒதுக்கப்பட்டோர், பின்னர் இராஜாக்களாக, பிரதானிகளாக, சமூகத்தலைவர்களாக நிச்சயம் மாற்றம் பெறுவர். மூலை முடுக்குகளில் எல்லாம் மறைந்து வாழ்வோர் இனி முக்கியமாக்கப் படுவார்கள்.

எல்லார் முன்பாகவும்
இயேசுவை உயர்த்துங்கள்
அவரே யாவர்க்கும்
ரட்சகர் என்னுங்கள்
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டு வந்தது.

பகுதி - இரண்டு

(1977 ஜூன் முதல் 2002 வரை)

7

ஆரம்பகாலப் பணித்தளமும் ஆதரித்த மக்களும்

“இதோ, நீ அறியாதிருந்த ஜாதியை வரவழைப்பாய்; உன்னை அறியாதிருந்த ஜாதி உன் தேவனாகிய கர்த்தரின் நிமித்தமும் இஸ்ரவேலுடைய பரிசுத்தத்தின் நிமித்தமும் உன்னிடத்திற்கு ஓடி வரும்; அவர் உன்னை மேன்மைப் படுத்தியிருக்கிறார்.” (ஏசாயா 55:5)

வாழ்க்கையில் உயர்வுகளைக் காண காலை முதல் மாலைவரை தீவிரமாக உழைக்கிறவர்கள் பலருண்டு. இரவும் பகலும் உண்டும் உண்ணாமலும் தூங்கியும் தூங்காமலும் தன் நலம் பார்க்காமல் தன் சுகம் பேணாமல் தீவிரமாக முன்னேற நினைப்பவர்கள் பலர். வாழ்வின் இறுதியில் ஏமாற்றமே அடைகிறார்கள். ஒரு மனிதனின் இலட்சியம் உயர்ந்ததாக இருக்கலாம். ஆனால் அதனை அடைய அவன் கையாளும் வழிமுறைகள் தேவன் அங்கீகரித்தவைகளாய் உள்ளனவா? என்பதைச் சோதனை செய்ய வேண்டும். அச்சோதனையில் வெற்றி பெறுகிறவனே இலட்சிய வீரன். இன்றைய ஊழியர்கள் பலர், தானுண்டு, தன் குடும்பமுண்டு, எனச் சுய விளம்பரத்தில் வாழ்க்கையைக் கட்டி வருகிறார்கள். இப்படிப்பட்ட வாழ்க்கைகளைத் தேவன் அங்கீகரித்தாரா? என்பதுதான் கேள்வி.

தனிமனிதனை அடிமைப்படுத்தும் எல்லாவற்றையும் அடியோடு களைந்து போடுவோம். கசப்பு, கோபம், எரிச்சல், மூர்க்கம், பொறாமை, வம்பு, கெட்டவார்த்தை, பொய் முதலானவற்றை மனித உறவினர் மத்தியிலிருந்து களைவோம். அதற்குப் பதிலாகப் பரிசுத்தம், அன்பு, உருக்கம், இரக்கம், தயவு, மனத்தாழ்மை, நீடிய பொறுமை ஆகிய அணிகலன்களை மகிமைக்காக அணிந்து கொள்வோம். மதம், நிறம்,

மொழி, இனம், அந்தஸ்து என்று எவ்வித வேற்றுமையும் பாராமல் விதிவிலக்கின்றி எல்லோரிடத்தும் அன்பு கூருவோம். ஒவ்வொரு மனிதனும் கர்த்தரின் புகழை இவ்வுலகில் சேர்க்கும் மகுடங்களாய், மாணிக்கங்களாய்த் திகழவேண்டும். அத்தகைய நல்ல உள்ளங்களின் கீழ்ப்படிதலினால் நாட்டில் ஆத்தும அறுவடை பெருகும். அத்தகையோரின் செயல்பாடுகளையும் பணிப்பழுவையும் இப்பகுதி நன்கு விளக்குகிறது.

1. சொந்தமாகப் பணித்தளம் தொடங்குதல்

கிறிஸ்துவின் பணி என்பது சங்கிலித் தொடர்போல் விரிவடைந்து சென்று பரவ வேண்டும். ஒரு மனிதன் அல்லது ஒரு குழு கொஞ்சம் செய்ததா? அதிகம் செய்ததா? என்பது கேள்வியாக அமையாது. மாறாக தன் கடமையைச் செய்ய வேண்டிய காலத்தில் செய்தனரா? என்பதுதான் கேள்வி. நாம் வாழும் இந்திய நாட்டில் 75 சதவீதம் மக்கள் வாழும் 6,38,365 கிராமங்களில் இந்நாள்வரை ஆலயமணி ஒலிக்கவில்லை. இந்தியாவின் மொத்த மாவட்டங்கள் 595, இவர்கள் அனைவருக்கும் நற்செய்தியை அறிவிப்பது நமது கடமை என்பதை இலட்சியமாகக் கொண்டு பல்வேறு மிஷனெறி இயக்கங்கள் செயல்படுகின்றன. அத்தகையதோர் உயரிய பணியில் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவும் பங்குகொள்ள ஆர்வம் கொண்டது.

குமரிப் பேராயம் மிஷனெறி ஊழியத்தைப் பல்வேறு இயக்கங்கள் மூலம் செயல்படுத்தி வந்தது. குறிப்பாக தேசிய அருட்பணி சங்கம், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, இந்திய அருட்பணி இயக்கம், சுவிசேஷ பிரதியொலி மிஷனெறி இயக்கம், (GEMS) இல்லந்தோறும் நற்செய்தி, ஆசீர்வாத இளைஞர் இயக்கம் போன்ற பல மிஷனெறி குழுக்கள் மூலம் அருட்பணியாளர்களைத் தாங்கி ஆசீர்வாதம் பெற்றது. இக்காட்சியில் தன்னை நேரடியாக ஈடுபடுத்திக் கொள்ள ஆவல்கொண்டு சொந்த பணித்தளத்தைத் தொடங்கும் முயற்சிக்குத் திட்டம் அமைத்தது. அதன்படி பணித்தளங்களைக் கண்டு பிடிக்கும் குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுக்கள் தமிழ்நாட்டின் உள்ளே அமைந்த மக்களுக்கு முதலாவதாக சுவிசேஷத்தை அறிவிக்கும் நோக்கில், பணிக்கள ஆய்வை மேற்கொண்டன. குறிப்பாக, மாற்று இயக்கங்களைச் சேர்ந்த ஊழியர்கள் பணிபுரியும் இடங்களில் தங்கள் கவனத்தை இவர்கள் செலுத்தவில்லை. தாங்களே கண்ணீர்விட்டு, வேர்வை சிந்தி, விலைக்கிரயம் செலுத்தி ஆத்தும ஆதாயம் செய்ய வேண்டும் என்ற நோக்கில், இயேசுவைக் கேள்விப்பட்டிராத, சுவைத்திராத மக்கள் வாழும் இடங்களைக் கண்டு

பிடித்தனர். அவ்வறிக்கையைப் பேராய சுவிசேஷ ஜெபக் குழுவிற்குச் சமர்ப்பித்தனர். அக்குழுவின் அறிக்கையில் பரிந்துரை செய்யப் பட்டிருந்தபடி ஜாகீர், கல்ராயன்மலையைக் குமரிப் பேராயச் சுவிசேஷ ஜெபக்குழுவினர் சொந்தப் பணித்தளமாகத் தத்தெடுத்தனர். அதுமுதல் ஜெபிக்கத் தொடங்கினர். வில்லியம் கேரி இந்தியா வரும்போது, தன் நண்பர்களிடம் "ஜெபமாகிய கயிற்றை நீங்கள் பிடித்துக்கொள்ளுங்கள். நான் இந்தியாவாகிய கிணற்றுக்குள் இறங்குகிறேன்" என்று கூறினாராம். அதுபோல் குமரிப்பேராய மக்களின் அனுதின வாழ்வில் **ஜாகீர்** கல்ராயன் மலைவாழ் மக்களின் ஆத்மீக பாரம் ஜெபக்குறிப்புகளாய் மாறியது. தனி ஜெபத்தில், குடும்ப ஜெபத்தில், குழு ஜெபத்தில், உபவாச ஜெபத்தில் இவ்வூழியத்திற்காக மக்கள் ஜெபிக்க ஆரம்பித்தனர். ஜெபம் பல உள்ளங்களை அசைத்தது.

அ. அருள்திரு. டி. எலியாஸின் பயணம்

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் செயற்குழு 6-6-1977 ஆம் நாள் கூடியது. அக்குழு அருள்திரு. டி. எலியாஸ், திரு. எ. செல்வராஜ், தி.கெ. இரத்தினமணி வில்லியம் ஆகியோரை கல்ராயன் மலைக்கு மிஷனரிகளாக அனுப்பத் தீர்மானித்தது. அதன்பேரில் முதலாவதாக அருள்திரு. டி. எலியாஸ் அவர்களுக்கு பேராயர் சி. செல்வமணி அவர்கள் நியமன ஆணை வழங்கி 17-6-1977 ஆம் நாள் ஆசி கூறி மலைநாட்டு நற்செய்திப் பணிக்கு அனுப்பி வைத்தார். அவருடைய மாத ஊதியத்தை ஜெபக்குழு நேரடியாகக் கொடுக்க முன் வந்தது.

அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் தனது இரண்டாம் கட்ட மிஷனெறி ஊழியப் பயணத்தை 17-06-1977- ஆம் நாள் ஜாகீர் கல்ராயன் மலையை நோக்கித் தொடங்கினார். முதலாவது அம்மலையிலுள்ள தேக்கம்பட்டு கிராமத்தை 20-06-1977-ஆம் நாள் சென்றடைந்தார். இம்மலை, 1976 - ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர், இந்திராகாந்தி அவர்களின் 20 அம்ச திட்டத்தில் கொத்தடிமைத் தனத்திலிருந்து விடுதலைப் பெற்றதாகும். அம்மலை மக்கள் மிஷனெறி எலியாஸ் அவர்களைக் கண்டபோது ஆச்சரியப்பட்டு அறிவிலிகளாய் ஓடி ஒளிந்தனர். மூட நம்பிக்கைகளும், கல்வி அறிவும் இல்லாத இம்மக்களைக் கண்டு எலியாஸ் இரக்கம் கொண்டார். பின்னர் அக்கிராமத்தலைவரோடும், அங்குக் கூடி நின்ற மக்களோடும் இரக்கமாகப் பேசி, அவர்களின் இரக்கத்துக்கும் அன்புக்கும் ஆளானார். அக்கிராமத் தலைவர் திரு. அண்ணாமலைக் கவுண்டர் என்பவர் மிஷனெறி எலியாஸ் அவர்கள் தங்குவதற்கு 8 அடி நீளமும் 4 அம அகலமுமுள்ள தன் வீட்டு வராந்தாவைக் கொடுத்தார். அவ்விடத்தையே தனது உறைவிடமாக ஏற்றுக்

கொண்டு **ஆனந்தமே பரமானந்தமே - இயேசு அண்ணலை அண்டினோர்க் கானந்தமே** - என்ற பாடலைப் பாடி மகிழ்ச்சியாக இரவுப் பொழுதைக் கழித்தார். எலியாஸ் அவர்களின் வாழ்க்கை, பழகும் முறை ஆகியவற்றைக் கூர்ந்து நோக்கிய மலைமக்கள் அவர்மீது நம்பிக்கைக் கொண்டனர். அவர், அம்மக்களுக்கும் பாடல்கள், வசனங்கள், செய்திகள் வழி நற்செய்தியாகிய இயேசுவை எடுத்தியம்பினார். இரவுப் பொழுதுகளில் அக்கிராமப் பிள்ளைகள் மற்றும் வாலிபர்களை ஊர்த் தலைவர் வீட்டு முன் அழைத்து வந்து அவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கவும் தொடங்கினார். இவை அம்மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தன.

ஆ. எ. செல்லராஜ், கெ.ஆர். வில்லியம் ஆகியோரின் பணி

அன்பென்னும் ஆவியால் கட்டப்பட்ட திரு எ. செல்வராஜ், திரு கெ.ஆர். வில்லியம் ஆகியோர் தங்களுடைய இறையியல் கல்வியை முடித்தனர். சிலுவை நாதரை அறிவிக்கத் தூண்டுதல் பெற்ற இவர்கள் சுவிசேஷ ஜெபக்குழுவிலிருந்து நியமன ஆணைபெற்று 1977-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7-ஆம் நாள் மிஷனெறி எலியாஸ் அவர்களோடு ஊழியத்தில் இணைந்தார்கள். எலியாசின் உள்ளத்தில் இரட்டிப்பான மகிழ்ச்சிப் பொங்கியது. ஊழியம் வேகமடைந்தது. அச்சூழலில் என்.எம்.எஸ். இயக் கத்தின் சார்பில் ஜவ்வாது மலையில் பணிபுரிந்து வந்த திருவாளர்கள் பி. இராஜையன், எ.சி. நாயகம், டி. ஸ்டான்லி, என். விக்டர், ஜெ. பாலையன் மற்றும் சகோதரிகளான எஸ்தர் ரோனிக்கம், மதுரபாய் ஆகியோர்களைக் குமரிப்பேராயம் என்.எம்.எஸ். பணித்தளத்திலிருந்து திரும்ப அழைத்தது. அதற்குப் பின்னர் சுவிசேஷ ஜெபக்குழு அவ்வூழியர்களை 1978 செப்டம்பர் மாதம் கல்ராயன் மலை ஊழியத்திற்காக அனுப்பியது. இவ்வூழியர்களின் கடின முயற்சியால் அம்மலைப் பகுதிகள் வேகமாகக் கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளர்ச்சி கண்டன. ஊழியம் பரந்து விரிவடைந்தது. ஊழியத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு மிஷனெறி டி. எலியாஸ் அவர்கள் சேராப்பட்டு என்ற பணித்தளத்தை மையப்பகுதியாகத் தெரிந்தெடுத்தார்கள். ஆரம்பகால பணிக்களத் தொடக்கம், மிஷனெறிகளை அனுப்புதல் ஆகிய முயற்சிகளில் அன்றைய செயலர் பேரா. எ.வி. டைட்டஸ் அவர்களின் பங்கு பாராட்டத்தக்கது.

இ. நற்செய்தி அறிவித்த விதங்கள்

ஒரு மனிதன் தன்னை உருவாக்கியவரை அறிகிற வரையில் அவன் அனாதையே. இந்நிலையை மாற்றுவது கிறிஸ்துவை அறிந்தவர்களின்

பொறுப்பு என்பதை இம்மிஷனெறிகள் உணர்ந்து செயல்பட்டார்கள். அங்கு வாழ்ந்த ஆதிவாசி மக்களை, அவர்கள் இல்லங்களில் சந்தித்து, ஜெபம் ஏறெடுத்தனர். ஜெபம் செய்யும் முறையைக் கற்றும் கொடுத்தார்கள். பலரை வேலை செய்யும் இடங்களில் சென்று சந்தித்து கிறிஸ்துவை அறிவித்தனர். இரவு வேளைகளில் பாடல்கள் பாடித் திறந்தவெளிக் கூட்டங்களை ஏற்படுத்தி மக்களுக்கு நற்செய்தியினைக் கூறினார்கள். சிறுவர்களுக்குச் செய்கைப் பாடல்களைக் கற்றுக் கொடுத்தனர். சிறுசிறு குறு நாடகங்களை நடித்தும் காட்டினர். தனியாக மற்றும் குழுவாகச் சென்று சூழலுக்கேற்ப நற்செய்தியினை அறிவித்தார்கள். இரவில் தாங்கள் தங்கும் இடங்களில் இரவுப் பள்ளிகள் நடத்தி, சிறுவர்கள் மற்றும் வாலிபர்களுக்கு எழுத வாசிக்கக் கற்றுக் கொடுத்தனர். இதனால் மலைவாழ் மக்கள் அறியாமையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுபட்டனர்.

ஊழியம் நடைபெற்ற அனைத்து ஊர்களிலும் திருமறைக்கல்வி மற்றும் விடுமுறை வேதாகமப்பள்ளி போன்றவை சிறப்பாக நடைபெற்றன. ஊழியர்களின் அணுகுமுறைகளால் சிறியோர் முதல் பெரியோர் வரை கிறிஸ்துவை அறிந்து கொண்டனர். காலங்கள் மனிதனுக்குத் தேவன் ஈவாகக் கொடுத்த மாபெரும் பொக்கிஷங்களாகும். அவற்றை நன்முறையில் செயல்படுத்துகிறவனே நீதிமான் ஆவான். இவ்வூழியர்கள் அமைதி வழியில் ஆன்மீகப் புரட்சியை உருவாக்கத் துடிக்கும் தூண்களாவர். இவர்களுடைய இலட்சியம் ஒன்றே ஒன்று. அதுவே இறை அரசைக் கட்டி எழுப்பும் பணியாகும்.

2. கவிசேஷ ஜெபக்குழுவிற்கு ஆதரவுகளும் அர்ப்பணங்களும் (1977 - ஜூன் 20-க்குப் பின்)

இயேசுவை அறியாத மக்களுக்கு நற்செய்தியை அறிவிப்பது திருச்சபை மக்களின் பொறுப்பு. இதனைக் குமரிப் பேராயத் திருச்சபை மக்கள் உணர்ந்து மிஷனெறிப் பணியை ஒரு சவால் நிறைந்ததாக, காலந் தாழ்த்தாமல் கடமையுணர்வோடு பவுல் அப்போஸ்தலனைப் போல் வேகமாகவும் விறுவிறுப்பாகவும் செயல்படுத்த ஆர்வம் கொண்டனர். விதைக்கின்ற விதை, கொடுக்கின்ற காணிக்கை ஆகியவை செழிப்புடன் வளர்ந்து ஆலமரம் போல் படரும் என்பதை அன்று அவர்கள் அறியவில்லை. எனினும் ஜெபமாகிய ஊன்றுகோலைப் பிடித்து, நம்பிக்கையில் திடன் கொண்டு, மிஷனெறிகளைத் தாங்கினார்கள். தனிமனிதனாக, சபையாக, ஜெப ஐக்கியங்களாக, குடும்பங்களாகத் தாங்கும் பணி வேகமடைந்தது. தாங்கப்படும் மிஷனெறிகளை, தாங்கும்

மக்கள் தங்கள் சொந்த சபையில் வைத்து அர்ப்பணிக்கவும், அறிமுகம் செய்யவும் விரும்பினார்கள். அதற்கு ஏற்றாற்போல் கர்த்தர் அவர்களின் மனநிலைகளைப் பக்குவப்படுத்தினார்.

குலசேகரம் ஐக்கிய கிறிஸ்தவர் குழு

குலசேகரம் வட்டாரத்திலுள்ள கிறிஸ்தவர்கள் தங்களிடையே ஒற்றுமை வளரவும், நலிவுற்றோருக்கு உதவி செய்யும் நோக்கிலும் ஐக்கிய கிறிஸ்தவக் குழு ஒன்றினைத் தொடங்கி நடத்தி வருகின்றனர். தங்கள் பகுதியில் ஆவிக்குரிய நற்செய்திக் கூட்டங்களை நடத்துவதோடு மட்டுமல்லாமல் மிஷனெறி ஊழியங்களிலும் தங்களை ஈடுபடுத்தினர். இக்கிறிஸ்தவ ஐக்கியக் குழு சார்பில் 24-05-1978 முதல் ஒரு மிஷனெறிக்குரிய ஆதரவு நிதியினைச் சுவிசேஷ ஜெபக்குழுவிற்குக் கொடுத்தார்கள்.

குலசேகரம் சேகர சபைகள்

குலசேகரம் சேகர சபைகள் இணைந்து மிஷனெறி ஊழியத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர்.

1. முதல் மிஷனெறியாக குழிக்கோட்டுப் பகுதியைச் சேர்ந்த திரு. ஆர். பிரான்சிஸ் அவர்கள், அருள்திரு. றூஸ்வெல்ட் சுவாமிதாஸ் அவர்களால் 08-01-1995-ல் குலசேகரம் ஆலயத்தில் வைத்து அர்ப்பணித்து அனுப்பப்பட்டார்.
2. இரண்டாவது மிஷனெறியாக குப்பத்துறையைச் சார்ந்த திரு. ஜஸ்டின் பொன்ராஜ் அவர்கள், 07-01-1996-ல் அருள்திரு. றூஸ்வெல்ட் சுவாமிதாஸ், அவர்களால் குலசேகரம் ஆலயத்தில் வைத்து அர்ப்பணித்து அனுப்பப்பட்டார்.
3. மூன்றாவது மருத்துவ மிஷனெறியைத் தாங்க குலசேகரம் சபை முன்வந்தது. 24-02-2000-ம் நாள் திட்டுவிளைப் பகுதியைச் சேர்ந்த திருமதி. டெய்சிபாய் அவர்கள், மருத்துவ மிஷனெறியாக குலசேகரம் ஆலயத்தில் வைத்து பேராயர் எம்.ஐ. கேசரி அவர்களால் அர்ப்பணிக்கப்பட்டார்.

திருப்பத்தூர் ஆசிரமம்

திருப்பத்தூர் கிறிஸ்துகுல ஆசிரமத்தார், ஜெபக்குழு ஒன்றினைத் தொடங்கி நடத்தி வந்தனர். அவர்கள் 30-08-1978 முதல், சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு ஓர் ஊழியரைத் தாங்கும் நிதியைக் கொடுத்து ஆதரிக்கிறார்கள். பழுதற்ற பணியை அடையாளங்கண்டு செயல்பட்டனர்.

இராமவர்மபுரம் திருச்சபை

கிறிஸ்துவின் இறுதிக் கட்டளையை நிறைவேற்றத் துடித்த திருச்சபைகளில் இராமவர்மபுரம் திருச்சபையும் ஒன்று. இச்சபை 02-02-1979 முதல் ஒரு மிஷனெறிக்கான ஆதரவு நிதியினை வழங்கியது.

கொடுப்பைக்குழி திருச்சபை

அழியப்போகும் மக்களைக் காப்பாற்றுவதற்காகத் தேவன் தமது மக்களுக்குப் பதவி, சுகம், வசதிகள் அனைத்தையும் கொடுக்கிறார். கிரியை இல்லாத விசுவாசம் செத்ததைப் போல, செயல்பாடு இல்லாத சபையும் செத்ததே. ஒரு சபை தன் கடமையைக் கண்டிப்பாக செய்ய வேண்டும். சபையின் வளர்ச்சியில் பல்வேறு குழுக்களின் பங்கு முக்கியமானது. கொடுப்பைக்குழி சபையில் "சுடர்சுவிசேஷ ஜெபக்குழு" மிகவும் செயல் ஊக்கம் கொண்டதாகும். இக்குழு 08-08-1979 முதல் ஓர் ஊழியருக்கான செலவை ஏற்றுக் கொண்டது. அவர்களின் தூண்டுதலின் பேரில் திருடி. ஜார்ஜ் அவர்களின் குடும்பத்தினர் ஒரு மிஷனெறிக்குரிய நிதியைக் கொடுத்தனர். மிஷனெறியாக திருமதி. இராஜேஸ்வரி அவர்களை 20-04-1997 ஆம் நாள் அருள்திரு.சி. இரத்தினராஜ் அவர்கள் அர்ப்பணம் செய்தார்கள்.

திருவாளர் எம். சகாயதாஸ், மற்றும் சாம்செல்வதாஸ் மணி ஆகியோரின் குடும்பங்கள் இணைந்து திரு. சூரிபால் சதாவை ஆதரித்தனர். அன்னாருடைய அர்ப்பண ஆராதனை 15-06-1997 ஆம் நாள் கொடுப்பைக்குழி சபையில் வைத்து. அருள்திரு. ஜெ.வி. திலகதாஸ் அவர்களால் நடைபெற்றது.

"சுடர் சுவிசேஷ ஜெபக்குழு" வழியாக திரு. ஜார்ஜ் குடும்பத்தினர் மேலும் ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தனர். திரு. கிறிஸ்டோபர் ஜெயதிலகன் என்ற மிஷனெறி 20-06-1999-ல் கொடுப்பைக்குழி சபையில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

திரு. ஆர். சாம் அருள்தாஸ் அவர்களின் குடும்பத்தினர் ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தார்கள். திரு. தங்கத்துரை என்ற மிஷனெறியை 30-04-2000-ல் அருள்திரு. எம். ஆமோஸ் அவர்கள் கொடுப்பைக்குழி ஆலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்தார்கள்.

திரு. ஜார்ஜ் குடும்பம் மேலும் ஒரு மிஷனெறியைத் தாங்கியது. தேவதானபுரம் திரு. ஜாண் சகின் என்பவர் 11-06-2000-ம் நாள் அருள்திரு. பேரின்ப ஏசுதாஸ் அவர்களால் கொடுப்பைக்குழி ஆலயத்தில் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

படை படையாக மிஷனெறிகள் எழும்பியது நாட்டிலும் சபையிலும் வளர்ச்சியை ஏற்படுத்திற்று.

கோட்டையடி திருச்சபை

கோட்டையடி திருச்சபை 25-04-1980-ஆம் நாள் திரு. ஜி. டேவிட் ராமன் என்ற மிஷனெறியின் பொறுப்பை ஏற்றது. அன்னார் கோட்டையடி ஆலயத்தில் வைத்து அருள்திரு. எஸ்.டி. டதி அவர்களால் அர்ப்பணம் செய்து அனுப்பப்பட்டார்.

மேலும் இத்திருச்சபை திரு. பால்மணி அவர்களை 25-04-2000-ம் நாள் அர்ப்பணித்து அனுப்பியது. இவ்வர்ப்பண ஆராதனையைப் பேராயர் எம்.ஐ. கேசரி அவர்கள் கோட்டையடி ஆலயத்தில் வைத்து நடத்தினார்.

புத்தளம் திருச்சபை

1981-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் புத்தளம் திருச்சபை ஒரு மிஷனெறிக்கான உதவியைச் செய்து வந்தது. இச்சபையின் உறுப்பினரான திரு. சாம் இரத்தினராஜ் அவர்கள் ஒரு மிஷனெறியைத் தாங்கும் தீர்மானத்தைத் தெரிவித்தார்கள். பெனியேல் சபையைச் சேர்ந்த திரு. எஸ். கிங்ஸ்லி லிபன் ஜோயல் என்பவர் அன்னாரது மிஷனெறியாகக் கொடுக்கப்பட்டார். அவரது அர்ப்பண ஆராதனை அருள்திரு. தேவா ஏ.எல். பிறைட் அவர்களால் 18-02-2001-ல் புத்தளம் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது.

டதி மகளிர்ப் பள்ளி

மிஷனெறிகளைத் தாங்கும் பணியில் ஆலயங்களைத் தொடர்ந்து கல்வி நிறுவனங்களும் தங்களை இணைத்துக் கொண்டன. நாகர்கோவில் டதி மகளிர் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த ஆசிரியைகள் 1981-ஆம் ஆண்டுமுதல் ஒரு மிஷனெறிக்கான நிதியைக் கொடுத்து உதவினார்கள்.

இவ்வாசிரியைகள் மேலும் ஒரு மிஷனெறிக்கான நிதியைச் சேகரித்து 1985 செப்டம்பர் முதல் கொடுத்தார்கள். இவ்விதமாக ஊழியம் வளர்ந்தது.

பேராய இளைஞர் ஊழியக் குழு

குமரிப் பேராய உட்குழுக்களில் மிகவும் முக்கியமானதும் வளர்ச்சிப் பெற்றதும் இளைஞர் ஊழியமாகும். இக்குழுவினரின் சார்பில் 05-02-1982 முதல் ஒரு மிஷனெறிக்குரிய நிதி கொடுக்கப்பட்டது. ஊழியமும் வளர்ந்தது.

கொட்டாரம் திருச்சபை

மலைநாட்டு ஊழிய நற்செய்திப் பணிக்குக் கொட்டாரம் பகுதி கிறிஸ்தவர்கள் அதிகத் தூண்டுதலுடன் செயல்பட்டனர். கொட்டாரத்தில் செயல்பட்டு வந்த கவிசேஷ ஊழியக்குழு முதற்கண் ஒரு மிஷனெறிக்குரிய பொறுப்பை ஏற்றது.

அதன்பின்னர் கொட்டாரம் திருச்சபையார் ஒரு நற்செய்தித் தொண்டரை 1983 பெப்ருவரி மாதம் முதல் ஏற்று, உதவி செய்தனர்.

அவ்வூரைச் சேர்ந்த அருள்திரு. வேத மாணிக்கம் அவர்களின் குடும்பத்தினர், ஒரு மிஷனெறிக்கான நிதியைக் கொடுத்துத் தாங்கினார்கள். இவ்விதம் மிஷனெறி ஊழியமானது சபையாக, குழுவாக, தனி நபராகத் தாங்கப்பட்டு வளர்ந்தது.

கிறிஸ்துசபை, நாகர்கோவில்

நாகர்கோவில் கிறிஸ்து சபை மலைநாட்டில் பணிசெய்யும் மிஷனெறி ஒருவருக்குரிய நிதியை 1982 டிசம்பர் மாதம் முதல் கொடுத்தது. அதோடு, முதல் மிஷனெறியான அருள்திரு. டி. எலியாஸ் அவர்களின் ஊழியத்தின் ஒரு பங்கையும் ஏற்றுக் கொண்டது.

இச்சபையின் அங்கமான திரு. சந்திரன் குடும்பத்தினர், ஒரு மிஷனெறியின் செலவினைத் தாங்கிட முன்வந்தனர். அன்னாரின் உதவியுடன் திரு. சாமுவேல் கிருபாகரன் அவர்கள் 19-03-1995-ஆம் நாள் நாகர்கோவில் கிறிஸ்து கோவிலில் வைத்து அருள்திரு. எம். ஆமோஸ் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

குளத்துவிளை திருச்சபை

இத்திருச்சபை 1982 டிசம்பர் முதல் மலைநாட்டு ஊழியத்தில் ஒரு மிஷனெறிக்கு ஆகும் செலவில் பாதித் தொகையைக் கொடுத்துத் தாங்கியது. பின்னாட்களில் குளத்துவிளை போதகாதீன வட்டாரச் சபைகள் இணைந்து ஒரு மிஷனெறிக்காகும் செலவைக் கொடுக்க முன்வந்தனர். அதன்பேரில் திரு. பிறைட் கிறிஸ்துதாஸ் அவர்கள் குளத்துவிளை சபையில் வைத்து அருள்திரு. ஆர்.என். துரைராஜ் அவர்களால் 07-03-1993-ல் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

புதுக்குடியிருப்புத் திருச்சபை

இச்சபையின் உறுப்பினரான திரு. ஜெயப்பால் குடும்பத்தினர், பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு ஒரு மிஷனெறிக்குரிய நிதியை 1982-ஆம் வருடம் டிசம்பர் மாதம் முதல் கொடுத்தனர்.

இச்சபை, தான் தாங்கும் மிஷனெறியாக மைலோடு திரு. எம். ஜஸ்டின் ஜெயசேகர் என்பவரை ஏற்றுக் கொண்டது. பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் 09-03-1994-ஆம் நாள் புதுக்குடியிருப்பு ஆலயத்தில் வைத்து அன்னாரை அர்ப்பணம் செய்தார்.

கருங்கல் திருச்சபை

கருங்கல் திருச்சபை 1983-ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் முதல் ஒரு ஊழியரைத் தாங்கும் பொறுப்பை ஏற்றெடுத்தது.

கிறிஸ்தவ அருட்பணி சேவை நிறுவனம் (C.M.S.)

குமரிப் பேராயம் சார்பில் நடைபெறும் மலை ஊழிய நற்செய்திப் பணியின் செயல்பாட்டில் சி.எம்.எஸ். நிறுவனமும் தன்னை இணைத்துக் கொண்டது. இந்நிறுவனத் தலைவர்கள் மற்றும் பணியாளர்கள் கூடி 1985 மே மாதம் முதல் ஓர் ஊழியரின் நிதியைக் கொடுத்து உதவி வருகின்றனர். ஒருவரையொருவர் தாங்குவதே கிறிஸ்தவ நியதி ஆகும்.

குளச்சல் திருச்சபை

குளச்சல் திருச்சபை மிஷனெறி ஊழியத்தில் அதிக ஆர்வமுடன் செயல்பட்டு, முதற்கண் ஒரு மிஷனெறிக்காகும் செலவில் ஒரு பகுதியைக் கொடுத்தது. 1989 மே முதல் அதனை முழுமையாகக் கொடுத்து ஓர் ஊழியரைத் தாங்கியது. இச்சபையின் உறுப்பினரான பேரா. என். ஞானதாஸ் அவர்கள் குடும்பமாக ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தார். அதன்பேரில் திரு. பி. ஜாண்சன் அண்ணாமலை என்பவர் 03-08-1997-ஆம் நாள் பேராயர் எம்.ஐ. கேசரி அவர்களால் குளச்சல் ஆலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

இரேனிபுரம் திருச்சபை

இச்சபையில் செயல்படும் ஜெபக்குழுவானது, மலையில் பணியாற்றும் ஒரு மிஷனெறிக்கான செலவினை ஏற்றெடுத்தது. 1989 மேய் மாதம் முதல் அவருக்கான நிதியைக் கொடுத்து ஆதரித்தது. முதற்கண் திரு. மணி ஏசுதாசன் அவர்களும் சில ஆண்டுகளுக்குப் பின் மணி ஏசுதானுக்குப் பதிலாக திரு. கில்பர்ட் அவர்களும் மிஷனெறிகளாக அர்ப்பணம் செய்யப்பட்டார்கள்.

மைலோடு திருச்சபை

இச்சபையின் உறுப்பினரான அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் குடும்பமாக ஒரு மிஷனெறிக்காகும் செலவை 1989 மே முதல் ஏற்றுக்

கொண்டார்கள். அவர்கள் மூலம் ஐஇஎம். மிஷனெறியான திரு. விக்டர் சித்தர் என்பவர். பேராய சுவிசேஷ ஜெபக்குழு வழியாகத் தாங்கப்பட்டார். இவ்வூழியருக்கான நிதியை எலியாஸ் அவர்கள் மைலோடு திருச்சபை வழியாகக் கொடுக்கிறார்.

பேராசிரியர் செல்வின் குடும்பம்

இலட்சுமிபுரம் கலைக் கல்லூரி முன்னாள் முதல்வர் பேராசிரியர் செல்வின் டேவிட் அவர்கள் குடும்பமாக 1989 மே மாதம் முதல் ஒரு மிஷனெறியைத் தாங்க நிதி உதவி செய்தார்கள். ஜெபக்குழுவின் சார்பில் முன்னேற்றப் பணியாளரான அருள்திரு. என். விக்டர் அவர்கள், அக்குடும்பத்தினரின் மிஷனெறியாகக் கொடுக்கப்பட்டார்.

பேராசிரியர் ஜேம்ஸ் குடும்பம்

ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரிப் பேராசிரியர் ஜேம்ஸ் அவர்கள் குடும்பமாக ஒரு மிஷனெறிக்காகும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார்கள். [illegible] சபையைச் சேர்ந்த குமாரி பிளாரன்ஸ் அவர்கள் அக்குடும்பத்திற்குரிய மிஷனெறியாகக் கொடுக்கப்பட்டார். அன்னார் [illegible]-1989-ஆம் நாள் நேசமணி நகர் ஆலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

தேவிகோடு திருச்சபை

தேவிகோடு திருச்சபை படிப்படியாக பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியத்திற்கு ஆதரவு நிதியினைக் கொடுத்து வந்தது. [illegible]-ஆம் வருடம் மே மாதம் முதல் ஓர் ஊழியருக்கான முழு [illegible]யும் கொடுத்து ஆதரித்தது. அதன்பேரில் திரு. பி. [illegible] அவர்கள் 27-08-1989-ல் அச்சபை மிஷனெறியாக அறிமுகப்படுத்தப்பட்டார்.

பின்னர் தேவிகோடு சேகர சபைகளாக ஒரு மிஷனெறிக்கான உதவியைச் செய்தார்கள். பாரக்கன்விளையைச் சேர்ந்த திருமதி. பி. இரத்தினபாய் பாலையன் அவர்கள். அச்சபைக்குரிய மிஷனெறியாக [illegible]-ஆம் நாள் தேவிகோடு சபையில் வைத்து அருள்திரு. ஓய். [illegible] அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

[illegible]புரம் திருச்சபை

[illegible]புரம் திருச்சபைக்குப் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் சார்பில் மிஷனெறி ஜெ. கால்டுவெல் அவர்கள் கொடுக்கப்பட்டார். அன்னார் [illegible] ஆலயத்தில் வைத்து பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்களால் [illegible]-1989 ஆம் நாள் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

அனந்தநாடார் குடி திருச்சபை

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின். மிஷனெறி ஒருவருக்குரிய ஆதரவு நிதியினைக் கொடுக்க 19-11-1989 மே மாதம் முதல் இச்சபை முன்வந்தது. மணலியைச் சேர்ந்த திரு. டேவிட்சன் அவர்கள் அச்சபையில் வைத்து அருள்திரு. ஏ.ஜே.எம். கேசரி அவர்களால் மிஷனெறியாக அர்ப்பணிக்கப்பட்டார்.

வெங்கஞ்சி திருச்சபை

1989-ஆம் ஆண்டுமுதல் இச்சபை பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு, ஒரு மிஷனெறிக்கான நிதியைக் கொடுத்து ஆதரித்தது. மிஷனெறி கிருஷ்ணதாஸ் அவர்கள் வெங்கஞ்சி சபையில் வைத்து அருள்திரு. ஜெ. ஜஸ்டின் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் செயற்குழு

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் செயற்குழு உறுப்பினர்கள் இணைந்து, தாங்களாகவே ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தனர். அதற்குரிய நிதியை 1989-ஆம் ஆண்டுமுதல் கொடுத்தனர். சுவிசேஷ ஊழியத்தின் தேவையை அறிந்து தாங்கும் மனிதர்களாகத் தங்களையும் இணைத்துக் கொண்டனர்.

கடமலைக்குன்று திருச்சபை

1990-ஆம் ஆண்டுமுதல் ஒரு மிஷனெறிக்காகும் செலவில் பெரும்பகுதியை இச்சபையினர் கொடுத்து உதவினர். அவர்களுக்குரிய மிஷனெறியாக திரு. எம்.ஆர். எட்வின் அவர்கள் நியமிக்கப்பட்டார்.

மேய்க்காமண்டபம் ஒய்.எம்.சி.ஏ. (YMCA)

மேய்க்காமண்டபம் ஒய்.எம்.சி.ஏ.-யின் அங்கத்தினர்கள் சுவிசேஷ ஜெபக்குழு சார்பில் மிஷனெறி ஒருவரைத் தாங்க முன்வந்தனர். அவர்களுக்குரிய மிஷனெறியாக திரு. ஆர். கிறிஸ்டோபர் என்பவர் நியமிக்கப்பட்டார். அன்னாரது அர்ப்பண ஆராதனை 12-07-1998-ல் கடமலைக்குன்று ஆலயத்தில் வைத்துப் பேராயர் எம்.ஐ. கேசரி அவர்களால் நடத்தப்பட்டது.

ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி

இக்கல்லூரி மேலைநாட்டு மிஷனெறிகளால் ஆங்கிலப் பள்ளியாகத் தொடங்கப்பட்டு 1893-ல் கல்லூரியாக வளர்ந்தது. செப்டிமஸ் ஸ்காட் என்பவரின் சிறப்பான நன்கொடையால், ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி எனப்பெயர் பெற்றது. இக்கல்லூரியின் ஆசிரியர்கள் மிஷனெறி

ஊழியங்களில் மிகவும் ஆர்வம் செலுத்தினர். இவர்கள் அனைவரும் இணைந்து 1991 டிசம்பர் முதல் பேராய [illegible] ஜெபக்குழுவின் ஊழியத்திற்கு ஒரு மிஷனெறிக்கான ஆதரவு நிதியினைக் கொடுக்க முன்வந்தனர். காரக்கோணம் பகுதியைச் சேர்ந்த திரு. பிரைசன்ராஜ் [illegible] அக்கரைப்பூரில் சிற்றாலயத்தில் வைத்து 24-03-1992-ல் அருள்திரு [illegible] ஆபிரகாம் அவர்களால் அர்ப்பணம் செய்து அனுப்பப்பட்டார்.

ஆரல்வாய்மொழி திருச்சபை

ஆரல்வாய்மொழி திருச்சபைப் பேராய [illegible] ஜெபக்குழுவிற்கு [illegible]-1991 முதல் ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மிஷனெறி திரு. பெஞ்சமின் ஜெயசீலன் ஆவார். அன்னாரை அருள்திரு. பொன். ஜான்சன் அவர்கள் ஆரல்வாய்மொழி திருச்சபையில் வைத்து 08-09-1991-ஆம் நாள் அர்ப்பணம் செய்தார்.

ஆற்றூர் சேகரத் திருச்சபை

வெளிநாட்டு ஊழியங்களைத் தாங்குவதில் சபைகள் நாளுக்கு நாள் வளர்ந்து முன்னேறின. ஆற்றூர் திருச்சபை மிஷனெறி ஜெயவட் ஜெபசீலன் அவர்களை 15-09-1991 முதல் தாங்க முன்வந்தது. அன்னாருடைய அர்ப்பண ஆராதனை அருள்திரு. ரூஸ்வெல்ட் ஆபிரகாம் அவர்களால் ஆற்றூர் தேவாலயத்தில் வைத்து நடத்தப்பட்டது.

இச்சபை தனது இரண்டாவது மிஷனெறியாக திருமதி. தங்கா [illegible] அவர்களை ஏற்றுக் கொண்டது. அன்னாரது அர்ப்பண ஆராதனை 14-04-1996-ல் அருள்திரு. ஜாஸ்றீன் அவர்களால் ஆற்றூர் தேவாலயத்தில் நடைபெற்றது.

மயிலாடி திருச்சபை

குமரிக் கிறிஸ்தவத்தின் வரலாற்றில் மங்காத ஒளியாகத் திகழ்வதும், முதல் சீர்திருத்த ஆலயம் கட்டப்பட்டதுமாகிய இடம் மயிலாடி ஆகும். வட இந்தியப் பகுதிகளில், ஊழியம் அறிவித்த ஒரு மிஷனெறியைத் தாங்க இச்சபை முன்வந்தது. ஒரிஸாவில் தானேசந்த் பகுதியில் திரு. [illegible] சந்திரகாந்தா மற்றும் இரு வாலிபர்களின் ஊழியத்தால் சுமார் [illegible] நபர்கள் விசுவாசிகளாக மாறினர். அம்மக்களைச் சந்திக்க அருள்திரு. [illegible] எலியாஸ், அருள்திரு. எம். ராஜையன், அருள்திரு. ஜஸ்டின் ஆகியோர் 1991 ஏப்ரல் மாதம் 17 முதல் 24 வரையுள்ள நாட்களில் ஒரிஸா சென்றனர். மனம் மாற்றம் பெற்றிருந்த விசுவாசிகளுக்கு அருள்திரு. எம். ராஜையன் அவர்கள் 21-04-1991-ல் திருமுழுக்குக் கொடுத்தார். அங்கு நடைபெற்றிருந்த பணியின் சிறப்பைக் கண்ட நம் போதகர்கள், அங்கு

தங்கியிருந்து ஊழியம் செய்யும் மிஷனெறிகளை அனுப்பத் தீர்மானித்தனர்.

இத்தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள மயிலாடி சபை முன்வந்தது. அவர்களின் மிஷனெறியாக திரு. பிரபாஷ் சந்திரகாந்தா அவர்கள் கொடுக்கப்பட்டார். அன்னாரைப் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் 27-09-1991-ஆம் நாள் மயிலாடி ஆலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்தார்கள்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பணிபுரியும், திரு. பால் ஜோசப் குமார் அவர்களது நண்பர் ஜெனி ஒயிஸ் கிளார்க் அவர்களால், திருமதி. இரத்தினபாய் அவர்கள் தாங்கப்பட்டார். அன்னாரின் அர்ப்பண ஆராதனை 31-01-2000-ஆம் நாள் மயிலாடி ஆலயத்தில் வைத்து அருள்திரு. டி. இரத்தினராஜ் அவர்களால் நடத்தப்பட்டது.

நாகர்கோவில் கஸ்பா திருச்சபை

திருச்சபையின் வளர்ச்சி என்பது, கட்டிடங்களால் உருவாக்கப்படுவதல்ல. இயேசுவை அறியாதோருக்குச் சிலுவையின் அன்பை, இரத்தத்தின் மகிமையை அறிவிப்பதும் உணர்த்துவதுமாகும். நாகர்கோவில் கஸ்பா சபையின் 50 குடும்பத்தினர்கள் சேர்ந்து ஒரிஸாவைச் சேர்ந்த திரு. ராமமூர்த்தி காந்தா என்ற மிஷனெறியை ஒரிசாவில் பணிபுரியும் நோக்கில் உதவிசெய்ய முன்வந்தார்கள். அன்னாரை நாகர்கோவில் கஸ்பா சபையில் வைத்து அருள்திரு. எம். ஆமோஸ் அவர்கள் 29-09-1991-ஆம் நாள் அர்ப்பணம் செய்தார்கள்.

கஸ்பா சபையின் முதுநிலை (Senior) பக்தி முயற்சி சங்க அங்கத்தினர்கள் ஒரு மிஷனெறிக்கு நிதிஉதவி அளிக்க முன்வந்தார்கள். அதனை ஏற்று, ஆரல்வாய்மொழியைச் சேர்ந்த திரு. எஸ். செல்வராஜ் அவர்களைப், பேராய சுவிசேஷ ஜெபக்குழு மிஷனெறியாகக் கொடுத்தது. அன்னாருடைய அர்ப்பண ஆராதனை அருள்திரு. எம். ஐ. கேசரி அவர்களால் 26-09-1993 அன்று கஸ்பா ஆலயத்தில் வைத்து நடைபெற்றது.

இச்சபை தனது 175-ஆவது நிறைவு விழாவின்போது மற்றுமொரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தது. அதன்படி திரு. ஆர். சார்லஸ் அவர்களைப் பிரதமப்பேராயர்; அறிவர். வசந்த் பி. டாண்டின் அவர்கள் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் முன்னிலையில் 09-10-1994-ஆம் நாள் அர்ப்பணம் செய்தார்கள்.

ஆர்வத்திற்கேற்ப மற்றுமொரு மிஷனெறியாக திருமதி. சலீலா பாய் அவர்கள் 12-05-1996-ஆம் நாள் அருள்திரு. எம்.ஐ. கேசரி அவர்களால் அர்ப்பணித்து அனுப்பப்பட்டார்.

இவ்வாலயத்தில் இயங்கிவரும் சுவிசேஷ ஊழியக் குழுவினரது ஆதரவில் திட்டுவிளையைச் சேர்ந்த திரு. டேவிட் மனோகர் மிஷனெறியாகவும், செல்வி. அமுதா என்பவர் மருத்துவப்பணிக்காகவும் 14-05-2000-ஆம் நாள் அருள்திரு. ஒய். ஜே.ஜே. பாக்கியநாதன் அவர்களால் அர்ப்பணித்து அனுப்பப்பட்டார்கள். இவ்விதம் ஊழியமானது நாளுக்கு நாள் வளர்ந்து ஒளிவிடுகிறது.

நாகர்கோவில் சேகர ஊழியர்கள்

நாகர்கோவில் சேகரத்தின் ஊழியர்கள் அனைவரும் இணைந்து ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தனர். அவர்களுக்கு திரு. எ. விசுவாசம் அவர்கள் மிஷனெறியாகக் கொடுக்கப்பட்டார். அன்னாருடைய அர்ப்பண ஆராதனை பிலிப்ஸ்புரம் ஆலயத்தில் வைத்து அருள்திரு. எம். ஆமோஸ் அவர்களால் 31-01-1992-ஆம் நாள் நடைபெற்றது.

ஈத்தவிளை திருச்சபை

திரு. சி. சாலோமோன் அவர்கள் ஈத்தவிளை திருச்சபை தாங்கும் மிஷனெறி ஆவார். அன்னாருடைய அர்ப்பண ஆராதனை ஈத்தவிளை சபையில் வைத்து 05-01-1992-ஆம் நாள் அருள்திரு. ஒய். ராபின்சன் அவர்களால் நடத்தப்பட்டது.

அச்சபையின் உறுப்பினரான பேராசிரியர் அறிவர். எஸ். ஹெக்டர் அவர்கள் குடும்பமாக ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தார். திரு. முரளி சங்கர் அவர்கள் அன்னாருக்குரிய குடும்ப மிஷனெறியாகக் கொடுக்கப்பட்டார். இம்மிஷனெறியை ஈத்தவிளை சபையில் வைத்து அருள்திரு. இ. செல்வராஜ் அவர்கள் 14-04-2002-ஆம் நாள் அறிமுகம் செய்து வைத்தார்கள்.

சீயோன்புரம் திருச்சபை

இச்சபையின் மிஷனெறியாக திரு. ரசல்தாஸ் அவர்கள் [illegible] 04 1992-ஆம் நாள், இதே சபையில் வைத்து அருள்திரு. ஆர்.என். துரைராஜ் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

பயணம் திருச்சபை

பயணம் திருச்சபையினரது நிதி உதவியினால் கடமாங்குழியைச் சேர்ந்த என். குமாரசுவாமி அவர்கள் அச்சபைக்குரிய மிஷனெறியாகக்

கொடுக்கப்பட்டார். அன்னாரது மிஷனெறி அர்ப்பண ஆராதனை 12-07-1992-ஆம் நாள் அருள்திரு எம்.ஐ. கேசரி அவர்களால் பயணம் ஆலயத்தில் வைத்து நடத்தப்பட்டது.

காஞ்சிபுரம் திருச்சபை

காஞ்சிரபுரம் திருச்சபை ஒரு மிஷனெறிக்கான நிதி உதவியை அளித்தது. சபையின் மிஷனெறியாக திரு. டி. சுந்தரதாஸ் என்பவர் கொடுக்கப்பட்டார். அம்மிஷனெறியை அருள்திரு. எம்.ஐ. கேசரி அவர்கள் 16-08-1992-ஆம் நாள் காஞ்சிரபுரம் ஆலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்தார்கள்.

காரியாவிளை திருச்சபை

'இந்திய நற்செய்திக் கழகம்' என்ற அமைப்பு காரியாவிளைத் திருச்சபையில் செயல்பட்டு வந்தது. இவ்வமைப்பு மலைநாட்டு ஊழியத்தில் ஒரு மிஷனெறிக்கு ஆகும் நிதியினைக் கொடுத்தது. மிஷனெறியாக மலை விசுவாசி திரு. கே. சவுந்தரராஜன் அவர்கள் 10-01-1993-ஆம் நாள் அருள்திரு. ஏ. துரைமணி அவர்களால் காரியாவிளை சபையில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார். இம்மிஷனெறியைத் தாங்குவதில் அவ்வமைப்பின் செயலர் திரு. மாணிக்க செல்வராஜின் பங்கு குறிப்பிடத்தக்கது.

இச்சபையின் இரண்டாவது மிஷனெறியாகப் புதுக்குடியிருப்பைச் சார்ந்த திரு. ஹென்றி மார்ட்டின் லூதர் அவர்கள் 28-08-1994-ஆம் நாள் அருள்திரு. அறிவர். ஞான ராபின்சன் அவர்களால் மேற்படி சபையில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

வடக்கு ஆண்டித்தோப்பு திருச்சபை

இச்சபையின் அங்கம் திரு. ஜேம்ஸ் மோசஸ்பால் அவர்கள் ஒரு மிஷனெறியைத் தாங்கும் பொறுப்பினை ஏற்றார்கள். அன்னாருக்குக் கொடுக்கப்பட்ட மிஷனெறி எம். ஜெ. ஜெயசிங் அவர்கள் 11-03-1993-ல் அருள்திரு. அறிவர். எ. மாசில்லாமணி அவர்களால் வடக்கு ஆண்டித்தோப்பு ஆலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

மண்டைக்காடு திருச்சபை

மண்டைக்காடு திருச்சபை தனது மிஷனெறியாக மலையின் விசுவாசி திரு. ற்றி. கிதியோன் அவர்களை ஏற்றெடுத்துத் தாங்க முன்வந்தது. அன்னாரது அர்ப்பண ஆராதனை அருள்திரு. ஒய். ஜே.ஜே. பாக்கியநாதன் அவர்களால் மண்டைக்காடு ஆலயத்தில் வைத்து 11-07-1993-ல் நடத்தப்பட்டது.

மேய்க்கோடு திருச்சபை

மேய்க்கோடு திருச்சபை பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு திருநெல்வேலியைச் சேர்ந்த திரு. ஜெ. மார்ட்டின் ஆசீர்வாதம் அவர்களை மிஷனெறியாக அனுப்பியது. அன்னாரது அர்ப்பண ஆராதனை, 19-09-1993-ஆம் நாள் அருள்திரு. ற்றி. நெகேமியா அவர்களால் மேய்க்கோடு ஆலயத்தில் வைத்து நடத்தப்பட்டது.

விராலிக் காட்டுவிளை திருச்சபை

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவால், விராலிக்காட்டுவிளை திருச்சபைக்கு மிஷனெறி திருமதி. மேக்தலின் பிரசீலியா அவர்கள் கொடுக்கப்பட்டார்கள். அருள்திரு. ஒய். ஜே.ஜே. பாக்கியநாதன் அவர்கள் 19-09-1993-ஆம் நாள் விராலிக்காட்டுவிளை ஆலயத்தில் வைத்து அன்னாரை அர்ப்பணம் செய்தார்கள்.

மார்த்தாண்டம் திருச்சபை

பல ஊழியர்களை மிஷனெறி களங்களுக்கு அனுப்பி வெற்றி கண்ட திருச்சபைகளுள் இதுவும் ஒன்றாகும். இத்திருச்சபை முதற்கண் மிஷனெறி பணிக்களங்களில் ஒரு மருத்துவத் தாதியைத் தாங்கியது.

தனது இரண்டாவது மிஷனெறியாக திரு. பி.கே. பிரின்ஸ் அவர்களை 05-09-1993-ஆம் நாளிலும், மூன்றாவது மிஷனறியாக திரு. பாஸ்கர் டேனியல் அவர்களை 26-12-1993-ஆம் நாளிலும் அனுப்பியது. மேற்கூறியவர்களை அருள்திரு. எ. கிறிஸ்டோபர்தாஸ் அவர்கள் அதே சபையில் வைத்து அர்ப்பனம் செய்தார்கள்.

இச்சபையின் அங்கத்தினரான டாக்டர். ரெவி கமலசேகர் குடும்பத்தினர் மிஷனெறி திரு. ராபின் வில்பிரட் அவர்களைத் தாங்க முன்வந்தனர். அன்னாருடைய அர்ப்பண ஆராதனை 03-09-1995-ல் மார்த்தாண்டம் ஆலயத்தில் வைத்து அருள்திரு. எ. கிறிஸ்டோபர்தாஸ் அவர்களால் நடத்தப்பட்டது.

மீண்டும், திரு. பால்சுந்தரம் அவர்கள் குடும்பமாக ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தனர். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மிஷனெறி திருமதி. குளோறி ஒய்ஸ்லைட் என்பவர் 11-05-1997-ல் அருள்திரு. ஒய். ஜேக்கப் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

சபையின், ஆண்கள் ஜெபக்குழுவினர் ஒரு மிஷனெறியை ஆதரிக்க நிதி உதவி செய்தனர். அவர்களுக்குரிய மிஷனெறியாக திருமதி. மேழ்சி ஜெகடியான் என்பவர் கொடுக்கப்பட்டார். அம்மிஷனெறியின் அர்ப்பண

ஆராதனை அருள்திரு. ஒய். பீட்டர் அவர்களால் 26-12-1999-ல் மார்த்தாண்டம் ஆலயத்தில் நடைபெற்றது.

நேசர்புரம் திருச்சபை

இயேசுவை அறியாத பகுதிகளில் மிஷனெறிகளை அனுப்பி நற்செய்தியினை அறிவிப்பதில் சபைகள் பல தாகம் பெற்றன. நேசர்புரம் திருச்சபை 28-11-1993-ல் திரு. கெ. தேவராஜன் அவர்களை மிஷனெறியாக ஏற்றது. அன்னாருடைய அர்ப்பண ஆராதனையை அருள்திரு. பி.ஜே. ஜெயசீலன் அவர்கள் அச்சபையில் வைத்து நடத்தினார்கள்.

தொடர்ந்து இத்திருச்சபை 09-02-1997-ல் தனது இரண்டாவது மிஷனெறியை அனுப்பியது. மிஷனெறி திரு. டபிள்யு. ஜோயல் மெர்சன் அவர்களை நேசர்புரம் சபையில் வைத்து அருள்திரு. பி.ஜே. ஜெயசீலன் அவர்கள் அர்ப்பணம் செய்தார்கள்.

கிறிஸ்துகோயில் திருச்சபை - பள்ளியாடி

இத்திருச்சபையின் அங்கமாகிய திரு. ற்றி. ஐசக் அவர்கள் 1994 ஜனவரி 30-ஆம் நாள், டி. ஜெயசேகரன் என்ற மிஷனெறியைத் தாங்கும் பொறுப்பை ஏற்றார்கள். அன்னாரைப் போதகர் ரெஜினால்ட் ஜோசப் அவர்கள் பள்ளியாடி சபையில் வைத்து அர்ப்பணம் செய்தார்.

திரு. ற்றி. ஐசக் அவர்கள் மேலும் ஒரு மிஷனெறியைத் தாங்கும் பொறுப்பை ஏற்றார்கள். அன்னாருக்குக் கொடுக்கப்பட்ட மிஷனெறி திருமதி. கரோலின் பீட்டர் அவர்கள் 14-05-1995-ஆம் நாள் அருள்திரு. ரெஜினால்ட் ஜோசப் அவர்களால் இச்சபையில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

இத்திருச்சபையின் மற்றொரு குடும்பமாகிய திரு. இரத்தினதாஸ் அவர்களும் ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தார்கள். அவர்களின் மிஷனெறியாக செல்வி. பிரிசில்லா மீனாட்சி அவர்கள் 01-12-1996-ஆம் நாள் அச்சபையில் வைத்து அருள்திரு. ரெஜினால்ட் ஜோசப் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டார்கள்.

இச்சபையின் சார்பில் ஒரு மிஷனெறிக்கான நிதி கொடுக்கப்பட்டது. திரு. ஜாண் பெருமாள் என்பவரை இச்சபையில் வைத்துப் பேராயர் எம்.ஐ. கேசரி அவர்கள் 13-09-1998-ஆம் நாள் பேராயர் அறிவர். எஸ்றா சற்குணம் அவர்களின் முன்னிலையில் அர்ப்பணம் செய்தார்கள்.

திரு. ற்றி. ஐசக் அவர்களின் குடும்பத்தார் மேலும் ஒரு மிஷனெறிக்கு உதவி செய்தனர். அதன்பேரில் 13-08-2000-ஆம் நாள் செல்வி. துரை

செலினா அவர்களை அருள்திரு. கெ.எம். தேவராஜ் அவர்கள் இதே சபையில் வைத்து அர்ப்பணம் செய்தார்.

திரு. ற்றி ஐசக் அவர்களின் புதல்வன் திரு. ஐ. கிங்சால் அவர்களும் ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தார். அன்னாருக்குரிய மிஷனெறியாக, திரு. ஜோதிசாகர் அவர்கள் 13-08-2000-ஆம் நாள் அருள்திரு. கெ.எம். தேவராஜ் அவர்களால் இச்சபையில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்கள்.

திருச்சபைகளிலும், நாட்டிலும் எழுப்புதல் தீ பற்றிப் பிடிக்க வேண்டுமெனில் ற்றி. ஐசக் அவர்களைப் போன்றோர் பலர், சபைகள் தோறும் எழும்ப வேண்டும்.

நேசமணி நினைவுக் கிறிஸ்தலக் கல்லூரி

சபைகள் மற்றும் குடும்பங்கள் மிஷனெறிகளைத் தாங்கி ஆதரிப்பது போல் கல்வி நிறுவனங்களும் மிஷனெறிகளைத் தாங்க முன்வந்தன. நேசமணி நினைவுக் கிறிஸ்தவக் கல்லூரிப் பேராசிரியர்களும் இதர பணியாளர்களும் இணைந்து ஒரு மிஷனெறிக்கான நிதியைக் கொடுத்தனர். அவர்களுக்குரிய மிஷனெறியாக மலை விசுவாசி திரு. மார்சல் முருகேசன் என்பவர் கொடுக்கப்பட்டார். அன்னார் கல்லூரிச் சிற்றாலயத்தில் வைத்து 11-03-1994-ஆம் நாள் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

வடசேரி திருச்சபை

வடசேரி சபையைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர், ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தனர். ஜேம்ஸ் டவுண் சபையைச் சேர்ந்த திரு. அன்னராஜ் பாண்டியன் அவர்கள் மிஷனெறியாகக் கொடுக்கப்பட்டார். அவர், வடசேரி ஆலயத்தில் வைத்து 17-04-1994-ஆம் நாள் அருள்திரு. அறிவர். எ. மாசில்லாமணி அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

களியங்காடு திருச்சபை

களியங்காடு திருச்சபை, திரு. பி. மனோகரன் அவர்களை மிஷனெறியாக 17-04-1994-ல் ஏற்றுக் கொண்டது. இவரைப் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் களியங்காடு ஆலயத்தில் வைத்து அதே நாளில் அர்ப்பணம் செய்தார்.

இச்சபையின் இரண்டாவது மிஷனெறியாக திருச்சியைச் சேர்ந்த எஸ். விக்டர் ஜெயராஜ் அவர்களைப் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் 19-05-1996-ல் இச்சபையில் வைத்து அர்ப்பணம் செய்தார்.

சேனம்விளை திருச்சபை

சேனம்விளை சபையின் சபைநாள் விழாவான 15-05-1994-ஆம் நாள் ஒரு மிஷனெறியைத் தாங்க அச்சபையினர் முன்வந்தனர். அதன்பேரில் ஒரிசா மாநிலத்தில் பணியாற்றும் திரு. எம்.ஆர். ஜோதி அவர்களை, சேனம்விளை ஆலயத்தில் வைத்து, அருள்திரு. இ. செல்வராஜ் அவர்களின் அழைப்பின் பேரில் அருள்திரு. ஜஸ்டின் என். ஆரீஸ் அவர்கள் அர்ப்பணம் செய்தார்கள்.

நெய்யூர் மருத்துவமனை

இம்மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர்களும் இதரப் பணியாளர்களும் சேர்ந்து ஒரு மிஷனெறிக்கான நிதியைக் கொடுத்தனர். இவர்களுக்குரிய மிஷனெறியாக மலை விசுவாசி செல்வி. மெர்லின் தனக்கொடி என்பவர் கொடுக்கப்பட்டார். அன்னாரை 19-7-1994-ல் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் மருத்துவமனை சிற்றாலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்தார்.

குழித்துறை திருச்சபை

இச்சபையின் முதல் மிஷனெறியாக திரு. ரவிராஜன் அவர்கள் அர்ப்பணம் செய்யப்பட்டார்கள்.

மலை விசுவாசி திரு. பி. டேவிட் கோவிந்தராசு அவர்களை இத்திருச்சபை தனது இரண்டாம் மிஷனெறியாக ஏற்றுக் கொண்டது. அருள்திரு. வி. இம்மானுவேல் அவர்கள், குழித்துறை ஆலயத்தில் வைத்து 21-08-1994-ஆம் நாள் அன்னாரை அர்ப்பணித்தார்கள்.

இத்திருச்சபையின் குடும்பத்தினரான திரு. எமர்சன் அவர்கள் ஒரு மிஷனெறியைத் தாங்கும் பொறுப்பை ஏற்றார். அன்னாருக்குரிய மிஷனெறியாக திரு. இளங்கோவன் அவர்களை, அருள்திரு. அறிவர். சி. இரத்தினதாஸ் அவர்கள் 06-02-2000-ஆம் நாள் குழித்துறை ஆலயத்தில் வைத்து அர்ப்பணித்து அனுப்பினார்கள்.

மருதங்கோடு திருச்சபை

மிஷனெறிகளைத் தாங்குவதில் இத்திருச்சபை மிகவும் ஆர்வம் கொண்டதாகும். இச்சபையின் உறுப்பினரான திரு. பி. டென்சிங் பினற் குடும்பத்தினர் மலைநாட்டு ஊழியத்தில் ஓர் அருட்பணியாளரைத் தாங்க முன்வந்தனர். அவர்கள் சார்பில் மலை விசுவாசியான திரு. வேதீயார் என்பவர் 04-09-1994-ல் அருள்திரு. ஏ.ஜே.எம். கேசரி அவர்களால் மருதங்கோடு ஆலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

[illegible] திரு. அ. சாலோம் அவர்கள் ஒரு மிஷனெறியைத் தாங்க இசைவு தெரிவித்தார்கள். அன்னாரது மிஷனெறியாக [illegible] திரு. டேவிட் அண்ணாமலை [illegible] பேராயர் [illegible] கேசரி அவர்கள் 24-12-1997-ல் மேற்படி [illegible] வைத்து அர்ப்பணம் செய்தார்கள்.

திரு. கே. சாலொமோன் கணபதி என்ற மிஷனெறியை இச்சபை தாங்க முன்வந்தது. மிஷனெறியின் அர்ப்பண ஆராதனை [illegible] ஆம் நாள் அச்சபையில் வைத்து அருள்திரு. ஏ.ஜே. எம். கேசரி அவர்களால் நடத்தப்பட்டது.

[illegible]தங்கோடு திருச்சபையாக ஒரு மிஷனெறியைத் தாங்க [illegible] புத்தளம் சபையைச் சேர்ந்த மிஷனெறி திரு. ஆனந்தராஜ் அவர்கள் 05-05-2002 ஆம் நாள் பேராயர் ஜி. தேவ கடாட்சம் அவர்களால் அச்சபையில் வைத்து அர்ப்பணித்து அனுப்பப்பட்டார்.

[illegible]குளம் சேகர சபைகள்

[illegible]தோருக்குக் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்பதில் [illegible]குளம் சேகரத்தின் திருச்சபைகளும் முக்கிய பங்கு வகித்தன. [illegible]யில் மேலக்கோட்டைச் சேர்ந்த திரு. ஜாண் விக்டர் அவர்கள், [illegible] 1995 ஆம் நாள் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்களால் [illegible]குளம் சேகர சபையில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

[illegible]கள் இணைந்து மேலும் ஒரு மிஷனெறியைத் தாங்குமாறு [illegible] அதன்பேரில் ஆரல்வாய்மொழியைச் சேர்ந்த திரு. கெ. [illegible] அருளைமநாயகம் அவர்கள் 20-07-1996-ஆம் நாள் [illegible] ஆலயத்தில் வைத்து, அருள்திரு. எம்.ஐ. கேசரி [illegible] அர்ப்பணம் செய்யப்பட்டார்.

[illegible]ஜவூர் திருச்சபை

இத்திருச்சபைக்கு மிஷனெறியாக திரு. எட்வின் ராஜ் அவர்கள் [illegible]டார்கள். அன்னாரை 16-04-1995-ஆம் நாள் அருள்திரு. எ. [illegible]தாஸ் அவர்கள் அவ்வாலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்து அனுப்பினார்கள்.

[illegible] திருச்சபை

இத்திருச்சபை பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் மிஷனெறிகளில் ஒருவரைத் தாங்குவதற்கான நிதி உதவியைச் செய்தது. அவர்களுக்கு [illegible] விசுவாசியான திரு. வின்செஸ்ட் லெட்சுமணன் அவர்கள் [illegible]டார்கள். அன்னாரது அர்ப்பண ஆராதனை 16-04-1995-ல்

அருள்திரு. எ. ஆமோஸ் அவர்களால் திட்டுவிளை ஆலயத்தில் வைத்து நடைபெற்றது.

எஸ். ற்றி. மங்காடு திருச்சபை

இத்திருச்சபைத் தாங்கும் மிஷனெறிக்குச் செலுத்தப்படும் ஆதரவு நிதியில் பெரும் பங்கை. அச்சபை அங்கமான திரு. சுந்தர் ஏசுவடியான் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். U.C.M.S.I. என்ற இயக்கத்தின் பணித்தளத்திற்கு திருமதி. அந்தோணியம்மாள் அவர்கள் கொடுக்கப் பட்டார்கள். அன்னாருடைய அர்ப்பண ஆராதனை 07-05-1995-ல் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்களால் எஸ். ற்றி. மங்காடு ஆலயத்தில் வைத்து நடைபெற்றது.

களியக்காவிளை திருச்சபை

களியக்காவிளை திருச்சபை ஒரு மிஷனெறியைத் தாங்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. மூங்கில்விளையைச் சேர்ந்த மிஷனெறி திரு. பாக்கியா ஜாண் பிறைட் அவர்கள் 25-06-1995-ல் அருள்திரு. எ. கிறிஸ்டோபர்தாஸ் அவர்களால் களியக்காவிளை ஆலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

இத்திருச்சபையின் அங்கமான டாக்டர். ஐ.எஸ். எட்வின் சிங் அவர்கள் ஓர் ஊழியரைத் தாங்கும் பொறுப்பை ஏற்றார்கள். அன்னார் சார்பில் தாங்கப்படும் மிஷனெறி திரு. ற்றி. ஐசக் ஆனந்தகுமார் என்பவர் 29-10-2000-ஆம் நாள் முன்னாள் பிரதமப் பேராயர் ஐ. ஜேசுதாசன் அவர்களால் களியக்காவிளை சபையில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

கொற்றிகோடு திருச்சபை

கொற்றிகோடு திருச்சபையார் ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தனர். லீபுரத்தைச் சேர்ந்த திரு. ஜெயசிங் பர்ணபாஸ், அவர்களுக்குரிய மிஷனெறியாகக் கொடுக்கப்பட்டார். அன்னாரது அர்ப்பண ஆராதனை 27-08-1995-ஆம் நாள் கொற்றிகோடு ஆலயத்தில் வைத்து அருள்திரு. ஆர்.என். துரைராஜ் அவர்களால் நடத்தப்பட்டது.

பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரி

நாகர்கோவில், பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரியில் பணியாற்றும் பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் சேர்ந்து மலைநாட்டில் ஒரு மிஷனெறிக்கான நிதியினைக் கொடுத்தார்கள். அவர்கள் சார்பில் பூவன்கோட்டைச் சேர்ந்த செல்வி. ஒய். லலிதாகுமாரி அவர்கள்

08-04-1996-ஆம் நாள் அருள்திரு. எம்.ஐ. கேசரி அவர்களால் கல்லூரி சிற்றாலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

முழுக்கோடு திருச்சபை

இச்சபை உறுப்பினரான திரு. ஆல்பின் அவர்கள் குடும்பமாக மலைநாட்டு ஊழியத்திற்கு ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தனர். அன்னாருக்குரிய மிஷனெறியாகக் கோட்டையடியைச் சேர்ந்த திரு. பி. அருள் ஞானதாஸ் அவர்கள் கொடுக்கப்பட்டார். மிஷனெறியைப் போதகர் எம். நேசையன் அவர்கள் 08-04-1996-ஆம் நாள் முழுக்கோடு ஆலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்தார்கள்.

பிலிப்ஸ்புரம் திருச்சபை

பிலிப்ஸ்புரம் திருச்சபை, திரு. டி. பால்சிங் அவர்களைத் தனது மிஷனெறியாக ஏற்றுக் கொண்டது. அன்னாரது அர்ப்பண ஆராதனை அருள்திரு. எம். ஐ. கேசரி அவர்களால் 16-04-1996-ஆம் நாள் பிலிப்ஸ்புரம் ஆலயத்தில் நடைபெற்றது.

சிறக்கரை திருச்சபை

சிறக்கரை சபையைச் சேர்ந்த திரு. கெ. வில்சன் அவர்கள் குடும்பத்தினர் ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தனர். அவர்களுக்குரிய மிஷனெறியாக திரு. இராஜேந்திரன் அவர்கள் 26-05-1996-ஆம் நாள் திரு. கெ. வில்சன் அவர்களின் விருப்பத்திற்கேற்ப மயிலாடி ஆலயத்தில் வைத்து அருள்திரு. ஐ.பி. ஜேம்ஸ் நதானியேல் அவர்களால் அர்ப்பணித்து அனுப்பப்பட்டார்.

சிறக்கரை திருச்சபை, சபையாக ஒரு மிஷனெறியைத் தாங்கும் பொறுப்பை ஏற்றது. அவர்களுக்குரிய மிஷனெறியாகக் கொடுக்கப்பட்ட திரு. ஸடீபன் மாத்தையன் அவர்கள் 03-01-1999-ஆம் நாள் சிறக்கரை ஆலயத்தில் வைத்து அருள்திரு. எ. ஜாண் சகாயதாஸ் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

சரல்விளை திருச்சபை

இத்திருச்சபையின் அங்கமான திரு. சி. ராபர்ட் வின்சென்ட் அவர்கள் குடும்பமாக ஒரு மிஷனெறியைத் தாங்கும் பொறுப்பை ஏற்றெடுத்தனர். புன்னையடியைச் சேர்ந்த திருமதி. இரத்தினம் ஜெயசேகர் என்பவர் அவர்களுக்குரிய மிஷனெறியாகக் கொடுக்கப்பட்டார். அன்னாரது அர்ப்பண ஆராதனை சரல்விளை ஆலயத்தில் வைத்து 09-06-1996 ஆம் நாள் அருள்திரு. பி. வில்சன் அவர்களால் நடத்தப்பட்டது.

ஸ்காட் நகர் திருச்சபை

ஸ்காட் நகர் திருச்சபை ஒரு மிஷனெறியை மலைநாட்டு ஊழியத்தில் தாங்க முன்வந்தது. அவர்களுக்குரிய மிஷனெறியாகக் கொடுக்கப்பட்ட மயிலாடி திரு. ஒய். யோவாப் சிங் அவர்கள், அருள்திரு. எம்.ஐ. கேசரி அவர்களால் ஸ்காட் நகர் ஆலயத்தில் வைத்து 09-10-1996-ஆம் நாள் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

ஆலன்விளை திருச்சபை

திரு. ஏனோக் அவர்களை இச்சபை தாங்கும் மிஷனெறியாக ஏற்றுக் கொண்டது. அன்னாரது அர்ப்பண ஆராதனை அருள்திரு. எம்.ஐ. கேசரி அவர்களால் 09-10-1996-ஆம் நாள் ஆலன்விளை ஆலயத்தில் வைத்து நடைபெற்றது.

தக்கலை திருச்சபை

தக்கலை சபையினர் ஏற்றுக் கொண்ட மிஷனெறி திரு. அல்போன்ஸ் அவர்கள் 01-12-1996-ஆம் நாள் அருள்திரு. ஏ. துரைமணி அவர்களால் தக்கலை ஆலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

சரலூர் திருச்சபை

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியத்தில் ஆர்வம் கொண்ட இத்திருச்சபை செல்வி. ஒய். ஞான கீதாவைத் தங்களது மிஷனெறியாக ஏற்றுக் கொண்டது. அன்னாரது அர்ப்பண ஆராதனை அருள்திரு. எம். ஐ. கேசரி அவர்களால் 22-12-1996-ஆம் நாள் சரலூர் ஆலயத்தில் வைத்து நடத்தப்பட்டது.

திரு. ஜேம்ஸ் எம்.எல்.ஏ. குடும்பம்

முன்னாள் எம்.எல்.ஏ. ஜேம்ஸ் அவர்கள் குடும்பமாகப், பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு ஒரு மிஷனெறியைத் தாங்க ஆர்வங் கொண்டனர். அதற்காக 12-12-1996-ஆம் நாள் ஒரு லட்சம் ரூபாயை வைப்பு நிதியாக செலுத்தினர். அதில் கிடைக்கும் வட்டிமூலம் ஒரு மிஷனெறி தாங்கப்பட்டு வருகிறார். அவர்களுக்குரிய மிஷனெறியாக திரு. கால்டுவெல் அவர்கள் அறிமுகம் செய்யப்பட்டார்.

கல்லுக்கூட்டம் திருச்சபை

கல்லுக்கூட்டம் திருச்சபை ஆரல்வாய்மொழியைச் சேர்ந்த திரு. எஸ். ஜான் அவர்களைத் தங்கள் மிஷனெறியாக ஏற்றெடுத்தது. இம்மிஷனெறியின் அர்ப்பண ஆராதனை 26-12-1996-ஆம் நாள் அருள்திரு. எம். சி. ரசையா அவர்களால் கல்லுக்கூட்டம் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது.

ஆலங்கோட்டை திருச்சபை

ஆலங்கோட்டை திருச்சபை ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தது. அவர்களுக்குரிய மிஷனெறியாகக் கொடுக்கப்பட்ட திரு. எஸ். மரியதாஸ் அவர்கள் 29-12-1996-ஆம் நாள் அருள்திரு. மோசஸ் கேசரி அவர்களால் ஆலங்கோட்டை ஆலயத்தில் வைத்து அர்ப்பணிக்கப்பட்டார்.

மருதூர்க் குறிச்சி திருச்சபை

மருதூர்க்குறிச்சி திருச்சபை, திரு. ஜோசப் வில்சன் அவர்களைத் தங்கள் மிஷனெறியாக ஏற்றுக் கொண்டது. மிஷனெறியின் அர்ப்பண ஆராதனை 31-12-1996-ஆம் நாள் அருள்திரு. எ. செல்வமணி அவர்களால் மருதூர்க்குறிச்சி ஆலயத்தில் வைத்து நடைபெற்றது.

மேலும் இத்திருச்சபை உறுப்பினர் பொறியாளர் பி. அஜித் ஜெபசிங் அவர்கள் ஓர் ஊழியரைத் தாங்க முன்வந்தார்கள். அன்னாருக்கு மிஷனெறியாகக் கொடுக்கப்பட்ட திரு. ஆரோக்கியதாஸ் அவர்கள் 31-12-2000-ஆம் நாள் மருதூர்க்குறிச்சி ஆலயத்தில் வைத்து, அருள்திரு. ஹென்றிதாஸ் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

மீட்பர் புரம் திருச்சபை

போதகர் ஜே. சாலோமோன் அவர்கள், திரு. சுஜிகுமார் அவர்களை 02-02-1997-ஆம் நாள் மீட்பர் புரம் திருச்சபையில் வைத்து அர்ப்பணம் செய்தார்கள். அத்திருச்சபை அன்னாரை மிஷனெறியாக ஏற்றது.

செம்பொன்விளை திருச்சபை

திரு டேவிட் அன்னராஜ பாண்டியன் அவர்களை இத்திருச்சபையின் மிஷனெறியாகப் பேராயர் எம். ஐ. கேசரி அவர்கள் 06-04-1997-ஆம் நாள் செம்பொன்விளை சபையில் வைத்து அர்ப்பணம் செய்தார்கள்.

பெத்தேல்புரம் திருச்சபை

பெத்தேல்புரம் திருச்சபை பேராய சுவிசேஷ ஜெபக்குழு சார்பில் ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தது. இச்சபையின் மிஷனெறியாக 09-04-1997-ஆம் நாள் திருமதி. லதா புஷ்பபாய் அவர்கள் பேராயர் எம். ஐ. கேசரி அவர்களால் அச்சபையில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

அருள்திரு. அறிவர். எ. மாசில்லாமணி குடும்பம்

போதகர் மாசில்லாமணி அவர்கள் குடும்பமாக ஒரு மிஷனெறிக்கான நிதி உதவியினைச் செய்தார்கள். அன்னாருக்குரிய மிஷனெறியாக மலை

விசுவாசி திரு. இம்மானுவேல் ராமன் என்பவர் 13-01-1999-ஆம் நாள்முதல் அக்குடும்பத்தின் மிஷனெறியாக அறிமுகப்படுத்தப்பட்டார்.

வில்ஸ்புரம் திருச்சபை

நற்செய்தியை அறியாதாருக்கு அறிவிப்பதில் வில்ஸ்புரம் திருச்சபை தன்னை ஈடுபடுத்தியது. இத்திருச்சபை பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் மிஷனெறி திரு. ஏ. எஸ். அருள்தாஸ் என்பவரைத் தாங்க முன்வந்தது. அம்மிஷனெறியைப் பேராயர் எம். ஐ. கேசரி அவர்கள் 19-04-1997-ஆம் நாள் அச்சபையில் வைத்து அர்ப்பணம் செய்தார்கள்.

பள்ளிவிளை திருச்சபை

திரு. பி. டேவிட் சாமுவேல் என்ற மிஷனெறியைப் பள்ளிவிளை திருச்சபை ஏற்றெடுத்தது. அன்னார் 22-06-1997-ஆம் நாள் பேராயர் எம். ஐ. கேசரி அவர்களால் பள்ளிவிளை ஆலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

சாந்தபுரம் திருச்சபை

சாந்தபுரம் திருச்சபையின் இரண்டாவது மிஷனெறி திரு. பி. ராஜா அவர்கள், பேராயர் எம். ஐ. கேசரி அவர்களால் 30-07-1997-ஆம் நாள் அச்சபையில் வைத்து அர்ப்பணித்து அனுப்பப்பட்டார்.

கோடியூர் திருச்சபை

கோடியூர் திருச்சபையின் மிஷனெறியாக திரு. எ. சத்தியதாஸ் அவர்களை, 29-08-1997-ஆம் நாள் அருள்திரு. எ. செல்வமணி அவர்கள் கோடியூர் ஆலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்தார்கள்.

விரிகோடு திருச்சபை

மிஷனெறி திரு. பால் குழந்தை அவர்களை விரிகோடு சபை, தனது மிஷனெறியாக ஏற்றது. அன்னார் 14-09-1997-ல் யோக்பெல்லோ அருள்திரு. டி. எலியாஸ் அவர்களால் விரிகோடு ஆலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

கடமலைக்குன்று லிபர்ட்டி திருச்சபை

கடமலைக்குன்று லிபர்ட்டி சபைக்கு மிஷனெறியாக திரு. பிறைட் கிறிஸ்துதாஸ் என்பவர் கொடுக்கப்பட்டார். அன்னாரது அறிமுக ஆராதனை பேராயர் எம். ஐ. கேசரி அவர்களால் 15-10-1997-ஆம் நாள் லிபர்ட்டி திருச்சபையில் வைத்து நடைபெற்றது.

ஓறப்பனவிளை திருச்சபை

இச்சபை உறுப்பினர் அருள்திரு. ஜி. ஏசுதாஸ் அவர்கள் குடும்பம் ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தது. இவர்களுக்கான மிஷனெறி

திரு. ஸ்டீபன் கருணாநிதி என்பவர் 21-12-1997-ல் ஒரப்பனவிளை ஆலயத்தில் வைத்துப் பேராயர் எம். ஐ. கேசரி அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

கஞ்சிக்குழி திருச்சபை

இச்சபையின் மிஷனெறியாக திரு. டி. செல்வராஜ் அவர்கள் நியமிக்கப்பட்டார். அன்னாரைப் பேராயர் எம். ஐ. கேசரி அவர்கள் 29-12-1997 ல் கஞ்சிக்குழி ஆலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்தார்.

கல்லங்குழி திருச்சபை

கல்லங்குழி திருச்சபை ஒரு மிஷனெறிக்கான நிதியைக் கொடுத்தது. அவர்களுக்கான மிஷனெறி திரு. சி. ரமேஷ் என்பவர் 08-03-1998-ல் அருள்திரு. ஐ. நெகேமியா என்பவரால் மேற்படி சபையில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

பாலப்பள்ளம் கிழக்குத் திருச்சபை

பாலப்பள்ளம் கிழக்கு சாலேம் சபையானது. பெத்தேல்புரம் திருமதி. றோஸ்லெட் ராஜையன் அவர்களைத் தனது மிஷனெறியாக ஏற்றது. அன்னாரது அர்ப்பண ஆராதனை 15-03-1998-ல் பேராயர் எம். ஐ. கேசரி அவர்களால் பாலப்பள்ளம் சாலேம் திருச்சபையில் வைத்து நடைபெற்றது.

கிறிஸ்டியா திருச்சபை

கிறிஸ்டியா சபையின் மிஷனெறியாக திரு. ஒய். மார்ட்டின் பெர்ள் என்பவர் பேராயர் எம். ஐ. கேசரி அவர்களால் 26-04-1998-ல் அர்ப்பணம் செய்யப்பட்டார். அன்னார் மிஷனெறிப் பணியை விட்டுவிட்டு சென்றபடியால், அவருக்குப் பதிலாக 01-01-1999-ல் திரு. பவுல்தாஸ் என்பவர் அவ்வாலயத்தில் வைத்து அருள்திரு. எ. ஏனோஸ் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

வடக்கன்கரை திருச்சபை

வடக்கன்கரை திருச்சபைக்கு மிஷனெறியாக திரு. பி. கிறிஸ்துதாஸ் என்பவர் நியமிக்கப்பட்டார். அவரது அர்ப்பண ஆராதனை 03-05-1998 அன்று பேராயர் எம். ஐ. கேசரி அவர்களால் அவ்வாலயத்தில் நடத்தப்பட்டது.

துபாய் தமிழ்த் திருச்சபை

அருள்திரு. எ.ஜே. எம். கேசரி அவர்கள் துபாய் திருச்ச்பையில் பணியாற்றியபோது, அத்திருச்சபை குமரிப்பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு ஒரு மிஷனெறியைத் தாங்கும் பொறுப்பை ஏற்றெடுத்தது. அதன் விளைவாக டாக்டர். எ. பால்தாஸ் அவர்கள் அத்திருச்சபையின் மிஷனெறியாகக் கொடுக்கப்பட்டார்.

நெய்யூர் திருச்சபை

ஆரம்பகாலத்தில் முதல் மிஷனெறியைத் தாங்கிய இத்திருச்சபையின் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் உறுப்பினர்கள் இணைந்து இரண்டாவது மிஷனெறியைத் தாங்க முன்வந்தனர். அவர்களது மிஷனெறியாக திருமதி எமிலெட் ஆனிலீத் அவர்கள் கொடுக்கப்பட்டார்கள். அன்னாரது அர்ப்பண ஆராதனை 26-10-1997-ஆம் நாள் அருள்திரு. ஜான் அலக்சாண்டர் அவர்களால் நெய்யூர் ஆலயத்தில் வைத்து நடத்தப்பட்டது.

இத்திருச்சபை தனது மூன்றாவது மிஷனெறியாக திரு. அமல்ராஜ் அவர்களை ஏற்றுக் கொண்டது. அன்னாரது அர்ப்பண ஆராதனை 24-05-1998-ல் அருள்திரு. அறிவர். எ. மாசில்லாமணி அவர்களால் அச்சபையில் வைத்து நடத்தப்பட்டது.

இத்திருச்சபையின் நான்கு குடும்பத்தினர் இணைந்து ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தனர். திருவாளர்கள் ஜெஸீடின் எம். அருள்டேவி, ஜெஸீடின் எம். அருள் ஜீவி, ஜெஸீடின் எம். அருள்ரவி, ஜெஸீடின் எம். அருள் ரெஜீவி ஆகியோர்களது மிஷனெறியாக திரு. ஜெயராம் ஜெயவீரன் அவர்கள் கொடுக்கப்பட்டார். அன்னார் 03-06-2001-ஆம் நாள் அருள்திரு. ஐ.பி. ஜேம்ஸ் நதானியேல் அவர்களால் நெய்யூர் ஆலயத்தில்வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

புலிப்பனம் திருச்சபை

புலிப்பனம் சபைக்குரிய மிஷனெறியாக திரு. ஜெ. தாமஸ் சம்பத்குமார் என்பவர் கொடுக்கப்பட்டார். அன்னாரது அர்ப்பண ஆராதனை 07-06-1998 அன்று புலிப்பனம் ஆலயத்தில் நடைபெற்றது. அன்னார் பணியைவிட்டுச் சென்றதால் மிஷனெறி திரு. ஜஸ்டின் அவர்கள் 07-06-1999-ல் மேற்படி சபையில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்கள். இவ்விரு ஆராதனைகளையும் அருள்திரு. ஒய். ஜேக்கப் அவர்கள் நடத்தினார்கள்.

சமாதானபுரம் திருச்சபை

இத்திருச்சபையின் மிஷனெறியாக திரு. டோனால்ட் ஸ்டாலின் என்பவர் கொடுக்கப்பட்டார். அன்னார் சமாதானபுரம் ஆலயத்தில் வைத்து 04-10-1998-ல் அருள்திரு. எம். ஆமோஸ் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

குட்டைக்கோடு திருச்சபை

திரு. எஸ். செந்தில்குமார் என்பவர் குட்டைக்கோடு சபையின் மிஷனெறியாகக் கொடுக்கப்பட்டார். அன்னாரது அர்ப்பண ஆராதனை

முன்னாள் பிரதமப் பேராயர் ஐ. ஜேசுதாசன் அவர்களால் 03-01-1999-ல் அடைக்கோடு ஆலயத்தில் வைத்து நடத்தப்பட்டது.

பூவன்கோடு திருச்சபை

திருச்சபையின் கடமை மிஷனெறிகளை அனுப்புவதும், தாங்குவதும், ஜெபிப்பதும் என்பதைப் பூவன்கோடு திருச்சபை உணர்ந்தது. இத்திருச்சபை பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தது. திரு. ஆனந்தராஜ் அவர்கள் அச்சபையின் மிஷனெறியாகக் கொடுக்கப்பட்டார். அன்னார் 28-02-1999-ஆம் நாள் அச்சபை தன்னுடைய 131-ஆவது சபைநாள் விழாவைக் கொண்டாடும் போது, முன்னாள் பிரதமப் பேராயர் ஐ. ஜேசுதாசன் அவர்களால் பூவன்கோடு சபையில் வைத்து அர்ப்பணித்து அனுப்பப்பட்டார்.

பாகோடு திருச்சபை

இச்சபையின் உறுப்பினர் திரு. சாமுவேல் எமிலி அவர்களின் நினைவாக அவரது பிள்ளைகள் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு ஒரு மிஷனெறிக்கான நிதியைக் கொடுக்க முன்வந்தனர். அவர்களுக்குரிய மிஷனெறியாகக் கொடுக்கப்பட்ட திரு. எட்வின் ஆபிரகாம் அவர்கள் பாகோடு சபையில் வைத்து 14-03-1999-ல் அருள்திரு. ஒய். ஜேக்கப் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

கீழ கிருஷ்ணன்புதூர் திருச்சபை

இத்திருச்சபையின் உறுப்பினர் திரு. பால் ஜோசப் குமார் அவர்கள் குடும்பமாக ஒரு மிஷனெறியின் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். அன்னாருக்குரிய மிஷனெறியாய் கொடுக்கப்பட்ட திரு. டேவிட் ஜாண்சன் அவர்கள், கீழ கிருஷ்ணன்புதூர் ஆலயத்தில் வைத்து 21-04-1999-ல் பேராயர் எம்.ஐ. கேசரி அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

பெனியேல் திருச்சபை

பெனியேல் திருச்சபை, திரு. காட்வின் பேலீஸ் அவர்களைத் தங்கள் மிஷனெறியாக ஏற்றுக் கொண்டது. அன்னாரது அர்ப்பண ஆராதனை பெனியேல் ஆலயத்தில் 01-05-1999-ஆம் நாள் பேராயர் எம். ஐ. கேசரி அவர்களால் நடைபெற்றது.

புல்லுவிளை திருச்சபை

திருமதி. மேபல் செல்வி பிறைட் அவர்கள் புல்லுவிளை சபைக்குரிய மிஷனெறியாகக் கொடுக்கப்பட்டார்கள். அன்னாரது அர்ப்பண ஆராதனை 28-05-1999-ஆம் நாள் பேராயர் எம். ஐ. கேசரி அவர்களால் அவ்வாலயத்தில் வைத்து நடைபெற்றது.

ஜேம்ஸ் டவுண் திருச்சபை

இத்திருச்சபை ஆர். ஜாண்சன் என்பவரைத் தனது மிஷனெறியாக ஏற்றுக் கொண்டது. அன்னாரது அர்ப்பண ஆராதனை 11-07-1999-ஆம் நாள் அருள்திரு. ஜோஸ்லின் சந்திரகுமார் அவர்களால் ஜேம்ஸ் டவுண் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது.

ஆத்திவிளை திருச்சபை

இச்சபையின் மிஷனெறி திரு. சேட்டு என்பவர். அருள்திரு. அறிவர். எ. மாசில்லாமணி அவர்களால் 07-11-1999-ஆம் நாள் ஆத்திவிளை சபையில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

தேவதானபுரம் திருச்சபை

திரு. ற்றி. சாலோமோன் அவர்களை இச்சபை தனது மிஷனெறியாக ஏற்றுக் கொண்டது. அன்னார், 24-12-1999-ஆம் நாள் சி.எஸ்.ஐ-யின் ஆயர் பணி இயக்குநர் அருள்திரு. ஜி. தேவகடாட்சம் அவர்களால் தேவதானபுரம் ஆலயத்தில் வைத்து அறிமுகம் செய்யப்பட்டார்.

இச்சபையின் உறுப்பினரான திரு. குமாரதாஸ் அவர்கள் ஒரு மிஷனெறிக்கான செலவை ஏற்றுக் கொண்டார். அவர் தாங்கும் மிஷனெறியான திருமதி. ஷீபா ஜெயசிங் அவர்கள் 10-03-2002-ஆம் நாள் அருள்திரு. எம். ராஜையன் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டார்.

கிராத்தூர் திருச்சபை

திரு. ஜெ. சுகுமாரன் அவர்கள் இச்சபை தாங்கும் மிஷனெறியாவார். அவரது அர்ப்பண ஆராதனை 02-01-2000-ஆம் நாள் அருள்திரு. எ. ஈனோஸ் அவர்களால் கிராத்தூர் சபையில் வைத்து நடைபெற்றது.

மலவிளை திருச்சபை ஊழியர் திரு. வேதக்கண் ராஜ்

திரு. வேதக்கண் ராஜ் அவர்கள் மலவிளை சபையில் ஊழியராய் இருந்தபோது, ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தார்கள். அன்னாருக்குக் கொடுக்கப்பட்ட மிஷனெறி திரு. ராஜா ஸ்டாலின் என்பவர். 21-05-2000-ஆம் நாள் பேராயர் எம். ஐ. கேசரி அவர்களால் மலவிளை ஆலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

கீழப்பெருவிளை திருச்சபை

இச்சபை, மலை விசுவாசியான திரு. டேவிட் சித்தையன் என்ற மிஷனெறியைத் தனது பொறுப்பில் ஏற்றுக் கொண்டது. மிஷனெறிக்குரிய அர்ப்பண ஆராதனை 28-05-2000-ஆம் நாள் கீழப் பெருவிளை ஆலயத்தில் வைத்து பேராயர் எம். ஐ. கேசரி அவர்களால் நடைபெற்றது.

நேசமணிநகர் திருச்சபை

நேசமணிநகர் சபையின் மிஷனெறியாக திரு. மைனர் மோசஸ் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அன்னார், நேசமணிநகர் சபையில் வைத்து 16-07-2000-ஆம் நாள் அருள்திரு. அறிவர். ஞான ராபின்சன் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

சகாயநகர் திருச்சபை

இச்சபையின் உறுப்பினர்களான திரு. தேவசகாயம், பேரா. கிறிஸ்டோபர் ஆகியோர் இணைந்து ஒரு மிஷனெறியைத் தாங்கும் பொறுப்பை ஏற்றனர். திரு. ஜஸ்டின் செல்வராஜ் அவர்கள் மேல் உறுப்பினர்களுக்குரிய மிஷனெறியாக 06-08-2000-ஆம் நாள் அருள்திரு. எம். கிறிஸ்துதாஸ் அவர்களால் சகாயநகர் திருச்சபையில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

ஈஞ்சக்கோடு சபைப்போதகர் அருள்திரு. வி. இம்மானுவேல்

இத்திருச்சபையின் போதகர் அருள்திரு. வி. இம்மானுவேல் அவர்கள் மிஷனெறிப் பணியில் அதிக ஈடுபாடு கொண்டவர். அன்னாரது, குடும்பத்தினர் ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தனர். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மிஷனெறி திரு. டி. ரவி என்பவர் 24-09-2000-ஆம் நாள் அருள்திரு. வி. இம்மானுவேல் அவர்களால் ஈஞ்சக்கோடு சபையில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

இருளப்பபுரம் திருச்சபை

இத்திருச்சபையின் உறுப்பினர் திரு. செல்வராஜ் என்பவர், மலைநாட்டு ஊழியத்தில் ஒரு மிஷனெறியை ஆதரிக்க முன்வந்தார். அன்னாருக்குரிய மிஷனெறியாகக் கொடுக்கப்பட்ட திரு. பீட்டர் ராஜாராம் என்பவர் இருளப்பபுரம் திருச்சபையில் வைத்து 08-10-2000-ஆம் நாள் அருள்திரு. ஒய். ஜே.ஜே. பாக்கியநாதன் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டார். இம்மிஷனெறியைத் தாங்குவதற்கு ஆதரவு நிதியாக ரூ. 2 இலட்சம் வைப்பு நிதியாக வங்கியில் வைக்கப்பட்டுள்ளது. இத்தொகையின் வட்டி மாத ஊதியமாக வழங்கப்படுகிறது.

எட்டாமடை திருச்சபை

எட்டாமடை திருச்சபை பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு ஒரு மிஷனெறியைத் தாங்கும் பொறுப்பை ஏற்றது. அவர்களுக்குரிய மிஷனெறியாகக் கொடுக்கப்பட்ட திரு. ஜாண் கனகராஜ் அவர்கள் 17-12-2000-ஆம் நாள் எட்டாமடை ஆலயத்தில் வைத்து அருள்திரு. ஜாண் விக்டர் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

கரும்பாட்டூர் திருச்சபை

இத்திருச்சபை தாங்கும் மிஷனெறியான திரு. ஜெ.சி. அருள்குமார் என்பவர் 24-12-2000-ஆம் நாள் அருள்திரு. டேவிட் குணமணி அவர்களால் கரும்பாட்டூர் ஆலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

குன்னங்காடு திருச்சபை

நற்செய்திப் பணியில் வாஞ்சை கொண்ட குன்னங்காடு திருச்சபை பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு ஒரு மிஷனெறிக்கான நிதியைக் கொடுக்க முன்வந்தது. அவர்களது மிஷனெறியாக திரு. ஆனந்தன் என்பவர் .14-01-2001-ஆம் நாள் குன்னங்காடு ஆலயத்தில் வைத்து அருள்திரு. ஐ.பி. ஜேம்ஸ் நதானியேல் அவர்களால் அர்ப்பணம் செய்து அனுப்பப்பட்டார்.

மெதுகும்மல் திருச்சபை

இத்திருச்சபை தாங்கும் மிஷனெறியான திரு. வல்சலம் அவர்கள் 20-05-2001-ஆம் நாள் மெதுகும்மல் ஆலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்கள்.

கோயில்விளை திருச்சபை

குமரிமாவட்டத்தில் பணியாற்றிய மேல்நாட்டு இறைத்தொண்டர் றிங்கல் தௌபே அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட சபைகளில் இதுவும் ஒன்றாகும். இச்சபை சிறியதாக இருந்தாலும் நற்செய்திப் பணியில் தீவிர கவனம் செலுத்தி, கடமையை நிறைவேற்றி வருகிறது. 28-11-2001-ஆம் நாள் இச்சபையின் மிஷனெறியாக திருமதி. லதா ஞானபாய் அவர்கள் பேராயர் ஜி. தேவகடாட்சம் அவர்களால் அச்சபையில் வைத்து அறிமுகப்படுத்தப்பட்டார்.

மிகக் குறுகிய காலத்தில் மீண்டுமொரு மிஷனெறியைத் தாங்க இச்சபை முன்வந்தது. மாறாங்கோணத்தைச் சேர்ந்த திரு. எஸ். பெனின் சாமுவேல் என்பவர் 13-10-2002-ஆம் நாள் கோயில்விளை ஆலயத்தில் வைத்துப் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் பொதுச் செயலாளர் அருள்திரு. பி. வில்சன் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டார்.

அழகியமண்டபம் திருச்சபை

அழகியமண்டபம் திருச்சபையின் பெண்கள் ஐக்கிய சங்கத்தினர் மலைநாட்டு ஊழியத்தில் ஓர் அருட்பணியாளரைத் தாங்கும் பொறுப்பை ஏற்றனர். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மிஷனெறி திரு. பால் ஐசக்

அவர்கள் இச்சபையில் வைத்து 10-02-2002-ஆம் நாள் பேராயர் ஜி. தேவ கடாட்சம் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டார்கள்.

உடையார்விளை திருச்சபை

திரு. ஜெபசிங் அவர்களை உடையார்விளை திருச்சபை தங்களது மிஷனெறியாக ஏற்றுக்கொண்டது. அன்னாரது அறிமுக ஆராதனை உடையார்விளை திருச்சபையில் வைத்து போதகர். இம்மானுவேல் ஞானதாஸ் அவர்களால் 07-04-2002-ஆம் நாள் நடத்தப்பட்டது.

அறிமுகப்படுத்தும் முறை

கன்னியாகுமரிப் பேராயத்தின் பேராயராக ஜி. தேவகடாட்சம் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர், மிஷனெறி அர்ப்பண ஆராதனையில் மாறுதல் செய்யப்பட்டது. மிஷனெறிகளைத் தாங்குவதற்கு முன் வருகிற சபைகளில் வைத்து அவர்கள் அறிமுகம் மட்டுமே செய்யப்பட்டார்கள். அத்தகைய மிஷனெறிகளை ஆண்டிறுதிக் கூடுகையின்போது பேராயர் அர்ப்பணம் செய்வார். இவ்வொழுங்குமுறை சிறப்பாகக் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது.

அதன்பேரில் 20-04-2002-ஆம் நாள் களியங்காடு சேகர சபையில் வைத்து நடைபெற்ற ஆண்டிறுதிக் கூடுகையின்போது, அவ்வருடம் அறிமுகப்படுத்தப்பட்ட அனைத்து மிஷனெறிகளும் பேராயரால் அர்ப்பணம் செய்யப்பட்டார்கள். இம்முறையே இப்போதும் பின்பற்றப்பட்டு வருகிறது.

சந்தையடி திருச்சபை

இத்திருச்சபையில் பெயர் கூற விரும்பாத ஒரு குடும்பத்தினர் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு ஒரு மிஷனெறிக்கான நிதியைக் கொடுத்தனர். அதன்பேரில் நித்திரவிளையைச் சேர்ந்த திரு. டி. சுந்தரதாஸ் அவர்கள், அக்குடும்பத்திற்குரிய மிஷ்னெறியாகக் கொடுக்கப்பட்டார். அன்னாரது அறிமுக ஆராதனை 06-10-2002-ஆம் நாள் சந்தையடி ஆலயத்தில் வைத்து பொதுச் செயலர் அருள்திரு. பி. வில்சன் அவர்களால் நடத்தப்பட்டது.

3. சுவிசேஷ ஜெபக்குழுவின் வளர்ச்சி நிலை

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் தொடக்கம் அற்பமானதாக இருந்தாலும், அதன் பரிணாம வளர்ச்சி வியத்தகு நிலையே ஆகும். கர்த்தரையும் அதன் அருமையையும், தன் கடமையையும் உணர்ந்த தனி நபர்கள், ஜெபக்குழுக்கள், சபைகள் என மாபெரும் மக்கள் படை உருவானது. ஒவ்வொருவரும் தத்தம் நிலைகளுக்கேற்ப கைகளை

விரித்துக் கொடுத்தார்கள். இந்தியா என் நாடு. இந்நாட்டிலுள்ள சுமார் 6,38,365 கிராமங்கள் இதுவரையிலும் இயேசுவை ஒருமுறை கூட கேள்விப்படவில்லை. இவர்களுக்கு நற்செய்தியினை வேகமாகச் சொல்வது நம் கடமை என உணர்ந்தனர். இந்திய மக்கள் தொகையில் 52.2 சதவீதம் மக்கள் மட்டுமே எழுத்தறிவு பெற்றுள்ளனர். இவர்களில் கிறிஸ்தவர்கள் அதிகம் வாழும் கேரளம், மிஸோராம் போன்ற மாநிலங்கள், எழுத்தறிவு பெற்றதில் முதலிடம் வைக்கின்றன. ஏனைய மக்களுக்குக் கல்வி அளிப்பதும் தம் கடமை என்பதை மேற்குறிப்பிட்ட மக்கள் உணர்ந்து செயல்பட்டனர். இதனால் கரிசனை எண்ணங்கொண்ட மக்கள் பலர் செயலில் வேகம் கண்டனர்.

இந்தியாவின் மக்கள் தொகை நாள்தோறும் வளர்ச்சி பெற்று வருகிறது. ஒரு வருடத்திற்கு 170 இலட்சம் மக்கள் பிறக்கிறார்கள். இது ஆஸ்திரேலியாவின் மொத்த மக்கள் தொகையாகும். ஏழ்மையில் வாழ்வோர், சரியான அடிப்படை வசதி இல்லாதோர் இந்தியாவில் அதிகமாகக் காணப்படுகின்றனர். சாதி பாகுபாடு என்பது இங்கு வேரூன்றி விட்டது. பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஆதிவாசிகளாக 80 சதவீத மக்கள் வாழுகின்றனர். தீண்ட முடியாதவர்கள், பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்க முடியாதவர்கள், உயர்ந்த சாதி முன் இடுப்பில் துண்டுகட்டி, வெறுங்காலில் நிற்பவர்கள் எனப் பலதரப்பட்ட மக்கள் வாழுகிறார்கள். இத்தகைய மோசமான சூழலில்தான் குமரி மாவட்டத்தைச் சேர்ந்த நாமும் வாழ்ந்தோம். கேட்டால் காது கூசும், கண்டால் கண் நம்பாது என்கிற அடிமைத்தனமான நிலைதான் இங்கும் காணப்பட்டது. திருவிதாங்கூர் அரசின் 108 கொடூரமான வரிகளால் இங்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் துன்புறுத்தப்பட்டனர். இத்தகையவர்களை மீட்க மேல்நாட்டு மிஷனெறிகள் செய்த தியாகங்கள் ஏராளம் ஏராளம். இவ்விதம் தாங்கள் பெற்ற நல்வாழ்வினை மற்றவர்களும் பெற வேண்டும் என்ற உன்னத நோக்கமே இத்தகைய வளர்ச்சிக்கு முதல்நிலை.

இந்தியரை நாமே சந்திக்க வேண்டும் என்ற விறுவிறுப்பில் தொடங்கிய இத்திருப்பணி 1977 முதல் தனிக்களம் கண்டது. அதுமுதல் இன்று வரையுள்ள இக்குறுகிய காலத்தில் குமரிப் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் சாதனைகள் எண்ணிலடங்கா. ஜெபம் ஆகிய திறவுகோலை மக்கள் சொந்தமாக்கினார்கள். இவ்வளர்ச்சி ஆங்காங்கே இருந்த குமரி மாவட்டத்தைச் சேர்ந்தோர்களைத் தூண்டும் விதத்தில் அமைந்தது. அவர்கள் இத்தகைய இறைச் சேவையில் தங்களையும் ஈடுபடுத்திடத் துடித்தனர். பணம், சொத்துக்கள், உலக செல்வாக்குகள், உலக இன்பங்கள் ஆகிய பச்சை இலைகளுக்குப் பின் ஓடுகிறவர்கள்

இந்நாட்களில் மலிந்திருக்க, சிலுவையே எனது சம்பாத்தியம், அதன்கீழ் அடிபணிவது வாழ்வின் இன்பம் என நற்செய்தியை அறிவிக்கும் பணியில் தங்களை ஈடுபடுத்திய மனித உள்ளங்கள் அநேகர். மிகப்பெரிய ஆலமரத்திற்கு விழுதுகள் தூண்கள் ஆவதுபோல, குமரிப் பேராய சுவிசேஷ நற்செய்திப் பணிக்கு விழுது போன்ற கிளைகள் பல முளைத்தன.

4. சுவிசேஷ ஜெபக்குழுவின் சென்னைக் கிளை

ஒரு மனிதன் வாழ்க்கையில் எடுக்கும் முடிவுகள் ஒரு சமூகத்தின் எதிர்காலத்தை நிர்ணயம் செய்கின்றதாக அமையும். ஒரு முடிவு என்பது ஒரு செயலாகும். கேலிகள், பரிகாசங்கள், குடிகள், வெறிகள், இச்சைகள், பொய்கள், குறுக்குவழிகள், பதவிமோகங்கள், மனிதத் துதிகள் என்று மனித மனங்களில் பல்வேறு புகழ்ச்சி அலைகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. இவைகளில் தங்கள் சிந்தனைகளை, தீர்மானங்களை ஓட விடாமல் கர்த்தரின் பாதைக்கு ஒப்புக் கொடுத்து அடிபணிந்து வந்த மக்கள் பலரும் உலகில் உண்டு. மிகப்பெரிய பதவிகளில் அலங்கரித்து உலகில் வாழும் சராசரி மனிதனைப் போல் வாழாமல் இயேசுவுக்காகத் தொண்டு செய்து ஏழையாக மாறி, கலாச்சாரம் மாறி, தட்பவெப்ப நிலை மாறி, சூழ்நிலைக்கேற்ப வாழ்ந்து மடிந்த கோதுமை மணிகளும் பலர் உண்டு. இவர்கள் வாடாத கிரீடம் பெற்று இறையுலகை அலங்கரிக்கும் இறையன்பர்கள் ஆவர்.

முற்காலங்களில் மேலை நாடுகளிலிருந்து வருகைதந்த இறைத் தொண்டர்களால் குமரிப் பகுதி மக்கள் கல்வி, பொருளாதாரம், நாகரிகம், அறிவியல், உழைப்பு, தொழில்நுட்பம் ஆகியவற்றில் விரைவான முன்னேற்றம் கண்டனர். இதே நிலையினை மற்றவர்களும் பெற்றுக்கொள்ள இன்றைக்காலம் நாம் நற்செய்தியை அறிவியாதோருக்குக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளோம் என்பதை சென்னையில் அரசு பணிபுரிந்த பலரும் உணர்ந்தனர். அவர்களில், காரியாவிளைத் திருச்சபை அங்கமான திரு. த. சந்திரதாஸ் என்பவர் மிகவும் முக்கியமானவர். இவர் குமரிப் பேராய, சுவிசேஷ ஜெபக்குழுவின் அருட்பணி குறித்த விவரங்களைச் சென்னையிலுள்ள தனது நண்பர்களுக்கு அறிவித்தார். இத்தருணத்தில் குமரிப் பேராய போதகர் அருள்திரு. அறிவர். சி. இரத்தினதாஸ் அவர்கள் சென்னையிலுள்ள சினாடு மையத்தில் அருட்பணி இயக்குநராகப் பணியாற்றி வந்தார்கள். காலங்கள் கடவுளால் கணிக்கப்பட்டு, கருத்தொற்றுமை ஏற்படுவதுபோல, மலைநாட்டு ஊழியத்தில் சென்னையில் வாழ்ந்த நமது உறுப்பினர்கள் கொண்டிருந்த

நம்பிக்கையைப் போதகர் இரத்தினதாஸ் அவர்கள் வளர்த்தார்கள். எரிகிற தீயில் எண்ணெயை ஊற்றினாற்போல் திரு. சந்திரதாஸ், திரு. த. ஜோதிமணி ஜெபசிங் ஆகியவர்களின் வாஞ்சையான பணிக்குப் போதகரின் ஊக்குவித்தல் காரணமாய் அமைந்தது. இதனால் நற்செய்திப் பணி விறுவிறுப்பாக வளர்ந்தது. உடனடியாகச் சென்னையில் சுவிசேஷ ஜெபக்குழுவின் கிளையொன்றினைத் தொடங்க வாஞ்சை கொண்டனர்.

அ. ஜெபக்குழு உருவாதல்

போதகர் இரத்தினதாஸ் அவர்கள் சென்னையில் வாழும் மக்களுக்குள் ஏற்பட்ட நற்செய்திப் பணியின் ஆர்வத்தை, பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் வேர்களாகத் திகழ்ந்த அருள்திரு. டி. எலியாஸ் மற்றும் அருள்திரு. எம். ராஜையன் ஆகியவர்களிடம் கூறினார். அதன் விளைவாக 31-08-1988-ஆம் நாள் சென்னையில் வசிக்கும் வைராகுடியிருப்பைச் சேர்ந்த திரு. த. ஜோதிமணி ஜெபசிங் அவர்கள் வீட்டில் பலர் ஜெபிக்கும்படி கூடினர். இவ் ஜெபக்கூட்டத்தில் போதகர்களான சி. இரத்தினதாஸ், டி. எலியாஸ், எம். ராஜையன் மற்றும் த. சந்திரதாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். இதுவே சென்னைக் கிளையின் ஆரம்பமாகும். அதுமுதல், சென்னையிலுள்ள பல நண்பர்கள் அக்கிளையில் இணைந்தார்கள். ஜெபக்குழுக்கள் பல இடங்களில் தொடங்கப்பட்டன. அருட்பணியைத் தாங்குவதிலும், அருட்பணியாளர்களை மலை ஊழியத்திற்கு அனுப்புவதிலும் சென்னைக் கிளை நண்பர்கள் ஆர்வத்துடன் செயல்பட்டனர்.

ஆ. த. ஜோதிமணி ஜெபசிங்

சுவிசேஷ ஜெபக்குழுவின் சென்னைக் கிளைக்குச் செயலாளராக திரு. த. ஜோதிமணி ஜெபசிங் அவர்கள் பொறுப்பேற்றார்கள். இவர் சென்னையிலுள்ள பல இல்லங்களைச் சந்தித்து அவர்களுக்கு நற்செய்தியைக் கூறி, ஜெபக்குழுக்களை உருவாக்கி, ஊழியத்தை வளர்த்து வருகிறார். மேலும் மாதந்தோறும் ஆதரவு நிதியினைத் திரட்டி ஜெபக்குழுவின் தலைமையிடத்திற்குச் சந்திரதாஸ் வழி அனுப்பியும் வருகிறார்.

இ. பணிக்களப் பயணம்

சுவிசேஷ ஜெபக்குழுவினரால் மலைப் பகுதியில் நடத்தப்படும் அருட்பணியினைப் பார்வையிடச் சென்னைவாழ் அன்பர்கள் ஆர்வங் கொண்டனர். திரு. ஜோதிமணி ஜெபசிங் அவர்கள் தலைமையில் 21 நண்பர்கள் சென்னையிலிருந்து 06-12-1988-ஆம் நாள் மலை ஊழியங்களைப் பார்க்கப் பணிக்களப் பயணம் மேற்கொண்டனர். அங்கு

கண்டகாட்சிகள், மக்களின் வாழ்க்கை நிலைகள், ஊழியத்தின் யதார்த்தமான வளர்ச்சி ஆகியவை அவர்களை வியப்படையச் செய்தன. அப்பயணத்தின் போது புதுப்பாளப்பட்டு என்ற கிராமம் சென்று **கருணாமூர்த்தி** என்ற அசைவுள்ள படக்காட்சி மூலம் மக்களுக்கு நற்செய்தியினை அறிவித்தார்கள். அப்படக்காட்சியினைக் காணத் திரளான மக்கள் கூடி வந்திருந்தனர். அம்மக்கள், இயேசுவின் சிலுவைக் காட்சியினைக் கண்டபோது, ஆண், பெண் வேறுபாடில்லாமல் துடித்துப் போனார்கள். பெண்கள் பலர் தங்கள் சிரசிலும், மார்பிலும் அடித்துக் கதறிய காட்சி காண்போரின் இருதயத்தை நெருடியது. இந்த இயேசுவை, இரத்தம் சிந்தியவரை, பாவிகளை மீட்க உயிர்விட்டவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள பலர் மனமுடைந்து வேகமாக முன்வந்தனர். அதன்பின் சுவிசேஷப் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர். தங்கள் முகவரிகளைக் கொடுத்து, எங்கள் மத்தியில் தங்கியிருந்து இயேசுவை அறிவியுங்கள் என்று கேட்டனர். இம்மக்களின் மனித மாண்புகளையும், வெள்ளை உள்ளத்தையும், கபடற்ற நிலையினையும் கண்ட சென்னைக் குழுவினரின் உள்ளம் கலங்கியது. இவர்களுக்கு உதவும் பொறுப்பை, ஏற்றுக்கொள்ள முன்வந்தனர். அக்குழுவில் ஒருவரான திரு. ஜாண் ஏசுவடியான் அவர்கள், ஆத்மபாரம் மிகுந்தவராகத் தேவனிடத்தில் ஜெபித்து, அழைப்பைப் பெற்றார். உடனே மலைநாட்டு ஊழியத்தில் தன்னை மிஷனெறியாக இணைத்துக் கொண்டார். மகிழ்ச்சி பொங்கி வழிய கீழ்வரும் பாடலைப் பாடினார்கள்.

அந்த அற்புதம் நடந்த கதை
மிக ஆச்சர்யம் ஆச்சர்யமே
அற்புதங்களில் எல்லாம் சிறந்த
ஆச்சர்ய அற்புதமே

நடத்தியவர் தேவன்
நடந்ததென் உள்ளத்திலே
நம்பவும் முடியவில்லை
அனுபவம் புதுமையதால்

எ. வளர்ச்சிப் பாதையில்

திருவாளர்கள் த. ஜோதிமணி ஜெபசிங் மற்றும் த. சந்திரதாஸ் ஆகியவர்களது அயராத உழைப்பினால் சென்னைக் கிளையின் மிஷனெறிப் பணியானது ஏறு நடையுடன் முன்னேறியது. பல வட்டார ஜெபக்குழுக்கள் நாளும் தோன்றி செயல்பட்டு வருகின்றன. அவர்கள்

தங்கள் பொறுப்புகளை உணர்ந்து மிஷனெறியைத் தாங்குவதிலும், பூமியினை வாங்கி ஆலயம் எழுப்புவதிலும், ஊழியர் தங்கும் இல்லங்களைக் கட்டுவதிலுமாக முழு மூச்சுடன் செயல்பட்டு வருகிறார்கள். இவர்களை ஊக்கப்படுத்தி, நல்வழிக்கு நேராய் நடத்தி வருகிற சென்னைக் கிளையின் உதவித் தலைவர் திரு. வேதக்கண், செயலர் திரு. ஜோதிமணி ஜெபசிங், பொருளர் திரு. சந்திரதாஸ், கணக்கர் திரு. எ.எப்பிராயீம் மோசஸ் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் வட்டார ஜெபக்குழுத் தலைவர்கள், செயலர்கள் ஆகியோர்களும் பாராட்டத்தக்கவர்கள். இவர்களைப் போல் ஒவ்வொரு பகுதியிலும் வாழ்வோர் தங்கள் பணிகளைத் தீவிரப்படுத்தவேண்டும்.

"தீவிரமாய் வாழ்க்கையில் உயர
தீவிரமாய் இயேசுவை நேசிக்க வேண்டும்
உன் இனிய நேரங்களை நேசி
அப்போது அநேகருடைய வாழ்க்கை உயரும்"

உ. மிஷனெறி அர்ப்பணங்கள்

ஒரு மனிதன் எவ்வளவு காலம் அதிகமாய் வாழ்ந்தான் என்பதை விட, எப்படி வாழ்ந்தான் என்பதே முக்கியமாகும். கிடைக்கும் காலத்தை மற்றும் வாய்ப்பைத் தவற விடுதல் என்பது கடமை உணர்வை இழக்கச் செய்தலாகும். ஆனால் இரட்சிப்பைத் தேடி மக்கள் அலையும் நாட்களில் காலந்தாழ்த்தாமல் நற்செய்தியை அவர்களுக்கு அறிவிப்பதனை அவசரமாகக் கொண்டு சென்னைக் கிளை சுவிசேஷ ஜெபக்குழுவின் உறுப்பினர்கள் செயல்பட்டனர். சென்னையில் சுமார் 25-க்கும் மேற்பட்ட ஜெபக்குழுக்கள் உற்சாகமாகச் செயல்பட்டன.

மீனம்பாக்கம் ஜெபக்குழு

மீனம்பாக்கம் ஜெபக்குழு வளர்ச்சிபெற்று ஒரு மிஷனெறியைத் தாங்கும் அளவில் முன்னேறியது. முதன்முதலாக திரு. ஜாண் ஏசுவடியான் என்ற மிஷனெறி 16-02-1992-ல் மீனம்பாக்கம் ஆலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

இச்சபையின் இரண்டாவது மிஷனெறியாக அருள்திரு. வில்லியம் அவர்கள் கொடுக்கப்பட்டார்கள். அன்னாரது அர்ப்பண ஆராதனை 11-10-1992-ல் மீனம்பாக்கம் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது.

மீனம்பாக்கம் ஜெபக்குழுவின் உறுப்பினர் திரு. கில்பர்ட் ராஜன் ரோஸ் என்பவர் மிஷனெறி ஊழியத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

அவர் ஒரு மிஷனெறிக்கான செலவை ஏற்றுக் கொண்டார். அன்னார் தாங்கும் மிஷனெறியாக திரு. ராபின் ஜான் என்பவர் 26-07-1998-ல் மீனம்பாக்கம் ஆலயத்தில் வைத்து அருள்திரு. டி.ஐ. வேதநாயகம் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

பழவந்தாங்கல் ஜெபக்குழு

பழவந்தாங்கல் சி.எஸ்.ஐ. சபையினர் ஒரு மிஷனெறிக்கான நிதியை பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்குக் கொடுக்க முன்வந்தனர். அவர்களுக்குரிய மிஷனெறியாக திரு. மணி ஏசுதாசன் அவர்கள் கொடுக்கப்பட்டார்கள். அன்னாரது அர்ப்பண ஆராதனை 29-03-1992-ஆம் நாள் பழவந்தாங்கல் ஆலயத்தில் வைத்து அச்சபைப் போதகரால் நடத்தப்பட்டது.

அவ்வட்டார ஜெபக்குழுவின் செயலர் திரு. பி. ஞான சிகாமணி அவர்கள் ஒரு மிஷனெறியைக் குடும்பமாக ஆதரிக்க முன்வந்தார்கள். அவர்களது மிஷனெறியாகக் கொடுக்கப்பட்ட திருமதி. ஹெப்சிபா ஆனந்தராஜ் அவர்கள் 25-10-1998-ஆம் நாள் யோக்பெல்லோ அருள்திரு. டி. எலியாஸ் அவர்களால் புனித ஜோசப் மெட்ரிகுலேசன் பள்ளியில் வைத்து அர்ப்பணிக்கப்பட்டார்கள்.

போரூர் வட்டாரம்

போரூர் வட்டார ஜெபக்குழுவின் செயலர் திரு. எப்ராயீம் மோசஸ் மற்றும் நண்பர்கள் சேர்ந்து ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தனர். அவர்களது மிஷனெறியாக திரு. சூரிப்பால் சதா என்பவர் கொடுக்கப்பட்டார். அன்னாரது அர்ப்பண ஆராதனை 11-10-1992-ஆம் நாள் போரூர் இ.சி.ஐ. ஆலயத்தில் வைத்து நடைபெற்றது.

ஆவடி ஜெபக்குழு

ஆவடி ஜெபக்குழுவின் வட்டாரச் செயலர் திரு. ஜெயபால் பேலீஸ்பால் மற்றும் திரு. சேம் டேவிட் ஆகியோர் ஒரு மிஷனெறியை ஆதரிக்க முன்வந்தனர். அவர்களுக்குரிய மிஷனெறியாகக் கொடுக்கப்பட்ட திருமதி. கிரேஸ்லெட் அவர்கள், 02-05-1993-ஆம் நாள் அருள்திரு. கிளாஸ்டன் அவர்களால் ஆவடி ஆலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

சாந்தோம் போரூர் எஸ்டேட்

ஏறகாடு மலையில் அருட்பணிபுரியும் திரு. ஆர். ஏசாயா என்பவரை சாந்தோம் போரூர் ஜெபக்குழுவினர் தாங்க முன் வந்தனர். அன்னார்

பட்டிப்பாக்கம் சமூகக்கூடத்தில் வைத்து 02-05-1993-ல் யோக்பெல்லோ அருள்திரு. டி. எலியாஸ் அவர்களால் அர்ப்பணிக்கப்பட்டார்.

திருவெற்றியூர் கிளை

திரு. ஜோதிமணி ஜெபசிங் மற்றும் திரு. ஜெயசீலன் ஆகியோரது பெருமுயற்சியால் திருவெற்றியூர் ஜெபக்குழுவினர் ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தனர். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மிஷனெறி திரு. பி. ஆபிரகாம் அவர்கள், இ.எஸ்.ஏ. ஆலயத்தில் வைத்து 26-09-1993-ஆம் நாள் அருள்திரு. அர்னால்ட் நாயகம் அவர்களால் அர்ப்பணிக்கப்பட்டார்.

புரசைவாக்கம் ஜெபக்குழு

புரசைவாக்கம் ஜெபக்குழுவினர் மற்றும் அதன் செயலர் திரு. வி. மோகன் ராஜாசிங் ஆகியோர், ஒரு மிஷனெறியை ஆதரிக்க முன்வந்தனர். அவர்களுக்கு செல்வி. லதா புஷ்பபாய் என்பவர் மிஷனெறியாய்க் கொடுக்கப்பட்டார். அன்னாரது அர்ப்பண ஆராதனை 13-11-1993-ஆம் நாள் அடைக்கலநாதர் லுத்தரன் ஆலயத்தில் வைத்து அச்சபையின் போதகரால் நடத்தப்பட்டது. இந்நிகழ்வுகளுக்கு திருவாளர்கள் ஜோசப் பெரியகுமார், ஜீகர் சாந்தகுமார் ஆகியோர் கொண்ட முயற்சி பாராட்டத்தக்கதாகும்.

குரோம்பேட்டை ஜெபக்குழு

இச்செபக்குழுவின் வட்டாரச் செயலர் திரு. காட்வின் ஆனந்த் அவர்கள் மிஷனெறி ஊழியத்தில் அதிக ஆர்வம் கொண்டவர். எனவே தன் உதவியால் ஒரு மிஷனெறியை ஆதரிக்க முன்வந்தார். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மிஷனெறி திரு. டானியல் தீர்த்தன் அவர்கள் 16-01-1994-ல் ராதாநகர் இந்திய சுவிசேஷ திருச்சபை ஆலயத்தில் வைத்து அர்ப்பணம் செய்யப்பட்டார்.

பெரம்பூர் கிளை

இவ்வட்டாரச் செயலர் திரு. சுகுமாரன் ஜெரோம் அவர்களின் தீவிர முயற்சியால், அச்செபக்குழுவினர் ஒரு மிஷனெறிக்கான நிதியைக் கொடுத்தனர். அவர்கள் சார்பில் திரு. எலிசா ஏழுமலை என்பவர் 16-01-1994-ல் அர்ப்பணம் செய்யப்பட்டார். அவ்வாராதனை எபநேசர் மெட்ரிக் பள்ளியில் வைத்து நடைபெற்றது.

மாம்பலம் ஜெபக்குழு

மலை விசுவாசியான திரு. சாலமன் செல்வம் என்பவரை இச்செபக்குழு தனது மிஷனெறியாய் ஏற்றுக்கொண்டது. அன்னாரது

அர்ப்பண ஆராதனை 07-08-1994-ஆம் நாள் மாம்பலம் ஆலயத்தில் வைத்து அச்சபைப் போதகரால் நடத்தப்பட்டது.

இராயபுரம் ஜெபக்குழு

இந்த ஜெபக்குழுவின் கன்வீனர் திரு. ரெஜினால்ட் ராஜ் மற்றும் அதன் அங்கத்தினர்கள் இணைந்து ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தனர். அவர்களுக்கு திரு. பகவான்தாஸ் சேனாபதி என்பவர் மிஷனெறியாகக் கொடுக்கப்பட்டார். அன்னாரது அர்ப்பண ஆராதனை ராயபுரம் ஒய்.எம்.சி.ஏ. மண்டபத்தில் வைத்து 29-01-1995-ஆம் நாள் அருள்திரு. மாணிக்கவாசகம் திரவியம் அவர்களால் நடத்தப்பட்டது.

விருகம்பாக்கம் ஜெபக்குழு

இவ் ஜெபக்குழுவினருக்குரிய மிஷனெறியாக மலை விசுவாசி திரு. கண்ணுசாமி என்பவர் கொடுக்கப்பட்டார். அன்னாரது அர்ப்பண ஆராதனை விருகம்பாக்கம் புனித ஜாண் மெட்ரிக் பள்ளியில் வைத்து 23-07-1995-ஆம் நாள் அருள்திரு. டி.ஐ. வேதநாயகம் அவர்களால் நடத்தப்பட்டது.

அண்ணாநகர் ஜெபக்குழு

அண்ணாநகர் ஜெபக்குழுவினர் ஒரு மிஷனெறிக்கான நிதியைக் கொடுக்க முன்வந்தனர். அவர்களுக்கு திரு. எட்வின் ராஜ் அவர்கள் மிஷனெறியாகக் கொடுக்கப்பட்டார். அன்னாரது அர்ப்பண ஆராதனை 01-10-1995-ல் எப்.இ.எஸ். மெட்ரிக் பள்ளியில் வைத்து அருள்திரு. அறிவர். பி. சுந்தர்சிங் அவர்களால் நடத்தப்பட்டது.

சைதாப்பேட்டை ஜெபக்குழு

இவ்வட்டார ஜெபக்குழுச் செயலர் திரு. தா. ஜீவதாஸ் மற்றும் அங்கத்தினர்கள் இணைந்து ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தனர். திரு. கெ. டேவிட் ஜாண்சன் என்பவர் மிஷனெறியாகக் கொடுக்கப்பட்டார். அன்னாரது அர்ப்பண ஆராதனை சி.எஸ்.ஐ. பரிசுத்த தோமா ஆலயத்தில் வைத்து அருள்திரு. ஜெயக்குமார் லைட் அவர்களால் 25-02-1996-ஆம் நாள் நடைபெற்றது.

சென்னைக் கிளை

சென்னைக் கிளை ஜெபக்குழுவினர் முதலாவதாக ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தனர். திருமதி. குளோறி எட்வின் அவர்களுக்குரிய மிஷனெறியாகக் கொடுக்கப்பட்டார். அன்னாரது அர்ப்பண ஆராதனை 16-03-1997-ஆம் நாள் அருள்திரு. பால்ராஜ் அவர்களால் நடத்தப்பட்டது.

திரு. ஞானப்பிரகாசம் என்பவரை இக்கிளை தனது இரண்டாவது மிஷனெறியாகத் தாங்க முன்வந்தது. அன்னாரது அர்ப்பண ஆராதனை யோக்பெல்லோ அருள்திரு. டி. எலியாஸ் அவர்களால் 09-08-1998-ஆம் நாள் நடத்தப்பட்டது.

சென்னைக் கிளை ஜெபக்குழுவின் மூன்றாவது மிஷனெறியாக திரு. எபனேசர் ஏழுமலை அவர்கள் கொடுக்கப்பட்டார். அம்மிஷனெறியின் அர்ப்பண ஆராதனை ராயபுரம் சி.எஸ்.ஐ. உலக மீட்பர் ஆலயத்தில் வைத்து 27-02-2000-ஆம் நாள் அருள்திரு. எபனேசர் இம்மானுவேல் ஆண்டர்சன் முன்னிலையில் அருள்திரு. இராஜேந்திரன் அவர்களால் நடத்தப்பட்டது.

சென்னைக் கிளை ஜெபக்குழுவின் வளர்ச்சி மிஷனெறிப் பாதையில் ஒரு புதிய மைல் கல்லாகும். இவர்கள் மேலும் மூன்று மிஷனெறிகளைத் தாங்க முன்வந்தனர். இவர்களுக்குரிய மிஷனெறிகளாகத் திருவாளர்கள் தனராஜ், அற்புதம் மற்றும் செல்வி. மெர்லின் தனக்கொடி ஆகியோர் கொடுக்கப்பட்டனர். அவர்களது அர்ப்பண ஆராதனை 20-05-2001-ஆம் நாள் போரூர் புனித ஜோசப் ஆலயத்தில் வைத்து அருள்திரு. அறிவர். விஜி தம்பி சாலமன் அவர்களால் நடத்தப்பட்டது.

திருமதி. தங்கம் ஜஸ்டின் அவர்களை ஆசிரிய மிஷனெறியாக இக்கிளை அனுப்பியது. இவர்களுக்குரிய நிதியை டக்கர்ஸ் (Tuckurs) ஜெபக்குழு கொடுத்தது. அன்னாரது அறிமுக ஆராதனை அருள்திரு. என். விக்டர் அவர்களால் 10-02-2002-ஆம் நாள் நடத்தப்பட்டது.

இவ்வுலக வாழ்க்கை ஒரே ஒருமுறைதான் மனிதனுக்குக் கிடைக்கும். இந்த வாழ்க்கையை இயேசுவோடு வாழ, இயேசுவைப்போல் மாற, இயேசுவை வெளிப்படுத்த அழைக்கப்பட்டவர்கள் நாம் என்பதை இவ்விசுவாசிகள் உணர்ந்து செயல்பட்டனர். ஜெபமாகிய வேரை ஊன்றி, கனியாகிய பலனைக் களங்கள்தோறும் அனுப்பி, இறைப்பணியில் தங்களை ஈடுபடுத்தினர். வெளிச்சத்தின் பிள்ளைகள் எப்போதும் வெளிச்சத்திற்கு உரியவர்களாக இருக்கின்றார்கள்.

மந்தைவெளி ஜெபக்குழு

இந்த ஜெபக்குழு மூலம் அருள்திரு. அறிவர். ராஜ்குமார் அவர்கள் ஒரு மிஷனெறிக்காகும் ஆதரவு நிதியைக் கொடுத்தார்கள். அன்னாருக்குரிய மிஷனெறியாக திரு. பால் மாயவன் என்பவர் கொடுக்கப்பட்டார். மிஷனெறியின் அர்ப்பண ஆராதனை மந்தைவெளி தூய யோவான் ஆலயத்தில் வைத்து 27-07-1997-ஆம் நாள் அச்சபைப் போதகரால் நடத்தப்பட்டது.

பிராட்வே ஜெபக்குழு

திரு. பிரதாப் சிங் அவர்களின் குடும்பத்தினர் பிராட்வே ஜெபக்குழு வழியாக ஒரு மிஷனெறியைத் தாங்கும் பொறுப்பை ஏற்றனர். அவர்களுக்குரிய மிஷனெறியாக கொடுக்கப்பட்ட அருள்திரு. பினோ ஜான்சன் என்பவர் அருள்திரு. நெல்சன் என்பவரால் 26-07-1998-ஆம் நாள் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

மேற்கண்ட 27 மிஷனெறிகளை மிகக் குறுகிய காலத்தில் தனித்தனி ஜெபக்குழுக்களின் வழியாக அனுப்பிய சென்னையில் வாழும் கிறிஸ்தவர்களின் பணி பாராட்டுக்குரியதாகும். ஆயிரக்கணக்கான மக்கள் கிறிஸ்துவை அறியாமல் மாண்டு கொண்டிருக்கின்ற இந்நாட்டில், ஆண்டவரை அறிந்தவர்கள் இரட்சிப்பின் சுவிசேஷத்தைக் காலந்தாழ்த்தாமல் அறிவிப்பது அனுபவத்தின் வெளிப்பாடு ஆகும். சத்தியவான் ஒரு கலங்கரை விளக்காவான். அவன் தனியே நின்றாலும் அநேகருக்குச் சரியான திசையைக் காண்பிப்பான்.

5. சுவிசேஷ ஜெபக்குழுவின் மதுரைக் கிளை

விதைப்பது கொஞ்சமாயிருக்கும், விதைப்பதைப் பல மடங்காக அறுப்போம். விதைக்காதபடி அறுவடையைக் காண முடியாது. கொடுக்காதபடி நிரம்பி வழிகிற ஆசீர்வாதத்தைப் பெற முடியாது. குமரிப் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் மிஷனெறிப் பணியின் தீ சென்னை வாழ கிறிஸ்தவர்களைப் பற்றிய பின்பு மதுரையிலும் பரவியது. மலைகளில் நடக்கிற பணியானது சுவிசேஷ ஜெபக்குழுவின் மதுரை கிளை அங்கத்தினர்களின் உள்ளத்தில், மிஷனெறி உணர்வினை ஊட்டியது. இதனால் குமரிப் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு ஒரு மிஷனெறிக்கான நிதியினைக் கொடுக்க முன்வந்தனர். மலை விசுவாசியான திரு. ஜாண் முனுசாமி என்பவர் அவர்களுக்குரிய மிஷனெறியாகக் கொடுக்கப்பட்டார். அன்னார் மதுரை சகல புனிதர்கள் ஆலயத்தில் வைத்து, அருள்திரு. வி.ஜெ. ஜாண்சன் அவர்களால் 10-12-2000-ஆம் நாள் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

மீண்டும் அக்குழுவினர் ஒரு மிஷனெறியைத் தாங்க முன்வந்தனர். அவர்கள் சார்பில் திரு. ற்றி. ராஜன் என்பவர் அதே ஆலயத்தில் வைத்து சுவிசேஷ ஜெபக்குழுவின் பொதுச் செயலாளர் அருள்திரு. பி. வில்சன் அவர்களால் 13-10-2002-ஆம் நாள் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

மதுரை மாநகரில் வாழும் அன்பர்கள் பலர் மிஷனெறி ஊழியத்தில் ஆர்வங்கொண்டு, மிஷனெறிகளைத் தாங்கும் பணிகளில் தங்களை

ஈடுபடுத்தி வருகின்றனர். இத்தகையோரை ஒன்றிணைத்து. ஜெபக்குழுக்களை உருவாக்கி, அருட்பணியினை வளர்க்கும் நோக்கில் திரு. மேசியா செல்வன் என்பவர் மதுரைக் கிளை முன்னேற்றப் பணியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவ்விதம் இறைப்பணி தன் எல்லையை அகலப்படுத்தி வருகிறது. இருள்சூழ்ந்த உலகிற்கு தீபம் ஏற்றும் பல ஒளிக்கற்றைகளாக மனிதர்கள் எழும்புவது இறைநாமம் மேன்மைப்பட உதவியாகவுள்ளது.

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழிய வளர்ச்சியானது வெகு விரைவான முன்னேற்றத்தைக் கண்டது. மிஷனெறிகளைத் தாங்குவதில் சபைகள், ஜெபக்குழுக்கள், தனிமனிதர்கள் எனப் பல நிலைகளில் மக்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். ஜெபக்குழுக்கள் பல சங்கிலித் தொடர்போல் வளர்ந்து பெருகின. ஊழியர்களைத் தாங்குவோர் படைபடையாக எழும்பினர். வருங்கால மகிமையைக் குறித்த தெளிவான நம்பிக்கை, தம் சொந்த ஜனங்கள் மீது கொண்ட அளவற்ற அன்பு ஆகியனவே இத்தகைய நிலைக்குக் காரணமாகும். இவர்கள் அனைவரும் வாழ்க்கைப் பயணத்தை முடிக்கும்போது நான் வீணாக ஓடியதும், வீணாக பிரயாசப்பட்டதும் இல்லை என்கிற மகிழ்ச்சியோடு காணப்படுவர். இத்தகைய நிலைக்கு ஒவ்வொருவரும் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

"ஆத்தும ஆதாயம் செய்குவோமே - இது
ஆண்டவர்க்குப் பிரியம் - நாமதினால்
ஆசீர்வாதம் பெறுவோம்"

8

பணிக்களங்களும் ஊழியங்களும்

"சமாதானத்தைக்கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி; உன் தேவன் ராஜரிகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன" (ஏசாயா 52-7)

தேவன் படைத்த மனிதனுக்குப் பெரும்மலைகள், காடுகள், சமவெளிகள், கடல்கள், கடல்வாழ், நீர்வாழ் உயிரினங்கள், பறவைகள், மிருகங்கள் அனைத்தும் சொந்தமாயின. அவற்றை ஆளும் உரிமையையும் இறைவன் மனிதனுக்குக் கொடுத்தார். ஆனால் மனிதன் யாருக்குச் சொந்தம் என்பதே இப்போது எழும்பும் கேள்வி? மனிதன் தன்னைப் படைத்த இறைவனுக்கே சொந்தம் என்பதை அவன் அறியவில்லை, அவனுக்கு அறிவிக்கவும் இல்லை. அறியாமையின் இருளில் மூழ்கிக் கிடக்கும் அவனை மீட்பதே இறைவனின் நோக்கமாகும் என்ற கோட்பாட்டிற்கு உடன்பட்டோர் உலகில் சிலர். அவர்கள் வாழ்க்கை என்னும் ஓட்டப்பந்தயத்தில் ஓடி உண்மையைக் கண்டுகொண்டனர். பின்னர் அதனை அறிவிக்கும் மிகப்பெரிய பொறுப்பைத் தங்கள் கடமையாகக் கொண்டனர். அவர்களில் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த திருமதி. ஈவ்லின் பிராண்ட் அம்மையார் மிகவும் முக்கியமானவர்கள். அவர்கள் பெரிய கல்வராயன் மலையிலுள்ள பகுதிகளில் பலமுறை இயேசுவின் நற்செய்தியை அறிவித்து வந்தார்கள். எனினும் பெரிய கல்வராயன் மலையின் சிலபகுதிகளும், சின்ன கல்வராயன் மலையின் முழுப் பகுதிகளும் இதுவரை இயேசுவை அறியவில்லை. அறிவிக்க எவரும் முன் வரவுமில்லை என்பது ஈவ்லின் அம்மையாரின் வேதனையாக இருந்தது. ஜாகீர், கல்வராயன் மலைகள், விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய மாவட்டப் பகுதிகளில் விரிந்து பரந்து கிடக்கின்றன. இத்தகைய மலைவளம் பொருந்திய பகுதியில் வாழும் மக்களுக்கு இறை அன்பை இலவசமாகக் கொடுக்கத் தன்னை அர்ப்பணித்தவர்களுள் அருள்திரு. டி. எலியாஸ் முதன்மையானவர்.

இயேசுவின் அன்பை இவ்வுலகில் வாழும் கடைசி மனிதன் வரைக் கூறுவதே பேராய சுவிஷேச ஜெபக்குழுவின் நோக்கமாகும். இதற்குமுன் ஊழியர்களை அனுப்பி மிஷனெறிச் சங்கங்களின் கடமை உணர்வினை குமரிப் பேராயம் அறிந்திருந்தது. எனவே குறிப்பிட்ட நோக்குடனும் பரந்த திட்டத்துடனும் மிஷனெறி ஊழியங்களைச் செயல்படுத்தியது.

1. கல்வராயன் மலை

இம்மலையில் வாழும் மக்கள் அரசர்களின் கொடுங்கோல் ஆட்சியாலும், அடக்கு முறையாலும், பாளையக்காரர்களின் வரிவசூல் கொடுமைகளாலும் சமவெளிகளிலிருந்து இடம்பெயர்ந்து மலையடி வாரத்திற்குச் சென்றிருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் கொத்தடிமைகளாக, உரிமையிழந்து சுகாதாரம் அற்ற வாழ்க்கை வாழ்ந்தனர். மூடநம்பிக்கையில் தங்களை அடிமையாக்கினர். அன்னியர் ஒருவரைக் கண்டால் நீண்ட தூரம் ஓடி, பின்னர் மறைந்து நின்று பார்ப்பர். அனைவரும் படிப்பறிவு இல்லாத பாமரர்களாகவே காணப்பட்டனர். இம்மலையிலுள்ள தேக்கம்பட்டுக் கிராமத்தைப் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் முதல் ஊழியக்களமாக டி.எலியாஸ் அவர்கள் தெரிந்தெடுத்தார்கள். இதுவே குமரிப் பேராய சுவிசேஷ ஜெபக்குழு சொந்தமாகத் தொடங்கிய முதல் பணித்தளமாகும்.

தேக்கம்பட்டுக் கிராமம்

சமுதாயத்தால் ஒடுக்கப்பட்டு, காயப்படுத்தப்பட்டு, ஒதுக்கப்பட்ட மக்கள் என்றே தேக்கம்பட்டுக் கிராம மக்களைக் கூற வேண்டும் கேட்பதற்கு நாதியில்லாதவர்கள், துடைத்துப் போடப்பட்ட அழுக்கைப் போன்றவர்கள். இவர்களைத் தேடி மிஷினறி எலியாஸ் அவர்கள் மூலைக்காடு பகுதியிலிருந்து சுமார் 18 கிலோ மீட்டர் தூரம் நடந்து தன் பாதத்தை 1977 ஜூன் 20 ஆம் நாள் தேக்கம்பட்டுக் கிராமத்தில் பதித்தார். இதுமுதல் பணிகள் வேகமாக நடைபெற்றன.

அரசு வெட்டிய கிணறு

தேக்கம்பட்டு கிராமத்தில் அரசு வெட்டிய கிணறு ஒன்று இருந்தது. அதில் நிறைய தண்ணீரும் இருந்தது. ஆனால் அம்மக்கள் மூடநம்பிக்கையினாலும் தண்ணீரை இறைத்துச் சுத்திகரிக்கத் தெரியாததாலும் நீரைப் பயன்படுத்தாமல் கிணற்றைப் பாழடைய விட்டு விட்டார்கள். 1977 அக்டோபர் மாதம் எலியாஸ் அவர்கள் தன்னுடன் பணியாற்றும் திரு. வில்லியம், திரு. செல்வராஜ் ஆகிய மிஷனெறிகளுடன் கூலியாட்களையும் அமர்த்தி அக்கிணற்றிலிருந்த அழுக்கு நீரை இறைத்துச் சுத்தமாக்கினார். மக்களுக்குத் தண்ணீர் எடுக்க வசதியாக ஒரு

வாளியும் கயிறும் வாங்கிப் போட்டார். பாழடைந்த கிணறு பயனுள்ளதாயிற்று. மாசுப்பட்ட நீர் குடிநீராயிற்று. அசுத்தமான நீரைக் குடித்த மக்கள் தூய நீரைக் குடித்துக் குதூகலம் கொண்டனர். இதற்குமுன் அக்கிராமம் முழுவதும் ஒரே ஒரு குட்டையிலிருந்துதான் தண்ணீர் எடுத்தனர். அக்குட்டை நீரையும் சுத்தமில்லாமல் பயன்படுத்தியதால் பலர் 'நரம்புச் சிலந்தி' நோய்க்கு ஆளாகியிருந்தனர். இவைகளெல்லாம், இக்கிணற்று நீரால் செம்மைப்படுத்தப்பட்டன.

தண்ணீர் தீட்டாகி விட்டது

தேக்கம்பட்டு கிராமத்தில் ஒரு மரணம் வந்தது. இறுதிச் சடங்குகள் முடிந்த பின்னர், அவ்வூர் வழக்கப்படி ஆண்களும் பெண்களும் குடித்துக் கும்மாளம் போட்டனர். அப்போது, போதையிலிருந்த பெண் ஒருத்தி கிணற்றில் நீர் எடுக்கச் சென்றாள். வாளியைக் கிணற்றில் விட்டு நீர் எடுக்கும்போது, கயிறு கப்பியின் இடுக்கில் விழுந்தது. அதை சரி செய்ய கிணற்று மதிலில் ஏறினாள். கண்ணிமைக்கும் நேரத்திற்குள் கால் தவறி கிணற்றுக்குள் வீழ்ந்தாள். சத்தம் கேட்ட ஊர் மக்கள் கூடினர். மிகவும் சிரமப்பட்டு அப்பெண்ணை வெளியே எடுத்தனர். அவள் அதிக அளவில் தண்ணீர் குடித்து மயங்கி விட்டாள். இதனைக் கேள்விப்பட்ட மிஷனெறி எலியாஸ் முதலுதவி செய்து அப்பெண்ணுக்குள்ளிருந்த தண்ணீரை வெளியாக்கிச் சுயநினைவு வரச் செய்தார். அப்போது அங்கு வந்த கோடங்கி ஒருவன் அவ்வூர் மக்களிடம், "அப்பெண் அவளாகக் கிணற்றில் விழவில்லை. பேய்தான் தள்ளிப் போட்டது. அப்பேயை விரட்டாவிட்டால் இன்னும் அவளை இப்பேய் கிணற்றில் தள்ளும்" என்றான். இதனைக் கேட்ட பெற்றோர் பயந்து பூசை செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்தார்கள். மறுநாள் அப்பெண்ணை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல மிஷனெறி எலியாஸ் அங்குச் சென்றார். அப்போது ஊர்ப்பஞ்சாயத்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவர்கள் எலியாசைப் பார்த்து, "வாத்தியாரே, சும்மா கிடந்த கிணற்றை இறைக்க உன்னை நாங்கள் கேட்கவில்லை. நீ கிணற்றை இறைத்ததால்தான் இப்பெண் விழுந்தாள் இதனால் கிணறு தீட்டாகி விட்டது" என்று குற்றப்படுத்தித் தீர்ப்பளித்து விட்டனர். பின்னர் அவ்வீட்டாருக்கு ரூ. 50 அபராதம் விதித்தனர். அதைக்கொடுக்க வசதியில்லாமையால் அவ்வீட்டினர் அத்தொகையினைக் குறைக்க வேண்டினர். அதற்கு ஏற்ப ரூ. 5 எனக் குறைத்து பாக்கியைப் பின்னால் கட்டுமாறு பஞ்சாயத்தார் கூறினர்.

கிணற்றில் விழுந்து அடிபட்ட அப்பெண்ணை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்ல மிஷனெறி எலியாஸ் தீர்மானித்தார். வறுமை வாய்ப்பட்ட அக்குடும்பத்தில் போதிய பொருளாதார வசதியில்லை. எனவே எலியாஸ்

அம்மலையில் சிலரிடமிருந்து ரூபாயைக் கடனாகப் பெற்று அப்பெண்ணை 18 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள தாணிப்பாடி மருத்துவமனைக்குக் கொண்டுச் சென்றார். அங்குள்ள மருத்துவர்கள் "இப்பெண்ணுக்குத் தலையில் அடிபட்டுள்ளது. இதனால் மயக்கமாயுள்ளாள். உடனே வேறு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லுங்கள்" எனக் கூறினர். உடனே எலியாஸ் அப்பெண்ணைத் திருவண்ணாமலையிலுள்ள பெரிய மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார். அங்கு அப்பெண் இரண்டு வாரங்கள் சிகிட்சை பெற்றுக் குணமடைந்து சுகமாக வீடுதிரும்பினாள். இச்செய்தி மலை மக்களிடையே வேகமாக்ப் பரவிற்று. மக்கள் மிஷனெறிகள் மீது அன்பும் ஆர்வமும், நம்பிக்கையும் கொண்டனர்.

மொட்டையன் - முதல் விசுவாசி

தேக்கம்பட்டு கிராமத்தில் ஒரு நாள் பஞ்சாயத்துக் கூடியது. மொட்டையன் என்ற பெயர் கொண்ட ஒருவர் சில நாட்கள் வாய் பேசாதிருந்தார். அதற்கு மொட்டையனின் பக்கத்து வீட்டுக்காரரான சடையன் என்பவரது செய்வினையே காரணம் என்ற குற்றச்சாட்டு விசாரணைக்காகப் பஞ்சாயத்தில் வந்தது. பஞ்சாயத்தினர் அதனைத் தீவிரமாக விசாரித்து, சடையனுக்கு ரூபாய் 300 அபராதம் விதித்தனர். பஞ்சாயத்துக் கூட்டம் முடிந்தபின் அக்கூட்டத்தின் ஒரு பகுதியினர் மொட்டையனை மிஷனெறி எலியாஸ் அவர்களின் இல்லத்துக்கு அழைத்து வந்தனர். மொட்டையனின் அண்ணன் எலியாசிடம், "இயேசு சுவாமி, என் தம்பியை நீதான் காப்பாற்ற வேண்டும்" என்று முறையிட்டான். உடனே எலியாசும் கூட இருந்த எஸ்.ற்றி. இரத்தினராஜ், M.G. ஜாண்ராஜ், எஸ். ஜஸ்டின் ஆகியவர்கள் கூடி ஊக்கமாய் மொட்டையனுக்காக ஜெபித்தனர். ஜெபம் முடிந்தவுடன் மொட்டையன் வாய் திறந்து "இயேசுவின் இரத்தம் ஜெயம்" என்று கூறி வாய் பேசத் தொடங்கினான். கூடி நின்றவர்கள் மகிழ்ச்சி பொங்கி இயேசுவைப் புகழ்ந்து பாடினார்கள். அம்மொட்டையன் ஆபிரகாம் என்ற பெயருடன் திருமுழுக்குப்பெற்று, கிறிஸ்துவிற்கு முதல் விசுவாசியாய் அம்மலையில் மாறினான். தொடர்ந்து அவன் குடும்பத்தினரும் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள். தேக்கம்பட்டுக் கிராமத்திலும், கல்ராயன் மலையிலும் சுவிசேஷ ஜெபக்குழு பெற்றெடுத்த முதற்கனி "மொட்டையன் என்ற ஆபிரகாமே" ஆவார்.

தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி, தள்ளாடும் முழங்காலைப் பெலப்படுத்தி ஜெபிக்கும்போது, இருண்ட கண்ணும் ஒளிபெறும், செவிடர் செவிகள் திறக்கப்படும், முடவன் மான்போல் குதித்திடுவான், ஊமையன்

நாவு பேசிடுமே என்ற பாடல் எத்தனை சாரமுள்ளது என்பதை மொட்டையன் வாழ்வு சான்றாக்கியது.

ஊழியர் இல்லம்

சுவிசேஷ ஜெபக்குழுவின் மிஷனெறிகள் அக்கிராம மக்களின் ஒத்துழைப்புடன் ஊழியர் இல்லம் ஒன்றினை 1977 அக்டோபர் மாதம் கட்டி முடித்தனர். அக்கட்டிடத்தை அருள்திரு. எம். ராஜையன் அவர்கள் கர்த்தரின் நாம மகிமைக்காக அர்ப்பணம் செய்தார். அக்கட்டிடம் வீடாகவும், ஆராதனை மையமாகவும், இரவுப் பள்ளியாகவும் பயன்படுத்தப்பட்டது. அதனருகில் காசா (C.A.S.A.) நிறுவனத்தாரால் உறுதியான சமூகக்கூடம் ஒன்று கட்டப்பட்டது. பின்னர் அது ஆலயமாகப் பயன்படுத்தப்பட்டது. இதே கிராமத்தில் 14-10-1994 ஆம் நாளன்று குளச்சல் சபையினர் கட்டிய ஊழியர் இல்லம் அருள்திரு. ஜெ. ஞானதாசன் அவர்களால் அர்ப்பணிக்கப்பட்டது. அந்நாளில் 35 விசுவாசிகள் திருமுழுக்குப் பெற்றார்கள். இன்று அக்கிராமத்தில் சுவிசேஷ ஜெபக்குழுவிற்குச் சொந்தமாக 20 சென்று நிலமுமுள்ளது.

குருகிலாம்பூர்

சமுதாயத்தில் சிதறிக் கிடக்கும் சிறுதுளிகளை ஒன்றிணைத்து, அவர்களுக்குச் சுவிசேஷத்தைக் கொடுத்து வாழ்வில் ஒளிவீசும் தீபங்களாக உருவாக்குவதே இறைப்பணியாகும். சுவிசேஷ ஜெபக்குழு தன் எல்லையை விரிவாக்க ஆவல் கொண்டது. அதன்பேரில் 4-4-1979 ஆம் நாள் அருள்திரு. டி. எலியாஸ் அவர்களால் குருகிலாம்பூர் என்ற பணித்தளம் தொடங்கப்பட்டது. மருதங்கோட்டைச் சேர்ந்த திரு. சி. சத்தியதாஸ் அவர்கள் தனது துணைவி திருமதி. ஷீலா அவர்களின் நினைவாக இப்பணித்தளத்தில் 4 ஏக்கர் பூமியைச் சுவிசேஷ ஜெபக் குழுவிற்கு வாங்கிக் கொடுத்தார்கள். இதனால் அப்பூமியை "ஷீலா நகர்" என பெயரிட்டு அழைத்தனர். அப்பணித்தளத்தில் வாழ்கின்ற மக்களின் அன்றாட வசதிகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் மார்த்தாண்டம் திருச்சபையார் கல்லறைத் தோட்டத்திற்காக ஒரு ஏக்கர் பூமியை வாங்கிக் கொடுத்தார்கள். மதுரை ஜெயராஜ் நாடார் குடும்பத்தினரான பொறியாளர் ...குமார், தன் தாயின் பெயரில் **திருமதி தேவபாக்கியம் பெரிய நாயகம் நினைவு ஆலயத்தை** அப்பணித்தளத்தில் கட்டிக் கொடுத்தார்கள். அவ்வாலயத்தை 14-10-1984 ஆம் நாள் திருப்பத்தூர் கிறிஸ்து குல ஆசிரமத் தலைவர் விக்டர் அண்ணன் அவர்கள் இறை நாம மகிமைக்காகத் திறந்து வைத்தார்கள். இப்பணித்தளத்தில் இன்று ஊழியர் இல்லமும், நல்ல மேய்ப்பன் நடுநிலைப்பள்ளியும் உள்ளன.

இப்பள்ளியைச் சுவிசேஷ ஜெபக்குழுவினரே நடத்துகின்றனர். இப்பள்ளி அமைந்திருக்கும் நிலத்தை இராமவர்மபுரத்தைச் சேர்ந்த திரு. பேசில் தங்கப்பா அவர்கள் வாங்கி, ஜெபக்குழுவிற்குக் கொடுத்தார்கள். பணிபுரியும் ஆசிரியர்கள் தங்குவதற்குரிய கட்டிடமும் அங்குக் கட்டப்பட்டுள்ளது. இப்பணித்தளத்தின் ஆரம்ப ஊழியராய் திரு. பி. ராஜையன் அவர்கள் பணியாற்றினார்கள். தங்களால் நேரடியாகச் சென்று ஊழியம் செய்ய முடியாத நிலையில், அன்பையும் பொருளையும் பிறருடன் பகிர்ந்து கொண்ட மேற்கூறியவர்களின் தொண்டினை நாம் என்றும் நினைவு கூர்தல் வேண்டும்.

பீமாரப்பட்டி

தேக்கம்பட்டுப் பணித்தளத்திற்கு அருகாமையிலுள்ள ஊர் பீமாரப்பட்டியாகும். இவ்வூரைத் தாண்டிதான், மிஷனெறி எலியாஸ் அவர்கள் மோத்தக்கல் என்னும் பகுதிக்குப் பொருட்கள் வாங்கப் போவது வழக்கம். அவ்விதம் செல்லுகையில் பீமாரப்பட்டி மக்களுக்கு நற்செய்தி கூறுவார். பலமுறை திருப்பணி இவ்விதமே நடைபெற்று வந்தது. பின்னர் பீமாரப்பட்டி மக்கள் எலியாசிடம் அக்கிராமத்தில் தங்கிப் பணிபுரிய கேட்டுக் கொண்டார்கள். அதன்பேரில் 01-10-1979 ஆம் நாள் பீமாரப்பட்டியில் புதிய பணித்தளம் தொடங்கப்பட்டது. அவ்வூர் மக்கள் உதாரத்துவமாக 10 சென்ட் பூமியைச் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியத்திற்குக் கொடுத்தார்கள். பின்னர் இறைவனை தொழுது கொள்ள ஆலயம் கட்டப்பட்டது. அவ்வாலயத்தை 21-4-1986 ஆம் நாள் அருள்திரு. எம். ராஜையன் அவர்கள் அர்ப்பணித்தார்கள். வெகுவிரைவில் மார்த்தாண்டம் சபை வாலிபர் ஜெபக்குழுவினரால் அங்கு ஊழியர் இல்லமும் கட்டப்பட்டது. அவ்வீட்டைப் பேராயர் எம். ஐ. கேசரி அவர்கள் 24-7-1999 ஆம் நாள் அர்ப்பணித்தார்கள். இப்பணித்தளத்தின் ஆரம்ப ஊழியராக அருள்திரு. என். விக்டர் அவர்கள் பணிபுரிந்தார்கள். திருமதி. எஸ்தர் றாபர்ட்சன் அவர்களால் மருத்துவப்பணியும் நடைபெற்றது. இவ்விதம் பணித்தளங்களின் வளர்ச்சிக்கு மிஷனெறி எலியாஸ் அவர்களுக்கு இருந்த தெய்வ நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் தாங்கும் மக்களின் ஜெபமுமே காரணமாகும்.

சேராப்பட்டு

"உன் கடவுளாகிய கர்த்தர் நான், உன் வலது கையைப் பிடித்து பயப்படாதே, நான் உனக்குத் துணை நிற்கிறேன்" (ஏசாயா 41-13) என்ற இறைவார்த்தையை நம்பி அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் 10-11-1979 ஆம் நாள் சேராப்பட்டில் புதிய பணித்தளத்தைத் தொடங்கினார்கள்.

...எல்லையை நன்கு விரிவுபடுத்தும் நோக்கில், 18 ஏக்கர் நிலத்தைக் கல்விசேவை வளர்ச்சிக்குழுவிற்காக வாங்கினார்கள். அப்பணித் தளத்தின் ஆரம்பநிலையில் ஓலை வேயப்பட்ட ஒரு சிறு கட்டிடத்தில் ஆராதனை நடைபெற்றது. அதனை 1-4-1981 ஆம் நாள் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் அர்ப்பணம் செய்தார்கள்.

அருள்திரு. வி.ஓய். மோசஸ் நினைவு ஆலயம்

ஓலை வேயப்பட்ட ஆலயத்தின் மேற்கூரையினைக் கட்டுவதற்கு ...நகர் பகுதியைச் சேர்ந்த திரு. ஜான்வில்லி மோசஸ் குடும்பம் உதவி செய்தது. பின்னர் அவர்களது விருப்பப்படி அவ்வாலயத்திற்கு "அருள்திரு. வி.ஓய். மோசஸ் நினைவு கிறிஸ்து ஆலயம்" என்ற பெயரினை இட்டனர். இவ்வாலயத்தை, பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் 1987 மார்ச் 1 ஆம் நாள் அர்ப்பணம் செய்தார்கள். மீண்டும் இவ்வாலயம் விரிவாக்கம் செய்யப்பட்டு, 1993 மார்ச் 1 ஆம் நாள் அருள்திரு. எம். ராஜையன் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டது. உன் எல்லையை விரிவாக்குவேன் என்ற இறைவன் நாளும் பொழுதுமாகப் பணிகளை வளரச் செய்தார்.

கல்வி நிறுவனங்களும் விடுதிகளும்

ஒரு சமூகம் அடித்தளமாக முன்னேறி வளரவேண்டுமென்றால் அதற்குத் தேவை அறிவு வளர்ச்சியே ஆகும். உடல் ரீதியாக அடிமைப்படுவதைவிட அறிவு ரீதியாக அடிமையாவது சமூகத்தின் நெடுங்காலத்தைப் பின்னுக்குத் தள்ளிவிடும். ஒரு மனிதனுடைய வாழ்வில் அவனுக்குப் பலவித கடமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் ஒன்று கல்வி இல்லாதவர்களுக்குக் கற்றவர் உதவுவது ஆகும். நற்செய்தி அறியாதவர்களுக்கு எப்படி கிறிஸ்துவைக் கொடுக்கிறோமோ அதுபோல கல்வி கொடுப்பதும் பிரதான பணி என்பதை மிஷனெறிகள் உணர்ந்தனர். 'அறிவுடைய ஒருவனை அரசனும் விரும்பும்' (வெற்றி வேற்கை 37) என்பதால் மலைமக்களை மேன்மையடையச் செய்யத் திட்டம் வகுத்தனர். ஒருகாலத்தில் எங்கள் முன்னோரின் வாழ்க்கையை ... மிஷனெறிகளே மாற்றினார்கள். அதுபோல் இம்மலைப்பகுதி மக்கள் வாழ்வில் முன்னேறக் கல்வியறிவு மிகமிகத்தேவை என்னும் நோக்கில் எலியாஸ் அவர்கள் சேராப்பட்டில் 1983 ஜூன் 20-ஆம் நாள் ...பப்பன் நடுநிலைப்பள்ளியை 38 மாணவர்களுடன் துவக்கினார். ஏராளமாக மலைவாழ்மக்களும், மலையடிவார ஏழைப் பிள்ளைகளும் இப்பள்ளியில் சேர்ந்து படித்தது. காண்பதற்கினிய காட்சியாக அமைந்தது.

நல்ல மேய்ப்பன் பாடசாலையில் படிக்கும் பிள்ளைகள் தங்கிப் படிப்பதற்கு விடுதி ஒன்று முக்கியமான தேவையாக இருந்தது. அதனை காசா (C.A.S.A.) நிறுவனத்தார் C.S.I. Mahete Programme என்ற திட்டத்தின் மூலம் கட்டி உதவினர். இவ்விடுதிக்கு **'பிரதமப் பேராயர் ஐ.ஆர்.ஹெச் ஞானதாசன் நினைவு ஆண்கள் விடுதி'** எனப் பெயர் சூட்டப்பட்டது. இக்கட்டிடத்தை 13-10-1984-ஆம் நாள் விருத்தாச்சலம் மாவட்டக் கல்வி அதிகாரி (D.E.O) திரு. வேதமுத்தானந்த தாஸ் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

சேராப்பட்டில் நடைபெற்று வந்த இளம் மழலையர்கள் (Nursery School) படிக்கும் பள்ளிக்கூடத்திற்குரிய கட்டிடம் கட்டுவதற்குரிய முழுநிதியினையும் மார்த்தாண்டம் "இவான்ஸ் பள்ளி மேலாளர்" திரு. ஈவான்ஸ் நல்லதம்பி அவர்கள் கொடுத்தார்கள். அப்பள்ளிக் கட்டிடம் 15-7-1992-இல் அருள்திரு. எம்.ஐ.கேசரி அவர்களால் அர்ப்பணிக்கப்பட்டது.

சேராப்பட்டில் படிக்கும் ஆதிவாசிப் பெண்கள் விடுதிக் கட்டிடம் கட்டத் தேவையான உதவிகளை ஜெர்மன் பக்தி முயற்சிச் சங்க இந்தியன் ஹில்பே (Indian Hilfe) செய்தது. இக்கட்டிடத்தை 7-11-1993 அன்று பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் அர்ப்பணம் செய்ய, அருள்திரு. ஆன்ட்ரூ றுடால்ப் அவர்கள் திறந்து வைத்தார்கள். இங்குப் படிக்கின்ற மாணவர்கள் மற்றும் வாழுகின்ற மக்களின் நலன்கருதி, நல்ல சமாரியன் மருத்துவமனை ஒன்றும் கட்டப்பட்டது.

நல்ல மேய்ப்பன் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு 26-9-1992-ஆம் நாள் அடிக்கல் நாட்டப்பட்டது. ஜெர்மனியைச் சேர்ந்த பெரியவர் Deutchee E. Verbandi Kassel அவர்கள் இக்கட்டிடம் கட்டத் தேவையான நிதியை நன்கொடையாகக் கொடுத்து உதவினார்கள். கட்டி முடிக்கப்பட்ட கட்டிடத்தை 6-6-1995-ஆம் நாள் பிரதமப் பேராயர் அறிவர். வசந்த். பி. டாண்டின் அவர்கள் அர்ப்பணம் செய்ய, இந்தியன் ஹில்பே தலைவர் திரு. சேது அவர்கள் திறந்து வைத்தார்கள். இக்கட்டிடத்திலுள்ள அரங்கம் கட்டுவதற்கு சி.எம்.எஸ். நிறுவனம் சுமார் 5,00,000/- ரூபாய் உதவி செய்தது.

நல்ல மேய்ப்பன் ஆரம்பப் பாடசாலை மற்றும் விடுதிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக அமைச்சர் கே.ஆர். பன்னீர் செல்வம் அவர்கள் 11-8-1996 அன்று அடிக்கல் நாட்டினார்கள். கட்டி முடிக்கப்பட்ட அக்கட்டிடங்களை 25-7-1999 இல் திரு. தா. உதய சூரியன் எம்.எல்.ஏ முன்னிலையில் பேராயர் எம்.ஐ. கேசரி அவர்கள் அர்ப்பணித்தார்கள்.

சேராப்பட்டிலுள்ள ஆரம்பப் பள்ளி வகுப்பறை மற்றும் மாணவர் விடுதிக் கட்டிடம் கட்டுவதற்கு அருள்திரு. எலியாஸ் அவர்கள் 13-1-2000 அன்று அடிக்கல் நாட்டினார்கள்.

பல்நோக்குக் கட்டிடங்கள்

மனிதன் இறைவனுக்கு முன் முற்றிலுமாகக் கீழ்ப்படியும் போது, திட்டங்களைத் தேவன் கொடுப்பார். இறைப்பயணத்தில் ஈடுபட்டுச் செயலாற்றும் மனிதனுக்கு வாழ்க்கையில் தோல்வியே கிடையாது. வளர்ச்சி என்பது படிப்படியாக வந்து கொண்டே இருக்கும். சேராப்பட்டின் வளர்ச்சியில் அடுத்த மைல்கல்லாகக் காசா (C.A.S.A) நிறுவனத்தினரால் ஜெபக்குழுவிற்கு அலுவலகமும் விருந்தினர் தங்கும் விடுதியும் கட்டப்பட்டது. அக்கட்டிடத்தைக் காசாவின் அதிகாரி திரு. வெற்றிவேல் முன்னிலையில், மேஜர் ஜெ.கெ. மிச்சல் அவர்கள் 5-3-1983-இல் திறந்து வைத்தார்கள்.

மேலும் ஒருங்கிணைந்த ஆதிவாசி நலத்திட்டம் (Intergrated Tribal Developement) மூலமாகச் சமூக மையம் ஒன்றும் கட்டப்பட்டது. அக்கட்டிடத்தைத் திரு. கலிதீர்த்தான் எம்.எல்.ஏ முன்னிலையில் தென்ஆற்காடு மாவட்ட ஆட்சியர் திருமதி. சி.கெ. கரியாலி அவர்கள் திறந்து வைத்தார்கள். மக்களின் அடிப்படைத் தேவைகளைக் கருத்தில் கொண்டு தையல் நிலையம், ஆசிரியர் மற்றும் அலுவலர் தங்கும் கட்டிடம், இளைஞர் ஊழியக் கட்டிடம், போன்றவைகளும் அங்கு கட்டப்பட்டன. எளிமையான முயற்சியின் பலனாகச் சேராப்பட்டுக் கிராமம் இன்று மலையில் ஓர் பட்டணமாகத் திகழ்கிறது.

பேய்நிலம் பரிசுத்த நிலமானது

சேராப்பட்டில் தன்பணியைத் தொடங்கிய மிஷனெறி எலியாஸ் அவர்கள் தங்குவதற்குரிய வீடொன்றைக் கட்ட முடிவு செய்தார். அப்போது ரூபாய் 500 கொடுத்து, கிராமத் தலைவன் பிச்சன் என்பவரது நிலத்தைப் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் பெயருக்கு வாங்கினார். இப்பூமியில் இரு அறைகளுடன் கூடிய வீடொன்றைக் கட்டினார். அவ்வீட்டை வேலூர் பேராயர் பாஸ்கரனின் சகோதரர் ஆல்பர்ட் அவர்கள் 1979 நவம்பர் 10 ஆம் நாள் அர்ப்பணம் செய்தார், அச்சூழலில் ஆல்பர்ட் என்பவரிடம் 2½ ஏக்கர் பரப்பளவில் பேய்ப் பூமி ஒன்று உள்ளதாகவும் அப்பூமியின் வரலாற்றையும், ரூ. 300 கொடுத்தால் அதனை விலைக்கு வாங்கலாம் என்றும் மிஷனெறி எலியாஸ் கூறினார். உடனே ஆல்பர்ட் அவர்கள் “விரைவில் ஒரு குடும்ப உதவியுடன் இப்பூமியை வாங்க உதவுகிறேன்” என்று கூறினார். சில நாட்களுக்குள் தான் சொன்னபடி ரூ. 300-ஐ அனுப்பினார். எலியாஸ் பூமியை வாங்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

சேராப்பட்டு, தேக்கம்பட்டுக் கிராமங்களுக்கு இடைப்பட்ட ஒரு பகுதியில் 2½ ஏக்கர் பூமி ஒன்று இருந்தது. அந்த பூமியில் பயிர் செய்த பலர் இறந்து போயினர். அதனால் வேறு எவரும் அப்பூமியில் பயிர் செய்யத் துணியவில்லை. எனவே அப்பூமியின் உரிமையாளர் வேறொருவருக்கு அந்நிலத்தை விற்றுவிட்டார். அதை வாங்கியவர் ஐந்து பேரை வேலை செய்யுமாறு அந்நிலத்திற்கு அனுப்பினார். அவர்கள் அனைவரும் சிறிது நேரத்தில் மயங்கி விழுந்து விட்டார்கள். உடனே அந்நிலத்தின் உரிமையாளர்களும், மற்றவர்களும் ஐந்து பேரையும் ஜெபக்குழுவின் ஊழியர்களிடம் அழைத்து வந்தனர். அங்கிருந்த மிஷனெறிகளான கெ.ஆர். வில்லியம் மற்றும் எ. செல்வராஜ் ஆகியோர் ஊக்கமாக ஜெபித்தனர். சிறிது நேரத்தில் ஐவரும் மயக்கம் தெளிந்து ஆறுதல் அடைந்தனர். இவற்றிற்கெல்லாம் அப்பூமியில் தங்கும் பேய்தான் காரணம் என அவ்வூர் மக்கள் நம்பி வந்தனர். இதனால் அந்நிலத்தைப் பேய்நிலம் என்று அழைத்து வந்தனர்.

பேய்நிலத்தை எலியாஸ் வாங்க முற்பட்டதை அறிந்த கிராமத்தலைவரும், கிராமப் பெரியவர்களும் எலியாஸின் மீதும் ஏனைய மிஷனெறிகள் மீதும் அன்பு கொண்டு நிலம் வாங்குவதைத் தடுத்தனர். எலியாசைப் பார்த்து, "வாத்தியாரே! பேய்ப் பூமியை வாங்காதீர் வாங்கினால் உங்களுக்கு ஆபத்து வரும்" என்றனர். அதற்கு பதிலுரையாக எலியாஸ் அவர்கள், "பேய்களை விரட்டவே நான் வந்திருக்கிறேன். கவலைப்படாதீர்கள்" என்றுகூறி பூமியின் உரிமையாளருக்கு ரூபாய் 300/-ம், பஞ்சாயத்துக்கு ரூபாய் 10/-ம் கொடுத்துப் பூமியை வாங்கினார். சில நாட்கள் சென்றபின் எலியாஸ் தன் உடன்ஊழியர்களுடன் பேய் நிலத்திற்குச் சென்று பாடி, ஜெபித்துப் பூமியைச் சுற்றி வந்து சிலுவை ஒன்றை மரத்தின் மேல் வைத்தார். அடுத்த நாள் காலையில் பக்கத்து நில உரிமையாளர் வந்து, "நேற்று கனவில் பேய் தோன்றி உன் பக்கத்துக் கொல்லையில் இயேசுநாதர் வந்துவிட்டார். எனக்கு இனி அங்கு இடமில்லை. நீ எனக்கு ஓர் ஆட்டுக்கடாவை பலிகொடுத்து விடு. இல்லையென்றால் உன்னை விட்டுப் போக மாட்டேன்" என்று கூறியது. அதற்குப் பயந்து நான் ஆட்டுக்கடா ஒன்றைப் பலிகொடுத்து விட்டேன் என்றான். உடனே மிஷனெறி, "தம்பி, பேய்க்கே இயேசுநாதர் எப்படிப்பட்டவர் என்பது தெரிந்திருக்கிறது. ஆனால் உனக்குத் தெரியவில்லை" என்று கூறி ஜெபித்தார். இவ்வாறாக, பிசாசின் கிரியைகளை அழிக்கும்படி உலகத்தில் அவதரித்த இயேசுவின் ஒளி சுவிசேஷ ஜெபக்குழு வழியாக மலைகளில் மிளிர்கிறது.

இயேசு என்னும் நாமத்தில் இயேசு என்னும் நாமத்தில்
ஜெயம் நமக்குண்டு
இயேசு என்னும் நாமத்தில் இயேசு என்னும் நாமத்தில்
பேய்கள் பறந்தோடும்
இயேசு நாமத்தில் நிற்கும்போது
யார் நமக்கெதிராய் நிற்பாரே
இயேசு, இயேசு நாமத்திலே
ஜெயம் நமக்குண்டு

ஆத்திப்பேடு

செங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள இப்பணித்தளம் 1979 இல் தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்தின் பொறுப்பைத் தேவிகோடு சபை ஏற்றது. முதற்கண் அவர்கள் 32 சென்ட் பூமியை வாங்கினர். அப்பூமியில் டாக்டர் மத்தியாஸ் நினைவாக ஆலயம் கட்டத் தேவையான நிதியை டாக்டர் எம். மோரீஸ் அவர்கள் வழங்கினார்கள். 14-8-1994-ஆம் நாள் அருள்திரு ஒய். ராபின்சன் அவர்களால் அவ்வாலயத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. 13-6-1997 இல் பேராயர் எம். ஐ. கேசரி அவர்களால் அவ் வாலயம் அர்ப்பணம் செய்யப்பட்டது. திரு. ஜெ. பாலையன் அவர்கள் இப்பணித்தளத்தின் முதல் ஊழியராவார். கிறிஸ்துவின் இராஜ்யத்தை விரிவுபடுத்துவதற்கு நம்மையும் நமக்குண்டான யாவற்றையும் சமர்ப்பிப்பதில் மிகுந்த பயனுண்டு.

தும்புராம்பட்டு

தும்புராம்பட்டுப் பணித்தளம் 1980-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஐரேனிபுரம் திருச்சபையார் அப்பணிக்களத்தைத் தங்கள் பொறுப்பில் ஏற்று 56 சென்ட் பூமியை 9-5-1986-இல் வாங்கினார்கள். அப் பணித்தளத்தில் பணிபுரியும் ஊழியர் தங்குவதற்கு முதன் முதலில் புல்கூரை வீடு ஒன்று கட்டப்பட்டது. அப்பணித்தளத்தில் 28-2-1987-ஆம் நாள் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்களால் ஆலயம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அவ்வாலயம் கட்டுவதற்கு ஐரேனிபுரம் சபையினர், நாகர்கோவில் பெண்கள் சங்கத்தினர், மகளிர் கிறிஸ்தவக் கல்லூரி ஊழியர்கள் மற்றும் இந்திய அருட்பணிக் கூட்டமைப்பு (IMA) ஆகியோர் உதவி செய்தனர். எனினும் ஐரேனிபுரம் சபையாரின் விருப்பத்திற்கிசைய, அவ்வாலயத்துக்கு **ஐறீன் நினைவு ஆலயம்** எனப் பெயர் சூட்டப்பட்டது. பேராயர் எம்.ஐ. கேசரி அவர்கள் 12-6-1997 ஆம் நாள் அவ்வாலயத்தைக் கிறிஸ்துவின் நாம மகிமைக்காக அர்ப்பணம் செய்தார்கள். இவ்வாலயத்தின் முதல் பணியாளராக திரு. எ. செல்வராஜ் அவர்கள் பணியாற்றினார்கள்.

தேசம் தேவனை அறியும்
திசையெங்கும் எதிரொலி கேட்கும்
திருச்சபை எங்கும் எழும்பும்
தேவனுக்கே என்றும் மகிமை

வாழைக்குழி

வாழைக்குழி என்ற ஊழியக்களம் புத்திராம் பட்டு வட்டத்திற்கு உட்பட்டதாகும். இப்பணிக்களம் 1982-ல் தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்தின் பொறுப்பை வெங்கஞ்சி திருச்சபையார் ஏற்றெடுத்து, தங்கள் செலவில் 50 சென்ட் பூமி வாங்கினார்கள். அப்பூமியில் அழகிய ஆலயம் ஒன்று கட்டுவதற்கு 24-9-2000-ஆம் நாள் வெங்கஞ்சி போதகர் அருள்திரு. எட்வின் ஜார்ஜ் முன்னிலையில் அருள்திரு. டி. டதி ஐயர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அவ்வாலயம் 19-2-2001 இல் அருள்திரு. எம். விக்டர் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டது. அப்பணித்தளத்தின் முதல் அருட்பணியாளர் திரு. கெ.வி. கிருஷ்ணதாஸ் ஆவார்.

சுவிசேஷ சுடர்களை ஏற்றுவோம்
சுத்த ஜோதியைப் போற்றுவோம்
உலகிற்கு இயேசுவைக் காட்டுவோம்
உன்னதர் பணியைக் கட்டுவோம்

கிளாக்காடு

கிளாக்காடு, சேராப்பட்டு வட்டத்திற்குள் அமைந்த பணித்தளமாகும். 1982-ஆம் ஆண்டு அங்கு நற்செய்தி ஊழியம் தொடங்கப்பட்டது. பின்னர் புத்தளம் திருச்சபையார் அப்பணித்தளத்தைத் தத்தெடுத்து, 28-8-1986-இல் 65 சென்ட் பூமியினை வாங்கினார்கள். அதில் அச்சபையாரும் காசா நிறுவனமும் இணைந்து கட்டிய ஆலயத்தைப் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் 28-2-1987-ஆம் நாள் அர்ப்பணம் செய்தார்கள். தொடர்ந்து அருட்பணியாளர் தங்குவதற்குரிய ஊழியர் இல்லமும் புத்தளம் சபையாரால் கட்டப்பட்டது. அவ்வில்லத்தைப் புத்தளம் சபைப் போதகர் அருள்திரு. டி. இரத்தினராஜ் அவர்கள் 29-5-1996 இல் அர்ப்பணம் செய்தார்கள். அப்பணித்தளத்தில் இருந்த பழைய வீட்டில் தையல் பயிற்சிக் கூடம் ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. புத்தளம் சபையார் அதற்குத் தேவையான தையல் இயந்திரங்களை வாங்கி வழங்கியுள்ளனர். அப்பணித்தளத்தின் முதல் அருட்பணியாளர் திரு. எ. செல்வராஜ் ஆவார். புத்தளம் சபை மிஷனெறியான திரு. ஜாண்சனின் பணியும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்துவின் செய்தியை
சமீபமானவர்களுக்கு உன்வாய் கூறட்டும்
தூரமானவர்களுக்கு உன் கண்ணீரும்
காணிக்கையும் உரித்தாகட்டும்

இந்நாடு

இந்நாடு என்னும் பணித்தளம் 1982 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்தின் பொறுப்பை அழகிய பாண்டிபுரம் வட்டார சி.எம்.எஸ். ஊழியர்கள் ஏற்றெடுத்தார்கள். அதற்காக 23-4-1987 இல் 25 சென்ட் பூமியை வாங்கினார்கள். அதில் ஆலயமும் வீடும் இணைந்த கட்டடத்தைக் கட்டுவதற்கு 1993 ஆம் வருடம் நவம்பர் 6ஆம் நாள் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அக்கட்டிடங்களை யோக்பெல்லோ அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் 7-6-1995 இல் அர்ப்பணம் செய்தார். ஆலயத்தை திரு. டி. ஏசுஞானதாஸ் அவர்களும், ஊழியர் இல்லத்தை அருள்திரு. எஸ். ஜஸ்டின் அவர்களும் திறந்து வைத்தார்கள். இவைகளைக் கட்டி முடிக்க சி.எம்.எஸ். நிர்வாகிகளும் பணியாளர்களும் பெரிதும் உதவினார்கள். குறிப்பாக திரு. எஸ். இரத்தினராஜ் அவர்களின் பணி பாராட்டத்தக்கது. இப்பணித்தளத்தின் ஆரம்பகால அருட்பணியாளராக திரு. சாலமோன் கணபதி அவர்கள் செயல்பட்டார்கள்.

"கல்வாரி அன்பைக் கண்டவர்கள்
காணாதவர்களைத் தேடி ஓட வேண்டும்
அதனை ருசித்தவர்கள், உரைக்க வேண்டும்
அதுதான் சமூகக் கடமை தவறினால் ஐயோ!"

மான்கொம்பு

சேராப்பட்டிலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்தில் மான்கொம்பு என்னும் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் 18-6-1985 இல் ஊழியம் தொடங்கப்பட்டது. இங்கு, இராமன் என்ற ஒரு வாலிபன் இரத்தசோகை நோயால் பீடிக்கப்பட்டிருந்தான். அம்மக்கள் நோய் குறித்த விவரம் தெரியாமல் கோடங்கியை அழைத்துக் குறிகேட்டனர். கோடங்கியானவன் இராமன் பிழைக்க மாட்டான் என்று கூறிவிட்டான். ஆகவே அவனது பெற்றோர், அவனை வீட்டிற்கு வெளியே திண்ணையில் ஒதுக்கி விட்டனர். அக்கிராமத்தில் ஆரம்ப ஊழியப் பொறுப்பை ஏற்றிருந்த டாக்டர் பால்தாஸ் அவர்கள் அம்மனிதர் மேல் இரக்கம் வைத்து மருந்து கொடுத்து ஜெபம் ஏறெடுத்தார். இயேசுவின் கிருபையால் அவன் விரைவில் குணம்பெற்றுத் திடமுள்ள மனிதனானான். இதனைக்

கண்டவர்களும் கேள்விப்பட்டவர்களும் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தார்கள்.

மான்கொம்பு பணித்தளத்தின் பொறுப்பை இராமவர்மபுரம் சபை ஏற்றுக்கொண்டது. அச்சபையார் **கமலா ஞானசிகாமணி நினைவாக** ஓர் ஆலயத்தை அப்பணித்தளத்தில் கட்டத் தீர்மானித்தனர். அதன்பேரில் 14-10-1997 இல் இராமவர்மபுரம் சபைப்போதகர் அருள்திரு. ஜாண் சகாயம் அவர்கள் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். விரைவாகக் கட்டப்பட்ட அவ்வாலயத்தை 19-11-1998-இல் பேராயர் எம்.ஐ. கேசரி அவர்கள் இறைநாம மகிமைக்காக அர்ப்பணித்தார். டாக்டர் பால்தாஸ் அவர்களின் முயற்சியாலும் உதவியாலும் இக்கிராம மக்கள் சிறுதொழில்களில் ஈடுபட்டார்கள். ஆங்குள்ள விசுவாசிகள் நடத்திய கடைகளில் வெற்றிலை, பீடி, மூக்குப்பொடி போன்ற போதைப்பொருட்கள் விற்கப்படவில்லை. தேவன் எதிர்பார்க்கும் பரிசுத்தம் பாதுகாக்கப்பட அவர்கள் போதிக்கப்பட்டிருந்தார்கள்.

அப்பணித்தளத்தில் இராமவர்மபுரம் திருச்சபையார் கட்டிய ஊழியர் இல்லமானது, அருள்திரு. விக்டர் ஞானராஜ் அவர்களால் 30-8-2002 இல் அர்ப்பணம் செய்யப்பட்டது.

நோயாளிகளுக்கு மருத்துவர் உதவவேண்டும்
ஏழைகளுக்குச் செல்வந்தர் உதவ வேண்டும்
நற்செய்தி அறியாதவர்களுக்கு
நற்செய்தியை அறிந்தவர் உதவ வேண்டும்.

பெருக்கஞ் செடி

பெருக்கஞ்செடி என்ற பணித்தளம் 1985-ஆம் ஆண்டு சேராப்பட்டு வட்டத்தில் தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்திற்கு 27 செண்ட் பூமியைப் பைங்குளம் சபையின் உறுப்பினரான திரு. கெ. ற்றி. வில்சன் ஆசிரியர் அவர்கள் வாங்கிக் கொடுத்தார்கள். அப்பூமியில் சுவிசேஷ ஜெபக்குழுவின் மார்த்தாண்டம் வட்டாரமும், பக்ரைனிலுள்ள தமிழ் திருச்சபையும் இணைந்து ஓர் ஆலயம் கட்டத் தீர்மானித்தனர். அவ்வாலயத்திற்கு 16-9-1996-இல் அருள்திரு. எ. கிறிஸ்டோபர்தாஸ் அவர்கள் அடிக்கல் நாட்டினார். கட்டி முடித்த ஆலயத்தைப் பேராயர் எம். ஐ. கேசரி அவர்கள் **சிங்களேயர் ஆலயம்** என்ற பெயரில் 11-6-1997 ஆம் நாள் அர்ப்பணம் செய்தார்கள். இப்பணித்தளத்தின் ஆரம்ப ஊழியராக ற்றி. கிதியோன் அவர்கள் செயல்பட்டார்கள்.

கொடுத்தவர் தேய்ந்ததில்லை - அதைச்
செய்யாதவர் வளர்ந்ததில்லை

கீழ்நிலவூர்

கீழ்நிலவூர் என்னும் பணித்தளம் சேராப்பட்டு வட்டத்தில் அமைந்துள்ளது. 1985 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்பணித்தளத்திற்குச் சுவிசேஷ ஜெபக்குழுவால் 40 செண்ட் பூமி 1989 இல் வாங்கப்பட்டது. இவாஞ்சலிக்கல் பெல்லோஷிப் ஆப் இந்தியா கமிஷன் ஆப் ரீலிப் (Eficor) நிறுவனத்தினர் அப்பூமியில் ஆலயமும் சமூகக்கூடமும் கட்டிக் கொடுத்தார்கள். அவைகளைப் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் 6-3-1989-இல் அர்ப்பணம் செய்தார்கள். எபிகார் நிறுவனத்தின் இயக்குநர் திரு. தாமஸ் மதன் அவர்களின் உதவி மறக்க முடியாதது. அப்பணித்தளத்தில் மலையில் பெற்ற கனியாகிய திரு. ஜி. டேவிட் ராமன் அவர்கள் ஆரம்ப ஊழியராகப் பணி செய்தார்.

உண்மைக்கிறிஸ்தவன் எவனும் சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப் படுவதில்லை. சுவிசேஷம் வெட்கமடைய அவன் காரணமாய் இருப்பதுமில்லை.

மணியார் பாளையம்

மணியார்பாளையம் என்ற பணித்தளமானது மணியார் குண்டம் என்னும் வட்டத்திற்குட்பட்டதாகும். 1987 ஆம் ஆண்டு இப்பணித்தளம் தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்திற்காக சி.எம்.எஸ். நிறுவனம் ஒரு ஏக்கர் பூமியை வாங்கி சுவிசேஷ ஜெபக்குழுவிற்குக் கொடுத்தது. அப்பூமியில் மத்திக்கோடு சபையினர் ஊழியர் இல்லம் கட்டினார்கள். அக்கட்டிடம் 16-4-1994-இல் அருள்திரு. எம். விக்டர் அவர்களால் அர்ப்பணிக்கப்பட்டது. அங்கு ஓர் ஆலயம் கட்ட அருள்திரு. டி. சாந்தப்பா அவர்கள் 24-4-1998-இல் அடிக்கல் நாட்டினார். அவ்வாலயம் கட்டி முடிக்கப்பட்டு 28-5-2000-ஆம் நாள் அருள்திரு. கே. சுந்தரதாஸ் அவர்களால் **நியூ மத்திக்கோடு சி.எஸ்.ஐ. ஆலயம்** என்ற பெயரில் அர்ப்பணிக்கப்பட்டது. இப்பணித்தளத்தின் ஆரம்ப ஊழியர் அருள்திரு. எம். விக்டர் ஆவார்.

எழுந்திடுவோம் நாம் எழுந்திடுவோம்
இயேசுவின் வீரரே எழுந்திடுவோம்
அனுதினம் அழிந்திடும் மக்களைக் காத்திட
தூசியை உதறி எழுந்திடுவோம்

புத்திரம்பட்டு

புத்திராம்பட்டு பணித்தள ஊழியமானது 1-5-1988-ஆம் நாள் தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்தின் பொறுப்பைக் கருங்கல் திருச்சபை ஏற்றுக் கொண்டது. கருங்கல் சபையார் 16-11-1990-இல் இப் பணித்தளத்திற்கென்று 29 சென்ட் பூமியை வாங்கினார்கள். அதில் ஆலயம் கட்ட அருள்திரு. ஓய். ஜேக்கப் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். வேகமாகக் கட்டி முடிக்கப்பட்ட அவ்வாலயத்தை 2-3-1993 இல் அவரே அர்ப்பணமும் செய்தார். பின்னர் ஊழியர் இல்லமும் கட்டப்பட்டது. குழந்தைகளின் கல்வி வசதிக்காக இரு சிறிய கட்டிடங்களையும் கருங்கல் சபையார் கட்டினர். அவைகளில் இளஞ்சிறுவர் (L.K.G) வகுப்பு முதல் ஐந்து வரையுள்ள வகுப்புகள் நடைபெறுகின்றன. இவைகள் தவிர அப்பணித்தளத்தில் ஆழ்குழாய் கிணறும் தோண்டப்பட்டுள்ளது. தையல் நிலையம் ஒன்றும் இச்சபையாரால் நடத்தப்பட்டு வருகிறது. முழுக்கிராம வளர்ச்சியிலேயும் தங்களை ஈடுபடுத்திய கருங்கல் சபையாரின் பணி மிகவும் பாராட்டுக்குரியதாகும். இதனைத்தான் பக்தன் அழகாகப் பாடுகிறார்.

உமக்காக உழைத்திடும் பக்தர் வாழ்க!
உம் பணிக்காகக் கொடுத்திடும் மக்கள் வாழ்க!
அனைத்து உள்ளத்திலும் இயேசு வாழ்க
பெரும் பாரதம்! பெரும் பாரதம்!

கள்ளிப்பாறை

கள்ளிப்பாறை என்னும் பணித்தளம் சேராப்பட்டு வட்டத்தில் அமைந்துள்ளது. 1967 இல் திருமதி. ஈவ்லின் பிராண்ட் அம்மையார் அவர்கள் இப்பணித்தளத்தைத் தொடங்கினார்கள். தொடர்ந்து ஊழியம் சரிவர நடைபெறவில்லை. 1990 இல் இப்பணித்தளத்தைச் சேர்ந்த பூமி மற்றும் கட்டிடங்கள் அனைத்தையும் அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் பேராட் சீ்விசேஷ ஜெபக்குழுவிற்காக வாங்கினார்கள். அதன்பின்னர் நடைபெற்ற விரைவான பணியின் நிமித்தமாக, திருமதி. ஈவ்லின் பிராண்ட் அவர்கள் ஆலயம் கட்டுவதற்காகப் போட்ட அஸ்திபாரத்தின் மேல் அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள், அழகிய ஆலயத்தினைக் கட்டி முடித்தார்கள். ஆலயத்திற்குரிய முழுச்செலவினையும் எலியாஸ் அவர்களது குடும்பமே ஏற்றுக் கொண்டது. அவ்வாலயத்திற்கு **ஈவ்லின் பிராண்ட் நினைவு ஆலயம்** எனப் பெயரிட்டு 6-11-1993-இல் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் அர்ப்பணம் செய்தார்கள். அப்பணித்தளத்தில் ஊழியர் தங்கி பணிபுரிய பிராண்ட் அம்மையார் கட்டிய வீடு ஒன்றும்

உள்ளது பணித்தளத்தின் ஆரம்பப் பணியாளராய் திரு. கில்பர்ட் ஜோசப் அவர்கள் பணிபுரிந்தார்கள். இறைவன் ஒவ்வொரு நாளும் புதுமைகள் பலவற்றைச் செய்து வருகிறார். இப்பணித்தளத்தின் வளர்ச்சியைத் தன் ஆன்மக் கண்களால் காணும் ஈவ்லின் பிராண்ட் அம்மையாரை நினைக்கும்போது,

எடுத்துச் செல்வீர் இந்த சுவிசேஷத்தை
எடுத்துச் செல்வீர் இந்த சுவிசேஷத்தை
அடுக்கடுக்காக இடங்கள் உண்டு
எடுத்துச் செல்வீர் இந்த சுவிசேஷத்தை

என்னும் பாடல் வரிகள் நினைவிற்கு வருகின்றன.

புதிய தேக்கம்பட்டு

புதிய தேக்கம்பட்டு என்னும் பணித்தளம் மணியார்குண்டம் வட்டத்திற்குட்பட்டதாகும். இப்பணித்தளம் 26-3-1990 முதல் செயல்பட்டு வருகிறது. இதில் 25 சென்ட் பூமியினை 30-1-1991-இல் கடமலைக்குன்று சபையைச் சேர்ந்த எம். ஜெயக்குமார் அவர்கள் தனது தந்தை மாசில்லாமணியின் நினைவாக வாங்கிக் கொடுத்தார். எனவே அப்பூமி **மாசில்லாமணி நகர்** என்று அழைக்கப்படுகிறது. அப்பணித்தளத்தில் கடமலைக்குன்று சபையினர் ஓர் ஆலயம் கட்டத் தீர்மானித்தனர். அவ்வாலயத்திற்கு 20-2-1992-ஆம் நாள் அருள்திரு. மோசஸ் கேசரி அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். பின்னர் அவ்வாலயம் 10-7-1994-இல் லா ஞாபக **சி.எஸ்.ஐ. ஆலயம்** என்ற பெயரில் அருள்திரு. எம்.சி. தசலயா அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டது. அதே சபையார் அப்பணித்தளத்தில் அருள்திரு. அறிவர். எ.மாசில்லாமணி அவர்களால் 2[illegible]-5-1995 இல் ஆயர் இல்லம் கட்ட அடிக்கல் நாட்டினார்கள். கட்டி முடிக்கப்பட்ட அவ்வில்லம் 26-5-1996 அன்று போதகர் மாசில்லாமணி அவர்களாலேயே அர்ப்பணமும் செய்யப்பட்டது. இப்பணித்தளத்தின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பாடுபட்ட கடமலைக்குன்று சபையாரின் முயற்சி பாராட்டத்தக்கதாகும். இப்பணித்தளத்தின் ஆரம்ப ஊழியராக திரு. பி. ஜஸ்டின் ராஜ் அவர்கள் பணிபுரிந்தார்கள்.

காலம் அருமையானது. காலத்தின் அருமையை அறிந்து வாழ்வது மிகவும் அவசியமானது. செய்ய வேண்டிய காரியத்தைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்வது மிகவும் முக்கியமானது. அல்லாமல் காலம் கடத்துவது வாழ்வில் மிகப்பெரும் பின்னடைவை ஏற்படுத்தும். இதனைக் கருத்தாக உணர்ந்து செயல்பட்டவர்கள் பாக்கியவான்கள். இனிக் காலம் செல்லாது. உணர்ந்து செயல்படு.

மணியார் குண்டம்

மணியார்குண்டம் என்னும் பணித்தளமானது 01-10-1991-ஆம் நாள் தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்தின் பொறுப்பை ஈத்தவிளை சேகர சபையார் ஏற்றுக் கொண்டனர். அவர்கள் முதலாவதாக 162 செண்ட் பூமியினை 19-04-1989-ல் வாங்கினர். ஆங்கு ஓர் ஆலயம் கட்டுவதற்காக சேகரத்துப் போதகர் அருள்திரு. ஒய். ராபின்சன் அவர்கள் 19-04-1993-ஆம் நாள் அடிக்கல் நாட்டினார்கள். பின்னர் அவ்வாலயத்தை 24-04-1998-ல் அருள்திரு. எஸ்.பி. வில்சன் அவர்கள் அர்ப்பணம் செய்தார்கள். மேலும் அப்பணித்தளத்தில் பேராயர் எம்.ஐ. கேசரி அவர்கள் 18-11-1998-ல் ஊழியர் இல்லம் கட்ட அடிக்கல் நாட்டினார்கள். அவ்வில்லத்தைப் பேராயர் ஜி. தேவ கடாட்சம் அவர்கள் 08-05-2002-ஆம் நாள் அர்ப்பணம் செய்தார்கள். அப்பணித்தளத்தின் முதல் ஊழியராக சி. சாலமோன் அவர்கள் நியமிக்கப்பட்டார். கடைசிக்காலத் தரிசனத்தோடு செயல்பட்ட சபைகளில் ஒன்றாக ஈத்தவிளை சபையும் விளங்கியது.

இன்று செலவிடு உன் தாலந்தெல்லாம்
இயேசு கிறிஸ்துவுக்காய் - இன்றே
செலவிடு உன் சம்பத்தெல்லாம்
சுவிசேஷத்திற்காய்

புளியங்கோட்டை

புளியங்கோட்டை என்னும் பணித்தளம் புத்திராம்பட்டு வட்டத்தைச் சேர்ந்தது. இக்களத்தில் 25-02-1992 அன்று ஊழியம் தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்தில் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவால் 30 செண்ட் பூமி 02-11-1994-ல் வாங்கப்பட்டது. அதில் பக்ரைன் தமிழ்த் திருச்சபையினர் அழகிய ஓர் ஆலயத்தைக் கட்டினர். அவ்வாலயமானது அருள்திரு. எம். இராஜையன் அவர்களால் 28-01-1998-ஆம் நாள் அர்ப்பணம் செய்யப்பட்டது. சென்னையில் வசிக்கும் கிராத்தூரைச் சேர்ந்த திரு. கிங்ஸ்லி பென்சாம் அவர்கள் அவ்வாலயத்திற்கு இனிய ஓசைதரும் நாக்கு மணி ஒன்றினை அன்பளிப்பாகக் கொடுத்தார். அப்பணித்தளத்தில் ஆயா இல்லம் கட்டுவதற்கு அருள்திரு. ஜெ.வி. திலகதாஸ் அவர்கள் 01-03-1998 அன்று அடிக்கல் நாட்டினார். அவ்வீடு கட்டுவதற்குத் தேவையான நிதியினைக் கொட்டாரம் வட்டாரப் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவினர் விற்பனை விழா மூலம் சேகரித்தனர். இதில் மயிலாடி திருச்சபையார் ரூ. 25,000/- கொடுத்து மகிழ்ந்தனர். இவ்விதம் கட்டப்பட்ட வீட்டை 17-03-2000-ஆம் நாளன்று அருள்திரு. டி இரத்தினராஜ் அவர்கள் முன்னிலையில் அருள்திரு. பி.ஜெ. ஜெயசீலன் அவர்கள் அர்ப்பணம்

மெய்தவர்கள் கொட்டாரம் வட்டார மக்களின் உத்தாரமும் பணியும் புரை நீக்குகிறவை அப்பணித்தளத்தில் டி. பிரிதிவிராஜ் அவர்கள் ஆலயமான வழியாகப் பணியாற்றினார்கள்.

அறிவிப்பது உன்னுடைய அறிக்கை பொறுப்பு
கேட்டவர் நம்பினாலும் சரி நம்பாமல் மறுத்தாலும் சரி
உறுதி வேண்டியது உன் பொறுப்பு அதை நிறைவேற்று.

புதுப்பாளையப்பட்டு

புத்திராம்பட்டு வட்டத்தில் புதுப்பாளையப்பட்டு என்னும் பணித்தளம் அமைந்துள்ளது. இங்கு இறைப்பணியானது 01-03-1992-இல் தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்தின் முழுப் பொறுப்பையும் பேராய ஊழியக் குழுவின் சென்னைக் கிளையினர் ஏற்றனர். முதலாவதாக அவர்கள் 21-01-1993-ல் 33 சென்ட் பூமியினை வாங்கினர். அப்பணித்தளத்தில் ஊழியர் இல்லம் கட்ட அருள்திரு. ஜெலி திலகராஜ் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். கட்டி முடிக்கப்பட்ட அவ்வில்லத்தை 08-11-1993-ல் அருள்திரு. ஒய். ஜேக்கப் அவர்கள் அர்ப்பணம் செய்தார். பின்னர் அதில் ஆலயத்தைக் கட்டிப் புனித பேதுரு ஆலயம் எனப் பெயரிட்டனர். அவ்வாலயமானது 11-06-1996-ல் அருள்திரு. டி. எலியாஸ் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டது. அதோடு பின் அக்கிளையினர் 25-07-1999-ஆம் நாள் தையல் பயிற்சி நிலையம் ஒன்றையும் தொடங்கினர். பணித்தளத்தின் இன்றியமையாத தேவையைக் கருதி கிணறு ஒன்றும் வெட்டப்பட்டது. பணித்தளத்தின் ஆரம்பகால ஊழியராகத் திரு. ஜான் ஏகவடியான் அவர்கள் பணியிருந்தார்கள். ஏற்றுக்கொண்ட பொறுப்பு முழுவதையும் திறம்படச் செயல்படுத்திய சென்னைக் கிளையினரின் தொண்டுள்ளத்தைப் பாராட்டுதல் வேண்டும்.

சுவிசேஷச் செய்தியினை அறிவி. சேனைகளின் கர்த்தர் உன்முன் செல்கிறார். அனைவருக்கும் அறிவி. கிராமம் கிராமமாக. வீடு வீடாக. நாடு நாடாக இந்த நல்ல செய்தியை அறிவி. இதற்காகவே கர்த்தர் உனக்கு முன்னடியே கிறிஸ்துவை அறிவித்தார்.

வெள்ளாரிக்காடு

வெள்ளாரிக்காடு என்னும் பணித்தளம் புத்திராம்பட்டு வட்டத்திற்குட்பட்டதாகும். இப்பணித்தளமானது 19-06-1992-ல் தொடங்கப்பட்டது. இதன் பொறுப்பைப் பயணம் திருச்சபையினர் ஏற்றுக் கொண்டனர். முதலில் பணித்தளத்திற்காக 45 சென்ட் பூமியினை வாங்கினர். அதில் ஆலயம்

கட்டி அர்ப்பண விழாவில் கலந்துகொண்டனர். அவ்வாலயத்தைத் தலைமை மிஷனெறிப் பொறுப்பாளர் அருள்திரு. டி எலியாஸ் அவர்கள் 15-05-1997-ல் அர்ப்பணம் செய்தார். இப்பணித்தளத்தின் முதல் அருட் தொண்டராக திரு. என். குமாரசுவாமி அவர்கள் பணியாற்றினார். பல்வேறு உபத்திரவங்கள் மத்தியிலும் இறைப்பணியில் கவனத்தைச் செலுத்திய பயணம் திருச்சபை பெருமைக்குரியது.

தாசரே இத்தரணியை அன்பாய்
இயேசுவுக்குச் சொந்தமாக்குவோம்
நேசமாய் இயேசுவைக் கூறுவோம்
அவரைக் காண்பிப்போம்
மாவிருள் நீக்குவோம் வெளிச்சம் வீசுவோம்

என்ற பாடல் அடிகள் நம்மையும் சுவிசேஷ சவாலுக்குள் கொண்டு வருகிறதல்லவா? செயல்படுத்துவது ஒவ்வொருவர் கரங்களிலுமுள்ளது.

கீரப்பள்ளி

கீரப்பள்ளி என்னும் பணித்தளம் சேராப்பட்டு வட்டத்திற்குட் பட்டதாகும். இப்பணித்தளம் 1992-ல் தொடங்கப்பட்டது. ஊர் நத்தம் கிராமமக்கள் இறைப்பணிக்குத் தேவையான பூமியை இலவசமாகக் கொடுத்து உதவினார்கள். அதில் கல்லுக்கூட்டம் சபையின் அங்கமான திரு. சுவாமிதாஸ் அவர்கள், குடும்பமாக ஆலயம் ஒன்று கட்டிக்கொடுத்தார்கள். அவ்வாலயம் **நல்மீட்பர் ஆலயம்** என்ற பெயரில் 15-03-1992-ஆம் நாள் அருள்திரு. ஐபி. ஜேம்ஸ் நதானியேல் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டது. திரு. சுவாமிதாஸ் அவர்களின் துணைவியார் திருமதி. அன்னபாய் சுவாமிதாஸ் அவர்கள் ஆங்கொரு ஊழியர் இல்லம் கட்டிக்கொடுத்தார்கள். அவ்வில்லம் 13-03-1994-ஆம் நாள் கல்லுக்கூட்டம் சபையின் போதகர் அருள்திரு. ஒய். ஜெ.ஜெ. பாக்கியநாதன் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டது. இப்பணித்தளத்தின் ஆரம்ப ஊழியராக திருமதி. சார்லெட் அவர்கள் பணிபுரிந்தார்கள். நற்செய்திப் பணியின் பாரத்தையும், தேசத்தின் தேவையையும் அறிந்து உழைத்த சுவாமிதாஸ் குடும்பத்தினரின் பணி பாராட்டுக்குரியது.

ஆத்தும ஆதாயம் செய்பவர்கள்
ஞானவான்கள் என்றார் - இயேசு
ஞானவான்கள் என்றார்

என்ற பாடல் பொருளுக்கேற்ப, தங்களை ஞானவான்களாக்கிக் கொண்டார்கள்.

மோட்டாம்பட்டி

புத்திராம்பட்டு வட்டத்திற்குட்பட்ட மோட்டாம்பட்டி என்னும் பணித்தளம் 11-05-1993-ல் தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்தின் பொறுப்பினைப் பெருமளவில் குளத்துவிளைத் திருச்சபையார் ஏற்றுக்கொண்டனர். முதற்கண் அவர்கள் 25-05-1995-ல் 102 சென்ட் பூமியினை வாங்கினார்கள். அதில் பள்ளிக்கூடம் ஒன்று கட்ட 29-01-1996-ல் அருள்திரு. எம். இராஜையன் அவர்கள் அடிக்கல் நாட்டினார். அப்பள்ளிக்கூடம் கட்டி முடிக்கப்பட்டு 23-04-1998-ல் அருள்திரு. டி. எலியாஸ் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டது. [illegible] குளத்துவிளை திருச்சபையின் முன்னாள் சபைச் செயலர் [illegible] பி. ஞானையா அவர்கள் நினைவாக, ஊழியர் இல்லம் ஒன்றினை அப்பணித்தளத்தில் கட்ட, ஞானையா அவர்களின் இளவல் [illegible] ஜேக்கப் அவர்கள் அடிக்கல் நாட்டினார். அக்குடும்பத்தாரின் நிதி உதவியுடன் கட்டி முடிக்கப்பட்ட அவ்வில்லம் 30-09-1998-ஆம் நாள் [illegible] அருள்திரு. டி. எலியாஸ் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டது.

அதே பணித்தளத்தில் ஆலயம் ஒன்று கட்டுவதற்கு, குளத்துவிளை சபை போதகர் அருள்திரு. டேவிட் ராபி ஜேக்கப் அவர்கள் [illegible]-1996-ல் அடிக்கல் நாட்டினார். அவராலேயே அந்த ஆலயம் [illegible]-1999 அன்று அர்ப்பணம் செய்யப்பட்டது.

இப்பணித்தளத்தில் மருத்துவமனை ஒன்றினை அமைக்க [illegible]-2000-ஆம் நாள் பேராயர் எம்.ஐ. கேசரி அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அதற்குரிய கட்டிடம் கட்ட பக்ரைன் தமிழ்த் திருச்சபையார் உதவி செய்தார்கள். இப்பணித்தளத்தில் ஆரம்ப ஊழியராய் [illegible] என்பவர் பணிபுரிந்தார். குளத்துவிளை திருச்சபையார் இப்பணித்தளத்தில் பெருமளவில் ஆர்வம் செலுத்திச் செயலாற்ற [illegible] போதகர் டேவிட் ராபி ஜேக்கப், ஆசிரியை கிறிஸ்டல் பாய் [illegible] ஆகியோர் பாராட்டிற்குரியவர்கள். ஒவ்வொரு மனிதனும் [illegible]ளையைக் குறித்த நேரத்தில், கொடுக்கப்பட்ட நாளில் செய்து [illegible] வேண்டும் என்பதே இறைக்கட்டளையாகும்.

காலம் கடந்திடும் முன்னர்
கருத்துக் கொள்வார் வாருமே
ஞாலத்தில் இயேசுவின் நாமம்
[illegible]ந்துச் செல்லச் சேருமே.
[illegible]கடன் செய்யா மனிதர்
[illegible]ளையில் வாடி நிற்பார்

கவலை தீர்த்து, கடமையைச் செய்வதே தேவனுக்குக் கீழ்ப்படிதலாகும்.

உள் செக்கடி

உள் செக்கடி என்னும் பணித்தளம் குருகிலாம்பூர் வட்டத்தில் அமைந்துள்ளது. இப்பணிக்களத்தில் 01-06-1993-ல் ஊழியம் தொடங்கப்பட்டது. நாகர்கோவில் கஸ்பா சபை பெண்கள் சங்கத்தினர் 40 சென்ட் பூமியை இப்பணித்தளத்திற்காக வாங்கினார்கள். அங்கு ஆலயம் கட்டுவதற்குப் பேராயர் எம்.ஐ. கேசரி அவர்கள் 13-06-1997-ல் அடிக்கல் நாட்டினார்கள். அவ்வாலயத்தின் பணியை 02-03-1998-ஆம் நாள் அருள்திரு. ஜெ.வி. திலகதாஸ் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். கட்டி முடிக்கப்பட்ட ஆலயத்தை 24-07-1999-ஆம் நாள் பேராயர் எம்.ஐ. கேசரி அவர்கள் அர்ப்பணம் செய்தார்கள். இப்பணித்தளத்தின் பணியில் கஸ்பா சபை பெண்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். இப்பணிக்களத்தின் முதல் ஊழியராகத் திருமதி. ஜெயா ஜெபசிங் அவர்கள் பணிபுரிந்தார்கள்.

இறைத்த கிணறு வற்றியதில்லை. வழங்கிய கரங்கள் வறண்டதில்லை. நிறைவில் மட்டுமல்ல குறைவிலும் கொடுத்து இறைப்பணியைத் தாங்குவதே விசுவாச வாழ்க்கை என்பதைக் கஸ்பா சபைப் பெண்கள் சங்கத்தினர் உணர்ந்து செயல்பட்டனர்.

கீழ்ப்பரிகம்

கீழ்ப்பரிகம் என்னும் பணித்தளம் புத்திராம்பட்டு வட்டத்தின் எல்லைக்குட்பட்டதாகும். இங்கு ஊழியமானது 15-06-1993-ல் தொடங்கப்பட்டது. காஞ்சிரபுரம் சேகர சபை இக்களத்தைத் தங்களுக்காகத் தத்தெடுத்தது. முதலாவதாக அங்கு 10 சென்ட் பூமியை ரூ. 42,000/- செலவில் 14-09-1998-ல் அச்சபையினர் வாங்கினர். அப்பூமியில் ஊழியர் தங்கவும் ஆராதனை நடத்தவும் ஒரு தற்காலிகக் கட்டிடம் முதலாவது கட்டப்பட்டது. மறுபடியும் அச்சபையினர் 20 சென்ட் பூமியை வாங்கினர். தொடர்ந்து அப்பணித்தளத்தில் ஆலயமும், ஊழியர் இல்லமும் கட்டப்பட்டன. அவைகளை 23-07-2001-ஆம் நாள் காஞ்சிரபுரம் சபைப் போதகர் அருள்திரு. ஜெ. ஜாஸ்றீன் அவர்கள் அர்ப்பணம் செய்தார்கள். இப்பணித்தளத்தின் முதல் ஊழியராக ஜெ. மார்ட்டின் ஆசீர்வாதம் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். கீழ்ப்பரிகம் பணித்தளத்தின் வளர்ச்சியில் முழுமையாகச் செயல்பட்ட காஞ்சிரகோடு திருச்சபையினரின் பணி என்றும் போற்றுதற்குரியது.

பரிசுத்த ஆவியானவரைப் பெற்ற சீஷர்கள், அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தை மறைத்து வைக்கவில்லை. எருசலேம், சமாரியா, யூதேயா

என்றும் உலகின் கடைசிப் பகுதியான ஸ்பானியா தேசம் வரைக்கும் அறிவித்தார்கள். அவ்விதம் செயல்படுவதைத் தங்கள் கடமை என்று எண்ணினார்கள். இத்தகைய சுவிசேஷ ஆர்வம் ஒவ்வொரு சபையார் உள்ளங்களிலும் மலர வேண்டும்.

மோத்தக்கல்

குருகிலாம்பூர் வட்டத்திற்குட்பட்ட மோத்தக்கல் என்னும் பணித்தளமானது 19-09-1993-ல் தொடங்கப்பட்டது. மூலச்சல் திருச்சபையார் இப்பணிக்களத்தின் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார்கள். முதற்கண் அவர்கள் 60 சென்ட் பூமியினை வாங்கினார்கள். பின்னர் அதில் ஊழியர் இல்லம் கட்ட 13-06-1997-ஆம் நாள் பேராயர் எம்.ஐ. கேசரி அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அதோடு அவர்கள் பாடசாலைக்குரிய தற்காலிகக் கட்டிடத்தையும் கட்டினர். இப்பணித்தளத்தின் முதல் ஊழியராக திரு. பி. ஆபிரகாம் அவர்கள் பொறுப்பேற்றார்கள். இப்பணிக்கள வளர்ச்சியில் சபைப் போதகர் அருள்திரு. ஏ. துரைமணி அவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது.

கண்ணீரை விதைத்துக் கொண்டே இருங்கள், விளையச் செய்கிறவர் ஏற்ற காலத்தில் பலன் விளங்கச் செய்வார். சுவிசேஷத்தை அறிவிக்கும் மனிதன் அநேகரை நீதிக்குட்படுத்தும் நட்சத்திரங்களைப்போலப் பிரகாசிப்பான்.

புதூர்

மணியார்குண்டம் வட்டத்திற்குட்பட்ட புதூர் என்னும் பணித்தள ஊழியமானது 1993-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. குப்பத்துறை சபையைச் சேர்ந்த திரு. எம். அருள்தாஸ் அவர்கள் அப்பணிக்களப் பொறுப்பை ஏற்றெடுத்து 39 சென்ட் பூமியை 23-04-1995 மற்றும் 12-09-1995 ஆகிய நாட்களில் வாங்கினார்கள். அப்பூமியில் ஆராதனை நடத்தவும், மிஷனெறி தங்கி ஊழியம் செய்யவும் வசதியாக **மனுவேல் நினைவுச் சமூகக் கூடம்** என்ற பெயரில் ஒரு கட்டிடத்தையும் கட்டினார். மேற்படி கட்டிடம் 17-10-1996-ல் அருள்திரு. றூஸ்வெல்ட் சுவாமிதாஸ் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டது. இப்பணித்தளத்தின் ஆரம்ப ஊழியராய் திரு. பி. ஜஸ்டின் ராஜ் அவர்கள் பணியாற்றினார்கள். சிறப்பான முறையில் பொருளுதவிகள் செய்து புதூர் பணித்தளத்தை மிளிரச் செய்த திரு. எம். அருள்தாஸ் அவர்களின் தொண்டினைப் பாராட்ட வேண்டும்.

ஒருவனுடைய திறமைகள், நேரம், செல்வம், சக்தி, ஆற்றல், அதிகாரம், பணம், புகழ், கல்வி ஆகிய அனைத்தும் அவனுக்குக்

கடனாகக் கொடுக்கப்பட்டவைகள். அதனை அவன், தேவையில் இருக்கின்ற ஏழையைப் பார்க்கும்போது கடனாகக் கொடுக்க வேண்டும் என்பதே நியதியாகும். இதைப்புரிந்து செயல்படுபவர்கள் ஞானவான்களாவர்.

வாழப்பாடி

தரிசன நகர் வட்டத்திற்குட்பட்ட வாழப்பாடி பணித்தள ஊழியம் 1994-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. நாகர்கோவில் கிறிஸ்து சபையார் இப்பணித்தளப் பொறுப்பை ஏற்றெடுத்தனர். முதலாவதாக இவர்கள் 74 சென்ட் பூமியை 25-02-1997-ல் வாங்கினார்கள். அதில் ஆலயம் கட்டுவதற்கு அருள்திரு. ஜி. தேவகடாட்சம் அவர்கள் 22-07-1997-ல் அடிக்கல் நாட்டினார்கள். அவ்வாலயமானது 15-01-2001-ல் அருள்திரு. ஏ. துரைமணி அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டது. அதோடு ஊழியர் தங்குவதற்கும் இல்லம் கட்டப்பட்டுள்ளது. திரு. சி. இராஜேந்திரன் அவர்கள் இப்பணித்தளத்தில் தொடக்ககால ஊழியராகப் பணியாற்றினார். ஒரு பணித்தளத்தைத் தத்தெடுத்து மிஷனெறிப் பணியாற்றிய நாகர்கோவில் கிறிஸ்து சபையார் என்றும் பெருமைக்குரியவர்கள்.

யார் யாரோ வாழ்விலே
சிலுவையைக் கண்டீரோ
சிலுவைக்காய்ப் பணிசெய்ய வாரீரோ?

என்ற பாடலடிக்குக் கீழ்ப்படிந்து இறைப்பணி செய்ய பலர் எழும்ப வேண்டும்.

கொட்டப்புதூர்

கொட்டப்புதூர் என்னும் பணித்தளம் தரிசன நகர் வட்டத்துள் அமைந்துள்ளது. இங்கு 11-01-1994-ஆம் நாள் ஊழியம் ஆரமபிக்கப்பட்டது. இப்பணிக்களத்திற்கு 20 சென்ட் பூமியை நேசர்புரம் திருச்சபையார் 22-07-1996-ல் வாங்கினார்கள். பின்னர் அதில் ஆலயம் கட்டுவதற்கு 15-08-1996-ல் அருள்திரு. எ. பால்ராஜ் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அவ்வாலயமானது 13-10-2000-ஆம் நாள் அருள்திரு. டி. ஐசக் அவர்களால் **புனித தோமா ஆலயம்** என்ற பெயரில் அர்ப்பணம் செய்யப்பட்டது. இப்பணிக்களத்தில் மருத்துவமனை ஒன்று கட்டுவதற்கு மார்த்தாண்டம் வட்டார சுவிசேஷ ஜெபக்குழுவினர் முன்வந்தனர். அதற்குரிய கட்டிடத்திற்கு 18-11-1998-ல் பேராயர் எம். ஐ. கேசரி அவர்கள் அடிக்கல் நாட்டி, 26-07-1999-ல் அர்ப்பணம் செய்து, திறந்து வைத்தார்கள். இப்பணித்தளத்தின் முக்கிய பொறுப்புக்களை நேசர்புரம் திருச்சபையார்

ஏற்றுக் கொண்டனர். பணிக்களத்தின் ஆரம்ப ஊழியராக திரு. வின்சென்ட் லெட்சுமணன் அவர்கள் பொறுப்பேற்றார்கள்.

வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவு என்று வாழ்க்கையை அலட்சியப்படுத்தி வாழும் மனிதர்களை விட இறைவன் நியமித்த இலட்சிய ஓட்டத்தில் குறிக்கோளுடன் செயல்படுபவனே கரிசனையுள்ள மனிதனாவான். உன் இலட்சியமும் அதுவானால் நல்லது.

மாத்தூர்

புத்திராம்பட்டு வட்டத்தில் அமைந்திருக்கும் மாத்தூர் என்ற பணித்தள ஊழியம் 01-06-1994-ல் தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்திற்கு 21 சென்ட் பூமியானது, மார்த்தாண்டம் மற்றும் மருதங்கோடு சபைகளின் உதவியால் சுமார் ரூபாய் 34,500/- செலவில் வாங்கப்பட்டது. வெகுவாக முன்னேறி வரும் இப்பணித்தளத்திற்குத் தேவைகள் அதிகமாக உள்ளன. பணித்தளத்தின் முதல் ஊழியராக திரு. பாஸ்கர் டானியல் அவர்கள் பொறுப்புடன் பணியாற்றினார்.

எவ்வளவு சொத்து சேர்த்து வைத்தோம், எத்தனைப் பட்டங்கள் பெற்றிருக்கிறோம் என்பதை விட நாம் எந்த அளவுக்குப் பிறர்பால் அன்பு செலுத்துகிறோம் என்பதே நம் முன்னுள்ள கேள்வி. எனவே ஊழியங்களைத் தாங்குவோம்.

தாழ்மதூர்

தாழ்மதூர் என்னும் பணித்தளம் தரிசனநகர் என்னும் வட்டத்திற்குட்பட்டதாகும். இப்பணித்தள ஊழியம் 11-04-1994-ல் ஆரம்பிக்கப்பட்டது. திட்டுவிளை சபையின் சுவிசேஷ ஜெபக்குழுவினர் இப்பணித்தளத்தில் 57 சென்ட் பூமியை வாங்கிக் கொடுத்தார்கள். அங்கு மிஷனெறி தங்குவதற்குத் தற்காலிகப் புல்வீடு ஒன்று கட்டப்பட்டது. இப்புல் வீட்டை அருள்திரு. கெ.ஆர். வில்லியம் அவர்கள் 09-08-1998 அன்று அர்ப்பணம் செய்தார். தற்பொழுது உறுதியான ஊழியர் இல்லம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இறைப்பணியின் பாரத்தை உணர்ந்து, பூமி வாங்கி வழங்கிய திட்டுவிளை சபையின் சுவிசேஷ ஜெபகுழுவினர் சிறப்புப் பெற்றவர்கள். இப்பணித்தளத்தின் ஆரம்ப ஊழியராக திரு. மார்சல் முருகேசன் அவர்கள் பணியாற்றினார்.

மிஷனெறிப் பணி என்பது கூட்டுப் பணியாகும். ஆண்டவருடைய அழைப்புக்கு இணங்கி, புறப்பட்டுப் போகிறவர்கள் ஒரு சாரார். அவர்களை அனுப்பி ஆதரித்து ஜெபிக்கின்றவர்கள் மற்றொரு சாரார். இப்பணியில் ஏதேனும் ஒருவகையில் நாமும் ஈடுபட்டுச் செயலாற்ற வேண்டும்.

தொறடிப்பட்டு

தரிசன நகர் வட்டத்தில் அமைந்திருக்கும் இப்பணித்தளத்தில் 11-04-1994-ல் ஊழியம் ஆரம்பிக்கப்பட்டது. இப்பணித்தளத்தின் பணியில் ஆரல்வாய்மொழி திருச்சபை தன்னை முழுமையாக ஈடுபடுத்தியது. இத்திருச்சபையார் 02-12-1997-ல் இப்பணித்தளத்திற்காக 40 செண்ட் பூமியினை வாங்கி கொடுத்தனர். இப்பணித்தளத்தின் முதல் ஊழியராகத் திரு. ஆர். எலிசா ஏழுமலை அவர்கள் நியமிக்கப்பட்டார். மிஷனெறி பணியில் தன்னை ஈடுபடுத்திய ஆரல்வாய்மொழி சபையின் பங்கு அளவிடற்கரியது.

தேவனுக்குச் சேவை செய்யவே. பூமியில் நமக்கொரு வாழ்க்கை ஈவாகத் தரப்பட்டுள்ளது என்பதை ஒவ்வொரு மனிதனும் மறக்கக் கூடாது.

முண்டியூர்

முண்டியூர் என்னும் பணித்தளமானது தரிசனநகர் வட்டத்திற்குட் பட்டதாகும். இது 1994-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மருதங்கோடு திருச்சபையார் இப்பணிக்களத்திற்காக 17 செண்ட் பூமியினை வாங்கிக் கொடுத்தனர். அதில் ஆலயமும் ஊழியர் இல்லமும் கட்டப்பட்டன. திரு வின்செண்ட் லெட்சுமணன் அவர்கள் இப்பணித்தளத்தில் ஆரம்பகால ஊழியராய்ப் பணியாற்றினார்.

மலைபோன்ற தேவைதான் என்றாலும் மலைத்திட மாட்டோம். மன்னவன் இயேசுவோடு நாங்கள் நடந்து, இந்தியருக்கு இயேசுவை சொந்தமாக்குவோம், என்ற வீராப்பு மொழிகளை சபதமாய் ஏற்பவன் செயல் நிறைந்த கிறிஸ்தவன் ஆவான்.

மேல் முத்தானூர்

குருகிலாம்பூர் வட்டத்திற்குட்பட்ட மேல் முத்தானூர் என்னும் பணித்தளம் 1994-ல் தொடங்கப்பட்டது. குலசேகரம் வட்டார சபைகள் இணைந்து இப்பணிக்களப் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். முதற்கண் அவர்கள் பணித்தளத்திற்காக 17 செண்ட் பூமியினை வாங்கினார்கள். பின்னர் அதில் ஓர் ஆலயம் கட்ட யோக்பெல்லோ அருள்திரு. டி எலியாஸ் அவர்கள், 1997-ல் அடிக்கல் நாட்டினார்கள். அவ்வாலய வேலை இன்னும் முடியவில்லை. அதோடு ஊழியர் இல்லம் கட்ட 16-01-1999-ல் அருள்திரு. எம். இராஜையன் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். கட்டி முடிக்கப்பட்ட அவ்வில்லம் 17-01-2000-ஆம் நாள் அருள்திரு. எம். இராஜையன் அவர்களாலேயே அர்ப்பணமும் செய்யப்பட்டது. அந்நாளில் அக்கிராமத் தலைவர் திரு. முனுசாமி

நாயக்கர் அவர்கள் 7 செண்ட் பூமியை அப்பணிக்கள ஊழியத்திற்கு நன்கொடையாகக் கொடுத்தார். மீண்டும் ஒருமுறை மேற்படி நபர் 3 செண்ட் பூமியைக் கொடுத்தார். இப்பணிக்கள ஊழியத்தில் ஆர்வம் காட்டிய குலசேகரம் வட்டார சபையினரையும், முனுசாமி நாயக்கரையும் போற்ற வேண்டும். இக்களத்தின் ஆரம்ப ஊழியராக திரு. ஆர். பிரான்சிஸ் அவர்கள் பணியாற்றினார்கள்.

இயேசுகிறிஸ்துவை இன்னும் ஒருமுறை கூட அறிந்திராத மக்களைத் தேடி, கண்டுபிடித்து அவர்கள் நடுவில் அன்பின் சேவை செய்யும் மனிதர்களே, இன்று வேண்டும். சேவை என்னும் இதயத்துடிப்பு அவர்கள் உள்ளங்களைத் தூண்டிக் கொண்டே இருக்கும். இவற்றை இலட்சியமாகக் கொள்கிறவனே மாபெரும் மனிதன்.

தும்பை

தும்பை என்னும் பணித்தளம் 18-11-1994-ல் தொடங்கப்பட்டது. ஏற்கனவே மோட்டாம்பட்டி என்ற பெயரில் தொடங்கப்பட்ட இப்பணித்தளம் தற்போது தும்பை - மோட்டாம்பட்டி என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. இப்பணித்தளத்தில் மாணவர் விடுதி ஒன்றினைக் கட்ட சுவிசேஷ ஜெபக்குழுவின் பொதுச் செயலர் திரு. எம். கிறிஸ்துதாஸ் அவர்கள் 28-04-1999-ல் அடிக்கல் நாட்டினார்கள். அவ்விடுதியானது மார்த்தாண்டம் பகுதி விற்பனை விழா நிதியினால் கட்டப்பட்டு 30-06-2001-ல் அருள்திரு. ஒய். ஜேக்கப் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டது. உன்னுடன் இருப்பது உன் சொந்தமல்ல, உனக்குள் இருப்பதே உன் சொந்தம் என்ற கூற்று மனிதனைச் சிந்திக்க வைக்கிறது. மார்த்தாண்டம் வட்டார மக்கள் இதனை உணர்ந்து செயல்பட்டனர். இப்பணித்தளத்தின் ஆரம்ப ஊழியர் திரு. ரசல்தாஸ் ஆவார்.

தரிசன நகர்

அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் தரிசுக்காடு என்னும் இடத்திலுள்ள தரிசனநகரில் 15-07-1995-ல் ஊழியத்தைத் தொடங்கினார்கள். இதற்கென இப்பணித்தளத்திற்காக 5 ஏக்கர் பூமி வாங்கப்பட்டது. இதற்குத் தேவையான பொருளுதவிகளை திரு. லாறன்ஸ் ரோஸ் (தக்கலை), திரு. செல்வராஜ் (கல்லுக்கூட்டம்) மற்றும் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் மேற்கு வட்டார நண்பர்கள் செய்தனர்.

தரிசன நகர் பணிக்களத்தில் அம்மலையில் வாழ்ந்த முன்னோர்களால் ஒரு கல் நாட்டப்பட்டிருந்தது. பக்கத்து ஊர்மக்கள் சிலவேளைகளில் இங்குவந்து அக்கல்லைச் சாமியாகக் கும்பிட்டுச்

செல்வது வழக்கம். அடுத்த ஊரிலுள்ள சாமிக் கோயிலில் விழா நடைபெறும் பொழுது, இந்தச் சாமியைக் கும்பிட்டுச் சென்றால்தான் கோவிலில் சாமி வரும் என்பது அவர்களின் நம்பிக்கை. இந் நடைமுறையை மாற்ற நமது ஊழியர்கள் மன்றாடி ஜெபித்து வந்தார்கள். ஒருவரும் எதிர்பாராத விதமாக அதிசயம் ஒன்று நடந்தது. ஒருநாள் சில வாலிபர்கள் அப்பணித்தள வளாகத்தில் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது அவர்களில் ஒரு வாலிபனிடம் சாமிவந்து ஆடியது. அவ்வாலிபன், "இங்கு இயேசு சாமி வந்துவிட்டார், இனி நான் இங்கிருக்க முடியாது என்னைத் தூக்கி அடுத்த ஊரிலுள்ள கோயிலில் வை" என்று கூறினான். இதனை அவ்வூராருக்கு அறிவித்தனர். பின்னர் அவ்வூராரும், அவ்வாலிபர்களுமாக இணைந்து அந்தக் கல்லை அவ்வளாகத்திலிருந்து தூக்கிச் சென்று விட்டனர். "சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும்" பிரசித்தப்படுத்தும் நற்செய்திப் பணியை எதிர்த்து எந்தத் தீய சத்துவமும் நிற்க முடியாது என்பது உறுதியானது. இடைவிடாது ஜெபித்த நமது ஊழியர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இப்பணித்தளத்தில் நாகர்கோவிலைச் சேர்ந்த திரு. கிளிபோர்ட் அவர்கள் 1,50,000 ரூபாய் செலவில் ஆலயத்தைக் கட்டினார்கள். அவ் வாலயமானது அருள்திரு. ஜெ.வி. திலகதாஸ் அவர்களால் 26-04-1998 அன்று அர்ப்பணம் செய்யப்பட்டது. அதைப்போல் அங்குப் பள்ளிக்கூடம் கட்டுவதற்காகச் சென்னையைச் சேர்ந்த டாக்டர். ராஜ்குமார் அவர்கள் 1,50,000 ரூபாய் வழங்கினார்கள். அப்பள்ளிக்கூடக் கட்டிடம் 23-03-1998-ல் **நல்ல மேய்ப்பன் ஆரம்பப்பள்ளி** என்ற பெயரில் அருள்திரு. அறிவர். சி. இரத்தினதாஸ் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டது. அவ்விழாவில் தினத்தூது இதழின் ஆசிரியர் ராஜா அவர்களும் பங்கேற்றார்கள். அப்பணித்தளம் சுவிசேஷ ஜெபக்குழுவின் பல பணித்தளங்களுக்கு மையமாகவும் வட்டாரத் தலைமையாகவும் காணப்பட்டதால், நிர்வாகத்தினர் அங்கு ஒரு மருத்துவமனையைக் கட்ட ஆசை கொண்டனர். இப்பொறுப்பை குலசேகரம் வட்டார சுவிசேஷ ஜெபக்குழுவினர் ஏற்றுக் கொண்டனர். அதன்பேரில் அருள்திரு. எம். இராஜையன் அவர்கள் 18-01-2000-ஆம் நாள் அம்மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டினார்கள். குலசேகரம் வட்டார ஜெபக்குழுவினர் மிக்க மகிழ்வுடன் இவ்விழாவில் பங்கேற்றனர். இப்பணித்தளத்தில் திரு. டி. பால்சிங் அவர்கள் ஆரம்ப ஊழியராவார்.

தரிசன நகர் பணித்தளத்தில் உழைத்த குடும்பத்தினர் அனைவரும் மிகப்பெரிய பொறுப்பைப் பகிர்ந்து பணியாற்றினர்.

திறப்பின் முகம் நிற்க ஆட்கள் தேவை
தியாகத்தின் பாதைக்குச் செல்வோர் தேவை
என் ஜனம் அழியுதே என ஏங்கும் ஆண்டவர்
துக்கத்தைத் தணிக்கும் சீஷர் தேவை
முன்வருவோர் யார்க்கும் இதுவே வேளை

என்ற பாடல், இவர்களின் ஏக்கத் தொனியாய் அமைந்து வாழ்க்கையிலும் பிரதிபலித்துள்ளமையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

செருகளூர்

செருகளூர் என்னும் பணித்தளம் சேராப்பட்டு வட்டத்துக்கு உட்பட்டதாகும். இப்பணித்தளம் 1995 ஜூலை மாதம் தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்தின் பொறுப்பினை ஆற்றூர் சேகர சபையினர் ஏற்றனர். முதலாவதாக அவர்கள் 40 சென்ட் பூமியை 31-03-1997-ல் வாங்கினர். பின்னர் அப்பணித்தளத்தில் ஆலயமொன்றைக் கட்டினர். அவ் ஆலயத்தை 28-04-1997-ல் அருள்திரு. ஜெ. ஜாஸ்றீன் அவர்கள் அர்ப்பணம் செய்தார். அச்சபையினர் அங்கு கட்டிய ஊழியர் இல்லத்தைத் தலைமை மிஷனெறி அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் 09-02-2000-ல் அர்ப்பணம் செய்தார். இப்பணித்தளத்தில் திருமதி. தங்காபாலஸ், திரு. கெ. டேவிட் ஜாண் ஆகியோர் ஆரம்பப் பணியாளர்களாய் நியமனம் பெற்றனர். உதாரத்துவமான நன்கொடையால் செருகளூர் பணித்தள ஊழியத்தைத் தாங்கிய ஆற்றூர் சேகர சபையினரின் பணி பாராட்டுதலுக்குரியது.

சிலுவை அன்பை அனைவரும் அறிவதற்கு உன்னையே கொடு. உனக்குள்ள எல்லாவற்றையும் கொடு!. அப்படிச் செய்தால் நீ பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறவர்களில் ஒருவன் ஆவாய் என்னும் தொனி ஊழியத்தைச் செய்யத் துடிக்கும் உனக்குத் தூண்டுகோலாய் அமையட்டும்.

கரியகோவில்

மணியார்குண்டம் வட்டத்திற்குட்பட்ட கரியகோவில் என்னும் பணித்தளம் 03-09-1995-ல் தொடங்கப்பட்டது. இப்பணிக்களத்தின் பொறுப்பை மேய்க்கோடு சபையினர் ஏற்றனர். முதற்கண் இப்பணிக்களத்திற்காக 20 சென்ட் பூமி வாங்கப்பட்டது. அதில் ஓர் ஆலயத்தைக் கட்டினர். பின்னர் ஊழியர் இல்லத்தைக் கட்டினர். அக்கட்டிடம் 30-09-2002-ல் அருள்திரு. ரபிநாதராஸ் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டது. இப்பணித்தளத்தில் திரு. ஜெயசிங் பர்ணபாஸ் அவர்கள் ஆரம்ப ஊழியராய் நற்பணியாற்றினார்.

மனிதர்கள் வந்து போவார்கள், ஆனால் தேவனுடைய ராஜாங்கத்தின் கட்டுமானப் பணியோ முடிவில்லாமல் அவர் வருகை மட்டும் தொடரும் என்ற கூற்று எத்தனை உண்மையானது! நாமும் இப்பணியில் ஏதேனும் ஒருவகையில் இணைய வேண்டும்.

பெருமானத்தம்

பெருமானத்தம் என்னும் பணித்தளம் சேராப்பட்டு வட்டத்தில் அமைந்துள்ளது. இது 1995-ல் தொடங்கப்பட்டது. அப்பணித்தளத்திற்கென 40 சென்ட் பூமியை 05-09-1995-ல் சுவிசேஷ ஜெபக்குழுவினர் வாங்கினர். அப்பணித்தளத்தில் கல்லுக்கூட்டம் திரு. தேவசகாயம் அவர்கள் நினைவாக ஓர் ஆலயத்தை அன்னாரது மகனும் (மனோகரன்), மகள்களுமாகக் கட்டினர். அவ்வாலயம் பேராயர் எம். ஐ. கேசரி அவர்களால் 11-06-1997-இல் அர்ப்பணம் செய்யப்பட்டது. அங்குக் கட்டியிருக்கும் ஊழியர் இல்லத்தை யோக்பெல்லோ அருள்திரு. டி எலியாஸ் அவர்கள் 08-11-1999-ஆம் நாள் அர்ப்பணம் செய்தார்கள். திரு. எ. ஜாண் கார்த்திகேசன் அவர்கள் இங்கு ஆரம்ப ஊழியராய் பொறுப்பேற்றார். மிஷனெறி பாரத்தில் தங்களை இணைத்துக் கொண்ட குடும்பத்தினர் இறைக்கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவர்களாவர்.

ஆலயக் கட்டுமானப் பணிக்கும், அவசரப் பணித் தேவைகளுக்கும் கருத்தாய் ஜெபிப்போர், தியாகத்தோடு கொடுப்போர் ஆகியோரை ஊழியத்தில் இணைப்பதே பிரதான கடமையாகும்.

குறும்பலூர்

குறும்பலூர் என்னும் பணித்தளம் 1995-ல் தொடங்கப்பட்டது. இதன் முதல் ஊழியராக திரு. கிறிஸ்டியன் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

மொழிப்பட்டு

தரிசனநகர் வட்டத்திற்குட்பட்ட மொழிப்பட்டு என்னும் பணித்தளமானது 01-03-1996-ல் தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்தின் பொறுப்புகளை நேசமணி நினைவுக் கிறிஸ்தவக் கல்லூரியினர் ஏற்றனர். திரு. மார்சல் முருகேசன் அவர்கள் இப்பணித்தள ஊழியராய்ப் பணியாற்றி வருகிறார்.

கிறிஸ்துவைப் பின்பற்றிப் பணிபுரிவதற்கான அழைப்பு ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் தினந்தோறும் வந்துகொண்டே இருக்கிறது. அதற்குக் கீழ்ப்படிகிறவர் சிலரே.

வேங்கோடு

தரிசன நகர் வட்டத்திற்குட்பட்ட வேங்கோடு பணித்தளத்தில் 06-03-1996-ல் ஊழியம் தொடங்கப்பட்டது. இப்பணிக்களப் பொறுப்பை விரிகோடு சபை ஏற்றது முதற்கண் 50 சென்ட் பூமியை வாங்கினர். அங்கு ஓர் ஆலயம் கட்டுவதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றது. திரு. ற்றி. டேவிட் அண்ணாமலை அவர்கள் ஆரம்பகால ஊழியராகப் பணியாற்றினார்.

நற்செய்திப் பணியில் புறப்பட்டுச் செல்ல வேண்டும், அல்லது உதாரத்துவமாகச் செலுத்த வேண்டும் என்பதே இறைச்சித்தமாக இருக்கிறது. இதில் விரிகோடு சபையார் தங்களை இணைத்துக் கொண்டனர்.

நாகலூர்

மணியார்குண்டம் வட்டத்திற்குட்பட்ட நாகலூர் என்னும் பணித்தளம் 27-03-1996-ஆம் நாள் தொடங்கப்பட்டது. தக்கலை திருச்சபையைச் சேர்ந்த திரு. சி. லாறன்ஸ் ஜோஸ் அவர்கள் இப்பணித்தளத்திற்காக 58 சென்ட் பூமியினை வாங்கினார். இப்பணித்தளத்தின் ஆரம்ப ஊழியர் திரு. பி. அருள் ஞானதாஸ் ஆவார்.

சூளாங்குறிச்சி

மணியார்குண்டம் வட்டத்திற்குட்பட்ட சூளாங்குறிச்சி என்னும் பணித்தளம் 01-04-1996-ல் தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்தின் பொறுப்பைக் கொற்றிகோடு சபையினர் ஏற்றுக் கொண்டனர். முதற்கண் அவர்கள் 75 சென்ட் பூமியை 21-05-1997-ல் வாங்கினர். அப்பணித்தளத்தில் ஆலயம் கட்ட அருள்திரு. ஆர்.என். துரைராஜ் அவர்கள் 19-03-1999-ஆம் நாள் அடிக்கல் நாட்டினார். அவ்வாலய வேலை முடிந்து 12-10-1999-ல் மேற்படி போதகராலே அர்ப்பணமும் செய்யப்பட்டது. அதோடு அப்பணிக்களத்தில் தற்காலிக ஊழியர் இல்லமும் கட்டப்பட்டுள்ளது. கடமை உணர்வோடும் கருத்தோடும் பணியாற்றிய கொற்றிகோடு சபையினரின் இறைப்பணி நினைவில் கொள்ளத்தக்கதாகும். திருவாளர் ஜெ. ஜாண், விக்டர் இப்பணித்தளத்தின் முதல் ஊழியராவார்.

அருட்பணி என்பது சமூகப்பணி, விடுதலை வாழ்வை வழங்கும் பணி. மக்களை விடுவிக்கும் பணி, விழிப்புணர்வை ஊட்டி அரசியல், சமூகம், பொருளாதாரத்தோடுப் போதித்து மக்களை இறையரசுக்கு நேராக நடத்தும் தூய பணி. இப்பணியில் நீங்களும் அங்கமாகி இறையன்பைச் சுவைக்கலாம்.

[illegible]

[illegible] நகர் வட்டத்திற்குட்பட்ட [illegible] என்னும் பணித்தளம் 01-10-1998-ல் தொடங்கப்பட்டதாகும். இப்பணித்தளத்திற்கு ரூபாய் 28,000 செலவில் 51 சென்ட் [illegible] 01-03-1998-ல் வாங்கிக் கொடுத்தனர். அதோடு அப்பணித்தளத்தில் [illegible] இல்லத்தை பேராயர் [illegible] அவர்கள் 18-02-2000-ஆம் நாள் அர்ப்பணம் செய்தார். [illegible] பணித்தளத்தில் மேற்கூறிய பணிகள் நடைபெற குறிப்பிடத்தக்க [illegible] போதகர் அருள்திரு. [illegible] அவர்களின் பங்கு மேலானது. இப்பணித்தளத்தில் ஆரம்பகால ஊழியராய் திரு. பி. கோவிந்த ராஜ் அவர்கள் பணியாற்றினார்கள்.

இனி வாழ்வது நானல்ல, கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார் என்று அர்ப்பணித்து வாழும் மனிதன் எதிர்பார்த்தலைகளை விட மேலான காரியங்களைக் கருத்தில் சாதிப்பான். இத்தகைய முடிவினை எடுப்பவர்கள் அசாதாரண மனிதர்கள் ஆவார்கள். நீயும் அவர்களில் ஒருவனாக மாறலாம்.

கலக்கப்பாறை

கலக்கப்பாறை என்னும் பணித்தளமானது மணியார்குண்டம் வட்டத்திற்குட்பட்டதாகும். இது 17-11-1996-ல் தொடங்கப்பட்டது. தாமரைகுளம் சேகரத் திருச்சபையானது இப்பணித்தளத்தின் பொறுப்பை ஏற்றது. இச்சபை மக்கள் 18-11-1997-ஆம் நாள் 25 சென்ட் நிலத்தையும் சிறிது காலங்கழித்து 11 சென்ட் நிலத்தையும் இப்பணிக்களத்திற்காக வாங்கினர். அதில் ஓர் ஆலயம் கட்டுவதற்காக 04-03-1999-ல் அருள்திரு. ஆலிவர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அவ்வாலயம் 02-10-2002-ஆம் நாள் போதகர் ஒய். பால்ராஜ் அவர்களால் இறைநாம மகிமைக்காக அர்ப்பணம் செய்யப்பட்டது. எவ்விதச் சளைப்புமின்றி முழு மூச்சோடு இறைப்பணியை நிறைவேற்றிய தாமரைகுளம் திருச்சபையினரின் பங்கு அளவிடற்கரியது. இப்பணித்தளத்தில் ஜெ. ஜான் விக்டர் அவர்கள் ஆரம்ப ஊழியராகப் பணிபுரிந்தார்கள்.

நம் கால மனிதர் இயேசுவைக் காண
ஆயத்தமாகிறோம்
நீ ஆயத்தமாகு ஆயத்தப்படுத்து
வருகை மிகச் சமீபம்

என்ற வாக்குத்தத்தத்தை ஒவ்வொரு மனிதனும் நிறைவேற்ற வேண்டும் என்பது தேவ சித்தமும் இறை நீதியுமாயிருக்கிறது.

வஞ்சிக்குழி

புத்திராம்பட்டு வட்டத்திற்குட்பட்ட இப்பணித்தளம் 1996-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. காரியாவிளை சபையார் இப்பணிக்களத்திற்கென்று ரூபாய் 58,000 செலவில் 150 சென்ட் பூமியினை வாங்கினார்கள். பின்னர் அதில் ஓர் ஊழியர் இல்லம் கட்ட அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். கட்டி முடிக்கப்பட்ட அவ்வீடு 05-07-1997-ல் காரியாவிளை சபைப் போதகர் ஜெ. விக்டர் ஞானராஜ் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டது. இச்சபையைச் சேர்ந்த திருமதி. ஞானதீபம் நினைவுக் கட்டிடத்தைப் பேராயர் எம்.ஐ. கேசரி அவர்கள் 12-06-1997-ல் அர்ப்பணம் செய்தார்கள். அக்கட்டிடம் கட்ட நாகர்கோவிலைச் சேர்ந்த திருமதி. ராணி ஜோஷ்வா அவர்கள் ரூபாய் 50,000/- நன்கொடை வசூலித்துக் கொடுத்தார்கள். இப்பணித்தளத்தின் மிகப்பெரும் பொறுப்புக்களைக் காரியாவிளை சபையாரே ஏற்றனர்.

வஞ்சிக்குழிப் பணித்தளத்தில் பாடசாலை ஒன்றும், சமூகக்கூடம் ஒன்றும் கட்டுவதற்கு இந்தியன் ஹில்பே (Indian Hilfe) இயக்குநர் திரு. பி. சேது அவர்கள் உதவியுடன் அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். மிகக் குறுகிய காலத்தில் இப்பணித்தளம் சீரான வளர்ச்சியினைக் கண்டுள்ளமைப் பாராட்டுதற்குரியது. இதன் ஆரம்பகால ஊழியராக திரு. ஹென்றி மார்ட்டின் அவர்கள் பணிபுரிந்துள்ளார்.

பரிசுத்த ஆவியானவருக்கு அடங்கியிருப்பவர்கள் அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் போன்ற கனிகளைக் கொடுக்கிறார்கள். கடைசிக் காலத்தில் வாழ்கின்ற மனிதன் ஒவ்வொருவரிடமும் கிறிஸ்து இவைகளை எதிர்பார்க்கிறார்.

மல்காபூர்

மல்காபூர் என்னும் பணித்தளமானது குருகிலாம்பூர் வட்டத்திற்குட்பட்டதாகும். இப்பணிக்களம் 1996-ல் தொடங்கப்பட்டது. இப்பணிக்களத்திற்குக் கடமலைக்குன்று லிபர்ட்டி திருச்சபையார் 50 சென்ட் பூமி வாங்கிக் கொடுத்தார்கள். மீண்டும் லிபர்ட்டி சபை தனது வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தின்போது ஒரு வீடு கட்ட முன்வந்தது. அவ்வீட்டிற்கு 20-01-1998 அன்று அருள்திரு. டி. ஜஸ்டின் தேவதாஸ் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். கட்டி முடிக்கப்பட்ட பின்னர் அதனை அருள்திரு. அறிவர். சி. ரெத்தினதாஸ் அவர்கள் 02-10-1998-ஆம் நாள் அர்ப்பணம் செய்தார்கள். அப்பணித்தளத்தில் ஓர் ஆலயம் கட்ட 19-01-1998-ஆம் நாள் அருள்திரு. டி. ஜஸ்டின் தேவதாஸ் அவர்கள்

அடிக்கல் நாட்டினார்கள். அவ்வாலயம் உயிர்ப்பின் ஆலயம் என்ற பெயரால் அருள்திரு. என். விக்டர் அவர்களால் 05-03-2000-ஆம் நாள் அர்ப்பணம் செய்யப்பட்டது. இப்பணித்தளத்தின் முதல் ஊழியராக திரு. ஜி. பிறைட் கிறிஸ்துதாஸ் அவர்கள் பணியாற்றினார். இறைவன் செய்த நன்மைகளை நினைத்து, கிறிஸ்துவை அறியாதோர் மத்தியில் நற்பணி ஆற்றிய லிபர்ட்டி சபையார் என்றும் பெருமைக்குரியோர் ஆவார்.

கிறிஸ்தவம் ஒரு மதம் அல்ல, அது ஓர் அனுபவம். நற்செய்திப் பணி மனிதர்களை மதமாற்றம் செய்ய அல்ல, மனமாற்றம் கொள்ளவே மக்களை அழைக்கிறது. இவ்வுண்மைகளை அறிந்தவர் கிறிஸ்துவை அடக்கிக் கொண்டு வாழ முடியாது.

சின்னையன் பேட்டை

குருகிலாம்பூர் வட்டத்திற்குட்பட்ட இப்பணித்தளம் 01-02-1997-ல் தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்தில் திரு. ஒய். யோவாப் சிங் அவர்கள் ஆரம்ப ஊழியராய் இறைப்பணியாற்றினார்.

கிறிஸ்துவை அறியாத மக்களிடையே பணி செய்யவும், அவர்களிடையே ஆலயங்களை எழுப்பவும், ஜெபிக்கவும் இறைபாரம் கொண்ட பணியாளர்கள் தேவை. அது ஒருவேளை நீயாக இருக்கலாமோ? ஆலோசித்துப்பார்.

குன்னூர்

மணியார்குண்டம் வட்டத்திற்குட்பட்ட குன்னூர் பணித்தளம் 21-02-1997-ல் தொடங்கப்பட்டது. தக்கலையைச் சேர்ந்த திரு. லாறன்ஸ் றோஸ் அவர்கள் 196 சென்ட் பூமியை 08-03-1996-ல் வாங்கி, இப்பணிக்களத்திற்குக் கொடுத்தார்கள். அங்கு ஊழியர் இல்லம் கட்டுவதற்குரிய நிதியில் பெரும்பகுதியை அருள்திரு. அறிவர். ஏ. மாசில்லாமணி அவர்கள் கொடுத்துதவினார்கள். அவ்வில்லம் 08-05-1998-ல் அருள்திரு. டி. எலியாஸ் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டது. ஆதிவாசி பிள்ளைகள் தங்கிப் படிப்பதற்கான விடுதிக் கட்டிடமும் இப்பணித்தளத்தில் கட்டப்பட்டது. இக்கட்டிடத்தை இந்தியன் ஹில்பே சங்கத் தலைவர் அறிவர் ஜெ.டி. ஐசக்தாஸ் அவர்கள் 06-07-1999-ல் அர்ப்பணம் செய்தார். இப்பணித்தளத்தின் ஆரம்பகால ஊழியராக திரு. ஜி. ராபின் ஜாண் அவர்கள் பணிபுரிந்தார்கள்.

வாழ்க்கையில் உலகத்திற்கு நேராக ஓடினோர், சிறப்பாகக் கண்டது ஒன்றுமில்லை. பரிசுத்த ஜீவியத்திற்காக வாழ்க்கையை அர்ப்பணித்தோர் இழந்ததும் ஒன்றுமில்லை. இப்பேர்ப்பட்ட உணர்வையும் நிச்சயத்தையும் ஒரு மனிதன் கொண்டிருந்தால் அவன் அசைக்கப்படுவதில்லை.

கொடுந்துறை

கொடுந்துறை என்னும் பணித்தளம் தரிசன நகர் வட்டத்திற்குட்பட்டதாகும். இங்கு ஊழியமானது 16-07-1997-ல் தொடங்கப்பட்டது. சிறக்கரைச் சபையைச் சேர்ந்த திரு. கெ. வில்சன் அவர்கள் இப்பணித்தளத்திற்காக 17 செண்ட் பூமியை 10-03-1998-ல் வாங்கினார். அப்பணித்தளத்தில் ஊழியர் இல்லம் ஒன்று கட்டுவதற்காக 12-02-1999-ல் உதவித் தலைமை மிஷனெறி அருள்திரு. கெ.ஆர். வில்லியம் அவர்கள் அடிக்கல் நாட்டினார். கட்டி முடிக்கப்பட்ட அவ்வீட்டை யோக்பெல்லோ அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் 09-04-1999-ல் அர்ப்பணம் செய்தார்கள். திரு. சி. இராஜேந்திரன் அவர்கள் ஆரம்ப ஊழியராய்ப் பணியாற்றினார்.

கண்கள் காண்பது மெய். காதுகள் கேட்பது உண்மை என்று ஓடுபவர்களின் முடிவு சோகம். நீ அனுபவித்ததைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுக்க வெட்கப்படாதே. வெட்கப்படுகிறவனால் எதையும் சாதிக்க முடியாது.

அதிரிப்பட்டி

மணியார்குண்டம் வட்டத்திலமைந்த இப்பணித்தளத்தில் ஊழியமானது 1997 இல் தொடங்கப்பட்டது. பள்ளிவிளை திருச்சபையார் இப்பணித்தளப் பொறுப்பை ஏற்றனர். முதலில் அவர்கள் 95 செண்ட் நிலத்தை 9-8-1998 இல் வாங்கினார்கள். அதில் ஆலயம் கட்ட அருள்திரு. ஆர். ஜஸ்டஸ் அவர்கள் 27-9-1998 இல் அடிக்கல் நாட்டினார்கள். திரு.டேவிட் சாமுவேல் அவர்கள் இப்பணித்தளத்தில் ஆரம்ப ஊழியராய்ப் பணியாற்றினார்.

குழியில் விழுந்த நாய்க்குட்டி கத்துவதுபோல, வலையில் சிக்கிய பறவை துடிப்பதுபோல, அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் மனிதர்கள். இறைவனை அறிய ஆவலாக உள்ளனர். அறிவிப்பது உனது கடமை தானே.

வில்வத்தி

சேராப்பட்டு வட்டத்திற்குட்பட்ட வில்வத்தி என்னும் பணித்தளம் 1997 இல் தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்தின் முதல் மிஷனெறியாக திருமதி சபீலாபாய் அவர்கள் பணிபுரிந்தார்கள்.

கீழ்வலசை

கீழ்வலசைப் பணிக்களம் ஆரம்பிக்கப்பட்டபின், அதன் பொறுப்பை [illegible] சேகர சபை ஏற்றுக் கொண்டது அப்பணித்தளத்தின் ஆரம்பகால

ஊழியர்களாக திரு. ஆர். சார்ள்ஸ், திரு. எ. எட்வின் ஆகியோர் பணியாற்றினர். பின்னாட்களில் மூலச்சல் சபையினர் மொத்தக்கப் பணித்தளத்தைத் தத்து எடுத்தனர். கீழ்வலசையிலும் ஊழியம் தொடர்ந்து நடைபெறுகிறது.

உலகில் சொந்தம் பாராட்ட மனிதனுக்கு ஒன்றுமே இல்லை. அவன் வெறுங்கையுடன் பிறக்கிறான். வெறும் கையுடன் மறைகிறான். இடையில் அவன்சம்பாதிப்பது எது? என்பதுதான் கேள்வி? ஆத்துமாக்களோடு இறையுலகம் செல்பவன் தான் உண்மையான செல்வந்தன் ஆவான்.

அரசம்பட்டு

அரசம்பட்டு என்னும் பணித்தளமானது புத்திராம்பட்டு வட்டத்தில் அமைந்ததாகும். இங்கு 1998 இல் ஊழியம் ஆரம்பிக்கப்பட்டது. நாகர்கோவில் கஸ்பா சபையினர் இப்பணித்தளப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, 94 சென்ட் பூமி வாங்கியுள்ளார்கள். அதோடு அப்பணித்தளத்தில் ஆழ்குழாய்க் கிணறு ஒன்று தோண்டி, வளாகத்தைச் சுற்றிலும் வேலி அடைத்துள்ளனர். அங்கு ஓர் ஆலயமும் மருத்துவமனையும் கட்ட அடிக்கல் நாட்டியுள்ளனர். இப்பணித்தளத்தின் ஆரம்ப கால ஊழியர் அருள்திரு. ஆர். சார்ள்ஸ் ஆவார்.

கிறிஸ்துவை அறியாத மக்களை நம் குடும்பத்தவராக, நம் இனத்தவராக, நம் ஜாதியராக, நம் மொழி பேசுகிறவராகக் கருதிச் செயல்படும், ஒவ்வொரு மனிதனும் வாழ்வின் வசந்தங்களை அனுபவிக்கிறான். இப்படிச் செய்கின்ற தனிமனிதனும் சபையாரும் இன்னும் உருவாக வேண்டும்.

ராவத்தநல்லூர்

புத்திராப்பட்டு வட்டத்துக்குட்பட்ட இப்பணித்தளம் 1998 இல் தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்தைப் பாகோடு சபையார் பொறுப்பேற்றனர். பணித்தள உபயோகத்திற்கென்று இவர்கள் ரூபாய் 34,000 மதிப்பில் 4 ¾ சென்ட் நிலத்தை வாங்கினர். அதில் பணியாற்றும் ஊழியர் தங்குவதற்காகப் பழைய வீடு ஒன்றையும் வாங்கினர்.

அப்பணித்தளத்தில் ஆலயம் கட்டுவதற்கு மார்த்தாண்டம் வட்டார சுவிசேஷ ஜெபக்குழுவினர் 30-6-2001-ஆம் நாள் அருள்திரு ஒ. ஜேக்கப் அவர்களால் அடிக்கல் நாட்டினர். 2000-ஆம் ஆண்டில் மார்த்தாண்டம் வட்டாரத்தில் நடைபெற்ற விற்பனை விழா வருவாயை இதில் செலவிடப்பட்டது. இப்பணித்தளத்தின் ஆரம்ப ஊழியராக திரு. எட்வின் ஆபிரகாம் அவர்கள் பணியாற்றினார்கள்.

நித்தம் நம்மை விட்டுச் செல்வார் பாரீர்
அவர் யாவரும் செல்லும் அவ்விடமும் பாரீர்
அலறலும் புலம்பலும் உடல்தனைக் கீறலும்
நரகத்தின் தினசரி காட்சி கேளீர்

என்ற அவல நிலையில் வாழும் மக்களிடையே நற்செய்தியை அறிவிக்க. அல்லது அறிவிப்பவருக்கு வேண்டிய உதவிகள் செய்யும் மக்கள் தேவை.

கும்பப்பாடி

கும்பப்பாடி என்னும் பணித்தளம் மணியார்குண்டம் வட்டத்திற்குட்பட்டதாகும். இது 1998 இல் தொடங்கப்பட்டது. திரு. ஆர். கிறிஸ்டோபர். அவர்கள் தொடக்ககால ஊழியராகப் பணியாற்றினார். தேவைகள் அதிகமுள்ள இப்பணித்தளத்தின் பொறுப்புக்களைப் பங்கிட்டுக் கொள்ள பாரமுள்ள மக்கள் தேவை.

இருளர் குடிசை

இருளர்குடிசை என்னும் பணித்தளம் குருகிலாம்பூர் வட்டத்திற்குட்பட்டதாகும். இது 15-5-1999-இல் தொடங்கப்பட்டது. திருமதி. தங்கா பாலஸ் பால் அவர்கள் இப்பணித்தளத்தின் ஆரம்ப ஊழியராவார்.

இந்தியா இயேசுவை அறிந்திடும்காலம்
இதுதான் இதுதானே!
இந்தக் காலத்தில் மௌனமாயிருந்தால்
இரட்சிப்புத்தான் வருமோ

என்ற பாடல் வரிகளின் பொருள் எத்தகைய அர்த்தம் கொண்டது என்பதைக் கிறிஸ்தவ சமுதாயம் உணர்ந்து செயல்படுதல் வேண்டும்.

சொன்னாளப்பட்டி

குருகிலாம்பூர் வட்டத்திற்குட்பட்ட சொன்னாளப்பட்டி என்னும் பணித்தள ஊழியமானது 1-6-1999-இல் தொடங்கப்பட்டது. திருமதி. மோனல் செலின் பிறைட் அவர்கள் இங்கு ஆரம்ப ஊழியராகப் பணியாற்றினார்.

உலகை அக்கறையை விலைபேசி விற்கிற மனிதர்களை அல்ல. மனிதருக்குச் சேவை செய்வதே மதம் என்று புரிந்து செயல்படுபவர்களே தன்னலமற்ற தியாகிகள்.

தாணிப்பாடி

தாணிப்பாடி என்னும் பணித்தளம் குருகிலாம்பூர் வட்டத்திற்குட் பட்டதாகும். இப்பணித்தளம் 26-9-1999 இல் தொடங்கப்பட்டது. திரு யோவாப்சிங், இப்பணித்தளத்தின் தொடக்ககால ஊழியராவார்.

இயேசுவின் இரத்தத்தின் வல்லமையைப் புத்தகங்கள் போதிக்க முடியாது. விளக்கங்கள் விளக்க முடியாது. அனுபவம் மட்டுமே கற்றுக் கொடுக்கும் என்பதை ஏற்றுக் கொண்டவர்கள் ஊழியராகச் செல்வார்கள் அல்லது ஊழியத்தைத் தாங்குவார்கள்.

ரெட்டியார் பாளையம்

ரெட்டியார் பாளையம் என்னும் பணித்தளமானது 3-7-1999 இல் தொடங்கப்பட்டது. குருகிலாம்பூர் வட்டத்திற்குட்பட்ட இப்பணித் தளத்தில் திருமதி. ஜெயா ஜெபசிங் அவர்கள் ஆரம்பகால ஊழியராகப் பணிபுரிந்தார்கள். நாட்கள் கடந்து செல்லச் செல்ல தேவைகளும் அதிகரிக்கின்றன.

எஸ்.வி. பாளையம்

எஸ்.வி. பாளையம் என்ற பணித்தளம் புத்திராம்பட்டு வட்டத்தைச் சேர்ந்தது. இப்பணித்தளம் 1-10-1999 இல் தொடங்கப்பட்டது. திரு. ஹென்றி மார்ட்டின் அவர்கள் ஊழியராகப் பணியாற்றி வருகிறார். ஒருவன் பெற்ற சந்தோஷத்தைத் துணிகளில் சுருட்டி நிலத்தில் புதைத்து வைப்பவனாய் இருக்கக் கூடாது. அப்படிப்பட்டவர்கள் எத்தர்களே ஆவர்.

பெரியாப்பட்டி

குருகிலாம்பூர் வட்டத்திற்குட்பட்ட இப்பணித்தளம் 7-10-1999-இல் தொடங்கப்பட்டது. இப்பணித்தளப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட கோடியூர் சேகர சபையார் முதற்கண் அங்கு 50 சென்ட் நிலம் வாங்கினார்கள். திரு. எ. சத்தியதாஸ் அவர்கள் இப்பணித்தளத்தின் ஆரம்ப ஊழியராவார்.

எல்லா மனிதரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.

தொட்டித்துறை

இப்பணித்தளம் மணியார்குண்டம் வட்டத்திற்குட்பட்டதாகும். 1999 ஆம் ஆண்டு இங்கு ஊழியம் தொடங்கப்பட்டது. திரு. ரத்தி சாலோமோன் அவர்கள் இப்பணித்தளத்தின் ஆரம்ப ஊழியராவார்.

இந்நாட்களில் வாழும் ஒவ்வொரு மனிதர்களும் ஆத்துமாக்களுக்காகப் பற்றி எரியும் வைராக்கியத்தைப் பெற வேண்டும்.

சிறாத்துக்குழி

மணியார்குண்டம் வட்டத்திற்குட்பட்ட இப்பணித்தளம் 1999 இல் தொடங்கப்பட்டது. திரு. எஸ். அல்போன்ஸ் அவர்கள் இப்பணித்தளத்தின் முதல் ஊழியராவார். நீதியைக் குறித்தும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் இப்பூமிக்கு அறிவிக்கும் ஊழியர்கள் இன்னும் தேவை.

மேல்நிலவூர்

இப்பணித்தள ஊழியமானது 23-12-1999 இல் தொடங்கப்பட்டது. திருமதி மேழ்சி ஜாண் ஏசுவடியான் அவர்கள் இப்பணித்தளத்தின் ஆரம்ப ஊழியராவார். இயேசுவின் விடுதலைச் செய்தியைக் கூற, பாரெங்கும் புகுந்து செல்வோர் பலர் எழும்ப வேண்டும்.

பைத்தன்துறை

பைத்தன்துறை என்னும் பணித்தளமானது புத்திராம்பட்டு வட்டத்திற்கு உட்பட்டதாகும். இங்கு 20-3-2000-ஆம் நாள் ஊழியம் தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்திற்காக ஸ்காட் நகர் திருச்சபையார் ரூபாய் 50220 மதிப்பில் 30 சென்ட் பூமியை வாங்கினார்கள். ஆரம்பகால அருட்பணியாளராக திரு. ற்றி. சாலோமோன் அவர்கள் பணியாற்றினார்கள்.

எனக்காய் பேசிட நாவு வேண்டும்
என்னைப் போல் அலைந்திடக் கால்கள் வேண்டும்
என்னில் அன்புகூர ஆட்கள் வேண்டும்
இதை உன்னிடம் கேட்கிறேன் - தர வேண்டும்

என்ற பாடல் வரிகளுக்குப் பணிந்து, பணிபுரிவோர் இன்னும் எழும்ப வேண்டும்.

கூடாரம்

கூடாரம் என்னும் பணித்தளமானது சேராப்பட்டு வட்டத்திற்குட்பட்டதாகும். 28-3-2000-ஆம் நாள் இப்பணித்தளம் தொடங்கப்பட்டது. திரு. [illegible] டானியல் தீர்த்தன் அவர்கள் இப்பணித்தளத்தின் ஆரம்பகால ஊழியராவார். செல்வம், சீர், சிறப்பு, நற்குடிப்பிறப்பு ஆகியவற்றைக் [illegible] எண்ணி, இறை ஊழியத்தைத் தாங்கும் நபர்கள் வேண்டும். [illegible] இறைவனுக்கு ஏற்ற சுகந்த வாசனை மலர்களாவார்.

குபேரப்பட்டணம்

குருகிலாம்பூர் வட்டத்திற்குட்பட்ட இப்பணித்தளம் 6-6-2000 ஆம் நாள் தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்திற்குத் தேவதானபுரம் திருச்சபையார் 8-10-2002-ஆம் நாள் 50 செண்ட் பூமி வாங்கினார்கள். திரு ஜெ. மார்ட்டின் ஆசீர்வாதம் அவர்கள் இப்பணித்தளத்தின் முதல் ஊழியராவார்.

இந்தியாவின் எல்லாத்தெருக்களிலும்
இயேசுவின் நாமமும் விரைந்திடுமே

என்பதைச் சவாலாக ஏற்றுச் செயல்பட பலர் எழும்ப வேண்டும்.

ற்றி. மோட்டூர்

ற்றி. மோட்டூர் என்னும் பணித்தளமானது 15-11-2000 ஆம் நாள் தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்தின் ஆரம்ப ஊழியர் திருமதி. ஜெயா ஜெபசிங் ஆவார். பணம் என்னை ஆளக்கூடாது. நான் பணத்தை ஆளுவேன் என்று கூறும் எண்ணமுடையோர் தான் ஊழியத்தைத் தாங்குவார்.

கண்ணூர்

சேராப்பட்டு வட்டத்திலமைந்த இப்பணித்தளம் 14-05-2001 ஆம் நாள் தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்தின் ஆரம்பப் பணியாளர்களாக மெர்லின் தனக்கொடி மற்றும் பிரிசில்லா மீனாட்சி ஆகியோர் பணியாற்றினர். இவ்வுலகத்தில் ஒன்றும் நாம் கொண்டு வந்ததுமில்லை போகும்போது ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்ற கொள்கையுடையோரே ஆத்தும இரட்சிப்பில் வெற்றியைக் காண்பர்.

மாயம்பாடி

மாயம்பாடி என்னும் பணித்தளம் தரிசனநகர் வட்டத்திற்கு உட்பட்டதாகும். 5-6-2001 ஆம் நாள் இப்பணித்தளத்தில் ஊழியம் ஆரம்பிக்கப்பட்டது. திரு. எ. அற்புதம் அவர்கள் இப்பணித்தளத்தின் ஆரம்ப ஊழியராவார்.

பசியுற்றவர்களுக்கும் பிணியாளிகட்கும் பட்சமாக உதவி செய்வோரால் ஊழியம் மேம்படும். பலர் இயேசுவைச் சுவைப்பர்.

புழுலப்பாடி

தரிசன நகர் வட்டத்திற்குட்பட்ட இப்பணித்தளம் 1-7-2001-இல் தொடங்கப்பட்டது. இதன் ஆரம்ப ஊழியராக திரு. சி. இராஜேந்திரன் அவர்கள் பணியாற்றினார்.

நம் இயேசு ராஜாவே இதோ வேகம் வாறாரே
அதி வேகமாய்ச் செயல்படுவோம்

ஆத்துவளவு

01-07-2001-ஆம் நாள் தொடங்கப்பட்ட இப்பணித்தளம் மணியார்குண்டம் வட்டத்திற்குட்பட்டதாகும். திருமதி. ஜெபசிங் அவர்கள் இப்பணித்தளத்தின் ஆரம்ப ஊழியராவார்.

ஆத்தும இரட்சிப்பை இழந்தவர்கள் பலர் இவ்வுலகில் அழிந்து கொண்டிருக்கின்றனர். அவர்களிடையே நற்செய்தியை அறிவிக்கும் ஊழியரைத் தாங்குவோர் தேவை.

திலைத்துவளவு

தரிசன நகர் வட்டத்திற்குட்பட்ட இப்பணித்தளம் 6-7-2001 ஆம் நாள் தொடங்கப்பட்டது. திருமதி. டெய்சிபாய் குமாரசுவாமி அவர்கள் இப்பணித்தளத்தின் ஆரம்பகால ஊழியராவார்.

பணித்தளங்களில் ஆலயங்கள் எழுப்பவும் தேவையில் இருக்கும் மக்களுக்கு இயேசுவை அறிவிக்கவும் ஊழியராகச் செல்வோர் அல்லது ஊழியத்தைத் தாங்குவோர் வேண்டும்.

ஆலனூர்

ஆலனூர் என்னும் பணித்தளம் சேராப்பட்டு வட்டத்தில் அமைந்ததாகும். இப்பணித்தளம் 7-7-2001-இல் தொடங்கப்பட்டது. திருமதி விஜிலா திலகன் அவர்கள் இப்பணித்தளத்தின் ஆரம்ப ஊழியராவார்.

இவ்வுலகின் கடைசி சந்ததி நீயாக இருப்பாய். எனவே அனைவருக்கும் நற்செய்தி என்ற கோட்பாட்டை நிறைவேற்று.

கள்ளிப்பட்டு

சத்திராம்பட்டு வட்டத்தில் அமைந்த கள்ளிப்பட்டு என்னும் பணித்தளத்தில் 10-7-2001-இல் ஊழியம் தொடங்கப்பட்டது. திருமதி. சுஜி ஜான்சன் அவர்கள் இப்பணித்தளத்தின் முதல் ஊழியராவார்.

ஊழியர்களாகப் புறப்பட்டுப் போவதும், போவோரைத் தாங்குவதும் திருச்சபையின் கடமையே.

பாலப்பூண்டி

திருமதி. எ. பிளாறன்ஸ் அவர்களை ஆரம்ப ஊழியராகக் கொண்ட பாலப்பூண்டி என்னும் பணித்தளம் 10-7-2001-இல் தொடங்கப்பட்டது.

இந்தியர் அனைவரும் நமது ஜனம். அவர்கள் ஒவ்வொருவரும் இயேசுவை அறிய வேண்டும். இதற்கான சுவிசேஷ தீபங்களை ஏந்து வைப்பவர்கள் சபைதோறும் எழும்ப வேண்டும்.

மாதவச்சேரி

மாதவச்சேரி என்னும் பணித்தளம் 16-8-2001 ஆம் நாள் தொடங்கப்பட்டது. இது புத்திரம்பட்டு வட்டத்திற்குட்பட்டதாகும். திரு. செந்தில் குமார் அவர்கள் இப்பணித்தளத்தின் முதல் ஊழியராவார். காலங்கள் மாறி வாய்ப்புகள் நழுவி வரும் இந்நாட்களில் சுவிசேஷத்திற்கு இருக்கும் திறந்த வாசலை சாதகமாய்ப் பயன்படுத்தி ஆத்தும அறுவடை காண்போம்.

அத்திக்குழி

அத்திக்குழி என்னும் பணித்தளம் சேராப்பட்டு வட்டத்திற்கு உட்பட்டதாகும். திருமதி. ஜோஸ்லின் மஞ்சுளா அவர்கள் 31-8-2001 முதல் இப்பணித்தள ஊழியராய் நியமிக்கப்பட்டார்கள். இப்பணித்தளத்தோடு தொடர்புடைய கீழ்ப்பூண்டி, தாழ்வெள்ளம், சேர்வாப்பட்டு, வெள்ளிமலை, மேல்சாத்தனூர் ஆகிய கிராமங்களிலும் ஊழியம் நடைபெறுகிறது.

எட்டரைப்பட்டி

எட்டரைப்பட்டி என்னும் பணித்தளம் தரிசனநகர் வட்டத்திற்குட்பட்டதாகும். 26-07-2002-ஆம் நாள் இப்பணித்தளத்திற்கென்று 2 சென்ட் பூமியினை நேசர்புரத்தைச் சேர்ந்த திரு. பி. போவாஸ், திரு. ஜெ. ஞானதாஸ் ஆகியோர்கள் வாங்கினர். இப்பணித்தளத்தின் தொடக்க ஊழியராக திரு. சந்திர மௌலி அவர்கள் பணியாற்றினார்.

இந்தியருக்கு இயேசுவைச் சொந்தமாக்க வேண்டும் என்று துடியாய் துடிப்பவர்களுக்கு, சுவிசேஷப் பணி என்பது ஆவல் கொண்டதாகும்.

2. சேர்வராயன் (ஏற்காடு) மலை

நீங்கள் மகிழ்ச்சியாய்ப் புறப்பட்டு, சமாதானமாய்க் கொண்டு போகப்படுவீர்கள், பர்வதங்களும் மலைகளும் உங்களுக்கு முன்பாக கெம்பீரமாய் முழங்கி, வெளியின் மரங்களெல்லாம் கைகொட்டும். முட்செடிக்குப் பதிலாக தேவதாரு முளைக்கும், காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச்செடி எழும்பும்; அது கர்த்தருக்குக் கீர்த்தியாகவும், நிர்மூலமாகாத நித்திய அடையாளமாகவும் இருக்கும் (ஏசாயா 55:12,13)

கிறிஸ்துவின் நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் எல்லாம் சொல்லித்திரிய இளைஞர்கள் பலர் எழும்பினர். பேராய சுவிசேஷ ஜெபக்குழு தன் எல்லையை விரிவாக்கியது. ஜாகீர், கல்வராயன் மலைப்பகுதியில் பணித்தளங்களை அமைத்ததுடன் சேர்வராயன் மலைப்பகுதிகளிலும் தன் கவனத்தைச் செலுத்தியது. பிணியாளிகளுக்கு சுகம்! ஏழைகளுக்கு வாழ்வு! எளியவர்களுக்கு மதிப்பு! ஒடுக்கப்படும் மக்களுக்கு ஆதரவு குரல்; புதிய போதனை! அற்புத சாதனை! உயிர்ப்பிக்கும் வல்லமை! போன்ற சுவிசேஷ போதனைகளை ஆர்வமுடன் கொண்டு சென்றது.

செந்திட்டு

அருள்திரு. டி. எலியாஸ் மற்றும் திருவாளர்கள் கே.ஆர். வில்லியம், எ. செல்வராஜ் ஆகியோர் 1978 - இல் சேர்வராயன் மலையின் பல பகுதிகளைப் பார்வையிட்டு ஊழியம் தொடங்குவதற்குரிய வாய்ப்புகளை ஆராய்ந்து வந்தனர். பின்னர் செந்திட்டு என்னும் பணித்தள ஊழியத்தை கே.ஆர். வில்லியம், எ.சி. நாயகம் ஆகியோர் 23-9-1979-ஆம் நாள் தொடங்கினர். இப்பணிக்களத்தின் பொறுப்பை நெய்யூர் திருச்சபை ஏற்றது. அங்கு அவர்கள் 4-2-1986 மற்றும் 23-4-1986 ஆகிய நாட்களில் 80 சென்ட் பூமியினை வாங்கினார்கள். அப்பணித்தளத்தில் ஆலயம் கட்ட 22-9-1985 ஆம் நாள் அருள்திரு. ஏ.ஜே.எம். கேசரி அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். கட்டி முடிக்கப்பட்ட அவ்வாலயமானது பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் முன்னிலையில் கோவைப் பேராயர் வில்லியம் மோசஸ் அவர்களால் 13-10-1989-இல் அர்ப்பணம் செய்யப்பட்டது. அந்நிகழ்வில் நெய்யூர் சேகர சபைப் போதகர் அருள்திரு. சி. இரத்தினராஜ் மற்றும் சபை மக்கள் திரளாய்க் கலந்து கொண்டனர். அப்பணித்தளத்தில் ஊழியர் இல்லம் உள்ளது. அங்கு மருத்துவமனை ஒன்று கட்டப்படுவதற்காக ஒதுக்கப்பட்ட 26 சென்ட் பூமியில் 1-4-2000 ஆம் நாள் கட்டுமானப் பணி ஆரம்பமானது. திருமதி. டெய்சிபாய் மனோகர் அவர்கள் அங்கு மருத்துவ மிஷனெறியாய்ப் பணியைத் தொடங்கினார். திரு. கெ. ஆர். வில்லியம், திரு. ஏ.சி. நாயகம் ஆகியவர்கள் ஆரம்பகால ஊழியர்களாக இப்பணித்தளத்தில் பணியாற்றினர். மிஷனெறி பணியைக் கடமையாக நினைத்து செயல்பட்ட நெய்யூர் திருச்சபை என்றும் போற்றுதற்குரியது.

உடைபட்ட அப்பமாய், கரைந்திடும் உப்பாய்த் திகழ்ந்த மனிதர்கள் இறை சமூகத்தில் கனவான்களாகத் திகழ்வர்.

சேட்டுக்காடு

சேட்டுக்காடு என்னும் பணித்தளம் 1981-இல் தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்திற்காகப் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் சார்பில் 25½ செண்ட் பூமி வாங்கப்பட்டது. பின்னர் சேலத்தைச் சேர்ந்த சில நண்பர்கள் 20 செண்ட் பூமியினை 6-6-1985-இல் வாங்கி ஜெபக் குழுவிற்குக் கொடுத்தனர். அப்பணித்தளத்தில் ஆலயம் கட்டுவதற்குச் சாந்தபுரம் திருச்சபையார் முயற்சியினை மேற்கொண்டனர். அதன் பயனாக அருள்திரு. மோசஸ் கேசரி அவர்களால் 26-2-1994-இல் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அவ்வாலயத்தைச் சாந்தபுரம் சபையினரும் அச்சபையின் அங்கமான திருமதி. நேசபாய் சாம்ராஸ் அவர்களும் இணைந்து கட்டினர். இவ்வாலயத்திற்கு **டாக்டர் சாம்ராஸ் நினைவாலயம்** எனப் பெயர் சூட்டப்பட்டது. கட்டி முடிக்கப்பட்ட ஆலயத்தை, யோக்பெல்லோ அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் 7-5-1994 ஆம் நாள் அர்ப்பணம் செய்தார். சாந்தபுரம் சபையினர் பலர் அந்நிகழ்வில் கலந்து கொண்டனர். அப்பணித்தளத்தின் ஆரம்ப ஊழியராகத் திரு. சி. ஜாண்சன் அவர்கள் செயல்பட்டார். பணியின் தாகம் அறிந்து செயல்பட்டவர்கள், மேன்மைக்குரியோர் ஆவார்.

கிறிஸ்து இவ்வுலகில் நன்மை செய்கிறவராக வாழ்விழந்தவர்களைத் தேற்றுகிறவராக, ஊமையரின் வாய்க்கட்டுகளை அவிழ்க்கிறவராக குஷ்டரோகிகளைக் கையினால் தொட்டும் குழந்தையின் தோல் கொடுக்கிறவராக விளங்கினார் என்பதை அனைவருக்கும் அறிவிப்பதே சுவிசேஷத்தின் இரகசியமாகும்.

மாற மங்கலம்

இப்பணித்தளமானது ஏற்காடு மலையிலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. வடக்கே தர்மபுரி மாவட்டமும் கிழக்கே மஞ்சாவாடி கணவாயும் எல்லைகளாக உள்ளன. 29-9-1984 இல் இப்பணித்தளம் தொடங்கப்பட்டது. இக்கிராமத்தைச் சேர்ந்த திரு. வடமன் திருமதி. ஆண்டிச்சி ஆகியோர் ஆலயம் கட்டுவதற்கான பூமியைப் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு நன்கொடையாகக் கொடுத்தார்கள். அப்பணித்தளத்தில் ஊழியர் இல்லம் கட்டுவதற்கு பேராய சுவிசேஷ ஜெபக்குழுவும், சி.எம்.எஸ். நிறுவனமும் உதவின. இவர்களால் கட்டப்பட்ட வீடு 10-9-1986-இல் அருள்திரு. எஸ். ஜஸ்டின் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டது. அப்பணிக்களப் பொறுப்பை லீபுரம் திருச்சபையார் ஏற்றுக் கொண்டனர். அங்கு ஓர் ஆலயத்திற்கு 15-11-1996 இல் லீபுரம் போதகர் அருள்திரு. எல். தங்கராஜ் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

[illegible] அவ்வாலயம் 14-11-1999 இல் [illegible] அர்ப்பணமும் [illegible] அர்ப்பணிப்பில் [illegible] மக்கள் பலர் பங்கேற்றனர். திரு [illegible] அவர்கள் இப்பணித்தளத்தில் ஆரம்ப ஊழியராக [illegible] பொறுப்புகளை ஏற்று [illegible] பகிர்ந்து கொண்ட [illegible] இயக்கத்தினர்களும் பாராட்டுதலுக்குரியவர்கள்.

விடிவெள்ளி [illegible] தோன்றும் காலம்
[illegible] சொல்ல இது வசந்த காலம்
[illegible] சந்தர்ப்பம் [illegible]
பெரும் பாரதம் பெரும் பாரதம்
இதுவே ஒவ்வொரு மக்களின் தாகமாக அமையட்டும்.

கொளகர்

கொளகர் பணித்தளமானது 14-4-1989 அன்று தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்தின் பொறுப்பைக் குழித்துறை சபையார் ஏற்றுக் கொண்டனர். முதற்கண் அங்கு 150 சென்ட் பூமி வாங்கினார்கள். அச்சபையினரால் அங்குக் கட்டப்பட்ட ஆலயம் யோக்பெல்லோ அருள்திரு. டி. எலியாஸ் அவர்களால் 28-7-1991-இல் அர்ப்பணம் செய்யப்பட்டது. மேலும் அங்கு ஊழியர் தங்குவதற்கு வீடும் கட்டப்பட்டுள்ளது குழித்துறை சபை ஆதரவுடன் அங்கு தையல் பயிற்சி நிலையம் ஒன்று நடைபெற்று வருகிறது. திரு. ஜி. டேவிட் ராமன் அவர்கள் அப்பணித்தளத்தின் முதல் ஊழியராவார். கிறிஸ்து மீது நாட்டங்கொண்டு செயல்பட்ட குழித்துறை சபையார் நலமானவற்றைத் தெரிந்து கொண்டனர்.

கர்த்தரின் சித்தம் செய்கிறேன் என்ற நிச்சயம் உடையவர்கள் பூமி அதிர்ந்தாலும் ஆழி பொங்கினாலும் அஞ்சவே மாட்டார்கள். இப்படி [illegible] மனிதர்களின் சேவையால் மட்டுமே சமூகம் முன்னேறும்

சேலூர்

இப்பணித்தளமானது 18-5-1990-இல் தொடங்கப்பட்டது. இக்களப் பொறுப்பை அனந்தநாடார் குடியிருப்புச் சபையார் ஏற்றனர். அவர்கள், அங்கு 30 சென்ட் பூமியினை 21-1-1993-இல் வாங்கினார்கள். அவ்விடத்தில் ஆலயம் கட்டுவதற்கு அருள்திரு. எம். செல்வராஜ் அவர்கள் 9-4-1997-இல் அடிக்கல் நாட்டினார்கள். அவ்வாலயமானது [illegible]ங்கல் தெளபே ஆலயம் என்ற பெயரில் 20-11-1998-இல் பேராயர் எம். [illegible] கேசரி அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டது. ஏற்காடு சபைப் போதகர் இராஜபாஸ்கர் அவர்களால் அங்கு கட்டப்பட்டிருந்த ஊழியர்

இல்லம் 8-5-1998-ஆம் நாள் அர்ப்பணம் செய்யப்பட்டது. திரு. சி. டேவிட்சன் அவர்கள் இப்பணிக்களத்தின் ஆரம்ப ஊழியராவார். ஆண்டவர் பணியில் எனக்கும் ஒரு பங்கு வேண்டும் என இணைந்து செயல்பட்ட அனந்த நாடார்குடியிருப்புச் சபையார் கருத்தானவர்கள்.

திரள்கோடி இந்தியரை
நெஞ்சினிலே சுமந்தலைவோம்
பரலோகப் பெயர்ப்பதிவை
அமோகமாய் தொடரச் செய்வோம்.

சொரக்காப்பட்டி

சொரக்காப்பட்டி என்னும் பணித்தளம் ஏற்காடு வட்டத்திற் குட்பட்டதாகும். இப்பணித்தளம் 25-1-1991-இல் தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்தின் முதல் ஊழியர் திருமதி. பிளாறன்ஸ் அவர்களாகும்.

முருடி

இப்பணித்தளம் 15-1-1993 இல் தொடங்கப்பட்டது. திருமதி. பிளாறன்ஸ் புஷ்பவதி அவர்கள் ஆரம்பகால ஊழியராய்ப் பணிபுரிந்தார்கள். சேலம் பகுதியைச் சேர்ந்த காலஞ்சென்ற அருள்திரு. சாலோமோன் அவர்கள் கட்டி, ஆராதித்து வந்த கட்டிடத்தையும், வீட்டையும் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்குத் தற்காலிகமாக ஆராதனை நடத்த திருமதி. மேரி சாலோமோன் அவர்கள் 4-8-2002-இல் கொடுத்தார்கள். பின்னர் அக்கட்டிடத்தில் ஒழுங்காக ஆராதனை நடைபெற்று வருகிறது.

கர்த்தர் என்னை உருவாக்கியவர். கர்த்தரின் நோக்கத்தை உலகில் நிறைவேற்ற நான் உருவாக்கப்பட்டவன் என்ற சிந்தனை ஒவ்வொருவரிடமும் உருவாக வேண்டும்.

வெள்ளக்கடை

இப்பணித்தளமானது 2-9-1993-இல் தொடங்கப்பட்டது. இப்பணித்தளத்திற்கு 20 சென்ட் பூமியை மார்த்தாண்டம் சபை உறுப்பினரான டாக்டர். ரவிகமல சேகர் அவர்கள் 2002-இல் வாங்கினார்கள். இப்பணித்தளத்தின் ஆரம்ப ஊழியர் திரு. சூரிபால் சதா என்பவராவார்.

நம் பாரத மண்ணில் சிதறுண்டு அலையும் பலகோடி இந்தியர்கள் இரட்சிப்பை அடைந்திடல் வேண்டும். அதற்காக ஒவ்வொரு மனிதனும் ஏதேனும் ஒருவிதத்தில் உழைத்திடல் வேண்டும்.

[illegible]

[illegible] 1993 இல் தொடங்கப்பட்டது. இதன் ஆரம்ப [illegible] நாமே சுவிசேஷம் [illegible]

[illegible]

[illegible] பணித்தள ஊழியமானது 1993 இல் ஆரம்பிக்கப் [illegible] சென்னை ஜெபக்குழுவினர் ஏற்றுக் [illegible] இவர்கள் ரூ. 35,000 மதிப்பில் 63 சென்ட் பூமியினை [illegible] வாங்கினார்கள். அங்கு ஆலயமும், ஊழியர் இல்லமும் [illegible] பணியினைத் தொடங்கினர். அவர்களால் கட்டப்பட்ட [illegible] ஊழியர் இல்லமும் அக்கிளையினரால் 6-10-2000-ஆம் நாள் [illegible] செய்யப்பட்டன. திருவாளர்கள் ஐசாயா, எலிசாஏழுமலை [illegible] ஆரம்பகால ஊழியர்களாவர். கல்வாரி அன்பை உணர்ந்தோர், [illegible] அடக்கிக் கொண்டு வாழ முடியாது.

[illegible] இறந்தவர் எவரும்
[illegible] ஆனதில்லை
[illegible]
[illegible] அடைந்தோர் நஷ்டப்பட்டதில்லை

[illegible] பாடல் அடிகளை ஒவ்வொரு கிறிஸ்தவனும் உணர்தல் [illegible] அவசியமாகும்.

[illegible]

[illegible] பணித்தள ஊழியமானது 1993-ஆம் ஆண்டு [illegible] இப்பணித்தளப் பொறுப்பை விராலிக்காட்டுச் [illegible] ஏற்றனர். முதலில் அவர்கள் 29-6-1996-இல் 30 சென்ட் [illegible] வாங்கினார்கள். அங்கு ஆலயமொன்றைக் கட்டி 26-4-2000 [illegible] அர்ப்பணம் செய்தனர். ஊழியர் இல்லம் கட்டும் வேலை [illegible] வருகிறது. இப்பணித்தளத்தின் ஆரம்பகால ஊழியர் திருமதி. [illegible] ஆவார். குமிழிபோல் தோன்றும் வாழ்வு மறைவதற்கு [illegible] படைக்கும் இவர்கள் சரித்திர நாயகர்கள்.

[illegible] நம்மைக் கௌரவிக்கும் விதத்தில் நாம் செயல்பட [illegible] அவ்வாறிடல் பயனில்லை.

[illegible]

[illegible] பணித்தளம் 11-5-1994-இல் தொடங்கப்பட்டது. ஏற்காட்டைச் [illegible] பிரேம்குமார் அவர்கள் 5 சென்ட் பூமியைப் பேராய

சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு நன்கொடையாக வழங்கினார்கள். அவ்விடத்தில் ஆபேல் நினைவு ஆலயம் ஒன்றினைக் கட்ட பேராயர் எம்.ஐ.கேசரி அவர்கள் 20-11-1998 அன்று அடிக்கல் நாட்டினார்கள். ஊழியர் இல்லம் கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது. திரு. டேவிட் அன்னராஜ பாண்டியன், அவர்கள் இப்பணித்தளத்தின் ஆரம்பகால ஊழியராவார். சுதேசிகளும் இப்பணிகளில் தங்களை இணைத்துக் கொள்வது ஊழியத்தின் பரிணாம வளர்ச்சியே ஆகும்.

நற்செய்திக்கு மக்கள் செவிசாய்த்து மலர்ச்சி பெற்ற சமுதாயமாக மலர்ந்து வரும்போது, அவர்களைச் சத்தியத்தில் வேரூன்றச் செய்ய சுதேசிகளை எழுப்புவது நமது கடமையாகும். நம்மவர்களையும் மேல் நாட்டார் அவ்விதமே எழுப்பினர்.

கோவிலூர்

இப்பணித்தளம் 13-5-1994-இல் தொடங்கப்பட்டது. இதன் பொறுப்பை மைலோடு திருச்சபை ஏற்றது. அச்சபையார் 38 சென்ட் பூமியை வாங்கி இப்பணித்தளத்திற்குக் கொடுத்தனர். இதில் மைலோட்டைச் சேர்ந்த ஜேக்கப் ஆசிரியர், தன் மகன் எட்வின் ஜேக்கப் நினைவாக ரூபாய் 50,000 கொடுத்துள்ளார்கள். அப்பணித்தளத்தில் ஆலயம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு அஸ்திபாரமும் போடப்பட்டுள்ளது. திரு. கெ. சவுந்தர்ராஜன் அங்கு அருட்பணியாற்றினார். காலம் சிறிது கடமை பெரிது என்பதை உணர்ந்து செயல்படுபவர்களே பொறுப்பை உணர்ந்தவர்கள்

உறவும் அன்பும் உள்ளவன் மனிதன் என்பதை மறவாதே. பரந்த தேசத்திலுள்ள மனிதர்களின் கூட்டத்தைத் தேடிச் செல்வோர் தேவனின் பிரியர்கள். இதுதான் சத்தியம்.

மதூர்

14-5-1994-இல் இப்பணித்தள ஊழியம் தொடங்கப்பட்டது. களியங்காடு திருச்சபையினர் இக்களப் பொறுப்பை ஏற்றெடுத்து 25 சென்ட் பூமியினை 30-12-1996-இல் வாங்கினர். அங்கு ஆலயம் கட்டுவதற்கு 25-5-1997 இல் பேராயர் எம்.ஐ. கேசரி அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அவ்வாலயம் அவராலே 17-6-1998-ஆம் நாள் அர்ப்பணமும் செய்யப்பட்டது. அர்ப்பண நிகழ்ச்சியில் களியங்காடு சபையினர் கலந்து கொண்டனர். இப்பணித்தளத்தின் முதல் ஊழியர் மார்சல் முருகேசன் ஆவார். அன்பு, ஒற்றுமை, விசுவாசிகளின் ஐக்கியம் ஆகிய நற்பண்புகளைக் கொண்டிருக்கும் திருச்சபை வெற்றிக் கனிகளையே கொடுக்கும்.

எத்தனைக் கூட்டங்கள் இங்கே!
எத்தனைக் கொள்கைகள் இங்கே!
ஒன்றும் அறியாதோர் அங்கே!
கோடிக் கோடியாக உண்டே

கொட்டச்சேடு

ஏற்காடு பகுதியில் செயல்படும் இம்மானுவேல் நற்செய்திக் கழகத்தாரால் இப்பணித்தள ஊழியம் தொடங்கப்பட்டது. அங்கு அவர்களால் எழுப்பப்பட்ட ஆலயத்தை, பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியத்திற்குப் பயன்படுத்த ஒப்புதல் அளித்தனர். அதன்பேரில் அவ்வாலயத்தில் ஆராதனை நடைபெற்று வருகிறது. திரு. எட்வின் ராஜ் அவர்களை அப்பணித்தள ஊழியராகப் பேராய சுவிசேஷ ஜெபக்குழு நியமித்தது. டாக்டர். பால்தாஸ் அவர்கள் அவ்விடத்தில் மருத்துவப் பணியாற்றி வந்தார்கள். மேலானவைகளை நாடிச் செயல்பட்ட இம்மானுவேல் நற்செய்திக் கழகத்தார் மேன்மைக்குரியவர்கள்.

மறைத்தும் ஒளித்தும் வைக்காமல் பிதா இயேசுவை உலகிற்கு அனுப்பினார். அவரை அறிந்தவர்கள் அறியாதாருக்கு அறிவிக்க வேண்டும்.

நல்லூர்

நல்லூர் பணித்தள ஊழியமானது 11-07-1995-ல் தொடங்கப்பட்டது. இப்பணித்தளப் பொறுப்பைக் களியக்காவிளை திருச்சபையார் ஏற்று அங்கு 46 சென்ட் பூமியை 12-11-2001-ல் வாங்கினார்கள். திரு. பாக்கியா ஜாண் பிறைட் என்பவர் இப்பணித்தளத்தின் ஆரம்ப ஊழியராவார். ஒன்றுமில்லாதவர்களுக்குக் கொடுத்து இறை ஊழியத்தைத் தாங்குவதே இறைச் சித்தமாகும்.

இயேசுவை ஒதுக்கிவைத்து, மனிதன் தன் வாழ்வில் எத்தனை உயர்வுகள் கண்டாலும் முடிவு பரிதாபமே. எனவே இயைந்த பணியினை ஒவ்வொருவரும் கண்டிப்பாகச் செய்ய வேண்டும்.

குண்டூர் - தெப்பக்காடு

இக்கிராமத்தில் ஊழியமானது 10-07-1996-ல் தொடங்கப்பட்டது. திரு. கெ. சவுந்தரராஜன் இப்பணித்தளத்தின் ஆரம்ப ஊழியராவார்.

உயிர்த்தெழுந்த இயேசுவைக் கண்டோர், அறிந்தோர், உணர்ந்தோர் அனைவரும் சுவிசேஷத்தைப் பிறருக்கு அறிவிக்க வேண்டும்.

அழகுமலை

இப்பணித்தள ஊழியமானது 1996-இல் தொடங்கப்பட்டது. திரு எ.எஸ். மரியதாஸ் அவர்கள் முதல் அருட்பணியாளராய் நியமனம் பெற்றார்.

கடைசி நாட்களில் வாழும் மனிதன் ஒவ்வொருவரிடமும் தெய்வ நம்பிக்கை, பிறருக்கு உதவுதல், தன்னம்பிக்கை, தியாக உணர்வு போன்றவை மலர்தல் சமூகத்தைச் சீர்ப்படுத்தும்.

பட்டிப்பாடி வேலூர்

1998-இல் இங்கு ஊழியம் தொடங்கப்பட்டது. திரு. சி. ரமேஷ்குமார் அவர்கள் இப்பணித்தளத்தின் ஆரம்பகால முதல் ஊழியராவார்.

கிறிஸ்துவை அறியாதோரையும் வழிதப்பி நடப்போரையும் சத்தியவேதம் காட்டும் உத்தம வழியில் நடத்திட உழைப்போம்.

மேற்குறிப்பிட்ட பணித்தளங்கள் தவிர ஏற்காடு வட்டத்திலுள்ள கேளியூர் என்னும் பணித்தளம் 15-07-2001-ல் தொடங்கப்பட்டது. திருமதி பாரதி ஏழுமலை அங்கு ஊழியராக நியமிக்கப்பட்டார்கள். இவ்வட்டத்திலுள்ள நார்த்தன் சேடு பணித்தளத்தில் திருமதி. ஐடாசுஜியும், கும்பப்பாடி பணித்தளத்தில் திருமதி. குளோறி சுந்தரராஜும், பிலாத்தூர் பணித்தளத்தில் திருமதி. சாந்தி எட்வினும் ஊழியர்களாக நியமனம் பெற்று பணிபுரிந்து வருகிறார்கள். அன்னைதெரசா அவர்கள் "ஒரு நூறு பிள்ளைகளுக்கு உணவு வழங்க முடியாவிட்டால் ஒரு வாய்க்காவது உணவு கொடுக்கலாம்" என்று கூறினார். அதுபோல சுவிசேஷச் செய்தியினை அனைத்து மக்களுக்கும் உடனடியாகக் கூறாவிடினும் இயன்ற அளவு நமது தலைமுறையில் நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்.

காலஞ்செல்லாது இனிக் காலஞ்செல்லாது
கர்த்தர் இயேசு வருகிறார் நீ கவனமாயிரு
காலத்தை நீ காத்துக் கொண்டால் மேன்மையடைவாய்.

பசித்தவனுக்குப் பரிவுகலந்த உணவு, தாகமுள்ளவருக்கு பருகுவதற்கு உகந்த நீர், நெஞ்சம் நொந்தவருக்கு அன்புகலந்த அரவணைப்பு, ஆறுதல் மொழி மற்றும் புனரமைப்பிற்கான வாய்ப்பு ஆகிய இவைகளைப் பேராய சுவிசேஷ ஜெபக்குழு மலைவாழ் மக்களுக்கு செய்து கொடுத்தது. அற்பமான தொடக்கம், குறுகிய காலத்தில் அளவில்லா வளர்ச்சி, இத்தனையும் கீழ்ப்படிந்த ஆத்துமாக்களால் உருவானவையே.

பணிக்களங்கள் பெருகி, பணிசெய்யும் இடங்கள் விரிவடைந்தன. அவை சேராப்பட்டு, தரிசனநகர், புத்திராம்பட்டு, மணியார்குண்டம், திருக்கோயிலூர், ஏற்காடு ஆகிய ஆறு வட்டங்களாகப் பாகுபடுத்தப்பட்டன. தலைமை மிஷனெறி மொத்த ஊழியர்களின் கண்காணிப்பாளராகச் செயல்பட்டார். பிரிக்கப்பட்ட ஒவ்வொரு வட்டங்களுக்கும் உதவித் தலைமை மிஷனெறிகள் புதிதாகப் பொறுப்பேற்றனர். இவ்வாறாக ஊழியம் வளர்ச்சிப் பாதையில் சிறப்பான முன்னேற்றத்தைக் கண்டது.

3. குமரிமாவட்டப் பணித்தளங்கள்

பிதா தம்முடைய குமாரனை ஈவாக பூவுலகில் தந்தார். ஈவு என்பது மனித சக்திக்கு அப்பாற்பட்டது. அது மனிதனிடம் இல்லை. தேவனுடைய ஈவு வெளிப்பட்டதைச் சத்திரக்காரன் அறியவில்லை. ஆனால் சாஸ்திரிகள் அறிந்தனர். இறைவனை அறிந்தவர்கள் உலகில் அடங்கி நடப்பர். இறைச் செய்தியை மும்முரமாக அறிவிப்பர். ஒவ்வொரு மனித வாழ்க்கைக்கும் குறிப்பிட்ட கால அளவும் தேவநோக்கமும் உண்டு. கொடுக்கப்பட்ட காலத்தில் கொடுக்கப்பட்ட பணியை நிறைவு செய்வதே வெற்றியின் நிலையாகும். குமரிப் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவினர் தம் பணியைக் குமரி மாவட்டத்திலுள்ள திட்டுவிளை அருகே துவரங்காடு என்ற இடத்தில் தொடங்கினர். பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் திட்டுவிளை சேகரத்துப் போதகராகப் பணியாற்றியபோது, அவ்விடத்தில் ஒரு ஊழியக்களம் தொடங்க ஆலோசனை கூறினார்கள். அப்பகுதியில் ஓர் ஆலயம் கட்ட சுவிசேஷ ஜெபக்குழுவின் அன்றைய செயலர் பேராசிரியர் எ.வி. டைட்டஸ் அவர்கள் டாக்டர். மத்தியாஸ் குடும்பத்தினரைத் தொடர்பு கொண்டார்கள். அக்குடும்பத்தினர்களும் அதற்குரிய முழுத் தொகையைக் கொடுப்பதாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.

அ. *மத்தியாஸ்நகர்*

ஆலயம் கட்டும் அஸ்திபார வேலையை 22-06-1978-ஆம் நாள் அருள்திரு. எம். ராஜையன் அவர்கள் ஜெபித்துத் தொடங்கினார்கள். பின்னர் 26-06-1978-ஆம் நாள் அருள்திரு. ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் அவ்வாலயத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். மிக விரைவில் அவ் ஆலயத்தைக் கட்டி முடித்து **டாக்டர் மத்தியாஸ் நினைவு ஆலயம்** என்ற பெயரில் 1979 ஜனவரி 21-ஆம் நாள் பேராயர் சி. செல்வமணி அவர்கள் அர்ப்பணம் செய்தார்கள். தியானக் கூட்டங்கள் பல அதில் நடைபெறுவதுண்டு. அவ்விடத்திற்கு **மத்தியாஸ்நகர்** என பெயரிடப்பட்டுள்ளது. மிகக் குறுகியகாலத்தில் 60-க்கும் மேலான

குடும்பங்கள் அச்சபையில் சேர்ந்தனர். பின்னர் அவ்வாலயத்தைச் சுவிசேஷ ஜெபக்குழுவினர் குமரிப் பேராயத்திடம் ஒப்படைத்தனர்.

தோல்விகளைக் கண்டு துவண்டு விடாமல், அவைகளை வெற்றிப் படிகளாகத் தேவன் மாற்றினார். பணம், சொத்துக்கள், உலக செல்வாக்குகள், உலக இன்பங்கள் ஆகிய கௌரவப் பதவிகளுக்குப் பின் ஓடாமல், சிலுவையினையே இம்மிஷனெறிகள் சொந்தமாக்கினர். கடமையைக் கருத்தாய் காலந்தாழ்த்தாமல் செய்தனர். சொந்த இடம், சொந்த ஜனம், சொந்தப் பிள்ளைகளை விட சாதி வேறுபட்ட, கலாச்சாரம் வேறுபட்ட மக்களிடையே சென்று இறைசெய்தியைக் கூறி அற்புதங்களை நடத்திய இவர்கள் அழைப்புக்குச் சரணாகதியானவர்கள். விலைமதிப்பற்ற வாழ்க்கையை விரயமாக்காதே எனப் பலர் பரிகசித்த போதும், காலத்தைப் பரிசளித்தவருக்குக் கனிகளைக் காணிக்கையாக்கியவர்கள். இத் தன்மையோரைப் பொருளால் தாங்கி ஜெபத்தால் அனுப்பிய திருச்சபை மக்களும் புத்திசாலிகள். இதுவரையிலும் இவ்வரியப் பணியில் தங்களை ஈடுபடுத்தாதோர், வசந்த வாழ்க்கையை குற்றப்படுத்தியோர் ஆவார். வாழ்விழந்த மக்கள், வாழ்வைப் பெற உதவுவது, கிறிஸ்துவை அறிந்த ஒவ்வொரு மனிதனுடைய கடமையாகும்.

முயல்வோம்! முயல்வோம்! விசுவாசிகளே!
கூறுவோம் கிறிஸ்துவின் ராஜரீகத்தையே,
அந்தகாரத்தின் கிரியைகள் நொறுக்குவார்,
பரலோக பேரின்பத்தை நாட்டுவிப்பார்.

9

சமூக சேவை அமைப்புகளின் பங்கு

"அவனைக் கண்டு, மனதுருகி, கிட்ட வந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும், திராட்ச ரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுயவாகனத்தின் மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டு போய் அவனைப் பராமரித்தான்" (லூக்கா 10 : 34-35)

இறை அழைப்பு ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. அதற்குப் பலர் கீழ்ப்படிவதில்லை. அழைப்புப் பெற்றோரில் சிலர் எங்கு எவர் தேம்பினாலும், அழுதாலும், துன்புற்றாலும் கண்டுகொள்ளாமல், தன் சுண்டுவிரலில் ஏற்பட்ட காயத்தை உலகம் கண்டுகொள்ள வேண்டும் என்ற நிலையில் வாழ்கின்றனர். நாம் வாழும் இந்திய நாட்டில் பத்து லட்சம் பேர் இன்னும் பிச்சைக்காரர்களாகக் காணப்படுகின்றனர். எண்ணற்ற ஏழைகள், பெண்கள், தலித்துகள் தங்கள் கால்களில் அடிமை விலங்குகள் பூட்டப்பட்டவர்களாய் வாழுகின்றனர். இந்தியாவின் நிலையில் மிகவும் மலிவானது மக்கள் மட்டுமே. எங்கு பார்த்தாலும் மக்கள் நெருக்கடியான சூழலில்தான் வாழ்கின்றனர். கி.பி. 2000 மேய்மாதம் 11-ஆம் நாள் காலை 05.05 மணிக்கு டில்லியில் சப்தர் ஜங் மருத்துவமனையில் 'ஆஸ்தா' என்ற பெண் குழந்தை பிறந்தது. இந்தியநாடு 100 கோடி மக்கள் என்ற அந்தஸ்தினைப் பெற்றது. இந்நாட்டில் வீதியில் மழையின்போது நனையும், குளிரில் நடுங்கும், வியாதியில் தவிக்கும், மரித்துக் கிடக்கும் மனிதர்களை எட்டிக் கூடப் பார்க்க மனம் இல்லாத மனித நேயமற்ற மக்கள் வாழும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மனிதனுக்குச் சேவை செய்வதே மதம் என்பதை புரிந்து கொள்ளாமல் பலர் தன்னலத்திற்குச் சேவை செய்வதையே மதமாக்கிக் கொண்டனர். பேராய சுவிசேஷ ஜெபக்குழு இத்தகைய நிலைகளிலிருந்து விலகி மக்களிடம் சென்று சமயப் பணியுடன் சமூகப் பணிகளையும் நிறைவேற்றத் திட்டம் தீட்டியது. இதற்காகப் பல சமூக நிறுவனங்களிடம் தொடர்பு கொண்டு, அவைகள் மூலம் மக்கள் பணி ஆற்றியது.

1. இந்திய சுவிசேஷ ஐக்கிய விடுதலை திட்டப் பணி (Evangelical Fellowship of India Commission On Relief (EFICOR))

இறைப்பணியை மலைமேல் விருத்தியடையச் செய்ய முயன்ற வேளையில், தலைமை மிஷனெறி அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் எபிகோர் நிறுவனத்தைத் தொடர்பு கொண்டார்கள். அந்நிறுவனத் தலைவர்கள் சமூக சேவையில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தியவர்கள். மிஷனெறி எலியாசின் அழைப்பினைப் பெற்ற அவர்கள் மலைப் பகுதிக்குச் சென்று மலைவாழ் மக்களின் நிலைமையை நேரில் கண்டறிந்தார்கள். தங்கள் மனதில் ஏற்பட்ட உந்துதலினால் அம்மக்களை மேம்படுத்துவதற்கான திட்டங்களை அங்கு நிறைவேற்ற முன்வந்தார்கள். அதன்பேரில் 1982-ஆம் ஆண்டு மலையில் கிணறுகள் வெட்டி குழாய் மூலம் நீரைப் பாசனத்திற்குப் பாய்ச்சி விவசாயத்தை ஊக்குவித்தார்கள். மலைவாழ் மக்கள் பயன்படுத்துவதற்காக சுத்தமான குடிநீர் வசதியினை செய்து கொடுத்தார்கள். சமூகக் கிணறுகள் மூலம் ஆதிவாசி மக்கள் விவசாயம் செய்து, லாபமாகப் பொருளீட்டினார்கள். அவ்விதம் பொருளீட்டும் விவசாயிகள் தாங்கள் பெற்றுக் கொள்ளும் விளைச்சலின் வருவாயில் 10-ல் ஒரு பங்கை இவ்வூழியத்திற்குத் தாங்களாகவே கொடுத்தனர்.

குருகிலாம்பூர் என்னும் பணித்தளத்தில் இந்நிறுவனம் பள்ளி ஒன்றினைத் தொடங்கி நடத்துவதற்கு உதவி செய்தது. அதன்படி 1983-ஆம் ஆண்டு பள்ளிக்கல்வி தொடங்குவதற்காக, தற்காலிக பள்ளிக் கட்டிடம் ஒன்றை முதலாவதாகக் கட்டியது. அப்பள்ளியில் பயிற்றுவிக்கும் ஆசிரியர் ஒருவருக்குரிய ஊதியத்தைக் கொடுப்பது மட்டுமல்லாமல், அப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு மதிய உணவும் வழங்கியது. தேவை மிகுந்த காலத்தில் சூழ்நிலையினை அறிந்து உதவி செய்த இந்நிறுவனத்தின் செயல் பாராட்டுதலுக்குரியது. நன்மை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது, அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே (நீதி 3 : 27) என்ற வசனம் இத்தொண்டுள்ளம் கொண்ட இயக்கத்தினரின் வாழ்வின் மூலம் பிரதிபலித்தது.

2. சமூகச் செயல்பாட்டுச் சபை மக்கள் இயக்கம் (Churches Auxiliary for Social Action (CASA))

மலைமக்கள் மத்தியில் சமூகச்சேவையினைச் செய்ய நிதி உதவிகள் அதிகம் தேவைப்பட்டன. யோக்பெல்லோ எலியாஸ் அவர்கள் அச்சூழலில் காசா நிறுவனத்தைத் தொடர்பு கொண்டார். உடனே அவ்வியக்கத்தின் பொறுப்பாளர்கள் மலை மக்களைச் சுற்றிப் பார்த்து

தேவையை உணர்ந்தனர். அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் செய்துவந்த பணியில் நிறைவு கண்டனர். உடனே "May all have enough to eat" என்ற ஒரு திட்டத்தை மலையில் செயல்படுத்தினார்கள். ஆதிவாசி மாணவர்களின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டு பேராயர் ஞானதாசன் ஆதிவாசி சிறுவர் இல்லம் (Bishop Gnanadhason Tribal Children Home) ஒன்றினை 1985-ல் கட்டிக் கொடுத்தார்கள். அதில் 100-க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கிப் படித்து பயனடைகிறார்கள். "அன்றன்றுள்ள அப்பத்தை எங்களுக்குத் தாரும்" என்று ஜெபிக்கக் கற்றுத்தந்த கர்த்தர் இந்நிறுவனம் மூலமாய், பணித்தளத்தின் அனுதின தேவைகளைச் சந்தித்தார். கர்த்தரை நம்பியவர்கள் கைவிடப்பட மாட்டார்கள் என்பதற்கு இதுவே சாட்சியாகும்.

3. உலக தரிசன இந்திய இயக்கம் (World Vision of India)

மலைநாட்டு நற்செய்திப்பணி பல்வேறு நிலைகளில் வளர்ந்து வந்தது. அதற்குத் தேவையான நிதி வசதியினைச் செய்யப் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவால் இயலவில்லை. அத்தருணத்தில் மிஷனெறி எலியாஸ் அவர்கள் இவ்வியக்கத்தோடு தொடர்பு கொண்டார். இந்நிறுவனமும் உதவிக்கரம் நீட்டியது. முதற்கண் குருகிலாம்பூர் பணித்தளத்தில் பள்ளிக் கட்டடம் ஒன்று கட்ட ரூ. 4,80,000 நிதியுதவி அளித்ததோடு அங்கு கற்று வந்த மாணவர்களுக்குப் பகல்நேர உணவு வழங்கும் பொறுப்பையும் ஏற்றெடுத்தது. பின்னர் கிணறுகள் தோண்டி, அந்நீரை மேல்நிலைத் தொட்டிகளில் சேகரித்துப் பாதுகாப்பான குடிநீர் வழங்கும் திட்டத்தையும் செயல்படுத்தியது. சிறுவர் பராமரிப்புத் திட்டமும் (Child Care Project) அவர்களால் நடத்தப்பட்டது. பிற்காலம் இத்திட்டமானது சேராப்பட்டு ஆதிவாசிகள் முன்னேற்றத் திட்டம் (Serapet Tribal Development) என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது. இதனைத் தலைமை மிஷனெறி நேரடியாகக் கவனித்து வருகிறார்.

ஆதிவாசிகளின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு 55 கிராமங்களில் மக்கள் நலத்திட்டங்களை இந்நிறுவனம் செயல்படுத்தியது. மேலும் 28 கிராமங்களில் கிராமக் குழுக்கள் அமைக்கப்பட்டன. 39 சுய உதவித் திட்டக் குழுக்களும், 24 பெண்கள் நலக் குழுக்களும் அமைக்கப் பட்டன. இவைகளில் அங்கம் வகிப்போர், தங்கள் வாழ்க்கைக்கான திட்டங்களை வகுத்து, செயல்படுத்தி முன்னேறுகிறார்கள். அறிவை வளர்த்து முன்னேற சிறுவர்கள் மற்றும் வாலிபர்களுக்கான சங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவைதவிர அப்பகுதி வளர்ச்சிக்கென்று சில பணிகள நலத்திட்டங்களும் (Area Development Project) உருவாக்கப்

பட்டன. இத்திட்டங்கள் வழி, ஆதிவாசிகள் தங்கள் சமூக உறவை வலுப்படுத்திக் கொள்வதோடுப் பொருளாதாரத்தைப் பெருக்க முயற்சி மேற்கொள்கிறார்கள். அவற்றோடு பொது அறிவில் வளர்ந்து அரசியலிலும் கவனம் செலுத்துகின்றனர்.

மேலும் இந்நிறுவனம் பல்வேறு முறைகளில் தொண்டுபுரிந்து வருகிறது. மலைகளில் வாழும் பதினைந்து நபர்களுக்குத் தட்டெழுத்து இயந்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இரண்டு இடங்களில் பால் பண்ணைகள் நிறுவப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் மூலம் பல குடும்பங்கள் வருவாய் ஈட்டி வருகின்றன. கவனிப்பாரற்றுக் கிடந்த மலைவாசிகள் மத்தியில், இந்நிறுவனம் நிறைவேற்றிய நற்செயல்களால் பரலோகத்தைக் களிகூரச் செய்யும் செயல்கள் பல பணிக்களங்களில் நடைபெறுகின்றன.

இவ்விதம் அறிவு பெற்ற ஆதிவாசி மக்கள், தங்கள் உரிமைகளை அரசிடம் போராடிப் பெற்றுக் கொள்கிறார்கள். தங்களை ஏமாற்றும் அரசு அதிகாரிகளின் தவறுகளைக் கண்டிக்கிறார்கள். சுயமாக வாழ்வுத் திட்டங்களை அமைத்து முன்னேறுகிறார்கள். பெண்கள் தாங்கள் அடிமையல்ல என்பதை உணர்ந்து, தலைநிமிர்ந்து நடக்கிறார்கள். ஆடு, மாடு, கோழிகளை இல்லந்தோறும் வளர்க்கிறார்கள். முற்காலம் போல் அல்லாமல் பால், முட்டை போன்றவற்றை உணவாகப் பயன்படுத்துகின்றனர். கூட்டுறவுச் சங்கங்களின் சேவையினால் பலவிதங்களில் பாலைப் பக்குவப்படுத்தி, பாதுகாத்து விற்கக் கற்றுக் கொண்டுள்ளனர். இத்தகைய வளர்ச்சி நிலைகள் சமூகத்தில் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு நற்பெயரை ஈட்டித் தந்தன.

4. கிறிஸ்தவ பக்தி முயற்சி சங்கம் (Christian Endeavour)

குமரிப் பேராய போதகர் அருள்திரு. அறிவர். எ. மாசில்லாமணி அவர்கள் 01-01-1982-ல் கிறிஸ்தவ பக்தி முயற்சி சங்கத்தின் தென் பிராந்திய பயணச் செயலராகப் பொறுப்பேற்றார். அவரிடம் அருள்திரு எலியாஸ் அவர்கள் மலையில் நடைபெறவுள்ள பணிகளின் தேவையை எடுத்துக் கூறினார். அதன்பேரில் அச்சங்கத்தின் தலைவர் திரு. டெல்விஸ் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பைப் போதகர் மாசில்லாமணி அவர்கள் அருள்திரு. டி. எலியாஸ் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தார். 1984-ஆம் ஆண்டு திரு. டெல்விஸ் அவர்களைச் சென்னையில் சந்தித்து மலைகளில் நடைபெற்ற பணிகுறித்தும், இனிமேலுள்ள தேவைகளைக் குறித்தும் எலியாஸ் எடுத்துக் கூறினார். இதன் விளைவாக கிறிஸ்தவ பக்தி முயற்சி சங்கத்தின் அலுவலர் திரு. பி. சேது அவர்கள் மலைக்குச் சென்று பணிக்களங்களைப் பார்வையிட்டார்கள். அவருடைய சிறப்பான

அறிக்கையின் பேரில் 1984 ஜூன் முதல் மலையில் கல்வி பயிலும் 40 மலை மாணவர்களுக்கு உதவி செய்ய இச்சங்கம் முன்வந்தது. "இந்தியாவில் செயல்படுத்தப்படும் ஜெர்மன் கிறிஸ்தவ பக்திமுயற்சி சங்கச் செயல்திட்டம்" (G.C.E.P.S.I) என்ற பெயருடன் இத்திட்டம் நடத்தப்பட்டது. தொடர் தேவைகளை உணர்ந்த இச்சங்கம் படிப்படியாக 25 மாணவர்களுக்கு உதவி செய்து வருகிறது. பின்னாட்களில் இவ்வுதவி இந்தியன் ஹில்பே (INDIEN HILFE Sponsored programme of Germon Christian Endeavour) என்ற பெயரில் வழங்கப்பட்டு வருகிறது.

அ. பல்வேறு கட்டுமானப் பணிகள்

மலைகளில் நடைபெறும் பணிக்களங்களின் தலைமை இடமாகிய சேராப்பட்டில் சி.எஸ்.ஐ. ற்றி.எ. என்ற பெயரில் 18 ஏக்கர் அளவு கொண்ட பணிக்கள வளாகத்தைச் சுற்றி முள்வேலி போடவும், ஒரு பக்கச்சுவர் கட்டவும் ரூ. 1,41,000-த்தை இச்சங்கம் வழங்கியது. அதோடு சேராப்பட்டில் பெண்கள் விடுதி ஒன்று கட்ட ரூ. 12,00,000/-மும், நல்ல மேய்ப்பன் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்ட ரூ. 10,00,000/-மும் இவ்வியக்கம் அளித்து, சுவிசேஷ குழுவின் ஊழியத்தைத் தாங்கி வருகிறது. இவைகளால் இறைப்பணி மக்கள் மத்தியில் தங்குதடையின்றி நடைபெற்று வருகிறது.

பூனாவில் செயல்பட்டு வந்த இந்தியன் ஹில்பே சங்கம், தனது தலைமையகத்தை 1989-ல் பெங்களூருக்கு மாற்றி அங்கு செயல்படத் தொடங்கியது. அதன் தலைவர் அறிவர். ஜெ.டி. ஐசக்தாஸ் அவர்கள் 1991-ல் மலைப் பகுதிக்குச் சென்று ஆங்கு நடைபெற்று வருகிற ஊழியங்களைப் பார்வையிட்டார். அவர்களுடன் ஜெர்மானியத் திட்ட இயக்குநா அருள்திரு. றூடால்ப் உடன் வந்தார். அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் மலைமக்களின் தேவைகளைப் பார்வையிடச் சென்ற இம்மக்களிடம் தெளிவாக எடுத்து விளக்கினார்கள். பின்னர் அக்குழுவினர் ரூபாய் 3 இலட்சம் விலைகொண்ட டெம்போ ஒன்றினை ஊழியத்திற்காகக் கொடுத்தார்கள். இந்த டெம்போ பழுது நிலையில் இருந்ததால் 1999-ஆம் ஆண்டு புதிய டெம்போ வாங்குவதற்காக ரூ. 5,30,000-த்தைக் கொடுத்தனர். "ஒன்றுமில்லாதவர்களுக்குப் பங்குகளை அனுப்புங்கள்" (நெகே 8:9) என்ற அன்புக் கட்டளையைப் பரிவுடன் ஏற்றுக்கொண்ட ஜெர்மன் பக்தி முயற்சி சங்கம் பேராய சுவிசேஷ ஜெபக்குழு ஊழியம் செய்துவரும் பகுதிகளில், ஆதிவாசிகள் நலனுக்குத் தங்கள் பங்கைக் காணிக்கையாக அனுப்பும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது இம்முயற்சி பாராட்டுக்குரியதாகும்.

யோக்பெல்லோ அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் தரிசனத்துடனும் உறுதியான விசுவாசத்துடனும் சோர்ந்து போகாமல் செயல்பட்டு வந்ததால், கடவுள் பல வாசல்களை ஊழியத்திற்காகத் திறந்து கொடுத்தார். இவ்வனுபவங்களை வாழ்க்கையின் அனுபவங்களாக ஒவ்வொரு மனிதனும் கொள்ளுதல் வேண்டும். அருள்திரு. டி. எலியாஸ் சாதித்த சாதனைகளில் இறைவனுக்குக் கீழ்ப்படிந்து மலைப்பணிக்குச் சென்றது ஓர் அபார சாதனையாகும்.

5. கிறிஸ்தவ அருட்பணி இயக்கம் (Christian Mission Service)

ஒரு மனிதன் தன்னுடைய வாழ்வில் என் சித்தம், என் விருப்பம் என்பதை விடுத்து உம் சித்தம் செய்ய ஒப்புவிக்கின்றேன் என்று தீர்மானிப்பதுதான் கிறிஸ்தவக் கீழ்ப்படிதலாகும். பேராய சுவிசேஷ ஜெபக்குழுவினால் நடைபெற்று வருகிற திருப்பணியில், மலையில் வாழும் மக்கள் முழு நம்பிக்கையினையும் வைத்திருந்தனர். கல்விக்கூடங்களில் பலதரப்பட்ட மாணவர்கள் பயின்று வந்தனர்.

மலைகளிலுள்ள சிறுவர்களின் நிலைகளை நோக்கும்போது, மனிதநேயம் கொண்ட மக்கள் ஒவ்வொருவருக்கும் ஆத்தும பாரம் ஏற்படுவது இயற்கையே. பெற்றோரை இழந்த பிள்ளைகள், நோய்வாய்ப்பட்ட பெற்றோரின் பிள்ளைகள், கைவிடப்பட்டோர், பலவித நோய்களால் தாக்குண்டோர், ஆதரவற்றோர் எனப் பல திறத்தினர் அங்கு காணப்படுகின்றனர். இவர்களைப் பாதுகாக்க, ஆதரிக்க, வாழ்வு கொடுக்க சி.எம்.எஸ். இல்லம் ஒன்று அமைவது நல்லது என்ற கருத்து யோக்பெல்லோ அருள்திரு. டி. எலியாஸ் அவர்களின் மனதில் பட்டது. அதன்படி எலியாஸ் அவர்கள் சி.எம்.எஸ்.-சின் தலைமை நிர்வாகி உயர்திரு. கவுஸ்கி அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். அக்கடிதத்தில் தேசத்தின் தேவை, சேராப்பட்டின் தேவை, எதிர்பார்க்கும் நிறுவனத்தின் சேவை ஆகியவற்றைக் குறிப்பிட்டிருந்தார்கள். தேவன் தலைவர்களின் உள்ளங்களில் கிரியை செய்தார். அற்புதங்கள் நடந்தன.

1983 ஏப்ரல்மாதம் அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் குன்னூர் சென்று சி.எம்.எஸ்.-சின் தலைமை நிர்வாகியை நேரில் சந்தித்து இத்தேவைகள் குறித்துப் பேசினார்கள். அப்போது ஜெர்மன் தேசத்திலிருந்து வந்த ஒரு கடிதத்தை அவர் படித்துக் கொண்டிருந்தார். அக்கடிதத்தை எழுதிய ஒரு தாயார், இந்தியாவில் ஒரு சிறுவர் இல்லம் நிறுவுவதற்குத் தேவையான உதவியைச் செய்வதாக வாக்குப் பண்ணியிருந்தார்கள். எலியாஸின் தேவையை அறிந்த கவுஸ்கி அவர்கள் மாபெரும் சந்தோஷம் கொண்டார்கள். கடவுளின் பிள்ளைகள் இருவர்

ஒரே எண்ணத்தில் எதிர்பாராமல் சந்தித்துக் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டது இறைச் சித்தமாக இருந்தது.

5. சேராப்பட்டில் சிறுவர் இல்லம்

சேராப்பட்டு மலையில் ஆதரவற்ற குழந்தைகளுக்கு ஓர் இல்லம் அமைவது இறைச்சித்தம் என்பதை சி.எம்.எஸ்.சின் தலைமை நிர்வாகி உணர்ந்தார். அக்கோரிக்கையை ஏற்றுக் கொண்டு சேராப்பட்டில் முதற்கண் 4 ஏக்கர் பூமியை வாங்கினார். நாளடைவில் மேலும் 6 ஏக்கர் பூமி வாங்கப்பட்டது. அதில் அழகிய சிறுவர் இல்லங்கள் பல எழுப்பப்பட்டன. 1983 டிசம்பர் முதல், மலைகளின் பல்வேறு பகுதிகளில் வாழ்கின்ற ஆதரவற்ற பிள்ளைகள் பலர் சேர்க்கப்பட்டனர். இன்று சுமார் 200-க்கு அதிகமான பிள்ளைகள் அவ் இல்லங்களில் தங்கிப் படித்துப் பயன் பெறுகிறார்கள். அச்சிறுவர்களுக்கு நல்ல பாதுகாப்பு, உடை, உணவு, திருமறைப்பயிற்சி போன்றன கொடுக்கப்படுகின்றன. அவ்வளாகத்தின் எழில்மிகு தோற்றம் பார்ப்பவரின் கண்களையும், அங்கு எழும்பும் இசை ஒலிகள் கேட்பவர்களின் காதுகளையும் மகிழ்விக்கின்றன. இவைகளினூடே இம்மழலைகளின் இனிய அமுதான பாடல்களும் பேச்சுக்களும் அவ்வளாகத்திற்கு மேலும் பொலிவை ஊட்டுகின்றன. வாழ்விழந்தோம் என கருதிய பிஞ்சுகளில் பலர் இன்று சமூக மனிதர்களாக, தலைவர்களாக, வளம்பெற்று வலம் வருகிறார்கள் என்றால் இந்நிறுவனத்தின் சேவையைப் பாராட்ட வேண்டும். இக்குழந்தைகளின் அர்த்தமுள்ள வாழ்வைக் காணும் பலர், கிறிஸ்தவ வாழ்வு வாழ விருப்பம் கொள்கிறார்கள். இன்றைக்குச் சேராப்பட்டுமலை, ஒரு பட்டணம் போல் காட்சியளிக்கிறது. நாகரிகத்தில் மக்கள் முன்னேறி வருகிறார்கள். சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியம் சி.எம்.எஸ்.சின் ஆதரவால் அப்பகுதியில் பெலப்பட்டு வளர்ந்து வருகிறது.

6. இந்திய கிறிஸ்தவ ஐக்கிய மிஷனெறி சங்கம் (United Christian Missionary Society of India (U.C.M.S.I.))

இந்திய கிறிஸ்தவ ஐக்கிய மிஷனெறி சங்கத்தின் நோக்கம், இந்திய நாடு முழுமையும் சென்று கிறிஸ்துவை அறிவிப்பதாகும். அதற்குரிய மிஷனெறிகளைக் கண்டுபிடித்தும், அவர்கள் பணியாற்றும் பணிக்களங்களைத் தெரிந்தெடுத்தும் செயலாற்றி வருகின்றனர். சி.எம்.எஸ். நிறுவனத்தின் தலைமை நிர்வாகி உயர்திரு. கவுஸ்கி அவர்களும் குமரிப் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்களும் திட்டமிட்டு இந்தியக் கிறிஸ்தவ ஐக்கிய மிஷனெறி சங்கம் என்ற அமைப்பினை 30-08-1990-ஆம் நாள் தொடங்கினார்கள். அவ்வியக்கத்திற்கு அருள்திரு. எஸ். ஜஸ்டின் அவர்கள் இயக்குநராக நியமிக்கப்பட்டார்கள். அவ்வமைப்பின் பணி மிஷனெறிகளை

தெரிவு செய்வதும் பணிக்களங்களைத் தெரிவு செய்வதுமாகும். பேராய சுவிசேஷ ஜெபக்குழு இச்சங்கத்தின் மிஷனெறிகள் சிலரைத் தாங்கியும் சபைகளில் அறிமுகம் செய்தும் ஊழியத்தை விரிவுபடுத்தி வருகிறது. இந்தியாவின் பல மாநிலங்களில் இச்சங்கம் மிஷனெறிகளை அனுப்பியுள்ளது. பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் எல்லை இன்று ஒரிஸா போன்ற மாநிலங்களில் விரிவடைய இவ்வமைப்பின் தொடர்பு மிகத் தேவையாக அமைந்தது.

யு.சி.எம்.எஸ்.ஐ. என்னும் இயக்கம் ஒரு தனி நிறுவன (Trust) அமைப்பாகும். கோவை மாவட்டம் ஒண்டிப்புதூரிலுள்ள கிரேஸ் கார்டன் என்னும் இடத்தைத் தலைமை அலுவலகமாகக் கொண்டு அது செயல்பட்டு வருகிறது.

7. இந்திய சிறுவர் ஊழிய ஐக்கியம் (Child Evangelism Fellowship of India)

இந்தியாவில் வாழுகின்ற சிறுவர்கள் மத்தியில் இவ்வியக்க ஊழியம் சிறப்பாக நடைபெறுகிறது. சிறுவர்களை இயேசுவின் வழியில் நடத்துவதும், கல்வி கற்பிப்பதும், நற்போதனைகளைக் கொடுப்பதும் இவ்வியக்கத்தின் பணியாகும். நாம் வாழும் இந்தியாவில் 6 வயது நிரம்பிய சுமார் ஒருகோடி சிறுவர்கள் அதிகாலையில் எழுந்ததும் வேலைக்குச் செல்கிறார்கள். அரசு, சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது தவறு என்று அறிவித்த பின்னரும், பல நிறுவனங்கள் கொத்தடிமைகளாக சிறுவர்களை நடத்துகின்றன. இத்தகைய கொடிய நிலைக்கு நமது இளந்தலைமுறையினர் ஆளாகக் கூடாது என்னும் நோக்கில் இந்திய சிறுவர் ஊழிய ஐக்கியம் செயல்பட்டு வருகிறது.

பேராய சுவிசேஷ ஜெபக்குழு கல்ராயன் மலைப் பகுதியில் நடத்திவரும் ஊழியத்தில், தாங்களும் இணைந்து கொள்ள இவ் ஐக்கியம் விருப்பம் தெரிவித்தது. அதன்பேரில் திரு. பால்சிங் என்ற சிறுவர் ஊழியர் சேராப்பட்டில் நியமிக்கப்பட்டார். இவரது ஊழியம் சிறுவர்களுக்குப் பயனுள்ளதாக அமைந்தது. கிராமங்களில் வாழும் ஆதிவாசி சிறுவர்களுக்குப் படங்கள், பாடல்கள், செய்கைப் பாடல்கள், குறு நாடகங்கள் மூலம் பால்சிங் ஆற்றிய பணி சிறுவர்கள் மத்தியில் மிகவும் கவர்ச்சியாயிற்று. இதனால் பலர் இயேசுவை நேசிக்கக் கற்றுக் கொண்டார்கள். திரு. பால்சிங் அவர்கள் தற்போது பேராய சுவிசேஷ ஜெபக்குழுவில் மிஷனெறியாகப் பணியாற்றுகிறார்.

8. மெடிவிஷன் (Medi Vision)

குமரி மாவட்டத்தின் வரலாற்றில் ஒரு மையப்புள்ளி என்று கூற வேண்டுமானால் அது நெய்யூர் மருத்துவமிஷன் மூலமாக மேல்நாட்டு மருத்துவர்கள் மற்றும் இறைத் தொண்டர்கள் செய்த சேவையாகும். இதனால் சமூகம் மலர்ச்சி பெற்றது. உயரினத்தவர், கீழினத்தவர் என்ற பாகுபாடு குறைந்தது. இவைகள் இம்மாவட்டத்திலுள்ள மருத்துவர்களின் உள்ளங்களில் மறையாத, அழியாத பேருண்மையாகப் பதிந்திருந்தன. இறைப்பணிக்கு முன்னோடி சமூகப் பணியே ஆகும். இதனைக் கருத்தில் கொண்டு நாகர்கோவில் பகுதியைச் சேர்ந்த சில மருத்துவர்கள் இணைந்து மெடிவிஷன் என்றதோர் அமைப்பை 1996-ல் தொடங்கினர். அனைத்து சபை அமைப்புகளைச் சார்ந்தோரும் இதில் அங்கமாயினர். அருட்பணித்தளங்களில் மருத்துவர்களைக் கொடுப்பதும், இலவச மருத்துவ முகாம்கள் நடத்துவதும், இலவச மருந்துகள் செய்வதும், மூடப்பட்ட மருத்துவமனைகளைத் தேவை கருதி திறப்பதும் இதன் நோக்கமாகும்.

அ. இலவச மருத்துவ முகாம்

பின்தங்கிய ஆதிவாசி மக்கள் மத்தியில் நோயின் தன்மைகளை எடுத்துரைத்து, அவர்களிடம் காணப்படும் அறியாமையை விலக்கி, மருத்துவம் பெற மிஷனெறிகள் வழிகூறி வருகின்றனர். இதனால் காய்ச்சல் நோய் வந்தால் உடம்பில் சூடு போட்டு, வெயிலில் படுத்துக் கொள்ளும் மக்கள் இன்று மருத்துவமனைகளையும், மருத்துவரையும் நாடிச் செல்கின்றனர். இவைகளை மனதிற்கொண்டு மலைகளில் பணிபுரியும் மருத்துவர்களுக்கும் தாதியர்களுக்கும் சிறப்புப் பயிற்சிகளை இவ்வமைப்பினர் கொடுக்கின்றனர். மேலும் அருட்பணியாளர்களுக்கு முதலுதவி செய்யும் பயிற்சியினையும் இலவசமாக அளிக்கின்றனர்.

மெடிவிஷன் சார்பில் 2002 ஜூலை 27 முதல் 30-ஆம் நாள் வரை கல்ராயன் மலையில் இலவச மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்பட்டது. ஜெபக்குழுவின் தலைவர்கள் மற்றும் களப் பணியாற்றும் மிஷனெறிகள் பலர் இதில் கலந்துகொண்டனர். இம்மருத்துவச் சேவையைக் கேள்விப்பட்ட ஆதிவாசிகள் நோய்களுக்குச் சிகிச்சை பெற திரளாகக் கூடினர். அனைவரையும் இக்குழு பரிசோதித்து மருந்துகளை இலவசமாகக் கொடுத்தது. இதன் பயனாக மிஷனெறிகள் மற்றும் ஆதிவாசிகள் மத்தியில் புதிய உறவு பரிணமித்தது. மீண்டும் இப்படிப்பட்ட மருத்துவச் சேவை முகாம்கள் எப்போது நடைபெறும் என ஆதிவாசிகள் நமது மிஷனெறிகளைக் கேட்கும் வண்ணம் எழுச்சி

பெற்றுள்ளனர். மெடிவிஷனின் இத்தகைய தன்னலமற்ற தியாகச் சேவை பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் பணிக்கு மிகவும் உந்துதலாக உள்ளது. இதனால் மக்கள் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் விடுதலைப் பெறுகின்றனர்.

மருத்துவர் ஜெய்ரேஸ் கிங்ஸ்லி அவர்கள் இவ்வமைப்பின் தலைவராகவும், திரு. இ. புஷ்பராஜ் அவர்கள் முன்னேற்றப் பணியாளராகவும் செயல்படுகிறார்கள். பொதுச் செயலராக மருத்துவர் சஷியா ஜெயகரன் அவர்கள் திகழ்கிறார்கள். இவ்வமைப்பின் தலைமைச் செயலகம் நாகர்கோவில் விளையாட்டு மைதான அமைந்துள்ள கட்டிடத்தின் அறை எண் ஒன்றில் இயங்கி வருகிறது. தங்களுடைய பொருளாலும் திறமையாலும் மக்கள் பணிசெய்யும் நாகர்கோவில் மெடிவிஷன் மருத்துவர்களின் சேவை, காலம் என்னும் ஏட்டில் மங்காப் புகழ் பெற்றுவிட்டது.

பத்து நீதிமான்கள் கண்டால் அழிவில்லை, சமாதானத்திற்குப் பாத்திரன் ஒருவன் இருந்தால் அழிவில்லை. கிராமங்கள், பட்டணங்கள், தொழிற்சாலைகள், கல்விநிலையங்கள், மருத்துவமனைகள் வேலை செய்யும் இடங்கள் என்று ஒவ்வொரு இடத்திலும், ஊரிலும் ஒருசில விசுவாசிகள் எழும்பட்டும். இத்தகைய கரிசனைகள் பெற்றவர்களே காலம் என்னும் ஏட்டில் அழியாப் புகழுடன் வாழுபவர்கள். பேராய சுவிசேஷ ஜெபக்குழு அத்தகையோர்களைக் கண்டுபிடித்து இறைப்பணி செய்ய ஏவியது மகத்தான செயலாகும்.

"நீ வாழும் இப்பூமி நாசம்
ஆகும் காலம் வருதே
உலகின் கடைசி சந்ததி
நீயாக இருக்கலாமே
எழும்பு, எழும்பு, தெபோராள்
பாராக்கே, விழித்து விடு
தேவைக்கு ஏற்ற பெலனை
இன்றைக்கே பெற்றெழும்பு"

10

சமூகப் பணிகள்

"அவர்களில் ஒருவனாகிய அகபு என்பவன் எழுந்து, உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று ஆவியானவராலே அறிவித்தான். அது அப்படியே கிலவுதியு ராயனுடைய நாட்களிலே உண்டாயிற்று.

அப்பொழுது சீஷரில் அவரவர் தங்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாக யூதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாகப் பணஞ்சேகரித்து அனுப்ப வேண்டுமென்று தீர்மானம் பண்ணினார்கள்." (அப் 11:28,29)

மிஷனெறிப் பணி என்பது தொடர் ஓட்டமான பணியாகும். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை இந்தியாவில் வேற்று நாட்டவர்கள் பலர் ஓடி ஓடிக் களைத்துப் போயினர். கேரள மண்ணில் தோமா அப்போஸ்தலனால் ஏற்றப்பட்ட இத்தீபம் இன்னும் இந்தியாவின் அனைத்துப் பகுதியிலும் பிரகாசிக்கவில்லை. தோமாவின் இரத்தம் சிந்தப்பட்ட தமிழகமும் முழுமையும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தால் நனையவில்லை. டென்மார்க், ஜெர்மன், இங்கிலாந்து எனப் பல நாடுகளிலிருந்து வந்து துணிச்சலோடு பலர் நம்மண்ணில் கால் பதித்தார்கள். எத்தகைய தியாகத்திற்கும் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். அக்கினி வெயில் அடிக்கிற கோடைக்காலத்தினையும் பனிமழை பொழிகிற குளிர்காலத்தினையும் ஏற்றுக் கொண்டு இம்மண்ணின் மண்ணில் தங்களைப் பதித்துக் கொண்டார்கள். விசுவாச வீரர்களாகத் திகழ்ந்தவர்கள் எந்தக் கொடுமையையும் அஞ்சாத நெஞ்சத்தால் எதிர்த்தவர்கள் புதிய காலச்சாரத்தை இம்மண்ணில் விதைத்தார்கள். இம்மண்ணில் நிலைத்திருந்த பல்வேறு வகையான மூடப்பழக்க வழக்கங்களுக்குச் சாவு மணி அடித்து, விடிவெள்ளி ஆனார்கள். இத்தகைய உயரிய பணி செய்த மேலை நாட்டவர்கள் பலர் இம்மண்ணில் புதைந்தார்கள். பலர் தங்கள் சொந்த நாடுகளுக்குத் திரும்பினார்கள். அதன் பின்னர் நாமே நமது ஊழியர்களை அனுப்பி சுவிசேஷச் சுடரேந்தி இந்தியாவை வலம்வரத் தொடங்கினோம்.

அவர்கள் குன்றாத துணிவோடும் குறையாத ஒப்புக் கொடுத்தலோடும் ஒ இன்றுள்ள தலைமுறையினருக்கு சுவிசேஷத்தைக் கொடுத்தாக வேண்டு என்ற ஆதங்கத்தில் செயல்படுகின்றனர். பேராய சுவிசேஷ ஜெபக்கு தமிழ்நாட்டிலுள்ள சேர்வராயன், கல்வராயன், ஜவ்வாது, கொல் மலைப்பகுதிகளில் தன் பணியை ஆர்வத்தோடு செய்து வருகிறது.

1. ஆலயங்கள் எழுப்புதல்

"கோவிலில்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்", "ஆலய தொழுவது சாலவும் நன்று" என்பது ஆன்றோர் மொழி. ஊருக்கு ஒ ஆலயம் என்பது மலைநாட்டு ஊழியத்தின் இலக்காகும். இதனை நிறைவேற்றுவது கடினமாயினும், இறையுதவியுடன் செய்ய முடியு என்பது இயக்கத்தின் தணியா வேட்கையாகும். "கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள்" என்ற தாவீதின் வார்த்தையை ஒவ்வொரு விசுவாசியும் பிறரை அழைப்பதன் மூலமாக நிறைவேற்ற வேண்டும். அதற்கு ஆலயம் இன்றியமையாத தேவையாகும். 1977 அக்டோபர் மாதம் அருள்திரு. எம். இராஜையன் அவர்கள் அருள்திரு டி. எலியாஸ் அவர்களைச் சந்திக்கக் கல்வராயன் மலைக்குச் செல்லும் போது வழிதெரியாமல் தடுமாறினார். அப்போது மலையிலுள்ள ஒரு நபரிடம் உதவி கேட்டார். பின்னர் இருவருமாக நடந்தனர். வழியில் இராஜையன் அந்நபரிடம் இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கூறினார் அப்பொழுது அந்த ஆதிவாசி நபர் ஆச்சரியப்பட்டு நீங்களும் இதற்கு முன் வந்தவர்களைச் சேர்ந்தவர்களா? என்று கேட்டார். அவரிடம் வினவியபோது, இரு ஆண்டுகளுக்கு முன், சிலர் அப்பகுதிக்குச் சென்று மூன்று நாட்கள் சுவிசேஷக் கூட்டம் நடத்தியுள்ளதும், இறுதிநாள் அக்குழுவினர் அப்பகுதியில் வாழும் மக்களில் நாற்பது பேரை அப்பகுதியில் ஓடும் ஆற்றில் அழைத்துச் சென்றுத் திருமுழுக்குக் கொடுத்துள்ளதும், பின்னர் சீக்கிரத்தில் ஆலயம் கட்டிக் கொடுப்பதாகவும். ஊழியரை நியமிப்பதாகவும் கூறிச் சென்றுள்ளதும் தெரிய வந்தது. அதற்கு பின் இதுவரையிலும் அவர்களில் எவரும் அங்குச் செல்லவில்லை என்பது அம்மனிதனின் பேச்சு மூலம் தெரிய வந்தது.

அந்த நாற்பது நபர்களும் தற்போது எப்படி இருக்கிறார்கள் என்று போதகர் மறுபடியும் கேட்டார். அதற்கு அவரளித்த விடை போதகரைச் சிந்திக்கத் தூண்டியது. திருமணமானபின் புருஷன், தன் இளம் மனைவியைத் தள்ளி விட்டுப் பிரிந்து சென்றுவிட்டால், அந்த மனைவி எப்படி இருப்பாளோ! அப்படியே இருக்கிறோம் என்றார். அவர்கள் மத்தியில் ஆலயம் எழுப்பி, தங்கி ஊழியம் செய்வது எத்தனை

அவசியம் என்பதைப் போதகர் நேரடியாக உணர்வு பூர்வமாக உணர்ந்தார். பின்னர், பேராய சுவிசேஷ ஜெபக்குழு மூலம் பணித்தளங்கள் தோறும் ஆலயங்கள் அல்லது தொழுகைக் கூடங்கள் கட்ட அரும் பாடுபட்டார். இத்தகைய செய்திகளைக் குமரிமாவட்டச் சபைகளிலும் பல்வேறு கூட்டங்களிலும் பகிர்ந்து கொண்டபோது, சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் எனப் பலர் தங்கள் பொறுப்பை உணர்ந்து ஆலயங்கள் கட்டிக் கொடுக்க முன்வந்தனர். பேராய சுவிசேஷ ஜெபக்குழு 1977 முதல் களங்கள் தோறும் ஆலயங்கள் கட்டி, பணியினை அழுத்தப்படுத்தி வருகிறது. (ஆலயங்கள் குறித்த விவரங்கள் பணித்தளங்களும், ஊழியங்களும் என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன)

இன்று கூட்டம் கூட்டமாக மக்கள் ஆலயங்களில் சென்று இறைவனை வழிபடுகின்றனர். கிராமங்கள் தோறும் ஆலயமணியோசை கேட்கிறது. ஊருக்கான கலங்கரை விளக்காய் ஆலயம் திகழ்கின்றது. பரலோகத்தை மகிழ்விக்கும் துதியின் கீதங்கள் இறைத் தூபங்களாக எழும்பி தேவசன்னதியை நிரப்புகின்றன. ஜீவனுள்ள தேவனின் சாட்சிகள் பலர் எழும்புகின்றனர். கூடி ஆராதித்தலின் மேன்மையை மலைவாழ் மக்கள் உணர்ந்துள்ளனர். வாழ்வின் பிரச்சினைகளை ஊற்றும் இறைவனின் இல்லமாகத் திகழும் ஆலயம், வருங்கால இளந்தலைமுறையினரின் நம்பிக்கைச் சின்னமாக விளங்குகிறது. உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடு களையப்படுவதும் இங்குதான். நீங்களே தேவாலயம் என்ற பவுலின் மனப்பக்குவத்தை உருவாக்கும் பயிற்சிப் பட்டறையும் இதுவேயாகும்.

2. கல்விக் கூடங்கள் அமைத்தல்

"இருளை நீக்கி ஒளியினைக் காட்டுவாய்
இறப்பை நீக்கி அமிர்தத்தை ஊட்டுவாய்"

என்பது இரவீந்திரநாதர் கூறும் வரிகள். ஒரு சமுதாயத்தின் அழுக்கினை அறுப்பது கல்வி மட்டுமே. தீட்டு என்று ஒதுக்கப்பட்ட மக்களையும், சாதியின் பெயரைச் சொல்லி ஒடுக்கப்பட்ட மக்களையும் சமூகத்தின் உயர்நிலைக்குக் கொண்டு வந்தது கல்வியே ஆகும். இன்று நாம் வாழும் குமரி மாவட்டம் சீரும்சிறப்புமாக விளங்குவதற்குக் கல்வியை நமக்குத் தந்த மேல்நாட்டு இறைத்தொண்டர்களின் பணியே காரணமாகும். பேராய சுவிசேஷ ஜெபக்குழு ஆலயப் பணியோடு கல்விப் பணியிலும் தன் கவனத்தை வேகப்படுத்தியது.

கல்வராயன் மலைப்பகுதியில் ஊழியம் செய்து வந்த அருள்திரு. எலியாஸ் அவர்கள் ஆடு, மாடுகளை மேய்த்து வந்த சிறுவர்களை

இரவுப் பொழுதில் ஓரிடத்தில் கூடிவரச் செய்தார். அங்கு வைத்து இயேசுவைக் குறித்தக் கதைகள், சைகைப் பாடல்கள், வசனங்கள் போன்றவற்றைச் சொல்லி கொடுத்தார். கல்வி வாசனை அறியாத அச்சிறுவர்களுக்கு எழுதவும் படிக்கவும் கற்றுக் கொடுத்தார். இரவுப் பொழுதுகளில் நடைபெறும் இப்பாடசாலை 21-06-1977 முதல் ஒழுங்காகச் செயல்பட்டது. அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் போதகராகவும் ஆசிரியராகவும் பணியாற்றினார். இவ்விதம் கற்றுக்கொண்ட சிறுவர்களை கண்ணுற்ற கிராமத்து மக்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். இதனால் அவர்கள் "எங்கள் கிராமத்திற்கும் கற்றுக் கொடுக்க வா!" எனப் போதகர் எலியாசை அழைத்தனர். இவ்வழைப்பு ஒலி, பிற்காலத்தில் மிகப்பெரும் சமூகப் புரட்சிக்குரிய ஏவுகணையாக அமைந்தது.

அ. அரசின் ஓர் ஆசிரியர்ப் பள்ளிகள்

கல்ராயன் மலைப்பகுதியின் தேவையை உணர்ந்த அரசு, 1978 முதல் ஓர் ஆசிரியர் பள்ளிகள் பலவற்றை நிறுவியது. அவைகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையுள்ள பாடங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன. அப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு உணவும் உறைவிடமும் இலவசமாகக் கொடுக்கப்பட்டன. எனினும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாகவே இருந்தது. இப்பள்ளிகளும் சில இடங்களில் ஒழுங்காகச் செயல்படவில்லை.

இயேசு என்னும் ஒளியை மக்கள் மத்தியில் கொடுக்க வேண்டுமாயின் அவர்களுக்குக் கல்விக் கொடுப்பது அவசரத் தேவை என்பதைச் சுவிசேஷ ஜெபக்குழு உணர்ந்தது. அதற்கான முயற்சிகள் தொடங்கின.

ஆ. நல்ல மேய்ப்பன் ஆரம்பப் பாடசாலை

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவால் 1982 ஜூலை மாதம் கல்ராயன் மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள ஷீலாநகர் (குருகிலாம்பூர்) ஊன்னுமிடத்தில் ஆரம்பப்பள்ளி ஒன்று தொடங்கப்பட்டது. முதற்கண் தொடங்கிய ஒன்றாம் வகுப்பில் 43 பிள்ளைகள் படிக்கச் சேர்ந்தார்கள். பேராயர் கிறிஸ்துதாஸ் அவர்கள் நல்ல மேய்ப்பன் ஆரம்பப் பாடசாலை என்று அதற்குப் பெயர் சூட்டினார்கள். கல்வி கற்க வரும் மாணவர்களுக்கு பகல் உணவு இலவசமாகக் கொடுக்கப்பட்டது. அதற்கான செலவினை நல்லுள்ளம் கொண்ட நண்பர்களும் எபிகார் நிறுவனத்தினரும் ஏற்றுக் கொண்டனர். தரமான கல்வி அப்பாடசாலை மூலம் கொடுக்கப்பட்டது. எனவே சுற்றிலுமுள்ள கிராமத்தினர் பலரும் இப்பள்ளிக்குத் தங்கள் குழந்தைகளை அனுப்பினர். பின்னர் அப்பள்ளி 1987 ஜூன் முதல் நடுநிலைப்பள்ளியாக உயர்த்தப்பட்டது. தேவையைக் கருதி 18-06-2002 முதல் உயர்நிலைப் பள்ளி என்ற அந்தஸ்தினைப் பெற்றது.

3. சேராப்பட்டில் கல்விக்கூடம்

திருமதி அன்னபாய் எலியாஸ் அவர்கள் ஜவ்வாது மலையிலிருந்து இடமாற்றம் பெற்று 23-9-1979 இல் சேராப்பட்டிலுள்ள அரசு நலத்துறைப் பள்ளியில் ஆசிரியையாய்ச் சேர்ந்தார்கள். இவர்களுடைய கடுமையான உழைப்பும் பாசமும் மாணவர்கள் மத்தியில் நல்லெண்ணத்தை உருவாக்கிற்று. சுருங்கக்கூறின் கல்வியின் மீதுள்ள ஆர்வத்தைக் குழந்தைகளுக்கு ஊட்டியதில் இவ்வம்மையாருக்குத் தனிப்பங்கு உண்டு. இப்பள்ளியில் 5-ஆம் வகுப்பு வரை படித்துத் தேறிய பிள்ளைகள், தொடர்ந்து படிக்க முடியாமல் மீண்டும் மாடுகளை மேய்ப்பதற்குச் சென்றனர் சிலர் சாராயம் காய்ச்சும் தொழிலில் ஈடுபட்டனர். இதனைக் கண்ணுற்ற எலியாஸ் அவர்களின் உள்ளம் வேதனை அடைந்தது. இதனைப் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்குத் தெரிவித்தார்கள். பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் செயற்குழு, சேராப்பட்டில் ஒரு நடுநிலைப்பள்ளியைத் தொடங்குவதற்கு ஒப்புதல் அளித்தது. அதன் விளைவாக 1983 ஜூலை மாதம் அருள்திரு. டி. எலியாஸ் அவர்களால் சேராப்பட்டில் நடுநிலைப்பள்ளி ஒன்று தொடங்கப்பட்டது. 1986 இல் அப்பள்ளி உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தப்பட்டது. 17-6-2002 ஆம் நாள் மேல்நிலைப்பள்ளியானது. இன்று இப்பள்ளி அக்கல்வி வட்டாரத்தில் சிறப்புடைய பள்ளியாகத் திகழ்கிறது.

பொதுவாக இப்பள்ளியில் 6ஆம் வகுப்பில் வந்து சேரும் மாணவர்கள், ஆதி திராவிட நலத்துறை ஆரம்பப் பள்ளியில் படிப்பவர்களே ஆவர். அவர்களால் ஆறாம் வகுப்பு முதல் இப்பாடத்தைப் புரிந்து கொள்ள முடிவதில்லை. எனவே ஜெபக்குழுவின் ஆதரவினால் எலியாஸ் அவர்கள் 1989 ஆம் ஆண்டு ஆரம்பப்பள்ளி ஒன்றினையும் சேராப்பட்டில் தொடங்கினார். இத்தகைய கல்விப் புரட்சி நிலையங்கள் பல பேராய சுவிசேஷ ஜெபக்குழுவால் தொடங்கப்பட்டன. இளமை, கல்வி, விஞ்ஞானம், தாலந்துகள் யாவும் இயேசுவுக்கு அடிபணியும் போது, உலகம் புரட்சியைச் சந்திக்கும். அறியாமை என்னும் இருள் அகலும்.

4. அறியாமையிலிருந்து விடுதலை

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவால் தொடங்கப்பட்ட பள்ளிகளின் செயல்பாடுகளைக் கண்ணுற்ற மலைவாழ் மக்கள் தங்கள் கிராமங்களிலும் பள்ளிகள் தொடங்க அழைப்புக் கொடுத்தனர். இவ்வழைப்பும் மக்களின் ஆர்வமும் மிஷனெறிகளின் இறைப்பணிக்குக் கிடைத்த சான்றுகளாயின. வெகு விரைவில் புத்திராம்பட்டு, மோட்டாம்பட்டி ஆகிய பணித்

தளங்களில் மூன்று ஆரம்பப் பள்ளிகளும் மோத்தக்கல், வஞ்சிக்குழ ஆகிய பணிக்களங்களில் இரண்டு பாலர் பள்ளிகளும் தொடங்கப்பட்டன

இப்பள்ளிகளில் படிக்கும் சில மாணவர்கள் ஆசிரியர் ஏதேனும் கேள்வி கேட்டு, அடித்தால் உடனடியாக வெளியே ஓடிப் புதருக்குள் ஒளிந்து விடுவர். இவர்களைக் கண்டுபிடிப்பது நமது ஆசிரியர்களுக்கு மிகவும் கடினமாக இருந்தது. எனினும் சற்றேனும் சளைக்காமல் தன் பணியைச் செய்தனர்.

இன்று மலைவாழ் மக்கள் பண்பட்டவர்களாய் மாறி வருகிறார்கள் நம்பிக்கையூட்டும் நற்செய்தி அவர்களின் அடித்தள வாழ்க்கையை அசைத்து விட்டது. கஞ்சா குடித்தல், மது அருந்துதல், மூடப் பழக்க வழக்கங்கள் போன்ற பல்வேறு தீயநிலைகளிலிருந்து விடுபட்டு விட்டனர். இவைகளுக்குரிய காரணியாகிய இறைவனை என்றும் ஏத்திப் புகழ்கின்றனர்.

உ. மேற்கல்வியும் வேலைலாய்ப்புகளும்

மேல்நிலைக்கல்வி வரை மேற்கூறிய பாடசாலைகளில் கல்வி கற்றப் பிள்ளைகள், தொடர்ந்து கல்விபெற வசதியின்றியும் வேலை வாய்ப்பின்றியும் அலையக்கூடாது என்ற நோக்கில் பேராய சுவிசேஷ ஜெபக்குழு சிறப்பான திட்டங்களைச் செயலாற்றியது. மேல்கல்வி பெற ஆர்வமுடன் காணப்பட்ட பிள்ளைகளைச் சென்னை, திருச்சி, நாகர்கோவில் ஆகிய இடங்களுக்கு அனுப்பி, தகுதிக்கேற்ற வேலைவாய்ப்பு கல்விகளைக் கற்கத் தூண்டினர். இவ்விதம் கற்றவர்களில் பலர் பொறியியல் துறை, மருத்துவத்துறை கல்வித்துறை, தொழில் கூடத்துறை ஆகிய துறைகளில் பணிபுரிகின்றனர். இதனால் பல குடும்பங்கள் பொருளாதார வளர்ச்சிப் பெற்றுள்ளன. ஒரு சிலர் இறைப்பணியின் அழைப்பைப் பெற்று மிஷனெறிகளாய்த் திகழ்கின்றனர் சிலர் மேல்நாடுகளுக்கும் சென்று பணிபுரிகின்றனர். இன்று அம்மக்கள் நாகரிகம் பெற்றவர்களாய் திகழ்வதோடு சமவெளிகளில் வாழும் மக்களைப் போல் சிறப்பாகவும் வாழ்கின்றனர். விடுதலை என்ற மூச்சை சுவாசிக்கின்றனர். அவர்களின் தலைமையில் சபைகள் பலவும் வளர்ந்து பெருகி கனி கொடுக்கத் தொடங்கிவிட்டன. இதனால் பரலோகவாசிகள் பலர் எழும்பி வருகின்றார்கள். காலம் எனும் ஏட்டில் தங்கள் சுவடுகளைப் பதித்த இவர்கள் பாக்கியவான்களாவர்.

ஊ. ஆசிரியர்களும் அதிகாரிகளும்

ஆசிரியர் என்றால் குற்றம் களைபவர் அல்லது குற்றத்தை நீக்குபவர் என்பது' பொருளாகும். அவர்கள் மக்களது கலாச்சாரம், மொழி

சூழ்நிலைகளோடு ஒன்றி வாழ்ந்தால் பணி மேலும் சிறப்படையும். பேராய சுவிசேஷ ஜெபக்குழுவினர் நடத்தும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள். சுவிசேஷப் பணியிலும் தங்களை அதிகமாக ஈடுபடுத்தியுள்ளனர். இப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்கு காலை, மாலைப் பொழுதுகளில் விவிலியம் கற்றுக் கொடுப்பதுடன் ஜெபத்தையும் ஒழுங்காக நடத்துகின்றனர். ஆசிரியர்கள் தங்கள் பணியினை மிகவும் நேர்த்தியாகச் செய்வதுடன் சாட்சியாகவும் வாழ்கின்றனர். விடுமுறை நாட்களிலும் ஓய்வு நேரங்களிலும், அப்பகுதியிலுள்ள கிராமங்களுக்குச் சென்று இறைப்பணியும் செய்கின்றனர். புதிய சமுகத்தை உருவாக்கத் துடிக்கின்ற இவ்வாசிரியர்களின் தொண்டினைக் கல்வித்துறை அதிகாரிகள் பாராட்டியிருப்பது சாட்சியாகும்.

கள்ளக்குறிச்சி வட்டார வளர்ச்சி அலுவலர் வை. இரத்தின சபாவதி அவர்கள் "குமரிப் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவினர், மறைதிரு. டி எலியாஸ் அவர்களின் வழிகாட்டுதலில் நடத்துகின்ற கல்விப்பணியால் கல்வராயன் மலை வடபகுதி மக்கள் மட்டுமின்றி, சங்கராபுரம் வட்டாரபகுதி மக்களும் கல்வி அறிவு பெறுகின்றனர். சிறப்பான கல்வி கொடுத்தல், ஒழுக்கம் பேணுதல், சீரிய முறையில் பிள்ளைகளைக் கவனித்தல் ஆகியவைகளை இக்கல்வி நிறுவனம் தாரக மந்திரமாகக் கொண்டு வளர்ந்து வருகிறது" என்று 25-7-1999 ஆம் நாள் பள்ளிக்கூடத் திறப்பு விழா சிறப்பு மலரில் எழுதியுள்ளமை காலத்தால் அழியாதது.

விழுப்புரம் மாவட்ட உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் திரு. ப. இராசவேல் அவர்கள் மேற்கூறிய விழா மலரில், "சேராப்பட்டு நல்ல மேய்ப்பன் ஆரம்பப் பள்ளியானது மலைவாழ்மக்களுக்கு மறுமலர்ச்சி அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை" என்று எழுதியுள்ளார். அறிவுதரும் பள்ளிகள் மூலமாய் ஆக்கம் தரும் சமத்துவ, சகோதரத்துவ மனித நேயத்தை வளர்ப்போம்.

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவால் தற்போது, சேராப்பட்டில் மேல்நிலைப்பள்ளி ஒன்றும், குருகிலாம்பூரில் உயர்நிலைப்பள்ளி ஒன்றும், தரிசனாகரில் நடுநிலைப்பள்ளி ஒன்றும், புத்திராம்பட்டு, தும்பை, மோத்தக்கல், சேராப்பட்டு ஆகியவற்றில் ஆரம்பப் பள்ளிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. தேவன் பெரிய காரியங்களை அவர் நாம மகிமைக்காய்ச் செய்து வருகிறார்.

பள்ளிக் கல்வியை சீரியமுறையில் கண்காணித்துச் செயல்படுத்த பொறுப்புள்ள கல்விக்குழு ஒன்று 24-08-1987-ஆம் நாள் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவால் நியமிக்கப்பட்டது. அதன் கன்வீனர்களாகத்

திரு. டி. எச். ஞானதாஸ், பேரா. ஜெய பாலாஜி, திரு. எம். கிறிஸ்துதாஸ், திரு. எஸ். மோகன்தாஸ் ஆகியவர்கள் செயல்பட்டார்கள். 2002 ஆம் ஆண்டிலிருந்து திரு. வி. கிறிஸ்டோபர் டானியல் அவர்கள் கல்விக்குழு செயலாளராகச் செயல்பட்டு வருகிறார்.

3. மாணவர் நல விடுதிகள்

ஒரு மனிதன் எதை சம்பாதித்தாலும் காலத்தைச் சம்பாதிக்க முடியாது. காலத்தைத் தவற விடுவது வாழ்க்கையின் அரிய வாய்ப்புகளை இழக்கச் செய்வதாகும். எப்போதும் வாய்ப்புகள் வருவதில்லை. இந்தியாவின் மக்கள்தொகைக் கணக்கில் 1/6 பகுதி மக்கள் எழுத்தறிவு அற்றவர்களாகவே இருக்கின்றனர். பெண்களில் 54% சதவீதத்தினர் மட்டுமே கல்வி அறிவு பெற்றுள்ளனர். இந்திய மாநிலங்களில் கூடுதலாக கேரள மாநிலத்தவர் 90.92 சதவீதமும், குறைவாக பீகார் மாநிலத்தவர் 47.53 சதவீதமும் கல்வி பெற்றுள்ளனர். தமிழ்நாட்டில் 73.47 சதவீதத்தினர் கல்வி பெற்றுள்ளனர். குமரிமாவட்டம் கல்வி அறிவில் முதன்மை மாவட்டமாகத் திகழ்கிறது. தமிழகத்தின் மலைப்பகுதிகளில் வாழுகின்ற மக்களுக்கு சரியான கல்வி கிடைக்காமைக்குக் காரணம், அம்மக்கள் மத்தியில் கல்விக்கூடம் இல்லாததும், விடுதிகளில் தங்கிப் படிப்பிக்கப் போதிய பொருளாதார வசதி இல்லாததுமாகும். இக்குறைகளை மாற்றுவோம் என்ற சவாலுடன் பேராய கவிசேஷ ஜெபக்குழுவினர் இப்பணிகளை பொறுப்பெடுத்துச் செய்தனர். மலைப் பகுதிகளில் படிக்கவரும் பிள்ளைகளில் பலர் மலை அடிக்குகளையும், மலை மடிப்புகளையும் தாண்டியே வருவர். அவர்கள் பகல்வேளைகளில் படித்து விட்டுப் பின்னர் பல கிலோ மீட்டர் தூரம் நடந்து தங்களுடைய சொந்த இல்லங்கள் போய்ச் சேர்ந்து மறுநாள் பள்ளிக்கூடம் வர முடியாது. பள்ளிக்கூட வளாகத்திலே விடுதிகள் அமைந்தால் தாம் அப்பிள்ளைகள் தங்கிப் படிக்க முடியும், அது நல்லது எனக் கருதினர். எனவே சேராப்பட்டில் மூன்று விடுதிகளும் குருகிலாம்பூர், தும்பை, தரிசனநகர், குன்னூர் ஆகிய இடங்களில் ஒவ்வொரு விடுதியுமாக மொத்தம் ஆறு விடுதிகள் மாணவர்கள் நலனுக்காகக் கட்டப்பட்டன. இவைகளில் சுமார் 700 மாணவர்கள் தங்கி கல்வி கற்று வருகின்றனர். இவைகளின் முழு விவரங்களும் சமூக சேவை அமைப்புகள் என்ற பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்கள் மிகவும் ஏழைகளாக இருப்பதால் உணவுக்குரியக் கட்டணங்களை அவர்களால் செலுத்த முடியவில்லை. ஒருசில மாணவர்கள் மட்டும் உணவுக் கட்டணம் செலுத்துகின்றனர். ஏனையோர்களுக்காக, ஆதிவாசிப் பிள்ளைகளின்

நலன்கருதும் பெற்றோர்கள் பலரைப் பேராய சுவிசேஷ ஊழியக்குழுவினர்கள் சந்தித்து உதவி கேட்டுப் பெறுகின்றனர். இரக்கம் கொண்ட இக்கொடையாளிகளால் பிள்ளைகள் பலர் பசியாற்றப்படுகின்றனர். இன்னும் கொடையாளிகள் பலர் எழும்பித் தங்கள் கைகளைத் திறந்தால் இளைய சமூகம் நேர்த்தியாக வளரும். இம்மாணவர்கள் மத்தியில் வேத ஆராய்ச்சி வகுப்புகள், காலை, மாலை தொழுகைகள் ஒழுங்காக நடத்தப்படுகின்றன. மாதிரியான வாழ்க்கை வாழ்ந்து, கல்விமுடித்து வீடு திரும்பும் இவர்கள் பெற்றோரையும் இயேசுவண்டைச் சேர்க்கிறார்கள். மாசற்ற இப்பணியில் பலர் இணைய முன்வர வேண்டும்.

விடுதிகள் மற்றும் மருத்துவமனை ஆகியவைகளின் செயல்பாடுகளைக் கவனிப்பதற்காக நலக்குழு ஒன்று 24-09-1999 முதல் செயல்பட்டு வருகிறது. அதன் கன்வீனராக திரு. பி. தேவரெத்தினம் அவர்கள் செயல்பட்டார். தற்போது திரு. எம்.ஜெ. ஜான்சன் அவர்கள் நலக்குழு கன்வீனராகச் செயல்படுகிறார்.

4. மருத்துவப்பணி

'சுத்தம் சோறு போடும்' 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பன தமிழர்களின் பழமொழிகளாகும். சமூகச்சேவகர்கள் அனைவருமே மனிதநலம் நாடி, விலங்குகளைப் போல் வாழும் மக்களைத் தேடிச்சென்று, சுகாதார வசதிகளை அவர்களுக்குச் செய்து கொடுக்க உதவுகின்றனர். வாழ்நாள் முழுவதும் வறட்சியால் வாழ்ந்தவன் மரணத்திலாவது மனமகிழ்ச்சி அடையட்டும், ஆத்தும மீட்பைப் பெற்றுக் கொள்ளட்டும் என்பதும் இப்பணியின் நோக்கமாகும். சுத்தமான குடிநீர் கிடைக்காமல், நோய்க்கு மருத்துவம் செய்யத் தெரியாமல், காலரா, வைசூரி போன்ற தொற்றுநோய்களுக்கு மடிந்து போகின்றவர்கள் மலைகளில் ஏராளம். அம்மக்கள் கல்லறைகளில் தஞ்சம் புகுமுன் அவர்களுக்கு நற்செய்தியை அறிவிப்பதும், சுத்தமான சுகாதார வாழ்வால் நோயிலிருந்து விடுவித்து வாழ்வளிப்பதும் பேராய சுவிசேஷ ஊழியக்குழுவின் கடமை என்பதை அதன் தலைவர்கள் உணர்ந்தனர்.

அ. வாழ்க்கை முறைகளும் நம்பிக்கைகளும்

கல்வராயன், ஜவ்வாது மலைப் பகுதிகளில் வாழும் மக்கள் பல்வேறு நோய்களால் தாக்கப்பட்டு வந்தார்கள். அந்நோய்களுக்குப் பரிகாரம் தேடிக்கொள்ள அங்கு மருந்தும் இல்லை, மருத்துவரும் இல்லை. ஒருவர் [illegible] ஆகிவிட்டார் என்றால் அந்நபரை மூங்கில் கொம்பில் [illegible] துணித் தொட்டிலில் தூக்கித் தோளில் சுமந்து காடுமேடு [illegible] ஒற்றையடிப் பாதை வழியாக 15 முதல் 30 கிலோ மீட்டர்

தூரம்வரை நடக்க வேண்டும். குறிப்பாக சங்கராபுரம், திருவண்ணாமலை ஆகிய பகுதிகளிலேயே மருத்துவமனைகள் இருந்தன. இத்தகைய நிலைகளைப்பார்ப்பதற்கும், கேட்பதற்கும் மிஷனெறிகள் வெ... பட்டனர்.

ஆ. சுகாதாரமற்ற வாழ்க்கைச் சூழல்கள்

மலைவாழ் மக்களாகிய இவர்கள் மிகவும் தாழ்வான புல் கூரை வீடுகளில் வசித்து வருகின்றனர். குளிர் பிரதேசமான இப்பகுதியில் குளிர்க்காற்றும், அடிக்கடி மழையும் உள்ள சூழல்கள் காணப்படுவதால் மக்களின் வாழ்க்கையே ஒருவிதக் கொந்தலுக்கு உள்ளாகியது. சூரியனின் கதிர்கள் அதிகமாக வீடுகளுக்குள் புகாமையால் வெளிச்சம் அவர்களின் வீட்டிற்குள் செல்வதில்லை.

மக்கள் குடியிருப்புகளும், ஆட்டுக்கொட்டகைகளும்

சுத்தமான காற்றும் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஏனெனில் சிறிய குடில் வீடுகளுக்குள் பலர் நெருக்கமாக வாழ்கின்றனர்.

அத்தகைய குடிசை வீட்டிற்குள்ளேயே அம்மக்கள் சமையல் செய்வதுடன் சாராயமும் காய்ச்சுகின்றனர். மட்டுமல்ல, குளிரிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வீட்டிற்குள் மரக்கட்டைகளை எரியவிட்டு, சுற்றிலும் படுத்துத் தூங்குவர். அம்மரக் கட்டைகளிலிருந்து வெளிவரும் புகை வெளியே செல்ல வசதியில்லாததால், அப்புகையை அம்மக்கள் முகர்ந்துகொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அத்துடன் கவனக்குறைவால் தூங்கும் இவர்களின் உடலில் அடிக்கடி தீக்காயங்கள் ஏற்படுவதுண்டு.

வீடுகளின் முன்பகுதியில் வராந்தா என்றொரு அமைப்பு காணப்படுகின்றது. இடவசதிக் குறைவின் காரணமாக வீடுகளில் வளர்க்கப்படும் ஆடு, கோழி, பன்றி, நாய் போன்றன அப்பகுதியிலேயே தங்குகின்றன. இதனால் அவைகளின் இயற்கை உபாதைக் கழிவுகள் அத்திண்ணைப் பகுதியிலே துர்வாசனையோடு கிடக்கின்றன. அவைகளிலிருந்து உருவாகும் தெள்ளுப்பூச்சி, பேன் முதலியவற்றால் இம்மக்கள் பெருந்தொல்லைகளை அனுபவிக்கின்றனர்.

மலைமக்கள், உடுத்தும் உடைகளைச் சுத்தமாகக் கட்டாமல் அழுக்காகவே உடுத்துகின்றனர். பலருக்கு மாற்றி உடுக்க உடைகள் கிடையாது. எனினும் குளிக்கும்போது அதனைச் சுத்தப்படுத்தி, பின்னர் உடுத்துதல் வேண்டும் என்ற அடிப்படை அறிவைக்கூட இம்மக்கள் அடையவில்லை. இதனால் வியாதிகள் இவர்களை எளிதாகத் தொற்றிக் கொள்கின்றன.

மாமிசங்களை இவர்கள் அதிகமாக உண்கின்றனர். குறிப்பாக, நன்றாக வேகவைக்காத பன்றி மாமிசத்தை இம்மக்கள் உண்பதால், கிருமி சம்பந்தமான நோய்கள் இவர்களை அதிகமாகத் தாக்குகின்றன.

புகைபிடித்தல், கஞ்சா பயன்படுத்தல், சாராயம் குடித்தல் போன்ற போதைப் பொருட்களுக்கு இவர்கள் அடிமையாகவே வாழ்கின்றனர். தொழுநோயாளிகளுடனும் காச நோயாளிகளுடனும் இணைந்து ஒன்றாகவே வாழும் கூட்டு வாழ்க்கை முறையால் நோய்கள் இம்மக்களை எளிதாகத் தாக்குகின்றன.

சுத்தமான குடிநீர் இவர்களுக்குக் கிடைப்பதில்லை. குட்டைகளில் தேங்கிக் கிடக்கும் அழுக்கு நீரையே இம்மக்கள் குடிக்கின்றனர். அதனையும் காய்ச்சிச் சூடாக்கிக் குடிப்பதில்லை. இதனால் நரம்புச் சிலந்தி என்ற ஒரு கொடிய நோயால் பலர் தாக்கப்படுகின்றனர்.

மலைவாழ் மக்களை நோய்கள் அதிகம் தாக்குவதற்கு, சத்தான உணவுகள் இம்மக்களுக்குக் கிடைக்காமை முக்கிய காரணமாகும். குழந்தைகளுக்கு முட்டை, பால் போன்றவைகளை இம்மக்கள் கொடுததில்லை. குழந்தை பிறந்துவிட்டால், அக்குழந்தைக்கு அவர்கள் முதலில் குடிக்கக் கொடுப்பது சாராயமாகும்.

இ. அம்மன் கொடுக்கும் நோய்

மனிதனுக்கு வரும் நோய்கள் இறைவனால் கொடுக்கப்படுவன என்பது இவர்களது நம்பிக்கையாகும். அம்மை என்னும் நோய் உடலில் கண்டால அது அம்மன் என்னும் தெய்வத்தின் கோபத்தால் உருவானது என நம்பினார்கள். பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் ஆரம்ப நாட்களில் இந்நோயினால் தாக்கப்பட்ட முழுக் கிராமங்கள் பல இருந்தன. அதைப் பார்த்து ஊழியர்கள் கண்ணீர் விட்டனர். ஆதிவாசி மக்கள் அம்மை நோய்கண்ட நபரை அவ்வூரில் விட்டுவிட்டு, மீதியுள்ளவர்கள் வேறு ஊர்களுக்குச் சென்றுவிடுவது வழக்கமாகும். நோய் தாக்கிய ஊருக்குரிய பாதையினையும் அடைத்து விடுவர். இதனால் ஊரின் உள்ளிருப்போர் வெளியே போகவும் முடியாது, வெளியிலிருப்போர் ஊருக்குள் வரவும் முடியாது நோய்கண்ட மனிதர்கள் ஊருக்குள்ளேயே சாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை இருந்தது.

ஈ. டாக்டர் கிறிஸ்துதாஸின் பயணம்

உடலில் நோய்கள் வந்தால் மருத்துவரை அணுகி சிகிச்சை பெற வேண்டும் என்பதனை அம்மக்கள் அறியவில்லை. பேய், பிசாசுகளின் தொந்தரவுகளினாலும், தேவர்கள், தேவதைகளின் கோபத்தாலும் நோய்கள் தங்களைத் தாக்குவதாக நம்புகிறார்கள். ஒருசிலர் பிசாசு பிடித்தோர் இருக்கும் வீட்டைத் தீக்கொழுத்தி அழித்து விடுகிறார்கள். வேறுசிலர் குறிகாரர், மந்திரவாதி, காணிக்காரர்கள் எனப் பலரை நோயிலிருந்து மாந்திரீகத்தின் வழி விடுதலை பெற நாடிச் செல்கின்றார்கள். இத்தகைய மக்கள் மத்தியில் மருத்துவப்பணி செய்வதற்காக டாக்டர். கிறிஸ்துதாஸ் அவர்கள் 1965-ஆம் ஆண்டு திரு. எம். இராஜையன் அவர்களுடன் கல்ராயன் மலைக்குச் சென்றார். ஆங்கு சில கிராமங்களில் வாழும் மக்களின் அவல நிலையைக் கண்டும் கேட்டும் வேதனையுற்றார். அப்போது ஒரு கிராமத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைக் கண்டார். நுரையீரல் பகுதியில் வீக்கம் கண்ட ஒருவன் வேதனையால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தான். அந்நபரைக் குணப்படுத்துவதற்காய் அங்கு வந்திருந்த ஒரு மந்திரவாதி முதலில் பணம், துணிகள், முட்டை, கோழி மற்றும் தங்க நகைகள் முதலியவற்றை அக்குடும்பத்திலிருந்து கேட்டுப் பெற்றான். பின்னர் தனது தந்திரத்தால் ஏதோ மந்திரம் செய்வதாக நடித்தான். ஆனால் நோய் குறைந்தபாடில்லை. இதனைக் கண்ணுற்ற மருத்துவர் கிறிஸ்துதாஸ் அவர்கள் அந்நோயாளியைப் பரிசோதித்தார். அவரது நுரையீரல் பகுதியில் நீர்க்கட்டி ஒன்று பழுத்திருப்பதாய்க் கூறினார். அதனை அம்மக்கள் நம்பவில்லை. பின்னர் ஊசிமூலம் கால் (1/4) லிட்டர் பழுப்பை அம்மனிதரின் உடலிலிருந்து வெளியேற்றினார். உடனே அம்மனிதரின் வேதனை குறைந்து, நிவாரணம் பெற்றான். இது முதல் அம்மக்கள் டாக்டர். கிறிஸ்துதாஸின் மேலும் இறைவனின் மீதும் நம்பிக்கை வைத்தனர்.

உ. உடலைக் காயப்படுத்துதல்

நோயினால் பாதிக்கப்பட்ட இம்மலை மக்கள் சாதாரணமாக வெயிலில் படுத்துக்கொள்கிறார்கள். உடலின் எப்பகுதியில் வேதனையுண்டாகிறதோ அப்பகுதி உறுப்பைக் காயம் அடையச் செய்து இரத்தத்தை நிலத்தில் சிந்துவர். அந்த இரத்தத்தைப் பார்த்து சாமி மகிழ்ச்சி அடைவதாகவும், அதனால் நோவு மாறுகிறது என்பதும் அம்மக்களின் நம்பிக்கையாகும். அதுபோல் உடலில் வலி ஏற்படும் இடத்தில் இரும்பைச் சூடாக்கிச் சூடு போடுகிறார்கள். அதனால் உண்டாகிற காயங்கள், வேறுபல நோய்களை ஏற்படுத்துகின்றன. லேகியோன் என்ற பிசாசு பிடித்தவன் தன்னைவருத்திக் கொண்டிருந்தது போல

இம்மக்களும் நோய் வரும்போது தங்களை வருத்துகின்றனர். அறியாமை என்னும் அறிவீனம் எத்தகைய கொடுமைகளுக்கு மக்களை ஆளாக்கிற்று என்பதனை இவை மூலம் அறிய முடிகிறது.

மேற்கூறிய சூழல்களில் வாழும் மக்களுக்கு மருத்துவம் செய்ய மருத்துவர்கள் இல்லாத காரணத்தால் நமது மிஷனெறிகள் முதலுதவி மருத்துவம் செய்யக் கற்றுக் கொண்டார்கள். இது அவசரத் தேவையாகவும் இருந்தது. சாதாரணமாக ஏற்படும் நோய்களுக்கு ஊசி மருந்து மற்றும் மாத்திரைகள் கொடுத்து நிவாரணம் அளித்து வந்தார்கள். இவை தவிர, கொடிய நோய்களினால் பாதிக்கப்பட்டோர், விபத்துக்களினால் அவதிப்பட்டோர்களைச் சங்கராபுரம், சேலம், திருவண்ணாமலை போன்ற இடங்களிலுள்ள மருத்துவமனைகளுக்கும், பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனை, வேலூர் கிறிஸ்தவ மருத்துவமனை ஆகியவற்றுக்கும் மிஷனெறிகள் அழைத்துச் சென்று மருத்துவம் செய்கின்றனர். இவைகளினால் குணப்படுகின்ற மக்கள் உலக அறிவையும் கிறிஸ்துவின் ஒளியையும் பெறுகின்றனர். இருளடைந்த கிராமங்கள் இயேசுவின் ஒளியால் அறியாமை அகன்று அறிவொளியையும் பெற தயாராயின.

ஊ. பாடம்போடு சார்

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவால் நற்செய்திப் பணிகள் நடைபெறும் மலைப் பகுதிகள் மிகவும் பின்தங்கிய நிலைகளிலேயே காணப்படுகின்றன. இத்தகைய மலைப்பகுதிகளில் வாழும் மக்களிடையே மருத்துவப் பணியினை நிறைவேற்ற, பேராய சுவிசேஷ ஜெபக்குழு; மருத்துவர் மற்றும் தாதிகளை அனுப்ப முன்வந்தது. அவர்களைத் தாங்க சபைகளும் உதவிக்கரம் நீட்டின. இத்தகைய மருத்துவ மிஷனெறிகள் கடவுளுடைய அன்பையும் குணமாக்கும் வல்லமையையும் அம்மக்களுக்கு எடுத்துக் கூறி ஜெபம் ஏறெடுக்கிறார்கள். மட்டுமல்ல அவர்களுக்கு ஜெபிக்கவும் கற்றுக் கொடுக்கிறார்கள். இயேசுவின் அற்புதத் தொடுதலால் அம்மக்களில் பலர் வியக்கத்தக்க வகையில் குணம் பெறுகிறார்கள். குணம்பெற்ற மக்களும், அதனைக் காண்போரும் கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்து மேலும் மேலும் கிறிஸ்துவை அறிய ஆவல் கொண்டவர்களாய்க் காணப்படுகின்றனர். தங்கள் கிராமங்களில் எவருக்கேனும் திடீரென நோய் வந்துவிட்டால், ஓடோடி வந்து மிஷனெறிகளிடம் எங்களுக்குப் "பாடம் போடு சார்" (ஜெபம்) என்று மன்றாடிக் கேட்கிறார்கள். ஜெபம் என்பதைக் கிறிஸ்துவை நோக்கி வேண்டுதல் செய்யும் மந்திரவாதம் என்றே நம்புகின்றனர். இத்தகைய மக்கள் மத்தியில் பணியாற்றக் காலத்தை விரயம் செய்யாமல் தேவனுக்காக உழைப்பவர் எழும்பி முன் வரவேண்டும்.

௮. சமயத் தலைவர்

மலைக் கிராமங்களில் வாழும் மக்கள் ஏழு ஊர்களுக்கு சமயத் தலைவர் ஒருவரை நியமிக்கின்றனர். இவரைச் சமயக்காரர் என்று கூறுகின்றனர். இவர் தனக்குப் பொறுப்பான ஊர்களில் வாழும் மக்களில் கடும் நோயால் தாக்கப்பட்டவர்கள், சாத்தானின் தொல்லைகளால் அவதிப்பட்டவர்கள் ஆகியோர்களை மிஷனெறிகளிடம் கூட்டிக் கொண்டு வந்து பாடம் போடும்படியாகக் கேட்கிறார் [illegible]. இத்தகைய மக்களின் சேவையால் ஏராளமான மக்கள் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் குணமடைகின்றனர். மருத்துவர்களால் குணப்படுத்த முடியாது என்று கைவிடப்பட்டவர்கள் பலர், மிஷனெறிகளது ஜெபத்தினால் விடுதலை பெற்றார்கள். அவர்களில் பலர் கிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். அதன்பின்னர் கிறிஸ்துவுக்காகச் செயல்பட வேண்டும் என்ற உணர்வினைப் பெற்று வாழ்கின்றனர். தங்கள் குடியிருப்பின் அருகிலிருக்கும் ஆலயத் தொழுகைகளில் பங்கேற்பதோடு பலர் சொந்தமாக ஜெபக் கூடுகைகளும் நடத்துகின்றனர். இவ்வாறு மருத்துவப்பணியானது மக்களின் புற வாழ்க்கையிலும் அக வாழ்க்கையிலும் விடுதலையினை அளித்தது. மக்களின் மனங்களில் புதுவாழ்வு மலரும் மட்டும் உலகத்தில் புதுயுகம் தோன்றப் போவதில்லை என்பதை மனதில்கொண்டு பணியின் வேகத்தைத் தீவிரப்படுத்த வேண்டும்.

௯. குழந்தைப் பேறுகால நம்பிக்கைகள்

நம்பிக்கை என்பதனை மனிதரின் மூன்றாவது கை என்பர். உலகில் வாழும் ஒவ்வோர் இன மக்களும் தங்களுக்கென தனித்தனி நம்பிக்கை களைக் கொண்டு வாழ்கின்றனர். கல்ராயன், ஜவ்வாது மலைகளில் வாழும் மக்கள் தங்களுக்கென சில நம்பிக்கைகளைக் கொண்டுள்ளனர். இம்மலைகளில் வாழும் பெண்களுக்குப் பேறுகாலம் நெருங்கி விட்டால் வீடு தீட்டாகிவிடும் என நினைத்து அவர்களை ஊருக்கருகில் உள்ள ஒரு மரத்தின் அடியில் தங்க வைக்கின்றனர். மிகவும் குளிர்காலத்தில் குளிர் அவர்களைத் தாக்காமல் இருக்க வேண்டி அப்பெண்ணுக்கு அருகில் நெருப்புக் கட்டைகளை அடுக்குகின்றனர். கர்ப்பிணிப் பெண், வீட்டில் வைத்துக் குழந்தை பெற்றால், தெய்வம் கோபப்பட்டு ஊரை அழித்துவிடும் என நம்புகின்றனர். குழந்தை பிறந்த ஐந்தாம் நாள் அக்கிராமப்பெண்கள் கூட்டமாகச் சென்று குழந்தையையும் தாயையும் வீட்டிற்கு அழைத்து வருகின்றனர். பின்னர் குழந்தைக்கும் தாய்க்கும் சாராயம் குடிக்கக் கொடுத்துக் கும்மாளம் அடித்து மகிழுகின்றார்கள். இவ்வேடிக்கை நிலை கேட்பதற்கு ஆச்சரியமாக உள்ளது.

ஊரில் ஒருமுறை அழுகுரல் கேட்டது. அக்குரல் கேட்ட திசையை நோக்கித் தலைமை மிஷனெறி எலியாஸ் அவர்கள் சென்றார்கள். அங்கு பெண்கள் கூட்டமாக நிற்பதைப் பார்த்து அருகில் போனார். குழந்தையைப் பெற்றெடுத்தத் தாயும் சேயும் மண் தரையில் படுத்திருந்ததைப் பார்த்தார். குழந்தை பெற்ற அப்பெண்ணின் உடலிலிருந்து அளவுக்கதிகமான உதிரப்போக்கு ஏற்பட்ட நிலையில் அப்பெண் மயங்கிக் கிடந்தாள். ஆனால் அவ்வூரார் அப்பெண்ணுக்குப் பேய்வந்து விட்டது, அதனால் இவ்விதம் நினைவிழந்து கிடக்கிறாள் எனக் கூக்குரலிட்டார்கள்.

அப்போது எதிர்பாராத விதமாக அப்பெண்ணைக் காப்பாற்றும்படி, ஒருவன் அவளைப் பிடித்திருக்கும் பேயை விரட்ட, துப்பாக்கியைத் தூக்கி வந்தான். வேறொருவன் கோழி ஒன்றைக் கொண்டுவந்து அதன் தலையை அறுத்து இரத்தத்தை வடிய விட்டான். இக்கொடூரக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த மிஷனெறி எலியாசின் உள்ளம் துடிதுடித்தது. அவதிப்பட்ட அப்பெண்ணை அவள் வீட்டுத் திண்ணைக்கு அழைத்துச் செல்ல மிஷனெறி பல தடவைகள் அம்மக்களிடம் கூறினார். ஆனால் அவர்கள் கேட்டபாடில்லை. அம்மக்கள் பதிலுரையாக, "உனக்கு ஒன்றும் தெரியாது, நீ ஊருக்குப் புதுசு, நீ சொல்வது படி அவளை வீட்டுத் திண்ணைக்கு அழைத்துச் சென்றால், அவ்வீடு தீட்டாகி விடும். சாமி கோபம் கொண்டு ஊரை அழித்துவிடும். எங்கள் ஊர் விஷயத்தில் தலையிடாதே" என்று கூறிவிட்டனர். அப்பெண்ணின் மேல் மன உருக்கம் கொண்ட மிஷனெறி எலியாஸ், திரும்பத் திரும்ப அவர்களைக் கெஞ்சிக் கேட்டார்கள். எலியாசின் உருக்கமான வேண்டல், அம்மக்களின் உள்ளத்தைக் கரைத்தது. உடனே அவர்கள் ஊர்ப் பஞ்சாயத்தைக் கூட்டினார்கள். அப்பெண்ணின் கணவனிடமிருந்து அப்பஞ்சாயத்தார் 15 புட்டி சாராயம் வாங்கிக் குடித்தார்கள். பின்னர் அவளை வீட்டுத் திண்ணைக்குக் கொண்டு செல்ல அனுமதித்தார்கள். உடனே எலியாஸ் தமக்குத் தெரிந்த சில மருத்துவ உதவிகளைச் செய்து ஜெபித்தார்கள். சிறிதுநேரத்தில் அப்பெண்ணின் உதிரப்போக்கு நின்றது. எலியாஸ் அம்மக்களிடம், இயேசுவின் மேல் நம்பிக்கை வைக்குமாறு கேட்டுக் கொண்டார். இக்காட்சிகள் எலியாஸ் அவர்களின் உள்ளத்தில் மருத்துவமனை ஒன்று நிறுவ வேண்டும் என்ற சிந்தனையைத் தூண்டின.

ஐ. நல்ல சமாரியன் மருத்துவமனை

மேல்நாட்டு மிஷனெறிகள் பலர் இம்மண்ணில் வந்து புதிய கலாச்சாரத்தை நமக்குத் தந்தார்கள், கல்விக்கண் திறந்தார்கள். மூடப்பழக்க வழக்கங்களுக்கு வேட்டு வைத்தார்கள், மருத்துவம் பார்த்தார்கள்.

இவைகளையெல்லாம் எவ்வித அரசியல் உதவியுமின்றி கிறிஸ்துவின் பெலத்தினால் செய்து முடித்தார்கள். இவ்விதம் நன்மை பெற்ற நாம் இன்று மலைப்பகுதிகளில் மூட நம்பிக்கையின் காரணமாய் மடியும் மக்களைக் காப்பாற்றுவது நமது கடமை என்பதைக் குமரிப் பேராய சபைகள்தோறும் மலைநாட்டு ஊழியர்கள் எடுத்துக் கூறினர். மேற்கூறிய நிகழ்ச்சிகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கூறக் கேட்ட பலரின் உள்ளங்கள் ஆத்தும தாகம் பெற்றன. அருள்திரு. டி. எலியாஸ் அவர்களும் உடனே ஒரு மருத்துவமனை கட்ட வேண்டும் என்று கனிவாய்க் கூறினார்கள். இதைக் கேட்ட இராமவர்மபுரம் சபையைச் சேர்ந்த மருத்துவர் ஜோஸ்லின் அவர்கள் மருத்துவமனை கட்ட ஆரம்ப நன்கொடையினை வழங்கினார்கள். அதன்பேரில் 1980-ஆம் ஆண்டு பேரா. ஸ்பர்ஜன் அவர்கள் சேராப்பட்டில் மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டினார்கள். அவ்விடத்தில் நாகர்கோவிலைச் சேர்ந்த டாக்டர். சி. ஜாண் அவர்கள் நினைவாக அவரது குடும்பத்தினர் ஓர் அறையும், திரு. இறிக் பிரிட்டோ என்பவரால் மற்றோர் அறையும் கட்டப்பட்டன. தொடர்ந்து நாகர்கோவில் பெண்கள் மிஷனெறிக்கிளையும், காசா நிறுவனமும் மற்றும் பெரியோர்கள் பலரது நன்கொடையும் சேர்த்து முழுமையான மருத்துவமனை ஒன்று வேகமாகக் கட்டி முடிக்கப்பட்டது. பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் அம்மருத்துவமனைக்கு **நல்ல சமாரியன் மருத்துவமனை** என்று பெயர் சூட்டி 18-12-1983-ஆம் நாள் அர்ப்பணம் செய்தார்கள். அவ்விழாவில் அப்பகுதிச் சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு. கலிதீர்த்தான் அவர்கள் கலந்துகொண்டு ஆஸ்பத்திரியைத் திறந்து வைத்தார்கள்.

நல்ல சமாரியன் மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அப்பகுதி மக்கள் பலர் அங்குவந்து சுகம் பெற்றுச் செல்கின்றனர். அவர்கள் மூலமாய்ச் செய்தியினைக் கேள்விப்படும் மற்ற பகுதி மக்களும் இம்மருத்துவமனையை நாடித் தேடி வருகின்றார்கள். மருத்துவப் பணியின் தேவை அதிகரித்தபடியால் மக்களின் குறைகளை நிவிர்த்தி செய்யும் பொருட்டு, தும்பை, குபேந்திரப்பட்டணம், குருகிலாம்பூர், தரிசனநகர், அரசம்பட்டு, கொட்டப்புதூர், கரியகோவில், செந்திட்டு ஆகிய இடங்களிலும் மருத்துவ மையங்கள் திறக்கப்பட்டன. அவைகளில் ஜெபக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ள தாதியர்கள் மற்றும் மருத்துவர்கள் மக்கள் சேவைபுரிந்து வருகிறார்கள்.

மேற்கூறிய பணித்தளங்களில் பேராய சுவிசேஷ ஜெபக்குழு மருத்துவ மையங்கள் தொடங்குவதற்கு முன் ஒரு கிராமத்தில் வாழும் 400 மக்களில் 200 பேர்களுக்கு மருத்துவ உதவி இன்றியமையாததாய் இருந்தது என்று தென்னாற்காடு மாவட்ட ஆட்சியாளர் கூறியிருந்தார்.

(தினமலர் 17-08-1976) இத்தகைய தன்மை கொண்ட மக்களிடையேதான் பேராய சுவிசேஷ ஜெபக்குழு தம் பணியைச் செய்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இ. உயிருள்ள சாட்சிகள்

மிஷனெறிப் பணி என்பது பாடுகள் நிறைந்தது. கிரயம் கொடுக்க வேண்டியது. சோம்பேறிகளுக்கும் சுயநல வருடிகளுக்கும், சம்போகமாய் வாழும் சுகபோகப் பிரியர்களுக்கும், இவ்வுலக ஆசை இச்சைகளில் நாட்டம் கொண்டவர்களுக்கும் சுவை தராத பணியாகும்.

"வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" (மத் 28 : 18) என்று கிறிஸ்து கூறியதுபோல மிஷனெறிகள் இயேசுவின் நாமத்தில் பல அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்தனர்.

ஆறு மாதங்களாகக் கடுமையான ஜுரம் மற்றும் வாந்தியினால் வருத்தப்பட்ட ஒரு வாலிபனைச் சந்திக்க ஜெபக்குழுவின் மிஷனெறிகள் சென்றார்கள். மருந்து கொடுத்தால் அம்மன் கோபமடைந்து அவனைக் கொன்றுவிடும் எனக்கருதிய தாயார், அவ்வாலிபனுக்கு மருந்து கொடுக்கத் தடை பண்ணினார்கள். ஆனால் நமது ஊழியர்கள் மருந்து கொடுத்து அவ்வாலிபனுக்காக ஜெபித்து இரக்கமாய் வேண்டினார்கள். சிறிது நேரத்தில் அவன் சுகம் பெற்றான். அனைவரும் இறைவனைப் போற்றிப் பாடித் துதித்தார்கள்.

நாற்பத்தைந்து நாட்கள் நோயினால் அவதிப்பட்ட ஒரு பெண்ணைக் குறித்து தாதியராகிய எஸ்தர் ரோணிக்கம் அவர்கள் கேள்விப்பட்டார்கள். உடனே அவ்வீட்டிற்குச் சென்று ஜெபித்து மருந்து கொடுத்தார்கள். அதிசயிக்கத் தகுந்த விதமாய் அப்பெண் சுகம் பெற்றாள். பின்னர் அவள் "இந்த அம்மா மட்டும் வராவிட்டால் நான் செத்திருப்பேன்" என்று சாட்சி கூறினாள் (1979 அறிக்கை மலர்)

மருத்துவர் பால்தாஸ் அவர்களை ஜெபக்குழுவின் ஊழியர்கள் 15 கிலோமீட்டர் தூரம் தாண்டி ஒரு நோயாளியைப் பார்க்க அழைத்துச் சென்றனர். பல மருத்துவர்களை அணுகியும் அந்நோயாளி சுகப்படவில்லை. மருத்துவர் பால்தாஸ் அந்நோயாளியைப் பார்த்து "இயேசுநாதர், அவரது தழும்புகளால் உனக்குச் சுகம் தருவார், அவரை நம்பு" என்று கூறி மருந்து கொடுத்தார். மேலும், பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு அம்மனிதரை அழைத்துச் செல்ல ஆலோசனையும் கூறினார். ஆனால் இயேசுநாதர் அற்புத கரத்தை நீட்டி, அன்றே

அவருக்குச் சுகம் கொடுத்தார். மூன்றாம்நாள் அம்மனிதர் 15 கிலோ மீட்டர் தூரம் நடந்து சேராப்பட்டு ஆலயத்தில் வந்து கடவுளைத் தொழுது கொண்டார்.

இப்படி எத்தனையோ அற்புதங்களை இறைவன் அனுதினமும் பணித்தளங்களில் மருத்துவப் பணியின் மூலமாய்ச் செய்து வருகிறார். இன்று தொற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் கிடையாது. நோய் வந்ததும் மருத்துவம் செய்ய வேண்டும் என்ற அடிப்படை அறிவினை அனைவரும் பெற்று விட்டனர். இத்தகைய நிலைகளில் வாழும் மக்களுக்குக் கடவுளின் பணியை மருத்துவச் சேவை மூலம் செய்ய பலர் எழும்ப வேண்டும். தேவன் எல்லா மக்களையும் மிஷனெறி ஊழியத்திற்கு அழைக்கிறார் என்கிற சத்தியத்தை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

5. விவசாயப்பணி

மலைவாழ் மக்களுக்குச் சுவிசேஷம் மட்டும் அறிவிப்பதோடு மிஷனெறிகளின் பணி முற்றுப் பெறவில்லை. அவர்களின் அன்றாடகப் பொருளாதாரத் தேவைகளையும் சந்திக்கும் பொறுப்புத் தங்களுக்குரியது என்பதனை உணர்ந்து செயல்பட்டனர். நிலத்தின் விளைபலன்கள் தேவன் மனிதனுக்கு இயற்கையாகவே அளித்துள்ள செல்வங்களாகும். அதனை முறையாகப் பயிர் செய்வது, அவரது ஞானத்தின் வெளிப்பாடாகும். பேராய சுவிசேஷ ஜெபக்குழு அம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற விவசாயத்திலும் தன் கவனத்தைச் செலுத்தியது. கல்வராயன் மலையின் மேல் பகுதியிலும் அடிவாரத்திலும் நல்ல மண்வளம் உண்டு. அவைகளைச் செவ்வனே பயன்படுத்திக் கொள்ளும் பக்குவம் மலை மக்களுக்கு இல்லை. மலையின் அடிவாரத்திலுள்ள ஷீலா நகரில் வாங்கப்பட்ட ஐந்து ஏக்கர் பூமியைத் தவிர மேலும் ஐந்து ஏக்கர் பூமியினை 1981-ஆம் ஆண்டு பேராய சுவிசேஷ ஜெபக்குழு வாங்கியது. அதில் இரண்டு பெரிய கிணறுகளை விவசாயத்திற்கென்று வெட்டி, மோட்டார் மூலம் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அந்நிலப் பகுதியில் தென்னை, கொய்யா, வாழை, பருத்தி, நிலக்கடலை, நெல் போன்றன காலநிலைக்கேற்ப பயிர்செய்யப்பட்டு வருகின்றன.

பேராய சுவிசேஷ ஜெபக்குழு மிஷனெறிக் களங்களின் தலைமை இடமாகத் திகழுகின்ற சேராப்பட்டில் 18 ஏக்கர் பூமியை வாங்கியுள்ளது. அங்கும் கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. அப்பகுதியில் மா, பலா, புளி, தென்னை, முந்திரி போன்ற பலன்களைத் தரும் மரங்கள் நட்டுப் பாதுகாக்கப்படுகின்றன. இவ்வாறு நிலத்தடி நீரையும் மண்வளத்தையும்

கரத்தில் கொண்டு பயிர் செய்யும் முறைகளை அப்பகுதிகளில் வாழும் மக்களும் நுட்பமாகக் கவனிக்கின்றனர். இத்தகைய ஆர்வமுடையவர்களுக்கு நமது மிஷனெறிகள் விவசாய முறைகளைக் குறித்தும், அவைகளை விளையச் செய்கிற ஆண்டவரின் கரத்தின் கிரியைகளைக் குறித்தும் தெளிவாக எடுத்துரைக்கின்றனர். நமது தோட்டங்களில் வேலை செய்ய மலையிலுள்ள மக்களே ஈடுபடுத்தப்படுகின்றனர். தினமும் வேலை தொடங்கும்போதும் முடிக்கும்போதும் ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது. கரத்தின் கிரியைகளை ஆசீர்வதிக்கிற ஆண்டவர், விவசாயத் திட்டங்களை அம்மக்கள் மத்தியிலும் விரிவுபடுத்தி வருகிறார். நிலைகளும் பணி இடங்களை அறிய ஏதுவாகின்றது.

மேலும் பணித்தளங்கள் தோறும் நிலங்கள் வாங்கப்படுகின்றன. அவைகள் நன்முறையில் பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. அனைத்துச் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கென்று சொத்துப் பராமரிப்புக்குழு ஒன்று 07-08-1999 முதல் சுவிசேஷ ஜெபக்குழுவில் செயல்பட்டு வருகிறது. திரு. ஜேக்கப் அவர்கள் அக்குழுவின் தலைவராகச் செயல்பட்டார்கள். தற்போது திரு. எஸ். இராஜமணி அவர்கள் அப்பொறுப்புக்களைத் திறம்படச் செய்து வருகிறார். எறும்புகள் கூட மழைக் காலத்திற்கென்று சேமிக்கின்றன. அப்படியானால் நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிற மக்களுக்காகச் செயல்படுவதும் திட்டமிடுவதும் மிகமிகத் தேவைதானே. வரலாற்றின் அந்தமான காலத்தில் வாழும் நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோம். காலங்கள் தேவனுடைய கரத்தில் இருக்கின்றன. அதனைப் பயனுள்ளதாகச் செலவழிப்பதும் வீணாக்குவதும் நமது கரத்தில் உள்ளது.

1. சமூகப் பணி

பாடுகள் என்பன நமது விசுவாச வாழ்வின் கூர்மைக்கும் உறுதிப்பாட்டிற்கும் கர்த்தர் வழங்கும் அருள் வரமாகும். இந்திய மண்ணில் சுவிசேஷ ஒலியை ஒலிக்கச் செய்வது ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமையாகும். தகவல் தொடர்பு ஊடகங்களின் ஆளுமையினால் இந்தியாவின் நகரப் பகுதிகள் விரைவான முன்னேற்றங்களைக் கண்டுள்ளன. ஆனால் அடிப்படை வசதிகளே இல்லாத கிராமங்கள் பல இந்தியாவிலுள்ளன. இந்தியர்களில் 15 கோடி பேர் இன்னும் மின்சார வசதியைப் பெறவில்லை. 40 சதவீத கிராமங்களுக்குச் சரியான சாலை வசதி இல்லை. சுதந்திரம் பெற்று இத்தனை ஆண்டுகள் ஆகியும் சுத்தமான குடிநீர் இல்லை. மேற்கூறிய சூழ்நிலைகளில் காணப்பட்ட வளர்ச்சியடையாத மலைப்பகுதிகளில் தான் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் பணி உதயமானது.

முதற்கண் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் மிஷனெறிகள் சென்ற இடங்களில் எல்லாம் மக்களின் ஆதரவினைப் பெற்றுச் சாலை வசதிகளை உருவாக்கினர். இதனால் மக்கள் மிஷனெறிகளை முழுமையாக நம்பினார்கள்.

ஒருசில கிராமங்களில் பஞ்சாயத்துகள் மூலம் கிணறுகளைத் தோண்டச் செய்தனர். அந்நீரைப் பயன்படுத்துவதற்காகக் கப்பி, வாளி, வடம் போன்றவைகளைப் பஞ்சாயத்தினரே மக்களுக்குக் கொடுத்தனர். ஆனால் மலைவாழ் மக்கள் கிணறு ஆழம் எனக்கூறி நீர் எடுக்காமல் கிணறுகளைப் பாழடைய விட்டுவிட்டார்கள். குட்டைகளில் தேங்கிக் கிடந்த அழுக்கடைந்த நீரையே பயன்படுத்தியும் பருகியும் வந்தார்கள். நாளடைவில் மிஷனெறிகள் நீரைப் பயன்படுத்தும் முறையைப் பார்த்து கிணற்று நீரைப் பயன்படுத்தவும், ஊற்றுகள் தோண்டி அவற்றைப் பயன்படுத்தவும் கற்றுக் கொண்டனர்.

அ. தலையில் குளிக்க வைத்தல்

மலைகளில் வாழும் ஆதிவாசி மக்கள், சாமி கும்பிடும் நாளில் மட்டும் குளிப்பது வழக்கம். இதனால் குழந்தைகளது தலையில் அழுக்குப் படிந்து முடியானது சடை பிடித்திருக்கும். அத்தலைகளில் பேன்கள் நிறைந்து புண்ணாகித் துர்நாற்றம் வீசும். இப்பேர்ப்பட்ட மக்களின் முடியை வெட்டி, சோப்புப் போட்டுக் குளிப்பாட்டி சுத்தம் செய்வது நமது மிஷனெறிகளின் சேவையாக இருந்தது. கல்கத்தா தெருக்களில் நாறிக் கிடந்த மக்களைக் கழுவிச் சுத்தப்படுத்தி, அவர்களை மக்களாக மாற்றிய பெருமைக்கு அன்னை தெரசா உரியவர்களானார்கள். அதுபோல மலைமக்களைச் சுத்தப்படுத்தி, அழகு பார்த்த பெருமை தலைமை மிஷனெறி எலியாஸைச் சாரும், இவ்விதம் சுத்தப் படுத்தியமைக்கு மலைமக்களிடம் ஆரம்பத்தில் எதிர்ப்பு அதிகமாய் இருந்தது. அம்முடியைப் புண்ணிய பூமிக்குச் சென்று இறைவனுக்குக் காணிக்கையாக்குவதாய் அம்மக்கள் கூறினர்.

ஏழ்மையில் வாழ்ந்த இம்மலை மக்கள் சரியாக உடுத்துவதும் இல்லை. சத்தான உணவுகளை உண்பதுமில்லை. கஞ்சா பயிரிடுவதும் சாராயம் காய்ச்சுவதும் இவர்களது நிரந்தர தொழிலாகும். இதனால் காவல்துறை அதிகாரிகள் சிலவேளைகளில் ஆண்களையும் பெண்களையும் கைது செய்கின்றனர். அதோடு அம்மக்களின் வீடுகளில் காணப்படும் உடைமைகளையும் எடுத்துச் செல்வர். இத்தகைய இக்கட்டான சூழ்நிலைகளில் நமது மிஷனெறிகள் அப்பகுதி சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றும் மாவட்ட ஆட்சியாளர் ஆகியோரை அணுகி

காவலில் இருப்போரை மீட்டு வருவர். இதனால் மலைமக்கள் மிஷனெறிகள் பால் அதிக நம்பிக்கைக் கொண்டனர்.

வெளியிடங்களிலிருந்து மலைக்கு வரும் வியாபாரிகள், மலைமக்களை ஏமாற்றி, அவர்களது விளைபொருட்களை மிகக்குறைந்த விலைக்கு வாங்கிச் செல்வார்கள். எழுத்தறிவும், உகை அறிவும், பெறாத இம்மலை மக்கள் ஏமாந்து நிற்பர். இதனைக் கண்ணுற்ற அருட்பணியாளர்கள் அம்மக்களுக்குத் துணைநின்று பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க உதவினர். இவைகளுக்குப் பின்னால் மலைமக்களின் பொருளாதார நிலை ஓரளவு உயர்ந்தது.

ஆ. மக்கள் தொடர்புக் குழுக்கள்

ஆதிவாசி மக்கள் அதிகாரிகளால், வியாபாரிகளால் பலவாறு ஏமாற்றப்படுவதைக் கண்ணுற்ற மிஷனெறிகள் அவைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாண விழைந்தனர். அதன்பேரில் கிராமங்கள் தோறும் மக்கள் தொடர்புக் குழுக்களை அமைத்தனர். அக்குழுக்கள் மக்களுக்கு அரசின் உதவிகளைப் பெற்றுக் கொள்ள வழிகாட்டின. இதனால் மக்களின் ஒழுங்கற்ற செயல்பாடுகள் ஒவ்வொன்றாகக் குறைந்தன. தலைமை இடமான சேராப்பட்டில் **"ஆதிவாசிகள் நலக்குழு"** ஒன்று அமைக்கப்பட்டது. இவைகளைக் கண்ணுற்ற அரசு அதிகாரிகளும், கரியாலி என்ற ஆட்சியாளரும் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களை வெகுவாய்ப் பாராட்டினார்கள்.

தலைமை மிஷனெறி அருள்திரு. டி. எலியாஸ் அவர்களின் பொறுப்பில் அரசின் திட்டங்களைச் செயல்படுத்த ஆட்சியாளரும் அதிகாரிகளும் ஆவல் கொண்டனர். ஆனால் எலியாஸ் அவர்கள் தன்மூலம் அரசின் திட்டங்களைச் செயல்படுத்தாமல் ஆதிவாசிகளைப் பயிற்றுவித்து, அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடுத்து அரசின் திட்டங்கள் நிறைவேறக் காரணமானார்.

இ. புரட்சியான மாற்றங்கள்

அடிமைப்பட்டவர்களாய் ஆடுகளைப் போல் அலைந்து திரிந்த மலைமக்கள், இன்று விடுதலைப் பெற்று ஆலயத்தில் தொழும் கண்கொள்ளாக் காட்சிக் காண்போரை வியப்பில் ஆழ்த்தும். அன்று கல்வி புகட்ட கல்விக் கூடங்களுமில்லை, ஆசிரியரும் இல்லை. ஆனால் இன்று பல்வேறு நிறுவனங்களில் ஒழுக்கச் சீலர்களாய்ப் பட்டதாரிகளாய் பலர் பாரோர் புகழும் வண்ணம் பண்பட்ட வாழ்க்கை வாழ்கின்றனர். கஞ்சா குடித்தல், சாராயம் குடித்தல் ஆகியனவற்றைப் பழக்கமான தொழிலாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் இன்று 'போதை தீமை

தரும்' எனப் பிறருக்குப் போதிக்கத் தொடங்கி விட்டனர். மானத்தை மறைக்க சிறுதுண்டினை (தாறு) மட்டும் கட்டிய ஆண்கள் இன்று பனியன், கால்சட்டை, மேல்சட்டை, வேஷ்டி ஆகியன அணிந்து ஆண்மைக்கே அழகு சேர்க்கின்றனர். மேலாடை அணிவது தெய்வக்குற்றம் என நம்பி வாழ்ந்த பெண்கள் இன்று புடவை, தாவணி, ஆயத்த ஆடைகள், சுடிதார், மிடி போன்ற ஆடைகளை அணிந்து நாகரிகமாகத் திகழ்கின்றனர்.

கம்பு, சோளம், கேழ்வரகு, சாமை போன்றனவற்றைக் கூழாக்கி குடித்தவர்கள் இன்று அரிசி உணவினை விதம்விதமாக உண்கின்றனர், காய்கறிகளைச் சமைத்து உண்கின்றனர். பாலைக் காய்ச்சிக் குடிக்கின்றனர். காபி, டீ, போன்றவனவற்றைக் குடித்து மகிழ்கிறார்கள். வாழ்க்கைக்குத் தாம் வாழும் மலையே தஞ்சம் என்று இருந்தவர்கள் இன்று பிற மாவட்டங்கள், பிற மாநிலங்கள், பிற நாடுகளில் தங்கி நற்பணி புரிகின்றனர். நோய் வந்து விட்டால் கோடங்கியும் மந்திரவாதியுமே கதி என்று வாழ்ந்தவர்கள் இன்று மருத்துவமனைகள் சென்று மருத்துவ உதவி பெறுகின்றனர். மருத்துவத்துவத் துறையில் ஆண், பெண் எனப் பலர் பணிபுரிகின்றனர். மூங்கில் தட்டிகளைச் சுவராகவும் புல்லைக் கூரையாகவும் கொண்ட குடில்களில் வாழ்ந்தவர்கள் தற்போது மாடி வீடுகளைக் கட்டி வாழ்கிறார்கள். அருட்பணியாளர்களைக் கண்டால் ஓடி ஒளிந்தவர்கள் இன்று அவர்களிடம் உள்ளக்கிடக்கையைப் பகிர்ந்து கொள்ளும் அளவிற்குப் பழகி விட்டார்கள். சமூகம், அரசியல் ஆகியனவற்றைப் பற்றி ஏனோ தானோ என்று எண்ணியவர்கள் இன்று அரசியல் தலைவராகப் பஞ்சாயத்துப் பொறுப்பாளர்களாக மக்கள் பணி ஆற்றி வருகிறார்கள்.

தொற்காள் தையல் பயிற்சி மையங்கள்.

மலைகளில் வாழும் மக்களின் பொருளாதார மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு தையல் பயிற்சி மையங்கள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இவைகள் மூலம் குறிப்பாக குடும்ப பொருளாதாரம் உயர்வடைகிறது. வாழைக்குழி, புத்திராம்பட்டு, கிளாக்காடு, புதுப்பாளப்பட்டு போன்ற இடங்களில் இப்பணி தொடங்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது.

பகல்நேர சிறுவர் பாதுகாப்பு மையங்கள் (Day Care Centre)

இளஞ்சிறுவர்களைக் கிறிஸ்துவிற்குள் வழி நடத்தும் நோக்கில் பகல் நேர சிறுவர் பாதுகாப்பு மையங்கள் தொடங்கப்பட்டு நடைபெறுகின்றன. 1997 ஜூலை முதல் வஞ்சிக்குழி பணித்தளத்திலும் 2001 செப்டம்பர் முதல் ஆலனூர் பணித்தளத்திலும் இம்மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இதற்குரிய பொருளுதவிகளை இந்தியன் ஹில்பே இயக்கத்தினர் செய்து வருகின்றனர். இப்பணிகள் மூலம் இறையரசு எழுச்சிப் பெறுகிறது.

பிறரிடம் நெருங்கிப் பழகிவிட்டால் ஜாதி கெட்டுவிடும் என எண்ணியவர்கள் இன்று நாகரிகம் பெற்று அனைத்துச் சாதி மக்களிடமும் நன்றாகப் பழகுகிறார்கள். ஊரைப் பற்றியும் மக்களைப் பற்றியும் ஒன்றும் தெரியாதவர்கள் இன்று உலகைப் பற்றியும், மக்கள் இனங்களைப் பற்றியும் அறிந்து வைத்துள்ளார்கள். கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று வாழ்ந்தவர்கள் இன்று ஊர்கள் தோறும் ஒளிபெற்றுத் திகழும் ஆலயங்களை அமைத்து, அதில் ஆண்டவரைத் தொழுகிறார்கள். இத்தகைய பெரும் மாற்றத்துக்குக் காரணம் மிஷனெறிகள் மேற்கொண்ட கல்விப் பணியும் இறைப்பணியும் மருத்துவப் பணியுமே ஆகும். இன்று மலைமக்கள் திருச்சபைகளைப் பெருக்கும் விசுவாசிகளாய்த் திகழ்கிறார்கள். கனி கொடுத்தல், சாட்சி கூறுதல் ஆகியவற்றை தங்கள் கடமையாகக் கொண்டுள்ளனர்.

கிறிஸ்தவத் திருச்சபைகள் பல தன்னை மறந்து, நிலையிழந்து, கண்ணயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும் வேளையில், ஆதிவாசி மக்கள் கிறிஸ்துவின் சேனை வீரர்களாய் எழுந்து வருவது இறைச்சித்தத்தின் வெளிப்பாடாகும். இன்றையத் திருச்சபைக்கு 'ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு மிஷனெறி' என்ற தாரக மந்திரம் ஏற்புடையதாக மாற வேண்டும். காலம் பொன்னானது. பொன்னைக் கூட விலை கொடுத்து வாங்கலாம். ஆனால் காலத்தை எவரும் விலை கொடுத்து வாங்க முடியாது. காலத்தை விலை கொடுத்து வாங்கும் அளவு செல்வமுள்ள மனிதர் உலகில் எவருமில்லை. பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் சமூகப்பணிகள் மூலம் கல்வராயன், ஜவ்வாது, கொல்லி மலைப் பகுதிகள் வியத்தகு மாற்றங்களை விரைவாகப் பெற்றன என்பது வரலாறாகும்.

இகத்தினில் ஊழியம் அகத்தியம் நிறைவேற
இயேசுனை அழைத்தாரல்லோ
மகத்துவ வேலையை மறந்து தூங்குவாயானால்
பகற்காலம் முடியும் இராக்காலத்தில் என்ன செய்வாய்
காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில்
கண்ணீர் விடுவாயே.

11

முன்னேற்றப் பணிகள்

"இயேசு திரளான ஜனங்களைக் கண்டபொழுது அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தோய்ந்து போனவர்களும் சிதறடிக்கப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள் மேல் மனதுருகி, தம்முடைய சீஷர்களை நோக்கி; அறுப்பு மிகுதி. வேலையாட்களோ கொஞ்சம் ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள் என்றார்" (மத் 9:36-38)

இயேசுக்கிறிஸ்துவை அறிந்திராத மக்களுக்கு நற்செய்தியை அறிவிப்பது ஒரு கிறிஸ்தவனின் பிரதான வேட்கையாக மாற வேண்டும். அவ்வேட்கையைப் பிறருக்குப் பகிர்ந்து கொள்ளத் துடிக்கும் ஆன்மீக அறுவடையாளர்கள் அருட்பணிக்கு அதிகமானோர் தேவை. பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிரம்ப வேண்டும் என்கிற துடிப்புக்கு ஆட்பட்டோர் பலர், பல்வேறு விதங்களில் ஊழியங்களைத் தாங்கினார்கள். நமது தேசத்தில் 1652 மொழிகள் பல்வேறு இன மக்களால் பேசப்படுகின்றன. அவைகளில் 32 மொழிகளில் மட்டுமே பரிசுத்த வேதம் முழுவதுமாக மொழிபெயர்க்கப்பட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது. அதுபோல் 3000 சாதி மக்கள் இந்நாட்டில் வாழ்கிறார்கள். அவர்களில் 300 சாதி மக்களுக்கு மட்டுமே சுவிஷேசம் அறிவிக்கப்பட்டுள்ளது. மீதி 2700 சாதி மக்களைப் பற்றியக் கரிசனை நமக்கு வேண்டும். இத்தகைய மக்களுக்குக் கிறிஸ்துவை அறிவிக்க திருச்சபைகளில் காணப்படும் திறமையும் அர்ப்பணமும் கிருபையும் பெற்ற திரளான இளைஞர்களைக் கண்டுபிடிப்பது மிகப்பெரிய பணியாகும். இப்பணிக்குத் தாங்களாகவே முன்வந்து கூடி ஜெபித்து, திட்டம் பெற்று ஊழியத்திற்குச் சென்றவர்கள் பலர். ஊழியர்களைத் தாங்கி அனுப்பிய ஜெபக்குழுக்களும் பல. மக்களிடையே சென்று மிஷனெரி உணர்ச்சியை ஊட்டி, அவர்களது நன்கொடைகளைப் பெற்று ஊழியத்தைத் தாங்கியோர்களும் பலர். அத்தகைய அமைப்புகள் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியத்திற்கு எவ்விதங்களில் உதவின என்பதை இங்கு நோக்கலாம்.

1. திருமக்களின் பணி (Lay Members Service)

சுவிசேஷ ஜெபக்குழுவின் ஆரம்ப கால ஊழியத்தின் தூண் போன்றவர்களுள் அருள்திரு. எம். இராஜையன் ஒருவராவார். இவர் மயிலாடித் திருச்சபையில் போதகராய்ப் பணியாற்றியபோது ஊழியத்தில் ஆர்வம் கொண்ட பதிமூன்று நபர்களைக் கண்டு பிடித்தார். அவர்களை 14-1-1975 ஆம் நாள் மயிலாடி ஆலயத்தில் கூடிவரச் செய்தார். அவர்களுக்கு தமிழ்நாட்டின் மலைப்பகுதிகளில் தமிழ்மொழி பேசும் ஆதிவாசி மக்களின் நிலைமையை விளக்கிக் கூறினார். அத்துடன் பேராய சுவிசேஷ ஜெபக்குழு அம்மலை மக்கள் மத்தியில் ஆற்றிவரும் அருட்தொண்டுகளை விவரித்ததுடன், ஒவ்வொரு மனிதனும் ஊழியத்தில் ஈடுபடுவது கடைசி கால தேவை என்பதையும் வற்புறுத்தினார். நம்முடைய சொந்த ஜனத்திற்காக நாம் திறப்பில் நிற்காவிட்டால் இந்திய ஜனங்களின் வாஞ்சையை நிறைவேற்றுவது யார்? என உணர்ச்சி பொங்க பேசினார். இப்பேச்சினைக் கேட்ட மக்களின் உள்ளத்தில் இறைபாரம் அழுத்தியது; அழைப்பிற்கு அடிபணிந்தார்கள். அன்றே அருள்திரு. எம். இராஜையன் அவர்கள் **அருட்பொழிவு பெறாதோர் தொண்டர் அமைப்பு** என்ற ஒன்றினை தொடங்கினார்கள். கோட்டையடி சபையைச் சேர்ந்த திரு. டி. ஏசுஞானதாஸ் என்ற ஆசிரியர் அவ்அமைப்பின் கன்வீனராக நியமிக்கப்பட்டார். அது முதல் பணியின் வேகம் அதிகரித்தது. இக்குழுவினர், குமரிப் பேராயச் சபைகளைச் சந்தித்து சிறப்புக் கூட்டங்கள் நடத்தியும் கதாகாலச் சேபம் நிகழ்த்தியும் சபைகள் தோறும் சென்று மலைநாட்டு ஊழியத்தைக் கூறிவந்தார்கள். அதனால் பல சபைகள், சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியத்தில் பங்கு பெறத் தொடங்கின. பொருளால் தாங்கும் மக்களும் முழங்கால் ஊன்றி ஜெபிக்கும் மக்களும் சபைகள் தோறும் எழுந்தனர்.

அருள்திரு. எம். இராஜையன் அவர்கள், மீண்டும் 16-3-1975 ஆம் நாள் அருட்பொழிவு பெறாதோர் தொண்டர் அமைப்பினைப் புத்தளம் வட்டாரத்தில் தொடங்கினார்கள். இதில் சீயோன்புரம், குளத்துவிளை, புத்தளம் போன்ற போதக மண்டல சபைகளிலிருந்து ஆர்வமுள்ள பலர் இணைந்து கொண்டனர். இவ்வமைப்புக்கு அருள்திரு. எ. மாசில்லாமணி தலைவராகவும், புத்தளம் திரு. பால் ஆசிரியர் செயலராகவும் நியமிக்கப்பட்டார்கள். இக்குழுவினர் ஒழுங்காக கூடி ஜெபித்ததுடன், பக்கத்து சபைகளுக்குச் சென்று பணியின் தேவைகளைக் கூறியும் வந்தனர். இத்தொண்டர்களின் மனதில் மற்றவர்களுக்காக வாழ வேண்டும் என்ற சிந்தனை மேலோங்கியது. இத்தகைய மன எழுச்சிகளை இறைவன் மக்களின் உள்ளங்களில் கொடுத்தார்.

அ. எழுப்புதல் குழு

என் ஜனத்தின் மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக் கூடும், என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படி சகிக்கக் கூடும் என்று கூறின யூத இளம் பெண்ணாகிய எஸ்தரைப் போன்று, இந்திய நாட்டின் மீது கரிசனை கொண்ட பலர் எழுந்தனர். சபைகள் தோறும் நற்செய்திக் கூட்டங்கள் மற்றும் சிறப்பு நிகழ்வுகள் நடத்தி அவற்றின் மூலம் மலை ஊழிய செய்தியை மக்களுக்கு அறிவிக்கத் தீர்மானித்தனர். இதற்காக 1981 ஆம் ஆண்டு எழுப்புதல் குழு ஒன்று அருட்பொழிவு பெறாதோரால் ஏற்படுத்தப்பட்டது. இதன் கன்வீனராக அருள்திரு. சாமுவேல் கிறிஸ்துதாஸ் அவர்கள் செயல்பட்டார்கள். இக்குழுவினரின் எழுப்புதல் பணி மூலம் பல சபைகள் மலைநாட்டு ஊழியம் குறித்து அறிந்தன. மக்களின் மனதில் மிஷனெறிப் பணிகுறித்த உள்ளுணர்வு அதிகரித்தது.

ஆ. இசைக்குழு

இயேசுவை அறியும் அறிவே விசுவாசமாகும். அவரை அறிவிக்க எழும் வாஞ்சையே ஆத்தும பாரமாகும். இத்தகைய உறுதிப்பாடுகள் கொண்ட உள்ளங்கள் பல திருச்சபைகளில் எழுந்தன. மலைநாட்டு ஊழியச் செய்திகளை இசை வாயிலாகவும், கதாகாலட்சேபம் வாயிலாகவும் அறிவிக்க இசைக்குழு முடிவு செய்தது. இக்குழு முறையாக 1984 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இக்குழுவினர் திருச்சபைகளில் நடைபெறும் சங்கப் பண்டிகைக் கொண்டாட்டங்கள், சபைநாள் விழாக்கள் மற்றும் சிறப்புக் கலை நிகழ்ச்சிகள் போன்றவைகளில் கலந்து இசைவழி செய்தி கொடுத்தனர். அச்செய்திகளிலும் பாட்டுகளிலும் மலை ஊழியத்தின் நோக்கம், தேவைகள், அங்குள்ள மக்களின் நிலைகள் போன்றன கருப்பொருளாக இடம் பெற்றன. குறிப்பாக நாகர்கோவில், கொட்டாரம் ஆகிய சேகரங்களிலுள்ள போதகர்கள் இவ்வாறான அமைப்புகளைத் தலைமைத் தாங்கி நடத்தினர்.

இ. வளர்ச்சி நிலை

மிஷனெறிப் பணி குறித்தப் பாரம் சபைகள் தோறும் பரவின. ஜெபக்குழுக்கள் பல கடமை உணர்வோடும் ஆத்துமப் பாரத்தோடும் செயல்பட்டன. பணியில் ஆர்வம் கொண்டவர்கள் ஆதரவாளர்களாக மாறினர். தன்னார்வத் தொண்டர்கள் பலர் எழும்பினர். ஆசிரியர்களாக, அலுவலர்களாக மற்றும் பல்வேறு துறைகளில் பணியாற்றிய ஆர்வலர்கள் பலர் எவ்வித ஊதியமுமின்றி ஊழியத்தைத் தாங்கவும், சபைகள் தோறும் அறிவிக்கவும் முன் வந்தனர். பெயர், பெருமை மற்றும் புகழ்ச்சியை எதிர்பாராமல் இத்தொண்டர்கள் நிறைவேற்றியப் பணி சுவிசேஷ

ஜெபக்குழுவின் வளர்ச்சிக்கு ஒரு திருப்புமுனையாயிற்று. கிடைத்தப் பொறுப்புகளைக் கடமை உணர்வோடு ஆற்றிய மேலவர்களின் பணி காலத்தால் அழியாதது ஆகும்.

பேராய சுவிசேஷ ஜெபக்குழு மூலமாய் வட்டாரப் பொறுப்பாளர்கள் பலர் 20-6-1988 முதல் ஆங்காங்கே பணியாற்றிட நியமனம் பெற்றனர். அவர்களோடு இணைந்து சபைகளைச் சந்திப்பதும், ஜெபக்குழுக்களை ஊக்குவிப்பதும், நிதியினைத் திரட்டுவதும் மேற்கூறிய தன்னார்வத் தொண்டர்கள் ஆற்றிவரும் மங்கா சேவை ஆகும். கிறிஸ்துவின் பணியில் கீழ்ப்படிதலும் செவி கொடுத்தலுமே உத்தமம் என்பது இவைகள் மூலம் புலனாகிறது.

2. அந்நியாட்சாதீன சுவிசேஷ ஜெபக்குழு நாள்

பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள். (அப் 1:8) என்று இயேசு கிறிஸ்து கூறிய வசனக் கருத்துக்கள் பிற்காலம் நல்ல ஆத்தும அறுவடையினைத் தந்தன. பெந்தேகோஸ்தே நாள் வந்தபோது சீடர்கள் பெலன் பெற்றார்கள். கிறிஸ்துவைப் பகிர்ந்து கொள்ளப் புறப்பட்டுச் சென்றார்கள். இயேசுவின் பிறப்பு, ஊழியம், பாடு மரணம், உயிர்த்தெழுதல் அவரது பரமேறுதல் ஆகியவற்றைத் தெளிவாக மக்களுக்கு அனுபவம் மூலமாக கூறினார்கள். மேசியா இவர்தான் என்பதை ஆதாரத்துடன் விளக்கினார்கள். ஜீவாதிபதியைக் கொலை செய்தீர்கள். அவரைத் தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம் என முழங்கினர். (அப் 3:15). மக்கள் கூட்டம் கூட்டமாக சபையில் ஐக்கியமானார்கள். தேவ வசனம் விருத்தியடைந்தது அந்தியோகியா திருச்சபை பவுல், பர்னபா போன்றவர்களை மிஷனெறிகளாகப் புறதேசங்களுக்கு அனுப்பியது. (அப் 13:1-2) ஊழியம் வேகமாக பரவியது. பாடுகள், உபத்திரவங்கள், இக்கட்டுகள் நெருக்கடிகள் என பல எதிர்ப்புகள் அவர்களது விசுவாசப் பயணத்தில் வந்தன. அவைகளை தமது விசுவாச கூர்மைக்கும் உத்தமத்துக்கும் கர்த்தர் வழங்கும் அருள்வரம் என நினைத்து பவுல் தனது பணியைத் திடப்படுத்தினார். இத்தகைய மிஷனெறிப் பணிகளுக்கு பரிசுத்த ஆவியானவரே இயக்குநராகச் செயல்பட்டு வருகிறார்.

குமரிப் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் வளர்ச்சிக்கு பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதலே மிக முக்கியமான காரணமாகும். இப்பேராய மக்கள், மலைநாட்டுப் பணியில் மிகப்பெரிய சாதனையைச் சாதிக்க

மேலும் என்ற பல அதிசயத்தையும், ஊக்கத்தையும் தந்தவர் பரிசுத்த ஆவியானவரே. இங்குள்ள மக்கள் தனியாக ஜெபித்தார்கள், கூடி ஜெபித்தார்கள், கொடுத்தார்கள், ஊழியர்களை அனுப்பினார்கள், புறப்பட்டுச் சென்றார்கள். வாக்குக் கொடுத்த தெய்வம் கைவிடவில்லை. எனவே வருடந்தோறும் வருகிற பெந்தேகோஸ்தே என்னும் திருநாளை எல்லாச் சபைகளிலும் சுவிசேஷ ஜெபக்குழுவின் நாளாக கொண்டாட வேண்டுமென்று ஜெபக்குழு தீர்மானித்தது. அதன்பேரில் 27-02-1978 ஆம் நாள் பேராய சபை பரிபாலனக்குழுவிற்கு ஜெபக்குழு மனு செய்தது. அம்மனுவை சபை பரிபாலனக்குழு பரிசீலித்து பிரதமப் பேராயரின் பதிலாள் டானியல் ஆபிரகாம் அவர்கள் காலத்தில் தீர்மானம் நிறைவேற்றியது. அத்தீர்மானம் 1980 மேய் 25 ஆம் நாள் முதன்முதலாக நடைமுறைக்கு வந்தது. அப்போதைய பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் இதற்கு முழு ஆதரவை நல்கினார். அத்தீர்மானத்தின்படி அன்றையதினம் சபைகளில் படைக்கப்படும் காணிக்கைகளை ஜெபக்குழுவின் ஊழியங்களுக்காகக் கொடுக்கவும் அனைவரும் ஒப்புக் கொண்டனர்.

அ. பெந்தேகோஸ்தே என்னும் திருநாள்

1980 மே 25-ஆம் நாள் பெந்தேகோஸ்தே என்னும் தூய ஆவியின் திருநாள் சுவிசேஷ ஜெபக்குழுவின் நாளாக முதல் முறையாக, பேராயத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. தொடர்ந்து எல்லா ஆண்டுகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்நாளில் பேராயத்தின் அனைத்துச் சபைகளிலும் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்கள் குறித்தும், பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடுகள் குறித்தும் வல்லமையாகப் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. மக்களின் உள்ளங்களில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு, ஊழியத்தை ஆர்வமோடு தாங்குகின்றனர். மட்டுமின்றி சிறப்புக் காணிக்கைகளையும் உற்சாகமாகப் படைக்கின்றனர். ஜெபக்குழுவின் நிதிநிலையும் சந்திக்கப்பட்டு வருகிறது. இதனால் ஒடுக்கப்பட்ட மக்கள், ஓரங்கட்டப்பட்ட மக்கள், சமுதாயத்தினரால் வெறுக்கப்பட்ட மக்கள் மூடநம்பிக்கைகளால் கட்டப்பட்ட மக்கள் விடுதலை நாதரின் படையில் நாள்தோறும் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.

3. நற்செய்திப் பெருவிழா

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவானது தன்னுடைய செயல்பாடுகளை பேராயத்திற்குள்ளும் வெளியேயும் நன்கு அறிமுகப்படுத்துதல் வேண்டி நற்செய்தி பெருவிழா ஒன்று நடத்தத் தீர்மானித்தது. அதன் தொடக்கமாக நாகர்கோவில் அண்ணா விளையாட்டு மைதானத்தில் வைத்து 1982 ஜனவரி 13 முதல் 17 ஆம் நாள் வரை நற்செய்திப் பெருவிழா

நடைபெற்றது. அதில் சகோதரர் டி.ஜி.எஸ். தினகரன் அவர்கள் இறைச்செய்தி அளித்தார்கள். கூட்டத்தைப் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் எல்லா நாளும் தலைமைத் தாங்கி நடத்தினார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி, ஊழியத்தை அறிந்தும், இறை ஆசி பெற்றும் சென்றனர். இதன் விளைவால் ஊழியத்திற்குக் கொடுப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. சுவிசேஷ ஜெபக்குழுவின் நிதிநிலைமையும் கணிசமாக உயர்ந்தது. திட்டங்கள் பல புதிதாக உருவாயின.

4. முன்னேற்றப் பணியாளர்கள் (Promotional Workers)

இயேசு கிறிஸ்துவை வாழ்வில் ஒரு முறையேனும் சொல்லக் கேட்டிராத இந்தியருக்கு அவரே முழு முதற்கடவுள் என்றும், பாவப்பிணி தீர்க்கும் பரிகாரி என்றும், அறிவிப்பது கிறிஸ்தவர்களின் கடமையாகும். சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியம் ஆலமரம்போல் வளர்ந்து விழுதுவிட்டுப் படர்ந்து பரவியது. மிஷனெறிகள் ஒன்றன்பின் ஒன்றாக ஊழியத்திற்கு அனுப்பப்பட்டனர். பணிக்களங்களில் ஊழியம் விரிவடைந்தது போல தேவைகளும் அதிகரித்தன. அத்தேவைகளை நிறைவு செய்வதற்குச் சபைகள், குடும்பங்கள், நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களிடையே ஜெபக்குழு நெருங்கியத் தொடர்பினை உருவாக்கிக் கொண்டது. இவர்களையெல்லாம் கூட்டிச் சேர்த்து, முன்னேற்றத் திட்டத்தைச் செயல்படுத்த முன்னேற்றப் பணியாளர்கள் தேவை என ஜெபக்குழுவின் செயற்குழு தீர்மானித்தது. ஜெபக்குழுவின் முதல் முன்னேற்றப் பணியாளராகக் கோட்டையடி திரு. எ.பி. கிப்ஸன் டேனியல் அவர்கள் 9-10-1975-இல் நியமிக்கப்பட்டார். சிலகாலம் பணியாற்றிய அவர், வேறொரு ஊழியத்திற்குச் சென்றதால் முன்னேற்றப் பணியைத் தொடர முடியவில்லை. அதன்பின்னர் ஒரு குறிப்பிட்டக் காலத்திற்காக திரு. என். விக்டர் அவர்கள் 27-1-1978-ஆம் நாள் நியமிக்கப்பட்டார். தொடர்ந்து 1-5-1979-இல் திரு. ஐ. அருமைநாயகம் அவர்களும் 1-10-1980 முதல் திரு. எ. செல்வராஜ் அவர்களும் முன்னேற்றப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டார்கள். மீண்டும் திரு. என். விக்டர் அவர்கள் 1-6-1981 முதல் முன்னேற்றப் பணியாளராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றினார்கள்.

அ. பணி வட்டாரங்கள் உருவாதல்

முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் அருட்பொழிவு பெறாதோருடைய அயராத உழைப்பினால் மலைநாட்டு ஊழியம் குறித்த உற்சாகம் பேராய சபைகளில் பெருகியது. பாவத்தில் கட்டப்பட்டிருக்கும் தாய்நாட்டு மக்களின் விடுதலைக்காகத் தங்களை அர்ப்பணித்தப் பலர் ஊழியம் செய்வதற்கென்று எழுந்தனர். அவர்கள் மலைக்கு

அனுப்பப்பட்டார்கள். இத்தகைய மிஷனெறிகளைத், தொடர்ச்சியாகத் தாங்கும் ஜெபக்குழுக்களை, சபைகளை, தனிமனிதர்களைச் சந்தித்து ஊக்குவித்து, விரிவாக்கும் பொறுப்பில் முன்னேற்றப் பணியாளர்கள் ஈடுபட்டனர்.

ஒரே ஒரு முன்னேற்றப் பணியாளரால் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளையும் சந்திப்பது கடினமானதாகத் தெரிந்ததால், நிர்வாக வசதிக்காக இரண்டு பணி வட்டாரங்களாக பிரிக்கத் திட்டமிட்டனர். அதன் பேரில் கிழக்கு பணி வட்டாரம் என்றும் மேற்கு பணி வட்டாரம் என்றும் பிரித்தனர். கிழக்கு வட்டார முன்னேற்றப் பணியாளராக அருள்திரு. என். விக்டர் அவர்களும் மேற்கு வட்டார முன்னேற்றப் பணியாளராக அருள்திரு. கெ. ஆர். வில்லியம் அவர்களும் நியமிக்கப்பட்டார்கள். மென்மேலும் நற்செய்திப் பணியானது மலைகளில் விரிவடையவே பேராயச் சபைகள் முழுவதையும் கிழக்கு, மத்தியம் மற்றும் மேற்கு என்று மூன்று பணி வட்டாரங்களாகப் பிரித்தனர். இப்பாகுபாடு 16-7-1991 முதல் நடைமுறைக்கு வந்தது. இம்மூன்று வட்டாரங்களுக்கும் திரு. ராபின் என். தாஸ் (கிழக்கு) திரு. ஜி. கிறிஸ்டோபர் டானியல் (மத்தியம்) அருட்திரு. என் விக்டர் (மேற்கு) ஆகியோர் முன்னேற்றப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டார்கள். கிழக்கு வட்டாரத்திற்கு திரு. ஜி. சாம் கில்பர்ட் ராஜன் என்பவர் கூடுதல் முன்னேற்றப் பணியாளராக நியமிக்கப்பட்டார்.

ஆ. பணிவட்டாரங்கள் அதிகரித்தல்

ஊழியம் மேலும் விரிவடைந்து வளர்ந்தது. இதனால் முன்னேற்றப் பணியை மேலும் விரிவாக்க வேண்டியது அவசியமாயிற்று. அதன்படி 1998 முதல் கொட்டாரம் பணி வட்டாரம், நாகர்கோவில் பணி வட்டாரம், நெய்யூர் பணி வட்டாரம், மார்த்தாண்டம் பணி வட்டாரம், குலசேகரம் பணி வட்டாரம் என ஐந்து வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு வட்டார சபைகளுக்கும் தனித்தனி முன்னேற்றப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். திரு. கிறிஸ்டோபர் டானியல் - கொட்டாரம் வட்டாரத்திற்கும், திரு. பீட்டர் சிலுவை - நாகர்கோவில் வட்டாரத்திற்கும், அருள்திரு. கெ.ஆர். வில்லியம் - நெய்யூர் வட்டாரத்திற்கும், திரு. ஜெ. ரமேஷ் - மார்த்தாண்டம் வட்டாரத்திற்கும் திரு. ஜி. சாம் கில்பர்ட் ராஜன் - குலசேகரம் வட்டாரத்திற்குமுரிய முன்னேற்றப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டார்கள். இம்முன்னேற்றப் பணியாளர்களை ஜெபக்குழுவின் தலைவர்கள் கண்காணித்து, அவர்களின் பணியினை மதிப்பீடு செய்து வருகிறார்கள். முன்னேற்றப்பணியினைக் கண்காணிக்கும் ஆய்வுக் குழு கன்வீனராக அருள்திரு. எம். ஆமோஸ் அவர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். பிற்காலம் திரு. ஆல்பின் அவர்கள் குலசேகரம்

வட்டார முன்னேற்றப் பணியாளராகப் பொறுப்பேற்றதும், திரு. ஜி. சாம் கில்பர்ட் ராஜன் அவர்கள் நெய்யூர் வட்டார கூடுதல் முன்னேற்றப் பணியாளராக நியமிக்கப்பட்டார்கள்.

நாகர்கோவில் வட்டாரப் பகுதிகளைச் சந்தித்து ஜெபக்கூட்டங்களைப் புதிதாகத் தொடங்குவதிலும், நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஜெபக்கூட்டங்களை எழுச்சியூட்டுவதிலும் திரு. சாம் அருள்மணி அவர்கள் கன்வீனராகச் செயல்பட்டார்கள். இதனால் மிஷனெறிப் பணிகளுக்காக ஜெபிப்போர் இல்லங்கள் தோறும் உருவாயினர். மேற்கூறியவைகள் தவிர சேகர அளவில், சபை அளவில், வட்டார அளவில் தேவைக்கேற்ப தியான முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதனால் பலர் ஆத்மீக நன்மைகளைப் பெறுவதுடன், தன்னார்வத் தொண்டர்களாக இவ்வியக்கத்தில் இணைந்தும் வருகின்றனர். உயிர்த்தெழுந்த இயேசுவை உலகிற்குக் காட்டமுனைந்து செயல்படும் இத்திருத்தொண்டர்களின் பணி என்றென்றும் போற்றுதலுக்குரியது.

5. கிறிஸ்மஸ் மகிழுறவுக் கூடுகைகள் (Xmas Get Together)

இயேசு கிறிஸ்து நற்செய்தியாக உலகில் தோன்றினார். இருண்ட வாழ்விலிருந்த மக்களுக்கு விடுதலை கொடுத்தார். கொடிய நோயால் பல வருடங்கள் கஷ்டப்பட்டோர், சமாதானமின்றி வாழ்ந்தோர் அவரால் ஆறுதல் அடைந்தனர். அவர் சிலுவையில் சிந்திய இரத்தத்தினாலே பாவத்திலிருந்து சுத்தமாகி விடுதலை வாழ்வைச் சுவைத்தோர் பலர். இன்றைய மனுக்குலம் அவருடைய இரண்டாம் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்க, கிறிஸ்து எங்களுக்காக உலகில் வந்தார் என்ற முதல் வருகையை அறியாத மக்களுக்கு விரைவாக நற்செய்தியை அறிவிக்க மக்கள் பலர் முன்வந்தனர். இத்தகைய விசுவாசிகளை வருடத்தில் ஒருமுறை கூடி வரச்செய்து, அக்கூட்டத்தில் வருடம் முழுவதுமுள்ள பணிச் செய்திகளைப் பரிமாறிக் கொள்வதுடன், அவர்களுடைய கருத்துக்களையும் கேட்டுக் கலந்தாலோசித்து மகிழுறவுக் கொள்ளும் கூடுகைகளைக் கிறிஸ்துமஸ் காலங்களில் நடத்த ஜெபக்குழுவினர் தீர்மானித்தனர். அதன்படி முதல் கிறிஸ்மஸ் மகிழுறவுக் கூட்டம் 11-12-1979 ஆம் நாள் பேராயர். ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் தலைமையில், நாகர்கோவில் கஸ்பா சபையின் வளாகத்தில் அமைந்துள்ள ஆலன் நினைவு அரங்கில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து கிறிஸ்மஸ் மகிழுறவுக் கூடுகைகள் ஒவ்வோர் ஆண்டும் பல இடங்களில் நடைபெற்று வருகின்றன.

அ. மிஷனெறிப் பணித்தளங்களில் மகிழுறவுக் கூடுகைகள்

அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் முதன்முதலாக ஊழியம் ஆரம்பிக்கப்பட்ட தேக்கம்பட்டுக் கிராமத்தில் 1977 டிசம்பரில் கிறிஸ்மஸ் விழாவினை நடத்தத் தீர்மானித்தார். அதன்பேரில் பிள்ளைகளுக்குப் பாடல்கள், சம்பாஷணைகள், வசனங்கள் ஆகியவற்றைக் கற்றுக் கொடுத்ததுடன், பயிற்சியும் கொடுத்தார். கிறிஸ்மஸ் விழா நாளன்று கிராமத்திலுள்ள அனைத்துக் கிறிஸ்தவ பிள்ளைகளும் பெரியவர்களும் தங்கள் கைகளில் கொடிகளைப் பிடித்துக் கொண்டு, பாடல்கள் பாடி அக்கிராமம் முழுவதும் பவனியாகச் சென்றார்கள். முடிவில் ஓரிடத்தில் கூடி கிறிஸ்மஸ் கலைவிழா நிகழ்ச்சியினை நடத்தினர். இவைகளைக் கண்ட அக்கிராம மக்கள் கொண்ட இன்பத்திற்கு அளவேயில்லை. இதனால் எலியாஸ் அவர்களின் உள்ளம் இறைவனை மகிமைப்படுத்தியது. அதன் பின்னர் ஒவ்வொரு கிராமத்திலும் கிறிஸ்மஸ் விழா நிகழ்ச்சிகள் மிஷனெறிகள் மூலமாக நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிகழ்ச்சிகள் நடைபெறும் கிராமங்களில் அலங்கரிப்புகள் செய்யப்படுகின்றன. கிராமத்தின் பிள்ளைகள், பள்ளி மாணவர்கள் மற்றும் இரவுப்பள்ளி பிள்ளைகள் ஆகியோர் கைகளில் கொடிகள் ஏந்தி நிகழ்ச்சியில் உற்சாகத்தோடு பங்கெடுக்கின்றனர். கூட்டத்தின் முடிவில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்படுகிறது. நிகழ்ச்சியில் பங்குபெறும் குழந்தைகளுக்குப் பரிசுகளும் வழங்கப்படுகின்றன. இவைகளுக்குத் தேவையான நிதி உதவிகளை பேராய சபைகளே சந்தித்து வருகின்றன.

ஆ. பேராய சபைகளில் மகிழுறவுக் கூடுகைகள்

மலைநாட்டு மக்களுக்குக் கிறிஸ்மஸ் காலங்களில் நடைபெறும் விழாக்களை நடத்துவதற்குரிய நிதி உதவியினைத் தாராளமாகக் கொடுக்கப் பேராய சபைகள் முன்வந்தன. சேகரங்கள் அளவில், அதன் கீழுள்ள சபைகள் இணைந்து சேகரத்துப் போதகர் தலைமையில் மகிழுறவுக் கூடுகைகள் நடத்தப்பட்டன. இவைகளில் சிறப்புச் செய்திகள் இடம் பெற்றதுடன் கிறிஸ்மஸ் நிகழ்ச்சி நிரல்களும் சிறப்பாக அமைந்தன. கூட்டத்தின் நிறைவில் கிறிஸ்மஸ் தின்பண்டங்கள், தேநீர் ஆகியன ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டன. மேற்கூறிய செலவினங்களுக்காக மிகவும் குறைந்த கட்டணம் பங்கு பெறுவோரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. இக்கூடுகையின் மூலம் கிடைக்கும் நிதி அனைத்தும் மலைப்பகுதியில் கிறிஸ்மஸ் விழா கொண்டாடும் குழந்தைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டன. பலர் இந்நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மலையில் வாழும் பிள்ளைகளுக்காகக் கிறிஸ்மஸ் பரிசுகளையும் புத்தாடைகளையும் வழங்கி சிறப்பித்தார்கள். அவை மிஷனெறிகள்

மூலமாக பணிக்களங்களிலுள்ள குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன. இவ் மகிழுறவுக் கூடுகைகள் சபை மக்களுக்கும் மலைவாழ் மக்களுக்கும் ஒரு பாலமாய் அமைந்தன. இக்கூடுகைகளில் பங்கு கொள்வோர் பேரானந்தம் அடைந்து மன மகிழ்ச்சியைப் பிறரிடம் பகிர்ந்து கொள்வதுமுண்டு.

மேற்கூறிய மகிழுறவு கூடுகைகள் மூலம் மலை ஊழியங்களைக் குறித்த ஈடுபாடு, திருச்சபையின் ஒவ்வொரு அங்கத்தினர்களையும் ஆட்கொண்டது. இதனால் திருச்சபையாரும் திருச்சபைக்குள் செயல்படுகின்ற கிளை சங்கங்களும் மலைப்பணியைத் தாங்குவதுடன், கிறிஸ்மஸ் காலங்களில் நடைபெறும் இக்கூடுகைகளில் பங்கேற்று மலைக்குழந்தைகளுக்கு ஆதரவு நிதியையும் பொருட்களையும் சேகரித்துக் கொடுக்கும் காட்சி, காண்போரையே வியக்கச் செய்விக்கும் அளவில் உள்ளது. உள்ளத்தில் இயேசு கிறிஸ்து இருக்கும்போது பண ஆதாயம், மண் ஆதாயம், போன்றவை பின்னுக்குத் தள்ளப்பட்டு, ஆத்தும ஆதாயமே கடமை என்பதை மனிதன் உணர்வான். இவ்வுணர்வுடன் செயல்படும் திருச்சபையின் அங்கத்தினர்கள் சிலுவையின் அன்பை ருசித்தவர்கள் ஆவர்.

6. நற்செய்தி பணி ஆதரவு விற்பனை விழாக்கள்

சுவிசேஷம் எங்கெல்லாம் சென்றதோ அங்கெல்லாம் மக்கள் விடுதலை வாழ்வை அனுபவிக்கின்றனர். அந்தந்த இன மக்களின் சரித்திரங்கள் மாற்றி எழுதப்பட்டு, தேசிய வரலாற்றில் தங்கள் அடையாளங்களைப் பதிக்கின்றனர். இத்தகைய மகத்தான மேம்பாட்டுப் பணியினை பேராய சுவிசேஷ ஜெபக்குழு, தன் சேவையால் செய்து வருகிறது. சோதோம் கொமோராப் பட்டணம் அழிவிலிருந்து தப்ப வேண்டுமென மன்றாட்டு செய்து, திறப்பில் நிற்க, ஆபிரகாம் வாதாட்டான். அதுபோல் இறை அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து மக்கள் பணி செய்ய சென்ற ஊழியர்கள் ஆத்தும அறுவடை பணியுடன் சமூகப் பணிகளையும் செய்தனர். எவ்வாறேனும் மலைமக்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள வேண்டும். நான் அவர்கள் மத்தியில் ஏற்றப்படும் தீபமாக ஒளிர வேண்டும் என்ற வாஞ்சை, நெஞ்சை விட்டு சிறிதேனும் அகலாமல் பணி செய்த நற்செய்தித் தொண்டர்கள் பலர் இவ்வியக்கத்தில், மகத்தான முறையில் உழைத்தார்கள். பணிக்களங்கள் தோறும் ஆலயங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள், ஊழியர் இல்லங்கள், மற்றும் மாணவர் விடுதிகள் போன்றன வேகமாக எழுந்தன. இவைகளுக்குரிய நிதியினை பல அமைப்புகள், தனி நபர்கள் கொடுத்து வந்தாலும், அவை முழுத் தேவையையும் நிவிர்த்தி செய்யும் அளவில் இல்லை. இதனால் இம்மேம்பாட்டுத் திட்டங்களுக்கென தனிநிதி கண்டு பிடிக்கும் அவசியம்

ஜெபக்குழுவிற்கு உருவானது. சபைகள் மூலமாகவும் குழுக்கள் மூலமாகவும் கிடைக்கும் மாதாந்தர நிதிகள், ஊழியர்களுக்கான ஊதியத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டன.

அ. வட்டார அடிப்படையில் நடைபெறுதல்

பொதுத்திட்டங்களுக்குரிய நிதியைக் கண்டுபிடிப்பது ஜெபக்குழுவின் அடுத்த நோக்கமானது. அதன் தலைவர்கள் கூடி முயற்சி செய்து ஒவ்வொரு முன்னேற்றப்பணி வட்டார அளவிலும் ஆண்டிற்கொருமுறை விற்பனை விழாக்கள் நடத்தவும் அவைகள் மூலமாக கிடைக்கும் நிதியைக்கொண்டு, மேற்குறிப்பிட்ட பணிக்கள முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றவும் தீர்மானித்தனர். அதன் பேரில் வட்டார அளவில் விற்பனை விழாக்கள் நடத்தப்படுகின்றன. முதற்கண் ஜெபக்குழுவின் தலைமை அலுவலகத்திலிருந்து, அவ்வட்டாரத்திற்குரிய நிர்ணயத் தொகையும், மொத்த மதிப்பீடு குறித்த விவரங்களும் தெரியப்படுத்தப் படுகின்றன. அதற்குப்பின் ஒவ்வொரு முன்னேற்றப் பணி வட்டார சபை பொறுப்பாளர்கள் மற்றும் நிறுவனப் பொறுப்பாளர்கள் கூடித் திட்டமிடுகின்றனர்.

தங்களுக்குக் கொடுக்கப்பட்டப் பொறுப்பினை நிறைவேற்றிட நன்கொடைகள் சேகரித்தும், விற்பனை விழாக்களுக்குரிய பொருட்களைப் படைக்குமாறும் மக்களை உற்சாகப்படுத்துகின்றனர். விற்பனை விழா நாளன்று விற்பனை நிலையங்கள் அமைத்து அவைகள் மூலமாக காலை மற்றும் மதிய உணவு வகைகள், பலகாரங்கள், கைவினைப் பொருட்கள் போன்றவற்றை விற்பனை செய்கின்றனர். அன்றைய நாள் வாலிபர்கள், பெரியோர்கள், குழந்தைகள் என மக்கள் ஆர்வத்தோடு கூடி பொருட்களை ஏலத்தில் பெற்றுச் செல்கின்றனர்.

இவ்விற்பனை விழாக்கள் அரசு விடுமுறை நாட்களில் நடத்தப் படுகின்றன. பிள்ளைகளையும் கூடி வருவோரையும் உற்சாகப்படுத்தும் நோக்கில் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள், வேத அறிவுப் போட்டிகள், பாடல் போட்டிகள், பேச்சுப் போட்டிகள், ஊழியம் குறித்த கண்காட்சிகள், சிறப்புச் செய்திகள் என பல நிகழ்வுகள் மகிழ்ச்சியூட்டும் விதத்தில் நடைபெறுகின்றன. இடையிடையே மிஷனெறிகள் கலந்து, தங்கள் சாட்சிகளையும் ஊழியம் குறித்த அனுபவங்களையும், பணி செய்யும்போது தங்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளையும் அவற்றை எதிர் கொள்ளும் விதங்களையும் பகிர்ந்து கொள்வர். கூடுகையில் கலந்து கொள்பவர்களுக்கு எவ்வித சளைப்புமே ஏற்படா வண்ணம் விழா நிகழ்வுகள் அமைந்திருக்கும். இறுதியில் குலுக்கல் முறையில் பரிசச் சீட்டுகளின், பரிசுகளைப் பெற்றுச் செல்கின்றனர்.

விற்பனை விழாக்களில் அவ்வட்டாரப் போதகர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் குடும்பமாகக் கலந்து கொண்டு காலை முதல் மாலை வரை அங்கேயே தங்கி பொறுப்புடன் செயல்படுகின்றனர். இதன்மூலம் சபைகளில் மகிழ்ச்சியும், அன்பும், ஒற்றுமை உணர்வும் வளர்வதுடன் மிஷனெறிப் பணியைக் குறித்தப் பாரமும் பெருகி வருகிறது. அனைத்து நிகழ்ச்சிகளும் நல்லொழுக்கத்துடனும், கட்டுப்பாட்டுடனும், தெய்வ பயத்துடனும் நடந்தேறுகின்றன. பொதுவாக பேராயரே இவ்விழாவை தலைமைதாங்கி ஜெபித்துத் தொடங்கி வைக்கிறார். முதல் விற்பனையைத் தொடங்கவும், அதனைப் பெற்றுக் கொள்ளவும் சிறப்புத் தலைவர்கள் அழைக்கப்படுகிறார்கள்.

ஆ. *சென்னைக் கிளைசபையினர்*

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் சென்னைக் கிளையினர் இதன்மூலம் கிடைக்கும் நிதியைப் பயன்படுத்தி பெரிய திட்டங்களைப் பணிக்களங்களில் செய்து வருகின்றனர். ஒவ்வொரு வருடமும் மேற்கூறிய அளவில் விற்பனை விழாவை நடத்த முனைந்து செயல்படும் முன்னேற்றப் பணியாளர்கள், வட்டாரப் பொறுப்பாளர்கள் மற்றும் தலைமை அலுவலர்கள் ஆகியோர்களின் முயற்சி நினைக்கத்தக்கதாகும். இறைப்பணி என்பது தொடர்பணியாகும். அது தேவைக்கேற்ப விரிந்து வளர்ந்து கொண்டே செல்லும். மேல்நாட்டு இறைத்தொண்டர்களின் சேவையால் நாம் ஆன்மீக, சமூக, பொருளாதார விடுதலைப் பெற்று வாழ்வடைந்தது போல, எஞ்சியுள்ள நமது தேசமக்களையும் வாழ்வடைய செய்வது வரை இப்பணி நடந்து கொண்டே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

7. ஜெபக்குழுவின் வாலிபர் பிரிவு (Youth Wing)

சத்திய தேவனை அறிவிக்க வேண்டிய பக்தி மிகுந்த தேசமிது. கிறிஸ்துவின் இறுதி கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அறியப்படாத மக்களிடம் அறிவிக்கப்பட வேண்டிய தேவனை அறிவிப்பது அவசர பணியாகும். சுதந்திரம் பெற்ற இந்தியா, சாதி என்னும் அரக்கனில் அடிமைப்பட்டுக் கிடக்கின்றது. இவைகளைத் தகர்த்தெறிந்து இயேசு என்னும் தீபத்தை இருண்ட உள்ளங்கள் தோறும் ஏற்ற வேண்டும். இதற்கு அர்ப்பணச் சிந்தை கொண்ட அநேக வாலிபர்கள் தேவை. பேராய சுவிசேஷ ஜெபக்குழு இவ்வூழியத்தில் வாலிபர்களை ஈடுபடுத்த ஆவல் கொண்டது அதன்பேரில் 1992 ஜனவரி மாதம் வாலிபர் பிரிவு என்ற அமைப்பு தொடங்கப்பட்டது. இவ்வாலிபர் பிரிவிற்கு பேரா. எ.வி. [illegible] அவர்கள் கன்வீனராக நியமிக்கப்பட்டார். வாலிபர் பிரிவிற்கென சில செயல் திட்டங்களையும் உருவாக்கினர்.

1. திருச்சபையின் வாலிபர் உள்ளங்களில் மிஷனெறிப் பணியைக் குறித்த அறிவையும் ஆர்வத்தையும் ஊட்டுதல்.
2. வாலிபர்களுக்குக் கிறிஸ்தவ ஊழியப்பயிற்சி நடத்துதல்
3. வீட்டு ஜெபக்கூட்டங்களை ஒழுங்காக நடத்தும்படி வாலிபர்களைத் தூண்டுதல்.
4. ஒவ்வொரு முன்னேற்றப்பணி வட்டாரங்கள் அளவில் தனித்தனி ஜெபக்கூட்டங்கள் மற்றும் மிஷனெறி விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல்.
5. பேராயப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் ஜெபக்கூடுகைகள் ஏற்படுத்தி, மிஷனெறிகளுக்காகவும் வாலிப சமூகத்திற்காகவும் அவர்களை ஜெபிக்கத் தூண்டுதல்.
6. பரிசுத்தம் என்னும் பரம இரகசியத்தை அறிவித்து அகத்தில் அதனை பாதுகாக்கத் தூண்டுதல்.

அ. கிறிஸ்தவ அருட்பணியாளர் பயிற்சித் திட்டம்

ஜெபக்குழுவின் வாலிபர் பிரிவின் பொறுப்பில் கிறிஸ்தவ அருட்பணியாளர் பயிற்சித் திட்டம் என்ற கூடுகையானது பேராயர் ஜி கிறிஸ்துதாஸ் அவர்கள் தலைமையில் 4-7-1992 ஆம் நாள் நாகர்கோவில் மகளிர் கிறிஸ்தவக் கல்லூரியில் வைத்துத் தொடங்கப்பட்டது. அப்பயிற்சியின் நிறைவில் நடைபெற்ற தியானக் கூட்டம், அர்ப்பண ஆராதனையாய் கன்னியாகுமரி ஆலயத்தில் வைத்து 3 நாட்கள் நடைபெற்றன. அப்பயிற்சிப் பெறுவோருக்குரிய செயல்திட்ட ஊழியக் களங்களாக வடக்கு தாமரைக்குளம், கரம்பவிளை ஆகிய கிராமங்கள் உருவாக்கப்பட்டன. ஆராதனைகளும் அங்கே நடத்தப்பட்டன. வடக்குத் தாமரைக்குளத்தில் இதற்கென 5 சென்ட் பூமி வாங்கப்பட்டது. அதில் அருள்திரு. ஓய். றாபின்சன் அவர்கள் நினைவாக ஒரு சமூகக் கூடம் கட்ட பேராயர் எம்.ஐ. கேசரி அவர்கள் 1-12-1997 இல் அடிக்கல் நாட்டினார்கள். அக்கட்டிடம் அடித்தளம் வரை கட்டி எழுப்பப்பட்டது.

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் நோக்கத்தின்படி பணிக்களங்கள் அனைத்தும் குமரி மாவட்ட எல்லைக்கு வெளியே விரிவுபடுத்த வேண்டும். அதன்படி மேற்கூறியப் பணித்தளம் சுதேஷ மிஷனெறி சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

வாலிபர்களுக்கான இவ்அருட்பணியாளர் பயிற்சிக்கு உதவியாக பேரா. டைட்டஸ் அவர்கள் "இறையியல் ஓர் அறிமுகம்", "பாவமும் இரட்சிப்பும்", "தூய ஆவியானவர்", "தேவசித்தம் அறிதல்" போன்ற நூல்களை வெளியிட்டுள்ளார். தற்போது குமரிப் பேராயத்தில்

இயங்கிவரும் மனித வள மேம்பாடு என்ற அமைப்பானது. இப்பயிற்சித் திட்டங்களை நடத்தி வருகிறது.

"வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால் தானே." (சங் 119:9)

8. பணிக்களச் சந்திப்புகள்

ஊழியத்தின்பொருட்டு தன் குடும்பம், தன் இனத்தவர் என்பவர்களை விட்டு ஆத்மீகப் பாரத்தோடுப் பல்வேறு சூழல்களைத் தாண்டி பணிக்களம் புறப்பட்டுச்சென்று பணி செய்கிற மிஷனெறிகள் பலர் பணிக்களங்களிலுள்ளனர். அவர்களைப் பணத்தாலும் ஜெபத்தாலும் தாங்கி ஆதரிக்கிற இறை மக்களும் குமரிப் பேராயத்திலுள்ளனர். இவர்களுடைய துதிகளின் சத்தத்தால் மிஷனெறிகள் பணித்தளங்களில் தங்களுக்கு எதிராக வரும் சிறைக்கதவுகளைத் தகர்த்தெறிகிறார்கள். இவைதவிர அவசர ஜெபக்குறிப்புகள் அருட்பணி மலர் மூலமாகவும் மிஷனெறிகளின் கடிதம் மூலமாகவும் தாங்கும் குழுக்களுக்கும் சபைகளுக்கும் தனிநபர்களுக்கும் தெரிவிக்கப் படுகின்றன. உடனே இக்குழுவினர் கூடி ஜெபித்து மிஷனறிகளை ஊக்கப்படுத்துகிறார்கள். மிஷனெறிக்ளின் ஊழியங்கள் பணித்தளங்களில் எத்தகைய முன்னேற்றங்களைக் கொண்டு வந்துள்ளன. என்பதனை அறியும் நோக்கில் பலர் பணிக்களம் நோக்கிப் புறப்பட்டனர்.

அ. தனிநபர் பயணம்

பேராய சுவிசேஷ ஜெபக்குழு சார்பில் புதிய பணித்தளமானது 1977 ஜூலை மாதம் கல்வராயன் மலையில் அருட்திரு. டி. எலியாஸ் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. ஏற்கனவே அப்பணியில் ஆர்வம் கொண்டிருந்த அருள்திரு. எம். இராஜையன் அவர்கள் மிஷனெறி எலியாஸ் அவர்களைச் சந்திப்பதற்காகத் தேக்கம்பட்டுக் கிராமம் சென்றார். அங்குதங்குவதற்கு வீடில்லாமல் அவதியுறும் எலியாசின் நிலையைக் கண்டதும் கண்ணீர்விட்டு உள்ளங்கலங்கினார். அப்போது குமரி மாவட்டத்திற்கு முதல் காலங்களில் வருகை தந்த மேல்நாட்டு மிஷனெறிகளின் தியாகத்தை நினைத்து நண்பர் எலியாசை தேற்றினார். பின்னர் அப்பகுதியிலுள்ள சில கிராம மக்களைச் சந்தித்து நற்செய்திக் கூறினார் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல் மக்கள் அலைந்து திரிவது அவருடைய மனதை பாதித்தது. அதனை குமரிப் பேராய மக்களிடம் கூற வேண்டும் என்ற தீர்மானத்தோடு ஊர் திரும்பினார். இப்பயணம் போதகர் இராஜையனுடைய மனதில் தெளிவான காட்சியைக் கொடுத்தது.

மறுபடியும் 1977 அக்டோபர் மாதம் அருள்திரு. எம். இராஜையன் அவர்கள் தேக்கம்பட்டுப் பணித்தளத்திற்குச் சென்றார்கள். அப்போது அங்கு பணியாற்றி வந்த அருள்திரு. டி. எலியாஸ் திருவாளர்கள் எ. செல்வராஜ், கெ.ஆர். வில்லியம் ஆகியோர்களுடன் மூன்று நாட்கள் தங்கி, பல கிராமங்களைச் சந்தித்தார்கள். வீடு திரும்பியபின் இச்சவாலான திருப்பணிக்குப் பல ஊழியர்களை அனுப்ப வேண்டும் என சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு எடுத்துரைத்தார்கள். இவருடைய இப்பயண அனுபவம் பிறரையும் தூண்டும் விதத்தில் அமைந்தது.

ஆ. குழுவினர் பயணம்

குமரிப் பேராய சபைகளில் மிஷனெறி ஊழியங்களைக் குறித்த ஆர்வம் அதிகரித்தது. 1981 ஆம் ஆண்டு மேய் மாதம் 19 முதல் 25 வரையுள்ள நாட்களில் பல சபைகளைச் சார்ந்த மிஷனெறி ஆர்வமுள்ள நண்பர்கள் தனித்தனிக் குழுக்களாகப் பணிக்களப் பயணம் மேற்கொண்டனர். முதல்குழுவில் திருவாளர்கள் ஜெ.எஸ். கிறிஸ்துதாஸ், பரமானந்தம், ஜெ.வி.ஆர். சாமுவேல்ராஜ், எ. செல்வராஜ் ஆகியோர்களும் இரண்டாம் குழுவில் டாக்டர் ஆல்பிரட் ஸ்டீபன், அருள்திரு. சி. இரத்தினதாஸ் மற்றும் திரு. டேவிட் ராமன் ஆகியோர்களும் இடம் பெற்றிருந்தனர். இவ்விரு குழுவினரும் கல்வராயன் மலையிலுள்ள இரு பகுதிகளை மட்டுமே பார்வையிட்டனர். அம்மலைப் பகுதிகளில் அவர்கள் கண்ட காட்சிகளும், அங்கு நடத்தப்பட்டு வரும் ஊழியங்களும் இக்குழுவினர்களை வியக்கச் செய்தன. இவைகளைத் தத்தம் சபைகளிலும், சக விசுவாசிகளிடமும் கூறினர். இவைகள் மக்களின் அடிமனங்களை அசைத்தன.

குமரிப் பேராயத்துடன் நேரடி உறவில்லாததும் உற்சாகமுடன் மிஷனெறிப் பணிபுரிந்து வருவதுமான ஒரு அமைப்பு பூரண சுவிசேஷ வாலிபர் அமைப்பாகும் (F.G.Y.M.A.) இவர்கள் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் பணிக்களங்களுக்கு அடிக்கடிச் சென்று, ஊழியர்களுக்கு உற்சாகத்தை அளித்து வந்தனர். தேவனுடைய அழைப்புக்குக் கீழ்ப்படிந்து, மலைகளிலுள்ள குடிசைகளில் எவ்விதப் பாதுகாப்புமின்றி வாழும் இறைப்பிள்ளைகளின் வாழ்க்கைமுறை இப்பயணக் குழுவினர்களிடையே ஒருவித மனப்புரட்சியை உருவாக்கியது.

இ. பேராயர் மற்றும் போதகர்கள் பயணம்

பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள், குமரிப் பேராயத்தில் பணிபுரியும் போதகர்கள் ஒவ்வொருவருக்கும் மலைநாட்டு ஊழியத்தின் ஆர்வத்தை அதிகரிக்கத் திட்டமிட்டார்கள். எனவே போதகர்களின் தியான முகாம் ஒன்றினை 1989 மார்ச்சு 6 முதல் 8 ஆம் நாள் வரை

கல்வராயன் மலையிலுள்ள சேராப்பட்டில் நடத்தினார்கள். அதில் கலந்து கொண்ட போதகர்கள் பலர் ஊழியக்களங்களைப் பார்வையிட்டார்கள். அதோடு, ஊழியம் தொடங்கப்படாதப் பணிக்களங்களைக் கண்டு ஏக்கமுற்றனர். நாமும் இப்பணியின் வேகத்தை அதிகரிப்பதற்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொரு போதகர்களின் உள்ளங்களிலும் ஊடுருவியது. இதன் விளைவால் சபைகள் மிஷனறி பாரம்பெற்றன. பல அருட் பணியாளர்கள் தாங்கப்பட்டனர். சில சபைகள் மிஷனறிக் களங்களையே தத்தெடுத்தன. போதகர்கள் ஆத்துமாக்களுக்காகச் சிறப்பாக ஜெபிக்கும் மனப்பாரம் மிக்கவர்களாக நாளும் மாறி வந்தார்கள்.

9. அருட்பொழிவு பெறுவோருக்கான களப்பயிற்சி

"வாருங்கள், சத்தியத்தை எங்களுக்கு நேரடியாகக் கூறுவதற்கு வாருங்கள்" என்ற அழைப்பு கிறிஸ்துவை அறியாத மக்களிடமிருந்து வந்து கொண்டே இருக்கின்றது. எனவே தேசத்தை சந்திக்கும் ஊழியர்கள் பலர் எழும்ப வேண்டும். இது கட்டாயமான தேவை. இவர்களும் கர்த்தரின் பணியின் ஆழத்தை உணர்ந்து கொள்ளுதல் நல்லது. பவுல் கமாலியேலின் பாதத்தில் கற்றதை நஷ்டம், குப்பை என்றான். இயேசுவே உம் பாதத்தில் என் கல்வி தொடங்கட்டும். அதுவே எனக்கு ஏற்றதாயிருக்கும் என சரணடைந்தான். பின்னர் கர்த்தரின் பெலத்தைப் பெற்றுக் கொண்டான். இவ்வித சிந்தனைகளை அடித்தளமாகக் கொண்ட பேராய பரிபாலனக்குழு, இப்பேராயத்தில் அருட்பணிப் பெற தகுதிப் பெற்ற போதகர்களை சுவிசேஷ ஜெபக்குழுவின் பணித்தளங்களுக்கு அனுப்பி, சிறப்புப் பயிற்சியினைக் கொடுக்கத் தீர்மானித்தது. நாளடைவில் இப்பயிற்சிப் பெற்றோர் சபைகளில் பணியாற்றும் போது, ஊழியத்தின் தேவை சந்திக்கப்படும் என்பதும் சபை மக்களும் மிஷனறி பாரமுள்ளவராய் மாறுவர் என்பதும் நோக்கமாகும். இதனால் இந்தியாவின் ஆவிக்குரிய எழுப்புதல் பணி வேகமாக முன்னேறும் என்பது அவர்களின் அடிக்கருத்தாக அமைந்தது.

ஒழுக்களாகப் பயணம்

மேற்குறிப்பிட்ட ஒழுங்கின்படி முதல்குழு கல்வராயன் மலைக்கு அனுப்பப்பட்டது. அவர்கள் மலையில் ஒருமாதம் பயிற்சி பெற்றுத் திரும்பினர். பின்னர் அனுப்பப்பட்டவர்களுக்குப் பயிற்சி மூன்று மாதம் ஆக்கப்பட்டது. இதற்கு அடுத்தக் காலக்கட்டத்தில் பயிற்சி ஆறுமாதம் என அதிகரித்தது. மீண்டும் மூன்று மாதம் எனக் குறைக்கப்பட்டது. நாளடைவில் அப்பயிற்சி நிறுத்தப்பட்டது. இவ்விதம் பயிற்சிப் பெற்று, பணிக்களங்களின் தேவைகளையும் மக்களின் அவல நிலைகளையும்,

மிஷனறிகளின் பாடுகளையும் நேரில் கண்ட இப்பயிற்சியாளர்கள் சபைகளில் பொறுப்பேற்றதும், மிஷனறி பணி வேகம் பெற்று வளர்ந்து வருகிறது. "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (1 தீமோத்தேயு 2:4) என்ற வசனம் இவ்விதம் பல விதங்களில் செயல்பட்டு வருகிறது.

10. சபைகளின் பயணம்

நற்செய்திப் பணியை விசாலமாக்கி விரிவாக்குவது திருச்சபையின் பிரதான கடமையாகும். இதற்காகக் குழுவாக, தனியாக பலர் ஊதியமில்லாமல் தொண்டு செய்கின்றனர். தங்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தில் அருட்பணிப் பங்காளர்களைச் சந்திக்கின்றனர். அவர்களிடம் கிறிஸ்தவ வாழ்க்கையைக் குறித்த ஆலோசனைகளைக் கூறி ஜெபிக்கின்றனர். தியாகத்தோடும் தன்னார்வத்தோடும் கொடுக்கும் காணிக்கைகளைப் பெற்றுக் கொண்டு ரெசீது கொடுக்கின்றனர். இத்தனை கடின உழைப்பால் தாங்கப்படும் மிஷனறிக் களங்களைப் பார்வையிடும் போது, அதன் உண்மை நிலையைப் புரிந்து கொள்ள முடியும் என பலர் நினைத்தனர். இதனால் குழுப்பயணங்கள் பல சபைகளிலிருந்துப் பணிக்களங்களை நோக்கி புறப்பட்டன.

குளச்சல் திருச்சபை

குளச்சல் திருச்சபை தேக்கம்பட்டுப் பணித்தளத்தை தங்கள் பொறுப்பில்தாங்கி வந்தது. எனவே அதனை பார்வையிட 27-9-1992 ஆம் நாள் 16 நபர்கள் அடங்கிய குழு ஒன்று தேக்கம்பட்டுச் சென்றடைந்தது. அம்மக்களைச் சந்தித்து அவர்களோடு அளவளாவி பேசி, அவர்கள் தங்கள் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர். அங்கு அவர்கள் 23 விசுவாசிகளுக்குத் திருமுழுக்குக் கொடுத்துத் தேவனை நன்றியுடன் துதித்தார்கள். அறை வீட்டிற்குள் இருந்து பணிக்களச் செய்திகளை கேட்பதை விட நேரடியாகச் சென்று பார்ப்பது அதிக பலனைத் தரும் என்பதைப் பணிக்கள பயணம் மூலம் உணர்ந்தனர்.

மூலச்சல் திருச்சபை

மூலச்சல் சபையிலிருந்து, ஊழிய ஆர்வமுடைய சிலர் 1992 ஆம் ஆண்டு நவம்பர் 22 முதல் 25 வரையுள்ள நாட்களில் பணிக்களப் பயணம் மேற்கொண்டார்கள். அப்போது, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மிஷனறி திரு. பால்சிங் அவர்கள் கீழ்வலசை என்னும் கிராமத்தில் பணியாற்றி வந்தார். அப்பணித்தளம் உயரமான பாறைகள் வழி ஏறிச் செல்ல வேண்டியதாயிருந்தது. அங்கு பணியை மேலும் விரிவுபடுத்தும்

வாய்ப்பு குறைவு என்பதை அவர்கள் உணர்ந்தனர். எனவே வேறு ஒரு பணிக்களத்தை ஏற்றெடுக்கும் விருப்பத்தை ஜெபக்குழுவினரிடம் கூறினார்கள். பின்னர் மோத்தக்கல் பணித்தளம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இவ்விதமான களப்பயணங்கள், பணிக்களங்களைச் சபையார் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பையும் கொடுத்தன.

சித்தவிளை திருச்சபை

அருள்திரு. ஓய். றாபின்சன் அவர்கள் இச்சபையில் போதகராக இருந்தபொழுது 20 நபர்களுடன் 20-4-1993 ஆம் நாள் பணிக்களப் பயணம் மேற்கொண்டார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மணியார்குண்டம் பணித்தளத்தைக் கண்டு பேருவகை எய்தினர். மேலும் அப்பணித்தளத்திற்குத் தேவையான உதவிகளைச் செய்யும் ஆவல் பெற்றனர். மலைப்பயணத்தின் போது கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட ஆறு விசுவாசிகளுக்குத் திருமுழுக்குக் கொடுத்தனர். அக்கூடுகையில் மலைவாழ் மக்கள் பாடிய பாடல்கள் இப்பயணம் மேற்கொண்டவர்களின் உள்ளங்களைக் கவர்ந்தன.

மண்டைக்காடு திருச்சபை

23-5-1993 ஆம் நாள் மண்டைக்காடு சபையார் அருள்திரு. ஐ. அருமைநாயகம் அவர்களின் தலைமையில் ஏற்காடு மலைக்குச் சென்று சில பணிக்களங்களைப் பார்வையிட்டனர். அப்போது அங்கு கூடிய மக்களுக்கு இறைச்செய்தியை அறிவித்தனர். அதைக்கேட்டு மலை மக்கள் மகிழ்ந்தனர். அம்மகிழ்ச்சி இக்குழுவினரை வியப்பில் ஆழ்த்தியது. பின்னர் அம்மலையிலுள்ள கொளகூர், கல்வராயன் மலையிலுள்ள மணியார்பாளையம் ஆகிய பணிக்களங்களின் வளர்ச்சியைக் கண்டு மகிழ்ந்தனர். இவ்விரு பணித்தளங்களிலுள்ள இரு சபைகளுக்கும் பேட்டரியால் இயங்கும் ஒலி பெருக்கியினை அன்பளிப்பாகக் கொடுத்தனர். சர்வ வல்ல தேவன் உலகிலுள்ள எல்லா வல்லமைகளையும் விடச் சிறந்தவர் என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்தனர்.

புத்தளம் சேகர சபை

புத்தளம் சேகர சபையின் சார்பாக 30 உறுப்பினர்கள் கொண்ட குழு அருள்திரு. ஆர். என். துரைராஜ் தலைமையில் 31-05-1993 ஆம் நாள் கல்வராயன் மலையிலுள்ள பணிக்களங்களைப் பார்வையிடச் சென்றது. அங்கு போய் தாங்கள் பொறுப்பேற்றிருக்கும் கிளாக்காடுப் பணித்தளத்தில் சிறப்புத் தொழுகையினை நடத்தினர். ஏராளமான குழந்தைகளும்

பெண்களும் பெரியவர்களும் அத்தொழுகையில் பங்கேற்றுப் பாடி மகிழ்ந்தது இப்பயணக் குழுவினருக்கு மகிழ்ச்சியை அளித்தது. அந்நாளில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஆறு விசுவாசிகளுக்கு இவர்கள் திருமுழுக்குக் கொடுத்தார்கள். இப்பயண அனுபவம் அவர்கள் வாழ்க்கையில் எல்லையில்லா மகிழ்ச்சியைக் கொடுத்தது.

குழித்துறை திருச்சபை

குழித்துறை சபையிலிருந்து 15 நபர் கொண்ட குழு ஒன்று, அருள்திரு. வி. இம்மானுவேல் அவர்கள் தலைமையில் 26-8-1995 ஆம் நாள் சேர்வராயன் மலைக்குப் புறப்பட்டுச் சென்றது. அங்குள்ள கொளகூர் பணித்தளத்தை சந்தித்து, அவ்விசுவாசிகளுடன் ஆராதனை நடத்தினர். அன்றைய ஆராதனையில் ஏற்கனவே கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட 23 விசுவாசிகளுக்குத் திருமுழுக்கும் ஒன்பது நபர்களுக்குத் திடப்படுத்தலும் கொடுத்தனர். மட்டுமல்லாமல் ஆராதனையில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்பின் விருந்தையும் தயாரித்துக் கொடுத்தார்கள். அப்பணித்தளத்தினர் வெகுகாலமாக ஒரு கிணறு தேவை எனக் கேட்டிருந்தனர். எனவே கிணறு வெட்டுவதற்காக ரூபாய் 27,625-ஐ இவர்கள் கொடுத்து உதவியதுடன், மரங்கள் வளர்ப்பதற்காக ரூபாய் 1500 ம் கொடுத்து மக்களை உற்சாகப்படுத்தினார்கள். இம்மக்களோடு செலவழித்த சிலமணித்துளிகள் இப்பயணக்குழுவினருக்கு இன்பமூட்டுவதாய் அமைந்தன.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டுக் கல்வராயன் மலையிலுள்ள மணியார் பாளையம் என்னும் பணிக்களத்தைச் சென்றடைந்தார்கள். அங்குள்ள ஆலயத்திற்குச் சென்று அவர்களோடும் ஆராதனை நடத்தினார்கள். கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு திருமுழுக்குப் பெற தகுதியாய் இருந்த 45 விசுவாசிகளைப் பார்த்து ஆனந்தமடைந்து கர்த்தரைத் துதித்தார்கள். அம்மக்களுக்கும் அன்பின் விருந்து கொடுத்தார்கள். அங்குள்ள ஏழைகளுக்குத் துணிகள் வழங்க ரூபாய் 3500 ஐ பணித்தள மிஷனரிகளிடம் கொடுத்து ஊக்குவித்தார்கள். அப்பணித்தள மிஷனரி ரவிராஜனின் ஊழியப் பயணத்திற்கு மிதிவண்டி (சைக்கிள்) ஒன்றையும் கொடுத்தனர். சுவிசேஷம் சொல்ல அனுபவம் பெற்றவர்கள், கொடுத்து ஒரு நாளும் ஓய்ந்ததில்லை. கொடுக்க கொடுக்க வாழ்வில் குறைவை கண்ட நாளும் ஒன்றுமில்லை. எப்படி முடியும்? என சந்தேகத்தோடே இருப்பதைவிட நிச்சயம் முடியும் என்பதே விசுவாச வாழ்க்கையாகும். இவைகளை இப்பயணக் குழுவினர் அறிந்திருந்தனர்.

1997 மார்ச்சு மாதம் 6ஆம் நாள் முதல் 9ஆம் நாள் முடிய மீண்டும் 14 உறுப்பினர்கள் அடங்கிய ஒரு பயணக் குழுவினர் அருள்திரு. வி. இம்மானுவேல் அவர்கள் தலைமையில் மலைப்பயணம் மேற்கொண்டனர். வழியிலும் பலப் பணித்தளங்களைப் போய் பார்த்து, இறுதியாக, கல்படை என்ற பணித்தளத்தைச் சென்றடைந்தனர். அப்பணித்தள ஊழியம் வேகமாக வளர 50 சென்ட் நிலம் தேவை என்பதை அக்கள மிஷனெறி இக்குழுவினரிடம் கூறினர். உடனே இவர்கள் அதற்குரிய ஒழுங்குகளைச் செய்தார்கள். கூடவே பணித்தள உபயோகங்களுக்காகச் சில ஊழிய உபகரணங்களையும் நன்கொடையாக வழங்கி ஊழியரையும் மக்களையும் உற்சாகப்படுத்தினார்கள்.

திட்டுவிளை திருச்சபை

இத்திருச்சபை உறுப்பினர்கள் சிலர் ஒரு குழுவாக, அருள்திரு. சி. இரத்தினதாஸ் அவர்கள் தலைமையில் கல்வராயன் மலையை நோக்கி 24-11-1995 ஆம் நாள் புறப்பட்டனர். அங்குபோய் ஏழு பணிக்களங்களைப் பார்வையிட்டு அவைகளைச் சுற்றிலுமுள்ள கிராமங்களுக்கு நற்செய்தி கூறினர். அதன் பின்னர் அச்சேகரம் தாங்கி வந்த முண்டியூர் பணிக்களத்திற்குச் சென்றனர். அப்பணித்தளத்தின் தேவைக்காக மிதிவண்டி ஒன்றும், கொட்டு (டிறம்) ஒன்றும் கொடுத்தனர். பணிக்கள வளர்ச்சி, மிஷனெறியின் ஊக்கமான பணி போன்றவை இக்குழுவினரின் மனதில் புதிய சவாலை ஏற்படுத்தின.

மூலச்சல் சேகர ஊழியர்களின் பயணம்

மூலச்சல் சேகர ஊழியர்கள் தங்களது சேகர தியான முகாமை சேராப்பட்டில் வைத்து நடத்தத் தீர்மானித்தனர். அதன்பேரில் போதகர் அருள்திரு. எ. துரைமணி அவர்கள் தலைமையில் சேகர ஊழியர்கள் 20-7-1997 ஆம் நாள் சேராப்பட்டுப் புறப்பட்டுச் சென்றனர். முதற்கண் கல்வராயன் மற்றும் சேர்வராயன் மலைகளில் நடைபெற்று வருகிற சுவிசேஷ ஜெபக்குழுவின் பணிகளைப் பார்வையிட்டனர். மலைகளில் அந்தகாரம் விலகி ஒளியாகிய கிறிஸ்து மக்களில் கொடுத்திருக்கும் மாறுதல்களைப் பார்த்துக் கடவுளைத் துதித்து மகிழ்ந்தார்கள். மூலச்சல் சேகர சபைப் பொறுப்பேற்றிருக்கும் மோத்தக்கல் பணித்தளத்தில், கட்டப்படுகிற ஊழியர் இல்லத்தையும் பார்வையிட்டனர். இவ்ஊழியர்களின் களப்பயணங்கள், அவர்களுடைய மனங்களில் மிஷனெறிப் பணிபற்றிய வாஞ்சையை அதிகரித்தன. நாம் எந்த அளவு விதைக்கிறோமோ அந்த அளவு அல்ல. கர்த்தர் அதைப் பன்மடங்காகத் திருப்பக் கொடுப்பார். மிஷனறி ஊழியம் என்பது சபையின் முதுகெலும்பாகும் என்பதைக் கண்கூடாகக் கண்டு உணர்ந்தனர்.

11. அருட்பணி குழுவினரின் ஆய்வுப் பயணம்

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவானது, மிஷனறிகள் செய்கின்ற குறிப்பிட்டக் காலப் பணியினை ஆய்வு செய்ய ஒரு குழுவை நியமித்தது. அக்குழுவில் திருவாளர்கள் டி ஏசுஞானதாஸ், ஜி. கிறிஸ்டோபர் டானியல், அருள்திரு. மோசஸ் கேசரி ஆகியோர் இடம் பெற்றனர். இவர்கள் 25-2-1994 ஆம் நாள் ஆய்வுப் பயணமாக ஏற்காடு மலைக்குச் சென்றனர். அங்கு சேட்டுக்காடு, மாரமங்கலம், செந்திட்டு, நார்தன்சேடு ஆகிய பணித்தளங்களையும் அவைகளைச் சுற்றிலுமுள்ள கிராமங்களையும் சந்தித்தனர். அப்பகுதி நெருக்கமான முட்புதர்களையும் கரடுமுரடான மேடு பள்ளங்களையும், சரிவான பாறை இடுக்குகளையும் உடையதாய் திகழ்ந்தது. இவைகளைத் தாண்டிச் சென்று மிஷனறிகள் செய்யும் பணியின் தன்மையையும், கஷ்டத்தையும் இக்குழுவினர் உணர்ந்தனர். இக்குழுவினர்கள் சிலநாட்கள் அங்கு தங்கி ஊழியம் செய்தது மிஷனரிகளுக்குப் புதுத்தெம்பைக் கொடுத்தது. அங்கிருந்து அக்குழுவினர் மார்ச்சு முதலாம் நாள் கல்வராயன் மலைக்குச் சென்றனர். அங்கு சேராப்பட்டு ஆலயத்தில் நடைபெற்ற சபை நாள் விழாவில் பங்கெடுத்தனர். அவ்வாலயத்தில் மக்கள் கூடியிருந்த காட்சி, இக்குழுவினரைப் பரவசமடையச் செய்தது. அதன்பின்னர் கீரைப்பள்ளி, மான்கொம்பு முதலிய 11 பணித்தளங்களைப் பார்வையிட்டு அங்கெல்லாம் ஊழியம் வளர்ச்சியடைந்து வருவதைக் கண்டறிந்து சந்தோஷப்பட்டனர். ஆய்வுப்பணியினை முடித்து தங்கள் ஆய்வறிக்கையை 5-4-1994 ஆம் நாள் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்குச் சமர்ப்பித்தார்கள். அருட்பணி ஆண்டவருடையது. அப்பணியில் செயல்படும் ஊடகங்களாக நாம் பயன்படுகிறோம். இது நமக்குக் கிடைத்தப் பெரும் பாக்கியமாகும்.

அருள்திரு. என். விக்டர் குழு

அருள்திரு. என். விக்டர் தலைமையில் நான்கு பேர் அடங்கிய குழு ஒன்று 1994 மேய் 12 ஆம் நாள் கல்வராயன் மலைக்குச் சென்றது. அங்கு அவர்கள் எட்டுப் பணிக்களங்களையும் அவைகளைச் சுற்றியுள்ள கிராமங்களையும் அங்கு நடைபெற்று வருகிற நற்செய்திப் பணிகளையும் பார்வையிட்டனர். இம்முயற்சி மிஷனறிகளின் பணியை மேலும் வலுவடையச் செய்வதாக அமைந்தது. இக்குழுவினரின் அறிக்கையின் பேரில், பணிக்களத் தேவைகள் அதிகம் சந்திக்கப்பட்டன.

12. பணிக்கள மதிப்பீட்டுப் பயணம்

இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்துச் சபைகள் இல்லாத இடங்களில், சபைகளை ஏற்படுத்துதலும், ஆராதனைக் குழுக்கள் இல்லாத

இடங்களைக் கண்டு பிடித்து அவர்கள் மத்தியில் ஒரு ஆராதனை குழுவை ஏற்படுத்துவதும் அங்கு தங்கி பணிச் செய்ய மிஷனறிகளை அனுப்புவதும் பேராய மலைநாட்டு ஊழியத்தின் தலையாய பணியாகும்.

பேராய சுவிசேஷ ஜெபக்குழு அங்கு நடக்கும் பணிகளை நேரில் பார்வையிட்டு, தேவைகளைக் கண்டறிய குழுக்களை அனுப்பியது. அதன்பேரில் 1996 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அருள்திரு. எம். இராஜையன், திரு.டி. ஏசுஞானதாஸ், திரு. எஸ். இரத்தினராஜ் ஆகியோர் அடங்கிய குழு முதற்கண் கல்வராயன் மலைப்பகுதிக்குச் சென்றது. அங்குள்ள மிஷனெறி பொறுப்பாளர் யோக்பேல்லோ அருள்திரு. டி. எலியாஸ் அவர்களுடன் இணைந்து சேராப்பட்டு, மான்கொம்பு, தேக்கம்பட்டு, தும்புராம்பட்டு, வஞ்சிக்குழி, கீரைப்பள்ளி, கீழ்நிலவூர், கிளாக்காடு, தரிசுக்காடு, புளியங்கொட்டை, புத்திராம்பட்டு, மணியார்குண்டம், புதூர், புதிய தேக்கம்பட்டு, மோட்டாம்பட்டி, புதுப்பாளப்பட்டு, கொட்ட புதூர், தொரடிப்பட்டு ஆகிய பணிக்களங்களைப் பார்வையிட்டு ஆய்வு நடத்தி நிறைகுறைகளைக் கண்டறிந்தார்கள்.

இரண்டாவதாக அக்குழுவினர், சேர்வராயன் மலைப்பகுதிக்குச் சென்றனர். அங்குள்ள மிஷனறி பொறுப்பாளர் அருள்திரு. எ. செல்வராஜ் அவர்களுடன் இணைந்து, சேட்டுக்காடு, மேலூர், பிலியூர், கே.என். புதூர், மதூர், கொட்டச்சேடு, செந்திட்டு, நார்தன்சேடு, வெள்ளக்கடை, நல்லூர், சேதுநாயக்கன்புதூர், நாராயணபுரம், கே.மேரூர் ஆகிய பணித்தளங்களைச் சந்தித்து ஆய்வு நடத்தினர். மேலும் மிஷனறிகள் கூறிய சில புதிய கிராமங்களையும் பார்வையிட்டு அருட்பணியை விரிவுபடுத்தும் வாய்ப்பினைக் கண்டறிந்தனர். இப்பயணத்தின்போது சில பணித்தளங்களில் விசுவாசிகளுக்குத் திருமுழுக்கு அளித்தும், திடப்படுத்தல் கொடுத்தும், நற்கருணை ஆராதனை நடத்தியும் விசுவாசிகளைக் கிறிஸ்துவிற்குள் உறுதிப்படுத்தினார்கள்.

ஆய்வுப் பயணத்தின் இறுதியில் கண்டறிந்த உண்மைகள், பணிக்களத் தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் சிறந்தவோர் அறிக்கையினை தயாரித்தனர். பின்னர் அதனைப் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்களிடம் சமர்ப்பித்தனர். மேற்கூறிய பகுதிகளில் வாழும் மலைவாழ் மக்களையும் ஒடுக்கப்பட்ட மக்களையும் தேடிச்சென்று அவர்கள் மத்தியில் தியாகமுடன் உழைக்கும் வாலிபர்களை மிஷனறி பணிக்காகக் கண்டு பிடிப்பது முன்னேற்றப்பணியின் பிரதான நோக்கமாகும்! நீங்கள் கிறிஸ்துவின் மந்தையை சேர்ந்தவர்கள் எனில் அவர் சத்தம்கேட்கும் செவியினையும் அவர் சித்தத்தில் மட்டும் நடக்கும் பாதங்களையும் கொண்டிருப்பீர்கள்.

13. ஜெபக்குழுவின் அடையாளச் சின்னம்

பேராயர் சுவிசேஷ ஜெபக்குழுவின் வளர்ச்சி அதனைக் கண்டோருக்கும், ஈடுபட்டோருக்கும் மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது. மலைப்பகுதி ஊர்களுக்குள், நிலவொளியில் கண் சிமிட்டும் விண்மீன்கள் போன்று நம் ஊழியர்கள் குடியேறத் தொடங்கினர். அடிக்கடி ஞானஸ்நானத் திரு விழாக்கள் மிஷனறிகளால் அமரிக்கையாக ஆரம்பித்தன. இச்செய்திகளைக் கேள்விப்பட்ட பேராயர் ஐ.ஆர். ஹெச். ஞானதாசன் அவர்களின் உள்ளம் மகிழ்ச்சியால் பொங்கியது. சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு அர்த்தம் கொடுக்கக்கூடிய அடையாளச் சின்னமொன்று தயாரிக்க ஆலோசனை எழுந்தது. பேராயர் அவர்களே அதற்கான முயற்சியில் ஈடுபட்டார்கள். ஜெபக்குழுவின் நோக்கம், செயல்பாடு, தியாகம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் நோக்கில், இச்சின்னத்தைப் பேராயர் அவர்களே வடிவமைத்தார்கள்.

பரிசுத்த ஆவியானவரது வழிநடத்துதலால், ஜெபக்குழுவானது திருச்சபைகள் மூலம் சுவிசேஷ ஒளியை மலைவாழ் மக்களுக்குக் கொண்டு கொடுத்து, கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதத்தைப் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபித்து, மலைகளுக்கு மேலாய் உயர்த்தி வருகிறது. எல்லா ஜாதிகளும் அதற்குள் ஓடி வருவார்கள் (ஏசாயா 2:2) என்ற உண்மை இச்சின்னம் மூலம் வெளிப்படுகிறது. அருள் செய்தி மூலம் உயிர்த்தெழுந்த ஆண்டவர் மலைமக்களைச் சந்திக்கிறார். இருள் விலகி ஓடுகிறது. மக்கள் உள்ளங்களில் மகிழ்ச்சி பொங்க ஆண்டவரைத் தொழுகிறார்கள்.

புதிய பெயர் (அத்தியட்சாதீன சுவிசேஷ ஜெபக்குழு - DMPB) - புதிய அடையாளம்

சுவிசேஷ ஜெபக்குழுவின் பெயரானது 1967 முதல் மலைநாட்டு சுவிசேஷ ஜெபக்குழு என அழைக்கப்பட்டு வந்தது. இவ்வியக்கத்திற்குரிய சட்ட அமைப்பு 20-05-1978-இல் நடைபெற்ற ஜெபக்குழுவின் பொதுக் குழுவில் அங்கீகரிக்கப்பட்டது. குமரி மாவட்ட சபைகளில் பல்வேறு மிஷனறி இயக்கங்கள் செயல்பட்டு வந்தன. அவைகளிலிருந்து இவ்வியக்கத்தை வேறுபடுத்தும் நோக்கில் அத்தியட்சாதீன சுவிசேஷ ஜெபக்குழு (Diocesan Missionary Prayer Band) என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. எனவே முந்தைய அடையாளச் சின்னத்தை மாற்றி அமைக்க சுவிசேஷ ஜெபக்குழுவினர் விரும்பினர். பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்களும் இதற்கு முழு ஆதரவினை நல்கினார்.

குமரிப்பேராயத்தின் அத்தியட்சாதீன சுவிசேஷ ஜெபக்குழு என்ற அமைப்பு பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதலால் மலைப்பகுதியிலுள்ள, குக்கிராமங்களில் இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பின் நற்செய்தியைக் கூறி அறிவித்து, திருச்சபைகளை நிறுவி வருகிறது என்ற கருத்து இச்சின்னத்தின் வழி புலனாகிறது.

“நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்” (மாற்கு 16:15)

இத்தகைய சுவிசேஷப் பணியில் ஒவ்வொரு மனிதனும் ஈடுபட வேண்டும் என்பதே சத்தியமாகும். இன்றைய திருச்சபைகள் பலவற்றில் நித்திரையாகிய திரை மூடிக்கிடக்கிறது. அதனை விலக்குவது கிறிஸ்துவை அறிந்தோரது கடமையாகும்.

14. அருட்பணி மலர்

இவர் புத்தகம் எதுவும் எழுதவில்லை. எந்த பதவியிலும் அமர்த்தப்படவுமில்லை. புகழ் சேர்ப்பதற்காக மனித விரும்பும் எதையும் அவர் சாதிக்கவுமில்லை. ஆனால் பாவிகளுக்காவும் நமக்காகவும் மரித்து மரணத்தை வென்று எழுந்தார். உலகில் பிறந்த எந்த சிந்தனையாளனும் சீர்திருத்தவாதியும் செய்திராத மனித மலர்ச்சிக்குரிய பெருந்தொண்டினை வெறும் மூன்றரை ஆண்டுகளில் நிறைவேற்றினார். இந்த இரட்சகரை, அறியாத மக்களுக்கு அறிவிக்கும் பணியில் பேராய சுவிசேஷ ஜெபக்குழு தன்னை முழுமையாக ஈடுபடுத்தியது. இவ் ஜெபக்குழு ஐக்கியம் இறைவன் குமரிப் பேராயத்திற்குத் தந்த ஓர் அமைப்பாகும். இதனுடைய குறிக்கோள் நற்செய்தியை அறிவிப்பதும், மக்களை ஆவிக்குரிய பக்தி வாழ்வில் உறுதிப்படுத்துவதும், அவர்களது ஆன்மீக, பொருளாதார, சமூக மேம்பாட்டுப் பணிக்காகத் தங்களை அர்ப்பணிப்பதுமே ஆகும். இதன் வளர்ச்சியில் பேராய சபைகள் தங்களை முழுமையுமாய் அர்ப்பணித்தன.

தேவையுள்ள இடத்தில் ஊழியம். தேவ மகிமை விளங்க ஆலயம் எனப் படர்ந்து வேர்விட்டு வளரும் திருப்பணியைத் தாங்கும் மக்களுக்கு, அதன் முழுச்செய்தியை அறிவிக்க மாத இதழ் ஒன்று ஜெபக்குழுவிற்குத் தேவைப்பட்டது. அதனால் சபை மக்களின் ஊழிய அர்ப்பணிப்பும் ஈடுபாடும் பெருகும் என்பது இலக்கு. எனவே பேராய சுவிசேஷ ஜெபக்குழு **அருட்பணி** மலர் என்ற பெயரில் ஒரு மாத இதழை நடத்தி வருகிறது. அதன்மூலம் மலைகளில் நடைபெறும் அருட்பணிச் செய்திகளும், அருட்பணியின் தேவைகளும் தெரிவிக்கப் படுகின்றன. இத்தேவைகளைத் தாங்குவோர் ஒருபக்கமாக வளர்ந்து வந்தாலும் ஜெபிக்கும் மக்களுள் தனிநபர்கள், குழுக்கள், என பலர்

எழும்பினர். இதனால் ஊழியக்களங்களில் மிஷனெறிகள் சுடர்களைப் போல் ஒளிர்விட்டு பிரகாசித்தார்கள்.

அ. மாத இதழின் ஆசிரியர்கள்

தகவல் தொடர்பு ஊடகங்களில் இதழின் பணி மிக முக்கியமானதாகும். பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின், 1965 - 1966 ஆம் ஆண்டுகளுக்குரிய செய்தி மலரை அறிக்கை மலராக அருள்திரு. எம். இராஜையன் அவர்கள் எழுதி வெளியிட்டார்கள். இதில் 1966 ஆண் ஆண்டைய செய்தி மலரை ஜெமினி அச்சகம் இலவசமாக அச்சிட்டுக் கொடுத்தது. இவ்விதம் செய்தி மலர் அச்சிட்டு வெளியிடுவதற்கு அதிக செலவு ஆனதால் **மலை ஊழிய செய்தி மலர்** என்ற பெயரில் குமரிப் பேராயத்தின் மாத இதழான தேசோபகாரியின் பின்னிணைப்பாக மலை ஊழிய செய்திகள் வெளிவந்தன. இந்த தீர்மானத்தை 28-5-1967 இல் கூடிய சுவிசேஷ ஜெபக்குழுவின் செயற்குழு நிறைவேற்றியது. அருள்திரு. ஜெ.எம். ஜெயசிங் அவர்கள் மலைமலரின் ஆசிரியராக 14-8-1970 ஆம் நாள் முதல் நியமிக்கப்பட்டார். தொடர்ந்து 19-07-1971 முதல் பேரா. எ. வி. டைட்டஸ் அவர்கள் அதன் பதிப்பாசிரியராகச் செயல்பட்டார்கள். அதன்பின் 27-05-1975 முதல் அருள்திரு. சி. இரத்தினதாஸ் அவர்கள் பதிப்பாசிரியராக நியமிக்கப்பட்டார். 27-5-1977 முதல் மீண்டும் அருள்திரு.எம். இராஜையன் அவர்கள் பதிப்பாசிரியர் ஆனார்.

27-4-1979 ஆம் நாள் கூடிய ஜெபக்குழுவின் செயற்குழு இவ்வூழியச் செய்திகளை **மலை ஊழிய செய்தி இதழ்** என்ற பெயரில் ஒவ்வொரு மாதமும் தேசோபகாரியில் பின்னிணைப்பாக பிரசுரிக்க முடிவு செய்தது. அதன்படி தேசோபகாரியில் நான்கு பக்கங்கள் தொடர்ந்து பிரசுரமாயிற்று. 22-6-1983 முதல் அருள்திரு. சி. இரத்தினதாஸ் அவர்கள் மீண்டும் பதிப்பாசிரியரானார். அருள்திரு. ஐ.பி. ஜேம்ஸ் நதானியேல் மற்றும் திரு. ற்றி. றசலையா ஆகியோர் இணை ஆசிரியர்களாய்ப் பணியாற்றினர். 1985 முதல் திருமதி. தங்க ரெத்தினம் தேவதாஸ் அவர்கள் பதிப்பாசிரியராக நியமிக்கப்பட்டார். அவர்களுடன் திரு. சி. செல்லத்துரை அவர்கள் இணை ஆசிரியரானார்.

ஆ. ஆதீன அருட்பணி - அரசில் பதிவு பெறுதல்

மலை ஊழிய செய்தி இதழை ஊழியங்களை ஆதரிக்கும் அனைவருக்கும் கொடுக்க வேண்டும் என்பது ஒழுங்கு. அதன் அடிப்படையில் இவ்விதழ் அனுப்பப்பட்டு வந்தது. அனுப்புவதற்குரிய தபால் செலவு அதிகமானதால், அதனை குறைக்கும் நோக்கில் **மலைமலர்** என்ற பெயரில் அரசில் பதிவு செய்து கொள்ளும் முயற்சி 1986 இல் மேற்கொள்ளப்பட்டது. அதே பெயரில் வேறு பத்திரிகை

இருப்பதால், இப்பெயரை மாற்றும்படி அரசு ஜெபக்குழுவைக் கேட்டது. எனவே பேராய ஜெபக்குழுவினர் **ஆதீன அருட்பணி** என்ற பெயரை அரசுக்கு முறைப்படி தெரிவித்தனர். இவ்விண்ணப்பத்தை ஏற்று 1987 முதல் அரசு பதிவு பெற்ற இதழாக இது வெளிவந்தது.

அதன் பின்னர், மிகக்குறைந்த செலவில் இவ்விதழ் ஒவ்வொரு இல்லங்களிலும் போய் சேர்ந்தது. 1990 இல் மீண்டும் தேசோபகாரியின் பின்னிணைப்பாக ஆதீன அருட்பணி நான்கு பக்கங்களில் வெளிவந்தது. குறிப்பிட்ட அப்பக்கங்களுக்கு திரு. சி. செல்லத்துரை அவர்கள் பதிப்பாசிரியராய் செயல்பட்டார்கள்.

இ. அருட்பணி மலர் என பெயர் மாற்றம்

ஆதீன அருட்பணி தேசோபகாரியின் பின்னிணைப்பாக வெளிவருவதைக் காட்டிலும் தனி இதழாக வெளிவர வேண்டும் என பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் விரும்பினார்கள். அதனை ஜெபக்குழுவின் செயற்குழுவில் தெரிவித்தார். அவ்விதழ் மாதந்தோறும் தேசோபகாரியைப் போல் ஒழுங்காக வெளிவர வேண்டும் எனவும் கூறினார். இவ் ஆலோசனை செயல் வடிவம் பெற்றது. இதழின் பெயர் **அருட்பணி மலர்** என மாற்றப்பட்டது. அதன்பேரில் அருட்பணி மலரின் முதல் பிரதி 1992 ஆகஸ்டில் வெளிவந்தது. இப்பெயர் மாற்றம் அரசுக்கும் தெரிவிக்கப்பட்டு, புதிய பதிவு எண்ணும் கிடைத்தது.

பதிவு எண் 096589/16/92

தபால் பதிவு எண் TN/KK/144

அருட்பணிமலர் என்ற இதழின் முதல் ஆசிரியராய் அருள்திரு. ஒய். ஜேக்கப் அவர்கள் பொறுப்பேற்று நன்முறையில் செயல்பட்டார்கள். 1998 மே முதல் திரு. டி பால்தாஸ் அவர்கள் ஆசிரியராய் பொறுப்பேற்று திறமையாகச் செயல்பட்டு வருகிறார்கள். இவ்இதழுக்கான மலர்க்குழுவில் திரு. எஸ். இராஜமணி (உதவி ஆசிரியர்) அருள்திரு. ஒய்.ஜே.ஜே. பாக்கியநாதன், திரு. எஸ். செல்வராஜ், திரு. சி. செல்லத்துரை, அறிவர். ஏனோஸ் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். மாதந்தோறும் மலரும் இவ்விதழ் மறைநாட்டு ஊழியச் செய்திகளை ஒவ்வொரு இல்லங்களிலும் [illegible] செல்வதோடு, உலக நடப்பிலுள்ள முக்கியச் செய்திகளையும் [illegible] சமூகத்திற்குத் தெரிவிக்கின்றது. பரமனின் பணியை மக்கள் தங்குதடையின்றி இதன்மூலம் அறிந்து வருகின்றனர். இம்மலர்குழுவில் தற்போது திரு. டி. ஏசுஞானதாஸ் அருள்திரு. பி. வில்சன், திரு. ஜெ. [illegible]ராஜ், அருள்திரு. என். விக்டர், திரு. எஸ். செல்வராஜ், அருள்திரு. ஒய்.ஜே.ஜே. பாக்கியநாதன், அறிவர் ஏனோஸ், திரு. எம்.ஜி. ஜாண் ராஜ், திருமதி செல்வி ஆகியோர் இடம்பெற்று செயல்பட்டு வருகிறார்கள்.

ஈ. அருட்பணி மலரின் உள்ளே

இம்மலரின் உள்ளே பேராயர் உரை, மிஷனறி அறிக்கைகள், ஊழியக்கள சந்திப்புகள், பணிக்களச் செய்திகள், பணிக்களத் தேவைகள், ஆலயம், ஆயர் இல்லம், பள்ளி, மருத்துவமனை போன்றவைகளின் அர்ப்பணச் செய்திகள், மிஷனறிகளின் அர்ப்பணச் செய்திகள் போன்றவைகள் இடம்பெறுகின்றன. அல்லாமல் மலைமக்களின் சாட்சிகள், மிஷனறிகளின் வரலாறு வேதவாசிப்பு ஒழுங்குகள், ஜெபக்குறிப்புகள், அலுவலகச் செய்திகள், கவிதைகள், மிஷனறிகளின் கட்டுரைகள், பெட்டிச் செய்திகள், பொன்மொழிகள் போன்றவைகளும் பிரசுரிக்கப்படுகின்றன. தற்போது வெளிவரும் அருட்பணி மலரின் முன் அட்டைப் பக்கத்தில் முந்தைய மாதம் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளின் படம் இடம்பெறுகிறது. உள்ளே பேராயர் கடிதத்திற்குப் பின்னால் ஆசிரியர் வரிகள், பொதுச் செயலர் கடிதம், தலைமை மிஷனறி கடிதம், ஒரு சிறப்புச் செய்தி, சென்னைக் கிளையின் செய்தி போன்றன வரிசையாக இடம் பெறுகின்றன. கடைசியில் உள்நாட்டு, வெளிநாட்டு உலகச் செய்திகள் இடம்பெற்று, அருட்பணி மலரானது மகத்துவம் பெற்று விளங்குகிறது. இப்பணிக்கு மாதாந்திர நன்கொடை கொடுக்கும் அங்கத்தினர்களுக்கு மட்டுமல்லாது வருட சந்தா ரூ. 50 அளிப்பவர்களுக்கும் ஆயுள் சந்தா ரூ. 500 கொடுப்பவர்களுக்கும் இம்மலர் அனுப்பப்படுகிறது. இதனைப் பிரசுரிப்பவர் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் பொருளாளர் ஆவார். மனித பயமும் தெய்வ பயமும் இல்லாமல் பலர் இந்நாட்டில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு நற்செய்தியை அறிவிப்பது, ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமையாகும்.

15. சுவிசேஷ ஜெபக்குழுவின் நூல்நிலையம்

கண்டது கற்க பண்டிதன் ஆவான் என்பது பழஞ்சொல். அதிக நூற்களைக் கற்ற ஒருவன் அறிவாளியாகத் திகழ்கிறான். உலக வரலாற்றில் மிகப் பெருஞ்சாதனைகளைப் படைத்தவர்கள் அனைவருமே ஏதேனும் ஒரு நூல் நிலையத்தில் தங்களை உறுப்பினராக்கியிருப்பர். மனித வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டி, அவனை நல்வழிப்படுத்துவதற்கு வரலாற்று நூல்கள் மிகப்பெருஞ்சவாலாகத் திகழ்கின்றன. வரலாற்றை மறந்தவர்கள் வாழ்ந்ததுமில்லை; மதித்தவர்கள் வீழ்ந்ததுமில்லை. குமரி மாவட்டம் இந்தியாவிலேயே அதிகம் கற்றவர்களைக் கொண்டது என்னும் பெருமையினை உடையதாகும். இதற்கு மிக முக்கியக் காரணம் மேல் நாட்டு இறைநெறித் தொண்டர்களின் கல்விப் பணியே ஆகும். இன்று அந்நிலையின் தொடர் வளர்ச்சியாக நாமே மற்றவர்களுக்குக் கல்வி கொடுக்கக்கூடிய அளவில் முன்னேற்றம் கண்டுள்ளோம். இவைகளை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளவும், பழைய

தலைமுறையினருக்கு நினைவுப்படுத்தவும் பேராய சுவிசேஷ ஜெபக்குழு சார்பில் நூல் நிலையம் ஒன்று தொடங்க 7-2-1993 இல் நடைபெற்ற ஜெபக்குழுவின் செயற்குழு தீர்மானித்தது. அதன்பேரில் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைமை அலுவலகத்தில் நூல்நிலையம் ஒன்று தொடங்கப்பட்டது.

அ. நூலகத்தினுள்ளே

இந்நூலகத்தில் மலையிலுள்ள மிஷனறிகள் மற்றும் விசுவாசிகள் குறித்த தகவல்கள் அனைவரும் பயன்படும் வகையில் வைக்கப்பட்டிருக்கின்றது. தனிமனிதனுடைய ஆவிக்குரிய வாழ்க்கையைப் புதுப்பிக்கும் புத்தகங்கள், மேல்நாட்டு திருத்தொண்டர்களின் வரலாறுகள், இந்நாட்டு மிஷனறிகளின் வரலாற்று நிகழ்வுகள், இந்தியாவில் கிறிஸ்தவத்தின் நிலை, மக்கள் தொகை கணக்கெடுப்புகள், இயேசுவை அறிந்த மக்கள் கூட்டம் எத்தனை, இன்னும் யாருக்கெல்லாம் சுவிசேஷம் போய் எட்டவேண்டும் போன்ற குறிப்புகள், மலைநாட்டு, ஊழியக்களங்கள், மிஷனறிகள், பள்ளிகள், ஆலயங்கள், விடுதிகள், போன்றவைகள் அடங்கிய ஏடுகள், பல்வேறு நாட்டின் வரைபடங்கள் போன்ற அரிய ஆவணங்கள் இந்நூல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவைகளைப் படிப்போர் மிஷனறிகளது தியாக ஊழியத்தை எளிதாக புரிந்து கொள்ள முடியும். மேலும் வேதத்திற்கு விளக்கம் கொடுக்கும் புத்தகங்கள், ஜெப விண்ணப்பக் குறிப்புகள், சபைச் சரித்திரங்கள், தியானப் புத்தகங்கள், அருளுரைப் புத்தகங்கள், வருடாந்தர மாதாந்தர ஏடுகள், ஒத்த வாக்கிய அகராதி, வேதாகம விளக்கத் துணை நூற்கள், இளைஞர்களுக்கேற்ற அறிவுரை நூற்கள், கிறிஸ்தவ பொது அறிவு நூற்கள், கதைப் புத்தகங்கள் என பலதரப்பட்டன இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ளன.

ஆ. விதிமுறைகள்

இந்நூலகத்தில் உறுப்பினராவதற்குரிய ஆயுள் சந்தா ரூ. 25 ஆகும். இவ்வுறுப்பினர்கள் தாங்கள் விரும்பும் புத்தகங்களை எடுத்துச் சென்று படிக்கலாம். அப்புத்தகத்தை 10 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்திட வேண்டும். திரு. எம்.ஜி. ஜாண்ராஜ் அவர்கள் இந்நூலகக்குழுவிற்கு செயலினராகவும் நூலகப் பொறுப்பாளராகவும் திறம்பட செயலாற்றுகிறார்கள்.

இ. கிளை நூலகம்

இந்நூலகத்தின் நூற்களை, மலையில் பணிபுரியும் மிஷனறிகளும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்னும் நோக்கில் இதன் கிளை நூலகம் ஒன்று 18-7-2000 ஆம் நாள் சேராப்பட்டில் தொடங்கப்பட்டது. தலைமை மிஷனறி அவர்கள் அந்நூலகப் பொறுப்பாளராவார். அங்குள்ள நூற்களை, பணிக்களத்திலுள்ள மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவில்

மிஷனறிகள் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துகின்றனர். கிறிஸ்துவை மனதார ஏற்றுக் கொண்டவர்கள் உறுதிப்படவும் மற்றவர்களுக்காகச் செயல்படவும் இந்நூலக அருட்பணி மக்களை அழைக்கிறது.

திறவுண்ட வாசல் அடைபடுமுன், திறப்பின் வாசலில் நிற்கும் கலங்கரை விளக்காய் மாற இறைவனின் அழைப்பு மக்களிடம் நெருங்கி வருகிறது. அதனை ஏற்றுக் கொள்பவர்கள் இறையுலக இன்பத்தை என்றென்றும் அடைவர். அல்லாமல் தன்னையும் தன்னுடைய தேவைகளையும் குறித்துச் சிந்தித்துச் செயல்படுவோமாகில் ஆணிவேர்களற்றக் கிறிஸ்தவர்களாகவே உருவாகி விடும் சூழல் அமைந்துவிடும். உனக்குக் கர்த்தரால் வரும் அழைப்பு ஒன்று உண்டு. அது என்ன என்பதை தெரிந்து கொள்ள முயற்சி செய்.

முன்னேற்றப் பணியால் தான் ஊழியங்கள் வளர்கின்றன; செப்பனிடப்படுகின்றன. கிறிஸ்துவின் ஊழியத்தை ஒருவரோ, ஒரு குழுவினரோ, குறிப்பிட்ட சபைப்பிரிவினரோ, அல்லது கிறிஸ்தவ நிறுவனங்களைச் சார்ந்தவர்களோ செய்ய வேண்டும் என மற்றவர்கள் நினைப்பது தவறு. இயேசுவின் இரத்தத்தால் உறவானவர்களாகிய அனைத்துத் தரப்பு மக்களும் இரட்சிப்பின் பாத்திரத்தைக் கையில் எடுத்துதான் ஆகவேண்டும். இப்பணியில் யார் பெரியவன், யாருக்கு உயர்ந்த அந்தஸ்து கிடைக்கும். யார் உயர்ந்த நாற்காலியில் அமரப் போகிறவர் என்ற போட்டியே ஏற்படக்கூடாது. கர்த்தருக்காக எல்லாவற்றையும் நஷ்டமும் குப்பையுமாய் விட்டு விடும் மனநிலையுள்ளவர்களே அதிகம் வேண்டும். எத்தனையோ இடங்களுக்குச் சென்றுள்ளேன், ஓடியாடி திரிந்துள்ளேன், எத்தனையோ பாராட்டு மொழிகளைப் பெற்றுள்ளேன், எத்தனையோ புகைப்படங்களுக்குக் காட்சி கொடுத்துள்ளேன் என்று தம்பட்டம் அடிப்பவர்கள் அல்ல. தேவன் விரும்பும் பணியினை செய்தவர்களாக ஒவ்வொருவரும் மாற வேண்டும். அப்போது நல்லது, உத்தமும் உண்மையுமான ஊழியனே என்று கர்த்தர் மதிப்பிடுவார். கர்த்தருடைய ஊழியத்தை செய்தோம் என்பதற்கு ஜீவ புத்தகத்தில் பெயர் எழுதப்படுவதே தகுந்த ஆதாரமாகும். எனவே இன்றே இப்பணியில் ஏதேனும் ஓர் பிரிவில் இணைந்து செயல்பட இறைவன் உங்களை அழைக்கிறார்.

எத்தனை தாலந்துகள் உன்னில் உள்ளதோ
அத்தனையும் இரட்டிப்பாக்க ஆயத்தம் தானோ!
ஐந்து தாலந்தைப் பத்தாக்கினார்
இரண்டு தாலந்தை நான்காக்கினார்
ஒன்று தாலந்தை இரண்டாக்காமல்
மண்ணில் புதைத்தவன் புறம்பானானே

12

ஆண்டிறுதிக் கூடுகைகள்

"நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும் படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (I பேதுரு 2:9)

இந்தியாவில் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு டென்மார்க் மன்னன் நாலாம் பிரடெரிக் என்பவர் மிகுந்த ஆர்வம் கொண்டார். அவரின் வேண்டுதலுக்கிணங்க முதல் சீர்திருத்தக் கிறிஸ்தவ மிஷனெறிகளாக பர்த்தலேமேயு ஷீகன் பால்குவும் புளூச்சோவும் 9-7-1706 ஆம் நாள் தரங்கம் பாடி வந்து சேர்ந்தனர். அதுமுதல் தமிழ் மண் கிறிஸ்தவ சுவிசேஷத்தின் காற்றைத் தொடர்ந்து சுவாசிக்கத் தொடங்கியது. தரங்கம்பாடி இந்திய சுவிசேஷத்தின் தொட்டிலாக விளங்கியது. அப்பகுதியில் சுவிசேஷ விதை வேரூன்றி வளர்ந்த பின் தமிழகத்தின் பிறபகுதிகளிலும் படரத் தொடங்கியது. குமரி மாவட்டத்தில் நூறு ஆண்டுகளுக்குப் பின் 1806 இல் றிங்கல் தௌபே ஐயரால் சீர்திருத்தக் கிறிஸ்தவம் எல்.எம்.எஸ். மூலமாக நுழைந்தது. அதற்கு முன் புனித தோமா, புனித சவேரியார், டச்சுத் தளபதி டிலனாய், டச்சுப் போதகர்கள் மூலம் கிறிஸ்தவம் குமரிமாவட்டப் பகுதிகளில் அறிமுகமாகியிருந்தது. எனினும் சீர்திருத்தக் கிறிஸ்தவ மிஷனறிகளின் பணி, மக்கள் மத்தியில் பேரெழுச்சியை உருவாக்கிற்று. மிஷனறிகள் ஒருவருக்குப் பின் ஒருவராக வருகை தந்து ஒடுக்கப்பட்ட மக்களின் அடிமைத்தளைகளை அறுத்தெறிந்தனர். மக்களோடு தங்கி மக்களுக்காகவே வாழ்ந்து அவர்கள் தம் இனிய உள்ளங்களில் இடம் பிடித்தனர். கல்வி இல்லாதவர்களுக்கு கல்வி அளித்து, எழுத்தறிவு ஊட்டி, முதியோர் கல்வி தந்து, பொது சுகாதாரம் கற்றுத்தந்து, சரீர நோய்களுக்கு மருந்து தந்து புதிய சமுதாயத்தை உருவாக்கினர். இவ்விதம் உயர்வடைந்த மக்கள் மற்றவர்களுக்கும் சுவிசேஷம் கூற ஆசைப்பட்டனர். அதற்காக உருவாக்கப்பட்ட அமைப்புதான் பேராய சுவிசேஷ ஜெபக்குழு ஆகும்.

இதன் வருடாந்தர கூடுகையினை ஒவ்வோர் ஆண்டும் சிறப்பாக நடத்தினர். இக்கூடுகைகள் குறித்த விவரங்கள் விளக்கப்படுகின்றன.

1. அருள்திரு. டி. எலியாஸ்

இலக்குகள் அமைத்துத் திட்டங்கள் வகுத்து தேவனுடைய பணியைச் செய்வதற்காகவே ஒவ்வொருவரையும் கிறிஸ்து அழைத்திருக்கிறார். அவ்வழைப்புக்கு அடிபணிந்த சுவிசேஷ ஜெபக்குழு மிஷனறிகளின் முதலாம் ஆண்டுக் கூடுகை 20-7-1963 இல் ஐரேனிபுரம் சேகர சபையில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தைப் பேராயர் ஐ. ஆர். ஹைச். ஞானதாசன் அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார்கள். **தேவனின் அழைப்பு** என்னும் தலைப்பில் செய்திகள் கொடுக்கப்பட்டன. அக்கூடுகையில் மலைவாழ்மக்களின் வாழ்க்கை தரம் குறித்தும், அங்குள்ள தேவைகள் குறித்தும் சுவிசேஷ ஜெபக்குழு செய்கின்ற பணிகள் குறித்தும் அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் விளக்கமாய் எடுத்துக் கூறினார்கள். ஜெபக்குழுவின் செயலர். திரு. எம். ராஜையன் அவர்கள் ஓராண்டைய அறிக்கையினைச் சமர்ப்பித்தார்கள்.

2. பேராயர் ஐ.ஆர்.ஹெச். ஞானதாசன்

நம்முடைய தேவன் செயலில் மகத்துவமானவர் என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவுக்கு அவர் ஆலோசனையில் ஆச்சர்யமானவர். சுவிசேஷ ஜெபக்குழுவின் இரண்டாவது ஆண்டு விழா கூட்டம் 9-9-1964 ஆம் நாள் மார்த்தாண்டம் சேகர சபையில் வைத்து நடைபெற்றது. கூட்டத்தினைப் போதகர் எம். ஆமோஸ் அவர்கள் ஜெபத்துடன் ஆரம்பித்தார்கள். பேராயர் ஐ.ஆர். ஹெச். ஞானதாசன் அவர்கள் **தரிசனத்தின் நோக்கம்** என்னும் தலைப்பில் எழுச்சிமிகு செய்தியினை அனைவரையும் தூண்டும் விதத்தில் கொடுத்தார்கள். இறைவனுக்கு நன்றி கூறும் விதத்தில் ஸ்தோத்திர விழாவாக அது நடந்தேறியது.

3. அருள்திரு. அறிவர். தியோடர் வில்லியம்ஸ்

எல்லா காரியத்திலும் கடவுள் நம்மை நடத்துவார் என்பதைவிட நம்முடைய முயற்சியையும் நாம் பெரிதும் நம்ப வேண்டும். 1965 அக்டோபர் 26,27,28 ஆகிய நாட்களில், சுவிசேஷ ஜெபக்குழுவின் மூன்றாவது வருடக் கூட்டம் முட்டம் சி.எஸ்.ஐ. தியான மண்டபத்தில் வைத்து நடைபெற்றது. பேராயர் ஐ.ஆர்.ஹெச். ஞானதாசன் அவர்கள் மூன்று நாட்களும் கூட்டங்களைத் தலைமைதாங்கி நடத்தினார்கள். அருள்திரு. அறிவர் தியோடர் வில்லியம்ஸ் அவர்கள் **பளுவான பணிக்குப் பணியாளர் தேவை** என்னும் தலைப்பில் ஆவிக்குரிய உண்மைகளைப் பகிர்ந்து கொண்டார்கள். பங்குபெற்றவர்கள், தங்கள்

பகுதிகளில் ஜெபக்கூட்டங்கள் தொடங்கி நடத்துவதாகவும் ஊழியத்திற்கு நிதி திரட்டி ஜெபக்குழுவைத் தாங்குவதாகவும் தீர்மானம் எடுத்தனர்.

4. திரு. ஜான் ரிச்சர்ட்

முன்னேறி செல்வோம் இயேசுவின் போர் வீரனாய் என்பதே ஊழியத்தின் இலக்கு. சுவிசேஷ ஜெபக்குழுவின் நான்காவது ஆண்டிறுதிக் கூடுகை 1967 ஜனவரி 13,14,15 ஆகிய நாட்களில் குழித்துறை ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூடுகையினைப் பேராயர் ஐ.ஆர்.ஹெச் ஞானதாசன் அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். சென்னையைச் சேர்ந்த திரு. ஜாண் ரிச்சர்ட் அவர்கள் **பலவீனமுள்ள நாம் நம்மை சார்ந்து வாழ்வதைவிட தேவசித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து செயலாற்றுவதே உத்தமம்** என்னும் தலைப்பில் இறையுரைகள் பல ஆற்றினார்கள். பங்கு பெற்றோர் அனைவரும் புத்துணர்ச்சிப் பெற்றவர்களாய் திரும்பினார்கள்.

5. திரு. எமில் ஜெபசிங்

போதகர் ஆர். எட்வர்ட் சேம் அவர்கள் தலைமையில் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஐந்தாவது ஆண்டு விழாக்கூடுகைகள் 1968 பெப்ருவரி 2,3,4 ஆகிய நாட்களில் நாகர்கோவில் கஸ்பா தேவாலயத்தில் வைத்து நடைபெற்றன. சென்னையைச் சேர்ந்த திரு. எபனேசர், திரு. எமில் ஜெபசிங் ஆகியோர் **காலமும் வேலையும்** என்னும் தலைப்பில் செய்தி அளித்தார்கள். சுவிசேஷம் பரவாத மலைப்பகுதிகள் ஒவ்வொன்றிலும் இயேசுவின் சிலுவைக்கொடி பறக்க நாம் உழைக்க வேண்டும் என்ற சபதத்தை ஏற்று அனைவரும் பிரிந்து சென்றனர். கூட்டத்தில் மலை ஊழியத்தின் தேவைகளை அருள்திரு. டி எலியாஸ் அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள். இறுதிநாள் கூடுகைப் பேராயர் ஐ.ஆர். ஹெச். ஞானதாசன் அவர்களால் நடத்தப்பட்டது.

6. திரு. ஜெ.ஜெ. எபநேசர், செல்வி. அகதா மார்டின்ஸ்

1969 பெப்ருவரி 27, 28 மார்ச் 1 ஆகிய நாட்களில் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் ஆறாவது ஆண்டுக் கூடுகை முழுக்கோடு ஒய்.எம்.சி.ஏ கூடாரத்தில் வைத்து நடைபெற்றது. பேராயர் ஐ.ஆர்.ஹெச். ஞானதாசன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். **இலட்சிய வீரர்கள்** என்னும் தலைப்பில் இந்திய சிறுவர் சங்க இயக்குநர் செல்வி அகதா மார்ட்டின்ஸ் மற்றும் ஜெ.ஜெ. எபநேசர் ஆகியோர் ஊக்கமான செய்திகளைக் கொடுத்தார்கள். ஓர் யுத்த வீரன், தளபதி ஆகியோர் தாம் வைத்த இலக்கோளில் எவ்வாறு அணுவளவும் வழுவாது போர்க் களத்தில் தங்களை நிலைநிறுத்தி நிற்கிறார்களோ அவ்வாறே மிஷனெறிகளும்

செயல்பட வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. பணிக்களத் தேவைகளைப் போதகர் எலியாஸ் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

7&8. திரு. பி. சாமுவேல்

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் ஏழு மற்றும் எட்டாவது ஆண்டிறுதிக் கூடுகைகள் கீழகிருஷ்ணன்புதூர் ஆலயத்தில் 1970 ஏப்ரல் 16, 17, 18 ஆகிய நாட்களில் நடைபெற்றன. பேராயர் ஐ.ஆர்.ஹெச். ஞானதாசன் அவர்கள் தலைமை தாங்கி மூன்று நாட்களும் உடனிருந்து கூட்டங்களைப் பொறுப்புடன் நடத்தினார்கள். **முன்னே நாம் அன்னியர் இப்பொழுதோ நாம் பரிசுத்தர்** என்னும் தலைப்பில் கோவில்பட்டியைச் சேர்ந்த திரு. பி. சாமுவேல் அவர்கள் அனுபவ ரீதியாக செய்தியினைப் பகிர்ந்து கொண்டார். இவரோடு இணைந்து அருள்திரு. டி. எலியாஸ் அவர்களும் செய்தி கொடுத்து, கூட்டத்தினரை உற்சாகப்படுத்தினார்கள்.

9. அருள்திரு. அறிவர். கெ.பி. மத்தாய்

1971 ஏப்ரல் 19,20,21, ஆகிய நாட்களில் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஒன்பதாவது ஆண்டுவிழா கூடுகை நெய்யூர் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. முதல்நாள் மற்றும் முடிவுநாள் கூடுகைகளைப் பேராயர் ஐ.ஆர்.ஹெச். ஞானதாசன் அவர்கள் தலைமைதாங்கி நடத்தினார்கள். அருள்திரு. அறிவர் கெ.பி. மத்தாய் அவர்கள் **புதிய சகாப்தம்** என்னும் பெயரில் அனலூட்டும் செய்தியினைக் கொடுத்தார்கள். இவரோடு திரு. இஸ்மாயில், திரு. ஸ்டான்லி பிறின்ஸ் ஆகியோர்களும் செய்திகளை எடுத்துரைத்தனர்.

10. அருள்திரு. கெ.ஜி.எஸ். துரைராஜ்

சுவிசேஷ ஜெபக்குழுவின் 10 ஆவது ஆண்டுவிழா கூடுகைகள் 1972 மேய் மாதம் 17, 18, 19 ஆகிய நாட்களில் நாகர்கோவில் பேராய மண்டபத்தில் வைத்து நடைபெற்றன. இக்கூடுகைகளில் **செயல்வீரர்கள்** என்ற தலைப்பில் என்.எம்.எஸ். இன் பொதுச் செயலர் அருள்திரு. கெ. ஜி.எஸ். துரைராஜ் மற்றும் அருள்திரு. ஜெ.எம். ஜெயசிங், டி. எலியாஸ், எஸ். செல்வின், வி. ற்றி. ஆபிரகாம் ஆகியோர் செய்திகளைப் பகிர்ந்து கொண்டார்கள். அக்கூடுகைகளில் கலந்து கொண்டோர்கள் குடும்பமாக குழுக்களாக ஊழியத்தைத் தாங்கவும், ஜெபிக்கவும் தங்களை அர்ப்பணித்தார்கள்.

11. அருள்திரு. அறிவர். தியோடர் வில்லியம்ஸ்

பேராயர் சி. செல்வமணி அவர்களின் தலைமையில் சுவிசேஷ ஜெபக்குழுவின் 11 ஆவது வருடாந்தரக் கூடுகை 1973 மேய் மாதம் 16,17,18

ஆகிய நாட்களில் மூலச்சல் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. அருள்திரு. அறிவர். தியோடர் வில்லியம்ஸ் அவர்கள் **இறைத் திட்டங்கள்** என்னும் தலைப்பில் அருளுரைகளைப் பகிர்ந்து கொண்டார்கள். தேவ பணியைத் திட்டமாக, துடிப்பாக, வேகமாக, தேவையிலிருப்போருக்கு செய்வோம் என்ற முடிவினை பலர் எடுத்தனர். மனிதனின் திட்டங்கள் தேவனின் பார்வைக்கு ஏற்றதாக அமையட்டும்.

12. திரு. பிரகாஷ் ஏசுவடியான்

இருட்டினில் வாழும் மனிதர்களைத் தேடுவதற்குப் பதிலாக இன்று பலர் வெளிச்சத்தில் தேடிக் கொண்டிருக்கின்றனர். சுவிசேஷ ஜெபக்குழுவின் பன்னிரண்டாவது ஆண்டிறுதிக் கூடுகைகள் மார்த்தாண்டம் ஆலயத்தில் வைத்து 1974 மேய் மாதம் 23,24 ஆகிய நாட்களில் நடைபெற்றன. இக்கூடுகைகளில் **தேடுவோர் வரிசையிலே** என்ற தலைப்பில் திரு. பிரகாஷ் ஏசுவடியான் அவர்கள் செய்தி கொடுத்தார்கள். அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் மலை ஊழிய அறிக்கையினை படித்தார்கள். இறுதிநாள் கூட்டம் பேராயர் சி. செல்வமணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கலந்துகொண்ட பலர் தேடுவோர் வரிசையில் தங்களையும் இணைத்துக் கொண்டனர்.

13. அருள்திரு. அறிவர். தியோடர் வில்லியம்ஸ்

சுவிசேஷ ஜெபக்குழுவின் 13 ஆவது ஆண்டிறுதிக் கூடுகை 1975 மேய் மாதம் 20,21,22, ஆகிய நாட்களில் குளத்துவிளை சபையில் வைத்து நடைபெற்றது. அருள்திரு. எ. மாசில்லாமணி அவர்கள் தலைமை தாங்கினார்கள். **கடமைவீரன்** என்னும் தலைப்பில் அருள்திரு. அறிவர். தியோடர் வில்லியம்ஸ் அவர்கள் அருளுரை ஆற்றினார்கள். ஜெபிப்பதும் விதைப்பதும் நம் கடமை. வளர்வதும் விளைவதும் தேவ கிருபை என்பதை அனைவரும் உணர்ந்து செயல்பட தீர்மானித்தனர். இறுதிநாள் கூடுகைப் பேராயர் சி. செல்வமணி அவர்களால் நடத்தப்பட்டது.

14. திரு. பால்சுதாகர்

ஒருமுறைதான் இந்த உலகத்திலே நாம் வாழ முடியும். அந்த வாழ்க்கைக்கும் காலக்கெடு வரையறுக்கப்பட்டாயிற்று. எனவே கொடுக்கப்பட்டக் காலத்திலே தான்செயலாற்ற வேண்டும். யாருக்காக வாழ்வது? என்ற கேள்வி பலர் உள்ளத்திலே எழுவது இயல்பு. **கிறிஸ்துவுக்காக** என்ற தலைப்பில் சுவிசேஷ ஜெபக்குழுவின் 14 ஆவது ஆண்டிறுதிக் கூடுகை 1976 மேய் 6,7,8 ஆகிய நாட்களில் குமாரபுரம் தோப்பூர் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. அருள்திரு. எம். இராஜையன் அவர்கள் கூட்டங்களைத் தலைமையேற்று நடத்தினார்கள்.

திரு. பால்கதாகர் அவர்கள் சிறப்புச் செய்தியினை வழங்கினார்கள். பேராயர் வெளியூர் பயணம் காரணமாக இக்கூட்டங்களில் கலந்து கொள்ள இயலவில்லை.

15. அருள்திரு. ஞானராஜ்

கவிசேஷ ஜெபக்குழுவின் 15 ஆவது ஆண்டிறுதிக் கூடுகை 1977 மேய் மாதம் 19,20,21, ஆகிய நாட்களில் குளச்சல் ஆலயத்தில் வைத்து பேராயர் சி. செல்வமணி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. **மலைமக்களுக்கும் நற்செய்தி** என்ற தலைப்பில் அருள்திரு. ஞானராஜ் அவர்கள் தியானவுரை ஆற்றினார்கள். மனித நடமாட்டமில்லாத மலை உச்சியில் அரை நிர்வாண மனிதர்களாகக் குகைகளிலும், சிறு குடில்களிலும், மரங்களிலும் விலங்குகளைப் போல் வாழும் மக்களைக் கண்டு பிடிக்க பலர் எழுந்தனர்.

16. திரு. பிரேம் குமார்

1978 மேய் மாதம் 18,19,20 ஆகிய நாட்களில் கவிசேஷ ஜெபக்குழுவின் 16 ஆவது ஆண்டிறுதிக் கூடுகை பேரின்பபுரம் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. பேராயர் வெளியூர் சென்றிருந்த காரணத்தால் அருள்திரு. சி. இரத்தினதாஸ் அவர்கள் கூடுகைக்குத் தலைமைப் பொறுப்பை ஏற்றார்கள். **இறை ஆளுகை** என்னும் தலைப்பில் திரு. பிரேம் குமார் அவர்கள் செய்தி கொடுத்தார்கள். இறைவனின் இரண்டாம் வருகையின்போது நியாயத்தீர்ப்பு ஒன்று நிச்சயம் உண்டென்பதால் பொறுப்பில்லாமல் நாம் நடந்து கொள்ள முடியாது என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் பேராயத்தின் சபைப் பரிபாலன குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்ட அமைப்பை பொதுக்குழு ஏற்றுக் கொண்டது. அதன்பேரில் கவிசேஷ ஜெபக்குழு (மலைநாட்டு ஊழியம்) என்ற பெயர் **அத்தியட்சாதீன கவிசேஷ ஜெபக்குழு** என மாற்றம் செய்யப்பட்டது. அனைவரும் ஏகமனதாக அதனை ஏற்றுக் கொண்டனர்.

17. திரு. பால்தேவகுமார்

பேராய கவிசேஷ ஜெபக்குழு தனது 17 ஆவது ஆண்டு விழா கூட்டங்களை 1979 மேய் 14,15,16 ஆகிய நாட்களில் சேனம்விளை ஆலயத்தில் வைத்து நடத்தியது. திரு. பால் தேவகுமார் மற்றும் அருள்திரு. டி. எலியாஸ் ஆகியோர் **நற்செய்தி அறிவித்தல்** என்னும் தலைப்பில் இறைவார்த்தைகளைப் பகிர்ந்து கொண்டனர். தேசமெங்கும் நடைபெறும் இறைப்பணியில் தேவன் நம்மை இணைத்திருக்கின்றார்.

எவ்வாறு ஒரு சைக்கிள் சக்கரத்தின் மையத்தில் அனைத்துக் கம்பிகளும் இழுத்துக் கட்டப்பட்டு இணைக்கப்பட்டிருக்கிறதோ, அதுபோன்று நாமும் ஊழியம் என்னும் சக்கரத்தில் இணைக்கப் பட்டுள்ளோம் என்ற கருத்தினை அனைவரும் ஏற்றனர். கடைசிநாள் கூடுகையினை பேராயர் சி. செல்வமணி அவர்கள் ஸ்தோத்திர ஆராதனையாகத் தலைமையேற்று நடத்தினார்கள்.

18. பேரா. டி. எஸ். ஸ்பர்ஜன்

பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் 18 ஆவது ஆண்டு விழா நிகழ்வுகளை 1980 மேய் 29,30 ஆகிய நாட்களில் கோட்டையடி ஆலயத்தில் வைத்து, தலைமை தாங்கி நடத்தினார்கள். **ஆடுகளும் மேய்ப்பனும்** என்னும் பொருளில் பேரா. டி. எஸ். ஸ்பர்ஜன் அவர்கள் சிறப்புச் செய்தியினைக் கொடுத்தார்கள். மந்தைக்குப் புறம்பாக இருக்கும் ஆடுகளை, சிந்தையில் ஏற்பட்ட பாரத்தோடுச் சேர்க்க பலர் எழுந்தனர்.

19. அருள்திரு. இ. சாள்ஸ்சேட்மேன்

1981 மேய் 14,15,16 ஆகிய நாட்களில் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் 19 - ஆவது வருடாந்தரக் கூடுகை நாகர்கோவில் டதி மேல்நிலைப்பள்ளியில் வைத்துப் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் டி.எஸ். ஸ்பர்ஜன் அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட அருள்திரு. இ. சாள்ஸ்சேட்மேன் தலைமையிலான மேல்நாட்டு குழுவினர் **காலம் தாழ்த்தாதே** என்னும் தலைப்பில் அருளுரைகள் வழங்கினர். அவைகளில் வேதம் வாசிக்க காலந்தாழ்த்தாதே, ஜெபிக்க காலம் தாழ்த்தாதே, கர்த்தருடைய இரட்சிப்பின் பணியை நிறைவேற்ற காலம் தாழ்த்தாதே, கர்த்தருக்கென்று கொடுக்க காலம் தாழ்த்தாதே போன்ற சத்தியங்கள் முக்கியப்படுத்தப்பட்டன. அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் மலை ஊழியங்கள் குறித்து எடுத்துரைத்தார்கள்.

கல்வராயன் மலையின் முதல் விசுவாசியான திரு. ஆபிரகாம் அவர்கள், **மலைகிற்றார்** என்று அழைக்கப்படும் ஆதிவாசிகள் பயன்படுத்தும் சங்கீதக் கருவியை இசைத்துச் சிறப்புப் பாடல் பாடி தனது இரட்சிப்பின் சாட்சியையும் கூறினார்கள்.

20. அருள்திரு பால் டேவிட்சன், அருள்திரு. ராஜ்ய ஜின் கிரிச்

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழாக் கூடுகைகள் 1982 ஜூன் 11,12, 13 ஆகிய நாட்களில் திட்டுவிளை ஆலயத்தில் வைத்து நடத்தப்பட்டன. இக்கூட்டங்கள் சிறப்பாய் நடைபெற

[illegible] செலவாகும் அவர்கள் பேருதவி புரிந்தார்கள். அதோடு அவர் [illegible] ஒரு கணிசமான தொகை மலைநாட்டு ஊழியத்திற்கு [illegible] கொடுப்பதாக வாக்குப் பண்ணினார்கள். நீங்கள் [illegible] போர்கள் என்னும் தலைப்பில் அருள்திரு. பால் [illegible] அருள்திரு. ராய் ஜின் கிரிட் ஆகியோர் செய்திகள் அளித்தனர். மிஷனெறிகள் பலர் சாட்சிகளையும் பணித்தள அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர். இறுதிநாள் ஸ்தோத்திர கூடுகையினை பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் நடத்தினார்கள்.

21. அருள்திரு. ஜெ.எம். ஜெயசிங், திரு. சுந்தர் தர்மராஜ்

நாகர்கோவில் கிறிஸ்து சபையில் வைத்து பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் 21 ஆவது வருடாந்தரக் கூடுகை 1983 மேய் மாதம் 21,22,23 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற்றது. பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் கூட்டங்களைத் தலைமை தாங்கி சிறப்பித்தார்கள். **இயேசுவை பின்தொடர்** என்னும் தலைப்பில் அருள்திரு. ஜெ.எம். ஜெயசிங், திரு. சுந்தர் தர்மராஜ் ஆகியோர் இறைச்செய்திகளை அளித்தனர். கிறிஸ்துவை பின் தொடரும் போது பாடுகள், வேதனைகள், துன்பங்கள், துயரங்கள் போன்றன படிப்படியாக வந்தாலும் அவைகளை முறியடிக்கும் பெலனை இயேசு தருவார். ஆகவே முன் வைத்தக் காலை பின் வைக்காமல் ஊழியக்களத்தை நோக்கி புறப்படல் வேண்டும் என்ற கருத்துக்கள் முக்கியப்படுத்தப்பட்டன. மிஷனெறிகளால் பணிக்கள அனுபவங்களும் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

22. பேரா. டி. எஸ். ஸ்டர்ஜன்

பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் தலைமையில் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் 22 ஆவது ஆண்டுவிழா கூட்டங்கள், ஸ்காட் கிறிஸ்தவ மேல்நிலைப்பள்ளியில் வைத்து 1984 அக்டோபர் மாதம் இரண்டு நாட்கள் நடைபெற்றன. **உக்கிராணத்துவம்** என்ற தலைப்பில் பேரா. டி.எஸ். ஸ்டர்ஜன் மற்றும் அருள்திரு. டி. எலியாஸ் ஆகியோர் செய்தி கொடுத்தனர். கிறிஸ்து வழங்கிய வரங்களைக் கண்டு பிடித்து, கூர்மையாக்கி, வளர்த்து, பயிற்றுவித்து ஊழியத்தில் அவர்களை பயன்படுத்த உதவி செய்யும் பண்புடையவர்களே இன்று தேவை என்பன ஆணித்தரமாகக் கற்றுக்கொடுக்கப்பட்டன.

23. திரு. விக்டர் ஞானராஜ்

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் 23 ஆவது வருடாந்தரக் கூடுகை 1985 ஆகஸ்ட் 16,17,18 ஆகிய நாட்களில் மார்த்தாண்டம் ஆலயத்தில்

வைத்து நடைபெற்றது. **திருச்சபையும் மிஷனெறிப்பணியும்** என்ற பொருளில் பெங்களூரைச் சேர்ந்த திரு. விக்டர் ஞானராஜ் அவர்களும் சென்னையைச் சேர்ந்த அருள்திரு. ரசலையா அவர்களும் செய்தி கொடுத்தார்கள். கிறிஸ்தவப் போதகர்கள் என்போர் சபையைப் பராமரிப்பவர்கள் மட்டுமல்ல, நற்செய்தி பணியாளர்கள் பலரை நாட்டின் மூலை முடுக்கெல்லாம் அனுப்ப எழுப்புபவர்களே ஆவர். சபையின் பிரதான பணி மிஷனெறிப் பணியே என்பதும் வற்புறுத்தப்பட்டது.

24. அருள்திரு. பால்ராஜ் அதிசயமணி

பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் தலைமையில் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் 24 ஆவது வருடாந்தரக் கூடுகை 1986 மேய் மாதம் 19,20,21 ஆகிய நாட்களில் ஜேம்ஸ் டவுண் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. மும்பையைச் சேர்ந்த அருள்திரு. பால்ராஜ் அதிசயமணி அவர்கள், **பரிசுத்தமாகு பரிசுத்தமாக்கு** என்னும் தலைப்பில் நற்செய்திக் கொடுத்தார்கள். பரிசுத்த வேதம் உன்னைப் பாவத்திலிருந்து விலக்கி வைக்கும். அல்லது பாவம் உன்னைப் பரிசுத்த வேதத்திலிருந்து விலக்கி வைக்கும் என்ற கருத்து முக்கியப்படுத்தப்பட்டது. மற்றவர்களையும் பரிசுத்த வாழ்வுக்கு நேராக வழிநடத்துவது பரிசுத்தர்களின் செயலாகும். அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் பணிக்களச் செய்திகளை அனுபவத்தோடுப் பகிர்ந்து கொண்டார்கள்.

25. வெள்ளிவிழா - பிரதமப் பேராயர் ஐ. ஜேசுதாசன், திரு. எமில் ஜெபசிங்

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் வெள்ளி விழா கூடுகை நெய்யூர் ஆலயத்தில் 1987 ஜூலை 31 ஆகஸ்ட் 1,2 ஆகிய நாட்களில் நடைபெற்றது. கூட்டத்திற்குப் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் தலைமைதாங்கினார்கள். **எல்லையை விரிவாக்கு** என்னும் பொருளில் முன்னாள் பிரதமப் பேராயர் ஐ. ஜேசுதாசன், திரு. எமில் ஜெபசிங் ஆகியோர் சிறப்புச் செய்திகளைக் கொடுத்தார்கள். சபைகள், விசுவாசிகள், குழுவினர்கள் ஆகியோர் இதுவரை மிஷனெறிப் பணியில் பங்கு கொள்ளாமல் இருந்தால் இப்பளுவான பணியில் சேர்வதற்கான அழைப்பும் கொடுக்கப்பட்டது. பேராயமும் தன் பணியின் எல்லையை விரிவாக்க வேண்டும் என்ற கருத்தும் வற்புறுத்தப்பட்டது.

சினாடு போர்ட் ஆப் மிஷன் இயக்குநர் அருள்திரு. சி. இரத்தினதாஸ், மேயாக்பெல்லோ அருள்திரு. டி. எலியாஸ் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கு பெற்றனர். திரு. சி. செல்லத்துரை அவர்களை பொறுப்பாசிரியராகக் கொண்டு ஜெபக்குழு **வெள்ளி விழா** மலர் ஒன்று வெளியிடப்பட்டது. இந்நிகழ்வுகள் அனைத்திற்கும் திரு. டி. ஏசுஞானதாஸ்

அவர்கள் கல்வீரராகச் செயல்பட்டார்கள். கல்வாரியை ஏறிட்டு பார்த்தவர்கள் எந்தவொரு தியாகத்திற்கும் அஞ்சுவதில்லை, என்பதை பல்வேறு சாட்சிகள் நிரூபித்தன.

26. அருள்திரு. பால்ராஜ் அதிசயமணி

கோட்டாரம் சேகர ஆலயத்தில் வைத்துப் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் 26 ஆவது ஆண்டிறுதிக் கூடுகை 1988 மேய் மாதம் நடைபெற்றது. **ஒளியை நோக்கி** என்னும் தலைப்பில் அருள்திரு பால்ராஜ் அதிசயமணி அவர்கள் சிறப்புச் செய்தி வழங்கினார்கள். வியாதிக் கொடுமையால் தீட்டு என்று ஒதுக்கப்பட்டவர்களுக்கும் உலகில் வாழும் எந்தவகை மனிதருக்கும் இயேசுவால் வாழ்வளிக்க முடியும். இருள் கவ்வி நிற்கும் வீடுகளுக்கு இயேசுவாகிய ஒளியை ஏற்றுவோம். இந்த ஒப்பற்ற, உயர்வான பணியை நம் மூலம் தேவன் செய்ய விரும்புகிறார் என்ற சத்தியம் பல்வேறு அனுபவ சாட்சிகள் மூலம் மெய்ப்பிக்கப்பட்டது. இக்கூடுகையில் போக்கெல்லோ அருள்திரு. டி. எலியாஸ் மற்றும் மிஷனெறிகள் பலர் கலந்து கொண்டனர். பேராயர் ஜி கிறிஸ்துதாஸ் அவர்கள் கூட்டத்தினை தலைமையேற்று நடத்தினார்கள்.

27. திரு. பால் சுதாகர்

பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் தலைமையில் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் 27 ஆவது ஆண்டுவிழா கூட்டங்கள் மருதங்கோடு ஆலயத்தில் வைத்து 1989 மேய் மாதம் 25,26,27 ஆகிய நாட்களில் சிறப்பாக நடைபெற்றன. **நற்செய்தி அனைவருக்குமுரியது** என்ற தலைப்பில் உயர்திரு. பால் சுதாகர் அவர்கள் இறைசெய்தி அளித்தார்கள். காணியாட்சிக்குப் புறம்பானவர்கள், நம்பிக்கையற்றவர்கள், தேவனற்றவர்கள், உயிரற்றப் பொருட்களை வழிபடுபவர்கள் ஆகியோருக்கு நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்ற கருத்து அழுத்திக் கூறப்பட்டது. மிஷனெறிப் பொறுப்பாளர் எலியாஸ் அவர்கள் மிஷனெறி பணியாற்ற மலைக்கு அனுப்பப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு பெற்றதை நினைவுப்படுத்தி இறுதிநாள் பேராயர் அவர்கள் ஸ்தோத்திர ஆராதனை நடத்தி ஜெபம் ஏறெடுத்தார்கள்.

28. அருள்திரு. சாமுவேல் ஜெ. ராயப்பா

1990 ஆகஸ்ட் 24,25,26 ஆகிய நாட்களில் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் தலைமையில் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் 28 ஆவது ஆண்டு விழா கூட்டங்கள் மத்திகோடு ஆலயத்தில் வைத்து நடைபெற்றன. **பெலப்படுத்துகின்ற கிறிஸ்துவும் நற்செய்தி பணியும்** என்ற பொருளில் செய்திகளை சென்னையைச் சேர்ந்த அருள்திரு

ஜெ. ராயப்பா அவர்கள் வழங்கினார்கள். நமது முயற்சிகள் வெற்றி பெறும்போது, பலன் என்றும் தோல்வியுறும்போது கடவுள் விருப்பமில்லை என்றும் நினைப்பது மனித பெலவீனம். எனவே நீ பெலமுள்ள ஆண்டவரின் பாதையில் நற்செய்தி பணியைச் செய்தல் வேண்டும் என்றும் கூறப்பட்டது. யோக்பெல்லோ டி. எலியாஸ் அவர்கள் போதகராக அபிஷேகம் பெற்று 25 ஆண்டுகள் நிறைவுபெற்றதைப் பாராட்டி, அன்னாருக்கு பேராயர் திரு. கிறிஸ்துதாஸ் அவர்கள் பொன்னாடை போர்த்தி ஜெபம் ஏறெடுத்தார்கள்.

29. அருள்திரு. அறிவர். ஜெயராஜ் கிருஷ்ணன்

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் 29 ஆவது ஆண்டுவிழா கூட்டங்கள் சீயோன்புரம் ஆலயத்தில் வைத்து 1991 ஆகஸ்ட் மாதம் 23,24,25 ஆகிய நாட்களில் நடைபெற்றன. சிறப்புச் செய்தியாளர் அருள்திரு. அறிவர். ஜெயராஜ் கிருஷ்ணன் அவர்கள் **எழுந்து செல்** என்ற பொருளில் அருளுரை வழங்கினார். அவரோடு சுவிசேஷகர் தர்மசகாயம், அருள்திரு. டி. எலியாஸ் ஆகியோரும் செய்தி அளித்தனர். ஆயிரமாயிரம் கிராமங்களில் முதல்முறையாகத் திருச்சபைகள் திறக்கப்படுகின்றன. அதில் ஆராதிக்க மக்கள் ஆசையோடு கூடுகிறார்கள். ஆனால் அவர்கள் மத்தியில் தங்கி இறைப்பணியாற்ற, இறைவாஞ்சை கொண்ட இளைஞர்கள் தேவை. அழைப்புப் பெற்றோர் எழுந்து செல்ல வேண்டும் என்ற கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன. பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் ஆண்டுவிழா ஸ்தோத்திரக் கூட்டத்தை நடத்தி முடித்தார்கள்.

30. திரு. பிரகாஷ் ஏசுவடியான்

நாகர்கோவில் பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரியில் வைத்துப் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் 30 ஆவது ஆண்டுவிழா கூடுகைகள் 1992 ஜூலை 31, ஆகஸ்ட் 1,2, ஆகிய நாட்களில் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றன. திருவாளர் பிரகாஷ் ஏசுவடியான், யோகபெல்லோ அருள்திரு. டி. எலியாஸ் ஆகியவர்கள் **திறப்பின்** வாசலில் **நிற்க ஆளில்லை** என்ற பொருளில் அருளுரை வழங்கினார்கள். கண்ணீர் விட்டு ஜெபிக்கும் கண்கள் தாரும். ஆத்மீக பலம் தாரும். அசதியையும் தூக்கத்தையும் நீக்கும் என ஜெபம் செய்து, அழிவிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் ஜெப வீரர்கள் தேவை. [illegible]டியாக களம் சென்று சத்தியம் உங்களை விடுதலையாக்கும்: சத்தியத்தைக் கூறுகிறோம் என்பாரும் தேவை. இச்செய்திகளால் பல உ[illegible]பாங்கள் இயேசுவில் உறுதிப்பட்டன.

இக்கூடுகைகளின்போது பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் மாத இதழானது அருட்பணி மலர் என்ற பெயருடன் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்களால் 31-7-1992 ஆம் நாள் வெளியிடப்பட்டது.

31. திரு. அகஸ்டின் ஆதீர்

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் 31 ஆவது ஆண்டு விழா கூடுகைகள் 1993 ஜூலை 31 ஆகஸ்டு 1,2 ஆகிய நாட்களில் நாகர்கோவில் கிறிஸ்து சபையில் வைத்து பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றன. **ஒருவனும் கிரியைச் செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது** என்னும் பொருளில் சென்னையைச் சேர்ந்த திரு. அகஸ்டின் ஆதீர் அவர்கள் செய்தி கொடுத்தார்கள். இந்தியாவில் சுவிசேஷத்திற்கு திறந்தவாசல் இன்று உள்ளது. பல மாநிலங்கள் மதமாற்றத்தடைச்சட்டத்தை ஆணைகளாக மாற்ற முயற்சி செய்து கொண்டிருக்கின்றன. திறந்த வாசல் அடைபடுமுன் பலர் எழுந்து சுவிசேஷ செய்தியை இயேசுவை அறியாத மக்களுக்குச் சொல்ல வேண்டும். இதுவே கிறிஸ்தவனின் பொறுப்பு என்ற அறைகூவல் விடப்பட்டது.

32. திரு. இராஜசேகர் மனுவேல்

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் 32 ஆவது ஆண்டு விழா கூடுகை குளச்சல் சபையில் வைத்து 1994 செப்டம்பர் மாதம் 8,9,10 ஆகிய நாட்களில் நடைபெற்றது. **உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்** என்ற பொருளில் சென்னையைச் சேர்ந்த திரு. இராஜசேகர் மனுவேல் அவர்கள் சிறப்புச் செய்தி அளித்தார்கள். நம் நாட்டில் கலாச்சாரத்தால் அடிமைப்பட்ட மக்கள், கடின இருதயமுள்ள உள்ளங்கள், ஊழியர்களை காலங்காலமாகத் துன்புறுத்தும் தீவிரவாதிகள், ஆகியோர் மலிந்து காணப்படுகின்றனர். யாரைத் தெய்வமாகக் கொண்டால் எனக்கென்ன? என கவலையில்லாமல், சரியாக உடையில்லாமல், கல்வியில்லாமல் மக்கள் மலைப்பகுதிகளில் சிதறி வாழுகின்றனர். இத்தன்மையோரை நோக்கிப் பார்க்க இறைவன் உங்களை அழைக்கின்றார். என்ற சத்தியம் எடுத்தியம்பப்பட்டது. இறுதிநாள் கூடுகை பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

33. அருட்திரு. எஸ். மாணிக்கம்

முட்டத்தில் அமைந்துள்ள இரட்சணிய சேனை மண்டபத்தில் வைத்து பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் 33 ஆவது வருடாந்தரக் கூடுகை 1995 மேய் மாதம் 11,12,13 ஆகிய நாட்களில் நடைபெற்றது. பாளையங்கோட்டையைச் சேர்ந்த அருள்திரு. எஸ். மாணிக்கம், திரு. ஆனந்தராஜ் ஆகியோர் **காலத்தைப் பிரயோஜனப்படுகிறவன்**

ஞானமுள்ளவன் என்ற தலைப்பில் அருளுரைகள் வழங்கினர். கர்த்தருடைய அகராதியில் நாளை, நாளை என்பது இல்லை, நாளை நாளை என்று கூறுபவர்கள் பெற்றது ஒன்றுமில்லை; தனக்குக் கிடைக்கின்ற நேரத்தைச் சாகடித்தவர்களை காலம் ஒருநாள் கைவிடும். எனவே தனக்கு கிடைக்கும் நேரத்தில் செயல்படுபவனே புத்தியுள்ள மனுஷன் என்ற கருத்து வற்புறுத்தப்பட்டது. இக்கூடுகையில் போதகர்களான டி. எலியாஸ், எ. செல்வராஜ், கே.ஆர். வில்லியம் ஆகியோர் பணிக்களச் செய்திகளைப் பகிர்ந்து கொண்டனர். இறுதிநாள் கூடுகை பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்களால் நடத்தப்பட்டது.

34. அருள்திரு. அறிவர். ஜி.எஸ்.டி. இம்மானுவேல்

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் 34 ஆவது ஆண்டிறுதிக் கூடுகை மார்த்தாண்டம் சிங்கிளேயர் நினைவு மண்டபத்தில் வைத்து 1996 மேய மாதம் 23,24,25 ஆகிய நாட்களில் நடைபெற்றது. அருட்திரு. எ. கிறிஸ்டோபர் தாஸ் அவர்கள் ஜெபித்துக் கூட்டங்களைத் தொடங்கி வைத்தார்கள். **மெய்யான சீடன் யார்** என்ற பொருளில் அருள்திரு. அறிவர் ஜி.எஸ்.டி. இம்மானுவேல் அவர்கள் இறைச்செய்தி அளித்தார்கள். கிறிஸ்தவன் ஒருவன் முதற்கண் தன் பொறுப்பினை உணர்தல் வேண்டும். தரிசனம், விசுவாசம், தியாகம் ஆகிய பண்புகள் அவனிடம் இருத்தல் வேண்டும். சிலுவை சுமப்பதற்கும் தயாராதல் வேண்டும். வாழ்வில் நேரும் பாடுகளை வடுக்களாக மாற்றி, விசுவாச பாதையில் முன்னேற வேண்டும். இத்தகைய குணமுடையவனே மெய்யான சீடன் ஆவான். இக்கருத்துக்கள் பல உள்ளங்களில் வேரூன்றின. யோக்பெல்லோ அருள்திரு. டி. எலியாஸ் மற்றும் மிஷனெறிகள் பலர் தங்கள் பணித்தள அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். சுவிசேஷ ஜெபக்குழுவின் உபதலைவர் அருள்திரு. அறிவர். சி. இரத்தினதாஸ் அவர்கள் தலைமையில் ஆண்டுவிழா ஸ்தோத்திரக் கூட்டம் நடைபெற்றது.

35. பேரா. வி. எ. மாணிக்க ராஜ்

அருள்திரு. அறிவர். சி. இரத்தினதாஸ் அவர்கள் தலைமையில், பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் 35 ஆவது வருடாந்தரக் கூடுகை 1997 மேய மாதம் 22,23,24. ஆகிய நாட்களில் கன்னியாகுமரி தூய பேதுரு ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. **தெய்வப் பணியில் தெய்வ மக்கள்** என்ற பொருளில் பேராசிரியர் வி.எ. மாணிக்கராஜ் அவர்கள் செய்திகொடுத்தார்கள். கிறிஸ்துவின் பணியைக் குறித்து அறிந்து கொண்டவர்கள் அன்புக்கு மட்டுமே அடிமையாகின்றனர். அவர்கள் எதைச் செய்தாலும் தேவ மகிமைக் கென்றே செய்வர். உலகம், மாமிசம் போன்ற எதற்கும் அடிமையாக மாட்டார்கள். தாம் பணி செய்யும் ஊரில்

உலகங்களை விளக்குபோல் ஒளிவீசுவர். இதற்குத்தான் இறைவன் உங்களை அழைக்கின்றார் என்ற கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன. இறுதிநாள் கூடுகை அருள்திரு எம். ஆமோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

36. டாக்டர் புஷ்பராஜ்

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் 36 ஆவது ஆண்டு விழா கூட்டங்கள் 1998 மேய் மாதம் 21,22,23,24 ஆகிய நாட்களில் அருள்திரு அறிவர். எ. மாசில்லாமணி அவர்கள் தலைமையில் நெய்யூர் ஆலயத்தில் வைத்து நடைபெற்றன. **அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்** என்ற தலைப்பில் அறிவர். ஜெய் பாக்கியமணி, டாக்டர் புஷ்பராஜ், அருள்திரு. எ. துரைமணி ஆகியோர் செய்தி வழங்கினர். நற்செய்தி அறிவிக்க இந்நாட்கள் மிக முக்கியமான நாட்கள். இரட்சிப்பைத் தேடி ஜனங்கள் அலையும் நாட்கள். தாலந்துகள் பெற்றவர்கள் அவற்றைப் புதைத்து வைக்காமல் ஓடித்திரிந்து கிறிஸ்துவைப் பிரசங்கித்து, பெருங்கூட்டம் மக்களை இயேசுவண்டைச் சேர்க்க வேண்டும் இப்பேர்ப்பட்ட சவாலான செய்திகள் இடம் பெற்றன. பகல் பொழுதின் கூட்டங்கள் நெய்யூர் மகளிர் சி.எஸ்.ஐ. பள்ளியில் வைத்து நடத்தப்பட்டன. இறுதிநாள் கூட்டத்தினைப் பேராயர். எம்.ஐ. கேசரி அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார்கள்.

37. திரு. ஜெ. எஸ். அற்புதராஜ்

கடமலைக்குன்று லா நினைவு ஆலயத்தில் வைத்து பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் 37 ஆவது ஆண்டிறுதி கூடுகை 1999 மேய் மாதம் 13,14,15,16 ஆகிய நாட்களில் நடைபெற்றது. அருள்திரு. சாமுவேல் குட்டி அவர்கள் ஆரம்ப ஜெபம் ஏறெடுத்தார்கள். **கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்** என்ற பொருளில் பாளையங்கோட்டையைச் சேர்ந்த ஜெ.எஸ். அற்புதராஜ் அவர்கள் சிறப்புச் செய்தி கொடுத்தார்கள். திருச்சபை கிறிஸ்துவின் சரீரம். உயிர்த்தெழுந்து பரமேறிய ஆண்டவர், முழு உலகையும் சுவிசேஷ மயமாக்கும் மிகப் பெரிய பொறுப்பைத் திருச்சபையிடம் ஒப்படைத்துச் சென்றார். நமது நாட்டில் இதுவரையிலும் பலர் இயேசுக்கிறிஸ்துவை ஒருமுறைகூட அறியவில்லை. அத்தகையோருக்கு கிறிஸ்துவை அறிவிப்பது பிரதான கடமை என்பது வற்புறுத்தப்பட்டது. இறுதிநாள் கூடுகையினைப் பேராயர் எம்.ஐ. கேசரி அவர்கள் த்லைமையேற்று நடத்தினார்கள்.

38. திரு. லாயிட்டி தாமஸ்

பேராயர் எம்.ஐ. கேசரி அவர்கள் தலைமையில் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் 38 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் 2000

செப்டம்பர் மாதம் 1,2,3, ஆகிய நாட்கள் கன்னியாகுமரி தூய பேதுரு ஆலயத்தில் வைத்து நடைபெற்றன. **நமது காரியமாய் யார் போவார்?** என்ற பொருளில் திரு. லாயிட் டி. தாமஸ் அவர்கள் செய்தி கொடுத்தார்கள். தரித்திரத்தில், பஞ்சத்தில் போஜனமின்றி பலர் வாழும்போது குளிரில், வெயிலில் ஆடையின்றி பலர் காயும்போது, எவ்வித கரிசனையுமின்றி வாழும் மக்கள் பலர் உலகிலுள்ளனர். மேற்கூறியவர்களிடையே சென்று பாவிகளை மீட்ட இயேசு நாதரைக் குறித்த நற்செய்தியை அறிவிக்க கிறிஸ்துவை அறிந்தவர்கள்தான் போக வேண்டும். மற்றவர்களுக்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்து திறப்பின் வாசலில் நிற்கும் மோசேக்கள் இன்று தேவை? அது நீயாக இருக்கலாமே என்ற கருத்துக்கள் வற்புறுத்தப்பட்டன.

39. திரு. ஜெ. ஜெ. குருசிங்

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் 39 ஆவது ஆண்டுவிழா கூடுகைகள் அழகிய மண்டபம் ஆலயத்தில் வைத்து 2001 மேய் மாதம் 18,19,20 ஆகிய நாட்களில் நடைபெற்றன. ஈத்தவிளை சேகரத்துப் போதகர் அருள்திரு. எம். செல்வராஜ் அவர்கள் தலைமை தாங்கி கூட்டங்களைத் தொடங்கி வைத்தார்கள். சாயர்புரத்தைச் சேர்ந்த திரு. ஜெ. ஜெ. குருசிங் அவர்கள் **அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்?** என்னும் தலைப்பில் சிறப்புச் செய்தி கொடுத்தார்கள். திரள் கோடி இந்தியர்கள் அழிவுக்கு நேராக ஓடுகிறார்கள், பாவத்தில் கட்டப்பட்டு அறியாமையினால் தன் குழந்தைகளையே பலி கொடுக்கும் கொடூர நிலை. அடிமைச் சாசனத்தில் எழுதப்பட்டு, கொத்தடிமைகளாக வாழ்ந்து கொண்டிருப்போர் பலர். வாழ்வின் நோக்கமும் மனித மகுடமும் உருக்குலைந்து விலங்குகளைப் போல் வாழ்ந்து மடிகின்றவர்களும் பலர். இவர்களிடையே சென்று கிறிஸ்துவின் பணியினை நிறைவேற்ற ஆத்தும பாரமுள்ள வாலிபர்களை அனுப்புவது ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமை என்ற அறைகூவல் கூட்டத்தில் கொடுக்கப்பட்டது. இறுதிநாள் கூடுகை, பிரதமப் பேராயரின் பதிலாள் பேராயர் ஜேம்ஸ் சீனிவாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

40. அருள்திரு. கிறிஸ்டோபர் மோகன்

பேராயர் ஜி. தேவகடாட்சம் அவர்கள் தலைமையில், பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் 40 ஆவது ஆண்டுவிழாக்கூடுகை 2002 ஏப்ரல் மாதம் 18,19,20 ஆகிய நாட்களில் களியங்காடு தேவாலயத்தில் வைத்து நடத்தப்பட்டது. **ஆயத்தப்படு ஆயத்தப்படுத்து** என்ற தலைப்பில் கிறிஸ்துவின் தூதுவர்கள் என்ற அமைப்பின் இயக்குநர் அருள்திரு.

கிறிஸ்டோபர் மோகன் அவர்கள் சிறப்புச் செய்தி கொடுத்தார்கள். கிறிஸ்தவன் ஒருவன் அன்புக்கு அடிமையாய் இருக்கிறான். கிறிஸ்தவ அன்பு விரிவானதும் விசாலமானதும் ஆழமானதுமாகும். இது நித்தியம் வரை நீடிக்கும். எப்பேர்ப்பட்ட பாவிகளையும் நேசிக்கும். இவ்வன்பினை ருசித்து ஆயத்தப்பட்ட ஒருவன் பிறரை ஆயத்தப்படுத்த வேண்டும். எனவே வாழ்க்கையை வறண்ட பாலைவனம் ஆக்காதபடி, தெளிந்த நீரோடையாக மாற்ற பிரயாசப்படுவோம் என்ற கருத்துக்கள் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டன. இறுதி நாளின் பகல் கூடுகை பேராயர் ஜி. தேவகடாட்சம் அவர்களால் பேராய மண்டபத்தில் வைத்து நடைபெற்றது.

பரிசுத்த வேதம் ஒரு கண்ணாடியைப் போன்று செயல்படும். அது ஒரு மனிதனின் தவறுகளைச் சுட்டிக்காட்டி அவனைத் திருத்த முயல்கிறது. அதுபோல் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் ஆண்டிறுதிக் கூடுகைகள், குமரிப் பேராயத்தின் சபைகளில் சுவிசேஷ ஜெபக்குழுவின் செய்தி வெடித்துப் பரவுவதற்கு உறுதுணையாயிற்று. இயேசுவை நேசிக்கும் நல்ல உள்ளங்கள் பலர் இவ்வூழியத்தில் அங்கமாயினர். இத்தகையோரது தூய்மையான வாழ்வு, பரிசுத்த ஆவியின் நிறைவு, கண்ணீர் சிந்தும் ஜெபம், செய்யும் தியாகம் போன்றன சுவிசேஷ ஜெபக்குழு என்னும் சக்கரத்தை சுழல வைக்கின்றன. இதனால் ஜெபக்குழுக்கள் பல ஆங்காங்கே தோன்றின. இக்குழுக்கள் நமது சக்தியின் உற்பத்தி மையங்களாகும். மட்டுமல்ல உயிர் நாடியுமாகும். இவர்களின் ஜெபத்தினால் இறைவன் ஊழியத்தை வெற்றிப் பாதையில் நடத்துகின்றார். கிறிஸ்து பெருமான் தமது மகிமையுள்ள சிங்காசனத்திலிருந்து பார்த்தபோது, “இதோ சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக் கூடாததுமாகிய திரளான கூட்டமாகிய ஜனங்கள் வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்துக்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன்” (வெளி 7:9) என்ற காட்சிக்காக மக்களை கூட்ட வேண்டியது கடைசிக்காலத்தில் வாழும் திருச்சபையின் பிரதானப் பொறுப்பாகும். இதனை மேற்கூறிய கூடுகைகள் மக்களுக்கு அறிவித்தன.

அர்ப்பணம் தந்தையே கையளித்தேன்
கல்வி, செல்வம், சுகம், பொருள் அனைத்தும்
செல்லுவேன் சொல்லுவேன் இயேசுவே வழி என
வாழ்க்கையில் தம்மையே கொண்டு வாழ்வேன்
என்றுமே அங்கே நான் உம்மில் வாழ்வேன்.
ஜீவியமே! ஒரே ஜீவியமே!

13

நிர்வாக அமைப்பு

"அவனுடைய எஜமான் அவனை நோக்கி; நல்லது, உத்தமும் உண்மையுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்றான் (மத் 25:23)

தேவன் தனக்கு அளித்திருக்கும் அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்தி, தனக்குள்ள திறமைகளைக் கொண்டு தன்வசம் ஒப்புவிக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றும் எந்த ஒரு மனிதனும் வாழ்க்கை என்னும் ஓட்டத்தில் வெற்றி பெறுவான், வரலாறு படைப்பான். இத்தகைய வரலாற்று சக்திமிக்க சுவிசேஷ ஜெபக்குழுவானது தோன்றிய நாளிலிருந்தே திட்டமிட்டுச் செயல்பட்டு வந்தது. ஒவ்வோர் ஆண்டும், ஆண்டுவிழாக் கூடுகைகள் ஒழுங்காக நடைபெற்று வந்தன. அக்கூடுகையில் ஜெபக்குழு அங்கத்தினர்கள் ஸ்தோத்திர ஆராதனை நடத்துவதோடு, ஆண்டவரின் ஊழியம் தேக்கமடையாமல், தொடர வேண்டும் என்னும் நோக்கில் பல்வேறு அமைப்புகளை ஏற்படுத்தி, அவ்வமைப்புகளைப் பெலப்படுத்தி வந்தனர்.

1. நிர்வாகக்குழு

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் வளர்ச்சிக்காக, பேராயத்தின் 12 பகுதிகளிலிருந்து 12 உறுப்பினர்கள் நிர்வாகக் குழுவிற்கு முதற்கண் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதனைப் பேராயர் ஐ.ஆர். ஹெச். ஞானதாசன் அவர்கள் 20-07-1963-ஆம் நாள் ஐரேனிபுரத்தில் நடைபெற்ற முதல் ஆண்டு விழாக் கூட்டத்தில் அங்கீகரித்தார். இக்குழுவிற்கு உரிய உறுப்பினர்களை மூவாண்டுகளுக்கு ஒருமுறை தெரிவு செய்ய வேண்டும் எனத் தீர்மானித்தனர். அங்கத்துவம் பெறாத பகுதிகளிலிருந்தும் மிஷனெறிப் பணியில் ஆர்வமுள்ள சிலர் இக்குழுவில் தேவை கருதி சேர்க்கப்பட்டனர். இக்குழுவின் தீர்மானங்களையே செயலாளர் செயல்படுத்துவார்.

1980-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கூடிய நிர்வாகக்குழு சில முக்கிய தீர்மானங்களை எடுத்தது.

1. சேகரங்கள் தோறும் ஊழிய வளர்ச்சிக்காகக் குழுக்கள் அமைத்து ஊழியத்தை வலுப்படுத்த நிர்வாகக்குழு உறுப்பினர்கள் அதிகாரப்படுத்தப்பட்டார்கள்.
2. பேராய நிறுவனங்களில் படக்காட்சிகள் மூலமும் சிறப்பு கூடுகைகள் மூலமும் ஊழியத்தை நன்கு அறிமுகப்படுத்தி, மக்கள் ஈடுபாட்டை அதிகரிப்பது.

- இத்தகைய திட்டங்களினால் பணியின் வேகம் காட்டுத்தீ போல பரவத் தொடங்கியது.

அ. பொதுச் செயலாளர்

இருளில் வாழும் இந்தியரை சந்திக்க எந்தவித தியாகத்திற்கும் தயங்காதோர் பலர் சுவிசேஷ ஜெபக்குழுவில் இணைந்தனர். சரியான திட்டங்களுடன் செயல்பட்டதால் பணியானது அதிதீவிரமாக வளர்ந்து வெகுவிரைவில் படர்ந்து பெருகியது. 1986 அக்டோபர் மாதம் கூடிய நிர்வாகக் குழு அதுவரை செயலாளர் என்ற பெயரில் செயல்பட்ட பதவியினை பொதுச் செயலாளர் என மாற்றியது. குறுகிய காலத்திற்குள் பொதுக்குழுவின் தீர்மானப்படி அப்பதவியின் பெயர் மீண்டும் செயலாளர் என மாற்றப்பட்டது. 1988 முதல் மறுபடியும் பொதுச்செயலாளர் என பெயர் மாற்றம் பெற்றது. பின்னர் நிர்வாகக்குழு பல்வேறு கிளைக் குழுக்களையும் ஏற்படுத்தியது. இதனால் சுவிசேஷ ஜெபக்குழு புதிய சகாப்தத்தை நோக்கி நகரத் தொடங்கியது.

1988 ஏப்ரல் மாதம் முதல் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியத்திற்காக வாங்கப்படும் நிலங்கள் அனைத்தும் C.S.I.T.A. என்ற பெயரில் D.M.P.B. ஊழிய வகைக்காய் என்று பதிவுசெய்து வாங்கும்முறை பின்பற்றப்பட்டு வருகின்றது.

ஆ. செயற்குழு

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் செயல்பாடுகள் வேகம் பெற்றன. நிர்வாகக் குழுவினரின் எண்ணிக்கை தேவைக்கேற்றாற்போல் பெருகிக் கொண்டே இருந்தன. இதனால் அனைத்து நிர்வாகக் குழுவினரையும் கூட்டி ஆலோசனை நடத்துவதில் பெரும் சிரமங்கள் இருந்தன. இதனை மீண்டும் சிறிய குழுவாக மாற்றுதல் தேவை என்பதனை ஜெபக்குழுவினர் உணர்ந்தனர். அதன்பேரில் 1989-ஆம் ஆண்டு நிர்வாகக் குழுவின் அங்கத்தினர்களில் செயற்குழு (Working Committee) ஒன்று அமைக்கப்பட்டது. இவைகளுக்குப் பின் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் செயல்பாடுகள் அலுவலர் குழு, செயற்குழு, நிர்வாகக்குழு ஆகியவற்றின் மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

இ. நான்கு கோணங்களில் பணிகள்

பேராய சுவிசேஷ ஜெபக்குழு இயேசுவை அறிவிப்பதோடு மட்டும் தன் பணியை நிறுத்திவிடவில்லை. அம்மக்களின் சமூக வாழ்வியலையும் உன்னிப்பாகக் கவனித்து, கருத்தூன்றி செயல்படத் தொடங்கியது. அதன்பேரில் நற்செய்திப்பணி, கல்விப்பணி, மருத்துவப்பணி, சமுதாயப்பணி என்ற நான்கு கோணங்களில் ஜெபக்குழு பணியாற்றத் தொடங்கியது. நிர்வாகக் குழுவின் பணிப்பழுவைக் குறைக்கும் நோக்கில் செயல்திட்டக்குழு, கல்விக்குழு, நிதி உபக்குழு ஆகிய குழுக்கள் அமைக்கப்பட்டன. மாத இதழ் வழியாக ஊழியத்தை சிறப்பாக நிறைவேற்றிட மலர்க்குழு ஒன்றும் உருவாக்கப்பட்டது.

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் பொறுப்புக்கள் கீழ்க்கண்ட முறைகளில் செயல்படுகின்றன.

2. பொது நிர்வாகம் (General Administration)

1. அலுவலர்க்குழு (Office bearers)
2. செயற்குழு (Working committee)
3. நிர்வாகக்குழு (Exceutive committee)

3. நிலைக்குழுக்கள் (Standing Committee)

1. நியமனக்குழு (Appointment Committee)
2. கல்விக்குழு (Education Board)
3. செயல்திட்டக்குழு (Project Committee)
4. நிதி உபக்குழு (Financial Sub-Committee)
5. மலர்க்குழு (Editorial Board)
6. வாலிபர்ப் பிரிவு (Youth wing Committee)
7. முன்னேற்றப் பணிக்குழு (Promotional work Committee)

மேற்கூறிய குழுக்களை விட, ஜெபக்குழுவின் வளர்ச்சிப் பணிகளைக் கருத்தில் கொண்டு மேலும் சில நிலைக்குழுக்கள் அமைக்கப்பட்டன.

1. சொத்து பரிபாலனக்குழு (Property Committee)
2. நலக்குழு (Welfare Committee)
3. நூலகக்குழு (Library Committee)
4. பெண்கள் பிரிவு (Woman Wing)

இத்தனைக் குழுக்களும் ஜெபக்குழுவின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றின.

4. போதகர் - பொதுச் செயலர்

மிஷனெறிப் பணியை இருபுறமும் கூர்மையான ஒரு வாளுக்கு ஒப்பிட்டால், ஒருபுறம் களத்திற்குப் புறப்பட்டுச் செல்லும் ஊழியர்கள் மறுபுறம் அவர்களைத் தாங்கும் ஆதரவாளர்கள். இத்தகையவர்களின் எண்ணிக்கைப் பெருக வேண்டுமெனில் முழு நேரமும் அப்பணிக்காய் அயராது உழைக்கும் போதகர் ஒருவரை நியமிக்க வேண்டும் என பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் செயற்குழு தீர்மானித்தது. அத்தீர்மானம் கருவாகி, 2002-ஆம் ஆண்டு மேய் மாதம் உருவெடுத்தது. அதன்பேரில் 01-05-2002-ஆம் நாள் முதல் களியங்காடு சேகர திருச்சபையில் பணியாற்றிய தலைமைப் போதகரும், அன்றைய சபை பரிபாலனக்குழு செயலருமான அருள்திரு. பி. வில்சன் அவர்கள் சபை பரிபாலனக் குழுவால் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் பொதுச் செயலராக நியமிக்கப்பட்டார்கள். அன்னாருடைய வருகை பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்குப் புதியத் தெம்பை அளித்தது. அவருடைய கடினமான, அயராத உழைப்பால் சுவிசேஷ ஜெபக்குழுவில் வியத்தகு மாற்றங்கள் நடைபெற்றன. ஜெபக்குழுவின் நிர்வாக அமைப்புகளிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. அதன்பேரில் தற்போது கீழ்க்கண்ட குழுக்கள் செயல்படுகின்றன.

1. அலுவலர்குழு (Office Bearers)
2. செயற்குழு (Working Committee)
3. காரிய நிர்வாகக்குழு (Executive Committee)
4. பொதுக்குழு (General Body)

5. நிலைக்குழுக்கள்

1. மிஷனெறிக்குழு (Board of Missionaries)
2. நிதி உபக்குழு (Finance Sub-Comittee)
3. கல்விக்குழு (Education Board)
4. நலக்குழு (Welfare Committee)
5. இலக்கியக்குழு (Literature Board)
6. சொத்துப் பரிபாலனக்குழு (Property Board)

நம் நாட்டில் வாழும் 100 கோடி மக்களின் நித்தியத்தை நிர்ணயிப்பதும், அவர்களுக்கு நித்தியரை அறிமுகம் செய்து வைப்பதும் நமது பொறுப்பாகும். தாமதம் செய்யாமல் பணியினை வேகப் படுத்துவோம். காலம் அதிகமில்லை, வீடுகள்தோறும், சபைகள்தோறும் கூடி தேசத்துக்காய் காலவரையறையின்றி ஜெபிப்போம். வேகமாய் உழைப்போம், கடமையில் கருத்தூன்றுவோம்.

6. ஜெபக்குழுவின் மிஷனெறிகள்

சிலுவையில்லாத பிரசங்கங்கள், சிலுவையில்லாத ஊழியங்கள், சிலுவையை இருட்டடிப்புச் செய்யும் ஐக்கியங்கள் பெருகிவிட்ட காலத்தில், நீர் சுமந்தபடி நாங்களும் சுமக்க, நீர் சொன்னபடி சிலுவை சுமந்து உம் பின்னே வர நாங்கள் துணிந்து விட்டோம். பாவத்தில் மாளும் மனிதர்களை நீதிக்குட்படுத்தும் பணியில் எவ்வித நிபந்தனையுமில்லாமல் ஆர்வமாய் இணைந்து விட்டோம் என்ற மக்கள் கூட்டமே ஜெபக்குழுவின் மிஷனெறிகளாகும். இவ்வூழியத்திற்காக மூவகை மிஷனெறிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

1. நற்செய்தியைக் கூறும் மிஷனெறிகள்
2. மருத்துவ மிஷனெறிகள்
3. ஆசிரிய மிஷனெறிகள்

இத்தகையவர்களைத் தெரிவுசெய்ய, பேராய சுவிசேஷ ஜெபக்குழு தேசோபகாரியிலும், அருட்பணி மலரிலும் விளம்பரம் செய்கிறது. விண்ணப்பிப்போர் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுகின்றனர். அவர்களைத் தொடர்புடைய நியமனக் குழுவினர்கள் ஆய்வுசெய்து, இறை அழைப்பு மற்றும் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்கின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பணிக்களங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். ஊழியக் களத்தில் பணியின் சிறப்புத் தகுதி பருவம் (ஒருவருடம் - Probation Period) முடிந்த பின்னர் பணி நிரந்தரம் செய்யப்படுகின்றனர். இதற்கு ஊழியரின் பணிக்களத்தொடர்பு, உதவித் தலைமை மிஷனெறியின் அறிக்கை, தலைமை மிஷனெறியின் அறிக்கை ஆகியவை பின்புலமாகக் கொள்ளப்படுகிறது. கிறிஸ்தவ சாட்சியில்லாதோர் பணியிலிருந்து விடுவிக்கப்படுவர்.

அ. மிஷனெறிகளுக்குப் பின்பற்றப்படும் நடைமுறைகள்

1. பேராய ஊழியர், மற்றும் போதகர்களுக்கு இணையான ஊதியம் கொடுக்கப்படுகிறது.
2. ஊழியப் பணிக்களத்திற்கு செல்ல வருடத்திற்கு ஒருமுறை இருவழிப் பயணச் செலவு கொடுக்கப்படுகிறது.
3. மலை உதவிப்படி, மருத்துவ உதவி, துணைவியர் உதவிப்படி, குழந்தை உதவிப்படி, குழந்தைக்கல்வி உதவிப்படி ஆகியவை கொடுக்கப்படுகின்றன.
4. வழக்கமான ஊதிய உயர்வு கொடுக்கப்படுகிறது. மலைப் பகுதிகளில் ஊழியம் செய்வதால், பணி உயர்வுகள் சிறப்பாகக்

கொடுக்கப்படுகின்றன. அதாவது இருபது ஆண்டுகள் தொடர்ச்சியாகப் பணிபுரிந்தால் இரு ஊதிய உயர்வுகள் முப்பது ஆண்டுகளாயின் மேலும் ஒரு ஊதிய உயர்வு அளிக்கப்படுகின்றன.

5. பேராய போதகர்களைப் போல குடும்பநலம், ஓய்வூதியம், சேமநல நிதி போன்றவையும் கிறிஸ்மஸ் அன்பளிப்பும் கொடுக்கப்படுகின்றன.
6. கிறிஸ்மஸ் அன்பளிப்பானது ஆசிரிய மிஷனெறிகள், மருத்துவ மிஷனெறிகள் மற்றும் சமூகசேவை ஊழியர்களுக்கும் கொடுக்கப்படுகின்றது.
7. தேவைக்கேற்ப மிஷனெறிகளுக்குப் பயிற்சியும், இறையியல் கல்வியும் அளிக்கப்படுகிறது. பணிக்களத்தின் பொறுப்பினை உணர்ந்து தகுதியுடையோர்களுக்கு அருட்பொழிவும் வழங்கப்படுகிறது.
8. ஒவ்வொரு மாதமும் மிஷனெறிகள் தங்கள் பணிக்கள அறிக்கையினையும் தேவைகளையும் உதவித் தலைமை மிஷனெறி வழியாக தலைமை மிஷனெறிகளிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதன் ஒரு நகல் பொதுச்செயலர் வழி தாங்குபவர்களுக்கு அனுப்பப்படுகிறது.
9. மிஷனெறிகளைத் தாங்க முன்வருகிற சபைகள், தனிநபர்கள், ஜெபக்குழுக்கள், குடும்பங்கள், நிறுவனங்கள் முதலியோர்களுக்கு மிஷனெறிகள் கொடுக்கப்படுகிறார்கள். அவர்களைத் தாங்குபவர்கள் விரும்பும் சபையில் வைத்து மிஷனெறிகளை அர்ப்பணம் அல்லது அறிமுகம் செய்வது வழக்கமாகவுள்ளது.

- இத்தகைய நெறிமுறைகள் கடைபிடிக்கப்பட்டாலும் மிஷனெறிகள் சுயநலம் கருதாது ஒப்படைத்தலுடன் தங்கள் ஊழியத்தை உற்சாகமாக நிறைவேற்றுகிறார்கள்.

7. ஜெபக்குழுவின் பொறுப்பாளர்களும் பதவிகளும்

இயேசுவின் சிந்தையைப் பெற்றவர்கள் உண்மையிலேயே பரலோக நாட்டமுள்ளவர்கள். அவர்கள் தங்கள் சம்பாதிப்பு, சேமிப்பு, செலவழிப்பு நன்மையானவற்றின் அனுபவிப்பு ஆகியவற்றில் கருத்தாய் உள்ளார்கள். இவைகளின் நடுவிலும் தரித்திரர் மீதும் அக்கறையுள்ளவர்களாய் இருப்பார்கள். அம்மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக, நல்வாழ்வுக்காக தங்கள் நேரத்தையும் திறமைகளையும் செல்வத்தையும் முதலீடு செய்வார்கள். இத்தகையதொரு செயல்வீரர் கூட்டத்தின் பட்டியல் தேவைகருதிக் கொடுக்கப்படுகிறது.

அ. தலைவர்கள்

திரு. ஜே.ஜி. அர்னால்ட் பிரதமப் பேராயர்	31-07-1962	முதல்	14-06-1963	வரை
ஐ.ஆர். ஹெச். ஞானதாசன்	15-06-1963	முதல்	05-05-1973	வரை
பேராயர் சி. செல்வமணி	06-05-1973	முதல்	30-11-1979	வரை
பேராயர் டானியல் ஆபிரகாம்	01-12-1979	முதல்	30-04-1980	வரை
பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ்	01-05-1980	முதல்	02-02-1997	வரை
பேராயர் எம்.ஐ. கேசரி	03-02-1997	முதல்	10-09-2000	வரை
பேராயர் ஜேம்ஸ் சீனிவாசன்	11-09-2000	முதல்	15-09-2001	வரை
பேராயர் ஜி. தேவகடாட்சம்	16-09-2001	முதல்	செயல்படுகிறார்	

ஆ. உபதலைவர்கள்

திரு. ஜெ.ஜி. அர்னால்ட்	15-06-1963	முதல்	27-02-1968	வரை
திரு. டி.ஜி. டேவிட்ராஜ்	28-02-1968	முதல்	17-04-1970	வரை
அருள்திரு. எம். இராஜையன்	18-04-1970	முதல்	17-05-1973	வரை
பேரா. டி.எஸ். ஸ்பர்ஜன்	18-05-1973	முதல்	23-05-1974	வரை
திருமதி. ஐவி லெக்ஸ் ஜேக்கப்ஸ்	24-05-1974	முதல்	20-05-1977	வரை
அருட்திரு. சி. இரத்தினதாஸ்	21-05-1977	முதல்	31-05-1980	வரை
அருட்திரு. ஒய். ராபின்சன்	01-06-1980	முதல்	09-02-1981	வரை
திருமதி. ஐலீன் பென்சாம்	10-02-1981	முதல்	24-11-1983	வரை
திரு. எப். சிறில் லாங்டன்	25-11-1983	முதல்	மேய் 1995	வரை
அருள்திரு. டாக்டர் சி. இரத்தினதாஸ்	மேய் 1995	முதல்	17-05-2002	வரை
திரு. டி. ஏசு ஞானதாஸ்	18-05-2002	முதல்	செயல்படுகிறார்.	

இ. செயலாளர்கள்

திரு. எம். இராஜையன்	31-07-1962	முதல்	27-11-1965	வரை
செல்வி. ரீட்டா ஜாக்ஸன்	28-11-1965	முதல்	22-07-1966	வரை
திரு. எம். ராஜையன்	23-07-1966	முதல்	31-10-1966	வரை
திரு. ஜெ.எம். ஜெயசிங்	01-11-1966	முதல்	03-02-1968	வரை
பேரா. டி.எஸ். ஸ்பர்ஜன்	04-02-1968	முதல்	17-05-1973	வரை
அருள்திரு. எம். இராஜையன்	18-05-1973	முதல்	26-05-1975	வரை
பேரா. எ.வி. டைட்டஸ்	27-05-1975	முதல்	31-05-1980	வரை
பேரா. டி.எஸ். ஸ்பர்ஜன்	01-06-1980	முதல்	01-09-1983	வரை
திரு. ஜி. செல்வராஜ்	02-09-1983	முதல்	20-06-1986	வரை

திரு. வி. கொர்நெலியு -
தேவ பிரகாசம் 21-06-1986 முதல் 26-05-1989 வரை
திரு. டி. ஏசு ஞானதாஸ் 27-05-1989 முதல் 23-05-1998 வரை
திரு. எம். கிறிஸ்துதாஸ் 24-05-1998 முதல் 30-04-2002 வரை
அருள்திரு. பி. வில்சன் 01-05-2002 முதல் செயல்படுகிறார்.

ஆ. இணைச் செயலாளர்கள்

திரு. ஜி. டேவிட் ராஜ் 15-01-1967 முதல் 27-02-1969 வரை
அருள்திரு. ஜே.எம். ஜெயசிங் 28-02-1969 முதல் 17-07-1970 வரை
அருள்திரு. எ. மாசில்லாமணி 18-07-1970 முதல் 17-05-1973 வரை
பேரா. வி. செல்வின் டேவிட் 18-05-1973 முதல் 20-05-1977 வரை
அருள்திரு. வி. ஆலிவர் 21-05-1977 முதல் 31-05-1980 வரை
அருள்திரு. ஜெ. சாமுவேல்
கிறிஸ்துதாஸ் 01-06-1980 முதல் 21-05-1983 வரை
திரு. ஜி. செல்வராஜ் 22-05-1983 முதல் 02-09-1983 வரை
திரு. டி. ஏசு ஞானதாஸ் 25-11-1983 முதல் 26-05-1989 வரை
அருள்திரு. எம். இராஜையன் 27-05-1989 முதல் 01-08-1992 வரை
திரு. எம். கிறிஸ்துதாஸ் 02-08-1992 முதல் 23-05-1998 வரை
திரு. டி. ஏசு ஞானதாஸ் 24-05-1998 முதல் 17-05-2002 வரை

உ. பொருளாளர்கள்

திரு. டி. எலியாஸ் 31-07-1962 முதல் 06-04-1964 வரை
திருமதி. எஸ்.ஜெ. வின்றி 07-04-1964 முதல் 27-11-1965 வரை
திருமதி. செல்வம் டேவிட்சன் 28-11-1965 முதல் 17-05-1973 வரை
திருமதி. கிறிஸ்டி தாமஸ் 18-05-1973 முதல் 20-05-1977 வரை
திரு. எஸ். இரத்தினராஜ் 21-05-1977 முதல் 06-11-1977 வரை
திரு. ஜிடி டேவிட் ராஜ் 07-11-1977 முதல் 26-02-1978 வரை
அருள்திரு. எம். இராஜையன் 27-02-1978 முதல் 31-05-1980 வரை
அருள்திரு. சி. இரத்தினதாஸ் 01-06-1980 முதல் 21-05-1983 வரை
அருள்திரு. எம். இராஜையன் 22-05-1983 முதல் 26-05-1989 வரை
அருள்திரு. எ. மாசில்லாமணி 27-05-1989 முதல் 09-05-1999 வரை
திரு. ஸ்டார்லிங் சாமுவேல் 10-05-1990 முதல் 11-01-1998 வரை
திரு. பி. பால்ராஜ் 12-11-1998 முதல் 17-05-2002 வரை
திரு. ஜெ. பாக்கியராஜ் 18-05-2002 முதல் செயல்படுகிறார்.

கணக்காளர்கள்

திரு. எம். இராஜையன்	31-07-1962	முதல்	15-06-1963	வரை
திரு. எஸ். இரத்தினராஜ்	16-06-1963	முதல்	30-11-1975	வரை
திரு. ஜி.டி. டேவிட் ராஜ்	01-12-1975	முதல்	20-05-1977	வரை
சகோதரி புஷ்பம் நேசமணி	21-05-1977	முதல்	05-08-1977	வரை
திரு. சாம் அருள்மணி	06-08-1977	முதல்	31-05-1980	வரை
திரு. பேசில் தங்கப்பா	01-06-1980	முதல்	08-06-1981	வரை
திரு. எஸ். மோட்சக்கண்	09-06-1981	முதல்	10-08-1985	வரை
திரு. ரவீந்திரன்	11-08-1985	முதல்	31-01-1988	வரை
திரு. மோசஸ்தாஸ்	01-02-1988	முதல்	26-05-1989	வரை
பேரா. ஜெய பாலாஜி	27-05-1989	முதல்	12-05-1995	வரை
திரு. எஸ். மோட்சக்கண்	13-05-1995	முதல்	17-05-2002	வரை

இவ்விதம் தங்களுடைய பல்வேறு பணிகளின் மத்தியிலும் தேவ ஊழியத்தைச் சிறப்பாக நிறைவேற்றியவர்கள் பலர். இவர்கள் இவ்வுலகத்தில் நேரத்தைச் செலவழித்துப் பரலோக பொக்கிஷத்தில் சேமித்து வைத்தார்கள். இது எத்தனை ஞானமானது.

ஜெபக்குழுவின் சட்ட அமைப்பு

ஆதித் திருச்சபையின் நாள்தொட்டு, இந்நாள்வரை தேவ பணியில் இணைந்து செயல்பட்ட மனிதர்களின் சரித்திரத்தைப் புரட்டிப் பார்க்கும்பொழுது அவர்களெல்லாம் தங்களுக்குள் ஒருவித கட்டுப்பாட்டினையும் சட்ட ஒழுங்கினையும் வைத்துக் கொண்டார்கள். பேராய சுவிசேஷ ஜெபக்குழு பல நிலைகளில் வேகமாக வளர்ச்சி அடைந்து வரும்போது, ஊழியத்தை முறைப்படுத்தி வழிகாட்டுதல் அளிக்கச் சட்ட அமைப்பு ஒன்று இன்றியமையாததாகி விட்டது. ஆகவே 16-01-1973-ஆம் நாள் கூடிய ஜெபக்குழுவின் செயற்குழு சட்ட அமைப்பு உபகுழு ஒன்று அமைக்கப்பட்டது. பின்னர் ஜெபக்குழுவின் வேண்டுகோளை ஏற்று பேராயசபை பரிபாலனக்குழு சுவிசேஷ ஜெபக்குழுவின் சட்ட அமைப்பை உருவாக்க அருள்திரு. எம்.ஐ. கேசரி அவர்களை கன்வீனராகக் கொண்ட ஒரு குழுவினை நியமித்தது. அக்குழுவின் பரிந்துரையை சபை பரிபாலனக்குழு ஏற்றுக்கொண்டது. பின்னர் சுவிசேஷ ஜெபக்குழுவும் அங்கீகரித்தது. அத்தீர்மானம் கெ.கெ. 789-ஆவது தீர்மானமாக வெளிவந்தது.

The Constitution approved by the Church Board

1. Structure

The Diocesan Missionary Prayer Band is one of the sister evangelistic organs of our Diocese.

2. Membership

Christians who have the burden of Missionary Work and who contribute at least Rs. 5 to the Prayer Band per annum shall become the members of Prayer Band. The General Body meets annually.

3. Office-Bearers and Committee Members

Once in three years the general body shall elect the Office-bearers and Committee Members of the Prayer Band representing all the Districts and the various institutions. The Bishop shall be the ex-officio President of the Prayer Band. The Assistant Director of Board of Missions and the Director of Theological Education, and one representative each from the Church Board and the Board of Missions shall be nominated to the Prayer Band Committee. If a member is absent for more than three consecutive committees without valid reasons, he shall cease to be a member of the Committee and the Committee shall fill up the vacancy.

4. Finance

The Accountant shall keep the accounts and the Treasurer shall receive all money and remit it to the Diocesan Treasurer atleast once a month, As per the authoritation of the Prayer Band Committee, the Treasurer shall draw and disburse the money to the person concerned. The Treasurer may keep an amount not exceeding Rs. 50/- for emergency disbursement.

5. Work

The Prayer Band Committee shall choose the fields for missionary work with the approval of the Church Board. Also it shall co-operative with other missionary bodies if necessary by lending workers to them.

6. Workers

(i) There shall be an ordained person as missionary in-charge for choosing the field, supervising the work and also giving monthly report to the committee.

(ii) There shall be a Promotional Worker in the Diocese to visit the churches, institutions etc., in the Diocese.

(iii) The workers shall be selected and appointed by the Prayer Band Committee whenever vacancy arises. The Prayer Band shall get the needed qualified workers from the Diocese through the Church Board on lending basis for a period of five years. If workers are not available through the Church Board, the Prayer Band Committee shall choose workers and get the sanction from the Church Board. The workers shall be given all Diocesan benefits such as salary, allowances, provident fund etc, along with other local allowances and travelling allowance once a year. The present Prayer Band workers shall also come under the above category.

மேற்கூறிய அளவில் மிக எளிமையான வடிவில் சட்டம் உருவாக்கப்பட்டது. இதைத்தவிர தேவைப்படும்போது பேராய சட்டத்தையும் ஜெபக்குழு பயன்படுத்திக் கொள்ளலாம். அல்லாமல் அவ்வப்போது கூடும் செயற்குழு கூட்டத்திலும் தேவைக்கேற்ப தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன. மேலே கூறிய சட்ட அமைப்பினை 20-05-1978-ல் கூடிய சுவிசேஷ ஜெபக்குழுவின் பொதுக்குழு ஏற்றுக்கொண்டது. காலச்சூழலுக்கேற்பவும், ஊழிய வளர்ச்சிக்கேற்பவும் சட்டத்தில் சில மாற்றங்களையும், கூடுதல்களையும் உருவாக்க வேண்டிய கண்டிப்பு அவ்வப்போது ஜெபக்குழுவிற்கு ஏற்படுகிறது. எனவே விரிவான சட்ட அமைப்பு ஒன்றினை உருவாக்கிட, 28-08-1999-ஆம் நாள் கூடிய செயற்குழு, திரு. டி. ஏசு ஞானதாஸ் அவர்களைக் கன்வீனராகக் கொண்டு ஒரு உபகுழுவை நியமித்தது. இக்குழு பணியைச் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது.

9. ஜெபக்குழுவின் அலுவலகம்

சுவிசேஷ ஜெபக்குழுவின் தொடக்க காலத்தில், அதன் கமிட்டிக் கூட்டங்கள் பேராயர் ஐ.ஆர். ஹெச். ஞானதாசன் அவர்களது இல்லத்தில் நடைபெற்று வந்தன. அதன் பொறுப்பாளர்கள் தங்கள் பொறுப்புக்களைத்

தங்கள் இல்லங்களில் வைத்து நிறைவேற்றி வந்தனர். ஆனால் அனைவர் உள்ளத்திலும் ஜெபக்குழுவிற்கென தனி அலுவலகம் தேவை என்ற உணர்வு இருந்தது. இதனை 18-05-1973-ஆம் நாள் மூலச்சல் சபையில் நடைபெற்ற ஜெபக்குழுவின் ஆண்டுவிழாக் கூடுகையில் அருள்திரு. எம். இராஜையன் அவர்கள் முறையாக எடுத்துரைத்தார்கள். அத்தேவை செயல்வடிவம் பெற ஜெபித்தனர். இறைவன் உள்ளங்களில் கிரியைச் செய்தார்.

பேராயத்திற்குப் புதிய அலுவலகம் கட்டி முடிந்ததும், பழைய அலுவலகத்தின் ஒரு பகுதியை, ஜெபக்குழுவின் பணிகளுக்கு ஒதுக்கினர். அதன்படி 1980 பெப்ருவரி முதல் ஜெபக்குழு அக்கட்டிடத்தில் செயல்படத் தொடங்கியது. அப்போது நிரந்தர கட்டிடம் ஒன்று தேவை என ஜெபக்குழுவின் செயற்குழுவில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. முட்டத்தில் வாழ்ந்து வந்த ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி திருமதி. ஜாயி சாள்ஸ் அம்மையார் அவர்கள் தனது கணவர் திரு. எபனேசர் சாள்ஸ் நினைவாக 25x10 அடி என்ற பரப்பளவில் ஒரு கட்டிடம் கட்டிக் கொடுக்க முன்வந்தார்கள். அதற்குரிய இடத்தைப் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் பேராயத்தில் கேட்டு ஒதுக்கினார்கள்.

அ. எபனேசர் சாள்ஸ் நினைவுக் கட்டிடம் (தலைமை அலுவலகம்)

பேராயத்தின் தையல் நிறுவனத்திற்குக் கிழக்காகவும் பேராயரது இல்லத்திற்கு அருகாமையிலுள்ள இடத்தை தலைமை அலுவலகம் கட்டுமாறு பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு ஒதுக்கினார்கள். அவ்விடத்தில் 01-09-1982-ஆம் நாள் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் தலைமை அலுவலகம் கட்டுதல் வேண்டி அடிக்கல் நாட்டினார்கள். திருமதி. ஜாய் சாள்ஸ் அவர்களது நன்கொடையின் மூலமாக விரைவாக கட்டி முடிக்கப்பட்ட இக்கட்டிடம் பேராயரால் 21-05-1983-ஆம் நாள் இறைநாம மகிமைக்காக அர்ப்பணம் செய்யப்பட்டது. அது முதல் சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைமை அலுவலகமாக இது செயல்பட்டு வருகிறது. அக்கட்டிடத்திற்கு **திரு. எபனேசர் சாள்ஸ் நினைவுக் கட்டிடம்** என பெயரிடப்பட்டுள்ளது.

ஆ. திரு. கெ. செல்லையா நினைவுக் கட்டிடம் - மார்த்தாண்டம்

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு மார்த்தாண்டத்தில் கிளை அலுவலகம் ஒன்று தேவை என பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் தன் கருத்தினை 1985 செப்டெம்பரில் வெளியிட்டார்கள். அதற்கு வசதியாக மார்த்தாண்டம் பல்நோக்கு அங்காடிக் கட்டிடத்தின் முதல் மாடியில் ஒரு அறை கட்டும் இடத்தைப் பேராயர் ஒதுக்கினார்கள்.

அவ்விடத்தில் தன் தகப்பனார் கெ. செல்லையா அவர்களது நினைவாக திரு. சி. மணிதாஸ், (ஏற்றக்கோடு) அவர்கள் கட்டிடம் கட்ட முன்வந்தார்கள். இதற்கான வேலை, 19-5-1997- இல் தொடங்கப்பட்டு 4-9-1998 - இல் முடிவுற்றது. பேராயர் எம்.ஐ. கேசரி அவர்கள் அவ்வறையை அர்ப்பணம் செய்தார்கள். தற்போது அது, ஜெப அறையாகப் பயன்பட்டு வருகிறது.

இ. சேராப்பட்டில் அலுவலகம்

மிஷினெறிப் பணிக்களத்தின் தலைமை இடமான சேராப்பட்டில், அலுவலகக் கட்டிடம் ஒன்று தேவை என அதன் செயற்குழு உணர்ந்தது. அதற்குரியத் தீர்மானத்தை 1982-ல் நிறைவேற்றியது. அத்தீர்மானப்படி சேராப்பட்டில் கட்டப்பட்ட அலுவலகம் 05-08-1983-இல் அர்ப்பணம் செய்யப்பட்டது.

ஈ. சீலியா வின்பர்ட் டேவிட்சன் ஹால்

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைமை அலுவலகத்தில், மிஷனெறிகள், தலைவர்கள் மற்றும் ஆர்வலர்கள் கூடி ஜெபிப்பதற்கு அறை ஒன்று கட்டவேண்டுமெனவும், அதனைத் தற்போதைய அலுவலகத்தைத் தொட்டுத் தெற்குப் பக்கமாக 42x25 அடி பரப்புடையதாக அமைக்க வேண்டுமெனவும் 1992 செப்டம்பரில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அவ்வேலை 08-10-1994-ஆம் நாள் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்களால் தொடங்கப்பட்டு 20-04-1996-ஆம் நாள் அவராலேயே அர்ப்பணமும் செய்யப்பட்டது. திட்டுவிளையைச் சேர்ந்த திரு டேவிட்சன் அவர்களின் குடும்பத்தினர் இப்பகுதியைக் கட்டுவதற்கு ரூ 1,10,000/- கொடுத்து உதவினார்கள். எனவே அந்த ஜெப அறை சீலியா வின்பர்ட் டேவிட்சன் ஹால் எனப் பெயரிட்டு அழைக்கப்படுகின்றது.

உ. டாக்டர். (செல்வி) வின்லெட் ஷீபா டேவிட்சன் ஹால்

சுவிசேஷ ஜெபக்குழுவின் பணிகள் நாளும் விரிவடைந்து கொண்டே வந்தன. இதனால் அலுவலகப் பணியை ஜெப அறையிலும் விரிவுபடுத்த வேண்டியக் கட்டாயச் சூழல் உருவானது. ஆகவே ஜெபிப்பதற்கு அமைதியான சூழலில் தனி அறை தேவை என்பதை ஜெபக்குழு உணர்ந்தது.

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைமை அலுவலகம்

அதற்காக அலுவலகக் கட்டிடத்தின் மாடியில் 52 அடிநீளம் 25 அடி அகலத்தில் ஜெபக்கூடம் ஒன்று கட்டத் தீர்மானித்தனர். இதற்கான பணியினை அருள்திரு. அறிவர். சி. இரத்தினதாஸ் அவர்கள் அருள்திரு. எம். இராஜையன் முன்னிலையில் 05-09-2000-ஆம் நாள் தொடங்கி வைத்தார்கள். இக்கட்டிடம் கட்டுவதற்கு திரு. டேவிட்சன் அவர்களின் குடும்பத்தினர் ரூபாய் 1,75,000/- கொடுத்தனர். அவரது விருப்பப்படி அவ்வரங்கிற்கு டாக்டர் (செல்வி) வின்செண்ட் ஷீபா டேவிட்சன் ஹால் எனப் பெயரிடப்பட்டுள்ளது. மேற்கூறிய கட்டிடப் பணிகளுக்கு எப்சி லாங்டன், அருள்திரு. எம். ஆமோஸ் ஆகியோர் கன்வீனர்களாகச் செயல்பட்டார்கள்.

10. அலுவலக ஊழியர்கள்

ஜெபக்குழுவின் அலுவலகப் பணியாளர்களாக திரு. ற்றி. ஜார்ஜ் அவர்கள் 1980 முதல் 1990 வரையிலும், திரு. விக்டர் நாயகம் அவர்கள் 1990 முதல் 31-01-1992 வரையிலும் பணிபுரிந்தார்கள். தற்போது திரு. எ. ஸ்டான்லி ஜோன்ஸ் அவர்கள் 01-02-1991 முதல் தலைமை எழுத்தராகவும், திரு. எஸ். தேவசிகாமணி (07-09-1990 முதல்), திரு. பிறஸ்டின் ஜோஸ் (05-09-1997 முதல்) ஆர். சாமுவேல் வேதசிங் (15-05-2000 முதல்) ஆகியோர் உதவியாளர்களாகவும் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களோடு சேராப்பட்டு அலுவலகத்தில் பணிபுரிந்து வந்த திரு. எ. ரெஞ்சித் அவர்களும் ஆகியோர் எழுத்தராகப் பணியாற்றுகின்றார்.

உலகில் பலவிதமான பணிகள் காத்திருக்க இறைப்பணியில் ஈடுபட்டு முனைப்புடன் செயல்படும் இவர்களது தொண்டினை நாம் பாராட்ட வேண்டும். நற்செய்தி தூதுப்பணியில் ஈடுபடும் அனைவரும் தாங்கள் யாருக்காக தூது செல்ல விரும்புகிறார்களோ அவரால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டிருப்பது மிகமிக அவசியமானது. இல்லையென்றால் தூது சொல்ல அனுப்பினவருக்கு அவர்கள் தொண்டு செய்யவில்லை, துரோகம் செய்கிறார்கள் என்பதே உண்மையாகும். இத்தூய பணியில் இணைந்து செயல்படும் மனப்பக்குவத்தை ஒவ்வொருவரும் இறைவனிடத்திலிருந்து பெற்றிருப்பது மேலான பாக்கியமே ஆகும்.

உலக மேன்மை அற்பமென்றும்
உலக ஆஸ்தி குப்பையென்றும்
உள்ளத்தினின்று கூறுவாயா!
ஊழியம் செய்ய வருவாயா!

உனக்காக நான் மரித்தேனே
எனக்காக நீ என்ன செய்தாய்?

14

பேராயர்களின் ஈடுபாடு

"அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது, பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்து விடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார்.

அப்பொழுது உபவாசித்து ஜெபம் பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள்" (அப் 13:2,3)

நாட்கள் வேகமாக ஓடுகின்றன. செய்கின்ற பணியினை அவசரமாக ஆவியானவரின் ஆலோசனைக்குட்பட்டுச் செய்ய வேண்டும் என்பது குறிப் பேராயத்தின் இலக்காக இருந்தது. பேராய சுவிசேஷ ஜெபக்குழு தன்னுடைய திட்டத்தைச் சிறப்பாக வகுத்தது. திட்டம் என்பது உண்மையில் ஒரு விசுவாச வாக்குமூலமாகும். இலக்கு அமைத்து பணிபுரிவது அதன் செயல்பாடாகும். இவ்விலக்கானது அனைத்துப் பிரிவு மக்களுக்கு சென்றடைவதற்கும், கடைபிடிப்பதற்கும் எளிமையானதாக இருக்க வேண்டும் எனத் தீர்மானித்தனர். **ஊருக்கு ஒரு ஜெபக்குழு சபைக்கொரு மிஷனெறி** என்கிற முத்திரை வாக்கியத்தைத் தெரிவு செய்து செயல்பட்டனர். சுவிசேஷம் அறிவிப்பது சபைகளின் பிரதான கடமை என்பதனை அனுபவ ரீதியாக உணர்த்தப் பல தொண்டர்கள் முன்வந்தனர். இத்தகைய பிரதான இயக்கத்தில் தங்களை ஈடுபடுத்திய தொண்டர்களின் சேவையே இதன் வளர்ச்சிக்கு ஆணி வேராகும்.

1. பேராயர் ஐ.ஆர். ஹெச். ஞானதாசன் எம்.ஏ., பி.டி.

மலை ஊழிய சுவிசேஷ ஜெபக்குழுவின் கூடுகை 15-7-1963 இல் பேராயர் ஐ.ஆர். ஹெச். ஞானதாசன் அவர்கள் தலைமையில் கூடியது. ஜெபக்குழு, பேராயர் அவர்களே இவ்வூழிய இயக்கத்திற்கும் தலைவராக இருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டது. மலைநாட்டு ஊழியத்தின் பொறுப்பினை உணர்ந்த பேராயர் அதற்கு ஒப்புதல் தெரிவித்தார். பேராயர் அவர்களின் வழிகாட்டுதலில் பேராய சுவிசேஷ ஜெபக்குழு ஆலமரம் போல தழைத்து வளரத் தொடங்கியது. அர்ப்பணம், ஜெபம், ஈகை,

[illegible]

1. [illegible] இணைந்து செயல்பட வேண்டும்.
2. அனைவரும் கலந்துகொள்ளும் முறையில் [illegible] நடத்த வேண்டும்.
3. தெருக்குழுக்களைச் சபைகள்தோறும் ஏற்படுத்த வேண்டும்.
4. குமரிப் பேராய எல்லைக்கு அப்பால் பணித்தளங்களைத் தெரிவு செய்து பணியாற்ற வேண்டும்.

அ. மலைப்பயணம்

தேவனின் அளவற்ற கிருபையால் மிஷனெறிப் பணி மலைகளில் வேரூன்றி வளரத் தொடங்கியது. இறை இராஜ்ஜியத்தை அங்கீகரித்து மக்கள் மலைகளிலிருந்தும் புறப்படத் தொடங்கினர். மேற்கூறிய செய்திகளைக் கேள்விப்பட்ட பேராயர் அவர்கள் 1970 செப்டம்பர் 20 ஆம் நாள் ஜவ்வாது மலையில் நடைபெற்ற ஊழியங்களைப் பார்வையிட நேரில் சென்றார்கள். பணித்தளங்களையும், மக்களின் அகப்புற மாற்றங்களையும் கண்ணுற்ற பேராயர் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அப்பகுதியின் தலைமையிடமான ஜம்னா மரத்தூரிலிருந்து 23 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தொங்குமலை என்னுமூருக்குப் புறப்பட்டார்கள். திடீரென மிகப்பெரிய மழை பெய்தமையால் அவர்கள் பயணம் செய்த ஜீப் சேற்றில் புதைந்து விட்டது. பொழுதும் இரவாகி விட்டது. பின்னர் 8 கிலோ மீட்டர் திருப்பி நடந்து தங்குமிடம் வந்து சேர்ந்தார்கள். அவ்விதம் நடந்தபோது பேராயர் பாடல்களைப் பாடியும் நகைச்சுவைக் கருத்துக்களைப் பகிர்ந்தும் கொண்டது அவருடன் சென்ற குழுவினருக்கு மனத்தெம்பையும் தைரியத்தையும் கொடுத்தது. பயணம் முடித்து நாகர்கோவில் வந்ததும் சில அடிப்படைத் தீர்மானங்களை செய்தார்கள்.

1. மலை ஊழிய மிஷனெறிகளுக்கு, பேராய சபை ஊழியர்களுக்கு ஒத்த கல்வித் தகுதி இருக்க வேண்டும்.

2. மிஷனெறிகளுக்கு இறையியல் பயிற்சி தேவை.
3. தகுதியுடைய மிஷனெறிகளுக்கு அருட்பொழிவு கொடுக்க வேண்டும்.
4. மலைகளில் பணியாற்றும் மிஷனெறிகள் சுகவீனம் காரணமாக அங்கு பணியைத் தொடர முடியாது போனால், பேராய சபைகளில் பணியமர்த்தலாம். பேராய சபை ஊழியர்களை மலை ஊழியத்திற்கும் அனுப்பலாம்.
5. மிஷனெறிகளின் நலன், பேராய சபை ஊழியர்களின் நலன் போல் காக்கப்பட வேண்டும்.
6. பேராயத்திலுள்ள ஒவ்வொரு போதகாதீன சபைகளும், குறைந்தது ஒவ்வொரு மிஷனெறிகளையாவது ஆதரிக்க முன்வர வேண்டும்.

ஆ. என்.எம்.எஸ். சங்கத்துடன் உறவு

சுவிசேஷ ஜெபக்குழுவின் மிஷனெறிகளை என்.எம்.எஸ். சங்கத்தின் மூலம் மலைப்பகுதிகளுக்கு அனுப்புதல் நல்லது எனக் கருதினார். நமது பேராய சபைகள் அதற்கு ஆதரவு தர முன்வருவதை உற்சாகப்படுத்தினார். அவ்விதம் புறப்பட்டுச் செல்லும் மிஷனெறிகளின் நலன் முழுமையாகப் பாதுகாக்கப்படும். அத்துடன் எம்.என்.எஸ். இயக்கத்துடன் உறவை மேம்படுத்த மூவாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வந்த என்.எம்.எஸ். மாநாட்டிற்கு ஜெபக்குழுவின் பிரதிநிதிகளை அனுப்பினார். அதன்பேரில் அருள்திரு. டி. எலியாஸ், அருள்திரு. எம். இராஜையன் ஆகியோர் 1971 இல் நடைபெற்ற டில்லி மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

இ. பேச்சும் எழுத்தும்

உத்தம கிறிஸ்தவ வாழ்வின் குணாதிசயங்கள், உயர்ந்ததொரு இலட்சிய சவாலுக்கு மனிதர்களை அழைக்கிறது. மிஷனெறி பணியைக் குறித்து பேராயர் அவர்கள், "திருப்பணி ஆவல் பற்றிப் பரவுகிறது. கொழுந்து விட்டு எரிய விரும்புகிறோம். இருக்கும் சபைகளையே கட்டி காவல் செய்து விட்டு, நமக்கென்று நாம் வாழ்ந்து வரும் நாட்கள் மறையட்டும். வரும் நாட்களில் சுவிசேஷ ஜெபக்குழு ஒரு பெரிய இயக்கமாக வளரும்" என்று கூறியமை அவருடைய உள்ள வாஞ்சையைக் காட்டுகிறது.

1970 ஆம் ஆண்டைய பேராய மாமன்றக் கூட்ட அறிக்கையில், "மலைவாழ் மக்கள் மத்தியில் செய்யும் ஊழியம், நமது வெளிநோக்கிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். சுயமாக மேலிட உந்துதல் ஏதுமின்றி செய்யப்படும் இச்சேவை வாலிப உள்ளங்களில் உருவாகி வளர்ந்து வருகிறது. பல மக்களை ஏற்கெனவே கவர்ந்துள்ளது. ஊழியத்திற்குச்

செல்ல விரும்பும் வாலிபர்கள் எண்ணிக்கையும் வளர்ந்தே வருகிறது. பிற மாவட்டங்களில் இது குறித்துக் காட்டப்படும் புகழுரைகள் பல [illegible] எழுதியுள்ளார்கள்.

1971 ஆம் ஆண்டைய ஜெபக்குழுவின் ஆண்டறிக்கையில், "[illegible] செயல்படும் இச்சேவை இயக்கத்தின் மூலம் வாலிப உள்ளங்கள் சந்திக்கப்படுகின்றன. தேசிய அருட்பணி சங்கத்துடன் (N.M.S.) தொடர்ந்து செயல்படும் இவ்ஜெபக்குழுவின் சேவை பல தரத்து மக்களையும் கவர்ந்துள்ளது. இம்மாவட்டத்திற்குள் இதற்கென நிதி சேகரிப்பில் செயல்படுவோர் பலருள்ளனர். நீண்டதொரு பயணமே நமது இலக்காகும். அதன் தொடக்கத்தில் இருக்கும் நாம் இறைவனை போற்ற வேண்டும்" என்று எழுதியுள்ளார்கள்.

ஈ. பிரதமப் பேராயரின் இறுதி நாட்கள்

குமரிப் பேராயர் ஐ.ஆர்.ஹெச். ஞானதாசன் அவர்கள் 16-12-1972 ஆம் நாள் பிரதமப் பேராயராகப் பதவி உயர்வு பெற்றார்கள். எனினும் சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைவராக பணியை 5-5-1973 வரை தொடர்ந்தார்கள். திடீரென நோய் வாய்ப்பட்டு வேலூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். அப்போது பார்க்கச் சென்ற அருள்திரு. டி. எலியாசிடம், "இம்மாதம் நான் மலைக்கு வருவது தெரியுமல்லவா?" என்று கேட்டார்கள். சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியத்தில் அவர் கொண்ட கரிசனை எத்தனை சிறப்புடையது என்பது இப்பேச்சால் தெரிகிறது. சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியம் ஆலமரம் போல் விழுதுவிட்டு வளர்ந்துவரும் வேளையில், எரிந்து கொண்டிருந்த மெழுகுவர்த்தி அணைந்தது. அனைத்து மக்களின் அன்புக்கும் ஆதரவிற்கும் அடியவராகத் திகழ்ந்த பிரதமப் பேராயர் ஐ.ஆர். ஹெச். ஞானதாசன் அவர்கள் 6-7-1973 ஆம் நாள், குமரிப் பேராய அனைத்து ஆலயங்களின் மணி ஒலி ஆரவாரத்தோடு, சோபித சுந்தர சீயோனுள் நித்ய இளைப்பாறுதலுக்குச் சென்று விட்டார்கள்.

நீண்டதொரு வாழ்வாக அமையாவிடினும் முழுமையான வாழ்வை அர்த்தமுள்ளதாக வாழ்ந்த பிரதமப் பேராயரின் தன்னலமற்றச் சேவை அடித்தளத்து மக்களின் வாழ்விற்கு ஒளியாகத் திகழ்ந்தது.

2. பேராயர் சி. செல்வமணி எம்.ஏ., பி.டி. எஸ்.ற்றி.எம்.

"பணித்திட்டம் வகுக்க சிறந்த தலைவர் தேவை
பணித்தளம் செல்ல சரியான ஊழியர் தேவை
கனிகள் கிடைக்க முழங்கால் முடக்குபவர் தேவை"



பேராயர் சி. செல்வமணி அவர்கள் குமரிப் பேராயராக 6-5-1973 ஆம் நாள் பொறுப் பேற்றார்கள். தொடர்ந்து 1980 ஆம் ஆண்டுவரை ஜெபக்குழுவின் தலைவராகச் செயல்பட்டார்கள். பேராயர் அவர்கள், திருமறையூர் இறையியல் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றியக் காலத்தில் அங்கு செயல்பட்ட "மலைப்புற திருப்பணி ஜெபக்குழு" விற்கு முழுமையான ஆதரவு கொடுத்தவர்கள். திருமறையூர் கல்லூரி, மதுரை அரசரடிக்கு மாற்றப்பட்ட வேளையில் அங்கும், மேற்கூறிய ஜெபக்குழு செயல்பட போதிய ஒழுங்குகளை ஏற்படுத்தினார்கள். மிகவும் ஊழிய வாஞ்சை கொண்ட இவர், குமரி பேராயத்தில் இயங்கி வந்த சிறுசிறு ஊழியக் குழுக்களை ஒருங்கிணைத்து ஒன்றாகச் செயல்பட முயற்சி மேற்கொண்டார்கள். கிறிஸ்தவன் ஒருவன் மிஷனெறிப் பணியில் களைப்பைப் பாராது கடைசிவரை பணியாற்ற வேண்டும் என்பதை வற்புறுத்தினார்.

14-8-1978 ஆம் நாள் நடைபெற்ற பேராய மாமன்ற அறிக்கையில் இவர், "The Diocesan Hill Tribes Prayer Band is engaged in the Jawadhi and Kalroyan Hills and there is great need and vast scope for expansion of its activities. The call for reaching out to North Indian States has been felt by the Diocesan mission Committee" என்று எழுதியிருந்தார்கள். திறமை, பணி, உழைப்பு ஆகியவற்றை இவ்வூழியத்திற்காகச் செலவிட்ட இப்பேராயர் தற்போது மருதங்கோட்டில் தங்கி சமூகப் பணிகள் பலவற்றைச் செய்து வருகிறார்.

4. பிரதமப் பேராயரின் பதிலாள் டானியல் ஆபிரகாம் பி.டி. எஸ். ற்றி. எம்.

"தேவனால் நிறைந்தவர்களே தேவ பணிக்கு வாருங்கள்!
தேவனை அறிந்தவர்களே அவரை அறிவியுங்கள்"

என்ற அழைப்பினை ஒவ்வொரு மனிதனும் சொந்தமாக்க வேண்டும். 1980 ஆம் ஆண்டு குமரிப் பேராயத்தில் சில மாதங்கள் பேராயர் இல்லாத காலத்தில், தலைமைப் பேராயரது பதிலாளாய், திருநெல்வேலி பேராயர் டானியல் ஆபிரகாம் அவர்கள் செயல்பட்டார்கள். தன் பணியினை சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியத்திற்கு இயன்ற மட்டும் செய்தார்கள். திருமறையூரில் "மலைப்புறத் திருப்பணி ஜெபக்குழு" ஒன்று நடைபெற்ற பொழுது, அக்கல்லூரியின் ஆட்சிக்குழு உறுப்பினர் என்ற முறையில் தனது ஆதரவினைக் கொடுத்து ஊக்குவித்தார்கள். குமரிப் பேராயத்தில்,

பணியாற்றும் காலத்தில் அன்னார் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு ஆற்றிய நல்தொண்டினை, நன்றியோடு பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். கடவுளின் ஆட்சியை இந்தியர் மனங்களில் நிலைக்குவதே இவரது குறிக்கோளாகும்.

4. பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் எம்.ஏ. பி.டி



இந்தியர் அனைவரும் இயேசுவைப் பற்றிக் கொள்ளும் நாள் வரை ஓய்வில்லாமல் மிஷனெறி பணியாற்றுவோம் என்ற சவால்தான் ஊழியத்தின் வியத்தகு வளர்ச்சிக்கு அடித்தளமாகும். படித்தவர்கள், பாமரர்கள், அடிமைகள், வாழ்விழந்தோர், மலைமக்கள், மேட்டுக்குடியினர், உயர்ந்த சாதியினர், தாழ்த்தப்பட்டோர், நகர்ப்புறத்தோர், நாட்டுப்புறத்தோர் என்று பல தரத்து மக்களும் இயேசுவினிடத்தில் அடைக்கலம் தேடி வருகின்றனர். அத்தகைய மக்களுக்கு வாழ்வளிப்பதும், அவர்கள் மத்தியில் பணியாற்றும் மிஷனெறிகளை ஊக்கப்படுத்துவதும் தனது கடமை என்பதை பேராயர் கிறிஸ்துதாஸ் அவர்கள் உணர்ந்து செயல்பட்டார்கள். பேராயர் அவர்கள் 1-5-1980 முதல் 7-1-1997 வரை குமரிப் பேராயராகவும், பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைவராகவும் செயல்பட்டார்கள். சுவிசேஷ ஜெபக்குழுவின் ஆரம்ப சபையாகிய காரியாவிளை சபை பேராயரது தாய்ச்சபையாகும். இதனால் இவ்வூழியத்தில் பேராயருக்குத் தனிப்பாசம் உண்டு. பல தடவைகளில் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் பணிக்களங்களுக்குச் சென்று; ஆலயங்கள், நிறுவனங்கள், ஆயர் இல்லங்கள், பள்ளிகள் போன்றவைகளுக்கு அடிக்கல் நாட்டியும், அர்ப்பணம் செய்தும் ஊழியர்களை உற்சாகப்படுத்தினார்கள். ஊழியங்களுக்கிடையில் நடைபெற்ற சிக்கலான பிரச்சனைகளுக்கு தாமே முன்னின்று உறுதியான முடிவுகளை எடுத்தார்கள். இதனால் ஊழியம் வேகமாக முன்னேற்றம் கண்டது.

அ. சுவிசேஷ ஜெபக்குழுவிற்குத் தனி அலுவலகம்

நாகர்கோவிலில் பேராயர் இல்லத்தின் அருகிலுள்ள பூமியில் ஒரு பகுதியினை மலைநாட்டு ஊழிய தலைமை அலுவலகச் செயல்பாட்டிற்கு ஒதுக்கினார்கள். பின்னர் அதில் கட்டிடங்கள் கட்டப்பட்டு, தற்போதும் செயல்பட்டு வருகிறது. குமரி மாவட்டத்தின் மேற்குப் பகுதி மக்களுக்கு வசதியாக மார்த்தாண்டம் பல்நோக்கு கட்டிடத்தில் ஒரு அறையினை இப்பணிக்காக ஒதுக்கினார்கள். மலைநாட்டு ஊழியம் தொடர்பாக

நடைபெற்ற எல்லா கூடுகைகளிலும் தவறாமல் பங்குபெற்று, ஊக்குவிக்கும் சக்தியாகத் திகழ்ந்தார். மிஷனெறிகளை கண்ணியமாகவும், அன்பாகவும் நடத்தி, பணிக்கள விரிவிற்குப் பாடுபட்டார். இவர் காலத்தில் பணியாளரும் பெருகினர், பணி மையங்களும் விரிவடைந்தன. பணியின விளைவும் குவிந்தது. மலை போன்ற இலக்குகள் பலவற்றை எளிமையாக செயல்படுத்திக் காட்டிய பெருமை இவரைச் சாரும்.

பேராயர் அவர்கள் ஓய்விற்குப் பின் நாகர்கோவிலில் தங்கி இறைப்பணியாற்றி வருகிறார்கள்.

5. பேராயர் எம். ஐ. கேசரி எம்.ஏ., பி.டி., எஸ்.ற்றி.எம்.



பசி வரும்வரை உணவின் அவசியம் நினைக்கப்படுவது இல்லை. தாகம் வரும்வரை தண்ணீரின் முக்கியம் அறிவது இல்லை. தேசம் சுவிசேஷ செய்தியை எட்டும் வரை இதய ஏக்கம் குறைவதுமில்லை. பேராயர் எம்.ஐ. கேசரி அவர்கள் 3-2-1997 ஆம் நாள் முதல் 10-9-2000 ஆம் நாள் ஓய்வு பெறும் வரை குமரிப் பேராயராகவும், பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைவராகவும் செயல் பட்டார்கள். ஊழிய வாஞ்சை மிக்க இப்பேராயர் அடிக்கடி மலை ஊழியப் பணித்தளங்களுக்குச் சென்று ஊழியர்களையும், விசுவாசிகளையும் உற்சாகமூட்டி வந்தார்கள். இவர் காலத்தில் ஆலயங்கள், ஊழியர் இல்லங்கள், அதிகமாகக் கட்டி முடிக்கப்பட்டன. இவ்வூழியத்தின் அனைத்துச் செயல்பாடுகளிலும் பேராயரின் பணி குறிப்பிடத்தக்கதாகும். இப்பேராயர் ஓய்வு பெற்றபின் மருதங்கோட்டில் தங்கி இறைப்பணி ஆற்றி வருகிறார்கள்.

6. பிரதமப் பேராயரின் பதிலாள் பேராயர் ஜேம்ஸ் சீனிவாசன்

குமரிப் பேராயத்தில் புதியப் பேராயரைத் தேர்வு செய்வதில் காலதாமதம் ஏற்பட்டதால், திருச்சி - தஞ்சை பேராயர் ஜேம்ஸ் சீனிவாசன் அவர்கள் 15-9-2000 ஆம் நாள் முதல் தலைமை பேராயரது பதிலாளாக, குமரிப் பேராயத்தின் பொறுப்பை ஏற்றார்கள். இவர் காலத்தில் நடைபெற்ற பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் அனைத்துக் கூடுகைகளிலும் தலைமையேற்றுச் சிறப்பாகச் செயல்பட்டார்கள். இவரின் பணியினை பேராய சுவிசேஷ ஜெபக்குழு நன்றியுடன் நினைவில் கொள்கிறது. தேசத்தை நன்மையால் நிரப்ப தேவன் சித்தங்கொண்டுள்ளார். அனைவரும் இணைந்து வேறுபாடின்றி பணியினை மேற்கொள்வோம்.

7. பேராயர் ஜி. தேவகடாட்சம் எம்.ஏ. பி.டி.எம்.திரி.டொக்.

'நற்செய்தியை அறிவித்தல்' என்பதே கிறிஸ்தவத்தின் அடிப்படைக் கோட்பாடு. திருச்சபை மக்கள் தங்களைச் சுற்றியுள்ள மக்கள்மீது கரிசனை கொள்வதுடன் நின்றுவிடாமல் தொலைதூரத்து மக்களுக்கும் இயேசுவை அறிவித்தல் வேண்டும் என்ற தீர்மானத்தை மனதளவில் ஆழமாகக் கொண்டவர் பேராயர். ஜி. தேவகடாட்சம் ஆவார். இவர் 16-9-2001 ஆம் நாள் குமரிப் பேராயராகப் பொறுப்பேற்றார். அது முதல் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைவராகத் திகழ்ந்து, திடமான ஆலோசனைகளைக் கூறி, அவற்றைத் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்படுத்தி வருகிறார். மலைமக்கள் மீதும் சமூகத்தின் அடித்தட்டு மக்கள் மீதும் ஒடுக்கப்பட்ட மக்கள் மீதும் தன் பணியின் செயல்பாட்டை விரிவாக்குகிறார். பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு, பொதுச் செயலாளராக முழு நேரம் பணியாற்றும் போதகரை முதன்முதலாக நியமனம் செய்தார். சபைகள் தோறும் நடைபெறுகிற மிஷனெறிகளின் அர்ப்பண ஆராதனையை அறிமுக ஆராதனையாக மாற்றி, வருடத்திற்கு ஒருமுறை நடைபெறும் ஆண்டுக்கூடுகையில் அர்ப்பண ஆராதனையை நடத்தி அதனைச் சிறப்பாக்கினார். பலமுறை பணிக்கள பயணங்கள் சென்று, ஆலயங்கள், ஆயர் இல்லங்கள், நிறுவனங்கள், பள்ளிகள் போன்றவற்றிற்கு அடிக்கல் நாட்டியும், அர்ப்பணங்கள் செய்தும் ஊழியர்களை உற்சாகமூட்டி வருகிறார். வரலாற்றுச் சிறப்புமிக்க பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் வரலாற்றைப் பதிவு செய்து புத்தகமாக வெளியிடுவதில் பேராயரின் பங்கு முக்கியமானது. இவருடையப் பணிக்காலத்தில் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியம் மிகப் பெருஞ்சாதனைகளை மலைப்பகுதிகளில் சாதிக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

"ஜீவ வசனங் கூறுவோம் - சகோதரரே!
சேர்ந்தே எக்காளம் ஊதுவோம்"

15

விருதுகளும் பணிகளும்

"கண்ணீரோடு விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள். அள்ளித் தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டே போகிறான். ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பி வருவான்" (சங் 126 : 5-6) என்ற வசனத்திற்கேற்ப சுவிசேஷ ஊழியத்தைக் கண்ணீரோடு செய்கிறவர்கள் பலர் உலகிலுள்ளனர். என் சித்தம், என் விருப்பம், நான் செய்வேன் என்ற சுயத்திற்கு வேறுபட்டு தேவசித்தம் என்னில் நிறைவேற ஒப்புவிக்கிறேன் என்று ஊழியத்திற்கு சென்ற உத்தமர்கள் பலர். பணம், பொருள், பதவி என்ற கவர்ச்சிகளுக்கு நேராக ஓடாமல், ஜாதி, மொழி, நிறம் ஆகியவைகளைத் தாண்டி கிறிஸ்தவ நெறிகளைப் பரப்ப வேண்டும் என்ற தன்னலமற்ற கொள்கையோடுத் தங்களைப் பிரஸ்தாபப்படுத்தாமல் ஊழியம் செய்து வருகின்றனர். பிசாசின் சர்வ ஆதிக்கத்தையும் ஒழிக்க வேண்டும் ஏன்ற ஆவலுடன் ஊழியம் செய்யும் இத்தகைய மிஷனெறிகளைக் கண்டுபிடித்து ஆதரவு அளிக்கும் தொண்டு நிறுவனங்கள் பல உலகில் செயல்பட்டு வருகின்றன. இவைகளுள் ஒன்று அமெரிக்காவில் மினசொட்டா என்ற இடத்தில் செயல்பட்டுவரும் டயறக்ட் எய்ட் மிஷன் (Direct Aid Mission) என்ற நிறுவனமாகும். இந்நிறுவனம் மிகக் கடுமையானதும் வசதிகள் குறைந்ததுமான காட்டுப் பகுதியில் சென்று அங்கேயே தங்கி நீண்டகாலம் பணியாற்றும் மிஷனெறிகளுக்கு விருதுகளை வழங்கி உற்சாகப்படுத்துகிறது.

1. யோக்பெல்லோ விருது (Yoke Fellow Award)அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள்.

அறிவர். தியோடர் வில்லியம்ஸ் அவர்கள், மலைகளினுள்ளே சென்று காட்டுப் பகுதிகளில் ஊழியம் செய்துவரும் அருள்திரு. டி. எலியாஸ் அவர்களின் 21 வருட சேவையை டயறக்ட் எய்டு மிஷனுக்குத் தெரியப்படுத்தினார்கள். அம்மிஷன் எலியாசின் சேவையை சோதனையிட்டு, உண்மை எனக் கண்டறிந்தது. பின்னர் சேவைச் செம்மல்களுக்கு

கொடுக்கப்படும் நுகத்தை சுமப்பவன் (Yoke Fellow) என்ற விருதினை 1985-ல் அருள்திரு. டி. எலியாஸ் அவர்களுக்குக் கொடுத்தது. அதன்பேரில் Yoke Fellow என்ற சான்றிதழையும் 1000 அமெரிக்க டாலரினையும் அந்நிறுவனம் வழங்கியது. உலக அரங்கில் ஒருசிலருக்கு மட்டுமே இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவில் முதன் முதலில் இவ்விருதினை பெறும் நபர் இவரே ஆவார். இதன்மூலம் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியம் உலகெங்கும் பிரசித்தமாயிற்று.

அ. விருதிற்குப் பாராட்டு

டயறக்ட் எய்டு மிஷன் வழங்கிய விருதினைப் பெற்ற எலியாஸ் அவர்களைப் பாராட்ட பேராய சுவிசேஷ ஜெபக்குழு தீர்மானித்தது. அதன்பேரில் 13-04-1986-ஆம் நாள் பாராட்டுக் கூட்டமானது நாகர்கோவில் கிறிஸ்து சபையில் வைத்து பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பேராயத்தின் சார்பில் மிஷனெறி எலியாசுக்கு போதகர் உடையும், Yoke Fellow என்று பொறிக்கப்பட்ட ஸ்டோல் ஒன்றும் அணியப்பட்டது. பேராய சுவிசேஷ ஜெபக்குழு சார்பில் 1½ பவுன் மோதிரம் பரிசாகக் கொடுக்கப்பட்டது. அதில் Yoke Fellow என்று பொறிக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து பலர் வாழ்த்துரைகள் வழங்கினர். "என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள் ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாகவும் இருக்கிறது" (மத். 11:29-30) என்று உலக இரட்சகர் இயேசுகிறிஸ்து அவரது நுகத்தை ஏற்றுக்கொள்ள அனைவரையும் அழைக்கின்றார்.

"பட்டணங்களிலும், மலைகளிலும் மக்கள் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கும்போது நாம் மட்டும் வயிறார உண்பது சரியல்ல. நாம் செய்கிறது நியாயமுமல்ல. இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்" என்ற விவிலிய வாக்கை ஆணித்தரமாக மனதில் பதித்துக் கொண்டு புறப்பட்டுப் போன எலியாசை தேவன் மனிதர் மூலமும் கனப்படுத்தினார். "என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்" (I சாமு 2 : 30) என்ற வசனம் மேற்கூறிய செயல்மூலம் நிரூபணமாகியது.

2. முதல் மிஷனெறி யோக் பெல்லோ அருள்திரு. டி. எலியாஸ்

குமரி மாவட்டம் ஆலங்கோடு என்னுமூரில் தாவீது - செல்லம்மாள் தம்பதியினருக்கு 27-01-1933-இல் டி. எலியாஸ் அவர்கள் பிறந்தார். தனது பள்ளிப் படிப்பை ஆலங்கோடு மற்றும் இரணியல் பள்ளிகளிலும் கல்லூரிப் படிப்பை ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரியிலும் கற்றார்.

அனைவருடனும் அன்பாகப் பழகும் குணங்கொண்ட இவர் 1951 அக்டோபரில் திரு. சத்தியநேசன் தலைமை ஆசிரியரின் செய்தியால் தொடப்பட்டார். 1956-இல் நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவப் பள்ளியில் நடைபெற்ற V.B.S. ஊழியத்தால் உணர்வு பெற்று, அதே ஆண்டு பங்காரப்பட்டு இறையியல் கல்லூரியில் சேர்ந்தார். 11-09-1958-இல் நவமணி அன்னபாயை மணந்த இவர் 1961-ல் கல்வியை முடித்து காரியாவிளை சபையில் ஊழியராய்ப் பொறுப்பேற்றார். அக்காலத்தில் தான் சுவிசேஷ ஜெபக்குழு தோற்றம் பெற்றது.

தேசிய அருட்பணி சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க ஜவ்வாது மலையில் ஊழியம் செய்ய பேராயர் ஐ.ஆர். ஹெச். ஞானதாசன் அவர்களால் 28-05-1964-இல் அனுப்பப்பட்டார். அடுத்த ஆண்டு அவரது மனைவியும் மலைப் பகுதிக்குச் சென்று ஆசிரியப் பணி புரிந்தார்கள். 25-04-1965-ஆம் நாள் பேராயர் ஐ.ஆர். ஹெச். ஞானதாசன் அவர்கள் இவருக்கு மயிலாடி ஆலயத்தில் வைத்து போதகராக அருட்பொழிவு கொடுத்தார். இவர் "தேவனிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார், தேவனுக்காகப் பெரிய காரியங்களைச் சாதிக்கப் பார்" என்று வில்லியம் கேரி கொண்டிருந்த குறிக்கோளை, தன் குறிக்கோளாகவே கொண்டார். பின்னர் தேசிய அருட்பணி சங்கத்தின் மிஷனெறியாகவும் சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைமை மிஷனெறியாகவும் பணியாற்றினார். குமரிப் பேராயத்திலிருந்து பல மிஷனெறிகள் தோன்றுவதற்குக் காரணமானார். ஜவ்வாது மலையில் ஒன்பது பணித்தளங்களை உருவாக்கினார். சுற்றியுள்ள நூற்றுக்கு அதிகமான கிராமங்களில் நற்செய்தி அறிவித்து சில கிராமங்களில் தொழுகைக் கூடங்கள், பள்ளிக்கூடங்கள், இராப்பள்ளிகள் போன்றவற்றைக் கட்டினார்.

அ. சூம்பின கை நிமிர்ந்தது

அருள்திரு. எலியாஸ் அவர்களின் நான்காவது மகன் இராஜாவை இளம்பிள்ளைவாத நோய் 1972 ஜனவரி 5-ஆம் நாள் தாக்கியது. வேலூர் மருத்துவமனையில் மூன்றுமாதங்கள் சிகிச்சை பெற்றும் பலனில்லாமல் மகனின் கை சூம்பிவிட்டது. மருத்துவர்கள் கைவிட்ட நிலையில் எலியாஸ் மகனைக் கூட்டிக்கொண்டு பணித்தளம் சென்றார். அப்போது அவனுக்கு வயது நான்கு. அங்கு ஆதிவாசிகள் கூடி எலியாசுக்கு அனுதாபம் தெரிவித்தனர். "குருடரின் கண்களைத் திறந்தவர், சப்பாணிகளை நடக்கச் செய்தவர், மரித்தோரை உயிர்த்தெழச் செய்தவர், திமிர்வாதக்காரனை எழுப்பியவர், "சுகம் தரவில்லை" என பல செய்தவர் ஏன்? உங்கள் மகனுக்கு சுகம் தரவில்லை" என பல

வினாக்களை எழுப்பினர். அப்போது எலியாஸ் இறைவனிடம் "என் மகனுக்கு நீர் குணம் தராவிட்டால், நான் குறைவுள்ளவனாகத் தானே ஊழியம் செய்ய நேரிடும். உமது வல்லமை குன்றிவிடவில்லை. என் மகனைத் தொட்டு குணம் தாரும்" என்று தன் மனைவியுடன் சேர்ந்து அழுகையுடனும், உபவாசத்துடனும் கெஞ்சி ஜெபித்தார்கள். ஒருநாள் அதிகாலை நான்கு மணிக்கு ராஜா தன் பெற்றோரை எழுப்பி, "ஏசு சாமி என்னைத் தொட்டார், நான் சுகம் பெற்றேன், என்று தன் கரத்தை உயர்த்தி அசைத்துக் காட்டினான்". மகிழ்ச்சி பொங்க அவன் ஆதிவாசி இல்லங்களில் சென்று "இயேசு என்னைத் தொட்டு குணப்படுத்திச் சென்றார்" என்று சாட்சி கூறினான். இவ்வாறாக கடவுளின் அற்புதத்தைக் கண்ட மக்கள் கிறிஸ்துவில் அதிக விசுவாசமுள்ளவர்களானார்கள். சிலர் ஊழிய அழைப்பைப் பெற்று, என்.எம்.எஸ். சங்கத்துடனும், சுவிசேஷ ஜெபக்குழுவுடனும், ஆசீர்வாத இளைஞர் இயக்கத்திலும் இணைந்து பணியாற்ற எழுந்தனர்.

குமரிப் பேராயத்திலிருந்து ஜவ்வாது மலைக்கு மேலும் மிஷனெறிகள் செல்வதை என்.எம்.எஸ். விரும்பவில்லை. மட்டுமல்லாமல் எலியாசை வட தமிழக அமைப்பு செயலராக 01-07-1976-இல் நியமித்தனர். அவரது தலைமை இடத்தை திருச்சிக்கு மாற்றிடக் கூறினர். இது அவரது அழைப்புக்கு முற்றிலும் மாறுபாடாக இருந்தது. இதனால் மனம்நொந்த எலியாஸ் ராஜினாமா கடிதம் கொடுத்து 01-04-1977-ல் அதிலிருந்து விலகினார்.

ஆ. சுவிசேஷ ஜெபக்குழுவின் முதல் மிஷனெறி

தேசிய அருட்பணி சங்கத்திலிருந்து விலகிய எலியாஸின் உள்ளத்தில் மலை மக்களைக் குறித்த ஆத்தும பாரம் விலகாமல் இருந்தது. ஏற்கெனவே புதிய பணித்தளம் தொடங்குவதற்கு சுவிசேஷ ஜெபக்குழு தீர்மானித்திருந்தது. அதன்படி அருள்திரு. டி. எலியாஸ் அவர்கள் கல்ராயன் மலைக்குப் புறப்பட்டுச் சென்று தேக்கம்பட்டுக் கிராமத்தில் தனது ஊழியத்தை 20-06-1977-இல் தொடங்கினார். இதுவே பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்குச் சொந்தமான முதல் பணிக்களமாகும். இவரே முதல் மிஷனெறியுமாவார். இந்நாள், பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் நாளாகும். தேக்கம்பட்டுக் கிராம மக்கள் முதற்கண் எலியாஸை நம்ப மறுத்தனர். பின்னர் எலியாசின் நற்தொண்டினைப் பார்த்து, அவர்மேல் நம்பிக்கை வைத்தனர். எலியாஸ் அம்மலை மக்களோடு புல் வீடு கட்டித்

தங்கினார். பகல்பொழுது கால்நடையாக நடந்து இயேசு சுவாமியை அறிவிப்பதும், மாலைப் பொழுதில் சிறப்புக் கூடுகைகள் நடத்துவதும், இரவுப் பொழுதில் சிறுவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதும் இவருடைய பணியாக அமைந்தது. இதனால் மலை மக்கள் எவ்வித மன வேறுபாடுமின்றி எலியாசோடு ஐக்கியமானார்கள். எலியாஸ் மேற்கொண்ட திருப்பணியின் வேகத்தால் ஆலயங்கள், பள்ளிக்கூடங்கள், விடுதிகள், மருத்துவமனைகள் எனப் பல முன்னேற்றத் திட்டங்கள் மலை மக்களுக்குக் கிடைத்தன. சுருங்கக் கூறின் சமவெளி மக்கள் கூட மலையில் போய் படிக்கும் அளவிற்கு, மலைப் பகுதியில் காணப்பட்ட கலவிக்கூடங்கள் ஒளிபெற்றன.

இ. எலியாஸ் நகர்

ஒருவன் எனக்கு ஊழியம் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார் என்ற வசனத்திற்குப் பொருத்தமானவர்களுள் எலியாசும் ஒருவராவார். இறைவன் அவருக்குக் கொடுத்தத் திறமைகளை இறைவனே மகிழும் அளவில் செயல்படுத்தினார். மிகக் கண்ணியமாக பணிக்களங்களில் வாழ்ந்து முன் மாதிரியானார். தன் வருவாயை ஊழியங்களுக்குச் செலவழித்தாரேயொழிய தனக்கென பணிக்களங்களிலிருந்தோ, ஊழியங்களிலிருந்தோ எதனையும் சம்பாதிக்கவில்லை. யோக் பெல்லோ விருதுடன் கொடுக்கப்பட்ட 1000 டாலரையும் பேராய சுவிசேஷ ஊழியக்குழுவிற்கே கொடுத்தார். அன்னாரின் சாதனைகளைப் பாராட்டி கண்ணியப்படுத்தும் நோக்கில் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் 1993 பெப்ரவரி மாதம் சேராப்பட்டுப் பகுதிக்கு "எலியாஸ் நகர்" எனப் பெயர் சூட்டத் தீர்மானித்தார். ஆனால் எலியாஸ் அதனை விரும்பவில்லை.

மிஷனெறி எலியாஸ் அவர்களின் பணியினை சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. உதய சூரியன் அவர்கள், "குமரிமண்ணில் பிறந்தாலும் மலை மக்களின் நல்வாழ்வுக்காகத் தன்னை அர்ப்பணித்து முன்னேற்றப் பணிகளைச் செய்து கல்வராயன், ஜவ்வாது மலைப் பகுதி மக்களை முன்னேற்றிய நிலையினை நினைக்கும் தோறும் உள்ளம் மகிழ்கிறது. இவருடைய தொண்டால் இன்று அரசியல் தலைவர்களும் உருவாகியுள்ளனர்" என்று 25-07-1999-ஆம் நாள் சேராப்பட்டு பள்ளிக்கூடத் திறப்பு விழாவின்போது பேசினார்.

ஈ. வழியனுப்பு விழா

சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து ஜவ்வாது, கல்வராயன் மலைப் பகுதிகளின் சிறப்பைப் பிரசித்தப்படுத்திய எலியாசின் பாதங்கள் ஜவ்வாது.

[illegible]

எலியாஸ் தம்பதியினரை கொல்லிமலையில் கொண்டு சேர்த்தனர்.

27-10-1962-ல் கொல்லிமலை ஊழியத்தை குமரிப் பேராயம் ஏற்றெடுத்து நடத்த திருமதி. ஈவ்லின் பிரான்ட் அவர்கள் அருள்திரு. [illegible] இராஜையனுக்குக் கடிதம் எழுதியிருந்தார்கள். அன்றைக் காலம் அது நடைபெறவில்லை. ஆனால் 40 வருடங்கள் கழித்து, குமரிப் பேராயத்தினரால் அவ்வூழியத்தைத் தொடர ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளமை கிறிஸ்துவின் அற்புத செயல்பாட்டின் விளைவே ஆகும். 01-02-2000-ஆம் நாள் முதல் எலியாஸ் அவர்கள் குடும்பமாக கொல்லிமலையில் தன் பணியைத் தொடர்கிறார்.

3. கிருபை பெற்றவள் (திருமதி. நவமணி அன்னபாய்)

ஓர் ஆண் மகனின் உயர்வுக்குப் பின், பெண்ணொருத்தி இருக்கிறாள் என்பது உலகறிந்த உண்மை. குடும்பம் என்பது சமூகத்திற்கு மாதிரியானது. கடவுள் பக்தி நிறைந்த குடும்பம், உலகில் பல சாதனைகளை இறைவனுக்காகப் படைத்து எழிலுடன் விளங்குகிறது. அத்தகையோரை இறைவன் நேசிப்பார். மனிதனும் பெருமைப் படுத்துவான். மேற்கூறிய கருத்துக்களுக்கு இலக்கணமாகத் திகழ்ந்த குடும்பம் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் முன்னோடி மிஷனெறியாகிய அருள்திரு. டி. எலியாஸ் - திருமதி. நவமணி அன்னபாய் தம்பதியினரின் குடும்பமாகும். மலைமேல் விளக்காகத் திகழும் அருள்திரு. டி. எலியாஸ் அவர்களின் பணிக்குத் தூண்டுகோலாகத் திகழ்ந்தவர்கள் நவமணி அன்னபாய் எலியாஸ் ஆகும். அன்னபாய் அவர்கள் 13-03-1933-ஆம் ஆண்டு கல்லுக்கூட்டத்தில் எம். தேவசகாயம் - இரஞ்சிதம் தம்பதியினரின் மூத்த மகளாகப் பிறந்தார். வளர்ந்து ஆசிரியப் பயிற்சி பெற்று குளச்சல் வி.கே.பி. உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியையாய் பணியாற்றினார். இறைத்தொண்டின் மேன்மை கருதி 1958 செப்டம்பர் 11-ஆம் நாள் மிஷனெறி எலியாசைக் கரம் பிடித்தார்.

அ. *மலைப்பயணம்*

கிறிஸ்துவின் பணியில் ஆர்வம் கொண்டிருந்த நவமணி அன்னபாய் அவர்கள் தன் கணவனுடன் மலை ஊழியத்திற்குச் செல்லத் தீர்மானித்தார். அதன்பேரில் தான் பணியாற்றும் பள்ளியில் நான்குமாத விடுப்பு எடுத்து, தன் இரு பிள்ளைகளுடன் 1965 ஜூன் 4-ஆம் நாள் கணவன் பணியாற்றும் மலைக்குப் போய்ச் சேர்ந்தார். அவர்களுடைய பயணத்தை உறவினர்களும் நண்பர்களும் ‘மலை ஊழியம் பயனற்றது’ எனக் குறைவாகப் பேசி தடுத்தனர். ஆனால் அன்னபாய் அவர்களோ முன்வைத்தக் காலை பின் வைக்காமல் குளச்சல் பள்ளியின் ஆசிரியப் பணியை ராஜினாமா செய்தார்கள். கேலிகளும் பேச்சுகளும் இருந்தன. ஆனால் மனதில் கிறிஸ்துவின் தைரியமும் வழிகாட்டுதலும் வேரூன்றி இருந்தது. மலையில் போய் ஜமுனா மரத்தூரிலுள்ள தமிழ்நாடு அரிசன நல இலாகாப் பள்ளியில் 1965 செப்டம்பர் 24-ல் இளநிலை ஆசிரியையாய் பணியில் இணைந்தார். பகல்பொழுது பள்ளியிலும் இரவுப்பொழுது ஊழியமாக மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்துக் கடினமாக உழைத்தார். மக்கள் கல்வியைக் கற்றுக் கொடுத்ததுடன் இறைவனைப் பற்றியும் பாமர மக்களுக்குக் கற்பித்தார். இதனால் திருமதி. அன்னபாய் எலியாசின் செல்வாக்கு மலை முழுவதும் பிரதிபலித்தது.

பின்னர் 23-09-1979-ஆம் நாள் ஜமுனா மரத்தூரிலிருந்து மாற்றலாகி சேராப்பட்டிலுள்ள அரிசன இலாகாப் பள்ளியில் போய்ச் சேர்ந்தார்கள். அக்கிராம மக்கள் இவ்வாசிரியை மீது அளவற்ற அன்பு செலுத்தினார்கள். அப்பகுதி பெண்கள் மத்தியில் திறம்பட இறைவார்த்தைகளைக் கூறியதுடன் தூய வாழ்க்கை வாழவும் கற்றுக் கொடுத்தார்கள். குழந்தைகள் பலர் இயேசுவின் சத்தியத்தை இவர்கள் மூலமாய் அறிந்தனர். இத்தகைய முன்னேற்றங்களைக் காணச் சகிக்காத பகைவர்கள், "திருமதி. நவமணி அன்னபாய் எலியாஸ் அவர்கள் பள்ளியில் பாடங்கற்றுக் கொடுக்காமல் கிறிஸ்தவ மத போதனைச் செய்கிறார்" என்ற பொய்ப் புகாரை பொறாமை எண்ணத்தோடு அரசிற்குக் கொடுத்தனர். அதனை விசாரிக்க இரண்டு வட்டாட்சியாளர்கள் மாவட்ட ஆட்சியாளரால் அனுப்பப்பட்டனர். அவர்கள் அப்புகாரை தெளிவாக விசாரித்து அக்குற்றச்சாட்டுப் பொய் எனக் கூறி, அன்னபாய் எலியாசிடம் "கலங்க வேண்டாம் உங்களைப் பற்றி நல்ல அறிக்கைகள் உள்ளது" எனக் கூறினார். என்றாலும் சேராப்பட்டிலிருந்து சுமார் 150 கிலோ மீட்டர் தொலைவில் ஆலப்பாக்கம் என்ற கிராமத்திற்கு 1987-இல் அன்னபாய் எலியாஸ் அவர்கள் மாற்றப்பட்டார். மீண்டும் இருவாரங்களில் சேராப்பட்டில் நியமனம் பெற்றார். கிறிஸ்துவின் பிள்ளைகளுக்கு எதிராக வந்த ஆயுதங்கள் நீர்க்குமிழிபோல் மறைந்து போயிற்று.

ஆ. பாடுகளிலும் பணி தொடர்ந்தது

எலியாஸ் - அன்னபாய் தம்பதியினர் சேராப்பட்டில் 21 ஆண்டுகள் வசதி குறைந்த புல் வீட்டிலேயே வாழ்ந்தனர். ஒருநாள் அவ்வீட்டில் திருடன் புகுந்து திருமதி. அன்னபாய் அவர்களின் நகைகளைத் திருடிச் சென்றான். இதனை அன்னபாய் அவர்கள் ஒரு பொருட்டாகவே கொள்ளவில்லை. பலர் அதனை விசாரித்து வந்தபோது "என்னுள்ளில் இருக்கும் கிறிஸ்துவை திருட முடியவில்லையே" என்று சாட்சி கொடுத்தார்கள். மிஷனெறிகள், ஆசிரிய ஊழியர்கள், மருத்துவ ஊழியர்கள் மற்றும் சமூக சேவகர்களுக்கு நல் ஆலோசனைகளை வழங்கி சாந்தமாய் நடத்தினார்கள். மலைவாழ் பிள்ளைகளைத் தன் பிள்ளைகளைப் போல் பராமரித்தார்கள். கிராமங்களுக்குச் சென்று ஆதிவாசி மக்கள் இல்லங்களைச் சந்தித்து, அவர்களுக்கு இயேசுவின் அன்பைக் கூறி, ஜெபித்தார்கள். சேராப்பட்டில் நடைபெறுகிற அனைத்துக் கூடுகைகளிலும் பங்கெடுத்து பிறருக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்கள் வாழ்வில் அன்பும், ஜெபத்தில் உறுதியும், விசுவாசத்தில் வைராக்கியமும் கொண்ட இவரது வாழ்க்கைமுறை பார்ப்போரை கிறிஸ்துபால் இழுத்தது

எந்தச் சூழ்நிலையிலும் சிரித்த முகத்துடன் பொறுமையாய் மகிழ்ச்சியாய் மனநிறைவுடன் வாழ்ந்து, ஆசிரியப் பணியோடு இறைப் பணியிலும் தன்னை முழுமையாக ஒப்புவித்த இப்பெண்மணியை மகளிர் குல விளக்கு என்றுதான் கூற வேண்டும்.

இ. கிருபை பெற்றவள் - விருது

இரக்கத்தின் எல்லா இலக்கணங்களையும் பெற்று காரிருள் சூழ்ந்து கதியற்றுக் கிடந்த மானுடத்திற்கு ஒளியானாள். நடை தளர்ந்து, உடல் மெலிந்து, உலகம் நிராகரித்த மக்களுக்கு வாழ்வளித்தாய். நீர் என்றுமே ஆசீர்வதிக்கப்பட்டவர்தாம். சேராப்பட்டு மண் உம்மைப் புகழட்டும். இத்தகைய அருங்குணங்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்ட அன்னபாய் எலியாசின் ஒப்படைப்பினையும், ஊழியத் திறனையும் பாராட்டி 01-03-1987-ஆம் நாள் சேராப்பட்டில் புதிதாய் கட்டப்பட்ட அருள்திரு. மோசஸ் நினைவு ஆலய அர்ப்பண விழாவின்போது பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் அன்னாருக்கு **கிருபை பெற்றவள்** என்ற பட்டத்தைச் சூட்டிப் பாராட்டினார்கள். அதே ஆண்டு ஆகஸ்டு 2-ஆம் நாள் நெய்யூரில் நடைபெற்ற பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் வெள்ளிவிழாக் கூடுகையில் "கிருபை பெற்றவள்" என்று பொறிக்கப்பட்ட வெள்ளிப்பதக்கம் ஒன்றை பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் அன்னபாய் அவர்களுக்கு அணிவித்தார்கள். பெண் ஊழியர்களுக்கு மாதிரியாய் திகழ்ந்த அன்னாரின் பணியை ஜெபக்குழு வெகுவாய் பாராட்டுகிறது.

இப்பெண்மணி தற்போது தன் கணவருடன் கொல்லிமலையில் தங்கி இறைப்பணி ஆற்றி வருகிறார்கள். தன் இறுதிமூச்சி வரை மலை மக்களுக்காகவே வாழத் துடிக்கும் அன்னார் பல்லாண்டு காலம் வாழட்டும்.

சாகப் போகிறவர்கள்! ஒருவர் இருவர் அல்ல!
ஆயிரமாயிரம் மக்கள்! சாகப் போகிறார்கள்
ஒருசில தினங்களில் சாகப் போகிறார்கள்
இயேசுவை ஒருமுறை கூட அறியாமல்,
அவருடைய மீட்பை ருசிக்காமல் சாகப் போகிறார்கள்
அதைத் தடுத்து நிறுத்த எஸ்தரைப் போன்ற,
நவமணி அன்னபாய் போன்ற பெண்கள் பலர்

எழும்ப வேண்டும். உனது அர்ப்பணம் என்ன?
யாருக்காய் வாழ்கிறாய் நீ?

ஆத்தும அறுவடைப் பணியில் தன்னை ஈடுபடுத்துவது என்பது பரிசுத்த ஆவியின் உந்துதலே ஆகும். பலவீனத்தை மாற்றி பெலமுள்ளவன் ஆக்குபவர் இறைவன் ஒருவரே ஆவர். கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நிறைவேறும் வரை இத்தூயப்பணி நடைபெற்றுக் கொண்டே இருக்கும். ஊழியங்களில் கடவுளின் சித்தம் இல்லாமல் எடுக்கப்படும் முடிவுகளினால் சந்தோஷம் வருவது இல்லை. சமாதானம் நிலைப்பது இல்லை, கனி காண்பது இல்லை. ஆனால் கடவுளின் சித்தமான முடிவிற்காகக் காத்திருந்த எலியாசின் ஊழியத்தால் மகிழ்ச்சியும் மன அமைதியும், பாதுகாப்புமே இருந்தது. இறைவன் ஒவ்வொரு விசுவாசிகளையும் ஆத்தும வேட்டைக்காரர்களாக மாற்றுவாராக!

"இயேசு கிறிஸ்துவின் அன்புக்காய் இறங்கிடுவோம்
புல் பூண்டுமே யானாலும் புசித்திடுவோம்
முன் வைத்தக் காலை பின் வைக்க மாட்டோம்

சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம்
சிலுவை தோளில் சுமந்து போகலாம்."

16

வேதனைகளும் சாதனைகளும்

"கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிச் சிறக்கப் பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக் கொண்டு, அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (IIகொரி 2:14)

தேவனின் தூய கிருபையால் இறைப்பணி நன்கு வளர்ந்தது. பணியாளரும் பெருகினர். பணி மையங்கள் விரிவடைந்தன. ஆத்துமாக்கள் மந்தை மந்தையாய் மலைகள் தோறும் எழும்பி இயேசுவின் மந்தையில் இணைந்தனர். ஆலயங்கள் கட்டப்பட்டன. சமூகப்பணிகள் மூலம் மக்கள் விழிப்படைந்தனர். ஆனால் மிஷனெறிகள் பலர் துன்பத்தின் பாதைகளிலேயே நடந்தனர். அவர்களைத் தேற்றுவாரில்லை. உதவி செய்வாரில்லை. கொடிய நோய்களால் தாக்கப்பட்டு, பலவீனமாகி பலவித இக்கட்டுகளைச் சுமந்தனர். கிறிஸ்து காட்டுகின்ற பாதை துன்பமாயினும் அதனை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டனர். வேதனைகள் அடுக்கடுக்காக வந்தபோது அவைகளைச் சரித்திரச் சாதனைகளாக மாற்றினர். எச்சூழலிலும் பின்வலிக்காமல், விட்டோடாமல் பணியாற்றிய மிஷனெறிகளின் வாழ்க்கைகள் பின் சந்ததியாருக்கு சவாலாகவே திகழுகின்றன. இத்தகைய மிஷனெறிகளின் வரலாறுகள் கர்த்தரின் விரல்களால் எழுதப்படுகின்றன என்பதை பலர் அறியவில்லை.

1. கோதுமை மணிகளான இளந்தளிர்கள்

"கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்" (யோவான் 12:24) என்ற வசனம் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் செயல்பாட்டில் செயலாகிவிட்டது. திருச்சபையின் வரலாற்றில் நெருக்கடியும் கஷ்டமும் இடர்பாடுகளும் சித்திரவதைகளும் இழப்புகளும் எப்போதெல்லாம் தலை தூக்கியதோ அப்போதெல்லாம் ஊழியங்கள் வளர்ந்துள்ளன.

அளிக்கட்டும். இதுவும் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவினருக்கு அதிர்ச்சியை அளித்தது.

எஸ்.வி. பாளையம் என்னும் பணித்தளத்தில் திரு. ஹென்றி மார்ட்டின் என்னும் மிஷனெறி தன் மனைவி லதா ஞானபாயுடன் பணியாற்றிவந்தார். 9-7-2000 ஆம் நாள் திருமதி. லதா ஞானபாய் அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. பிறந்த குழந்தைக்குச் சிறிது நேரத்தில் மூச்சு திணறல் ஏற்பட்டது. உடனே மருத்துவம் செய்யும் வசதிகள் அப்பணித்தளத்தில் இல்லை. அதனால் பெற்றோர்கள் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு, நான்கு மணி நேரம் பயணம் செய்து மருத்துவமனையில் கொண்டு சேர்த்தார்கள். ஆனால் சிகிச்சை பலனின்றி மருத்துவமனையில் வைத்து அக்குழந்தை இறந்துவிட்டது. பெற்றோர்களும் பணிக்களத்திலுள்ளவர்களும் அக்குழந்தையை எஸ்.வி. பாளையத்தில் நல்லடக்கம் செய்தனர். கிறிஸ்துவிற்காய் இழந்த இவர்கள் தரித்திரர் ஆவதில்லை.

குறும்பலூர் பணித்தளத்தின் மிஷனெறி திரு. டானியல் தீர்த்தன், மனைவி அன்னாள் ஆகியோரின் பத்து மாதங்களான மகள் போதிய மருத்துவ வசதியின்மையால் 4-11-1999-ஆம் நாள் மரித்தாள். அவளது உடல் அப்பணித்தளத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது. இவ்விதம் கோதுமை மணிகளாய் மடிந்த குழந்தைகள், எதிர்காலத்தில் இந்தியாவின் வரலாற்றில் இடம்பெற வேண்டியவர்கள். இருள் நிறைந்த மலைப்பகுதிகளில் எரியும் ஓர் சிறு மெழுகு வர்த்தியைப் போல் தோன்றி மடிந்து போனார்கள்.

இன்றைய உலகமும் மிகப்பெரிய தியாகத்தை கிறிஸ்தவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறது. ஆனால் கிறிஸ்தவ உலகமோ கடமை எது என்பதனை அறியாமல் மாயையில் மயங்கி கிடக்கிறது. கிறிஸ்தவர்களே மறுபடியும் கிறிஸ்தவர்களாக்கப்படுகிறார்கள். தேறுதல் பெற்றவர்களே தேற்றப்படுகிறார்கள். மனம்மாறியவர்களே மீண்டும் மாற்றப்படுகிறார்கள். ஆசீர்வாதம் பெற்றவர்களே மீண்டும் பெறுகிறார்கள். ஆனால் கவனிக்கப்படாதவர்கள் கவனிக்கப்படாமலே கிடக்கிறார்கள். இழப்பையும் தாங்கி பணி செய்யத் துணியும் பராக்கிரம சாலிகளை இறைவன் அழைக்கிறார்.

குமரிப் பேராய சபைகளில் பட்டம் பெற்ற திறமையுடைய பல மருத்துவர் மற்றும் தாதியர்களைக் கடவுள் தந்துள்ளார். ஆனால் தேவை நிறைந்த பகுதிகளில் சென்று சேவை செய்ய எவரும் முன்வரவில்லை. சில மருத்துவர்கள் வேறு மாவட்டங்களிலிருந்து மலைப்பகுதிகளில்

சென்று சிலகாலம் மருத்துவப் பணியாற்றிச் சென்றார்கள். நம்முடைய குறிக்கோள், ஒவ்வொரு மறுநாளும் இன்றையிலிருந்து முன்னேற்றம் காணுமாறு செயல்புரிய வேண்டும் என்பதேயாகும். நம்முன் இருக்கும் புதுப்புது சவால்களை சந்திக்க ஆயத்தமாவோம்.

2. பணித்தளத்தில் தடம் பதித்த தியாகச் சுடர்கள்

வெற்றிகளைக் கொண்டாடுவதற்கு நித்தியத்தில் காலங்கள் நிரம்ப இருக்கின்றன. ஆனால் வெற்றிகளை சம்பாதிப்பதற்கோ மிகக்குறுகிய காலமே நமக்கு உண்டு என்ற உண்மையை அறிந்து செயல்படுவோர் ஞானிகளாகத் திகழ்வர். நான் கிறிஸ்துவை அறிந்து கொண்டேன். அதோடு என் வாழ்வு நிறைவு பெறப் போவதில்லை. நான் அனுபவித்த, என்னை மீட்ட இரட்சகரை தரணியெல்லாம் கூற வேண்டும் என்ற தீராக் காதலோடு மிஷனெறிப் பணியில் ஈடுபட்டோர் பலர். எப்பேர்பட்ட சிலுவையையும் சுமக்கத் தயார் எனத் தன் கழுத்தை இத்தூயப்பணிக்கு நீட்டி, பாடுகள் வழியாய் பரமனின் மகிமையை பாரில் வெளிப்படுத்தியோர்களும் உண்டு. தங்களை அனுப்பிய சங்கங்கள் கூட வற்புறுத்தாத கடும்பணிகளை ஆற்றி, பாடுகளை ஏற்றோரும் பலர். அவர்களில் இம்மண்ணோடு மக்கிப் போன தியாகச் சுடர்களின் தழும்பேறிய தடங்கள் தரப்படுகின்றன.

அ. அருள்திரு. ஜி. டேவிட் ராமன்

இவர் வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலையின் ஒரு பகுதியான கம்புக்குடி மலையில் பிறந்த ஆதிவாசி ஆவார். அம்மலையில் மேல்பட்டு என்னுமிடத்தில் காணப்பட்ட அரசுப் பள்ளியில் கல்வி பயின்றார். அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. சவுந்தரராஜன், வகுப்பு ஆசிரியர் திரு. இராபர்ட்சன் ஆகியோர் மூலம் இயேசுவை ஏற்றுக் கொண்டார். பின்னர் ஜம்னா மரத்தூரில் உயர் கல்விக்காகச் சென்றார். அங்கு பணியாற்றிய ஆசிரியை திருமதி. அன்னபாய் எலியாஸ் அவர்களின் உதவியால் கல்வியில் சிறந்த தேர்ச்சிப் பெற்றதோடு, கிறிஸ்தவ வாழ்க்கை நடைமுறைகளையும் அறிந்து கொண்டார். தனது 11 ஆவது வகுப்புக் கல்வியை ஜவ்வாது மலைப்பள்ளியில் படித்துத் தேறினார்.

கிறிஸ்துவை அறிந்து கொண்ட அன்னாருக்கு, தானும் கிறிஸ்துவை பிறருக்கு அறிவிக்க வேண்டுமென்ற ஆவல் உள்ளத்தில் எழுந்தது. இறைவன் பாதப்படியில் காத்திருந்து ஜெபித்து இறை அழைப்பை உணர்ந்தார்.

பின்னர் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு விண்ணப்பித்து தேர்வு பெற்றார். ஜெபக்குழு அவரை 27-5-1975 ஆம் நாள் முதல் தும்புராம்பட்டு

பணித்தளத்தில் மிஷனெறியாக நியமித்தது. இயேசுவின் நற்செய்தியை அம்மக்கள் மத்தியில் பெருஞ்சவாலாக நிறைவேற்றி வந்தார். பின்னர் தமிழ்நாடு இறையியல் கல்லூரி, மதுரைக்கு இறையியல் மற்றும் அருட்பணி பயிற்சிக்காக அனுப்பப்பட்டு பி.ற்றிஹெச் (B.Th.) பட்டமும் பெற்றார்.

அதன்பின்னர் ஊமையன்புதூர், கொளகூர், நிலவூர் ஆகியப் பணிக்களங்களில் மிஷனெறியாய் பணியாற்றினார். பேராய சுவிஷேச ஜெபக்குழுவின் பரிந்துரையின் பேரில் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் டேவிட் ராமனுக்கு 1-3-1987 ஆம் நாள் சேராப்பட்டு ஆலயத்தில் வைத்து போதகராக அருட்பொழிவு வழங்கினார். இவர் கோட்டையடி சபையின் மிஷனெறியாக 25-4-1980 ஆம் நாள் அருள்திரு. எஸ்.டி டதி அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டார்.

குமரி மாவட்டம் கோட்டார் பகுதியைச் சேர்ந்த வேணியை நாகர்கோவில் கஸ்பா ஆலயத்தில் வைத்து திருமணம் செய்தார். இவரும், இவர் மனைவியும் இறை ஊழியத்தில் மிக்கத் திறமை படைத்தவர்கள். சுவிசேஷ ஜெபக்குழுவின் செய்தி ஏட்டில் கதை மற்றும் கவிதைகள் எழுதி படிப்போரை உற்சாகப்படுத்தி வந்தார்கள். ஒரு மகனும் ஒரு மகளும் இத்தம்பதியினருக்கு உண்டு. சிறிதேனும் எதிர்பாராத அளவில் அருள்திரு. ஜி. டேவிட் ராமன் அவர்கள் இளமையிலேயே இவ்வுலக வாழ்விலிருந்து மறைந்தார். இவருடைய மறைவு கிறிஸ்துவை அறியாத மக்களுக்கும், பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்கும் பெரிய இழப்பாகும்.

மந்தையில் சேரா ஆடுகளைத் தொழுவில் சேர்க்கும்
சிந்தை நிறைந்த அறுவடைப் பணியாளர்கள் தேவை

ஆ. *திரு. சி. ஜாண்சன்*

உன்னைப் போல பிறனையும் நேசி என்ற கட்டளையைப் பெற்று, தேவநேயமும் மனிதநேயமும் கொண்ட தேசப்பற்று மிக்க இளைஞர் சமுதாயத்தை உருவாக்குவது தேவை என்ற சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து இயேசுவை ஏற்றுக் கொண்ட இவர் குமாரபுரம் தோப்பூர் திருச்சபையின் உறுப்பினர். இந்து மார்க்கத்தில் தீவிர ஈடுபாடுடையவர். மனம் மாறிய பின் இயேசுவின் நற்செய்தியைப் பிறருக்கு அறிவிக்க வேண்டும் என்ற ஆவல் கொண்டார். இயேசு வழங்கும் பாவமன்னிப்பு, சமாதானம், பரிசுத்தம், சமுதாய மலர்ச்சி, பரலோக வாழ்க்கை ஆகியவற்றை ஒவ்வொருவருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற ஆவலால் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவில் மிஷனெறியாய் பணிபுரிய இணைந்தார். 30-09-1978-ல் பணி நியமனம் பெற்ற இவர் சேர்வராயன் மலையிலுள்ள சேட்டுக்காடு என்னும் பணித்தளத்தில் ஊழிய பொறுப்பை ஏற்றார்.

1980 ஜனவரி மாதம் முதல் சேலம் டேனிஷ் பேட்டையில் ஊழியப் பயிற்சிக்காக ஜெபக்குழுவால் அனுப்பப்பட்டார். அங்கு கொடுக்கப்பட்ட ஒருவருட பயிற்சியில் வேத அறிவும், ஊழியக் களப்பயிற்சியும் பெற்றார். பின்னர் கல்வராயன் மலையிலுள்ள தேக்கம்பட்டு, கிளாக்காடு ஆகிய பணிக்களங்களில் இறைப்பணியை நிறைவேற்றினார்.

சில வருடங்களில் உதவித் தலைமை மிஷனெறியாகப் பதவி உயர்வு பெற்று மணியார்குண்டம் வட்டத்திலும் குருகிலாம்பூர் வட்டத்திலும் பணிபுரிந்தார். புத்தளத்தைச் சேர்ந்த புஷ்பாவை மணந்தார். இவர்களுக்கு மூன்று மகன்களும் ஒரு மகளும் உண்டு. ஊழிய வாஞ்சையுடன், சமூக நலப்பணி வாஞ்சையும் பெற்ற இவர், தனது பணிக்கள மக்களுக்கு அரசிடமிருந்து கிடைக்கப் பெறும் உதவிகளை தைரியமாகப் பெற்றுக் கொடுத்து, பலரது பாராட்டையும் பெற்றார்.

அதிவேகமாக இறைப்பணி ஆற்றிவந்த ஜாண்சன் திடீரென நோய்வாய்ப்பட்டு திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஆனால் சிகிட்ச்சை பலனளிக்காமல் மருத்துவமனையிலேயே 21-03-2000-ஆம் நாள் காலமானார். அவரது சீரம் குமாரபுரம் தோப்பூர் சபை கல்லறைத் தோட்டத்தில் பேராயர் எம்.ஜ கேசரி அவர்களால் நல்லடக்கம் செய்யப்பட்டது.

துடிப்பான இளைஞரான இவர் பழகுவதற்கு எளியவர், இனியவர், தீர்மானங்களை எடுத்து திட்டமாய் நிறைவேற்றுபவர். கொடுத்த பொறுப்பினை சளைப்பில்லாமல், தூரக் காட்சியோடு செய்பவர். இத்தகைய திட உள்ளமுள்ள வாலிபர்கள் பலர் இறை ஊழியத்திற்காக எழும்ப வேண்டும்.

திக்கெட்டும் கிராமங்களில் அழைப்பின் சத்தம் தொனிக்க
திறப்பில் நின்று உழைக்கும் நெகேமியாக்கள் எழும்ப வேண்டும்

3. பணிக்கள சோதனைகளும் வேதனைகளும்

இந்தியா நாடு முன்னேற வேண்டுமென்றால் கிராமங்கள் முன்னேற வேண்டும் என்று தேசத்தந்தை காந்தியடிகள் கூறினார். கிராமங்களை கொண்ட இந்தியா அறியாமையின் அடையாளமாகவும் நகரங்களைக் கொண்ட இந்தியா அறிவியலின் அடையாளமாகவும் காணப்படுகிறது. மூடத்தனங்களும் முரட்டுக் குணங்களும் மக்களிடம் மலிந்து கிடக்கின்றன. இவர்கள் மத்தியில் பட்டைத்தீட்டிய வைரம்போல உழைப்பதற்குப் புறப்பட்ட ஒளிமிக்கச் சேனையே நமது மிஷனெறிகள் ஆகும். மிஷனெறிகளின் தியாகமிக்க, தீரமான சேவையால் ஏமாற்றுப் பேர்வழிகள், பூசாரிகள் பலர் நஷ்டமடைந்தனர்.

அ. சாதி கெட்டுவிடும்

ஆதிவாசி மக்கள் உள்ளத்தால் கபடமில்லாதவர்கள், வெளியுலகு தெரியாதவர்கள். எது சரியென்று உணர்கிறார்களோ அதைக் கடைசி வரை பற்றிக் கொண்டிருப்பர். இவர்கள் தங்களுக்கென தனி தெய்வங்கள், மற்றும் பூசாரிகளை வைத்துள்ளனர். இயேசுவை ஏற்றுக் கொண்டால் அவர்களை, குலத் தெய்வங்களாகிய நாச்சி, பிடாரி, கருப்பன் ஆகியவைகள் தாக்கி, இரத்த வாந்தி எடுத்து செத்துவிடுவர் என பூசாரிகள் இம்மக்களைப் பயமுறுத்தி வைத்தனர். மட்டுமல்ல ஊரிலிருந்து விலக்கி விடுவதாகவும், சாதி கெட்டுவிடும் எனவும் அச்சுறுத்தி வந்தனர். இம்மலை மக்கள் மிஷனெறிகளுக்கு எதிராக பல துன்பங்களை பூசாரிகளின் தூண்டுதலின் பேரில் அடுக்கடுக்காகக் கொடுத்தனர். எனினும் மனம் சளைக்காமல் நமது மிஷனெறிகள் மக்கள் சேவை ஆற்றி வருகின்றனர்.

ஆ. பறையர்களின் தெய்வம்

வேற்றுப் பகுதிகளிலிருந்து மலைக்குச் செல்லும் வியாபாரிகள் அம்மலை மக்களை ஏமாற்றி, அங்கு உற்பத்தியாகும் பொருட்களை மிகவும் குறைவான விலையில் வாங்கிச் சென்றனர். இதனைக் கண்ணுற்ற மிஷனெறிகள் ஆதிவாசி மக்களுக்கு உதவிசெய்து விளை பொருட்களுக்குச் சரியான விலை கிடைக்க உதவினர். இதனால் வியாபாரிகளுக்கு கிடைத்த லாபம் குறைந்தது. உடனே வியாபாரிகள் சேர்ந்து உண்மைக்குப் புறம்பான செய்திகளை ஆதிவாசிகளிடம் பரப்பினர். "இயேசுநாதர் பறையர்களின் தெய்வம் அவரை ஏற்றுக் கொள்வோர்களின் சாதி கெட்டுவிடும். இதனால் மலை தெய்வம் மக்களைத் தண்டிக்கும்" என்று கூறியதுடன் இயேசுவை ஏற்றுக் கொண்டவர்களைப் பார்த்து, "பறையன் சாமியைக் கும்பிடுகிறான்" என இழிவாகப் பேசிப் பரிகாசம் செய்தனர். இதை நம்பிய மக்கள் பலர் கிறிஸ்தவத்திலிருந்து மாறி விட்டனர். அதோடு இனி இயேசுவை மக்களுக்குச் சொல்ல வேண்டாம் என்றும் கூறுகின்றனர். இவர்கள் மக்களுக்குச் சொல்ல வேண்டாம் என்றும் கூறுகின்றனர். இவர்கள் பகுதியிலும் 'இயேசுவே உண்மையான இரட்சகர்' என்று நமது மிஷனெறிகள் பறைசாற்றி வருகின்றனர்.

இ. அரசு சலுகை கிடைக்காது

கிறிஸ்தவப் பள்ளிக்கூடங்களில் படித்துக் கொண்டிருக்கிற சிறுவர்கள் தங்கள் கல்விக்கூடங்களில் படித்துக் கொண்டிருக்கிற சிறுவர்கள் தங்கள் எதிர்கால வாழ்வினை சிறப்பான முறையில் வழிநடத்திட நமது மிஷனெறிகள் அவர்களுக்கு மாலைப் பொழுதில் இயேசுநாதரின் போதனைகளைக் கொடுப்பது வழக்கம். ஜாண்சன் என்ற மிஷனெறி அனுதினம் போதனைக் கொடுத்து மாணவர்கள் பலரை ஆலய

ஆராதனைக்குக் கூட்டிச் சேர்த்தார். இவ்விதம் மக்கள் ஒழுங்காக ஆலயத்திற்குச் செல்வதைப் பொறுக்காத, எல்.ஐ.சி. அலுவலர் ஒருவர் மாணவர்களையும், பெற்றோரையும் பயமுறுத்தினார். இயேசுநாதரைப் பின்பற்றி வாழ்ந்தால் அரசு சலுகை ஒன்றும் உங்களுக்குக் கிடைக்காது எனக் கூறியதுடன், மிஷனெறியையும் மிரட்டினர். அதனால் மாணவர்கள் ஆலயம் செல்வதை நிறுத்திவிட்டனர். அவர்களிடம் உண்மையை எடுத்துக் கூறி மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருகின்றனர். இதற்கு மிஷனெறிகள் கொள்ளும் இடைவிடா முயற்சியே காரணமாகும். இத்தகைய ஆதிவாசிகள் மத்தியிலிருந்து இன்று ஊழியக்காரர்கள் எழும்பி மலைப் பகுதிகளை இயேசுவின் இராஜ்ஜியமாக மாற்றி வருகிறார்கள்.

ஈ. ஆலயம் தீயிடப்படல்

மலைப்பகுதிகளில் வாழும் கிறிஸ்தவர்களின் சாட்சியற்ற வாழ்க்கை நிலைகளும் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியத்தைப் பாதித்தது. ஒருமுறை கல்ராயன் மலையின் அடிவாரத்திலுள்ள ஓர் இடத்தில் கத்தோலிக்கக் கிறிஸ்தவர் ஒருவரால் ஆதிவாசிகளுக்கு ஒரு பிரச்சனை ஏற்பட்டது. சிலுவையைத் தாங்கி நிற்கும் ஆலயத்தின் அங்கத்தினரால் பிரச்சனை ஏற்பட்டதால், அவ்வாறான சிலுவையை தாங்கி நிற்கும் சபையைச் சார்ந்தவர்கள் அனைவரும் தங்களுக்கு விரோதிகள் என்ற முடிவுக்கு ஆதிவாசிகள் வந்தனர். உடனே மலைகளுக்குள் நுழைந்து பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் அழகிய ஆலயங்களைத் தீயிட்டு எரித்தார்கள். சிலுவைகளை உடைத்தார்கள், மிஷனெறிகளைக் கொலை செய்வோம் என மிரட்டினார்கள். நிலைமை மிகவும் மோசமானது. அருட்பணியாளர்கள் ஆங்காங்கே சிதறி ஓடி தப்பினார்கள். உண்மையில் குறிப்பிட்ட அப்பிரச்சனைக்கு மிஷனெறிகளோ மலை விசுவாசிகளோ காரணம் அல்ல. இதனை அம்மக்களுக்கு விளக்கியுரைக்க முடியாத நிலையே அங்குள்ளது. இத்தகைய பயங்கரச் சூழலிலும் மிஷனெறிகள் ஊழியம் செய்வது பாராட்டுதலுக்குரியது. நமது ஜெபங்களே அவர்களைத் தாங்கட்டும்.

உ. கிறிஸ்தவப் பள்ளிக்கு அனுப்பாதீர்கள்

தேவராஜ்யப் பணியின் எதிர்ப்பாளர்கள் மூலமும் பல துன்பங்கள் ஏற்படுகின்றன. மலைமக்கள் நாகரீகமடைவது, கல்விகற்பது, ஆலயம் செல்வது போன்றனவற்றை எதிர்ப்பாளர்கள் பலவிதங்களில் எதிர்த்தனர். அவர்கள் கூட்டமாக மலைமக்களிடம், "நாமிருக்கையில், கன்னியாகுமரிக் கிறிஸ்தவர்கள் வந்து மலைவாழ் மக்களை மதம் மாற்றுவதற்காகப் பள்ளிக்கூடம் நடத்துவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது" என்ற

கூறி, எதிர்த் திட்டம் தீட்டினார்கள். 1984-ஆம் ஆண்டு ஜூன் மாதம் சேராப்பட்டு பள்ளியில் படித்து வந்த 12 மாணவர்களின் பெற்றோர்களிடம் போய், "உங்கள் பிள்ளைகளைக் கிறிஸ்தவப் பள்ளிக்கு அனுப்பாதீர்கள்" என்று கூறினார்கள். மேலும் அப்பிள்ளைகளின் மாற்றுச் சான்றிதழைப் (T.C) பெற்றுத் தந்தால், நாங்கள் நடத்துகிற விடுதியில் தங்கவைத்துப் படிக்க வைப்பதாகவும் கூறினர். அப்பெற்றோர் அக்கயவர்களின் பேச்சை நம்பி மாற்றுச் சான்றிதழ் பெறச் சென்றனர்.

அச்சூழலில் அப்பெற்றோர்களிடம் பிள்ளைகளின் புத்தகச் செலவுக்காக ரூ. 300/- மற்றும் பயணச் செலவிற்குள்ள ரூபாயையும் தேவ ராஜ்ஜிய எதிர்ப்பாளர்கள் கேட்டனர். உடனே பெற்றோர்கள் கோபமுற்று, "இயேசு சுவாமி பள்ளியில் சேர எங்களுக்குச் செலவில்லை, எங்கள் பிள்ளைகள் இங்கேயேப் படிக்கட்டும்" என்று கூறி எதிர்ப்பாளர்களை அனுப்பி விட்டனர்.

ஊ. ஓராயிரம் எலியாககள் எழும்புவார்கள்

கிறிஸ்தவ சமயப் பகைவர்கள் மிஷனெறி எலியாஸ் அவர்களின் சீர்திருத்தத்திற்கு எதிராகப் பல சதித்திட்டங்கள் செய்யத் தயாரானார்கள். முதலாவதாக எலியாசின் மனைவி, திருமதி. நவமணி அன்னபாய் அவர்கள் பள்ளியில் மதப் போதகம் செய்வதாக அரசுக்குப் புகார் கொடுத்தார்கள். அதன்மூலம் அன்னார் தூரமான இடத்திற்கு வேலை மாற்றம் அடைந்தார்கள். மேலும் எலியாசிடம், "இம்மலையில் நீ இயேசுநாதரை கூறாதே என எச்சரிக்கிறோம். மீறினால் உன்னைக் கொலை செய்வோம். குமரி மாவட்டம் மண்டைக்காட்டில் நடந்ததை விடவும் பெரிய சம்பவங்கள் இங்கு நடக்கும்" என்றனர். அதற்கு எலியாஸ் "இயேசுவின் அன்பை இங்குக் கூறுவது எனது அழைப்பு. அவரைப் பற்றிக் கூறாமலிருக்க முடியாது. ஆனால் நான் யாரையும் கட்டாயப்படுத்திக் கிறிஸ்தவராக்கவில்லை. ஒரு எலியாசை நீங்கள் கொன்றால், ஓராயிரம் எலியாசுகள் எழும்புவார்கள். இது வேதம் கூறும் கருத்தும் உண்மையும், சபையின் சரித்திரமுமாகும்" என்று ஆவேகமாகப் பதிலளித்தார். இதைக் கேட்டக் கூட்டத்தினர் மேலும் ஆவேசப்பட்டுத் திட்டமிட்டனர்.

எங்கள் கண்களைத் திறந்தார்

கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் பலர் ஒன்று சேர்ந்து சேராப்பட்டு ஆலயத்தின் அருகேயுள்ள மாற்றார் பூமியில் கூடாரம் அமைத்து அங்கேயே தங்கி வீடு வீடாகப் போய் எதிர்ப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். சத்தமாக ஒலிப்பெருக்கியை ஆராதனையைத் தடை செய்யும் நோக்கில்

இயக்கினார்கள். இறுதியாக மலை மக்கள் சிலரையும் சேர்த்து அவ் எதிர்ப்பாளர்கள் "பெரிய வாத்தியார் (போதகர் எலியாசை மலைமக்கள் பெரிய வாத்தியார் என்றே அழைப்பார்) பள்ளி நடத்தி மதம் மாற்றுகிறார். அவரை விரட்டுவோம்" என்று மக்களிடம் கூறினார்கள். ஆனால் மலை மக்களோ அதை நம்பவில்லை. எதிர்ப்பாளர்களுக்கு மறுமொழியாக, "இவ்வளவு காலம் உங்களுக்கு வராத அக்கறை, இப்போது எப்படி வந்தது? பெரிய வாத்தியார் எங்கள் கண்களையும் எங்கள் பிள்ளைகளது கண்களையும் திறந்தார். நோயினால் கஷ்டப்படும்போது மருந்து தந்தார். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார். எங்கள் உயிரைக் காப்பாற்றினார். அவரைக் குறை கூற உங்களுக்கு தகுதியில்லை" என்று தீர்க்கமாய் கூறினார்கள். அம்மக்களின் பேச்சினைக் கேட்ட மாத்திரத்தில் எதிர்ப்பாளர்கள் மிரண்டுபோய், "கடவுள் சக்தி பெரிய வாத்தியாரோடு இருக்கிறது" என்று கூறி அங்கிருந்து சென்று விட்டார்கள். சுமார் நான்கு வருடங்கள் இவ்விதம் கடுந் துன்பங்களைக் கொடுத்து வந்தனர். எனினும் நமது மிஷனெறிகள் எதிர்வார்த்தைப் பேசாமல் அன்பாக சுவிசேஷத்தைக் கூறி மக்கள் பணி ஆற்றி வந்தனர். உயிர்த்தெழுதலின் சுவையை நாம் எந்த அளவுக்கு அனுபவித்திருக்கிறோம் என்பதைப் பொறுத்தே அதை மற்றவர்களுக்குக் கொடுக்க முடியும்.

ஐ. மிஷனெறி ரவிராஜன் தாக்கப்பட்டார்

ஏற்காடு மலையிலுள்ள கொளகூர் என்னும் பணித்தளத்தில் ரவிராஜன் என்ற மிஷனெறி குடும்பமாய்த் தங்கி அருட்பணி ஆற்றி வந்தார். அச்சூழலில் திடீரென ஒருநாள் வெளியிடங்களிலுள்ள எதிர்ப்பாளர்கள் பலர்க் கூட்டமாக அங்கு சென்று ஆலயமணி அடிக்கவும், ஆராதனை நடத்தவும் தடை செய்ததோடு ஆலயம் மற்றும் ஊழியர் இல்லத்தை உடைத்தனர். 15-04-1993-ஆம் நாள் மிஷனெறியையும் அவருடன் இருந்த இரு விசுவாசிகளையும் தாக்கினார்கள். 19-04-1993-ஆம் நாள் மிஷனெறியையும் அவரது குடும்பத்தினரையும் கொலை செய்ய பயங்கர ஆயுதங்களுடன் வந்தனர். ஆனால் மிஷனெறியும் அவர் மனைவியும் தங்கள் பிள்ளைகளைத் தூக்கிக் கொண்டு இரவோடு இரவாக காரிருள் சூழ்ந்த காட்டிற்குள் மறைந்தார்கள். மிஷனெறியைத் தேடிப் பார்த்தக் கும்பல் கண்டுபிடிக்க முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பியது.

1993 ஜூன் மாதம் தலைமை மிஷனெறி எலியாசும், பொருளாளர் திரு. ஸ்டாலின் சாமுவேல் அவர்களும் அப்பணித்தளம் சென்றனர். அதைக் கேள்விப்பட்ட எதிர்ப்பாளர்கள் பணித்தளத்திலுள்

மேலவர்களைப் போக விடாமல் தடுத்தனர். பின்னர் இரு பிரிவினரும் பேசி சமாதானம் ஏற்பட்டது.

அதற்குப் பின் ஆலயத்திற்கு மின் இணைப்புக் கொடுக்கத் தடை செய்தனர். இத்தனை எதிர்ப்புகளின் மத்தியிலும் சவுந்தரராஜன், செந்தில்குமார், டேவிட் சித்தையன் ஆகிய மிஷனெறிகள் அப்பணித் தளத்தில் தங்கியிருந்து ஊழியம் செய்ய தங்களை ஒப்படைத்துள்ளார்கள். "வெண்கலக் கதவுகளை உடைத்து, இரும்பு தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங் களையும் ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன்" (எசாயா 45 : 4) என்ற ஆண்டவர் இமைப்பொழுதும் தம் பிள்ளைகளைக் கைவிடவில்லை.

உலக வரலாற்றில் சாதகமான சூழ்நிலைகளை விட பாதகமான சூழ்நிலைகளில்தான் கிறிஸ்தவம் வேகமாக வளர்ந்துள்ளது.

ஐ. தீயோனின் செயல்பாடு

ஆதிவாசி மக்கள் இருள் நிறைந்த பகுதிகளில் வாழ்வதால் பிசாசானவன் அவர்களின் மனதையும் இருதயத்தையும் குருடாக்கி விட்டான். கிளாக்காடு பணித்தளத்தில் விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியங்கள் சிறப்பாக நடைபெற்று வந்தது. பல மாணவர்கள் மகிழ்ச்சியோடு வந்து கலந்து கொண்டனர். அங்கு வந்த ஒரு மாணவனுடைய தகப்பனாரின் வாயிலும் வயிற்றிலும் புண் தோன்றியிருந்தது. அத் தகப்பனாரிடம் அவர்களது தெய்வம் ஒருநாள் தோன்றி "உனது மகன் ஏசு சாமியைப் படிப்பதால் உனக்கு இப்புண் வந்தது. மலைச் சாமிகளுக்கு ஏசு சாமியைப் பிடிக்காது" என்று கூறியதாம். அதைக் கேட்ட அவ்வூரார், பிள்ளைகளை விடுமுறை வேதாகமப் பள்ளிக்கு அனுப்பவில்லை.

ஒ. விசுவாசிகளுக்குத் துன்பங்கள்

மலை விசுவாசிகள் பலர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு அறிக்கை செய்கின்றனர். இவர்களில் சிலரைப் பிசாசானவன் கொடுமையாகச் சோதிக்கிறான். அவர்கள் வளர்க்கும் கால்நடைகள் சாகின்றன, வியாதியால் பலர் பல்வேறு துன்பங்களை அனுபவிக்கின்றனர். ஒரு சில குடும்பங்களில் மனைவிமார் தங்கள் கணவன்களை விட்டுவிட்டு ஓடுகிறார்கள். வேறுசில குடும்பங்களில் கணவன்மார் தங்கள் மனைவிகளை விட்டுவிட்டு ஓடுகிறார்கள். இயேசுநாதரை அவர்கள் வணங்குவதால்தான் அவர்கள் குல தெய்வம் மேற்கூறிய துன்பங்களைக் கொடுக்கிறது என்று கூறி, அவர்களது விசுவாசத்தை சோர்வடையச்

செய்கிறார்கள். இத்தகைய நெருக்குதல்களினால் சில பணித்தளங்களில் மிஷனெறிகள் செல்ல வேண்டாம் என்று கிராம மக்கள் அவர்களைத் தடுக்கிறார்கள்.

ஆண்டவரே! நீண்டதொரு வாழ்வை நான் விரும்பவில்லை உம்மைப் போன்ற ஒரு முழுமையான வாழ்வையே நான் வாழ்கிக்கிறேன் என்று சவாலாக பணிக்களம் புகும் மிஷனெறிகள் பலர் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவில் உள்ளனர். அவர்கள் தீயோனால் ஏற்படும் துன்பங்களை எதிர்த்து நின்று போராடி வெற்றி பெறுகிறார்கள். இதனால் சாத்தானின் கோட்டைகள் தகர்க்கப்படுகின்றன. கிறிஸ்துவின் இராஜ்ஜியம் மலைகள்தோறும் நிறுவப்படுகின்றது. "சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ள உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன்" என்று வாக்குக்கூறிய சர்வவல்லக் கடவுள் மிஷனெறிகளோடு இருந்து அந்தகாரத்தை எதிர்த்துப் போராடி வெற்றி பெற உதவுகிறார். எத்தனையோ பாடுகள், துன்பங்கள் வந்தாலும் பவுல் தான் தெரிந்துகொண்ட பணியிலிருந்து பின் வலிக்கவே இல்லை.

4. இந்திய அருட்பணி கூட்டமைப்பு (Indian Missions Associations)

"இயேசுகிறிஸ்து நேற்று மரித்தார். இன்று உயிர்த்தெழுந்தார். நாளை வரப்போகிறார் என்பதை நினைத்தே வாழுகிறேன்" என்றார் மார்ட்டின் லூத்தர். இக்கூற்றினை அறியாத மக்களுக்கு அறியப்படுத்துவதே மிஷனெறி சங்கங்களின் பணியாகும். இந்தியத் திருநாடு பலவித சூழல்களில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. சாதிய ஆதிக்கம், சமய ஆதிக்கங்கள் மக்களை மேலும் அடிமைப்படுத்திக் கொண்டிருக்கின்றன. நற்செய்திக்கு எதிராக நெருக்கடிகள் அதிகம் எழுந்துள்ளன. கிறிஸ்தவ ஊழியர்கள் அடிக்கப்படுவதும், கொல்லப்படுவதும், எரிக்கப்படுவதும் சாதாரணமாகி விட்டது. இவைகளை எங்கேயோ கேட்டோம் என்பதை விட வாசல் அண்டைக்கே வந்துவிட்டன என்பதே உண்மை. இந்நிலையில் அனைத்து மிஷனெறி சங்கங்களையும் ஒன்றிணைத்து ஐ.எம்.ஏ. என்ற அமைப்பை ஐ.இ.எம். தலைவர்கள் முன்னின்று தொடங்கினார்கள். அவ்வியக்கத்துடன் உறவு வைத்துக் கொள்வது நல்லது என்று பேராய சுவிசேஷ ஜெபக்குழுவும் கருதியது. எனவே 1983 முதல் பேராய சுவிசேஷ ஜெபக்குழு அவ்வமைப்புடன் அங்கத்துவத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இச்சங்கம் சிலவேளைகளில் ஆலயங்கள் கட்டவும், மிஷனெறிகளுக்கு ஊதியம் வழங்கவும் பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு நிதியுதவி செய்து ஜெபக்குழுவின் ஊழியத்தை ஊக்குவித்தும் வருகிறது.

இந்திய அருட்பணிக் கூட்டமைப்பானது தனக்கென சில சட்ட வரையறைகளைக் கொண்டுள்ளது. ஒரு மிஷனெறி இயக்கம் பணி செய்கின்ற இடத்தில், பிற இயக்கத்தினரை அனுமதிப்பதில்லை. மட்டுமல்லாமல் மிஷனெறிகளுக்கு சிறந்த பயிற்சியினையும் கொடுக்கிறார்கள். மிஷனெறி இயக்கங்களில் பணியாற்றும் இறைத் தொண்டர்களுக்கு எதிராளிகள் மூலம் துன்பங்கள், அடிகள், கொலை முயற்சிகள், கொலைகள் நேர்ந்தால் இக்கூட்டமைப்பு உடனடியாக அதனை அரசுக்குத் தெரிவித்து, நிவாரணம் தேடுகிறது. இயேசுவின் இராஜ்ஜியத்தை உறுதிப்படுத்தும் பணி மேற்கூறிய பலவிதங்களில் நடைபெற்று வருகின்றது.

திருச்சபை பெற்றெடுத்தது திருச்சபை விரிவுப்பணி இயக்கங்கள், திருச்சபை விரிவுப்பணி இயக்கங்கள் பெற்றெடுத்தது புதிய திருச்சபைகள். ஆக இச்சுழற்சிப்பணி இயக்கங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

"முன்னேறிச் செல்வேன் முன்னேறிச் செல்வேன்
இயேசுவின் போர் வீரனாய்
கீதங்கள் பாடி கீதங்கள் பாடி
வெற்றியின் கீதங்களே
சாத்தான் என்னை எதிர்த்தாலுமே
இயேசு மூலம் வெற்றி கொள்ளுவேன்
பாவம் என்னை ஆட்கொள்ளாமலே
இயேசு இரத்தம் கொண்டு ஜெயிப்பேன்"

சிந்தனைக்கு

1. இறை அழைப்பு என்பது அனைவருக்கும் உண்டு. அதற்குக் கீழ்ப்படிவோர் மிகச்சிலரே ஆவர். அவர்கள் உன்னத நோக்கத்திற்காகக் கீழ்ப்படிந்த மக்கள் கூட்டத்தின் உறுப்பினர்களாகத் தங்களை ஆக்கிக் கொண்டனர்.

2. ஆவி மழை பொழிந்திட ஆத்தும அறுவடைப் பணி சில இடங்களில் வேகமாகவும், சில இடங்களில் தளர்வாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நீங்களும் இப்பணியில் ஏதேனும் ஒரு விதத்தில் இணைதல் வேண்டும். அது காலத்தின் கட்டாயமும் ஆகும்.

3. இறை ஊழியத்தைச் செய்யும், இறை ஊழியத்திற்காகக் கொடுக்கும், இறை ஊழியத்திற்காக ஜெபிக்கும் ஒவ்வொருவரும் தனிவாழ்வு, பொதுவாழ்வு ஆகிய இரண்டிலும் பரிசுத்தத்தைக் கடைபிடிக்க வேண்டும். அப்பரிசுத்த வாழ்வு சமூகத்தில் அவர்களைச் சாட்சியாக நிறுத்தும்.

4. இந்தியாவில் இயேசுவின் செய்தியானது வெகு விரைவாக அறிவிக்கப்பட்டு வருகிறது. இப்பணியில் ஆர்வம் கொண்ட தனி குடும்பத்தினர் பலர், தனி ஊழியர் ஒருவரை ஆதரிக்க முன்வந்து விட்டார்கள். ஏன்? அவர்கள் உங்களை முந்தி விட்டார்கள். அவர்கள் தங்கள் விளை பலன்களின் ஒரு பகுதியை, தங்கள் ஊதியத்தின் ஒரு பகுதியை, வருவாயின் ஒரு பகுதியைப் பிரித்தெடுத்து மிஷனெறி ஊழியத்திற்காகக் கொடுத்து வருகிறார்கள். திருநெல்வேலி பேராயத்தார் இவ்வித முயற்சிகளில் ஈடுபட்டு கிறிஸ்துவின் அன்பினை அதிகமாக ருசித்து விட்டார்கள். அவர்களால் தாங்கப்படுகிற ஐ.எம்.எஸ். (Indian Missionary Society) என்னும் மிஷனெறி ஊழியமானது இன்று தனிப் பேராயங்களை உருவாக்கி விட்டது. நாமும் மிஷனெறி ஊழியங்களுக்காகக் கொடுத்து முன்மாதிரி ஆக வேண்டும்.

5. திரண்ட ஆஸ்திகளை சம்பாதித்துவைத்து, அதனை முறையாகப் பயன்படுத்தாமல் நித்தியத்தை இழந்து போனவர்கள் பலர் உண்டு. ஆனால் இருந்ததை எல்லாம் இழந்து, இல்லாதாரை வாழ்வித்து பரலோக பொக்கிஷத்தை வளப்படுத்தியோர்கள் பலர். உங்கள் சிந்தனை தேவனைப் பற்றியும் அழிந்து போகும் மக்களைப் பற்றியதாகவும் இருக்கட்டும்.

6. தேவ மனிதர்கள் அனைவரும் தங்களுக்கென்று நியமிக்கப்பட்ட சிலுவையினை மகிழ்ச்சியுடன் சுமந்து, தங்கள் கடமையை துன்பம், துக்கம், இக்கட்டு, வேதனை ஆகியவைகளின் மத்தியிலும் மனந்தளராது செய்து முடித்து வெற்றி பெற்றுள்ளனர். நீயும் ஏதேனும் ஒருவகையில் வெற்றி பெற வேண்டுமெனில் விலைக்கிரயம் செய்துதான் ஆக வேண்டும், அல்லாவிடில் வெற்றி உனக்கு எந்நாளும் எட்டாத கனிதான்.

7. இன்றைய ஊழியங்கள் பெரும்பாலும் கிறிஸ்தவர்கள் மத்தியிலேயே செய்யப்படுகின்றன. இதனால் கிறிஸ்துவை அறிந்த மக்களுக்குள்ளேயே மீண்டும் நற்செய்தி அறிவிக்கப்பட்டு, பல்வேறு சபைப் பிரிவுகள் உருவாகி வளர்கின்றன. ஆனால் காலமெல்லாம் காத்திருக்கும் நம் தாய்நாட்டு மக்களுக்கு இயேசு ஏனோ இன்னமும் ,காணக் கிடைக்காத தங்கமாகவே இருக்கிறார். இது யார் செய்த பிழையோ?

8. ஆண்டவர் நம் அனைவரையும் முழுமைக்கு நேராக அழைக்கிறார். அதுதான் அவர் எதிர்பார்க்கும் தரம். நம் வாழ்வை நாம் சீர்தூக்கிப் பார்ப்போம். ஆண்டவருடன் சீர்ப் பொருந்தி எஞ்சிய நாட்களில் தேவனுக்கென்று முழுமூச்சுடன் வாழ்வோம், உழைப்போம்.

9. நமக்கு முன் பல சவால்கள் உள்ளன. அவை இம் மண்ணில் அனைவருக்கும் நற்செய்தி சொல்ல வந்த மேனாட்டு மிஷனெறிகளின் தியாகங்கள். அவர்கள் சொந்த ஜனத்தை, பிறந்த மண்ணை மீண்டும் பார்த்ததே இல்லை. அவர்களின் கல்லறைகள் நாடெங்கிலும் நினைவுச் சின்னங்களாக உள்ளன. தங்கள் மனைவியருக்கும் பிள்ளைகளுக்கும் தாங்களே கல்லறைத்தோண்டி, அடக்க ஆராதனை நடத்தி புதைத்துள்ளனர். அவர்கள் சுமந்த சிலுவையினை நீயும் சுமக்க, அவர்கள் சிந்திய கண்ணீர் வேர்வைத் துளிகளை நீயும் வெளிப்படுத்த இறைவனின் அழைப்பு உன்னை நோக்கி வருகிறது.

10. தங்களுக்காக ஓடுகிறவர்கள் ஒன்றும் இல்லாதவர்களுக்காகவும் பங்குகளை அனுப்புவார்கள் என்றால் அனுப்புபவர்களும் குடும்பத்தினரும் வாழ்வார்கள். அவர்களைத் தேடி ஆசீர்வாதங்களும் ஓடிவரும்.

11. ஒரு புதிய பணித்தளத்திற்குள் நமது மிஷனெறிகளும், புதிய விசுவாசிகளும் ஊழியத்திற்காகச் செல்லும்போது, அங்கு அவர்கள்

கல்லெறி, அடி போன்ற பாடுகளையும் சில நேரங்களில் மரணத்தையும் சந்திக்க நேரிடுகிறது. இன்னும் இடம்விட்டு இடம் செல்வதால் தனிமையுணர்வு, வியாதிகள், மருத்துவ வசதிகளின்மை மழை, வெயில், காடுகள், முட்கள் போன்ற பல்வேறு சூழல்களையும் சாத்தானின் எதிர்ப்பினையும் சந்திக்க வேண்டியுள்ளது. இத்தகைய எதிர்ப்புகளை தேவன் சாதகமாக்கிக் கொடுக்க நாம் அனைவரும் ஜெபிக்க வேண்டும். இந்த ஜெபமும் இடைவிடாமல் ஏறெடுக்கப்பட வேண்டும்.

12. இந்நாட்களில், ஊழியத்தில் போட்டிகள் அதிகம் காணப்படுகின்றன. எங்கு பார்த்தாலும் பிரசங்கங்கள், போதனைகள், மாநாடுகள், முகாம்கள், எழுப்புதல் கூட்டங்கள் எனப் பல தரத்தன நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. ஆனால் போட்டியே இல்லாத ஊழியம் ஜெபம் மட்டுமே. இவ்வூழியத்தில் மட்டும்தான் திருச்சபை தோல்வியைத் தழுவி நிற்கிறது. இதனை விசுவாசிகள் உணர்ந்து மனதளவில் தீர்மானித்து தினமும் குறிப்பிட்ட மணிநேரம் ஜெபிக்க வேண்டும்.

13. பணத்தை சொந்தம் பாராட்டாதே, அது வேகமாகச் சென்றுவிடும். நாற்காலிகளை நம்பாதே, உட்காருகிறவர்கள் மாறிக் கொண்டே இருப்பார்கள். வீட்டை உரிமை கொண்டாடாதே ஒருநாள் வீட்டை விட்டே கொண்டு போகப்படுவாய். எனவே இறைவனை, இறைவன் படைத்த மக்களை சொந்தம் பாராட்டு. கடைசி மனிதன் இயேசுவை அறியும்வரை அவரை சொல்லிக் கொண்டேயிரு. அநேகரை நீதிக்குட்படுத்தும் நீ, ஒருநாள் கர்த்தரின் சமூகத்தில் நட்சத்திரத்தைப் போல் பிரகாசிப்பாய்.

14. உன் கண்முன் நீ காணும் பருவம், நீ மகிழ்ச்சி அடைந்து குதூகலம் கொள்ளும் முன் மாறிவிடும். ஒரு மலரின் இதழ் விரிந்து மூடுவதுபோல் அப்பருவம் உன்னை விட்டு வேகமாகப் புறாவைப் போல் ஓடிவிடும். எனவே உன்னைக் காத்து மீட்ட இயேசுநாதரைக் குறித்துப் பிறருக்கு அறிவிக்க, தக்க தருணம் இதுவே ஆகும்.

15. இந்தியரை நீதிக்குட்படுத்தும் இந்த மிஷனெறிப் பணியில் இதுவரை நீங்கள் பங்குகொள்ளாதிருப்பீர்கள் என்றால், இப்பொழுதே இப்பணியில் முன்வந்து சேருங்கள்.

***

பகுதி - மூன்று

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் டயரி

1907	-	ஜெசிமென் பிராண்ட் இந்தியா வருகை
1913 ஆகஸ்டு	-	ஈவ்லின் இந்தியா வருகை
15-06-1929	-	ஜெசிமென் பிராண்ட் காலமானார்
02-06-1959	-	கன்னியாகுமரி பேராயத் தோற்றம்
19-12-1959	-	பேராயர் ஐ.ஆர். ஹெச். ஞானதாசன் பொறுப்பேற்றார்.
31-07-1962	-	சுவிசேஷ ஜெபக்குழு உதயம்
30-08-1962	-	ஜெபக்குழுவிற்கு பெத்தேல்புரம் தபால் அலுவலகத்தில் சேமிப்புக் கணக்குத் தொடக்கம்
02-10-1962	-	ஊழிய கொடையாளர்களுக்கு நிதி வசூல் உண்டியல் கொடுக்கப்பட்டது.
07-02-1963	-	திரு. டி. எலியாஸ், திரு. எம். இராஜையன் தலைமையில் எட்டுபேர் மலைகளுக்குப் பயணம்.
20-07-1963	-	சுவிசேஷ ஜெபக்குழுவின் முதல் ஆண்டுவிழா கூடுகை
16-08-1963	-	பேராய சபை பரிபாலனக்குழு சுவிசேஷ ஜெபக்குழுவை அங்கீகரித்தது.
14-01-1964	-	தபால் அலுவலகச் சேமிப்பு நிதி பேராய அலுவலகத்திற்கு மாற்றப்பட்டது.
01-06-1964	-	தேசிய அருட்பணி சங்கத்தில் பணியாற்ற திரு. டி. எலியாஸ் மற்றும் திரு. பி இராஜையன் ஆகியோர் பணிக்களம் புறப்பட்டனர்.
19-07-1964	-	ஹில் காஸ்பல் மிஷன் ஊழியத்திற்காக திருவாளர்கள் எஸ். இரத்தினராஜ், ஆரோன், ஆர்ச்பால் தேவதாசன் ஆகியோர் அனுப்பப்பட்டனர்.
31-01-1969	-	திருமறையூர், இறையியல் கல்லூரியில் ஜெபக்குழு தோற்றம்.
01-06-1970	-	சீயோன்புரம் சபை முதல் மருத்துவ தாதியின் பொறுப்பை ஏற்றது.

31-03-1973 - பணிக்கள ஆய்வுக்குழு அமைக்கப்பட்டது.

06-05-1973 - பேராயர் சி. செல்வமணி பொறுப்பேற்றார்.

14-05-1973 - பணிக்கள ஆய்வுக்குழு காந்த மலைக்குச் சென்றது.

06-07-1973 - பிரதமப் பேராயர் ஐ.ஆர்.ஹெச். ஞானதாசன் காலமானார்.

10-09-1974 - பணிக்கள ஆய்வுக்குழு ஜாகீர் கல்வராயன் மலைக்குச் சென்றது.

18-12-1974 - ஈவ்லின் பிரான்ட் காலமானார்

14-01-1975 - அருட்பொழிவு பெறாதோர் தொண்டர் அமைப்பு மயிலாடியில் நிறுவப்பட்டது.

10-03-1975 - பணிக்கள ஆய்வுக்குழு அறிக்கை சமர்ப்பித்த நாள்

26-05-1975 - பணிக்கள ஆய்வுக்குழு குமரிமாவட்ட மலைப் பகுதிகளுக்குச் சென்றது.

09-10-1975 - சுவிசேஷ ஜெபக்குழுவின் முதல் முன்னேற்றப் பணியாளர் நியமிக்கப்பட்டார்.

11-08-1976 - கொத்தடிமைத்தனத்திலிருந்து கல்வராயன் மலைகள் விடுதலை அடைந்தன.

01-04-1977 - அருள்திரு. டி. எலியாஸ் என்.எம்.எஸ். இலிருந்து விலகல்.

17-06-1977 - பேராய சுவிசேஷ ஜெபக்குழு கல்வராயன் மலைக்கு அருள்திரு. டி. எலியாஸ் அவர்களை அனுப்பியது.

20-06-1977 - அருள்திரு. டி. எலியாஸ், தேக்கம்பட்டு பணித்தளத்தில் கால் பதித்தார்.

21-06-1977 - பணித்தளத்தில் இரவு பாடசாலைத் தொடங்கப்பட்டது.

07-08-1977 - திரு. எ. செல்வராஜ், திரு. கெ. ஆர். வில்லியம் ஆகியோர் கல்வராயன் மலையில் பணியாற்ற போய் சேர்ந்தனர்.

20-05-1978 - அத்தியட்சாதீன சுவிசேஷ ஜெபக்குழு என்ற புதிய பெயர் சூட்டப்பட்டது.

22-06-1978 - குமரி மாவட்டத்தில் பணித்தளம் ஆரம்பம்

27-04-1979 - மலை ஊழிய செய்தி இதழ்

23-09-1979 - சேர்வராயன் மலையில் ஜெபக்குழுவின் ஊழியம் தொடங்கப்பட்டது

11-12-1979 - பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் முதல் கிறிஸ்மஸ் மகிழுறவுக் கூடுகை

01-05-1980 – பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் பொறுப்பேற்றார்.

25-05-1980 – பெந்தேகோஸ்தே என்னும் திருநாள் முதல்முறையாக அத்தியட்சாதீன சுவிசேஷ ஜெபக்குழு நாளாக அனுசரிக்கப்பட்டது.

13-17 ஜனுவரி 1982 – ஜெபக்குழுவின் முதல் நற்செய்தி பெருவிழா நாகர்கோவில் அண்ணா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

21-05-1983 – பேராய சுவிசேஷ ஜெபக்குழுவிற்குத் தலைமை அலுவலகம் கட்டப்பட்டது.

05-08-1983 – சேராப்பட்டில் அலுவலகம் செயல்படத் தொடங்கியது.

18-12-1983 – சேராப்பட்டில் நல்ல மேய்ப்பன் மருத்துவமனை நிறுவப்பட்டது.

1985 – அருள்திரு. டி. எலியாஸ் அவர்களுக்கு யோக்பெல்லோ விருது கொடுக்கப்பட்டது.

01-03-1987 – கிருபை பெற்றவர் விருது திருமதி. அன்னபாய் எலியாஸ் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

24-08-1987 – கல்விக்குழு தோற்றம்

20-06-1988 – ஜெபக்குழுவின் வட்டாரப் பொறுப்பாளர்கள் நியமனம்

31-08-1988 – சென்னையில் ஜெபக்குழு உருவாகிய நாள்

04-09-1998 – மார்த்தாண்டத்தில் கிளை அலுவலகம் தொடங்கப்பட்டது.

10-06-1992 – வாலிபர் பிரிவு தொடக்கம்

04-07-1992 – கிறிஸ்தவ அருட்பணியாளர் பயிற்சி ஆரம்பம்

1992 ஆகஸ்ட் – அருட்பணி மலர் வெளிவரல்

03-02-1997 – பேராயர் எம்.ஐ.கேசரி பொறுப்பேற்றார்

07-02-1999 – சுவிசேஷ ஜெபக்குழுவின் நூல் நிலையம் ஆரம்பம்

07-08-1999 – சொத்துப் பரிபாலனக்குழு தோற்றம்

24-09-1999 – நலக்குழு ஆரம்பம்

18-07-2000 – சேராப்பட்டில் கிளை நூலகம் ஆரம்பம்

10-12-2000 – மதுரைக் கிளையின் முதல் ஊழியர் அர்ப்பணம்

16-09-2001 – பேராயர் ஜி. தேவகடாட்சம் பொறுப்பேற்றார்.

01-05-2002 – பொதுச் செயலராகப் போதகர் நியமனம்.

அருட்பணி களங்கள்

வரைபடம் - I
கல்வராயன் மலை



வரைபடம் - II
சேர்வராயன் (ஏற்காடு) மலை



2012 - [illegible]

1. [illegible]
2. திரு. [illegible]
3. திரு. [illegible]
4. திரு. [illegible]
5. திரு. [illegible]
6. திரு. [illegible]
7. திரு. [illegible]
8. அருள்திரு. [illegible]
9. திரு. [illegible]
10. செல்வி. [illegible]
11. திரு. [illegible]
12. அருள்திரு. [illegible]
13. செல்வி. [illegible]
14. திரு. [illegible]
15. திரு. எஸ். செல்வின் சாமுவேல்
16. திரு. ஜீ. சசிகுமார்
17. திரு. இ. தம்பராஜ்
18. திரு. எஸ். [illegible]
19. அருள்திரு வ. [illegible] நாயகம்
20. திரு. டி. ஸ்டாலின்
21. அருள்திரு. ஜி. [illegible]
22. திரு. சி. ஜான்சன்
23. திரு.எஸ். தங்கப்பன்
24. திரு. ஜி. ராபின் ஜான்
25. திரு. இரத்தினமணி
26. திரு. அருமைராஜ்
27. திரு. [illegible]
28. [illegible]
29. திரு. [illegible]
30. திரு. [illegible]
31. அருள்திரு. [illegible]
32. திரு. [illegible]
33. திரு. [illegible]
34. திரு. [illegible]
35. திரு. [illegible]
36. திரு. [illegible]
37. திரு. [illegible]
38. [illegible]
39. திரு. [illegible]
40. திருமதி. [illegible]
41. திரு. [illegible]
42. திரு. [illegible]
43. திருமதி. [illegible]
44. திரு. [illegible]
45. திரு. [illegible]
46. திரு. [illegible]
47. திருமதி. [illegible]
48. திரு. சி. [illegible]
49. திரு. டி. [illegible]
50. திரு. [illegible] ஜெயசீலன்
51. திருமதி. [illegible] ஜெயசீலன்
52. செல்வி. டி. ராணி

53. திரு. சி. சாலோமோன்
54. திரு. டி. பிரைசில்ஸ் ராஜ்
55. திரு. டி. ரசல்தாஸ்
56. திரு. சி. ஜாண் ஏசுவடியான்
57. திரு. பி. ஜெஸ்டின் ராஜ்
58. திரு. ஜாண்சன் அண்ணாமலை
59. திரு. என். குமாரசுவாமி
60. திரு. சூரி பால் சதா
61. திரு. ஜி. பிறைட்கிறிஸ்துதாஸ்
62. திருமதி. கிறேஸ்லெட் பால்
63. திரு. ஜெ. மார்டின் ஆசீர்வாதம்
64. திரு. ஆர். ஐசாயா
65. திரு. பி. ஆபிரகாம்
66. திரு. எ. டானியல் தீர்த்தன்
67. திரு. எஸ். பாஸ்கர் டானியல்
68. திரு. எ.டி.எ.ஆர். பாண்டியன்
69. திரு. எ. ஜாண் கார்த்திகேயன்
70. திரு. ஆர். ஏழுமலை
71. திரு. எம். மார்ஷல் முருகேசன்
72. திரு. எம். ஜஸ்டின் ஜெயசேகர்
73. திரு. பி. மனோகரன்
74. திரு. ஜெ. ஹைச். மார்டின் லூதர்
75. திரு. பி. டேவிட் கோவிந்தராஜ்
76. திரு. ஆர். பிரான்சிஸ்
77. செல்வி. ஒய். லலிதா
78. திரு. ஜெ. ஜாண்விக்டர்
79. திரு. ஆர். எட்வின்ராஜ்
80. திரு. ஆர். வின்செண்ட் லட்சுமணன்
81. திரு. கெ. கிருஷ்ணமூர்த்தி
82. திரு. எ. குமாரசுவாமி
83. திரு. எம். பாக்கியா ஜாண் பிறைட்
84. திரு. வி. ஜெயசிங் பர்ணபாஸ்
85. திருமதி. இரத்தினபாய் பாலையன்
86. திரு. பி. அருள்ஞானதாஸ்
87. திருமதி. சுசீலா பாய்
88. திருமதி. தங்கா பாலஸ்
89. திரு. சி. இராஜேந்திரன்
90. செல்வி. மீனாட்சி
91. திரு. ஒய். யோவாப் சிங்
92. திரு. ஆர். மெய்யன்
93. திரு. எஸ். அல்போன்ஸ்
94. திரு. எ. சத்தியதாஸ்
95. திரு. ஆர். ஜோசப் வில்சன்
96. திரு. எஸ். ஜாண்
97. திரு. எ. எஸ். மரியதாஸ்
98. செல்வி. ஒய். ஞானகீதா
99. செல்வி. பி. மல்லிகா
100. திரு. ஐ. சுஜிகுமார்
101. திருமதி. குளோறி எட்வின் ஆபிரகாம்
102. திருமதி. வி. தங்கம்மா
103. திருமதி. லதா புஷ்பபாய்
104. திருமதி. இராஜேஸ்வரி கால்டுவெல்
105. திரு. எ. எஸ். அருள்தாஸ்
106. திரு. ஆர். டேவிட் சாமுவேல்
107. திரு. எஸ். சாம் ஐசன்
108. திருமதி. எ. அன்னபாக்கியபாய்

109. டாக்டர். ஜெ. வில்சன்
110. திரு. பால் வி. மாயவன்
111. திரு. எ. ஸ்டீபன் அருணாநிதி
112. திருமதி. ஞானொளி ஜெஸ்லெட்
113. திரு. ஆர். கிறிஸ்டல் ஜெயசீலன்
114. திரு. பி. ராஜா
115. திரு. ரூபா எம். ரூபன்
116. திரு. சி. மார்ஷல் மணி
117. திரு. ஜெறி. அண்ணாமலை
118. திரு. எம். குழந்தை
119. செல்வி. ஆர். மேழ்சி
120. அருள்திரு. ஆர். பிரேமா ராஜேஸ்வரி ஜான்சன்
121. திருமதி. எமிலெட்
122. திரு. டி. செல்வராஜ்
123. திரு. ஜ. மார்ட்டின் பெர்ல்
124. திரு. சி. ரமேஷ்குமார்
125. திருமதி. ரோஸ்லெட் ராஜையன்
126. திரு. பி. கிறிஸ்துதாஸ்
127. திரு. எ. ஞானபிரகாசம்
128. திரு. இ. ஸ்டீபன்
129. திரு. ஆர். கிறிஸ்டோபர்
130. திரு. கெ. பெருமாள்
131. திரு. ஜெ. ஆனந்தராஜ்
132. திருமதி. ஹெப்சிபா ஆனந்த்
133. திரு. டபிள்யூ. டொனால்ட் ஸ்டாலின்
134. திரு. சி. ஸ்டீபன் மாத்தையன்
135. திரு. எஸ். செந்தில்குமார்
136. திரு. ஜெ. பால்தாஸ்
137. திரு. ஜாப். ஜஸ்டின்
138. திரு. கெ. டேவிட் ஜான்சன்
139. திரு. எஸ். கிறிஸ்டோபர் ஜெயதிலகன்
140. திருமதி. மீனாள் செல்வி பிரைட்
141. திரு. சி. இம்மானுவேல் ராமன்
142. திரு. ஆர். ஜான்சன்
143. திரு. ஜெறி சாலோமோன்
144. திரு. எஸ். காட்வின் டொப்லிஸ்
145. திரு. பி. டேவிட் ஜோ
146. ஜெறி அருமாரன்
147. திரு. எம். சேட்டு
148. திரு. சி. இளங்கோவன்
149. திரு. கெ. எபநேசர் ஏழுமலை
150. திருமதி. எல். ஜாயிஸ்
151. திருமதி. அகி ஜான்சன்
152. திருமதி. மேழ்சி ஜாண்
153. செல்வி. பி. அசோதா
154. திரு. எஸ். செல்வம்
155. திரு. எ. சித்தையன்
156. திரு. சி. டேவிட் மனோகர்
157. திரு. எ. பால்மணி
158. திரு. சி. தங்கதுரை
159. திரு. பி.எஸ். பிராங்ளின்
160. திரு. டி. மெயின்மர்
161. திருமதி. டெல்சிபாய்
162. திரு. ஹெச். எஸ். ராஜ்குமார்
163. திரு. ஜெ. ஜான்சகின்

164. திரு. ஆர். ராஜா ஸ்டாலின்
165. திரு. எஸ். ஜஸ்டின் புஷ்பராஜ்
166. திருமதி. எம். அமுதா சுஹிபாய்
167. திரு. டி. ரவி
168. திரு. கெ. ராஜாராஜ்
169. திரு. என். விஜயகுமார்
170. செல்வி. பி. ரஜிலா
171. திரு. சி. ஜாண் முனுசாமி
172. திரு. ற்றி. ஐசக் ஆனந்தகுமார்
173. திரு. எஸ். கிங்ஸ்லிலிபின் ஜோயல்
174. திருமதி. புஷ்பா ஜாண்சன்
175. திரு. எஸ். ஆரோக்கியதாஸ்
176. செல்வி. மெர்லின் தனக்கொடி
177. திரு. ஜெ. ஜாண் கனகராஜ்
178. திரு. எம்.எஸ். ஆல்பர்ட் இம்மானுவேல்
179. திரு. ஜெ. சி. அருள்குமார்
180. திரு. எஸ். ஆனந்தன்
181. திரு. எ. அற்புதம்
182. திரு. எஸ். தங்கராஜி
183. திரு. எஸ். ஜெயராம் ஜெபவீரன்
184. திரு. எ. டேவிட் பாலகிருஷ்ணன்
185. திரு. ஜெ. பால் ஐசக்
186. திரு. பி. வல்சலம்
187. திருமதி. செய்ஸிபாய்
188. திருமதி. பி. ஷீபா ஜேயசிங்
189. திருமதி. கிறிஸ்டி இராஜேந்திரன்
190. திருமதி. எஸ். கிறிஸ்டல் விஜிலா
191. திருமதி. ஜெ. சுகிஞானம்மாள் கிளாடிஸ்
192. திருமதி. பிளாறன்ஸ் பவுனம்மாள்
193. திருமதி. சாந்தி எட்வின்
194. திருமதி. பாரதி ஏழுமலை
195. திருமதி. ஜோஸ்லின் மஞ்சுளா
196. திருமதி. அலமேல் பியூலா
197. திருமதி. எஸ். குளோறி
198. திருமதி. ஐடாபெல் சுஜி
199. திருமதி. ஹெலன் சுந்தர பியூலா
200. திருமதி. ற்றி. லதா ஞானஜாய்
201. திரு. ற்றி. டேவிட் அண்ணாமலை
202. திரு. எம். பால் குழந்தை
203. திருமதி. எலிசபெத் எலிசா
204. செல்வி. எஸ். ஷீபா
205. திரு. எம். ஜார்ஜ்
206. திரு. ஜி. ஜெபசிங் ஜோஸ்
207. திரு. என். ஆனந்தராஜ்
208. திரு. இ. சந்திரமொழி
209. திரு. ஆர். எலிசா ஏழுமலை
210. திரு. வி. சாலோமோன் செல்வம்
211. திரு. ஆர். எட்வின் ராஜ்
212. திரு. பகவான்தாஸ் சேனாபதி
213. திரு. எ. கண்ணுசாமி
214. திரு. ஜெ.இ. முரளிசங்கர்
215. திரு. எ. வின்சென்று
216. திரு. டி. சுந்தரதாஸ்
217. திருமதி. ஏஞ்சல் சுவீட்டி
218. திருமதி. ஹெப்சிபா வின்சென்ட்
219. திரு. பி. லாறன்ஸ்

220. செல்வி. ஆர். ஜோஸ்ட் அதா
221. செல்வி. என். நளினாகுமாரி
222. செல்வி. ஜி. வனிதா ஜூலியா
223. செல்வி. ஐ. அமித்திரா
224. செல்வி. கெ. ஜெயகுமாரி
225. செல்வி சி. ஏஞ்செல்லா ஜோஸ்லின்
226. திரு. ற்றி. இராஜன்
227. திரு. எஸ். பெனின் சாமுவேல்
228. திரு. ஐய். பிரவின் அதாக்கர்
229. திரு. எஸ். மேசியா செல்வன்
230. திரு. பி. சாம்ராஜ்
231. திரு. தேவதாஸ்
232. திரு. பிரபாஷ் சந்திரகாந்தா
233. திரு. எஸ். செல்வராஜ்
234. திரு. சின்னையா அருமைநாயகம்
235. திரு. எஸ். ஆரோக்கியதாஸ்
236. திருமதி. சலீலா பாய்
237. திருமதி. மேக்தலின் பிரசீலா
238. திரு. பி.கெ. பிறின்ஸ்
239. திரு. ராபின் வில்பிரட்
240. திரு. டி ஜெயசேகரன்
241. திருமதி. கரோலின் தாமஸ் பீட்டர்
242. திருமதி. பிரசீலியா மீனாட்சி
243. திரு. கெ. தேவராஜன்
244. திரு. எஸ். விக்டர் ஜெயராஜ்
245. திரு. எம். ஆர். ஜோதி
246. திரு. வேதீமார்க்கு
247. திரு. சாமுவேல் கிருபாகரன்
248. திருமதி. அந்தோணியம்மாள்
249. திருமதி. லலிதாகுமாரி
250. திரு. இரத்தினம் ஜெயசேகர்
251. திரு. பி. ஏனோக்
252. திருமதி. ஞானகீதா
253. திருமதி. இராஜேஸ்வரி
254. திரு. சி.எ. ரமேஷ்
255. திரு. பவுல்தாஸ்
256. திரு. அமல்ராஜ்
257. திரு. ஜெ. தாமஸ் சம்பத்குமார்
258. திருமதி. மேபல் செல்வி பிறைட்
259. திரு. ஜெ. சுகுமாரன்
260. திரு. மைனர் மோசஸ்
261. திரு. எஸ்.கெ. பீட்டர் ராஜாராம்

262. அருள்திரு. கெ. ஆர். வில்லியம்
263. திரு. ஜி. கிறிஸ்டோபர் டானியல்
264. திரு. ஜி. சாம்கில்பார்ட் ராஜன்
265. திரு. ஜெ. ரமேஷ்
266. திரு. எஸ். பீட்டர் சிலுவை
267. திரு. டி. ஆல்பின்

268. திரு. ற்றி. ஜார்ஜ்
269. திரு. எஸ். தேவசிகாமணி
270. திரு. டி.ஜெ. விக்டர் நாயகம்
271. திரு. எ. ஸ்டான்லி ஜோண்ஸ்
272. திரு. கே.பி.எ. பால்ராஜ்
273. திரு. பி. பிரஸ்டின் ஜோஸ்
274. திரு. ஆர். கிறிஸ்டல் ஜெயசேகரன்
275. திரு. எ. ரெஞ்சித்
276. திரு. ஆர். சாமுவேல் வேதசிங்

துணை நூற்பட்டியல்

அனந்தபுரம், **கிருஷ்ணமூர்த்தி, கோ.**, *கல்ராயன் மலை வாழ் மக்கள் வரலாறு*, தென்னார்க்காடு மாவட்ட வெளியீடு, கடலூர், ஜூலை, 1992.

தர்ஸ்டன் எட்கர் (ஆங்கிலம்) (தமிழில் **க. இரத்னம்**) *தென்னிந்திய குலங்களும் குடிகளும்* (தொகுதி - ஒன்று) தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதல் பதிப்பு - 1986

தென்னிந்திய குலங்களும் குடிகளும் (தொகுதி - இரண்டு), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதல் பதிப்பு - 1987.

தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் (தொகுதி - நான்கு), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதல் பதிப்பு - 1993.

எட்வின் சோபிதா, ம. *மலையிலோர் மனித விளக்கு*, எம்.ஆர். வெளியீடு, அனந்தநாடார்குடி, குமரி மாவட்டம் - 629 201 முதல் பதிப்பு - 2002.

ஐசக் அருள்தாஸ், ஜி. *தென் எல்லைக் காவலன் நேசமணி*, நேசமணி தமிழர் பதிப்பகம், நாகர்கோவில் - 629 001, முதல் பதிப்பு - 2002

கிறிஸ்துதாஸ், ஜி., *பாதச்சுவடுகள்*, தேவசகாயம் தெரு, நாகர்கோவில் - 629 001 முதல்பதிப்பு - ஜனவரி 2005

டேவிட் இளங்கோவன், எ. *கொல்லிமலை மிசினரி ஜெசிமென் பிராண்ட்*, கொல்லிமலை அருட்பணி ஜெப ஐக்கியம் வெளியீடு, ஏப்ரல் - 1990.

மலர்கள்

1. *சுதேச மிஷனறிசங்க நூற்றாண்டு சிறப்பு வெளியீடு* (1900-2000) குமரிப்பேராயம் - 2001

2. நல்ல மேய்ப்பன் ஆரம்பப்பள்ளி புதியக் கட்டடத் திறப்பு விழா சிறப்பு மலர், பேராய சுவிசேஷ ஜெபக்குழு வெளியீடு.

3. நாகர்கோவில் கல்பார சபை ஆண்டறிக்கைகள், கல்பாசபை வெளியீடு.

4. பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் ஆண்டறிக்கைகள் பேராய சுவிசேஷ ஜெபக்குழு வெளியீடு.

மாத இதழ்கள்

1. *அருட்பணி மலர்,* பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் வெளியீடு, சி.எஸ்.ஐ. பேராயர் வீட்டு வளாகம், நாகர்கோவில் - 1.

2. *அருட்பணி,* இந்திய அருட்பணி இயக்க வெளியீடு, அண்ணாநகர் மேற்கு, சென்னை - 600 040.

3. *அறைகூவல்,* நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு வெளியீடு, அம்பத்தூர், சென்னை - 53.

4. *வளரும் விண்ணரசு,* இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன் வெளியீடு, பல்கலைநகர், மதுரை - 20.

5. *விஷ்வவாணி சமர்ப்பண் (தமிழ்),* விஷ்வவாணி வெளியீடு, அண்ணாநகர், சென்னை - 40.

குறிப்புகள்

பேராய சுவிசேஷ ஜெபக்குழுவின் செயல்பாட்டுத் தீர்மானங்கள்

நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ், நாகர்கோவில்.

* அறிவர் ஜி. ஐசக் அருள்தாஸ் கல்குளம் வட்டம் பூவன்கோட்டில் தோன்றியவர்.
* திரு. எ. காபிரியேல், திருமதி. தெரசம்மாள் ஆகியோரின் புதல்வர்.
* 1994 முதல் நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரியில் விரிவுரையாளர்.
* நாட்டுப்புறப் பாடல்களில் போட்டி வேதக்கதைப் பாடல்கள் பற்றிய ஆய்வில் பிஎச்.டி., பட்டம் பெற்றவர்.
* தென் எல்லைக்காவலன் நேசமணி என்னும் நூலின் ஆசிரியர்.
* எம்.ஃபில்., பிஎச்.டி., பட்ட ஆய்வு மாணவர்களுக்கு வழிகாட்டி.
* குமரி மாவட்ட கிறிஸ்தவ நாட்டுப்புற வழக்காறு குறித்த ஆய்வுக்காகப் பல்கலைக்கழக நிதி நல் குழுவின் உதவி பெற்றவர்.

பேராய சுவிசேஷ ஜெபக்குழு அருள்நாதரின் வருகை வரையிலும் ஆவியான வரின் ஆற்றல் மற்றும் வழிகாட்டுதலின்படி மக்களை, மனிதர்களாக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டேயிருக்கும் . . . இத்தலைமுறையில், நாம் அறிவு பெறவும் வரும் தலைமுறையினர் உணர்வு பெறவும் இவ்வெளியீடு ஊடகமாய் அமையும் என நம்புகிறேன்.

பேரருள்திரு. ஜி. தேவகடாட்சம்
பேராயர், கன்னியாகுமரிப் பேராயம்

இந்நூல் வெறும் வரலாற்றுக் குறிப்பன்று. காலவாரியாகத் தொகுக்கப்பட்ட நிகழ்வுகள் பல கொண்ட ஆவணமும் அன்று. எந்தெந்த இறைப்பணியாளர்கள் என்னென்னத் திருப்பணிகளை, எவ்வெச் சூழல்களில், எத்துணைத் துன்ப துயரங்களுக்கிடையே முன்னெடுத்துச்சென்றனர் என்பதை மட்டும் படம் பிடித்துக் காட்டும் ஓர் ஏடும் அன்று. மாறாக இவைகளின் ஊடாக ஒரு பெரிய விடுதலைப் பயணத்தை ... அலசி ஆராய்ந்து எழுதப்பட்ட ஓர் ஆன்மீக விடுதலை நூல் மனிதர்களைத் தேடி . . .

அறிவர் இ. ஜேம்ஸ் ஆர். டேனியல்
முதல்வர், ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி